இனிய உணர்வே என்னைக் கொல்லாதே



தேன்மொழி

பூங்கொடி பதிப்பகம்

''லக்ஷ்மி''யின்
''பூங்கொடி'' வெளியீடுகளில் சில...

- அடுத்த வீடு ... 145.00
- அரக்கு மாளிகை ... 180.00
- அத்தை ... 55.00
- அவளுக்கென்று ஒரு இடம் ... 56.00
- இரண்டாவது மலர் ... 130.00
- இரண்டாவது தேனிலவு ... 45.00
- ஊன்றுகோல் ... 60.00
- ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) ... 125.00
- ஒரு சிவப்பு பச்சையாகிறது ... 90.00
- கதவு திறந்தால் ... 95.00
- கதாசிரியையின் கதை (முதல் பாகம்) ... 60.00
- கதாசிரியையின் கதை (இரண்டாம் பாகம்) ... 70.00
- கைமாறியபோது ... 85.00
- நதி மூலம் ... 45.00
- நல்லதோர் வீணை ... 75.00
- நிற்க நேரமில்லை ... 80.00
- நியாயங்கள் மாறும்போது ... 90.00
- பண்ணையார் மகள் ... 115.00
- பவளமல்லி ... 70.00
- பவானி ... 50.00
- பெயர் சொல்ல மாட்டேன் ... 50.00
- பெண் மனம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்ற நூல்) ... 70.00
- மருமகள் ... 50.00
- மறுபடியுமா? ... 85.00
- மீண்டும் பிறந்தால் ... 85.00
- மீண்டும் பெண்மனம் ... 70.00
- மோகத்திரை ... 75.00
- ராதாவின் திருமணம் ... 75.00
- ராமராஜ்யம் ... 20.00

இனிய உணர்வே என்னைக் கொல்லாதே

1

சாம்பவி, இரவு முழுவதும் உறங்கவில்லை, முதல் முதலாக அவள் தனியே செய்த நீண்ட ரயில் பயணம் அது.

''வயசுப் பெண்ணை தனியா ராத்திரி வண்டியில் ஏத்தி அனுப்பிட்டா சரியான துணை இல்லாட்டி என்னவாகும்!'' அம்மா புலம்பியதால்தான் அப்பா மகளது பயணத்திற்கு தக்க ஏற்பாடுகள் செய்திருந்தார். எதிர்வீட்டு தங்கதுரை தம் மனைவியுடன் முக்கொம்புக்குப் போகக் கிளம்பியது அவருக்கு அனுகூலமாகி விட்டது.

''புலியூருக்குத்தானே குழந்தை போகுது? நாங்க முக்கொம்புவரை பஸ் பயணத்தில் கூட துணையாக இருப்போம். அந்த நிறுத்தத்திலே உங்க மனுசா யாராவது வந்திருந்தா அவங்க கையிலே சாம்பவியை ஒப்படைச்சுட்டு சித்தநேரம் நின்று பார்த்துட்டுதான் போவோம். பயப்படாதீங்க!''

எதிர்வீட்டுத் தங்கதுரை உண்மையிலேயே தங்கமானவர். இரு குடும்பமும் நெருக்கமாக நண்பர்களாகப் பழகிக் கொண்டிருப்பவர்கள். இனிக் கவலையென்ன? என்று அப்பா அவளைக் கிளம்பச் சொல்லி பயணச்சீட்டு - கைசெலவுக்குப் பணம் எல்லாவற்றுக்கும் தயார் செய்தார். அம்மாவுக்குத்தான் அத்தனை திருப்தி இல்லை.

''வயசான உங்க அண்ணி உடம்புக்கு முடியாம படுத்துட்டாங்கன்னு கடிதம் போட்டு உதவிக்கு யாராச்சும் அனுப்பி வைக்க முடியுமான்னு கேட்டதும்... மூத்தவளையா அனுப்பறது? அவள் வேலை தேடிக் கொண்டிருக்கும் பெண் என்று நினைவில்லையா? அவ இங்கே இருந்தால்தானே வேலை கிடைக்கும்!''

''ஆமாம்! பி.ஏ. முடிச்சுட்டு, தட்டெழுத்து - சுறுக்கெழுத்து எல்லாத்தையும் கத்துகிட்டு விளம்பரங்களில் வர இடங்களுக்கெல்லாம் ஆறு மாசமா அவ அலைஞ்சு பார்த்துட்டா. தோட்டத்திலா வேலை காய்ச்சுத் தொங்குது, போய் லபக்குன்னு பறிச்சுட்டு வர? கொஞ்ச நாள் கிராமத்தில் போய் அண்ணிக்கு உதவியா இருக்கட்டும். இவ ஒருத்திதானே பெரியவ. மத்த ரெண்டு பெண்களும் பள்ளிக் கூடத்திலே படிச்சுகிட்டிருக்காங்களே? அண்ணன் பெண் ஜாதியை கடைசி காலத்திலே கவனிக்கலே என்கிற கெட்ட பெயர் எனக்கு எதுக்கு? அதனால் அனுப்பறேன்!''

''பாகப் பிரிவினை செய்தப்போ வீட்டை தங்க பெயருக்கு எடுத்துக்க சொல்லி தூண்டிக் கொடுத்த அண்ணிக்கா... உருகறீங்க?''

''அது கிராமத்து வீடு. அதன் மேலே கழுத்து மட்டும் கடன். அப்பாவுக்குப் பிறகு உன்னைக் கட்டிக்கிட்டதும் நான் பட்டணம் வந்துட்டேன். இங்கே வேலை தேடிக்கிட்டேன். அண்ணன், அப்பா விட்டுப்போன நிலத்தை வித்து என் பங்கை கொடுத்துட்டு வீட்டை தனக்கு எடுத்துக்கிட்டார். அது தப்பா?''

''பெரிய பங்கு!...''

''சும்மா அலட்டிக்காதே. உன் கழுத்திலே எங்க நிலம் வித்த

பணம் மூணு சவரன் தங்க சங்கிலியா தொங்குதே - இது இப்ப விலைக்கு என்ன பெறும் யோசி!''

''மூணு பொண்ணுங்க - ஒரு பிள்ளையினு நாலு வச்சிருக்கோமே. அதுகளை சீர்படுத்த காசு வேணாமா?''

''சரி சரி! சாம்பவிக்கு வழிப் பயணத்துக்கு வேண்டியதை எடுத்துக் கட்டிக் கொடு. நம்ப சண்டை காலமுச்சூடும் இருக்கவே இருக்கே?'' அப்பா சிரித்தார்.

பல நாட்களாக பரணில் கிடந்த அந்தச் சிறு தகரப் பெட்டியை எடுத்து அம்மா தட்டிக் கொட்டி சுத்தப்படுத்தித் தந்தாள். அந்தக் காலத்தில் வாங்கிய பெட்டி - கனமும் உரமுமாக தூசி தட்டியதும் சிறிதும் துருப்பிடிக்காது நீலச்சாயத்தில் பளிச்சென்று இருந்தது. அதற்குள் ஒரு நாளேட்டைப் போட்டு அவள் தானே சாமான்களை அடுக்கி வைத்துக் கொண்டாள்.

அவளிடமிருந்ததெல்லாம் சில புடவைகள்தான். வீட்டுக்கு கட்ட இரண்டு பழைய வாயில் சேலை-வேலை தேடிப்போக உடுத்த இரண்டு புதிய - மல்மல் புடவைகள். ஒரு நைலான் சேலை. அவைகளுக்கேற்ற ஜாக்கெட்டுகள், உள் ஆடைகள் சில. அமெரிக்காவில் வாழ்ந்த அவர்களது தூரத்து உறவுக்காரி அவர்களைப் பார்க்க வந்தபோது அம்மாவுக்கு விட்டுப் போயிருந்த ஒரு பழைய ஆரஞ்சு வண்ணக் காஞ்சிபுர பட்டுச் சேலையை கோவிலுக்குப் போனால் உடுத்திக் கொள்ள அம்மா பெரு மனத்துடன் அவளுக்கு இரவல் தந்திருந்தாள். அத்துடன் தன் ஒப்பனைப் பொருள்களான சோப்பு-சீப்பு-பவுடர் டப்பா... முகம் பார்க்கும் கண்ணாடி இவைகளை மறக்காமல் அவள் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

''பவுடரும், மையும் உனக்கு எதுக்கு? தங்கச் சிலை போல நீ மூக்கும், முழியுமா அழகா இருக்கே. இதெல்லாம் என்னைப் போன்ற மூஞ்சிகளுக்கு கொஞ்சம் அழகூட்ட உபயோகிக்க வேண்டியவை. என் ராசாத்தி!'' - தங்கதுரை மனைவி அவளைப் புகழ்ந்தபடி கன்னங்களைத் தடவி திருஷ்டி சொடுக்குவது

வழக்கம்.

அவள் கல்லூரியில் படித்த காலத்தில் அவளது தோழிகள் அடிக்கடி கேட்பார்கள்.

''சாம்பவி! உண்மையைச் சொல். நீ என்ன சோப்பு உபயோகிக்கிறே? எந்த பற்பசையில் பற்களை தேச்சுக்கிறே? தலைக்கு தடவிக்கிற எண்ணெய் பேர் என்ன?''

''எங்களைப் போன்றவங்களுக்கு வாங்க கட்டுபடியான சோப்பு - எண்ணெய் இதுகளைத்தான் உபயோகிக்கிறேன். ஏன் கேட்கிறீங்க?''

''பொய் சொல்றே? பச்சைக் குழந்தையின் பால்வடியும் முகம்போல் உன் மூஞ்சி வழவழன்னு தெரியுது. தொட்டா பட்டுபோல சர்மம் மிருதுவா இருக்கு. முத்து கோர்த்தது போல பல்லு வரிசையா பளிச்சினு அழகா இருக்கு. மயில் தோகைபோல முடி எத்தனை அடர்த்தி? இடுப்புக்குக் கீழே பின்னல் தொங்குதே... அப்பாடி...!''

'எங்களுக்கு உங்களைப் போல பங்களா - கார்... என்ற அந்தஸ்து - ஆஸ்தி எதுவும் கிடையாது. எங்கப்பா ஒரு அலுவலகத்திலே இருப்பத்தஞ்சு வருஷத்துக்கு மேலே கணக்கரா வேலை பார்க்கிறார். அதுக்குள்ள தலையில் நரை கண்டு... கண்களைச் சுற்றி சுருக்கங்கள் ஏற்பட்டு... வயதுக்கு மேலே தளர்ந்து போய் விட்டிருக்கார். நாங்கள் சிந்தாதிரிப் பேட்டை தாதப்பன் தெருவில் ஒரு ஓட்டு வீட்டின் பின்பகுதியில் ஒண்டு குடித்தனத்தில் வாழ்கிறோம். அதனாலேயோ என்னவோ இயற்கை எங்க வீட்டுப் பெண் குழந்தைகளுக்கு இவைகளை சொத்தாக கொடுத்து விட்டிருக்கு... அவ்வளவுதான்!' சொல்ல வேண்டுமென்று நாக்கு துடிக்கும்...

அந்தப் பெண்கள் மேல் மட்டத்து வாசிகள். பணத்திமிறினால் வாயாடுவார்கள். அவர்களோடு வம்பு எதற்கு! படிக்க வந்தோமா இங்கே அல்லது பகையைத் தேடிக்க வந்தோமா என்று எண்ணி அடக்கமாக அவள் முறுவலிப்பது வழக்கம்.

''சாம்பவி!... ஆனாலும் உன் மனம் ரொம்ப ஆழமானது. அதுக்குள்ளே எல்லா ரகசியங்களையும் புதைச்சு வைச்சுக் கொள்றே!... கெட்டிக்காரி...'' என்று அவர்கள் கேலி செய்வார்கள்; அதுவும் உண்மையே.

அம்மா சில சமயம் கோபத்தில் கண்டபடி கத்தி விடுவாள். அப்பா வந்ததும் அதைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லவே மாட்டாள். பற்றாக்குறை பட்ஜெட்டில் ஓடிய குடும்பம் அவர்களுடையது. இல்லாமையால் அம்மா கோபத்தை அடக்கமாட்டாது எதிர்ப்பட்ட தன் மக்கள் செல்வங்கள் மீது எரிந்து விழுந்தாள். வேலை தேடிக்கொள்ள திறமையின்றி -நிறுவனங்கள் பலவற்றின் படிகளில் ஏறி இறங்கிவிட்டு வந்த பெண்ணைக் கண்டு அவளுக்கு அடிக்கடி ஆத்திரம் வந்தது. ''நீ ஒரு துப்புக் கெட்ட பொண்ணு. அடுத்த தெரு சங்கரி -உன்னோட படிச்சவ தானே, அவளுக்கு வேலை கிடைச்சுட்டதாம் தெரியுமா உனக்கு?'' அம்மா இப்படிச் சொல்வாள்.

ஒரு நல்ல வேலை கிடைப்பது அத்தனை சுலபமான காரியமல்ல. பத்திரிகையில் விளம்பரங்கள் வருகின்றன. நேர்முக தேர்வுக்குப் போனால்... பலத்த சிபாரிசு உள்ளவர்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. இவைகளை எல்லாம் அம்மாவிடம் சொன்னால் அம்மாவுக்கு எங்கே புரியப் போகிறது. நேர்முகத் தேர்வில் சில அலுவலர்கள் அவளைப் பார்த்த பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டு அவள் பதிலுக்குக் கூட காத்திராமல் வெளியேறிய சங்கதியை அவள் அம்மாவிடம் சொல்லவேயில்லை.

ஆண்களோடு வேலை செய்யும் பொழுது ஒரு பெண் நேர்மையாக - ஒழுக்கமுடையவளாக வேலையே குறியாக இருக்க வேண்டும் என்று அப்பா அவளுக்குப் போதித்திருந்தார்... அப்பா சொல்படி அவள் நடக்கத் தயாராக இருந்தாள். ஆனால் அவள் மனதிற்குப் பிடித்ததொரு இடத்தில்தான் இன்னமும் வேலை கிடைக்கவில்லை. ஒரு மாறுதலுக்காக கிராமத்திற்குப் போய் தன் அண்ணிக்கு உதவியாக இருந்து வரட்டும் என்றுதான் அப்பா இப்போது

அனுப்பி வைத்திருக்கிறார்.

அவளுக்கு உள்ளூர உற்சாகம் பொங்கிப் புரண்டு கொண்டிருந்தது. அவள் பிறந்து வளர்ந்து ஆளான இந்த இருபது ஆண்டுகளில் அவள் ஒருமுறை கூட தன் தந்தை பிறந்து வளர்ந்த கிராமத்தை பார்த்ததேயில்லை. பெரியம்மா மட்டும் விதவையான பின்பு... சில தடவைகள் அவர்களைக் காண சென்னைக்கு வந்ததுண்டு. எப்பொழுதாவது கடிதம் எழுதி விசாரிப்பதுண்டு... பட்டணத்தின் நெருக்கம் - பஸ்சில் வழிந்த கூட்டம், இரவு முழுவதும் அறைக்குள் பாயின் மீது தங்கைகளுடன் உறங்கும் போது காதருகில் பாடிக் கடித்துத் தூக்கத்தைக் கெடுத்த கொசு உபத்திரவம், தெருவின் இருபக்கமும் அவ்வப்போது அவள் பார்க்க நேரிட்ட அசுத்தம்... இவைகளை மறந்து ஒரு கிராமத்தில் கொஞ்ச நாட்கள் நிம்மதியாக வாழப் போகிறோம் என்ற நினைப்பு அவளுக்கு மிக்க இனித்தது.

''சில சினிமாப் படங்களில் பார்க்கிற கிராமத்தைப் போல குறுகலான தெருக்களும், குடிசைகளுமா எங்க ஊர் இருக்காது. திருச்சிக்கும் - சேலத்துக்குமிடையே உள்ள நெடுஞ்சாலையின் முக்கொம்பு நிறுத்தத்திலே உள்ளே போகும் மண்பாதையில் இரண்டு கல் தூரத்திலே இருக்கிற பெரிய கிராமம். மின்விசை வசதி உண்டு. எங்க வீட்டு புழக்கடை தண்ணி இளநீர் போல இருக்கும்... பழைய ஓட்டுக் கட்டிடம்தான். ஆனால் என்ன... நெருக்கமா கம்பி போட்ட பெரிய முற்றம்... நாலு பக்கம் தாவாரம். ஒவ்வொரு தாவாரத்திலும் ஒரு அறை...கூடம்...பின்கட்டு... தோட்டம் எல்லாம்... உள்ள வீடு...'' என்று அப்பா வருணித்தபோது அவளது கற்பனை சிறகடித்தது.

ஒண்டு குடித்தன வாழ்வினின்று அவளுக்கு இப்போது ஒரு புதிய மாறுதல். நிம்மதியா வளைய வர ஒரு தனி வீடு... 'வண்டி நிருச்சி இணைப்பு நிலையத்தை நெருங்கிட்டு இருக்கு. விடிஞ்சு போச்சே' தங்கதுரை மேல் படுக்கையினின்று தொப்பென்று இறங்கினார். சட்டென்று அவள் பெண்கள் கழிவறைக்குள் சென்று முகத்தைக்கழுவி முடியை சீராக்கிக்

கொண்டு... பொட்டு வைத்துக் கொண்டு நிலையத்தில் இறங்கத் தயாராகி விட்டாள்.

வண்டி நிலையத்தை அடைந்தபோது பொழுது நன்றாக விடிந்து வெளிச்சம் பரவத் தொடங்கி விட்டிருந்தது.

''சாமான்களை எடுத்துட்டு நாமே தூக்கிட்டு பொடி நடையா பஸ் நிலையத்துக்குப் போயிடுவோம்... இத்தனை நேரம் முதல் பஸ் கிளம்பியிருக்கும். இங்கே காப்பி பலகாரம் சாப்பிட நேரத்தை கழிச்சா இரண்டாவதும் கிளம்பிடும். பிறகு கூட்டம் அதிகமாயிட்டா நமக்கு இடம் கிடைக்காது'' தங்கதுரை அவசரப்படுத்தினார். தமது பெட்டி படுக்கையை தமது தலைமீது தூக்கிக் கொண்டு மனைவியிடம் மூட்டையைக் கொடுத்து அவர் இறங்கி முன்னால் துரிதமாக நடக்க, ஓட்ட நடையில் தன் பெட்டியுடன் சாம்பவி அவர்களைத் தொடர்ந்தாள்.

கொஞ்ச தூரம் அவர்கள் நடக்க நேரிட்டது. அவளுக்கிருந்த உற்சாகத்தில் அந்த நடை சிறிதும் அலுப்பைத் தரவில்லை. ஒரு வழியாக பஸ்சில் பயணச் சீட்டுகளை வாங்கிக் கொண்டு அமர்ந்தனர். வண்டி மெல்ல நகர்ந்து வேகம் கூட்டி காவிரி பாலத்தைக் கடந்த போது அவள் அதிசயத்துடன் அந்த நதியைப் பார்த்தாள்.

'தண்ணீர் இல்லை... அகண்ட காவேரிகூட சிறு வாய்க்கால் போல் போயிடுச்சுன்னு சொன்னாங்களே... சமீபத்திலே பெய்த மழையிலே நதி நிறைஞ்சு ஓடுதே...' மிகவும் மகிழ்ச்சியுடன் தங்கதுரை ஆற்றை ஆசையுடன் பார்த்தார்.

அக்கரையைத் தொட்டுக் கொண்டு அகலமாக ஓடிய காவிரியைப் பார்த்த சாம்பவிக்கு சட்டென்று பஸ்சிலிருந்து இறங்கி ஆற்று நீரில் மூழ்கி எழ வேண்டும் போன்றதொரு ஆவல் ஏற்பட்டது... சில நாட்களுக்கு முன்னர் பெய்த மழையினால் சாலையின் இருமருங்கிலும் பசுமை பரவிக்கிடந்தது. மனித சமுத்திரத்தையும், வாகனங்களையும், கட்டிடக் குவியல்களையும் பார்த்து அலுத்துப் போன கண்களுக்கு எத்தனை ஒரு இனிய விருந்து?...

ரயிலில் உறங்காது வந்த சோர்வு சிறிதும் இன்றி... வியப்புடன் மாறிமாறி இரு பக்கத்தையும் பார்த்த வண்ணம் இருந்தாள். காற்று மெல்ல ஜன்னலே ஊடே வீசி அவளது நெற்றிக் கூந்தலை முகத்தில் புரளவிட்டு விளையாடிக் கொண்டிருந்தது... எங்கிருந்தோ பூக்களின் மெல்லிய மணத்தை வாரி சில்லென்று அது வீசியதையும் அனுபவித்து மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

முக்கொம்பு நிறுத்தம் வந்துட்டது... நடத்துனர் உரத்த குரலில் கூவ பஸ் ஒரு சிறு குலுக்கலுடன் ஒரு ஓரத்தில் நின்றது. தங்கதுரை தமது மனைவியையும் - அவளையும் இறங்கும்படி உசுப்பினார். மேலே போட்டிருந்த பெட்டிகள் படுக்கை முதலியவற்றை கண்டக்டர் எடுத்துக் கொடுத்து உதவினார்.

சாலையின் இரு புறங்களிலும் கடைகள் கொண்ட மனித புழக்கம் அதிகமானதொரு பஸ் நிலையம் அது என்று அப்பா அவளிடம் முன்னதாகவே சொல்லியிருந்தார்.

அந்தக் காலை வேளையில்... இரு பக்கத்திலுமிருந்த சில டீ கடைகளும், பெட்டிக் கடைகளும்... ஒரு காப்பி ஓட்டலும் திறந்திருந்தன. திருச்சிக்கும் - சேலத்துக்கும் பஸ் பிடிக்க... இரு பக்கத்திலும் கூட்டம் காத்திருந்தது. ''இங்கே இருந்து போகும் இந்த உள் பாதையில் இரண்டு கல் தூரம் போனால் புலியூர் வந்துடும்... இதோ மாட்டு வண்டிகள் காத்துகிட்டு நிக்குது. கவலைப்படாதே'' என்று தங்கதுரை சொல்லி முடிப்பதற்குள் அரைக்கால் சட்டை பையன் ஒருவன் பல்லெல்லாம் தெரிய சிரித்துக் கொண்டு அவர்கள் அருகில் வந்தான்.

''பட்டணத்திலிருந்து வர அக்கா நீங்கதானே?'' கேட்டபடி தன் சட்டையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து சாம்பவியிடம் நீட்டினான்.

''அக்கா வரும்! அழைச்சிட்டு வான்னு அம்மா அவங்க குடுத்தாங்க...'' தலையைச் சொறிந்து கொண்டு நின்றான்.

கையெழுத்து அவளது பெரியம்மாவுடையது என்பதை கடித மடிப்பை பிரித்தவுடனேயே அவள் கண்டு கொண்டாள். அவசரமாக ஒரு நோட்டு புத்தகத்தின் ஏட்டை கிழித்து

பெரியம்மா அலமேலு சுருக்கமாக எழுதியிருந்த கடிதம் அது.

''பள்ளிக்கூடம் போன மீதிப் பொழுதுக்கு இதைக் கொண்டுவரும் சிங்காரம் என்கிற சிறுவன் எனக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்கிறான். நம்பகமான பையன். உன்னைக் கூட்டிவர அனுப்பியிருக்கேன். மாட்டு வண்டிக்குப் பணமும் கொடுத்தனுப்பியிருக்கேன். அவனுடன் வரவும் -இங்ஙனம் அலமேலு.''

''அப்போ நான் உங்ககிட்ட உத்திரவு பெற்றுக்கிறேன். உங்க உதவிக்கு ரொம்ப நன்றி. பெரியம்மா கடிதத்தோட இந்தப் பையனை எனக்குத் துணையாக அனுப்பி வைச்சிருக்காங்க'' என்று தங்கதுரை தம்பதியரிடம் சாம்பவி விடை பெற்றுக் கொண்டாள்.

ஒரு மாட்டு வண்டியை வாடகைக்குப் பேசி... சிங்காரம் அவள் பெட்டியைத் தூக்கி உள்ளே வைத்தான். பின்னர் அவள் ஏறி உட்கார்ந்ததும்... முன்புறமாக வண்டிக்குள் ஏறி வண்டியோட்டியின் பின்னால் ஒடுங்கிக் கொண்டான்.

அதுவரை நின்றிருந்து வழியனுப்பிய தங்கதுரை தம்பதியினர் தாங்கள் போக வேண்டிய பக்கம் திரும்பினர்.

ஜல்-ஜல் என்று சதங்கை நாதம் எழுப்பிக் கொண்டு வண்டி நகர்ந்த போது அவளுக்கு மகிழ்ச்சி கட்டுக் கொள்ளவில்லை. பாதையின் இரு பக்கமும் பசுமையாக வளர்ந்து பச்சையும், மஞ்சளுமாகத் தென்பட்ட நெற்பயிர் விரிந்து கிடந்த பூமியை வேடிக்கை பார்த்துக் கொண்டே அவள் இருந்த போது... தன் பின்மண்டை வண்டியில் மோத திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

எதிரே வந்ததொரு கரும்பச்சை வண்ண பியட் எழுப்பிய குழல் ஒலியைக் கேட்டு சற்று மிரண்டுவிட்ட மாடு சாலையின் ஓரத்தை நோக்கி ஓடி விட்டிருந்தது.

''புது மாடு. இன்னும் வண்டி இழுத்துப் பழக்கப்படலே... இப்படியா ஒருத்தன் ஹாரனை அடிப்பான். எல்லாம் பணத்திமிர்...!'' வண்டியோட்டி முணுமுணுத்தார்.

''ஏம்பா! பாதை முழுவதும் உனக்கே சொந்தமா, இடது பக்கமா வண்டியை ஓட்டிக்கிட்டுப் போயிருந்தா நான் ஏன் ஹாரன் அடிக்கிறேன். இன்னும் சித்த நகர்ந்திருந்தா வண்டி குடை சாய்ந்து பள்ளத்திலே விழுந்திருக்குமே!'' அதட்டினான் அந்தக் காரை ஓட்டிக் கொண்டு எதிர்புறமாக வந்த இளைஞன்.

அவர் சொல்கிறது போல வண்டி குடைசாய்ந்து பள்ளத்தில் விழுந்திருந்தால்... என்று கலவரத்துடன் மெல்ல வண்டியிலிருந்து முன்பக்கம் நகர்ந்து எட்டிப் பார்த்தாள் அவள்.

அவனும் அதுசமயம் அவளை மிக்க அதிசயமாகப் பார்ப்பதை உணர்ந்தாள். பட்டணத்தில் சாம்பவி... பஸ்களிலும், அலுவலகங்களிலும், நடைபாதைகளிலும், கடைகளிலும் பார்த்திராத இளவட்டங்களா?

ஆனால் இவரைப் பார்த்ததும்... ஆயிரம் காலம் பழகியவர் போன்ற ஒரு உணர்வில் அவள் நெஞ்சு ஏன் இப்படிப் படபடக்கிறது. முகமெல்லாம் வியர்த்துக் கொட்டுகிறதே... இதென்ன வேடிக்கை.

வண்டி மேலே நகர்ந்தபோது, மெல்லக் கள்ளத்தனமாக அவள் திரும்பிப் பார்த்தாள்.

அவனும்... தலையைத் திருப்பி அவளையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு... முகம் சிவந்து... பரபரப்படைந்து போனாள். ஆமாம் இவர் யார்?

2

வண்டியோட்டி தம்முள் எழுந்த கோபத்தை அடக்க வளவளவென்று வழியெல்லாம் பேசிக்கொண்டே போனார்.

''அம்மா! ஊருக்குப் புதுசுபோல இருக்கு? இந்த கிராமத்தை முதல்லே கொஞ்சம் புரிஞ்சு வச்சுக்கிறது நல்லது!'' என்று லேசாக சாட்டையை மாட்டின் முதுகில் வீசியபடி ஆரம்பித்தார்.

''நம்மை இந்த சாலை ஓரத்துப் படுகுழியிலே தள்ளப் பார்த்தாரே அந்த பியட்டு கார்க்காரர், அவர்தான் இந்த ஊர் பெரிய தனக்காரர் சட்டநாதனின் ஒரே மகன். பார்த்தீபன்னு பேர்!''

யார் இவர்? என்று அவள் உள்ளம் கேட்ட கேள்விக்கு தானே பதில் கிடைத்து விட்டதைப் பற்றி மட்டற்ற மகிழ்ச்சி அவளுக்கு.

''அப்படியா? சட்டநாதன் அவர்களுக்கு இந்த ஊரில் ரொம்ப செல்வாக்கு இருக்குமே?...'' மேலே பேசும்படி வண்டிக்காரரை உசுப்பினாள்.

''இருந்தது. அவர்தான் இந்த ஊர் சிவன் கோவில் ஸ்தானிகராக இருந்தார். ஊருக்கு நாட்டாண்மைக்காரராக -பஞ்சாயத்து தலைவராக - ஊரில் நல்லது பொல்லாதது எல்லாத்துக்கும் முந்தியிருந்து நடத்தி வைக்கிற பெரியவராக இருந்தார் புண்ணியவான்.''

''அப்படின்னா அவர் இப்போ இல்லையா?''

''அவர் இறந்து போய் இரண்டு ஆண்டுகள் ஆகுது... இப்போ சின்னவர் தலையெடுத்திருக்கார். இவரும் அப்பாவைப் போல கோவில் ஸ்தானிகராக இருக்கார். ஊர் விழாக்களில் வந்து பங்கு எடுத்துக்கிறார்.''

''எங்க பள்ளிக்கூட ஆண்டு விழாவில் வந்து தலைமை வகிச்சாரே'' சிங்காரம் இடைபுகுந்து பேசியது, வண்டியோட்டிக்கு எரிச்சலூட்டியது...

''பொடிப்பயலே! சும்மா இரு! நான் பேசறேன்... சட்டநாதன்னா சிங்கம்போல இருப்பார்! சும்மா ஆள்வந்து நின்னா போதும் நாம் கிடுகிடுன்னு நடுங்கிப் போயிடுவோம். அவர் பேரைக் கேட்டா அழுத பிள்ளையும் வாயை மூடிக்கும். அப்படி ஒரு தர்பார். ஆனால் மனுசன் ரொம்பக் கருணையானவர். ஊரிலே வெள்ளம் வந்து குடிசை மக்கள் அவதிப்பட்டா உடனடியாக... உதவி செய்ய முன்வந்து நிற்பார். தன்கிட்ட வேலை பாக்கிற ஆளுகளுக்கும் அவங்க குடும்பத்துக்கும் ஏதாச்சும் துன்பம் வந்துட்டா... தூண்போல

துணை இருந்து உதவுவார். அவரு ஒரு மகாராசா மாதிரி வாழ்ந்துட்டு போயிட்டார். புண்ணியவான். அப்பாவைப் போல பேர் எடுக்க இவருக்கு ரொம்ப நாள் புடிக்கும்.''

''ஏன் இவர் கொஞ்சம் கடுமையானவரோ?''

''படிச்சவர்னு கொஞ்சம் மிடுக்கு. இருக்காதா பின்னே? அத்தனை சொத்துக்கும் ஒரே வாரிசு இவர்தான். பட்டணத்திலே பார்மசிக்கு படிச்சுட்டு திரும்பி வந்தார். அடிக்கடி படிக்க வெளியூர் போயிட்டதாலே இவருக்கு ஊர் மக்கள் தொடர்பு அத்தனை கிடையாது. பக்கத்து டவுனிலே சட்டநாதன் மகனுக்காக ஒரு பெரிய மருந்துக் கடையைத் திறந்து கொடுத்தார். திறப்பு விழாவுக்கு யாரோ மந்திரி கூட வந்திருந்தார். விழா முடிஞ்சு வீட்டுக்கு வந்து காரிலிருந்து இறங்கினவர் நெஞ்சைப் பிடிச்சுகிட்டு உள்ளே வந்து நாற்காலியில் உட்கார்ந்தார்.''

''மாரடைப்பு வந்துட்டதா?''

''பரவாயில்லையே, பட்டணத்து அம்மாவுக்கு டாக்டர் போல விசயம் தெரிஞ்சிருக்கே?''

சாம்பவி களுக்கென்று சிரித்தாள். பார்த்தீபன் குடும்பத்தைப் பற்றி அவனைப் பார்த்தவுடனேயே சுவையான சங்கதி கிடைப்பதை உணர்ந்து மகிழ்ந்து போனாள்.

''லேசான மாரடைப்புன்னு டாக்டர் அவரைப் படுக்கையிலே ஆறுவாரத்துக்கு இருக்க வச்சுட்டார். பட்டணத்திலிருந்து பெரிய வைத்தியர்கள் கூட வந்து பார்த்தாங்க. உடம்பு தேறி மனுசன் முன்போல எழுந்து நடமாட ஆரம்பிச்சார். பகவதி அம்மன் விழாவிலே கூட கலந்து கொண்டார். ஒருநாள் காலை நிலங்களைப் பார்வையிட்டபடி வரப்பின் மேலே நடந்தவருக்கு மூச்சடைச்சுது. வாய்க்கால் பாலத்தைக் கடந்து இக்கரை வந்து அவங்க வீட்டுக்குப் பின்னாடி கொஞ்ச தூரத்திலே கரை ஓரமா இருக்கிற பிள்ளையார்கோவில் அரசமரத்து மேடை மேலே உட்கார்ந்தவர் அப்படியே மயங்கி விழுந்துட்டார். ஆட்கள் தூக்கியாந்து வீட்டிலே போட்டாங்க.''

''பிறகு'' வியப்புடன் வினவினாள் சாம்பவி...

''பிறகு என்ன? ஆசாமி போயிட்டார். உசுரு பிரிஞ்சு ஒரு மணிநேரத்துக்கு மேல் ஆச்சுன்னு டாக்டர்கள் சொல்லிட்டாங்க.''

''ஐயோ பாவம்!...'' அனுதாபப்பட்டாள் அவள்.

''அவரை நினைச்சா எனக்குக் கூட ரொம்ப வருத்தமாதான் இருக்கு... ஆனா அவர் பெண்ஜாதியை நினைச்சா...'' —மறுபடி சாட்டையை லேசாக மாட்டின் முதுகில் வீசினார் வண்டி ஓட்டி.

''பெரிய ஐயா ரொம்ப நல்லவர்னு ஊர் மக்கள் எல்லாரும் ஒருமிக்கப் பேசுவாங்க... ஆனால் அந்தம்மாளைப் பத்தி கொஞ்சம் குறைவாகத்தான் சொல்வாங்க...'' —இடைபுகுந்து விளக்கினான் சிங்காரம்.

''பொடிப்பயலே! நீ சும்மாயிருன்னு சொன்னேன் இல்லையா? நான்தான் பட்டணத்து அம்மாவுக்கு விலாவரியா சொல்லிக்கிட்டு வரேனே... குறுக்கே பேசாதே...'' என்று அதட்டிவிட்டுத் தொடர்ந்தார்.

''சட்டநாதன் ஐயா முப்பாட்டன் எல்லாம் ஜமீன் பரம்பரையைச் சேர்ந்தவங்க... பரம்பரை பணக்காரர் அவர். ஆனால் அவர் மனைவி ஒரு சாதாரண விவசாயி மகள். திடீர்னு அந்தஸ்தும் — அழகான புருஷனும் கிடைச்சுட்டதும் அவங்க தலை ரொம்பவும் கனமாயிடுச்சு...

''யாரையும் நிமிசத்திலே தூக்கி எறிஞ்சு பேசிப்பிடுவாங்க. ஒத்தரையும் மதிச்சதில்லை — அன்பா வேலையாட்கள் கிட்ட நடந்ததில்லை. ரொம்பக் கண்டிப்பு. மனதிலேதான் கருணை இல்லையினா அந்தம்மா கையும், கருணைக்கிழங்கு... படு கருமி...!''

''அப்படியா...?'' வியப்புடன் கேட்டாள் சாம்பவி... பார்த்தீபனது தாயைப் பற்றி மேலும் தெரிந்து கொள்வதில் அவளுள் ஏன் இந்த ஆவல்?

''கணவர் போன பிறகு ஒரு ஆண்டு அந்தம்மா வெளிவாசலுக்கு வந்ததில்லை. ஆனா இப்போ எங்கேயும்

வரத்தொடங்கியிருக்காங்க...''

''தாயை மகன் இங்குமங்கும் காரில் அழைச்சுட்டு போவார் போலிருக்கு?''

''அதுதான் இல்லே...! அம்மா வீட்டு வில் வண்டியிலேதான் வெளியே போவாங்க. காங்கேயத்து காளை கட்டி சதங்கை ஒலிக்க... அவங்க வண்டி கிளம்பினா... கிழக்குத் தெரு கோடியிலே இருக்கிறவங்களுக்குக் கேட்கும்... அப்படி அட்டகாசமான வண்டி அது. மேலும் மகனுக்கு அவங்களைக் கூட்டிக்கிட்டு அலைய பொழுது ஏது? நாள் முழுக்க அவருக்கு வேலை எக்கச்சக்கமாக இருக்கே. பக்கத்து டவுனிலே இருக்கிற மருந்துக்கடை, அரிசி மண்டி - வெத்தலை மண்டி இதுகளை மேற்பார்வையிடணும். டவுனிலே இவர்களுக்கு சில கட்டடங்கள் இருக்கு — அதுகளின் வாடகைகளை வசூலிக்கிறது — வங்கிக்குப் போய் வந்து... நஞ்சை புஞ்சை நிலங்களை பார்வையிட்டு, காய்கறி தோட்டத்திலிருந்து அன்றாடம் காய்கறிகளை பறிச்சு திருச்சி மொத்த வியாபாரிக்கு லாரியில் ஏத்தி விடறது... இப்படின்னு பல வேலைகள். இது நடுவே கோயில் ஸ்தானிகர் பணி வேறு. ஊர் விழாக்களில் பெரிய தனக்காரர்னு கலந்துக்கிற கடமையும் சேர்ந்துகிட்டதாலே தன் காரிலேயே சுத்திகிட்டு இருக்கார்.''

அந்தக் கேள்வியைக் கேட்காவிடில் மனதில் அமைதி ஏற்படாது போன்றதொரு படபடப்பில்... சாம்பவி கேட்டுவிட்டாள்.

''வீட்டிலே நாள் முழுவதும் மாமியாரோட போராடிக்கிட்டிருக்கிற அவர் மனைவிக்கு ரொம்ப எரிச்சலாக இருக்குமில்லையா?''

வண்டி ஓட்டி கடகடவென்று சிரித்தார்...

''இன்னும் அவருக்குக் கால்கட்டு போடலை. பெரிய இடங்களிலிருந்தெல்லாம் பெண் தேடறாங்களாம். அத்தனை சொத்துக்கும் அவர்தானே வாரிசு... வேறே குழந்தை ஏதும் கிடையாதே — அதனாலே அவருக்குப் பெண் கொடுக்க யாருக்கு கசக்கும்...?''

பொறாமையா? கோபமா? என்ற பேதம் காணமுடியாத கலவை உணர்வில் சாம்பவியின் நெஞ்சு படபடத்தது...

''மனிதன் ரொம்பத் திமிர் பிடிச்சவன்னு சொன்னீங்களே...'' என்று உசுப்பினாள் மீண்டும்...

''கார் குழலை அழுத்தமா ஊதி மாட்டை மிரளச் செய்துட்டு என்னையே அதட்டினார் பார்த்தீங்களா... பணம் இருக்கிற திமிர் இல்லாம அது வேறு என்னவாம்? இவர்கிட்ட நான் பேசிப் பழகினதில்லை... ஆத்தாளை குணத்தில் கொண்டிருந்தா, ரொம்பக் கருவம் பிடிச்சவராத்தான் இருப்பார்!''

''வண்டிக்கார அய்யா, நீங்க சொல்றது தப்பு... எங்கப் பள்ளிக்கூடத்து ஆண்டு விழாவுக்கு போன மாசம் வந்திருந்தார். எல்லா வாத்தியார்கிட்டேயும் அன்பா பேசினார். பரிசு வாங்கின ஏழைப் பையன்கள் கையைக் கூடக் குலுக்கி பாராட்டினார்...!'' சிங்காரம் குறுக்கிட்டான்.

''போடா பொடிப்பயலே! இதெல்லாம் ஒரு தந்திரம். பின்னாலே ஏதாவது தேர்தல்னு வந்து அதுலே நின்னு ஓட்டுப் பிடிக்க இப்படி ஒரு அஸ்திவாரம் போட வேணாமா?''

''பணம் இருக்கு... அதுக்குத் தகுந்த பதவிகள் வேணாமா? பணத்தைவிட பதவிகளுக்குப் பலம் அதிகமாச்சே... திடீர்ன்னு ஒருநாள் அரசியல் கோதாவிலே குதிச்சாலும் ஆச்சர்யமில்லை.''

''அவங்களை விடுங்க; ஊர் எப்படிப்பட்டது... தண்ணி வசதி எப்படி... இதுகளை சொல்லுங்க அய்யா!'' பேச்சை வேறு பக்கம் திருப்பினாள் அவள்.

''ஊர்கிட்ட நெருங்கிட்டு இருக்கோம் — அதோ தெரியுதே அதுதான் எல்லை பகவதி அம்மன் கோயில். வண்டியை சித்த நிறுத்தறேன். ஊருக்குப் புதுசா வரீங்க... மனசிலே எதையாவது வேண்டிக்கிட்டு அம்மனை வணங்குங்க அத்தனையும் பலிக்கும். பகவதி ரொம்ப சக்தி வாய்ந்தவ'' என்றபடி விரைவாக வண்டியை ஓட்டி கோயில் எதிரே நிறுத்தி தாமும் இறங்கி வணங்கினார்.

சாம்பவி இறங்கி கை குவித்து பகவதியை வேண்டிக்

கொண்டாள். ''தாயே! என் பெரியம்மா உடம்பு சீக்கிரம் குணமாகி — எனக்கு ஒரு நல்ல வேலை சீக்கிரம் கிடைக்கணும்!''

வண்டி மேலே போகத் தொடங்கியது.

''இப்போ நாம கடைத்தெருவுக்குள்ளே வந்துட்டோம். பக்கத்து டவுனுக்கு சாமான் வாங்க யாரும் போக வேணாம். இங்கேயே நிறையக் கடைகள் இருக்கு... இன்னும் கொஞ்ச நேரத்தில் கடைகள் திறந்ததும் இந்த இடம் கலகலப்பாகத் தெரியும்... எட்டு வகுப்பு படிக்க ஒரு பள்ளிக்கூடம் இருக்கு. மேலே படிக்க பிள்ளைகள் பக்கத்து டவுனுக்குப் போக பஸ்வசதி உண்டு. வெய்யக் காலத்திலேதான் எங்க வாய்க்காலும், கிணறும் கொஞ்சம் காஞ்சி கிடந்தது. காவேரியிலே இப்போ தண்ணி வந்துட்டது — மழை நல்லா பெய்தது... அதனாலே எங்க ஊர் பெரிய வாய்க்கால் பெருகி வழிஞ்சு ஓடுது பாருங்க... எல்லா வீட்டுக்கும் —தோட்டங்களிலும் பெரிய கிணறு இருக்கு... புருசனும் —மனைவியுமா இங்க இரண்டு வைத்தியர்கள் கிளினிக் வச்சு நடத்துறாங்க — பக்கத்து டவுனிலே பெரிய ஆஸ்பத்திரி — ஒரு தனியார் மருத்துவமனை எல்லாம் இருக்கு — கடைத் தெருவிலே காவல் நிலையம், தபாலாபீசு எல்லாம் இருக்கு... மின் வசதி உண்டு!''

''பெரிய ஊர்னு சொல்லுங்க...!'' கண்களை நாலாபுறமும் ஓட்டினாள் சாம்பவி, உற்சாகத்துடன்.

''அடுத்தபடியா இங்கே வேதபுரி நாதர் கோயில்னு ஒரு சிவாலயம் இருக்கு. வேதபுரி நாதருக்கும், வேற்கண்ணம்மைக்கும் வருஷத்திலே சித்திரை மாதத் தொடக்கத்திலே தேர் திருவிழா உண்டு... ஊர் ரெண்டுபட்டு போறாப்பல கூட்டம் அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்து குவிஞ்சுடும். இதைத் தவிர — ஒரு விஷ்ணு கோவில்... அரசமரத்தடி பிள்ளையார் இப்படின்னு பல கோயில்கள் இருக்கு. பெரிய ஊரு இது — கோயில்களுக்குப் பஞ்சமில்லை — தண்ணிக்கும் பஞ்சமில்லை... இந்த ஊரில் முக்கியமா நாலு தெருக்கள் இருக்கு. வடக்குத் தெருவில்தான் பெரிய தனக்காரர்

வீடு இருக்கு... நீங்க போகப் போற உங்க உறவுக்காரங்க வீடு கிழக்குத் தெருவில் இருக்கு. இந்த இரண்டு தெருவில்தான் மாடி வீடுகள் அதிகம். வசிக்கிறவங்களும் கொஞ்சம் பசையுள்ள ஆசாமிகள்... மத்த தெருக்களில் ஓட்டு வீடுகள் — வைக்கோல் வேய்ந்த சாதாரண கூரை வீடுகள்தான் அதிகமாக இருக்கும்.''

''பரவாயில்லை... நான் சுத்தி பார்க்கறதுக்கு முன்னாடியே எனக்கு ஊரைப்பத்தி இத்தனை விவரங்களையும் சொல்லிட்டீங்க, ரொம்ப நன்றி!'' மெல்லச் சிரித்தாள் சாம்பவி.

''இதோ பார்த்துக்கோம்மா! இதுதான் பெரிய தனக்காரர் வீடு — இதுதான் வடக்குத் தெரு!'' என்று சாட்டையால் ஒரு வீட்டைச் சுட்டிக்காட்டினார் வண்டி ஓட்டி...

புதிய வெள்ளை சாயத்தில் சுற்றுச்சுவரும் — முகப்பில் கேட்டுமாக — உள்ளே அடர்த்தியாக வளர்ந்து நின்ற மரங்களுக்கு இடையே வெகுதூரத்தில் சிறிது தெரிந்த நீலச்சாயம் பூசிய மாடிக் கட்டிடத்தை வியப்புடன் பார்த்தாள் அவள்.

''ஊருக்குள்ளேயே இதுதான் கடல்போல பெரிய வீடு... மாடியில வேறே புதுசா அறைகள் கட்டினாங்கனு கேள்வி —வரப்போற மருமகளுக்கு போல இருக்கு!'' சிரித்தார் வண்டி ஓட்டி.

ஆமாம்! அதைக்கேட்டு சாம்பவியின் முகம் ஏன் இப்படிச் சிவக்க வேண்டும்! நெஞ்சு ஏன் துடியாகத் துடிக்க வேண்டும்! தன் உணர்வுகளின் கொந்தளிப்பின் ரகசியம் அவளுக்கே புரியாத புதிராக இருந்தது.

''இதுதான் கிழக்குத்தெரு... அலமேலு அம்மா வீடு இதுதான். நீங்க இறங்கலாம்'' என்று வண்டியோட்டி ஒரு வீட்டின் முன் வண்டியை நிறுத்தினார்.

பச்சை வண்ண சாயத்திலே தூண்கள் நிற்க... சிவப்பு சிமெண்டில் பளபளத்த திண்ணையும் — வராந்தாவும் பெரிய தேக்கு மரக்கதவுடன் தெரிந்த வீட்டினைப் பார்த்து அவள் மன மகிழ்ந்து போனாள்.

''நன்றி ஐயா...!'' என்று கும்பிட்டுவிட்டு... சிங்காரம் பெட்டியைத்தூக்கிக் கொண்டு ஓடிக்கதவைத்தட்ட... பின்னால் படியேறி நடந்தாள்.

''பட்டணத்து அம்மா வந்துட்டாங்க!'' ஓங்கிக் குரல் கொடுத்த வீட்டு வேலைக்காரி புன்னகை பூத்த முகத்தோடு அவளை வரவேற்றாள்.

நடையில் கால் செருப்புகளை விட்டுவிட்டு உள்ளே நுழைந்தவளுக்கு வியப்பாகத்தான் இருந்தது. வீடு, அப்பா சொன்னபடியே எள் அளவுப் பிசகாதுகூடம், தாழ்வாரம் இத்தியாதிகளுடன் இருந்தது — பெரியம்மா அதை சுத்தமாகப் பளிச்சென்று வைத்திருப்பதைக் காணத்தான் மிக்க ஆச்சரியமாக இருந்தது.

''வாம்மா...!''

மெல்லிய குரல் எழுந்த கூடத்தின் அருகே விரைந்தாள். சுவர் ஓரமாகக் கிடந்த அகன்ற பெஞ்சு மீது விரிக்கப்பட்டிருந்த பஞ்சு மெத்தை மேலே... நலிந்து கிடந்தாள் பெரியம்மா அலமேலு. முன்பு பார்த்ததைவிட பாதியாக உடல் இளைத்து -தலை தும்பைப் பூவாக வெளுத்து மிகவும் பலவீன முற்றவளாகக் காணப்பட்டாள்.

''பெரியம்மா, என்ன இப்படி துரும்பா போயிட்டீங்களே...?'' என்று அனுதாபத்துடன் அவளது கைகளைப் பற்றிக் கொண்டாள் சாம்பவி.

''உன்னை எப்ப பார்த்தது... இப்படி உயரமா குத்து விளக்காட்டம் அழகா வளர்ந்துட்டியே... கண்ணாட்டி இப்படி உட்கார்... உன்னை தம்பி வாகீசன் அனுப்பி வச்சதுக்கு நன்றியம்மா!''

''உடம்புக்கென்ன பெரியம்மா?'' என்று கேட்டபடி படுக்கை ஓரத்தில் வந்து அமர்ந்து கொண்டாள் சாம்பவி.

''ஒவ்வொரு டாக்டர் ஒவ்வொண்ணு சொல்றாங்க. லேசா இருதயம் பழுதடைஞ்சிருக்குன்னு டவுன் வைத்தியர் பயமுறுத்தி படுக்கையிலே ஓய்வா கொஞ்ச நாள் இருக்கணும்னுட்டார். பெரியப்பா போன பிறகு தனியா பெரிய

வீட்டிலே பயமில்லாத வாழ்ந்தவ... நோய் என்றதும் கொஞ்சம் கிலியாயிடுச்சு — உதவிக்குக்கூட துணையா இருக்க உன்னை சில நாள் தங்கியிருக்க கடிதம் போட்டு வரவழைச்சேன்...'' பெரியம்மா புன்னகைத்தாள்.

''முத்துநாகம்... குழந்தைக்கு பின்கட்டு அண்டாவிலே தண்ணி நிரப்பி வை — முதல்லே குளிக்கட்டும். பிறகு சூடா காப்பி கொண்டாந்து கொடு — பிறகு குழந்தையோட துணையா நம்ப ஊர் சிவன் கோயிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை செய்துட்டு வா... முதல் முதல்ல நம்ப ஊருக்கு சாம்பவி வந்திருக்கா... கோயிலுக்குப் போய் வந்துடட்டும். எல்லாம் நல்லபடியா நடக்கும்!'' என்று உத்தரவிட்ட அலமேலு தன் தலையணையடியில் கிடந்த கொத்து சாவியை எடுத்து சாம்பவியிடம் கொடுத்தாள்.

''நீ இருக்கிறவரை இந்த வீட்டுப் பொறுப்பு இனி உன்னுடையது. உள்ளே என் பீரோவிலே நான் கட்ட முடியாது அடுக்கி வச்சிருக்கிற பட்டுப் புடவைகள் சிலது இருக்கு. உனக்குப் பிடிச்சது ஒண்ணை எடுத்து கோயிலுக்குப் போய்வரக் கட்டிக்கோ...'' உத்தரவிட்டாள்.

சாம்பவிக்கு மகிழ்ச்சி கட்டுக் கொள்ளவில்லை. பெரியம்மாவுக்கு இப்படி ஒரு பெரிய மனசா?

பீரோ தட்டின் உச்சியில் தெரிந்த மயில் கண் அரக்குக்கரை பட்டுச்சேலை அவளுக்கு ரொம்பப் பிடித்தது. அதற்குத் தக்கபடி ஏறக்குறைய கரை நிறத்திலே அவளிடம் ஒரு ஜாக்கெட் இருந்தது நல்லதாகப் போயிற்று.

குளித்து முடித்துவிட்டு காப்பியை மட்டும் பருகிவிட்டு... கோயிலுக்குப் புறப்பட்டாள். போகுமுன் தன் அலங்காரத்தை ஒருமுறை அந்த அறையிலிருந்த பீரோவில் பதித்த பெரிய கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். கொண்டையில் மல்லிகைப் பூச்சரமும் — இடையில் பட்டுச் சேலையும்... கண்களில் மகிழ்ச்சியின் பளபளப்புமாகத் தெரிந்த தன் உருவத்தை வியப்புடன் பார்த்துக் கொண்டாள். அவளது அழகு அவளுக்கே பிரமிப்பைத் தந்தது.

மேற்குத் தெருவைத் தாண்டி — அப்பால் தெரிந்த தென்னந்தோப்பின் இடையே சென்று ஒற்றையடிப் பாதையில் வேலைக்காரி முத்துநாகத்துடன் விரைவாகவே அவள் சிவன் கோயிலை அடைந்து விட்டாள்.

'அப்பாடி! இத்தனை பெரிய கோயிலா...?' மனதில் வியந்து கொண்டு வெளிப்பிரகாரத்திற்குள் அவள் நுழைந்த போது எதிரே வந்த வாட்டசாட்டமான பெண்மணியைக் கண்டு ஒரு கணம் திகைப்பில் நின்று விட்டாள்.

வெள்ளைப் பட்டுச்சேலையும் — வெள்ளை ரவிக்கையும் — பட்டையாக திருநீறு அணிந்த நெற்றியுமாக ஓங்கி உயரமாக கோதுமை நிறத்திலே தெரிந்த அந்த அம்மாளின் காதுகளில் வைரங்கள் மின்னின - கழுத்திலே பட்டையாக தங்கச் சங்கிலி — கைகளில் தங்க வளையல்கள், முகத்திலே பணக்காரக்களை — நடையில் மிடுக்கு பார்வையிலே கண்டிப்பு... அவள் பின்னால் பிரசாதக் கூடையைத் தூக்கிக் கொண்டு மரியாதையாக ஒதுங்கி நடந்தபடி வந்து கொண்டிருந்தாள் ஒரு வேலைக்காரப் பெண்.

சாம்பவி அந்த அம்மாளை வியப்புடன் பார்த்தது போல அந்தம்மாளும் அவளை ஆச்சரியத்துடன் கண்கள் விரிய ஊடுருவிப் பார்த்தாள்.

''யாரடி இந்த மோகினி...?'' கர்வமாக, துச்சமாக உரத்த குரலில் அவள் தன் வேலைக்காரியிடம் கேட்டது... சாம்பவியின் காதுகளில் துல்லியமாக விழுந்தது. முகம் சிவந்து போனாள்... மறுபடி அந்தம்மாளைப் பார்க்கத் துணிவின்றி தலையைக் குனிந்து கொண்டு மேலே நடந்தாள்.

''அவங்கதான்... வடக்குத் தெரு பெரிய தனக்காரர் சட்டநாதன் அவர்களின் மனைவி — மரகதம்மா...!'' மெல்லிய குரலில் கிசுகிசுத்தாள் முத்துநாகம்.

''இவங்களா?... பார்த்தீபனின் தாய்!... அந்த வண்டிக்காரர் சொன்னது போல...!'' என்று எண்ணிய சாம்பவிக்கு ஏனோ நெஞ்சு பயத்தில் துடித்தது. உடம்பு லேசாக நடுங்கியது.

3

காலை வேளையில் வழக்கமாகப் பள்ளிக்குப் போகுமுன் ஒருமுறை சிங்காரம் வந்து விசாரித்து விட்டுப் போவான் என்பதைத் தெரிந்து கொண்டதும் அவள் அன்று இரவே ஒரு கடிதம் எழுதித் தபாலில் சேர்க்கத் தயாராக வைத்து விட்டாள்.

விடியற்காலை வேளை பால் நிறைந்த அலுமினியத்தூக்குடன் தன் வீட்டிலிருந்து வேகமாக வந்த முத்துநாகம் வியப்புடன் வாயிலில் ஒரு கணம் நின்று விட்டாள். அவள் வருவதற்கு முன்பே வாசலில் நீர் தெளித்து பெருக்கி —அழகானதொரு பெரிய கோலம் போடப்பட்டிருந்தது.

அகலமாகத் திறந்து வைக்கப்பட்டிருந்த வாயில் கதவு வழியே உள்ளே ஓடி வந்தவள் மிரண்டு போனாள்.

அலமேலு அம்மாள் பல் துலக்கி, முகம் கழுவி — மாற்று உடை அணிந்து கொண்டு தாழ்வாரத்து சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தாள்.

''அம்மா! நான்தான் அவசரமாக ஓடி வந்துகிட்டிருக்கேனே... அதுக்குள்ளே பட்டணத்து அம்மாவுக்கு ஏன் இந்த சிரமம்?'' கலவரத்துடன் கேட்டாள்.

''எனக்குக் கொஞ்சம் பணிவிடை செய்து — வீட்டை நிர்வகிக்கத்தானே என் ஓரகத்தி சாம்பவியை இங்கே அனுப்பி வச்சிருக்கா... அந்தப் பொண்ணு ரொம்பக் கெட்டிக்காரி... ராத்திரி தூங்கறதுக்கு முந்தி அவ என்ன செய்யணும். எப்படிச் செய்யணும்னு கொஞ்சம் சொன்னேன். டக்குனு பிடிச்சுக்கிட்டா. அவ்வளவுதான்!''

''வாசலைப் பெருக்க நான் இருக்கேனே — அதைக்கூட அந்தம்மா செய்யணுமா?'' — அலுப்புடன் கேட்டுவிட்டு சமையலறைக்குள் புகுந்தாள் வேலைக்காரி... குளித்து முடித்துவிட்டு பளிச்சென்று வாயில் சேலை ஒன்றைக் கட்டிக்

கொண்டு சுத்தமாகக் காணப்பட்ட சாம்பவி... இட்லிகளை அவிக்கப் பானையை அடுப்பில் ஏற்றிவிட்டு வெங்காய சாம்பாரைத் துரிதமாகத் தயாரித்துக் கொண்டிருந்தாள். அதன் வாசனை மூக்கில் மோதியபோது முத்துநாகம் வாயூறிப் போய் விட்டாள். 'பட்டணத்து அம்மா சமையலில் பலே ஆள் போலிருக்கே' என்று எண்ணியபடி பால் தூக்கை மேடை மீது வைத்துவிட்டுத் தன் காரியங்களைக் கவனிக்கப் புறப்பட்டாள்.

சமையலையும் கவனித்து — வீட்டையும் சுத்தப்படுத்தி அலமேலு அம்மாளுக்கு ஓடி உதவி செய்து அவள் மிகவும் அலுத்து விட்டிருந்தாள். இப்போது அந்தப் பொறுப்புகளை எல்லாம் ஏற்றுக் கொள்ள சாம்பவி வந்திருப்பது பற்றி அவளுக்கு உள்ளூரத் திருப்தி — மகிழ்ச்சி.

வந்த ஒரு வார காலத்திற்குள் சாம்பவி வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பில் நன்றாகவே தேர்ந்து விட்டாள்.

முத்துநாகத்தின் சமையலில் நாக்கு செத்து — மருந்துகளின் தன்மையால் பசி குறைந்து மிக பலவீனமாகி விட்டிருந்த அலமேலு... இந்த சில நாள் கவனிப்பில் உடல்தேறி எழுந்து மெல்ல நடக்கத் துவங்கி விட்டிருந்தாள்.

நுரை பொங்க சாம்பவி எடுத்துக் கொண்டு வந்து தந்த காப்பியைக் கண்டதுமே அவளுக்குத் தாகம் எடுத்தது. பகல் உணவு நேரத்தை எதிர்பார்த்து சுவற்றில் தொங்கிய கடிகாரத்தை அடிக்கடி பார்க்குமளவு பசி குடலை வருடியது. வீட்டு வேலைகளைச் செவ்வனே செய்ததுடன் — ருசியாக சமைத்துப் போட்டு அன்புடன் மிக்க கருத்துடன் சாம்பவி தன் பெரியம்மாவைக் கவனித்துக் கொண்டாள்.

இரவு உணவுக்குப் பின் தனக்கு அளிக்கப்பட்ட படுக்கையை தரை மீது கூடத்து பெஞ்சியின் அருகே —மின்விசிறி அடியில் விரித்துப் போட்டுக் கொண்டு பெரியம்மாவுக்குத் துணையாகப் படுத்துக் கொண்டாள். உறக்கம் வரும் வரை இருவரும் பலவும் பேசி மகிழ்ந்தனர். சில சமயங்களில் வானொலியில் வந்த நாடகம் — பாடல்களைக் கேட்டு ரசித்தனர்.

முகத்தை சிணுங்காது — கொஞ்சமும் சலிக்காது கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து பணிவிடை செய்த சாம்பவியை அலமேலு ஆராய்ச்சிக் கண்களுடன் அடிக்கடி பார்த்தாள்.

தன் மனதில் ஏற்பட்ட எண்ணங்களை ஒருநாள் பகல் உணவின்போது சொல்லி விட்டாள்.

''என் ஓரசத்தி ரொம்ப கொடுத்து வச்சவ. பாக்கியசாலி'' சாதத்தைப் பிசைந்தபடி பெருமூச்செறிந்தாள் அலமேலு...

எதிரே தரைமீது தன் சாப்பாட்டு தட்டுடன் உட்கார்ந்த சாம்பவி பெரியம்மாவைத் திரும்பிப் பார்த்தாள்.

''என்ன சொல்றீங்க பெரியம்மா?'' பொரியலை வாயில் அள்ளிப் போட்டுக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டாள்.

''படிச்சுட்டோம்னு துளிகூட கர்வம் இல்லாத — கபடம் இல்லாத — பத்தரை மாத்துத் தங்கத்துக்கு மேலான உன்னை தன் மகளா பெத்தாளே. அதைத்தான் சொல்றேன்... உன்னை என் மகளா பெத்தெடுக்க எனக்குக் குடுப்பினை இல்லையே... பெண் குழந்தை பிறந்து விட்டிருக்குன்னு உன் அப்பன் சலிச்சுக்கிட்டு கடிதாசி போட்டப்போ... கவலைப்படாதே சாம்பவியை நான் தத்து எடுத்துக்கிறேன்னு உடனே ஆறுதலா அவனுக்குப் பதில் போட்டேன்... அடுத்தடுத்து ரெண்டு பெண் பிறந்தது — பிறகு உன் தம்பி பிறந்தான். நாலு குழந்தைகளில் ஒரு குழந்தையை எனக்குத் தத்தாகக் கொடுக்க உன் அம்மாவுக்குப் பிரியமே இல்லை. நீ மட்டும் என் சொந்த மகளா இருந்தால்...'' அலமேலு பேச முடியாது கண்கலங்கித் திணறினாள்.

கையை உதறிவிட்டு எழுந்து ஓடி பெரியம்மாவை அன்புடன் இடது கரத்தால் அணைத்துக் கொண்டாள். அவளது கண்களில் பெருகி கன்னத்தில் கோடிட்ட கண்ணீரை சட்டென்று புடவைத் தலைப்பால் துடைத்துவிட்டாள்.

''பெரியம்மா! உடம்புக்கு முடியாம இருந்து இப்பத்தான் தேறி வரீங்க. உணர்ச்சிவசப்படறது ரத்த அழுத்தத்துக்கு நல்லதில்லைன்னு சொல்லுவாங்க... இப்ப என்ன குறைஞ்சு போச்சு... ஒரு வழியில் நான் உங்க மகதானே? நீங்க போன்னு

என்னை அனுப்பறவரை நான் இங்கேயேதான் இருக்கப் போறேன்... பயப்படாதீங்க...'' ஆறுதலாகச் சொன்னாள்.

''நாளைக்கு ஒருத்தனை கட்டிக்கிட்டா?...'' பெரியம்மா மெல்ல சிரித்த போது... வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டு சாப்பிட உட்கார்ந்தாள் சாம்பவி. ஒரு கணம் அவளது கற்பனையில் பார்த்தீபன் பற்கள் பளிச்சிட சிரித்து விட்டு மறைந்து போனான்... திடுக்கிட்டு நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்தாள்.

என்ன இது...! வந்த நாளிலிருந்து... ஓயாது அவளது சிந்தனையில் அவன் முகம்... கண்ணாமூச்சி விளையாட்டு காட்டுவதேன்? சாம்பாரை ஊற்றி பிசைந்த அவளது கரம் உணர்ச்சி வசத்தில் நடுங்கியது... உள்ளத்திலே ஒரு இன்ப சிலிர்ப்பு பரவி நெஞ்சு வரை நிறைந்து கொண்டது.

சில நாட்களுக்குப் பின் ஒரு மாலைப் பொழுது... மூடியிருந்த வாயிற் கதவு பலமாகத் தட்டப்படும் ஓசைகேட்டு... விரைந்து சென்று அவள் கதவைத் திறந்தாள். தொளதொளவென்ற பாண்டும் சற்று பழுப்பாகிவிட்ட வெள்ளை சட்டையும் அணிந்த... நடுத்தர வயதைத் தாண்டிவிட்டவரும் நரைத்த கிராப்புத் தலையும் சற்று பருத்த உடலுமான ஒரு உயரமான மனிதர்... கால் செருப்புகளை நடையில் கழற்றிவிட்டு... கையில் பிடித்த தோல் பையுடன் மிக்க உரிமையுடன் உள்ளே வந்தார். குப்பென்று அவர் மீது எழுந்த மருந்து வாசனை கூடத்தை நொடிப் பொழுதில் வியாபித்துக் கொண்டது. வாயிலில் அவர் நிறுத்தி வைத்திருந்த ஸ்கூட்டரை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு உள்ளே வந்தவள் புரிந்து கொண்டு விட்டாள்.

பெரியம்மா அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கும் அவர்களது குடும்ப வைத்தியர்... டாக்டர் வைத்தியலிங்கம் வந்திருக்கிறார்.

சட்டென்று துவாலை — சோப்புப் பெட்டி — செம்பில் தண்ணீர் முதலியவற்றை எடுத்து வந்து முற்றத்து குறட்டின் ஓரத்திலே வைத்தாள்.

''அலமேலு அம்மா! யார் இந்த நர்ஸ்? எங்கே கண்டுபிடிச்சீங்க'' கேலியும் வியப்புமாக கேட்டார் அவர்.

''என் மச்சினர் மகள். பட்டணத்திலிருந்து வந்திருக்காள். பி.ஏ. படிச்ச பொண்ணு, வேலை தேடிக்கிட்டு இருக்கிறவள். பாவம், எனக்காக கொஞ்ச நாள், கூட இருக்க வந்திருக்கா...''

நோயாளியை சோதனை செய்துவிட்டு திருப்தியுடன் எழுந்து சாம்பவி கையில் நீரை ஊற்ற... சோப்பு பெட்டியை நீட்ட கைகளைக் கழுவிக் கொண்டு துவாலையில் துடைத்துக் கொண்டு நின்ற வைத்தியர் வைத்தியலிங்கம் அவளை வைத்த கண் வாங்காதவராகப் பார்த்தார்.

''முன்னைக்கு இப்போ உடம்பு ரொம்பவே தேறி இருக்கு. காரணம் இந்தப் பெண்ணின் பணிவிடைன்னு நினைக்கிறேன். இந்தப் பெண்ணை உங்க கூடவே வச்சுக்கோங்க. உங்க நோயெல்லாம் மாயமாகிவிடும்'' என்று சிரித்தபடி தமது பெயர் அச்சிடித்த காகிதத்தில் மாற்று மருந்துகள் சிலவற்றை வேகமாக எழுதிவிட்டு... அங்கு கிடந்ததொரு பிரம்பு நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

அதற்குள் உள்ளே விரைந்த சாம்பவி... காப்பி டம்ளருடன் வெளிப்பட்டாள்.

''எனக்கா இது... பலே பலே'' என்றபடி அவர் கை நீட்டி வாங்கி ருசித்துக் குடித்தார். வழியில் அவசரத்துக்கு கடைத்தெரு கற்பகம் ஓட்டலில் அவர் தமது தாகத்தைத் தணிக்க வாங்கி சாப்பிடும் காப்பிக்கும்... இதற்கும் எத்தனை வித்தியாசம்?... சாம்பவியை அவர் வியப்புடன் மீண்டும் வெறித்தார்.

''என்கூட கொஞ்சநாள் இருப்பா... ஆனால் இங்கேயே எப்பவும்கூட வச்சுக்க முடியுமா? ஊரான் வீட்டு பெண்ணாச்சே...'' அலமேலு முறுவலித்தபடி பெஞ்சியில் காலை தொங்கவிட்டுக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

''ஏன் முடியாது... இந்த ஊரிலேயே ஒரு நல்ல பையனாப் பார்த்து கட்டிப் போட்டுடுங்க... மருமகனையும் கூடவே வீட்டோட வச்சுகிட்டாப் போகுது... இந்தப் பெண்ணை நான்தான் கட்டிப்பேன்னு... நீங்க வாயைத் திறந்ததும்

மாப்பிள்ளைகள் கியூவில் வந்து நிற்பாங்களே...?'' அட்டகாசமான குரலில் டாக்டர் சிரித்தார்.

தனது கல்யாணத்தைப் பற்றிய விமர்சனத்தைக் கேட்டு வெட்கத்துடன் அவள் சமையலறைக்குள் புகுந்து கொண்டாள். கட்டுக்கொள்ள முடியாது மனம் ஒரு இன்பப் பரவசத்தில் துடித்தது. பார்த்தீபனுடன் மணமேடையில் அமர்ந்து விட்டது போன்றதொரு கற்பனையில் அவள் ஆடிப்போய் ஆதரவுக்கு அடுப்பு மேடையைப் பற்றிக் கொண்டு நின்றாள்... அவனை நினைக்கும் போதே... நெஞ்சில் ஏற்படும் இன்ப உணர்வில் கண்கள்கூட ஈரமாகி விடுகின்றனவே, ஏன்?

''இப்படி வாம்மா சாம்பவி. பெயர்கூட உன்னைப் போல அழகாவே இருக்கு!'' உரத்த குரலில் டாக்டர் அழைத்ததும் அவள் வெளியே வந்தாள். மருந்துகளைக் கொடுக்க வேண்டிய விவரத்தைக் கூறிவிட்டு எழுந்த டாக்டர் பலத்த குரலில் சிரித்தார்.

''உன்னை இந்த ஊரிலேயே பிடித்துப் போட நான் ஏற்பாடு செய்யப் போறேன். பார்த்துகிட்டே இரு... மருத்துவம் செய்ய வந்த வைத்தியர்... கல்யாணத் தரகராயிட்டாரென்று உனக்கு வேடிக்கையா இருக்கா? இது கிராமம் இங்கே நாங்க எல்லோரும் எல்லாத்திலும் பங்கு கொண்டு ஒரு குடும்பமா... பழகுவோம்... புரியுதா?'' என்று கேட்டபடி பையுடன் அவர் வெளியேறினார்.

சாம்பவி அன்று இரவு சரியான உறக்கமின்றி பலவிதக் கற்பனைகளில் திளைத்துக் கொண்டிருந்தாள்.

இரண்டு தினங்களுக்குப் பின் அலமேலு அம்மாள் திடீரென்று ஒரு வேண்டுகோள் விடுத்தாள்.

''நம்ம தோட்டத்துக்குப் பின்னாலே ஓடற பெரிய வாய்க்கால் கோடை காய்ச்சலில் வத்திக் கிடந்தது. குடிக்கவும், வீட்டுப் புழக்கத்துக்கும் கிணற்று தண்ணியையே உபயோகிச்சுகிட்டு வந்தோம். இப்போ வாய்க்காலில் காவேரி தண்ணி கரை வழிய ஓடுகிறதாம். நம்ப கிணற்றுத் தண்ணி உசத்தி என்றாலும்... காவேரித் தண்ணிக்கு ஈடாகுமா... காவேரி

தண்ணியை குடிச்சு பல நாளாச்சு... ஒரு காரியம் நீ செய்வியா...?''

''சொல்லுங்க பெரியம்மா...!''

''பின்பக்கத்துத் தோட்டத்து மூங்கில் வேலியைத் தாண்டி — கொஞ்சதூரம் நீ வாய்க்கால் கரை ஓரம் போனா இறங்குதுறை படிக்கட்டு... அரசமரத்துப் பிள்ளையார் கோவில்கிட்ட தெரியும்... ஒரு குடம் வாய்க்கால் தண்ணி எடுத்துட்டு வர உன்னால் முடியுமா...? குடம் தூக்கி உனக்கு பழக்கம் இருக்கா? முத்துநாகம் வேலை முடிஞ்சதும் போயிட்டா... அதனாலே...!'' தயங்கினாள் அலமேலு.

''குடம் தூக்கி பழக்கம் இல்லாதவங்களைக் கூட பட்டணத்து தண்ணிப் பஞ்சம் தூக்க வச்சிடும்... எனக்கு ரொம்ப பழக்கம் உண்டு... ஒரு நொடியில் போய் தண்ணி எடுத்துட்டு வரேன்...!'' என்று வேலைக்காரி பொன்னாக தேய்த்துக் கவிழ்த்து வைத்திருந்த பித்தளைக் குடம் ஒன்றைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள்.

இருபுறமும் புல்லும், செடிகளும் மண்டிக்கிடந்த வாய்க்கால் ஓரப்பாதை மீது அவள் மெல்ல நடந்தாள். வெய்யில் ஏறத் தொடங்கி விட்டதால் எதிர்ப்பக்கத்து வரப்பின் மீது யாரையும் காணவில்லை... காலையிலேயே குளித்துவிடும் பழக்கமிருந்ததால் வாய்க்கால் கரையின் பெண்கள் யாரையும் அவள் பார்க்கவில்லை... வெறிச்சென்றிருந்த பாதையில் வேகமாக நடந்து இறங்கு துறையை அடைந்தாள்.

படிகளில் மெல்ல இறங்கி... நீரில் மூழ்கியிருந்த கடைசிப்படி மீது காலை வைத்தபோது மீன் குஞ்சுகள் அவளது பாதத்தை மெல்லக் கடிக்கவே... அவளையும் மீறிச் சிரித்தாள். கிராமத்து வாழ்க்கை அவளுக்கு சுவையாக —சுகமாக — மிக்க மகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது... எங்கு திரும்பினாலும் கண்களில் பட்ட பசுமை மனத்திற்கு இதமாக இருந்தது. மெல்லப் புடவைத் துணியை இடது கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டு துணிவுடன்... இன்னும் கொஞ்சம் ஆழத்தில் இறங்கி... குடத்தால் நீரை விலக்கிவிட்டு... தெளிவாக ஓடிவந்த

தண்ணீரைக் குடத்தில் முகர்ந்து கொண்டு கரை ஏறினாள்.

அரசமரத்து மேடையருகே — கட்டப்பட்டிருந்த அந்த விநாயகர் கோயிலைப் பாராது போக மனமின்றி குடத்தை இறக்கி கோயில் படி ஒன்றின் மீது வைத்தாள்... விடியற்காலையிலேயே பூசையை முடித்துவிட்ட அர்ச்சகர்... கோயில் கதவைப் பூட்டிவிட்டுப் போயிருந்தார்... ஆனாலும் சாயவேட்டியும்... சந்தனத்தின் மீது குங்குமப் பொட்டும்... செவ்வந்தி மாலை அலங்காரத்திலே கம்பிக் கதவுக்குப் பின்னால் விநாயகப் பெருமான் கம்பீரமாகக் காட்சி தந்தார். அருகே சங்கிலியில் தொங்கியதொரு வெண்கல விளக்கு மினுக்கிட்டு எரிந்து கொண்டிருந்தது.

பக்தர்கள் உபயோகத்திற்காக உண்டிப் பெட்டி அருகே ஒரு தகர டப்பாவில் அர்ச்சகர் திருநீற்றை கொஞ்சம் விட்டுப் போயிருந்தார். அதை விரலால் தொட்டு தன் நெற்றியில் இட்டுக் கொண்டு... குடத்தைத் தூக்கி இடையில் வைத்துக் கொண்டு திரும்பியவள்... 'அலோ!' என்ற குரலைக் கேட்டு அதிர்ந்து போனாள்.

''பயந்துட்டீங்களா...? அயாம் சாரி!'' என்று புன்னகைத்த பார்த்தீபன்... அவளைக் காலோடு தலை... அதிசயமாகப் பார்த்தான்.

பட்டுக்கரை வேட்டியும் — வெள்ளை சட்டை மீது இடதுதோளில் உத்திரியமுமாக... அவன்... எதிர்பாராத சமயம் அவள் அருகே வந்து நின்ற அதிசயத்தை எண்ணி திகைத்துப் போய் விட்டாள்.

மவுனமாக தலையை அசைத்துவிட்டு... செவேலென்று மாறிவிட்ட தன் முகத்தைத் தாழ்த்திக் கொண்டு அவள் வீட்டுப்பக்கம் திரும்பிய போது அவன் மறுபடி பேசினான்.

''இந்தக் கோயிலையும்... இந்த இறங்குதுறையையும் என் பாட்டனார் கட்டி வச்சார்... அந்த சொந்தத்திலே... நான் வயலுக்குப் போகுமுன் தினமும் இந்த விநாயகரை வணங்கிட்டுப் போற பழக்கம்...''

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள், சாம்பவி.

அவளுக்குத் திடீரென்று அவனிடம் பேச துணிவு வந்தது...

''இந்த ஊரில் முக்கால்வாசி பாகம் உங்களுக்குச் சொந்தம்னு கேள்விப்பட்டேன்'' குறும்புத்தனமாகச் சொல்லிவிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

'ஏன் நீ கூட எனக்கு சொந்தமானவள்தான்' என்பது போல அவன் பார்த்த அந்த மென்மையான பார்வையில்... ஒரு கணம் மயங்கி நாணி மெய் சிலிர்த்துப் போய் அவள்... மேலே பேச முடியாது மவுனமாக நடந்தாள்.

மனம் படக்படக்கென்று அடித்துக் கொண்டது. தன் பின்னால் அவன் தன் காந்தக் கண்களால் ஊடுருவிப் பார்த்துக் கொண்டு நிற்பதை... அவளால் உணர முடிந்தது... எதிர்பாராத சந்திப்பு — அவளிடம் தானே பேசிவிட்டாரே என்ன அதிசயம்!... என்ற வியப்பும், திகைப்புமாக... விவரிக்க இயலாத இன்ப உணர்வில் பூரித்துப் போய் அவள் மகிழ்ச்சியுடன் நடந்தாள்.

4

அடுத்த நாள் காலை அலமேலு அம்மாள் வேலைக்காரியை வாய்க்காலுக்கு நீர் எடுத்து வர அனுப்புமுன் சாம்பவி குறுக்கிட்டாள்.

''முத்துநாகம் சொன்னதையெல்லாம் சட்டென்று செய்து முடிக்கும் நல்ல வேலைக்காரிதான். ஆனால் ரொம்ப அவசரக்காரி — வாய்க்கால் தண்ணீரில் நின்று நிதானமாக தெளிந்த நீராக பார்த்து முகர்ந்து கொண்டு வரமாட்டாள். மேலும் பெரியம்மா... தினமும் அந்த அரசமரத்துப் பிள்ளையாரை வணங்கிவிட்டு வர ஆசைப்படறேன்...''

''சரி, உன் இஷ்டம். பட்டணத்தில் நாலு இடத்திற்கு போய் வந்தவளை — இங்கே கிராமத்து வீட்டோட முடக்கிப் போடறது தப்புதான். போய் நீயே நிதைக்கும் தண்ணி

எடுத்துட்டு வா... ஆனால் உச்சிப்பொழுது நெருங்கின சமயம் அங்கே போகாதே...!''

''ஏன் பெரியம்மா...? பட்டணத்தைப் போல இங்கேயும் தனியா ஒரு பெண் போனா யாராவது முரடர்கள் சீண்டுவாங்களா...?''

''நம்ப வீட்டுக்கு பின்னால போற வாய்க்கால் பாதையை அந்த தருமவான் சட்டநாதன் அமைச்சிட்டு போயிருக்கார் —சொல்லப்போனா அந்த இறங்குதுறை — பிள்ளையார் கோயில் எல்லாம் அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தது... சாதாரணமா இந்தப் பாதையிலே கிராமத்து ஆம்பிள்ளைகள் யாரும் நடக்கமாட்டாங்க... இறங்குதுறையில் குளிச்சு அட்டகாசம் செய்யமாட்டார்கள்... பெண்கள் சிலர்தான் விடியற்காலை குளிக்க அங்கே போவாங்க... அப்படி ஒரு கட்டுப்பாடு...!''

'இதெல்லாம் எனக்குத் தெரியும் பெரியம்மா...!' தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு புன்னகைத்தாள் சாம்பவி.

''பிள்ளையார் கோயிலுக்கு அப்பாலே பின்பக்கம் ஒரு ஆலமரம் இருக்கு கவனிச்சியா...?''

பிள்ளையாரையும், அரச மரத்து மேடையையும் பார்த்து முடிப்பதற்குள் பார்த்தீபன் இடை புகுந்து விட்டானே. அவள் தன் சூழ்நிலையை எங்கே சரிவர கவனிக்க நேரம் இருந்தது!

''பார்க்கலை பெரியம்மா... இன்னிக்குக் கட்டாயம் பார்த்துட்டு வரேன்...''

''வேண்டாம்மா... உச்சிப் பொழுது நெருங்கிற நேரத்திலே ஊர் பெண்கள் யாரும் அந்த மரத்துக்கிட்டே நெருங்க மாட்டாங்க... அந்த மரத்திலே ஒரு பயங்கர முனீஸ்வரன் குடி கொண்டிருப்பதாக கிராமத்திலே ஒரு கதை உண்டு.... அந்தப் பேய்ப் பிடிச்சுட்டா அதைப் போக்க மந்திரம் செபித்து அந்த பெண்ணின் கூந்தல் முடியில் ஒரு கொத்தை எடுத்துட்டுப் போய் அடி மரத்திலே ஒரு ஆணியடிச்சு — முடியை சுத்திவிட்டு மந்திரம் போட்டாதான் முனீசுவரன் அவளை விடும். நிறைய அதில் ஆணி அடித்திருப்பதை நீ பார்க்க முடியும்.''

இடுப்பில் குடத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அவள் கலகலவென்று சிரித்தாள்.

''பெரியம்மா! இதையெல்லாம் நீங்க நம்புறீங்களா? நாங்க நம்ப மாட்டோம். வேணுமின்னா நம்ம வீட்டுக்கு வர டாக்டர்கிட்டே நீங்க கேட்டுப்பாருங்க. இந்த காத்து — கருப்பு என்கிற சங்கதியெல்லாம் ஒருவகை உளநோய்... ஹிஸ்ட்டீரியான்னு அதுக்குப்பேர்னு சொல்வார்!''

''நான் நம்பலை — ஆனால் கிராமத்து மக்களது நம்பிக்கையை அவ்வளவு சீக்கிரம் நாம் அகற்ற முடியாதே!''

''கல்வியும் — எடுத்துச் சொல்கிற பொது நல உணர்வு கொண்ட பலரின் பேச்சும் மெல்ல இந்த நம்பிக்கைகளையெல்லாம் தகர்த்து விடும்!'' —

''உன்னோட பேசி வெற்றி காண என்னால் முடியாது. எதுக்கும் இந்தக் கிராமத்துப் பழக்க வழக்கங்களை நீ தெரிஞ்சுக்கணுங்கிறதுக்கு சொன்னேன்!'' என்று முடித்தாள் அலமேலு.

''பெரியம்மா, என்னை முனீசுவரன் பிடிக்க மாட்டான். குடத்தால் அவனை செம்மையா மொத்திடுவேன்... கவலைப்படாதீங்க...!'' என்று கூறிவிட்டு உற்சாகமான எதிர்பார்ப்புகளுடன் வாய்க்கால் கரைமீது துரிதமாக நடந்தாள்.

குடத்தில் நீரை முகந்து கோவில்படி மீது வைத்துவிட்டு நீண்டநேரம் பிள்ளையாரை வணங்கிவிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

என்ன ஏமாற்றம்? கண்களுக்கு எட்டிய தூரத்தில்... வாய்க்கால் வரப்பின் மீதோ மதகு மீதோ அவனைக் காணவில்லை.

பெரியம்மா கூறின அந்த ஆலமரத்தருகே சென்று... அதன்மீது அடித்து விட்டிருந்த ஆணிகளை எண்ணிப் பார்த்தபடி சிறிதுநேரம் நின்று கொண்டிருந்தாள்.

அப்பொழுதும் அவன் வரவில்லை. உற்சாகத்துடன் புறப்பட்ட அவள் மனம், உப்பிய பலூனை ஊசியால்

குத்திவிட்டது போல ஒடுங்கிப் போனது.

ஆமாம்! அவளுக்கு ஏன் இந்த எதிர்பார்ப்பு...? பார்த்தீபனை மறுபடி பார்க்க வேணும் என்கிற ஆசை ஏன்...? அப்படிப் பார்த்து விட்டதினால் என்ன பலன் ஏற்பட்டுவிடப் போகிறது?

தன்னையே சாடிக் கொண்டு அவள் குடத்தைத் தூக்கி இடையில் வைத்துக் கொண்டாள். அவளையும் மீறி அவளது கண்கள் நாலாபுறமும் சுழன்றன. மறுநாளும் — அதற்கு மறுநாளும்... தொடர்ந்து அந்தவாரம் முழுதிலும் அவனை அவள் மீண்டும் அந்தப் பிள்ளையார் கோவில் அருகே பார்க்கவே முடியவில்லை.

தினமும் வயல்பக்கம் போகும் முன் விநாயகரை வணங்கிட்டுதான் போவேன் என்றாரே? அந்த நேரத்தில் அவள் அங்கே வரக்கூடும் என்று எதிர்பார்த்து அதைத் தவிர்க்க கொஞ்சம் முன்னதாகவே வந்துவிட்டுப் போய் விடுகிறாரோ... அப்படியென்றால் அவள் ஆசையைத் தூண்டிவிட்டு வேடிக்கைப் பார்க்கும் கபட மனிதரோ...?

எத்தனை கட்டுப்படுத்தியும் அவளது கண்கள் கலங்கிப் போயின... துன்பம் நெஞ்சை இறுக்கியது.

அன்று இரவு உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு திடுக்கிட்டு தலையைத் தூக்கிக் கொண்டு... தலையணையின் ஒரு மூலையை மெல்லத் தொட்டுப் பார்த்தாள்... சில்லென்று அந்தப்பகுதி அவளது கண்ணீரால் நனைந்து போயிருந்தது! அவளையுமறியாது... அவள் அழுதிருக்கிறாள். கண்டவுடனேயே அவனிடம் மனதைப் பறிகொடுத்துவிட்ட நிலையில்... காதலுக்காக ஏங்கி அழுது விட்டிருக்கிறாள். காதல் என்பது ஒரு இன்பமான உணர்வு என்று கதாசிரியர்களும் -கவிஞர்களும் கதை விடுகிறார்கள்... உண்மையில் அது ஒரு துன்பமான உணர்வு என்பதில் சந்தேகமில்லை...

அவள் அதனுடைய பாதிப்பில் இப்படியா வதைபட வேண்டும்... பெரியம்மாவிடம் சொல்லி ஆறுதல் பெற முடியாத சங்கதியாச்சே...? என்ன முட்டாள்தனம்? அவள்

பட்டணத்திலிருந்து பெரியம்மாவைக் கவனித்துக் கொள்ள வந்தவள். பார்த்தீபன் அவளது அந்தஸ்துக்கு மீறியவன். அவளைப் போன்ற சாதாரண இடத்துப் பெண்கள் கனவிலும் நினைக்க முடியாத உயரத்தில் இருப்பவன்... ஏதோ எதேச்சையாக சந்தித்துப் பேசிவிட்டதைப் பற்றி என்னென்னவோ கற்பனை செய்து கொண்டு... சே! என்ன மடமையினம்! தன்னையே சாடிக் கொண்டு உறங்கினாள்.

அன்றுமாலை அலமேலு அம்மாள் காப்பியைப் பருகிய வண்ணம் தானே பேச்சுக் கொடுத்தாள்.

''இன்னிக்கு செவ்வாய்க்கிழமை. அரசமரத்து பிள்ளையாருக்கு மாலை பூசை செய்துவிட்டு கொஞ்சநேரம் அர்ச்சகர் காத்திருப்பார். கதவை மூடிக்கிட்டு அவசரமாக ஓடிப்போயிட மாட்டார். அதனாலே நீயும் நமக்காக ஒரு அர்ச்சனை செய்துட்டு வரலாம்... தேங்காய்ப் பழக்கூடையை எடுத்துட்டு வேணுமினா வேலைக்காரியை துணைக்குக் கூட்டிக் கொண்டு போயிட்டு வா!''

''அரசமரத்துப் பிள்ளையார் கோயில்தானே — துணை தேவையில்லை பெரியம்மா... இதோ போயிட்டு வந்துடறேன்!'' என்று உள்ளுணர்வின் உந்தலால் புறப்பட்டு விட்டாள் சாம்பவி.

மாலை நேரத்து மஞ்சள் வெயிலில் குளித்த வாய்க்கால் கரை, செடி, கொடிகள், பொன் பூச்சு பூசிக் கொண்டிருந்தன. அவள் விரைவில் கோயிலை அடைந்து விட்டாள்... எதிர்ப் பக்கத்து வரப்பின் மீது உழவர்கள் கலப்பையுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். மெல்லிய பஞ்சுப் போர்வை போன்ற மேகக் கூட்டத்தினிடையே பளிச்சென்று தெரிந்த நீலவானத்திலே இங்குமங்கும் கும்பலாக சிறகடித்துக் கொண்டு சென்ற பறவைகளின் கூட்டத்தையும்... காற்றினால் அசைந்த அரசமரத்து இலைகள் எழுப்பிய சலசல ஓசையையும் அவள் மிகவும் ரசித்தாள்.

அர்ச்சகர் அவளை அதிசயமாக மேலும், கீழும் பார்த்தார்...

''அலமேலு அம்மா பேருக்கா அர்ச்சனை...?'' என்றபடி

வேகமாக செயல்படத் தொடங்கினார். கற்பூர ஜோதியை வணங்கிவிட்டு தட்சணையைத் தட்டில் போட்டுவிட்டு... பிரசாதக் கூடையுடன் திரும்பிய போது அவள் பார்த்து விட்டாள். நெஞ்சு வெடித்துவிடும் போலத் துடிக்கத் தொடங்கியது — சட்டென்று பாதையினின்று நகர்ந்து அந்த ஆலமரத்தின் பின்பக்கமாக மறைவாக நின்று கொண்டாள்.

பார்த்தீபன் வாய்க்கால் படிகளில் இறங்கி கை, கால்களைக் கழுவிக் கொண்டு கோயிலுக்கு வந்ததை... பார்த்து... இன்னும் சற்று மறைவாக ஒதுங்கிக் கொண்டாள். அர்ச்சகர் நீட்டிய கற்பூர ஜோதியை வணங்கியவன் திரும்பி ஆலமரத்தின் பக்கம் பார்ப்பதை கவனித்த போது... மறுபடியும் அவளது மார்பு உணர்ச்சி வசத்தில் வேகமாக அடித்துக் கொண்டது.

கோயில் தடுப்பு கம்பிக்கதவு சாத்திப் பூட்டப்படும் ஓசையும் — தொடர்ந்து அர்ச்சகர்... 'வரேன் சின்னய்யா!' என்று விடைபெற்றுக் கொண்டு... வேறு பக்கமாக சருகுகள் மீது காலை வைத்து சப்தித்தபடி நடந்து போவதும்... அவளுக்குத் துல்லியமாகக் கேட்டன.

''இத்தனை நேரம் அவரும் போயிருப்பார்?'' என்று மெல்ல எட்டிப்பார்த்தவள், 'அம்மாடி...' என்று கலவரத்துடன் உரக்கவே கத்திவிட்டாள். அவள் பின்னால் இன்னொரு வழியாக வந்து நின்ற பார்த்தீபன்... பதிலுக்கு பற்கள் பளிச்சிட சிரித்தான்.

''நல்லவேளை. உச்சிப் பொழுதாக இருந்து நீங்க பயந்து இப்படி அலறியிருந்தா இந்த மரத்திலிருக்கும் முனீசுவரன் உங்களை 'கபக்கென்று' பிடித்துக் கொண்டிருப்பான்... மாலைப் பொழுதில் அவன் வெளியே வரமாட்டான்... அதனால் ஆபத்துவிட்டது...!'' என்று சொல்லிவிட்டு குறும்பாக அவளைப் பார்த்தான்.

'மாலைப் பொழுது அவனுக்குப் பதில்... மன்மதன் போல நீங்க வந்திருக்கிங்களே என்னைப் பிடிச்சுக்க... மன்மதனும் ஒரு வழியில்... ஒருவகை பிசாசுபோலத்தான்!' என்று விடுக்கென்று சொல்ல நாத்துடித்து... ஆனால் மவுனமாக அவனை நிமிர்ந்து

பார்த்தாள்...

''ஒரு வாரமாக நான் ஊரில் இல்லை. எங்க மருந்து கடைக்கு வேண்டிய சில மருந்துகளை மொத்த விலையில் வாங்கவும் — இன்னும் சில சொந்தக் காரியங்களையும் கவனிக்க — சென்னைக்குப் போயிருந்தேன்!''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் சாம்பவி... அவனை நினைமும் பார்க்க முடியாது போனதின் மர்மம் இப்போது விளங்கி விட்டதில் உள்ளூர மிக்க ஆறுதல் ஏற்பட்டது...

''இல்லாட்டி நான் தினமும் பத்து மணிக்கு மேலே கட்டாயம் கோயிலுக்கு வந்து கொண்டிருப்பேன்... இன்னிக்கு காலையில்தான் ஊரிலிருந்து திரும்பினேன்... காலையில் வர முடியாததால் மாலையில் வந்து பிள்ளையாரைத் தரிசித்தேன்... காரை மதகுக்கு அப்பால் வழக்கம் போல நிறுத்திவிட்டு வாய்க்கால் மதகைத் தாண்டி இந்தப் பக்கம் வரும்போதே... நான் பார்த்துட்டேன். நான் வேகமாக வர்றதுக்குள்ளே நீங்க பிரசாதக் கூடையோட ஆலமரத்துக்குப் பின்னாலே போயிட்டீங்க!'' முறுவலித்தான்.

மவுனமாக அவள் அவனைப் பார்த்தாள்.

'என்ன சொல்ல இப்படி சுத்தி வளைக்கிறார் இவர்!'

''நான் சென்னைக்குப் புறப்படற அன்னிக்கு மாலை எங்க வீட்டுக்கு எங்க குடும்ப வைத்தியர்... டாக்டர் வைத்தியலிங்கம் வந்திருந்தார்.'' மேலே கேட்குமுன் நெஞ்சு வாய்க்குள் வந்துவிடும் போன்ற ஒரு பதைபதைப்பு அவளுக்கு.

''அலமேலு அம்மா வீட்டுக்குப் பட்டணத்திலிருந்து அவங்க உறவுப் பெண் ஒருத்தி வந்திருக்கான்னு அவர் ஆரம்பிச்சார்...''

''நான் அந்த மோகினியை வேதபுரி நாயகர் கோயிலில் உங்களுக்கு முன்னாடியே வந்த நாளே பார்த்துட்டேன். பிறகு வேலைக்காரி மூலம் சங்கதிகளைப் புரிஞ்சுகிட்டேன். கிழக்குத் தெரு கந்தசாமியின் தம்பி வாசீகன்னு பட்டணத்திலே இருக்கானே — அவன் மகளாம் இந்தப் பொண்ணு.

சாம்பவின்னு பேராம் — படிச்சவளாம்... காசு பணம் இல்லாட்டியும் கந்தசாமி குடும்பத்துக்குண்டான திமிர்... பரம்பரை சொத்தாச்சே... பட்டணத்திலிருந்து தன் பெரியம்மாவுக்கு உதவி செய்ய வந்திருக்காளாம்! படபடன்னு பேசினாங்க அம்மா...''

தன்னைப் பற்றிய சகல விவரத்தையும் தாயும் — மகனும் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்... அடுத்தபடியாக அவர்களது பட்டணத்து வீட்டின் அந்தஸ்தினைப் பற்றி அலசுவார்கள்... மட்டமாகப் பேசுவார்கள் என்று நினைத்த மாத்திரம் அவளுள் சினம் பொங்கி எழுந்தது.

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு அவனைக் கோபத்துடன் உற்றுப்பார்த்தாள்.

''இந்த ஆலமரத்து முனீசுவரன் பெண்களைத்தான் பிடிப்பானாம். ஆனால் என்னை வேறு ஒரு பிசாசு பிடித்துக் கொண்டு விட்டிருக்கு... அதனாலே இந்த ஒரு வாரம் எனக்குப் பட்டணத்திலே வேலையே ஓடலை... கொஞ்சம் பிரசாதம் தரமுடியுமா...?'' என்று கேட்டபடி கையை அவன் நீட்டிய போது சாம்பவியால் மறுக்க இயலவில்லை.

கூடையிலிருந்த பொட்டலத்தை அவிழ்த்து சிறிது விபூதியும் ஒரு துளி குங்குமத்தையும் அவனது உள்ளங்கையில் போட்டாள்.

''என்னைப் பிடிச்சிருக்கிற பிசாசு என்னன்னு கேட்க உங்களுக்கு ஆவல் இல்லையா...?'' திருநீற்றையும், குங்குமத்தையும் நெற்றியில் இட்டுக் கொண்டு மெல்லச் சிரித்தான்.

''எனக்கு நேரமாகிறது... வருகிறேன்!'' என்றபடி அவள் வெடுக்கென்று திரும்பினாள்.

''என்னை மோகினி பிசாசு பிடித்துக் கொண்டிருக்கிறது... அதற்குத் தக்க மந்திரம்... சிகிச்சை எடுத்துக்க வேண்டாமா?''

திக்கென்ற உணர்வில் அவள் கோபத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

அந்தஸ்துக்கு கீழ்பட்ட இடத்தில் காதல் கொண்டாடிவிட்டு... சமயம் வந்ததும் கைவிட்டுவிடும் பழக்கமுடைய பணக்காரத் தனத்தை அவளிடம் காட்டி துணிச்சலாகப் பேசிப்பழக முயலுகிறாரா...?

ஊகும்...! அவள் தன் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இது காற்றடித்தது... தாழை பூத்தது என்கிற கதையாகிவிடக் கூடாது...

பதிலளிக்காது... அவனை வெறித்துவிட்டு அவள் திரும்பி நடந்தாள்.

பின்னால் காலடி சத்தம் கேட்டதும்... அவள் பயந்து போய்விட்டாள். இதென்ன தொல்லை... அவளை அவன் துணிச்சலாகப் பின் தொடர்கிறானே?

வெடுக்கென்று ஏதோ சொல்ல அவள் திரும்பிப் பார்த்தாள்...

''நாளை காலை கட்டாயம் நான் கடவுளைத் தரிசிக்க வழக்கமான நேரத்திற்கு இங்கே வருவேன்னு சொல்ல விரும்பினேன் — நீங்க அதை கேட்டுக்காம போறீங்களேன்னுதான்... பின்னால் ஓடிவந்து கொண்டிருக்கேன்!'' என்று கூறிவிட்டு... காலோடு தலை அவளை மோகனமான பார்வையில் கவ்வினான்.

மந்திர சக்தியில் கட்டுண்டவள் போல அவள் மெல்ல நடந்து எப்படியோ தோட்டத்துப் பின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தபோதுதான் விழிப்படைந்தாள்.

பயமும் — மகிழ்ச்சியுமான கலவை உணர்வில் அவள் தோட்டத்து முல்லைக் கொடியருகே சென்று... தன் உள்ளத்தைப் பறிகொடுத்துக் கொண்டு போனவனை நினைத்தபடி பூக்களை வேகமாக... பறித்துக் கொண்டு நின்று விட்டாள்.

5

அன்று இரவு வழக்கம் போல படுக்குமுன் நடையில் மெலிதாக எரிந்த மின் விளக்கை மட்டும் போட்டுவிட்டு படுக்கை மீது வந்து சாய்ந்தாள் சாம்பவி.

வானொலியில் நாடகம் ஒன்றைக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்த அலமேலு அது முடிந்ததும் பெட்டியை மூடிவிட்டு... ''எல்லாம் நம் ஊர் கதையைப் போலவே இருக்கு...!'' என்று பெருமூச்செறிந்தாள்.

''என்ன பெரியம்மா சொல்றீங்க... நாடகம் நல்லாத்தானே இருந்தது?'' சாம்பவி கேட்டதும் பெரியம்மாவினால் பேசாது இருக்க முடியவில்லை...

''உன் பெரியப்பா உசிரோட இருந்தப்போ பஞ்சாயத்திலும் — ஊர் விவகாரங்களிலும் ரொம்பவும் தலையிட்டுக் கொள்றது பழக்கம். பெரிய தனக்காரர் சட்டநாதன்தான் எல்லாத்துக்கும் தலைவர் என்றாலும் ஊர் மக்கள் உன் பெரியப்பா பேச்சுக்கு ரொம்ப மதிப்புக் கொடுத்தாங்க!''

''அப்படியா? பெருமைப்பட வேண்டிய சங்கதி...!''

''அதனாலே கொஞ்சம் சிறுமையும் ஏற்பட்டது — அதைச் சொல்ல வரேன். வானொலியில் வந்த நாடகத்தை போல ஒரு நிகழ்ச்சி இந்த ஊரிலும் நடந்தது. நம்ப முத்துநாகத்தின் அக்கா மகள் செல்வியை பெரிய தனக்காரர் வயலில் வேலை செய்த ஒரு வாலிபன் கடத்திகிட்டு போயிட்டான். ஊர் ரெண்டுபட்டது. பஞ்சாயத்து கூட்டினாங்க. பெரிய தனக்காரர் தலைமை வகித்தார். ஏற்கனவே அந்தப் பையனுக்கு கல்யாணமாகி ஒரு குழந்தை இருந்ததாலே... அவன் செய்த தப்புக்கு ஒரு தொகை அபராதம் கட்டிடணும்னு தீர்ப்பு வழங்கினார்!''

''ஒரு பெண்ணின் வாழ்க்கையை குலைத்ததுக்கு வெறும் பணம் ஈடாகிடுமா பெரியம்மா...?''

''அதான் சொல்லவரேன்; என் கணவர் அதுக்கு ஒப்புக்கலை; செல்வியை அந்தப் பையன் இரண்டாம்தாரமாக கட்டிக்கிட்டு அவளையும் வச்சு குடித்தனம் பண்ணணும்னு விவாதிச்சார்... ஊர் மக்கள் என் கணவர் கட்சி. வேறு வழியில்லாம தலைவர் அந்தப் பையனுக்கு அப்படி தீர்ப்பு வழங்க நேர்ந்துட்டது. அவனும் செல்வியைக் கட்டிட்டு இரண்டு பெண்டாட்டிக்காரனா திண்டாடிக்கிட்டிருக்கான். பெரிய தனக்காரருக்கு தன் தீர்ப்புக்கு எதிரா உங்க பெரியப்பா வாதாடினது பிடிக்கலை. அன்னியிலிருந்து அவருக்கு என் கணவர் மீது கொஞ்சம் காரம். அவர் மனைவி மரகதம்மாளுக்கு என்னைக் கண்டாலே ஆகாது போயிடுச்சு...!''

'அட கடவுளே! இந்த இரு குடும்பங்களுக்கிடையே இப்படி ஒரு பகை வேறு இருக்கிறதா?' தனக்குள் கவலைப்பட்டாள் சாம்பவி.

''பிறகு என்ன ஆச்சு...?'' ஆவலுடன் வினவினாள்.

''உங்கப்பா பங்குக்காக என் கணவர் குடும்பத்து நிலத்தை விற்க வேண்டி வந்தது. அதைத் தான் வாங்கிக்கணும்னு பெரிய தனக்காரருக்கு ஆத்திரம்.

''ஒரு பிச்சைக்காரனுக்கு வித்தாலும் விக்கிறது —சட்டநாதனுக்கு நிலத்தை விக்கக்கூடாதுன்னு உன் பெரியப்பாவுக்கு வீம்பு!''

''கடைசியிலே என்னதான் ஆச்சு பெரியம்மா...?''

''பணம் பாதாளம் வரை பாயுமில்லையா? நம்ம நிலத்தை வேறு ஒருவனுக்குத்தான் உங்க பெரியப்பா கொஞ்சம் குறைஞ்ச விலைக்கு வித்தார். ஆனா கொஞ்ச காலத்துக்குள்ளே அந்த மனிதன் பெரிய தனக்காரர் பேச்சுக்கு மயங்கி கொஞ்சம் கூட பணத்தை வாங்கிட்டு நிலத்தை அவருக்கு வித்துட்டான். நம்ப குடும்ப சொத்தையும் வாங்கித் தானே கட்டிக் கொண்டு விட்டானேன்னு உன் பெரியப்பாவுக்கு ரொம்ப கோபம் —அதிலிருந்து அவர்கிட்டே முகம் கொடுத்து பேசறதில்லே.

பெரியப்பா சாவுக்கு பெரிய தனக்காரர் வந்திருந்தார். அந்த மகராசி மரகதமும் ஒப்புக்கு தலையைக் காட்டிவிட்டுப் போனா... அதுக்குப் பின்னால் அவங்க குடும்பத்துக்கும், நமக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. இப்படி வியாதியாய் கிடக்கிறேனே — மரகதம் வேலைக்காரியை அனுப்பியாவது என்னைப் பார்த்து வரச்சொல்லலை... நானும் பெரிய தனக்காரர் சாவுக்குப் போய்விட்டு வந்தவ அவங்க வீட்டு வாசலை மிதிச்சதில்லை...!''

''இப்படி உங்களுக்குள் ஒரு விரோதமா? ஒரு சிறு கிராமத்தில்கூட மனிதர்களிடையே இப்படி ஒரு பிளவா... வம்பு வழக்குகளா...?''

''கிராமத்தைவிட பட்டணமே மேலானதுன்னு நான் சொல்வேன். பட்டணத்தில் அண்டை அசலார் நமக்கென்னன்னுட்டு அசட்டையா ஒதுங்கிப் போயிடுவாங்க... ஆனா இங்கே... நம்ம வீட்டு சங்கதி அடுத்த நிமிசமே... கடைத்தெரு குப்புசாமி வரை பரவிடும். இந்த ஊர் மக்களுக்கு... ஊறுக்காய்த் தொட்டு சாப்பிடுகிறது போல வம்பு பேசுகிறது ஒரு சுவையான சங்கதி...!''

சாம்பவியின் மனதில் திடீரென்று ஒரு அச்சம் ஏற்பட்டது. பார்த்தீபனை அவள் சந்தித்துப் பேசியதை யாராவது பார்த்துவிட்டு... அதற்குள் ஏதாவது கதை கட்டி விட்டிருந்தால்? பயத்துடன் எழுந்து உட்கார்ந்தாள்.

அவள் எதிர்பார்த்த அந்தக் கேள்வியை பெரியம்மா கேட்ட போது அவள் மிகவும் மிரண்டு போனாள்.

''வந்த அன்னிக்கே உன்னை சிவன் கோவிலில் பெரிய தனக்காரர் மனைவி மரகதம்மாள் பார்த்தாங்களாமே?'' அலமேலுவின் குரலில் ஆதங்கம் தொனித்தது.

''நான் ஊருக்குப் புதுசு; அவங்களை எதேச்சையாப் பார்த்தேன். பட்டணத்தில் எத்தனையோ பணக்காரப் பெண்களை தெருவிலும் — கோவிலிலும் — சினிமாக் கொட்டகையிலும் — கடைத் தெருவிலும் பார்த்திருக்கிறேன். எனக்கு இது ஒரு அதிசயமான சங்கதியா தோணலை

—அதனாலே அதைப்பத்தி நான் ஒரு பெரிய காரியமா நினைக்கலை பெரியம்மா...!'' குற்ற உணர்வினை அடக்கிக் கொண்டு பதிலளித்தாள்.

'அவள் மகன் பார்த்தீபனை வாய்க்கால் கரையில் சந்தித்துப் பேசியிருக்கிறேன் — அவனை நான் விரும்புகிறேன்!' என்று, அவள் எப்படி பெரியம்மாவிடம் சொல்ல முடியும்?

தன்னைச் சுற்றிலும் ஒரு பெரும் வலை விரிக்கப்பட்டு அதற்குள் தான் சிக்கிவிட்டது போன்ற உணர்வில் அவள் ஒரு கணம் தவித்துப் போனாள்.

''பணக்காரி மட்டுமல்ல மரகதம்; ரொம்ப கர்வம் பிடிச்சவ. ஒருத்தரை அவளுக்கு பிடிக்காதுன்னா, கொன்னு குழியை வெட்டி புதைச்சிட்டு மறுகாரியம் பார்க்கிற பொல்லாத ராட்சசி'' அலமேலுவின் குரல் வெறுப்பில் உடைந்தது.

கிழக்குத் தெரு அலமேலு வீட்டைச் சேர்ந்தவள் என்பதைத் தெரிந்து கொள்ளும் முன்பே மரகதம்மாள் அவளைத் துச்சமாகக் குறிப்பிட்டவள், தன் மகன் பார்த்தீபனை அவள் விரும்புகிறாள் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டால்... ஐயோ என்ன நடக்கும்?

பார்த்தீபனை அவள் விரும்புவது பெரியம்மாவுக்கு தெரிந்தால் கட்டாயம் மறுப்பு சொல்வாங்க. ''என்னை கவனிக்க உன்னைப் பட்டணத்திலிருந்து வரவழைத்தேனா —கண்டவனை காதலிக்கவா?'' சினந்து கொண்டு மறு ரயிலில் ஊருக்கு அனுப்பி வைத்து விடுவார்களே?

மரகதம்மாளுக்கு சங்கதி தெரிஞ்சு விட்டால்... வில் வண்டியில் நேரே புறப்பட்டு வந்து... மேலே கற்பனையில் கூட அந்த நிகழ்ச்சியை சிந்திக்க பயந்து கொண்டு... தூக்கம் வந்த பாவனையில் போர்வையைத் தலைவரை வழியவிட்டுக் கொண்டாள்.

''வந்தநாள் கோயிலில் ஒரு வெள்ளைப் பட்டுச்சேலைக்கார அம்மாளைப் பார்த்தேன். பெரிய தனக்காரர் மனைவி இவங்கதான் என்று முத்துநாகம் கிசுகிசுத்தாள். எனக்கு

அது ஒரு பெரிய சங்கதியா தோணலை. இப்ப நீங்க சொல்றதைக் கேட்டா... அவங்க ரொம்ப கோபக்காரின்னு தெரிகிறது!'' என்று மெல்லிய குரலில் முனகிவிட்டு அடங்கிப் போனாள். மேலே இந்தப் பேச்சைத் தொடர வைக்க அவளுக்கு அச்சமாக இருந்தது...

சிறிது பொழுதில் மெல்லப் போர்வையை நீக்கி... பெரியம்மாளைத் திரும்பிப் பார்த்தாள்... மருந்தின் வேகத்தில் அலமேலு ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்... ஆனால் அதற்குப் பின்னர் சாம்பவிக்கு சட்டென்று உறக்கம் வரவேயில்லை.

மறுநாள் காலை பத்து மணியானதும் அவளால் பரபரப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலவில்லை.

குடத்தைத் தூக்கிக் கொண்டு பின்பக்கத்துக் கதவைத் திறந்து கொண்டு ஒரே எட்டில் தோட்டத்தைக் கடந்து வாய்க்கால் கரையோரம் வந்து சுற்றிலும் பார்த்தாள்.

வழக்கம் போல மனித ஆரவாரமில்லாது... வாய்க்கால் கரையோரம் வெறுமையாகத் தெரிந்தது. இறங்கு துறையில் ஒரு காக்காயைக் கூடக் காணவில்லை... அப்படிப்பட்டதொரு தனிமையைத்தான் அவள் எதிர்பார்த்துக் கொண்டு விரைவாக நடந்தாள்.

குடத்தில் நீரை முகர்ந்து கொண்டு கோயில்படி மீது இறக்கி வைத்தாள். கம்பிக் கதவிடுக்கு வழியே காட்சி தந்த விநாயகரை வணங்கிவிட்டு... காலடி ஓசை கேட்கக் காதைத் தீட்டிக் கொண்டு நின்றாள்.

பயம் கலந்ததொரு உற்சாகம் அவள் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. அதன் பயனாக உடல் லேசாக ஆடியது... யாரோ தலைப்பின்னலைப் பிடித்து இழுத்து ஓங்கி உச்சந்தலையில் வலி எடுக்குமளவு குட்டிவிடப் போவது போன்றதொரு பயம் மனதை உலுக்கியது. அவர்கள் குடியிருந்த பட்டணத்து வீட்டில் அந்திப் பொழுதில் அம்மா சிலசமயம் அவளுக்கு ஒரு கட்டளை இடுவது உண்டு.

வத்தல் வடகம் முதலியவற்றை அடிக்கடி தயாரிக்கும்

பழக்கம் அம்மாவுக்கு உண்டு. அதைப் பக்கத்து வீட்டு மாடியில் காயப்போட்டு வைத்து விடுவாள். மாலை வேளையில் அவைகளை பாத்திரங்களில் வாரி எடுத்து வரவேண்டிய பிலையை மூத்த மகளுக்குத் தந்து விடுவாள் அம்மா. பக்கத்து வீட்டு மாடிப்படி வாயில் வராந்தாவை ஒட்டியிருந்தது. நாலே தாவலில் ஏறி எடுத்து வருவது சிரமமல்ல. ஆனால் வராந்தாவில் பிரம்பு நாற்காலியில் பூதம் போன்ற உடலை இறுக்கிக் கொண்டு பாக்க விழிக்க உட்கார்ந்திருக்கும் அடுத்த வீட்டுக்காரியின் புத்தி மட்டமான மகனைப் பார்த்தால்தான் அவளுக்கு மிக்க பயம்... 'பிராங்கின் ஸ்டன்' எனும் பேயைச் சந்தித்துவிட்ட கதாநாயகியைப் போல... அவனது புன்னகையைக் கண்டு அரண்டு போய் விடுவாள்.

பின்னாலே படியேறி வந்து தன் கழுத்தை அவன் இறுக்கி விடுவானோ என்று கற்பனை மிக்கதொரு பயம் அவளுக்கிருந்தது. நாலே எட்டில் மாடியை அடைந்து வத்தல் வடகங்களை வாரி பாத்திரங்களில் சேமித்துக் கொண்டு துணிவைத் திரட்டிக் கொள்ள அவள் தானே மெல்லப் பாடுவது வழக்கம். பாடிக் கொண்டே படியிறங்கி மூச்சிறைக்க வீட்டுக்கு ஓடி வருவதும் உண்டு...

அலமேலு அம்மாள் சொன்னதையெல்லாம் கேட்ட பின் அவள் மனதில் ஏற்பட்ட குற்ற உணர்வில் ஒருவித அச்சமும் கலந்து கொண்டிருந்தது.

யாராவது பார்த்துவிடப் போகிறார்களோ என்ற பயம் அது...

எங்கேயோ ஒரு குயில் இனிமையாகக் கூவுவதைக் கேட்டதும்... துணிவைத் தன்னுள் திரட்டிக் கொள்ள அவள் சட்டென்று மெல்லிய குரலில் பாடினாள்.

''குயிலே! உனக்கனந்த கோடி நமஸ்காரம் — குமரன் வரக் கூவுவாய்!''

முதல் அடியை முடிக்குமுன், ''குமரன் நான் வந்துட்டேன்... வீணாக இனிக் குயிலுக்கு வணக்கம் செலுத்த தேவையில்லையே...!''

பரிகாசமாகப் பேசியபடி ஷேவிங்லோஷன் மணம் குப்பென்று காற்றில் மிதந்து முகத்தில் மோத... அருகில் வந்து நின்றான் பார்த்தீபன்.

''நேற்று கண்களில் தெரிந்த கனலைப் பார்த்து நான் பயந்துட்டேன்... இன்னிக்கு ஒரு சமயம் தண்ணி எடுக்க வராமல் போய் விட்டால் என்ன செய்கிறது — மறுபடி எப்படி சந்திக்கிறது... பேசறது என்கிற கவலையில் எனக்கு உறக்கமேயில்லை!'' — மெல்லச் சிரித்தான்.

'நெருப்போடு விளையாடுகிறாய் சாம்பவி! பத்திரம், கையைச் சுட்டுக்காதே...!' உள் மனம் எச்சரிப்பதை அவள் உணர்ந்து தவித்தாள். பேச ஆசை உந்தியது... எச்சரிப்பு வாயைப் பூட்டியது. மவுனமாக விழித்தாள்.

''சாம்பவி! அப்படி நான் உரிமையோட கூப்பிட விரும்பறேன். தடையில்லையே... அதிகநேரம் நின்று பேசுவது ஆபத்து. இந்த ஊர் மனிதர்கள் வானொலியை விட வேகமாக செய்திகளைப் பரப்பிவிடும் வழக்கமுடையவர்கள்...!''

''கிராமத்து மக்கள் பொல்லாதவங்கன்னா சொல்றீங்க...'' துணிவுடன்... தன் பெயரைச் சொல்லி அவன் உரிமையுடன் அழைத்த மகிழ்ச்சியில் அவள் கேட்டு விட்டாள்!

''பட்டணத்திலே நடக்கும் பல அதிசயங்கள் — கொள்ளை — கொலை இவைகள் இங்கே அதிகம் நடப்பதில்லை... ஆனால் ஒரு சிறு சங்கதிகூட மக்களுக்கு வியப்பூட்டும் பெரிய செய்தியாகி விடுகிறது. பத்திரிகையில் வரும்போது ஊர் விவகாரங்களை... நாம் செய்திகள் என்ற தலைப்பில் படித்துத் தெரிந்து கொள்கிறோம்... கிராமத்து மக்கள் தாங்கள் கண்ணால் கண்டதைக் கொஞ்சம் கற்பனையோடு மத்தவங்களுக்குச் சொல்வதை ஊர் வம்பு என்று வேறு பெயர் கொடுக்கிறோம்... பத்திரிகையில் வரும் செய்திகளும் பாமர மக்கள் பேசும்... பொழுது போக்குப் பேச்சும் உண்மையில் ஒரே விதமான ஊர்வம்பு... பெயரில்தான் வித்தியாசம்!''

''பரவாயில்லையே விளக்கம்!'' மென்மையாக முகம் சிவக்க அவனைப் பார்த்து முறுவலித்தாள். பார்த்துக் கொண்டே

இருக்க மாட்டோமா... பொழுது அப்படியே நகராது அயர்ந்து அவளுக்காக நிற்காதா என்று அடிமனதிலே ஒரு ஏக்கம்... மெல்லிய பெருமூச்சாக வெளிவந்தது.

''சாம்பவி...!'' அவனது குரலில் தொனித்த குழைவு அவளது மேனியைச் சிலிர்க்கச் செய்தது...!

''நீ என்று ஒருமையில் அழைக்க ஆசைப்படுகிறேன் —தடை சொல்ல மாட்டேங்கிற துணிவில் பேசறேன். ரொம்ப நேரம் பேச ஆசை. ஆனால் அதன் பயனாக உனக்கு எந்தவித துன்பமும் நேரக்கூடாது என்பது என் நோக்கம்... இனிமேல் இங்கே நான் வந்தால் உன்னைப் பாராது போல சட்டென்று கடவுளை வணங்கிவிட்டுப் போய் விடுவேன்!''

திகைப்புடன் சாம்பவி அவனைப் பார்த்தாள்.

'வாங்கின விலைக்கு வித்துட்டீங்களே ஐயா... இவ்வளவுதானா உங்க துணிவெல்லாம்...! பண மூட்டைக்குப் பின்னாலே போய் ஒளிஞ்சுக் கொள்ளும் கோழையான உங்களுக்கு... நீ என்று என்னைக் கூப்பிட யார் அதிகாரம் தந்தது?' படபடவென்று பேச வேண்டும் போன்ற ஆத்திரத்தில் அவனை நிமிர்ந்து உற்றுப் பார்த்தாள்.

''நான் பேச முடியாததை எல்லாம் கடிதத்திலே எழுதிக் கொண்டு வந்திருக்கேன். இந்த உண்டிப் பெட்டி அருகே தெரிகிற கல் இடுக்கிலே கடிதத்தைப் போட்டால்... அது படி ஓரம் தெரிகிற ஒரு பிறையில் வந்துவிழும்... இன்னிக்கு நான் என் மனதில் தோன்றின எண்ணங்களை இக்கடிதத்தில் தெரிவித்திருக்கிறேன். இதை இந்த இடுக்கில் மெல்ல போட்டுவிட்டுப் போய் விடுகிறேன். நீ... படியருகே பக்கவாட்டில் தெரியும் பிறையில் இந்த கடிதத்தை மெல்ல எடுத்துக் கொண்டு உன் பதிலை நாளைக்கு ஒரு கடிதம் மூலம்... தெரிவித்து இந்தக் கல்லிடுக்கில் போட்டு விட்டுப்போ... இது நம் இருவருக்கு மட்டுமே தெரிந்த தபால் நிலையம்!'' மோகனமாக சிரித்தபடி... தன் சட்டைப் பையிலிருந்த கடிதம் ஒன்றை எடுத்து உண்டிப் பெட்டியருகே தெரிந்த கல் இடுக்கில் போட்டான். சர் என்று வேகத்துடன் அது சரிந்து...

பக்வாட்டிலிருந்த பிறைக்குள் விழுந்ததைக் கண்டு அதிசயத்துடன் அவள் பார்த்தாள்... அதை எடுக்கக் குனிந்து நிமிரும் முன் பார்த்தீபன் மாயமாகினான்.

சுற்றுமுற்றும் பார்த்தாள் — ஆள் அரவமே இல்லாது எங்கும் வெறுமையாக இருந்தது. பரபரப்புடன் அந்தக் கடிதத்தை மேலும் சிறிதாக மடித்து... ஜாக்கெட்டின் கழுத்துப் பகுதியில் மார்புக்குள் மறைத்துக் கொண்டு புடவையைச் சரிசெய்து விட்டுக் கொண்டு குடத்தைத் தூக்கிக் கொண்டு பரவசத்துடன் நடந்தாள்.

இடுப்பில் குடம் லேசாகக் கனத்தது. அந்தக் கடிதத்தின் இன்பச் சுமையின் கனத்தை மார்பு தாங்க முடியாது போல தாக்க, அவள் அந்த இன்ப உணர்வின்... வேதனையை தாள முடியாது தள்ளாடியபடி... வீட்டை நோக்கி வந்தாள்.

6

கடிதத்தை அப்படி சுலபமாகப் படிக்க முடிந்ததா?

சமையலறையை ஒட்டியிருந்த உக்கிராண அறையில் அரிசி டப்பாவிற்குள் அதைப் போட்டு மூடிவிட்டு அவள் பகல் பொழுது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அலமேலு அம்மாளுக்கு இப்போது தெம்பு வெகுவாகவே கூடி விட்டிருந்தது. அதனால் வீடு முழுவதும் மெல்ல உலாவத் தொடங்கி விட்டிருந்தாள். உக்கிராண அறைக்குள் வந்த சாம்பவி அதை எப்படி சுத்தமாக வைத்திருக்கிறாள் என்று மேற்பார்வை செய்தபடி அரிசி டப்பாவைத் திறந்து விட்டால்...? பக்பக் என்ற திகில் உணர்வில் நெஞ்சு அடித்துக் கொள்ள, அவள் வளைய வந்து கொண்டிருந்தாள்.

காலை - மாலை இரு வேளைகளிலும் சாம்பவி குளிக்கும் பழக்கம் உடையவள். அன்று மாலை அந்த சாக்கில்... கடிதத்தை எடுத்து இடையில் செருகிக் கொண்டு பின் கட்டின் கதவைத்

தாளிட்டுக் கொண்டாள். அலமேலு அம்மாளுக்கு சந்தேகம் வராதிருக்க... அண்டாவிலிருந்து தண்ணீரை செம்பால் முகர்ந்து... குளிக்கும் சிறு முற்றத்திலே ஊற்றி ஏக சத்தத்தை எழுப்பிவிட்டு, நிம்மதியும், மகிழ்ச்சியுமாகக் கடிதத்தைப் பிரித்தாள்.

உயர்ந்த ரகக் காகிதத்தின் முகப்பில் அவன் பெயரும் பக்கத்து டவுனில் அவன் மேற்பார்வையிலிருந்த சொந்த மருந்துக் கடையின் முகவரியும் ஆங்கிலத்தில் அச்சிடப் பட்டிருந்தன. தமிழில்தான் அவன் கடிதத்தை எழுதியிருந்தான். கையெழுத்துக் கூட மணிகளைக் கோர்த்தது போல மிகவும் அழகாக இருப்பதைக் கண்டு வியந்து போனாள். கையும், காலும் பதற பொங்கிப் பூரித்த இன்பத்திலே நெஞ்சு தினற அவள் கடிதத்தைப் படித்தாள்.

''என் அன்பைக் கவர்ந்து கொண்டுவிட்ட சாம்பவி!

உரிமையுடன் உன்னை இப்படி அழைக்கும் துணிவை நீயே தந்துவிட்டிருக்கிறாய். முதல் நாள் அந்த மாட்டு வண்டியிலிருந்தபடி என்னை நீ திரும்பிப் பார்த்த ஒரே பார்வையில் நீ ஊருக்குள் புகுமுன் என் உள்ளத்திற்குள் புகுந்து விட்டாய். நீயும் என்னை விரும்புகிறாய் என்பதை... என்னைக் கண்டு லேசாக சிவந்து போகும் உன் முகமும்... பேசத் துடிக்கும் உன் அதரங்களும்... பேசாமலே பேசிச் சிரிக்கும் உன் கண்களும் கதை சொல்வதால் துணிவுடன் எழுதுகிறேன்.

உன்னை நான் என் உயிருக்கும் மேலாக நேசிக்கிறேன் சாம்பவி! ஆமாம்! என்னைப் பற்றி எதுவுமே தெரிந்து கொள்ளாது எப்படி இந்தத் திடீர் காதல் ஏற்பட்டது...? என்று நீ கேட்பாய். திடீரென்று ஒருவர் மேல் நமக்கு ஏற்படும் இந்த அதிசயமான - தவிர்க்க முடியாத - புயலாகப் புகுந்து நெஞ்சை ஆக்கிரமித்துக் கொண்டு ஆட்டிப் படைக்கும் உணர்வுக்குத்தான் காதல் என்று பெயர். நான் உன்னைக் காதலிக்கிறேன். உன்னை என் மனைவியாக ஏற்று இந்த காதலைக் கடைசிவரை உணர்ந்து அனுபவிக்க ஆசைப்படுகிறேன். அதற்கு உனது ஒப்புதலை வேண்டிதான் இந்த கடிதத்தை எழுதுகிறேன். சம்மதம் என்ற பதிலை உன்னிடமிருந்து ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

அமராவதி அம்பிகாபதி, ரோமியோ ஜூலியட், லைலா மஜ்னு போன்ற அமர காதலர்களுக்கு ஏற்பட்ட சிக்கல்கள் முட்டுக் கட்டைகள்... நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களுக்கும் ஏற்படும் என்பதை நீ மறக்கக் கூடாது.... நமது காதலுக்கும் திருமணத்திற்கும் இடையே முதல் பெரும் முட்டுக்கட்டையாக என் தாயார் ஒருவரே இருப்பார்கள். என் தாயார் மிகவும் புத்திசாலி - யாரும் கண்டு சொல்லாமலேயே தானே கணிப்பு செய்து சங்கதிகளை தெரிந்து கொள்வதில் ஒரு துப்பறியும் மேதைகூட அவர்களிடம் தோற்றுப் போவார் என்பது நிச்சயம். சொன்னால் உனக்கு வியப்பாக இருக்கும்.

முந்தாநாள் அம்மா என்னிடம் திடீரென்று ஒரு கேள்வி கேட்டார்கள். ''கிழக்குத் தெரு கந்தசாமிக்குப் பட்டணத்திலே ஒரு தம்பி இருக்கார் இல்லையா? அவர் மகள் நம்ப ஊருக்கு வந்திருக்கிறாளே! அவளை நீ எங்கேயாவது பார்த்தியோ?''

''ஏம்மா? ஊரில் உள்ள பெண்களையெல்லாம் முறைச்சுப் பார்த்துட்டு அலையற வேலையா நான் செய்து கிட்டிருக்கேன்!'' பளிச்சென்று ஒரு பொய்யைச் சொல்லி சமாளித்தேன்.

ஆனால் என் அம்மா... லேசுப்பட்டவர்கள் இல்லை. நேற்று மறுபடி பேச்சைத் துவக்கினார்கள். ''ராத்திரி தூங்காம... படுக்கையிலே புரண்டுகிட்டு கிடந்தியே... உடம்புக்கு என்ன? இல்லே மனசிலே ஏதாச்சும்...?'' என்று... கிண்டினார்கள்.

''அம்மா! பணம் நிறைய இருக்கிறவங்களுக்குக் கவலையும், சங்கடங்களும் கூடவே நிறைய இருக்கும்னு பெரியவங்க சொல்றது உண்மைதான். வருமான வரி இலாகாவுக்கு மூணு நாளா கணக்குப் புத்தகங்களோட அலைஞ்சுகிட்டிருக்கேன்... தலை சுத்தது...'' என்று மறுபடியும் சமாளித்தேன்.... அம்மாவின் கண்களில்... நம்பிக்கை தெரியவில்லை.

''காலா காலத்தில் ஒருத்தி இங்கே வந்துட்டா... என் கவலை பாதி குறையும்!'' என்று ஒரு பெருமூச்சு விட்டார்கள்.

'காலா காலத்திலே ஒருத்தியைக் கொண்டு வந்து விடத் தீர்மானிச்சுட்டேன் அம்மா... அவளது ஒப்புதல் கிடைச்சதும்

உங்களுக்குச் சொல்கிறேன்' என்று என் மனதில் எண்ணியபடி வீட்டின் முன்பகுதியில் உள்ள என் அலுவலக அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு இந்தக் கடிதத்தை எழுத ஆரம்பித்தேன்.

உன் சம்மதத்தை நாளைக்கு நான் எதிர்பார்க்கலாமா? இன்னொரு சங்கதியையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நீ வாய்க்காலுக்கு வந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு திரும்பி நடக்க ஆரம்பித்த பின்னர்தான் நான் கோவில் பக்கம் வருவேன். இருவரையும் ஒரே நேரத்தில் கோவில் அருகே யாராவது காணநேர்ந்தால் அம்மா காதில் அது விரைவில் எட்டிவிடும். என் தாயாருக்கு நான் மிகவும் பயப்படுகிறேன் என்று எண்ணி கவலைப்படாதே. ஆரம்பத்திலேயே ஆர்பாட்டங்கள் தேவையில்லை.

என்னைப் பற்றி நீ முழுவதும் தெரிந்து கொள்ள வேண்டும். எனது விருப்பு வெறுப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்வது நல்லதில்லையா? உன்னைப் பற்றியும் நானும் தெரிந்து கொள்ள ஆசைப்பட மாட்டேனா? பிறகு என் தாய் தலையிடட்டும். நான் அதைக் கவனித்துக் கொள்கிறேன். என்னைப் பற்றி சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன்.

என் பெற்றோருக்கு நான் ஒரே மகன். ஊரார் சொல்வது போல ஒரு காலத்தில் பார்க்குமிடமெல்லாம் பரவிக் கிடந்த நிலம் எங்களுக்குச் சொந்தமாக இருந்தது. உச்சவரம்பு திட்டம் செயல்படுமுன் என் தந்தை காலத்திலேயே அனுமதிக்கப்பட்ட அளவு நிலத்தை எங்களுக்கு வைத்துக் கொண்டு - மீதமானதை விற்று கட்டிடங்களில் முடக்கி விட்டார் என் தந்தை. எனக்குப் படிப்புக் கொடுத்து பெரிய மருந்துக் கடை ஒன்றை வைத்துக் கொடுத்து உதவியுள்ளார். இப்போதுள்ள நஞ்சை, புஞ்சை நிலங்களில் வரும் பொருள்கள் வீட்டின் தேவையை மீறி அதிகமாகவே உள்ளன. காய்கறித் தோட்டத்தில் விளைச்சல் அதிகமாக உள்ளதால் வெளியூருக்கு லாரிகளில் ஏற்றி விற்பனை செய்கிறேன். இதைத் தவிர... எங்களுக்குப் பக்கத்து டவுனில் சில கட்டடங்கள் சொந்தமாக உள்ளன. வசதியாக வாழ வீடு உள்ளது. நான் அனுபவிக்கின்ற அத்தனை வசதிகளையும்

-நிறைவான வாழ்க்கையையும் உன்னோடு பகிர்ந்து கொள்ளத் துடிக்கிறேன். உன் சம்மதம்?...

இங்ஙனம்
அன்பன் பார்த்தீபன்.''

கடிதத்தை மடித்து ஆட்டுக்கல்லின் இடுக்கில் செருகி விட்டு... நிதானமாகக் குளித்தாள்.

வேறு உடுத்திக் கொண்டு கூந்தலை சீவி முடித்துப் பொட்டிட்டுக் கொண்டு கடிதத்தை எடுத்து இடுப்பிலே செருகிக் கொண்டு - மகிழ்ச்சியுடன் அவள் வெளியே வந்தாள்.

அலமேலு அவளை வியப்புடன் பார்த்தாள். ''ரொம்ப நேரமா இந்தப் பெண் வெளியே வரலையே? முத்துநாகம் நல்லா தேய்ச்சு கழுவாததினால் அந்த முற்றத்திலே லேசாப் பாசிபிடிச்சிருக்கே. எங்கேயாவது சாம்பவி அதில் வழுக்கி விழுந்து எழுந்திருக்க முடியாமத் தவிக்கிறாளோ... கதவை வேறே தாள்போட்டு கிட்டாளேன்னு நான் பயந்துட்டேன்.''

''பெரியம்மா... பட்டணத்திலே இப்படி உட்கார்ந்து நிதானமாகக் குளிக்கப் பொழுது ஏது? இந்த வெய்யிலுக்கு சில்லுனு தண்ணி உடம்புக்கு இதமா இருந்தது. மெல்ல மெல்லக் குளிச்சேன்.''

''பச்சைத் தண்ணியை ரொம்ப நேரம் ஊத்திகிட்டா... சளிப் பிடிச்சுக்குமே...'' மெல்லிய குரலில் கடிந்து கொண்டாள்.

அங்கே பார்த்தீபனுக்கு காவல் அவன் தாய்...

இங்கே... அவளுக்குக் காவல் அலமேலு அம்மாள்.

இவர்கள் இருவரும் மோதும் கட்டம் வரும்போது என்ன நடக்கும்? அன்று இரவு தான் பெற்றோர்களுக்குக் கடிதம் எழுதுவதாகச் சொல்லிவிட்டு நடையருகேயிருந்த விளக்கடியில் இன்லெண்ட் கடிதத்துடன் அவள் உட்கார்ந்தாள்.

அலமேலு மருந்து தந்த மயக்கத்திலே சீக்கிரம் உறங்கிப் போனாள். அந்தத் துணிவில் அவசரமாகத் தன் பெற்றோர்களுக்கு கடிதத்தை எழுதி முடித்துவிட்டு - நோட்டுப் புத்தகத்திலிருந்து ஒரு ஏட்டைக் கிழித்து வேகமாக எழுதினாள்.

பெண்கள் எப்பொழுதும் காதல் என்கிற சங்கதியில் மிகவும் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும். ஆண்களிடம் அனாவசியமாக ஏமாந்து விடக்கூடாது என்று அவளது தாய் புத்தி சொல்லியிருக்கிறாள். அந்த நினைவு நெஞ்சை உறுத்தவே... கடிதம் யார் கையிலாவது அகப்பட்டு ஆபத்துகளை விளைவிக்கக் கூடாது என்று மிகவும் ஜாக்கிரதையாகப் பொதுவாக - வேறு யாருக்கும் புரியாத வகையில் எழுதினாள்.

''அன்பரே! சம்மதம் - சம்மதம் - சம்மதம் போதுமா? என்னைப் பற்றி பிரமாதமாகச் சொல்லிக் கொள்ள ஏதும் இல்லை. சொத்து - அந்தஸ்து ஏதுமில்லாத பற்றாக்குறைக் குடும்பத்திலிருந்து வருகிறவள். பட்டதாரி - ஆனால் வேலை கிடைக்காது திண்டாடிக் கொண்டிருக்கிறவள். ஏதோ சுமாராகப் பாடுவேன். முறைப்படி பயின்ற சங்கீதமல்ல...: கேள்வி ஞானம். வீட்டு வேலைகளைக் கண்டு அஞ்சுவதில்லை... சமைக்கத் தெரியும். கொஞ்சம் சகிப்புத் தன்மையும் உண்டு... இவ்வளவுதான் என்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ள இயலும். தங்கள் அன்புள்ளவள்''

பெயரைக்கூட எழுதாது அதை மடித்துப் பத்திரமாக புத்தக அலமாரிக்குள் மறைத்து வைத்துவிட்டுத் தூங்கப் போனாள்.

உறக்கம் சுலபத்தில் வந்து விடவில்லை. பார்த்தீபனுக்கு மனைவியாகப் போகும் பாக்கியத்தை எண்ணி பெண் பேசுமுன் ஏற்படப்போகும் ஆர்ப்பாட்டங்களை நினைத்து... மகிழ்ச்சியும் கவலையுமான உணர்வில் மாறிமாறிப் புரண்டு கொண்டிருந்தாள்.

அடுத்த நாள் அவள் தந்த பதிலை — பார்த்தீபன் சொல்லியிருந்தபடி தண்ணீர் குடத்துடன் அவள் வீடு திரும்ப ஆரம்பித்த பின்னரே வந்து எடுத்துச் சென்றான்...

அதற்குப்பின் இருவரின் கடிதங்களும் பதிலும் தொடர்ந்தன.

ஒரு நாள் அவள் பின்கட்டில் குளிக்கப் புகுந்தபோது —கத்தையாக அவன் எழுதியிருந்த கடிதத்தை ரசித்துப் படித்து

மகிழ்ந்தாள்.

மேலும் சில சங்கதிகளைப் பற்றி உனக்குச் சொல்ல விரும்புகிறேன். விடியற்காலையே நான் எழுந்துவிடுவது வழக்கம்...

''ஐயாவுக்கு மட்டும்தானா இந்தப் பழக்கம்... இந்த அம்மாளுக்கும் அந்த பழக்கம்தான்...'' — முகத்தை ஆட்டி அவன் எதிரில் இருப்பதுபோலத் தனக்குள் பேசிவிட்டு —மேலே கடிதத்தைப் படித்தாள்.

''சமீபத்தில் என் வருங்காலத்தை உத்தேசித்து மாடிப் பகுதியை அம்மா விரிவுபடுத்தி இருக்கிறார்கள் —உள்ளடங்கிய குளியலறை வசதியுடைய படுக்கையறையில்தான் நான் இப்பொழுதெல்லாம் உறங்குகிறேன். அம்மா கீழே உள்ள தமது அறையில்தான் படுப்பது வழக்கம். கீழே உள்ள பூஜை அறையில் உள்ள கடவுளர் படங்களை வணங்கிவிட்டு — என் தந்தையார் படத்திற்கு மலர் தூவி விட்டுத்தான் நான் காப்பி, பலகாரம் சாப்பிடுவது வழக்கம். எத்தனை ஆட்கள் இருந்த போதிலும் என் தாயார் தமது கையாலே எனக்கு எடுத்துப் பரிமாறுவார்கள்.

இன்னொருத்தி வந்து அந்தக் கடமையைப் பறித்துக் கொள்வது அவர்களுக்குப் கொஞ்சம் மனத்தாங்கலாகத் தானிருக்கப் போகிறது... அம்மாவுக்கு முன் கோபம் அதிகம் —அது ஊர் அறிந்த சங்கதி... காரணம் அவர்களுக்கு ரத்த அழுத்தம் அதிகமாகிவிட்டிருக்கிறது என்பது எங்கள் குடும்ப வைத்தியரின் அபிப்ராயம்.

எனக்கு இடியாப்பம் என்பது மிகவும் பிடித்த பலகாரம். அதை நீ மிகவும் நன்றாகவே தயாரிப்பாயாமே? எப்படி உங்களுக்குத் தெரியும் என்று கேட்காதே. உங்கள் வீட்டு வேலைக்காரியும் — எங்கள் வீட்டு வேலைக்காரியும் எஜமானர்களை அனுசரித்துப் பேசிக் கொள்வதில்லை. ஆனால் அவர்களுக்கிடையே ஒரு தோழி இருக்கிறாள் — அவள் மூலம் இரண்டு வீட்டு செய்திகளும் இங்குமங்கும் பரவி விடுகிறது. அவ்வளவுதான்.

எங்கள் வீட்டு வேலைக்காரி... உன் சமையல் நிறமைகளைப் பற்றி... லேசாகப் சொல்லப்போக... நேற்று உடனேயே என் தாயார் எனக்கு இடியாப்பம் செய்து போட்டார்கள்.

''எப்படி இருக்கு? இந்தப் பலகாரத்தை என்னைவிட சீரா தயாரிக்கிறவ — இனிபொறக்கனும்'' என்று கோபத்தில் சீறினார்கள். 'ஏற்கனவே பிறந்து எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாளே...?! என்று சொல்ல நாக்குத் துடித்தது. நல்ல நேரம் வரட்டும் என்று அம்மாவிடம் நம்மைப்பற்றிச் சொல்லக் காத்திருக்கிறேன்...''

இன்னொரு நாள் இன்னொரு கடிதத்தை அவள் படிக்கும்போது அப்படியே வெட்கத்துடன்... உட்கார்ந்து விட்டாள்.

''ஆரஞ்சு வண்ணச் சேலையில் நீ எத்தனை அழகாக இருந்தாய் தெரியுமா? வெகு தூரத்திலேயே நின்று உன்னைப் பார்த்துச் சொக்கி, சிலையாகிவிட்டேன். சிறிது நேரம் எங்கள் வீட்டுக்கு நீ மருமகளாக வலது காலை எடுத்து வைத்து வரும் நன்னாளில் நமது முதல் சந்திப்புக்கு ஆரஞ்சு வண்ணப் பட்டுச் சேலையொன்றைப் பாங்காக எடுத்து உனக்குப் பரிசாக வழங்கத் திட்டமிட்டிருக்கிறேன்... எனது பாட்டியாரின் செவப்புக்கல் அட்டிகையை உன் சங்குக்கழுத்தில் பூட்டி அழகு பார்க்க என் கண்கள் தவிக்கின்றன.

''இன்னும் சில தினங்களில் என் தாயை... தகுந்த ஏற்பாடுகளுடன் பெண் கேட்க உங்கள் வீட்டிற்கு அனுப்பப் போகிறேன். எங்களது தூரத்து உறவுப் பெண் மஞ்சளும் குங்குமமுமாக வாழ்கிறவள்... வெற்றிலை பாக்கு பழத்துடன் முறையாக வருவார்கள்... உன் பெரியம்மா அதிர்ந்து போய்விடுவாங்க... என்பது உண்மை. ஒரு சமயம் மறுப்பு தெரிவிக்கலாம். ஆனால் நீ என்னை மறுத்து ஒதுக்கக் கூடாது... உலகத்தில் உள்ள எந்த சக்தியும் நம்மைப் பிரிக்கக் கூடாது. நான் உறுதியாக இருக்கிறேன். நீயும் நம்பிக்கை தளராது துணிவுடன் இருக்க வேண்டும்...''

'இன்னும் சில தினங்களிலா?' மகிழ்ச்சியும்... திகிலும்... உள்ளத்தைக் குலுக்க அவள் விரைவில் குளித்துவிட்டு மாற்று உடை அணிந்து கொண்டு வெளியே வந்தாள்.

''என்னம்மா? எப்படியோ இருக்கே?... நானும் பார்த்துகிட்டே இருக்கேன். நீ வந்த இந்த இரண்டுமாத காலத்தில் ரொம்பவே மாறிப்போயிருக்கியே?'' அலமேலு ஆவலுடன் கேட்டாள்.

''கிராமத்தின் வாழ்க்கையின் பாதிப்பு — பெரியம்மா நேத்துத்தான் வந்தாப்பல இருக்கு. அதுக்குள்ளே இரண்டு மாசம் ஓடிப் போயிடுச்சே...''

''இன்னும் இரண்டு மாசமாவது இங்கு விட்டு வைக்கணும்னு உன் அப்பாவுக்கு நானே கைப்பட கடிதம் போடப் போறேன். ஒப்புக்குவார்னு நினைக்கிறேன்...'' என்றாள் அலமேலு.

இரண்டு மாசமா...? இங்கேயே நிரந்தரமாகத் தங்கும் பெரிய திட்டம் உருவாகிக் கொண்டிருக்கு பெரியம்மா...! நீங்க திடுக்கிடப் போறீங்க... அவளது உள்ளம் உற்சாகத்திலே பொங்கிப் பூரித்துப் போனது.

சில தினங்களுக்குப் பின்னர்... ஒரு நாள் காலை... காப்பி பலகாரத்திற்குப் பின் அலமேலு வழக்கமாக உட்காரும் முற்றத்துக் குறட்டு ஓரத்திலே காலை நீட்டிக் கொண்டு அமர்ந்தபடி... நாளேட்டைப் புரட்டிக் கொண்டிருந்தபோது வாயில் கதவு பலமாக இடிபடும் ஓசை கேட்டது.

''முத்துநாகம் கூடப் போயிட்டாளே, சாம்பவி, அது யாருன்னு பாரம்மா!'' அலமேலு உத்திரவிட்டபடி பத்திரிகையில் ஆழ்ந்து விட்டிருந்தாள்.

சமையலை அப்படியே விட்டுவிட்டு... ஓடிவந்து வாயிற் கதவைத் திறந்தாள் அவள்.

''அம்மா வந்திருக்காங்க...!'' என்று பராக்கு கொடுத்தான் வண்டி ஓட்டி.

வாசலில் நின்ற அந்த அலங்காரமான வில் வண்டியில்

இருந்து தனது வாட்டசாட்டமான உடலை வெளிப்படுத்திக் கொண்டு இறங்கிய மரகதம்மாவைக் கண்டு சாம்பவி மிரண்டு போனாள்...

முகத்திலே கோபம் கூத்தாட — கண்களில் சிவப்பேறி... மூச்சிறைக்க... படியேறி வந்தவளைப் பார்த்தாள்... அவள் பெண் கேட்க வுரவில்லை... பெருத்த சண்டை பிடிக்க வந்திருக்கிறாள் என்று நன்றாகவே புரிந்து விட்டது.

''பெரியம்மா... அவங்க அவங்க...!'' பேச முடியாது —தடுமாறிவிட்டு வாயிற் கதவை அகலத் திறந்து வைத்து விட்டு... பின்கட்டுப் பக்கம் ஓடி மறைந்து கொண்டாள் சாம்பவி...

7

நிமிர்ந்து பார்த்த அலமேலு வியப்பும் அதிர்ச்சியுமாக எழுந்து நின்றாள். பெரிய தனக்காரர் மனைவி மரகதம் அம்மாள் அவளைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறாள் என்றால், ஏதோ முக்கியமான காரியமாகத்தான் இருக்கும். வேதபுரிநாதர் கோயிலைக் கொஞ்சம் பழுது பார்த்துக் குடமுழுக்கு விழா செய்யப் போவதாகக் கேள்விப்பட்டாளே அதற்கு நிதி வசூலிக்க வந்திருக்கிறாள் போலிருக்கிறது...

ஆதரவுக்குத் தூணைப் பிடித்துக் கொண்டு நின்ற அலமேலு புன்முறுவலுடன்... ''வாங்கோ, அத்தி பூத்தாப்போல வந்திருக்கிறீங்க... உட்காருங்க...! சாம்பவி! அந்த நாற்காலியை எடுத்து தாழ்வாரத்திலே போடு, அம்மா காப்பி சாப்பிட மாட்டாங்க... அதனால மோர் எடுத்துட்டு வா...!'' உத்தரவிட்டாள்.

''இங்கே நான் மோர் சாப்பிட்டு உறவு கொண்டாட வரலை. உன்கிட்டே சொல்லி இந்தப் பட்டணத்துப் பெண்ணின் கொட்டத்தை அடக்கத்தான் வந்தேன்!'' சீறிக்

கொண்டு சாம்பவி கொண்டு வந்து போட்ட பிரம்பு நாற்காலியில் தொப் என்று உட்கார்ந்தாள் மரகதம்.

அலமேலுவுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. ஆனாலும் நிதானத்தை இழக்க மனமின்றி பொறுமையோடு... அருகில் கிடந்த முக்காலி மீது உட்கார்ந்தாள்.

''பட்டணத்திலிருந்து என் ஓரகத்தி மகளை என்னை கவனித்துக் கொள்ளத் தருவித்திருக்கேன் — அந்தப் பெண் உங்களுக்கு என்ன இடைஞ்சல் செய்தாள்?'' காரமாகக் கேட்டாள்.

''சாம்பவி! வாசற்கதவை சாத்தி தாளிட்டு வா... நம்ப வீட்டில் நடக்கும் சங்கதி சந்தி சிரிக்க வேண்டாம்...!'' என்றாள்.

நாற்காலியைப் போட்டுவிட்டு மறுபடியும் சமையலறையில் போய் ஒண்டிக் கொண்டு விட்ட சாம்பவி... நடுங்கியபடி மரகதம்மாள் முகத்தைப் பாராது தாழ்வாரத்தைத் தாண்டி வாயிற்கதவை சாத்தித் தாளிட்டுவிட்டு உள்ளே வந்தாள். அவள் உடல் முழுவதும் கிலியில் வியர்த்துக் கொட்டியது. பார்த்தீபன் தன் தாயுடன் பேசி விட்டாரா? அதன் விளைவுதானா இது? நெஞ்சு பக்பக்கென்று அடித்துக் கொள்ள அவள் சமையலறை வாயிற்படியருகே ஒதுக்கமாக நின்றுகொண்டு... காதைத் தீட்டிக் கொண்டாள்.

''உன் ஓரகத்தி மகளைக் கோயிலில் பார்த்த அன்னிக்கே என் மனசில் ஒரு கலவரம் ஏற்பட்டு விட்டதுன்னு சொன்னால் நீ நம்புவாயா? அந்தக் கண்களும் மூக்கும் — வாயும் நம்மையே மயக்குதே — ஆண் பிள்ளைகளை ஒரே சுருட்டில் தன் வலையில் போட்டுக்குவாளே இவள்னுட்டு அப்பவே நான் நினைச்சேன்!''

அலமேலுவின் கோபம் உச்ச நிலையை அடைந்தது.

''சாம்பவி இயற்கையாகவே அழகான பெண். அது ஒரு தப்பா. அவ உங்களை என்ன செய்தா? சிவனேன்னு வீட்டோட கிடக்கிற பெண்ணை ஏன் நிந்திக்கிறீங்க?''

''வீட்டோடவா கிடக்கிறா?... வாய்க்காலுக்கு தண்ணீர்

எடுக்க வர்ர சாக்கிலே என் மகன் மேலே நல்லாவே வலை வீசியிருக்கா...!''

''நீங்க விவரமா சொல்லுங்கோ...!'' ஆச்சரியத்துடன் கேட்டாள் அலமேலு.

''விவரமா சொல்லத்தானே நானே நேரில் வந்திருக்கேன்!'' படபடத்தாள் மரகதம்.

''ஒரு சில நிமிடங்கள்தானே அவள் வாய்க்கால் பக்கம் வந்து தண்ணி எடுக்கிறா... நீங்க சொல்றதை நம்ப முடியலையே...!''

நான் சொல்றேன். நீ நம்பித்தான் ஆகவேண்டும். இந்தப் பெண் என்ன மந்திர மாயம் செய்தாளோ?... என் மகன் பார்த்தீபன் இவளைத்தான் கட்டிப்பேன்னு என்கிட்டே நிட்டவட்டமா நேத்துராத்திரி சொல்லிட்டான். இதனால எனக்கும் அவனுக்கும் வீட்டிலே பெருத்த சண்டை...!

''நான் அவனுக்கு எத்தனை பெரிய இடத்திலேயெல்லாம் பார்த்துக்கிட்டிருக்கேன். எங்க வீட்டு வேலைக்காரியா வரக்கூட அந்தஸ்து இல்லாத இவளை என் மகன் கட்டிக்கிறதா?... ஒரு போதும் நான் இதுக்கு சம்மதிக்க மாட்டேன்!''

அலமேலு அம்மா கோபத்தில் கொதித்துப் போனாள். ''வயசிலே நீங்க பெரியவங்கனு மரியாதையா பேசறேன் —உங்ககிட்டே கொஞ்சம் கூடுதலா பணம் இருக்கு... அதைத் தவிர நாங்க உங்களுக்கு எந்த வகையிலும் குறைஞ்சவங்க இல்லே. உங்ககிட்டே அன்றாடம் பிச்சை கேட்டுகிட்டா வாழறேன்... என் கணவர் பேரைக் கேட்டாலே இந்த ஊர் ஜனங்கள் இன்னும் பெருமையாகத்தான் பேசுவாங்க... என் ஓரகத்தி மகள் அப்படி ஒண்ணும் நடுத்தெருவில் நிக்கிறவ இல்லே. அவளும் பி.ஏ. படிச்சிருக்காள். பார்க்க ஒண்ணும் சொள்ளை இல்லே. விளக்கி வச்ச குத்துவிளக்காட்டமா அழகாகத்தான் இருக்கா. என் பிள்ளை அடங்காப்பிடாரி — உன் பெண்ணை அடக்கி வைச்சுக்கோன்னு ஒரு பழமொழி சொல்லுவாங்க. அதைப்போல உங்க பையன் இவளைக் கட்டிக்க ஆசைப்பட்டா அதுக்கு நீங்க இங்கே வந்து கத்தினா

என்ன அர்த்தம்?''

''இவ ஒப்புதல் கொடுத்ததினால் தானே அவன் துணிச்சலா ஒரே பிடிவாதமா பேசறான். தண்ணி எடுக்கிற சாக்கிலே பிள்ளையார் கோவில்கிட்டே வந்து என் மகனை சந்தித்து மயக்கி இருக்காள் இந்த சிறுக்கி...''

''சும்மா கூச்சல் போடாதீங்க. உங்க பிள்ளைக்கு அந்த சமயம் வாய்க்காலில் என்ன வேலை? அதைக் கேட்டிங்களா?...''

''எதேச்சையா பார்த்தானாம், பிடிச்சுப் போச்சாம். என்னைக் கட்டிக்கிறியான்னு கேட்டானாம். இவ சரின்னு ஒப்புக் கொண்டாளாம்!''

''அவன் கேட்கத் தொட்டுதானே சாம்பவி சரின்னு சொல்லியிருக்கா. என்னைக் கட்டிக்கோ அய்யான்னு உங்க மகன் பாதங்களில் இவ வலிய போய் விழலையே...!''

''அதுவும் செஞ்சிருப்பா இந்தக் கள்ளி! யார் கண்டா? அங்கே நடந்ததை நானா பார்த்தேன். ஊரிலே கொழுத்த பணக்காரன் இவன் — காரும் — பெரிய வீடுமா வசதியாக வாழறான்... இவனைப் பிடிச்சுக்கணும்னு திட்டம் போட்டிருப்பா!''

''பணம் என்னம்மா பணம்? அதிர்ஷ்டமிருந்தால் லாட்டரி சீட்டு வாங்கிக்கூட கோடி ரூபாய் சம்பாதிச்சுடலாம். இந்தக் காலத்தில் — குணம் என்னன்னு பார்க்கணும் இல்லையா? உங்க பையன் இவளைக் கட்டிக்க ஆசைப்பட்டான். ஒப்புதல் கேட்டான். உங்கிட்டே வந்து சொன்னதும் நீங்க என்ன செய்திருக்கணும்?''

''என்ன செய்வேன்னு எதிர்பார்க்கிறே?''

''ஜாதியிலே — மத்தபடி — படிப்பிலே எதிலும் உங்களுக்கு ஈடான பெண்தான்னு புரிஞ்சு கொண்டு முறையா வந்து பெண் கேட்டிருக்கணும். பிறகு நான் அவ அப்பாவுக்கு எழுதி... அவரை வரவழைத்து ஒப்புதல் வாங்கி எல்லாம் நல்லபடியாக நடக்க நான் வழி செய்திருப்பேன்...''

''அடி சக்கைன்னானாம்... உங்க வீட்டிலே நான் சம்பந்தம் பண்ணுவேன்னு நினைச்சியா?''

''நாங்க எந்த விதத்திலே குறைஞ்சுட்டோம் சொல்லுங்கோ!''

''உன் கணவர் எப்போதும் என் கணவருக்கு எதிராக பஞ்சாயத்திலே ஊர் ஜனங்களை குத்தி கௌப்பிவிட்டு நெறிஞ்சி முள்ளா இருந்தவராச்சே!''

''அது போன கதை. இப்போ இருக்கறவங்க நாமரெண்டு பேர். உங்க வாழ்க்கையில் நான் எப்போதாவது குறுக்கிட்டு இடைஞ்சல் பண்ணியிருக்கேனா?''

''சாமர்த்தியமா பேசறே? உன் ஜம்பம் என்கிட்டே பலிக்காது. இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதம் தர மாட்டேன். இந்தப் பொண்ணை உடனடியாக பட்டணத்துக்கு அனுப்பிவை — இல்லாட்டா பேர் கெட்டு ஊர் நாறிப் போயிடும்.''

''மரகதம்மா! இவளை அனுப்பி வைக்கச் சொல்லி உத்திரவு போட உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தாங்க? நான் பனங்காட்டு நரி — இந்த சலசலப்புக்கெல்லாம் அஞ்சறவ இல்லே. இந்த பொண்ணு இங்கேதான் இருக்கப் போறா! உங்களால் ஆனதைப் பார்த்துக்கோங்க!''

''நான் சொல்றதை சொல்லிட்டேன். இவ என் மகனைக் கட்டிக்க ஆசைப்படறது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படறதைப் போல முடியப் போகுது. வரேன்...'' என்று ஆவேசமாக எழுந்த மரகதம் கதவைத் தானே திறந்து கொண்டு வெளியேறினாள்.

சில நிமிடங்கள் அங்கே பயங்கரமான மவுனம் நிலவி நின்றது.

''சாம்பவி! வாசல் கதவை சாத்தித் தாளிட்டு விட்டு வா. நல்லவேளை முத்துநாகம் இங்கே இருக்கவில்லை...'' என்று அலமேலு கூப்பிட்டபோது... சாம்பவி பதறிப் போனாள்.

கதவைத் தாளிட்டுவிட்டு தாழ்வாரத் தூண் ஒன்றைப்

பிடித்துக் கொண்டு நின்றாள். நெஞ்சு கலவரத்தில் தீவிரமாகத் துடித்தது... கையும் காலும் பதறியது... பேச முடியாதது போல வாய் வறண்டு போனது. இப்போது பெரியம்மா அவளுக்கு என்னவிதமான தண்டனை வழங்கப் போகிறாங்க?

''ஏம்மா, சாம்பவி! இத்தனை சங்கதி நடந்திருக்கு, என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லலையே! இது சரியா?'' கனிவான குரலில் அலமேலு கேட்டாள்.

ஓங்கி சாட்டையால் படீரென்று முதுகில் அடித்து விட்டதைவிட வேதனையில் அவள் துடித்துப் போனாள். தன்னை அன்புடன் நடத்திய அலமேலு அம்மாவுக்கு பெருத்த துரோகம் செய்து விட்டது போன்ற குற்ற உணர்வில் அவள் கூனிக் குறுகிப் போனாள். அதற்கு மேல் தாங்க முடியாது —சடாரென்று கீழே உட்கார்ந்த சாம்பவி பெரியம்மாவின் கால்களைப் பற்றிக் கொண்டாள்.

''மன்னிச்சுக்கோங்க பெரியம்மா — உணர்ச்சி வசத்தில் உங்களுக்கும் தெரியாம நான் அவரை சந்தித்துப் பேசி —கடிதங்கள் எழுதி... திருமணத்திற்கு ஒப்புதல் தந்துட்டேன். பெரிய தவறுதான். உங்களிடம் சொல்ல எனக்குப் பயமா இருந்தது... அதனால்தான்...!'' பேச முடியாது விக்கி அழத் தொடங்கினாள்.

எழுந்து வந்து அலமேலு அவளைத் தன் மார்புடன் இழுத்து அணைத்துக் கொண்டு அவளது கண்ணீரைத் தன் புடவைத் தலைப்பால் துடைத்து விட்டாள்.

''இது ஒரு மகிழ்ச்சிகரமான சங்கதியாச்சே, ஏன் அழுகிறே! காதல் என்பது ஒரு தெய்வீக உணர்வு. அதை நான் ஒரு பொழுதும் மட்டமாகவோ துச்சமாகவோ நினைக்க மாட்டேன்.''

''என்னை மன்னிச்சுட்டீங்களா பெரியம்மா...'' விம்மலுக்கிடையே சாம்பவி அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

''பைத்தியம்! இதில் மன்னிக்கும்படி நீ என்ன தவறு செய்துட்டே? என்கிட்டே சொல்லியிருந்தால் மரகதம்மா நம் வீட்டிற்குள் வந்து கத்தினதைத் தவிர்த்திருப்பேன். போகட்டும்!

பயந்து போய் சொல்லாதிருந்து விட்டாய். உனக்கு நான் இப்போ ஒரு சங்கதி சொல்லப் போறேன் — ரொம்ப வியந்து போயிடுவே...!''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சாம்பவி ஆவலுடன் பெரியம்மா முகத்தைப் பார்த்தாள்.

''உன் பெரியப்பாவும் நானும் காதலித்துத்தான் கல்யாணம் செய்து கெண்டோம். ஒரு கல்யாண வீட்டில் எங்கள் சந்திப்பு நிகழ்ந்தது. உடனடியாக உன் பெரியப்பா தமது மனதில் தோன்றிய எண்ணங்களை ஒரு கடிதமாக எழுதி எங்கள் வீட்டு வண்டிக்காரனிடம் கொடுத்து என்னிடம் சேர்க்கச் சொல்லி அவனுக்கு ஏதோ பணம் கொடுத்து வசியப்படுத்தி விட்டார். நானும் பதில் எழுதி அவனிடம் தந்தேன். அந்த வண்டியோட்டி எங்களுக்காகத் தூது நடந்தான்...!''

அழுவதை நிறுத்திவிட்டு சாம்பவி... பெரியம்மாவைப் பார்த்து முறுவலித்தாள்.

''காதல் என்பது உனக்கு மட்டுமே சொந்தம்னு நினைக்காதே. காலந்தொட்டு அது பலரைத் தன் பிடியில் இழுத்துக் கொண்டு ஆட்டிப் படைத்திருக்கிறது. தலை நரைத்து முதுமையில் தள்ளாடும் இந்தப் பெரியம்மாவுக்கு கூட காதலா... என்றுதானே அதிசயப்படறே? அப்போ நானும் உன்னைப்போல இளமையில் துடியாகத் துடித்த ஒரு லட்சணமான பெண் — உன் பெரியப்பாவும் இந்தப் பார்த்தீபனைப் போல் ஒரு இளவயதுக்காரர்தான்...!''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் சாம்பவி. ''உங்கள் காதலில் எந்தவிதமான தடையும் இருக்கலையே பெரியம்மா...?'' துணிவுடன் கேட்டு விட்டாள்.

''இரண்டு உள்ளங்கள் காதல் உணர்வில் கட்டுண்டு போகும்போது... அதற்கு எதிராகப் போராட்டங்களும் துவங்கிவிடும். எங்கப்பா கொஞ்சம் பணக்காரர். உன் பெரியப்பா ஏதோ வீடு — வாசல் என்று இருந்தவர்... என் தந்தை ஆரம்பத்தில் இடக்கு செய்தார். ஆனால் நான் பிடிவாதமாக இருந்தேன். உன் பெரியப்பாவும் உறுதியாக

இருந்தார். முடிவில் எங்கள் திருமணம் இனிதே நடந்தேறியது. இதை எதற்குச் சொல்கிறேன் என்றால்...'' சாம்பவியின் முகவாயை நிமிர்த்தி அவளது கலங்கி விட்டிருந்த கண்களை ஊன்றிப் பார்த்தாள் அலமேலு.

''உனக்கு உண்மையில் அவன் மேல் விருப்பமா?... ஒளிவு, மறைவு இன்றி என்னிடம் சொல்லிவிடு... அவன் அந்தஸ்த்தைப் பார்த்து ஏற்பட்ட மயக்கமானால் ஆரம்பத்திலேயே அதை உதறிவிடலாம்!''

''பெரியம்மா...! உண்மையில் நான் அவரை ரொம்ப விரும்பறேன். அவர் யார்னு தெரியறதுக்கு முந்தியே — முதல் பார்வையிலேயே என் மனதை அவருக்குப்பறி கொடுத்துட்டேன்...!''

''உன்னைப்போல அவனும் உன்னை விரும்புகிறான் என்பதற்கு என்ன ஆதாரம்?''

''அம்மாவிடம் சொல்லி உத்தரவு வாங்குமளவு அவர் துணிச்சலாக செயல்பட்டிருப்பதுதான் ஆதாரம்...!''

''எதுக்கும் நான் கேட்டுத் தெரிஞ்சுக்கிறேன். உன்னை அவன் உண்மையாக விரும்பினால்... எனக்கு எந்தவிதமான மறுப்பும் கிடையாது. உன் பெரியப்பா நிலங்களை இந்த வழியில் நம் குடும்பம் மறுபடியும் அனுபவிக்கிறதேன்னு ரொம்ப மகிழ்ச்சியடைவேன்...!'' என்றாள்.

''பெரியம்மா, உங்களுக்கு நன்றி எப்படித் தெரிவிப்பதுன்னு...?'' என்று முடிக்காது தழதழத்தாள் சாம்பவி.

''அவசரப்படாதே. காரியம் கைகூடின பிறகு எனக்கு நன்றி தெரிவிக்கலாம்!'' என்று கூறிவிட்டு அலமேலு அம்மாள் மேஜை இழுப்பறையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்தாள். பேனாவையும் எடுத்துக் கொண்டாள்.

''தம்பி பார்த்தீபனுக்கு, அநேக ஆசிகள். இந்தக் கடிதம் கண்டதும் நீ சிரமத்தைப் பாராது உடனடியாக எங்கள் வீட்டிற்கு வரவேண்டும். உன்னிடம் நான் பேச வேண்டிய முக்கிய சங்கதி

ஒன்று இருக்கிறது. மறுக்க மாட்டாய் என்று நினைக்கிறேன்'' திருத்தமாக ஒரு கடிதத்தை எழுதி ஒரு உறையில் போட்டு ஒட்டி உறைமீது அவனுடைய மருந்துக்கடை முகவரியை எழுதினாள்.

''நாளை பொழுது சிங்காரம் என்னைப் பார்க்க வருவான். அவனிடம் இதைக் கொடுத்து பஸ் செலவுக்குப் பணமும் தந்து நேரடியாக பார்த்தீபனிடம் கடிதத்தை சேர்ப்பிக்க செய்கிறேன். கட்டாயம் பார்த்தீபன் நம்மைப் பார்க்க வருவான்!'' அலமேலு உறுதியாகச் சொன்னபோது... சாம்பவி சற்று முன் ஏற்பட்ட பயத்தையும் துயரத்தையும் மறந்து இனிமையான பல கற்பனைகளில் மிதக்கத் தொடங்கினாள்.

8

மாலைப் பொழுது மங்கி விளக்கு வைத்ததும் சிறிது நேரம் வாயிற் கதவைத் திறந்து வைத்திருப்பது அந்த கிராமத்தில் இன்னமும் அனுசரிக்கப்பட்டதொரு பழக்கமாக இருந்தது. வராந்தாவிலே ஒளிவிட்ட மின் விளக்கைப் பொருத்திவிட்டு அலமேலு அம்மாளின் விருப்பப்படி மண் அகலில் எண்ணெயிட்டு திரி வைத்து அதையும் பொருத்தி வாயிற் படியைத் தாண்டியதும் திண்ணைக்கு மேலிருந்த பெரிய மாடத்தில் வைத்துவிட்டு வரவேண்டுமென்பது அவள் வந்த நாளிலிருந்து அலமேலு போட்ட உத்தரவு.

''பட்டணத்தில்தான் பொழுது முழுவதும் வாயிற் கதவை அடைத்துக்கொண்டிருக்க வேண்டும். இன்னும் அப்படிப்பட்ட திருட்டு பயம் கிராமங்களில் பரவவில்லை.

''மாலை வேளையில் மங்கலமாக விளக்கை ஏற்றி வைத்து கதவை திறந்துவைப்போம். புழக்கடை கதவை அடைத்து விடுவோம்.''

''காரணம்... தெரிஞ்சுக்கலாமா பெரியம்மா?'' சாம்பவி

வேதிக்கையாகக் கேட்டாள்.

''மகாலக்ஷ்மி வாயில் வழியாக வீட்டுக்குள் வந்து தங்கி விடுவாள் — அதனால் மாலை வேளையில் வருகிற மகாலக்ஷ்மியை வரவேற்க வேண்டுமென்பது பெரியோர்களின் நம்பிக்கை.''

''நம்ப ஒருத்தர் வீட்டுக்கு மட்டும் வருவாளா?...'' சிரித்தாள் சாம்பவி...

''நம் வீட்டுக்கு வந்து அருள்பாலித்து விட்டு அவள் அடுத்தவர் வீட்டுக்குப் போவாள் என்பதால் எல்லோருமே வாயிற் கதவை இருட்டு மட்டும் திறந்து வைத்திருப்பார்கள். நீ பொல்லாத பெண்ணாக இருக்கியே... கேள்வி மேல் கேள்வி போட்டு என்னையே திணறச் செய்துடறே...'' சிரித்தாள் அலமேலு...

அகல் விளக்கைக் கொண்டு பிறையில் வைத்துவிட்டுத் திரும்பியவள் அவனது காரைத் தெருவில் பார்த்து விட்டாள்.

மகாலக்ஷ்மிக்காகத் திறந்து வைக்கப்பட்ட வாயிற் கதவைத் தட்டாமலேயே பார்த்தீபன் காரிலிருந்து உள்ளே வரப்போகிறான் என்ற நினைப்பில் மெய் சிலிர்த்து, பதைத்துப்போய் அவள் வேகமாக உள்ளே சென்றாள்.

''பெரியம்மா... அவர்... அவர் வருகிறார்...!'' எச்சரித்து விட்டு சமையலறைக்குள் ஒதுங்கிக் கொண்டாள். மூச்சு நின்றுவிடும் போல நெஞ்சு அடித்துக் கொண்டது. நெற்றிமீது பூத்த வியர்வையைப் புடவைத் தலைப்பால் ஒத்திக் கொண்டு உற்றுக் கேட்டாள். நடையில் அவனது காலடி சத்தம் துல்லியமாகக் கேட்டது.

''வா தம்பி! உட்கார்...'' தணிந்த குரலில் கூடத்தில் கிடந்த நாற்காலியைக் காட்டி அலமேலு உபசரித்தாள்.

காலையில் வில்வண்டியில் மரகதம்மாள் வந்து போனாள். இப்போது காரில் மகன் வந்திருக்கிறான். அந்த வீட்டில் அப்படி என்ன சங்கதி நடக்கிறது? ஆவலை அடக்கமாட்டாது தெரு மனிதர்கள் தத்தம் வீட்டு வாசலில் நின்றபடி நோட்டம்

விட்டனர். அது தவிர்க்க முடியாத சங்கதி என்பதை அலமேலு தன்னு அறிவாள்.

''நீங்களும் அப்படி உட்காருங்க... பெரியவங்க. நீங்க திக்கிறபோது...!'' என்று மரியாதையுடன் அவள் கட்டிலின் விளிம்பில் உட்காரும்வரை தாமதித்துப் பின்னர் நாற்காலியில் அமர்ந்தான். அவனது கண்கள் ஆவலுடன் சாம்பவியைத் தேடின.

''எங்க வீட்டுக்கு நீ வந்து ரொம்ப காலமாச்சு இல்லையா? வுனிலிருந்து வண்டியை ஓட்டிக் கொண்டு வந்திருக்கே தாகமாக இருக்கும். என்ன சாப்பிடறே?... காப்பியா... பால்... பாலா?...'' அலமேலு அன்புடன் விசாரித்தாள்.

பார்த்தீபனது முகத்தில் லேசாக வெப்பம் பரவிக் காதுகள் ஆகிப் போயின.

''நம் இரண்டு குடும்பத்தின் இடையே இருந்த மனத்தாங்கல் காரணமாக நான் அடிக்கடி இங்கே வந்து போவதை அம்மாவுக்காகத் தவிர்த்தேன். மன்னிக்கணும்'' மெல்லிய குரலில் தடுமாறினான்.

'இப்போது அந்த அம்மாவின் மனத்தாங்கல் அதிகமாகிவிடும் அளவு நிலைமை மாறிவிட்டிருக்கே... அதுக்கு உன் பதில்?'' கேட்ட அலமேலு லேசாகச் சிரித்தாள்.

வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது போல நெஞ்சை மெல்லக் குத்திய அந்த வார்த்தைகளைக் கேட்டு ஒரு கணம் அவன் உடல் குன்றி மவுனமாகத் தரையைப் பார்த்தான்.

ஆண்பிள்ளை — அவன் துணிச்சலை இழக்கலாமா... என்ற உள்ளுணர்வின் உந்தலில் தொண்டையைச் செருமிக் கொண்டு அவளை நிமிர்ந்து நன்றாகப் பார்த்தான்.

''ஏதோ முக்கிய விஷயம் பேசணும்னு அவசரமாகக் கடிதம் தொடுத்தனுப்பியிருந்தீங்க... அதனால் உடனடியாக வந்தேன்'' என்றான்.

''கல்யாணம் என்பது மிகவும் முக்கியமான சங்கதிதானே காலையில் உன் அம்மா இங்கே வந்துட்டுப் போனாங்க...

அதனால் உன்னைக் கண்டிப்பாகப் பார்க்க விரும்பினேன்!''

திடுக்கிட்டுப் போனான் பார்த்தீபன். அவனது தாயார் புறப்பட்டு அங்கே நேரிடையாகவே வந்திருக்கிறார்கள் என்றால் பெருத்த குழப்பத்தையும் சண்டையையும் உண்டாக்கிவிட்டிருப்பார்கள். ஊர்கூடிப் பேசிச் சிரிக்குமளவு விஷயம் எக்கச்சக்கமாகியிருக்குமே... அம்மாவுக்கு கோபம் வந்தால் மடை திறந்த வெள்ளம் போலக் கட்டுக் கொள்ளாது போய் விடுமே... இதென்ன வெட்கக்கேடு.

''அவங்க ஏதாவது தவறாகப் பேசியிருந்தா எனக்காக நீங்கள் மன்னிக்கணும்.''

''அவங்களுக்கு சரியான பதில் கொடுத்துதான் அனுப்பியிருக்கேன். எங்களுக்குள் நடந்த பேச்சு வார்த்தைகளைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். எனக்குத் தெரிய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று. சாம்பவிக்கு நீ கொடுத்த வாக்கை நிறைவேற்றுவியா? உன் தாயார் எதிர்ப்பு தெரிவித்தாலும் எங்க வீட்டுப் பெண்ணைக் கட்டிக்க உனக்குத் துணிவிருக்கா...?'' வெட்டொன்று துண்டு ரெண்டு என்ற கண்டிப்பான தோரணையில் கேட்டு விட்டாள்.

பார்த்தீபன் முகம் மேலும் சூடாகியது. அவன் சாம்பவியை விரும்புவது இப்போது இரண்டு வீட்டவர்களுக்கும் தெரிந்து விட்டது. இன்னும் சில நாளில் ஊரே தெரிந்த சங்கதியாகிவிடும். காதல் என்பது இரண்டு உள்ளங்கள் பகிர்ந்து கொள்ளும் ஒரு தெய்வீக உணர்வு — அதை அம்மா இப்படித் தம்பட்டம் கொட்டியிருக்க வேண்டாம். முறைப்படி காரியங்களைச் செய்து மரியாதையை வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கலாம்...

''என்ன, மவுனமாக இருக்கியே?'' அலமேலு அதட்டியதும் விழித்துக் கொண்டான்...

''சாம்பவியைத் தவிர வேறுயாரையும் நான் கல்யாணம் செய்துக்கிறதா உத்தேசமில்லை... என் முடிவை யாரும் மாற்ற முடியாது...!''

''இப்படிச் சொன்னால் போதாது — உன் அம்மாவுடன் நீ

உன் உறவினர் சிலருடன் வந்து முறைப்படி பெண் கேட்க வேண்டும். இந்த விவகாரத்தை நாள்பட இழுத்துக் கொண்டு போகாது திருமணத்தை சீக்கிரமே நடத்தி முடிக்க வேண்டும். அதற்கு ஒப்புக் கொள்கிறாயா..?''

''சாம்பவியை மனைவியாக அடைய நான் எந்த விதமான நிபந்தனைகளுக்கும் ஒப்புக் கொள்கிறேன்!''

''உன்னை நான் பூரணமாக நம்பலாமா...?''

''என் தந்தைமேல் ஆணை — என்னை நம்பலாம். ஏன், வருகிற வெள்ளிக்கிழமையன்று என் தாய் மற்ற உறவினர்களுடன் முறைப்படி பெண் கேட்க வருகிறேன் என்றால் என்னை நீங்கள் நம்ப வேண்டும்!''

''உன் தாயை எதிர்க்குமளவுக்கு உனக்கு சாம்பவிமேல் விருப்பம் உள்ளதா?''

''உலகத்தையே எதிர்க்குமளவு துணிவும் சாம்பவிமேல் அளவில்லா அன்பும் உள்ளது என்று நான் உறுதியாகச் சொல்கிறேன், போதுமா...?''

உணர்ச்சிவசத்தில் அவன் குரல் ஓங்கி ஒலித்ததைக் கேட்டு அலமேலு தனக்குள் லேசாக முறுவலித்துக் கொண்டாள்.

காதலிப்பவர்களுக்கு பயமும் — வெட்கமும் இல்லை என்ற பழமொழி முற்றிலும் உண்மை.

பார்த்தீபன் பெரியவர்களைக் கண்டால் மரியாதையாக ஒதுங்கிப் போகும் சுபாவமுடையவன். துணிச்சலுடன் வெட்கத்தைவிட்டு மனம் திறந்து அவளுடன் உட்கார்ந்து பேசுகிறானே...?

''தாகத்துக்கு என்ன சாப்பிடறே? முதல் முதலா உபகாரியத்தைப் பேச வந்திருக்கே — காப்பி கொண்டு வரச் சொல்லவா?'' அலமேலு வற்புறுத்தலாகக் கேட்டாள்.

சமையலறையிலிருந்தபடி எல்லாவற்றையும் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த சாம்பவி மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிவிட்டிருந்தாள்.

'பெரியம்மா, அவர் காப்பி அதிகம் சாப்பிடமாட்டார்.

பால்தான் சாப்பிடுவார். எனக்கு அவரது பழக்கவழக்கங்கள் சில தெரியும்?' என்று குரல் கொடுக்க வேண்டும் போன்ற ஆவலில் துடித்தாள்.

''பால் இருந்தால் சாப்பிடறேன். எனக்கு மறுப்பு இல்லை!'' மகிழ்ச்சியுடன் சிரித்தான் அவன்.

''உங்கள் வீட்டில் இருப்பதுபோல பசுமாடுகள் இல்லை என்றாலும் நல்ல பால் எங்களுக்கு ஒரு பால்காரரிடம் இருந்து கிடைக்கிறது. இங்கே சாம்பவி வந்திருப்பதால் கொஞ்சம் அதிகமாகவே தினசரி வாங்கிக் கொள்கிறேன்!'' என்று கூறிவிட்டு, ''சாம்பவி... ஒரு டம்பளரில் சூடா பால் எடுத்துக் கொண்டு வா — சர்க்கரை போட்டு கலக்கிக் கொண்டு வா சீக்கிரம்...!'' என்றாள்.

அவன் வரக்கூடும் என்று எதிர்பார்த்து சாம்பவி மாலையிலேயே முகத்தைக் கழுவி முடியைச் சீவிப் பின்னல் இட்டுக் கொண்டு தோட்டத்து மல்லிகை மொக்குகள் அனைத்தையும் பறித்துத் தொடுத்துத் தலையில் சூட்டிக் கொண்டிருந்தாள். மிதமான ஒப்பனையில் — அவனுக்குப் பிடித்த ஆரஞ்சு வண்ண மல்மல் சேலையில்... அழகாக அவனுக்காகக் காத்திருந்தாள்.

காய்ச்சிய பாலை செம்பிலிருந்து டம்பளரில் விடும் போதே அவள் கரங்கள் உணர்ச்சி வசத்தில் நடுங்கின. கட்டுக்கொள்ளாத இன்பத்தில் நெஞ்சு துடிக்க — சர்க்கரை போட்டு மெல்லக் கலக்கி அதை எடுத்துக் கொண்டு கூடத்திற்கு வந்தவள்... அவனைப் பார்க்கத் துணிவின்றி... எதிரே தெரிந்ததொரு முக்காலி மீது வைக்கக் குனிந்தாள்.

''அது என்ன சத்தம்'' என்று கேட்டுக் கொண்டே அலமேலு வேண்டுமென்றே எழுந்து பின்கட்டின் பக்கம் போனாள்.

''இப்போ ரொம்ப வெட்கம் வந்திடுச்சா? எல்லாத்தையும் கேட்டுக்கிட்டுதானே இருந்தே — இப்போ சந்தோஷந்தானே?'' என்று மெல்லியக் குரலில் கேட்டபடி, பால் டம்பளருடன் அவளது கையையும் சேர்த்து பிடித்தான் பார்த்தீபன். ஒருவரை யொருவர் ஆசையுடன் பார்த்தபடி உலகையே மறந்து

போனார்கள்.

''ஒரு பூனை — என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன்...'' என்று குரல் கொடுத்துக் கொண்டு பெரியம்மா பின்னாலிருந்து வருவதைக் கேட்டு... சட்டென்று தன் கரத்தை அவன் பிடியிலிருந்து விலக்கிக் கொண்டாள் சாம்பவி... கண்கள் மட்டும் குழைவும்-கனிவுமாக அவனைப் பார்த்தன.

''பட்டணத்தில் வாழ்கிறவள் — படிச்ச பெண். எனக்குத்தான் வெட்கப்படறே — அப்படி உட்கார்!'' என்று கட்டிலின் இன்னொரு ஓரத்தை அவளுக்குக் காட்டினாள் அலமேலு.

''இத்தனை நேரம் நாங்க பேசினது உனக்கு நன்றாகக் கேட்டிருக்கும். பார்த்தீபனைக் கட்டிக்க உனக்கு சம்மதந்தானே... இவன் முன்னால் என்னை சாட்சியா வச்சுக் கொண்டு நீயும் உண்மையைச் சொல்லிட வேணும்...'' உத்தரவிட்டாள் அலமேலு.

குனிந்த தலையை நிமிர்த்திக் கொண்டு பார்த்தீபனைப் பார்த்து முறுவலித்தபடி... ''சம்மதம் பெரியம்மா!'' என்றாள்.

''மணமக்களின் சம்மதம் கிடைச்சுடுத்து — எனக்கு சம்மதம். இனி இவளின் பெற்றோர்களுக்கு எழுதி அவர்களது ஒப்புதல் வாங்க வேண்டியதுதான் பாக்கி. என் மைத்துனர் என் பேச்சுக்குக் கட்டுப்படுவார். என் ஓரகத்தியும் என் வார்த்தைகளை மதிக்கிறவள். அவர்கள் இருவரும் இங்கே வந்ததும்... நான் சிங்காரத்திடம் சொல்லி அனுப்புகிறேன். நீ நல்ல நாளாப் பார்த்து முறைப்படி வந்து பெண் கேட்க ஏற்பாடு செய். கல்யாண சம்மந்தமா ஒரு முக்கிய சங்கதியும் உன்னிடம் இப்பவே சொல்லி விடுகிறேன். சாம்பவி மிகவும் சாதாரண குடும்பத்திலிருந்து வருகிறவள். அதனால் உன் தாய் வரதட்சிணை — சீர், நகைகள் என்று எதையும் எதிர்பார்த்து இடக்குகள் செய்யக் கூடாது.''

''கட்டின சேலையுடன் சாம்பவியை நான் மனைவியாக என் வீட்டுக்கு அழைத்துப்போக சம்மதிக்கிறேன்!'' அழுத்தமாகப் பார்த்தீபன் சொன்னான்.

''என் மைத்துனரால் எதுவும் செய்ய முடியாது — அதனால் என்ன, என்வரைக்கும் சாம்பவி என் மகள் போல, என்னால் முடிந்ததைச் செய்து பிறந்த வீட்டின் மதிப்புக் கெடாத வகையில் உங்க வீட்டுக்கு அனுப்பி வைப்பேன்... உன் பக்கம் நீ விரைவாக இனி செயல்பட வேண்டும். நீ தாராளமாக இனி இங்கே வந்து எங்க வீட்டிலேயே சாம்பவியோட பேசலாம். பிள்ளையார் கோயிலுக்குப் போக வேண்டிய அவசியமில்லை... கடிதங்கள் எழுத வேண்டிய நிர்பந்தமும் இல்லை!'' அலமேலு சிரித்த போது இருவரும் வெட்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்து முறுவலித்தனர்.

காரை — ஷெட்டிற்குள் வைத்துப் பூட்டிவிட்டு உள்ளே வந்த மகனை உக்கிரமாகப் பார்த்தாள் மரகதம்மாள்.

இத்தனை நேரத்திற்குள் யாராவது அவனை அலமேலு வீட்டிற்குள் பார்த்ததாக — சங்கதியை எட்டவிட்டிருப்பார்கள் என்பதை அவன் அறிவான்.

''கந்தசாமி வீட்டுக்கு எதற்கு நீ போயிருந்தாயாம்?'' எடுத்த எடுப்பிலே தாயார் கோபத்துடன் கேட்டாள்.

''நீங்க காலையிலே அவங்க வீட்டுக்குப் போயிருந்தீங்களாம். அதன் காரணத்தைச் சொன்னால் நான் பிறகு உங்க கேள்விக்குப் பதில் சொல்வேன்!''

''அந்தப் பட்டணத்துக்காரியை நீ கட்டிக்க முடியாது. அப்படி ஒரு வீண் கனா கண்டால் அதை மறந்துடணும்னு இடிச்சுச் சொல்லப் போயிருந்தேன்!''

''அந்தப் பட்டணத்துப் பொண்ணைக் கட்டாயம் நான் கட்டிப்பேன். என் தகப்பன்மேல் ஆணைன்னு அவங்களுக்கு வாக்குக் கொடுக்கத்தான் அங்கே போயிருந்தேன்?''

கோபத்தில் ரத்தமாக முகம் சிவக்க... உச்சி மண்டை வெடித்துவிடும் போன்றதொரு ஆவேசத்தில்... ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு மகனை கனல் தெறித்த விழிகளால் கடுமையாகப் பார்த்தாள் மரகதம்.

''பார்த்தீபா — நீயாடா இப்படிப் பேசறே? அவளை நீ

கட்டிகிட்டா... நான் உசிரோட இருக்க மாட்டேன்...!'' உரத்த குரலில் அலறினாள்.

''அவளை நான் கட்டிப்பதை நீங்க தடை செய்தால் நான் உசிரோட இருக்க மாட்டேன்... முடிவு உங்க கையிலே இருக்கு!''

''பார்த்தீபா... என்ன சொல்றே...?'' மரகதம் கூவினாள்.

''இனி சொல்றதுக்கு ஏதும் இல்லை அம்மா... நீங்கதான் முடிவு எடுக்கணும். நான் தீர்மானம் செய்துட்டேன்!'' என்று கூறிவிட்டு வேகமாகப் படியேறி மாடியிலிருந்த தன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

இரவு பத்து மணிக்கு மேலாகியது. சாப்பிடவோ — அவளிடம் பேசவோ அவன் இறங்கி வரவில்லை.

மாடிப் படிகளைத் திகிலுடன் பார்த்தபடி அவள் வெகு நேரம் ஊஞ்சலில் அமர்ந்திருந்தாள். இருப்புக் கொள்ளாது முடிவில் அவளே மூச்சிறைக்கப் படியேறி அவன் அறைக்கு முன் வந்தாள். பார்த்தீபன் அறையில் விளக்குக் கூட எரியவில்லை என்பதை இடுக்கு வழியே பார்த்துப் பயந்து போனாள்.

''பார்த்தீபா! பார்த்தீபா — எழுந்து வாப்பா — சாப்பிட வேண்டாமா?'' கதவைத் தட்டி மகனைக் குழைவான குரலில் கூப்பிட்டாள்.

''சாப்பாடு எனக்குத் தேவையில்லை — என்னை நிம்மதியாக இருக்க விடுங்கள்...'' கோபத்துடன் அறைக்குள் இருந்து வந்த பதில் அவளது பயத்தை அதிகரிக்கச் செய்தது...

'இளம் வயசு — காதல் வேகம், இந்தப் பிள்ளை ஏடாகூடமாக ஏதாவது செய்து கொண்டுவிட்டால்... வேதபுரிநாதா! நான் என்ன பண்ணுவேன்?...' அவளது பெற்ற வயிறு திகிலில் பதைபதைத்தது.

9

அந்தக் கிராமத்தில் பலருக்கு வேதபுரிநாதர் குலதெய்வமாக இருந்தார். எனவே அவர்கள் வீட்டுத் திருமணங்கள் அனைத்தும் அந்தக் கோயிலை ஒட்டிய கல்யாண மண்டபத்தில்தான் நடைபெறுவது வழக்கம்.

வேதபுரிநாதர் கோயிலின் ஸ்தானிகராக இருந்து பல திருப்பணிகளில் பங்கேற்ற சட்டநாதனின் மகன் கல்யாணம் அங்குதானே நடைபெற வேண்டும்.

சாம்பவி — பார்த்தீபனது திருமணம் அந்தக் கல்யாண மண்டபத்தில் விமரிசையாக நடந்து கொண்டிருந்தது.

ஊரே திரண்டு வந்துவிட்டது போன்று கூட்டம் மண்டபத்தினின்று வழிந்து கொண்டிருந்தது. நாதஸ்வர இசைக்கு மேல் மக்களின் குரல் கலகலத்துக் கொண்டிருந்தது. எவ்வித வித்தியாசமுமின்றி பந்தி போஜனம் ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்தது.

முதல் பந்தியில் வயிறு முட்டத் தின்றுவிட்டு வெற்றிலை பாக்கைக் குதப்பிக் கொண்டு தென்னந் தோப்பிலிருந்து வீசிய இளங்காற்றை அனுபவித்த வண்ணம் கும்பல் கும்பலாக மக்கள் மண்டபத்திற்கு வெளியே நிழலோரமாக நின்ற வண்ணம் பேசிக் கொண்டிருந்தனர்.

''உண்மையில் நான் எதிர்பார்க்கலை — இது அதிசயத்திலும் அதிசயமே. பட்டிணத்திலிருந்து வந்த பெண் நம்ப கிராமத்து பெரிய தனக்காரர் மகனை கொத்திக் கொண்டு விட்டாளே?''

''சும்மா சொல்லக் கூடாது! பெண்ணுக்குச் சொத்து சுகம் ஏதுமில்லாட்டியும் பார்க்க பசும்பொன் பொம்மையாட்டம் இருக்காளே!''

''எங்க ஓரகத்தி மகள் அபிராமியைக் கேட்டாங்க

மரகதம்மா. பூப்போட்டு பார்த்து சொல்றேன்னு வாக்குக் கொடுத்திருந்தோம். அதுக்குள்ளே பட்டணத்துப் பெண்ணை முடிச்சுட்டாங்களே? அநியாயம் இது...!''

''என்ன அத்தை, விசயம் புரியாம மனசை அலட்டிக்கிறீங்க. பார்த்தீபனுக்கு பெண்ணை புடிச்சுட்டது. இது காதல் கல்யாணம் தெரிஞ்சுக்கோங்க... நிறைய சினிமாப் படம் பார்க்கிறீங்க... வயக்காட்டிலும் தென்னந்தோப்பிலும் சிறிகுகள் ஆடிப்பாடி சுத்திட்டு வரதை படத்திலே பார்த்து நல்லா சிரிச்சி மகிழ்ந்திருக்கீங்களே—அதே கதைதான் இப்போ நிசமா நம்ம ஊரிலும் நடந்திருக்கு. புரியலையா?'' — ஒரு வம்புக்காரி உரத்த குரலில் துணிவுடன் பேசிவிட்டு கலகலவென்று சிரித்தாள்.

''பெண்ணைப் பார்த்தா பசுபோல இருக்காளே — இந்த ராட்சசி மரகதம்மாகிட்டே எப்படிக் குடித்தனம் செய்து குப்பை கொட்டுவாளோ தெரியலை...'' — பெருமூச்சு விட்டாள் ஒரு வயதான கிழவி.

''பாட்டி! கவலைப்படாதீங்க. பட்டணத்திலே இருந்து வந்ததும் வராததும் வீட்டோட இருக்காப்பல போக்குக் காட்டிட்டு வாய்க்கால் ஓரத்திலே கண்ணி வச்சு நம்ம ஊர் பையனை பிடிச்சுட்டாளே. அவளுக்கா நாம சொல்லித் தரணும், வேடிக்கையைப் பார்த்துகிட்டு இருங்க. இந்த மரகதம்மாளே அலறி ஓடும்படி அவள் அதிகாரம் தூள் பறக்கப் போகுது...!''

அடுத்த பந்தியில் உட்கார்ந்திருந்தவர்களுக்கு சமையல் ஆட்கள் சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்தபோது... முதல் பந்தியில் உண்டு விட்டு மிகுதியிருந்த பொழுதுக்கு சில பெண்கள் இவ்வாறு வம்பைப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

கிராமத்து ஆண்களில் சிலரும் தங்கள் பங்கை விட்டு விடவில்லை.

''அண்ணாத்தே! அந்தப் பொண்ணோட அப்பனைப் பார்த்தீங்களா? ஒரேமுட்டா ஆனந்தத்திலே மூழ்கிக் கிடக்கான்.''

''இருக்காதா பின்னே? அவனும் நம்ம கிராமத்துக்

காரன்தானே? அண்ணன்கிட்டே தன் பங்கு நிலத்தை வித்து பணமா எடுத்துகிட்டு பட்டணத்துக்குப் பிழைக்கப் போனான். மூணு பொண்ணு ஒரு பிள்ளைன்னு குடும்பம் பெருகிப் போச்சு. குறைஞ்ச சம்பாத்தியத்திலே குடும்பத்தை நடத்த முடியாம தவிச்சவனுக்கு... காலிலே தட்டுப்பட்ட பண மூட்டை போல ஒரு மருமகன் பிறந்த ஊரிலேயே கிடைச்சுட்டான். அப்பாடின்னு அவனுக்கு ஒரே நிம்மதி -சந்தோஷம்...!''

''மரகதம்மா இந்தக் கல்யாணத்துக்கு எப்படி ஒத்துக்கிட்டாங்க? போன வருடம் என் சகலைபாடி வீட்டிலே பெண் எடுக்க ஆளை முதலில் அனுப்பி வச்சாங்க. அவங்க போட்ட நிபந்தனைகளை கேட்டுட்டு என் சகலபாடி பயந்து போய் பேர் பொருத்தம் சரியில்லைன்னு மெல்ல நழுவிகிட்டார். அந்தப் பொண்ணுக்கு வேறே நல்ல இடமே கிடச்சுடுச்சு. அதுவேறே கதை!'' தமது இடதுகையால் மீசையை சற்று கோபத்துடன் தடவிக் கொண்டார் ஒரு மனிதர்.

''இந்தப் பெண்ணை பையனுக்கு பிடிச்சுப் போச்சு -அம்மாவையே எதிர்த்துக்கிட்டானாம். ஊர் சிரிக்குமேன்னு மரகதம்மா கப்புனு வாயை மூடிகிட்டு கல்யாணத்தை விமரிசையா நடத்தி வைக்கிறாங்க, வேணும் இவங்களுக்கு! வரதட்சணை ஐம்பதாயிரம்... சீர் வரிசையிலே இரண்டு பெரிய குத்துவிளக்கு எழுபத்தஞ்சு பவுனுக்கு குறையாம நகை நட்டுனு பட்டியல் போட்டுகிட்டிருந்தாங்க. இப்போ நல்லா ஒரு படு குழியிலே விழுந்திருக்காங்க...!'' ஆனந்தப்பட்டார் இன்னொருவர்.

பட்டணத்திலே பி.ஏ. படிச்ச பொண்ணு - பார்க்க நல்லா இருக்கா...! அத்தோட சரி... அவள் அப்பன் ஒரு செல்லாக் காசுகூட செலவழிக்கலையாம். கந்தசாமி பெண் ஜாதி அலமேலு அம்மாதான் ஏதோ கொஞ்சம் கொடுத்து ஒப்பேத்தியிருக்காங்கன்னு கேள்வி... ஓகோ...'' என்று தின்ன சோறு செரிக்க ஏப்பம் விட்ட வண்ணம் ஆண்களிடையே வம்பு உச்சகட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தது.

மண மேடையில் இன்னமும் உறவினர்கள் வரிசையாக வந்து விசேஷ அரிசியைத் தூவிவிட்டு மணமக்களை வாழ்த்திக் கொண்டிருந்தனர். இரண்டாம் பந்திக்காக ஒரு கும்பல் ஒரு பக்கம் காத்திருந்தது. ஆசையுடன் அவன் பொறுக்கி எடுத்த நீலவண்ண காஞ்சீபுரப் பட்டுச் சேலையில் நீல மலர் போல அவன் அணிவித்த மங்கலநாண் கழுத்தை நிறைத்த மலர் மாலைகளுக்கிடையே மின்ன... சாம்பவி அழகு ஓவியமாக உட்கார்ந்திருந்தாள். மணமக்கள் இருவரும் அடிக்கொரு தடவை கடைக் கண்ணால் பார்வையில் பேசிக்கொண்டனர். அவர்கள் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத இன்ப நிகழ்ச்சியாயிற்றே அது.

''எழுந்திருங்கோ, நீங்களும் பந்தியிலே உட்கார்ந்து சாப்பிடணும்'' என்று பெரியவர்கள் வந்து அவர்களை எழுப்பிய போது அவர்களிருவருக்கும் பசியே இருக்கவில்லை. கணவன் மனைவி என்ற உறவில் இணைந்து விட்டோம் என்ற இன்ப உணர்வு அவர்களது நெஞ்சையும், வயிற்றையும் நிறைத்து விட்டிருந்தது.

இரண்டாம் பந்தியிலே உற்றார் உறவினருடன் அவர்களிருவரும் சாப்பிட உட்கார்ந்தனர்.

சாதத்தை பருப்புடன் கலந்து விரல்களால் அளைந்து கொண்டு பார்த்தீபன் அருகே அமர்ந்திருந்த மகளைப் பார்த்து தந்தை வாகீசன் பூரித்துப் போனார்.

ஆனால், சாம்பவியின் தாயின் மனதிலே ஒரு இனம் காணாத கோபம்.

'ஓரகத்திக்கு உதவட்டும் என்று பெண்ணை அனுப்பி வைத்தாள். படித்த பெண்வேலைக்குப் போய் சம்பாதித்து குடும்பத்திற்கு உதவியாக இருப்பாள் என்றுபெரிதும் நம்பிக் கொண்டிருந்த வேளையில் ஓரகத்தி அலமேலு இப்படியா ஒரு சூழ்ச்சி செய்வாள். தன் அருகே - கிராமத்திலேயே அந்தப் பெண்ணைக் கட்டிக் கொடுத்து எப்பொழுதும் கூப்பிட்ட குரலுக்கு ஆதரவாக இருக்கட்டும் என்று சதி செய்து விட்டாளே? பெற்றவள் கல்லுபோல் இருக்கும்போது தானே

முந்திக் கொண்டு பெரிய தனக்காரர் மகனுக்குப் பேசி முடித்துவிட்டு சாவதானமாகக் கடிதம் எழுதி சங்கதியைச் சொல்ல என்ன நெஞ்சழுத்தம்' உள்ளூர... கோபத்தில் குமைந்தாள்.

தங்கை அனுபமாவின் கண்கள் வியப்பில் விரிந்தன.

''அம்மா! அதோபாருங்க, அக்கா இடுப்பிலே போட்டுக் கிட்டிருக்கிறது. உண்மையிலே தங்கத்தில் செய்த ஒட்டியாணமா... இல்லே கவரிங்கா...?''

அம்மா கோபத்தில் உதட்டைக் கடித்துக் கொண்டாள். ''உண்மையான தங்க ஒட்டியாணந்தான் கழுத்திலே போட்டிருக்கிறது கூட உண்மையான வைர அட்டிகைதான். எல்லாம் மாமியாரின் நகைகள். அவ அதையெல்லாம் பூட்டிக்கிட்டிருந்தா உனக்கும் எனக்கும் என்ன லாபம்?'' இளைய மகள் மீது எரிந்து விழுந்தாள் தாய்.

''மாப்பிள்ளை சொந்தக்கார் வச்சிருக்கார் அம்மா - புத்தம் புது பியட்டு...!'' என்றான் பக்கத்திலே உட்கார்ந்து கல்யாண சாப்பாட்டை ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்த சாம்பவியின் தம்பி... கார்த்திக்.

''ஆமாம்! மச்சானை அதிலே கூட்டிக்கிட்டு ஊரைச் சுத்திக்காட்டப் போறார் காத்திரு..!'' மகனை கோபத்துடன் முறைத்தாள் தாய்.

ஊரார் வாயில் விழுந்து புரள மனமின்றி சம்பந்தி வீட்டவர்களை நன்றாகக் கவனிக்க வேண்டுமென்று மரகதம்மாள் ஆட்களுக்கு ஆணையிட்டு இருந்தாள்; அவ்வளவுதான். சாப்பாட்டை பரிமாறியவர் கணிசமாகப் பருப்பைப் போட்டு கரண்டியளவு நெய்யை ஊற்றிவிட்டுப் போய்விட்டார். ஆனால், அவளுக்குத்தான் சோற்றை ரசித்துச் சாப்பிட முடியவில்லை. வேலைக்குப் போய் உதவக்கூடிய பெண்ணை கல்யாணம் செய்து கொடுத்து விட்டு இந்த மனுஷன் நிம்மதியா சிரிக்கிறாரே. என்னால் முடியலையே என்றுகணவனைத் திரும்பிப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள்.

வெள்ளைப்பட்டு சேலைத் தலைப்பை இழுத்துக் கட்டிக்

கொண்டு அங்குமிங்கும் மண்டபத்தில் வளைய வந்த மரகதம் ஓரக்கண்ணால் தன் புது மருமகளை அடிக்கொரு தடவை பார்த்துக் கொண்டாள். அவளது மனதில் ஆனந்தத்திற்குப் பதில் ஆத்திரம் மண்டிக்கொண்டு வந்தது.

பிடித்தால் ஒரு பிடியில் அடங்கிவிடும் ஒரு சிறு பெண்ணால் அவளுக்கு எத்தனை பெரிய தலைகுனிவு வந்து விட்டிருக்கிறது? அடுத்த கிராமத்திலிருந்த பெரிய பண்ணையாரின் மகளை பேசி முடிக்க அவள் ஆவலாக இருந்த சமயம் பட்டணத்திலிருந்து வந்து சில நாளிலேயே ஒரேயடியாக அவளது செல்ல மகனை ஈர்த்துக் கொண்டு விட்டாளே இந்தச் சதிகாரி.

தாயார் கீறியக் கோட்டைத் தாண்டாத அப்பாவிப்பிள்ளை. அவன் அந்த மூன்று நாட்களில் தாயை எப்படி பாடுபடுத்தி விட்டான்?

தாயார் கண்கலங்கினால் பதறிப்போய்விடும் பாசம் உள்ள பிள்ளை. அந்தப் பட்டணத்துக்காரிமேலே கொண்ட மோகத்தில் தாய் குலுங்கிக் குலுங்கி அழுததைக் கூட பார்க்காது கதவைத் திறக்க மறுத்து விட்டானே? கெஞ்சி கதறியபின், கதவைத் திறந்து கொண்டு வெளி வந்தவன் முகத்திலேதான் எத்தனை கோபம்?

''என்ன இந்த ஆர்ப்பாட்டமெல்லாம். ஒரு தடவை சொன்னா சொன்னதுதான்னு புரிஞ்சுக்காம அழுது ஊரைக் கூட்டினா அவமானப்படப்போறது நீங்கதான்... தெரிஞ்சுக்கோங்க.'' என்று அதட்டினானே! வளர்த்த கடா மார்பிலே பாய்ந்ததும்பாங்களே — அது சரியான பேச்சு. ஈ மொய்த்தால் குழந்தை அழுவானேன்னு தொட்டிலை ஆட்டிக் கொண்டே அருகில் பல மணி நேரம் உட்கார்ந்து இருப்பாளே இந்தத் தாய்... ஒரே மகன்தானே இருக்கான் என்று உயிரையே வச்சுக் கொண்டிருந்தாளே... இதுக்கெல்லாம் பிரதியாக அந்த மூணு நாளில் அவளை எப்படி வதைச்சுட்டான் பார்த்தீபன்?

அன்று ராத்திரி சாப்பிட மறுத்து — தூங்க மறுத்து — ஒரு வாய் தண்ணீர்கூடக் குடிக்க மாட்டேன்னு பிடிவாதம் செய்து...

ஒரேயடியாகச் சண்டித்தனம் செய்து தன் காரியத்தை நிறைவேத்திக் கொண்டு விட்டானே? மருந்துக் கடை வச்சிருக்கான் — அங்கேயிருந்து எதையாவது எடுத்துக் கொண்டு வந்து சாப்பிட்டு விட்டு உயிரை மாய்த்துக் கொண்டால் ஊரே கொல்லுனு போயிடும். சட்டநாதன் பரம்பரையில் கேள்விப்படாத அவமான சங்கதியாகிவிடும் என்று பயந்து கொண்டு மூன்று நாள் அழுது.. .முகம் வீங்கி... சாப்பிடாமல் தனியாகத் தவித்துவிட்டுப் பிறகு தானே ஒப்புதல் கொடுத்தாள்.

பக்கத்து ஊரிலிருந்து தங்களது தூரத்து உறவினர்களை வரவழைத்து வெற்றிலை பாக்கு பழத்துடன் வெட்கத்தை உதறிவிட்டு கந்தசாமி வீட்டு வாசற்படியேறி வலியப் போய் பெண் கேட்டு, பட்டணத்திலிருந்து வந்த அவளுடைய பெற்றோர்கள் போட்ட நிபந்தனைக்கெல்லாம் ஒப்புக் கொண்டு போதும்... இந்தப் பட்டணத்துக்காரியால் பட்ட அவமானம். இந்தப் பிறவிக்கும் போதும், ஏழேழு பிறவிக்கும் போதும்.

தன் இலையிலிருந்து லட்டு ஒன்றைப் பிட்டு யாரும் பார்க்கவில்லை என்ற நினைப்பில் பார்த்தீபன் சாம்பவி இலையில் போட்டு சாப்பிடச் சொல்லி கண்ணால் பேசியதை மரகதம் கண்டு விட்டாள். ஆத்திரத்தில் கொதித்துப் போனாள்.

அவளும் லேசுப்பட்டவளா? தன் இலையிலிருந்து அல்வாத் துண்டை எடுத்து எத்தனை துணிவுடன் அவன் இலையில் போடுகிறாள்! அதை ஆசையோடு பார்த்தீபன் எடுத்துத் தின்று கொண்டிருக்கிறானே...?

சின்னவனாக இருந்த போது ஒருமுறை தோட்டத்து மாம்பழத்தைக் கொஞ்சம் கடித்துவிட்டு நல்லா இருக்கு தின்னுப்பா என்று தாயார் கொடுத்தபோது... ''எச்சில் பண்ணிட்டீங்க வேண்டாம்'' என்று மறுத்தவனாச்சே...!

வீட்டில் தன் தட்டு டம்ளர் தன் சோப்பு தன் துவாலை என்று எல்லாத்தையும் ஒதுக்கி வைத்துக்கொண்டு வாழ்கிறவன். சற்று நேரத்துக்கு முன் மனைவி என்ற உறவில் இணைந்துவிட்ட

எச்சில் உணவை எத்தனை ஆசையோடு எடுத்துச் சாப்பிடுகிறான். கள்ளச் சிரிப்பு சிரிக்கிறாளே அந்தக் காதகி இருக்கட்டும். வட்டியும் அசலுமா உன்னை நான் அழவைக்கிறேன்... இல்லாட்டி என் பேர் மரகதம் இல்லை...

'சாம்பவி' — சண்டாளி — வா... வலது காலை எடுத்து வச்சு என் வீட்டுக்குள்ளே வா... உன் கொட்டத்தை அடக்கி உன்னை நான் என்ன செய்கிறேன் பார். மின்னல் வேகத்தில் கோபத்தில் பொங்கித் தன்னுள் ஆயிரம் திட்டங்களை வகுத்துச் சொண்டாள் மரகதம்மாள்.

''சம்பந்தியம்மா! நீங்களும் உட்காருங்க... சாப்பிட ஆரம்பிச்சிட்டதே...'' அலமேலு வந்து அருகில் நின்றபோது... மரகதம் ஆத்திரத்தில் பொங்கிப் போனாள்.

'என் வீட்டுச் சோற்றை எனக்கு எடுத்து உபசரிக்கிறே கொட்டிக்காரி நீ...' என்று கண்ணால் அப்பளத்தை நொறுக்குவது போல... கடுமையாகப் பார்த்துவிட்டு... தனக்கு ஈடு இணை இல்லாதவளுடன் சம்பந்தம் செய்து கொண்டு விட்டோமே என்ற அருவருப்புடன் அலமேலுவுக்கு அடுத்ததாக இருந்த இலையில் மரகதம் வெறுப்புடன் உட்கார்ந்தாள்.

இப்போது அவள் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், முடிவில் இந்த அலமேலுவை பிடிச்சு காட்டில் கொண்டு விட வேண்டும்.. என்று ஆத்திரத்தில் மனம் குமுறியது.

10

பார்த்தீபன் கிராமத்திலே பிறந்து வளர்ந்தவன். ஆனாலும், நகரத்திலே படித்து ஆளானவன். நகரத்து இளம் தம்பதியர் போல திருமணத்திற்குப் பின்னர் அவன் தேன் நிலவுக்காக மைசூருக்குத் தன் காரிலேயே புறப்பட்டு வழியில் சேலம் — பெங்களூர் இரண்டிலும் இரண்டு தினங்கள் தங்கிவிட்டுச் செல்ல ஏற்பாடு செய்திருந்தான்.

மரகதம்மாளுக்கு அவனது திட்டம் ஏதும் பிடிக்கவில்லை. என்றாலும் மகனுக்காக அவள் தனது கொள்கைகள் சிலவற்றை விட்டுக் கொடுத்திருந்தாள்.

கல்யாணச் சாப்பாடு விமரிசையாக முடிந்ததும் கூட்டம் கலைந்தது. அலமேலு அம்மாவின் வீட்டில் மணமக்களுக்கு சாம்பவியின் பெற்றோர்கள் தங்களாலான சீர்வரிசைகளைத் தந்து மணமக்களை மலர் தூவி ஆசிசெய்து அனுப்பி வைத்தனர்.

பொழுது அமர்வதற்குள் புறப்பட்டு சேலம் சென்று ஓட்டலில் தங்க ஏற்பாடு செய்துவிட்டிருந்த பார்த்தீபன் பரபரப்புடன் மனைவியுடன் தன் வீட்டிற்கு வந்தான்.

வலது காலை எடுத்து உள்ளே வைத்து வருமுன் மருமகளை உறவினரிலிருந்த சுமங்கலிப் பெண் கையில் ஆரத்தித் தட்டைக் கொடுத்து வரவேற்கச் செய்தாள் மரகதம். கூட்டமும் கூச்சலும் அவளுக்குப் பிடிக்காத சங்கதிகள். நாலு நாளுக்கு முன்னதாகவே வந்து வீட்டை இரண்டு படுத்திக் கொண்டிருந்த உறவினர் அனைவருக்கும் காப்பியும் பலகாரமும் வழங்கி... இனிப்புகளைக் கட்டிக் கொடுத்து —வெற்றிலை பாக்கு பழத்துடன் வழி அனுப்பி வைத்தாள்.

மணமக்கள் இருவரும் தங்களது பெட்டிகளைத் தயார் செய்து தேன் நிலவுக்குப் புறப்பட இருக்கையில் வெட்டியாக பேசிப் பொழுதை வீணாக்கிக் கொண்டிருந்த இரண்டொரு நெருங்கிய உறவினர்களையும் நாசுக்காகப் பேசி ஊருக்கு அனுப்பி விட்டாள்.

சாம்பவியும் பார்த்தீபனும் தேன் நிலவுக்கு தங்கள் பெட்டிகளைத் தயார் செய்து கொண்டிருந்தனர். வாசலில் அவர்கள் பயணத்திற்காகப் பூமாலை அலங்காரத்துடன் அவனது கார் தயாராக நின்று கொண்டிருந்தது. நாள் முழுவதும் உடுத்தியிருந்த புது பட்டுச் சேலையுடன் கல்யாண மண்டபத்தில் வளைய வந்து கொண்டிருந்த மரகதம்மாள் உடல் வியர்வையில் கசகசத்தது. வேலைக்காரி அவளுக்காகத் தயாராக குளியலறையில் ஒரு அண்டாவில் சூடான தண்ணீரையும் மற்றொன்றில் குளிர்நீரையும் நிரப்பி வைத்திருந்தாள்.

தேவையான அளவு எஜமானியம்மாளே நீரை விளாவிக் கொண்டு குளிக்கட்டும் என்பது அவள் யோசனை. மணமக்களை வழி அனுப்பிவிட்டு பின்னர் ஸ்நானம் செய்வது அபசகுனம் என எண்ணி மரகதம்மாள் தன் குளியலை முடிவில் முடித்துக் கொள்ள... குளியலறைக்குள் விரைவாகச் சென்று தாளிட்டுக் கொண்டாள்.

உடல் அயர்ச்சியைப்போக்கிக் கொள்ள நல்ல சூடான தண்ணீரில் குளிக்க வேண்டும் போன்ற அவாவில் அவள் தண்ணீரை முகர்ந்து... ஊற்றி மனம் திருப்தியாகும் வரை குளித்தாள். பின்னர் மாற்றுடை அணிந்து கொண்டு தாழ்ப்பாலை கதவைத் திறந்து கொண்டு கூடத்திற்கு வந்தாள். ஹாலில் வந்து அமர்வதற்குள் அவள் நடை தள்ளாடியது. தலை சுற்றுவதைப் போன்று ஒரு திகைப்பு... மெல்ல நடந்து ஹாலில் சங்கிலியை ஆதரவுக்குப் பிடிக்க அவள் கை நீட்டிக் கொண்டு தடுமாறுவதைக் கண்ட பார்த்தீபன் ஒரே தாவில் மாடிப் படிகளைக்கடந்து இறங்கி ஓடி வந்தான். தன் தாயைத் தாங்கிக் கொள்வதற்குள்... மரகதம் மயக்கமாகி நினைவு இழந்து கீழே சாய்ந்து விட்டாள்.

சமையல் ஆளிலிருந்து தோட்டக்காரன் வரை எல்லோரும் பதைத்துக் கொண்டு அங்கே குழுமினர்.

ஒரு வேலைக்காரி டம்ளரில் நீரை எடுத்து வந்து முகத்தில் தெளித்து சிறிது புகட்ட முயன்றாள்.

தன் நினைவற்று தரை மீது சுருண்டு கொண்டு கிடந்த தாயைக் கண்டு துயரத்தில் துடித்துப்போனான் பார்த்தீபன்.

''டாக்டரை கூட்டி வரேனுங்க...'' ஒரு ஆள் வலிய முன்வந்தபோது.. ''ஓடிப்போய் கையோடு கூட்டி வா...!'' என்று உத்தரவிட்டான்.

''அம்மா! அம்மா!...'' என்று உணர்ச்சி வசத்தில் தாங்காதுமாற அழைத்தபடி தாயின் தலையைத் தூக்கி மடிமீது வைத்துக் கொண்டான். அவனது கண்கள் கலங்கிப் போயின!

மாடிப் படிகளில் ஓசைப்படாது இறங்கி வந்தாள் சாம்பவி. வேலைக்காரர்களை ஒதுக்கிவிட்டு... தன் கணவன் அருகே

தரையில் வந்து அமர்ந்து கொண்டாள். யாரையும் பார்க்க அவளுக்கு அச்சமாக இருந்தது.

''இந்தப் பெண் மருமகளாக வந்து வலது காலை வைத்து வந்த வேளை எப்படி இருக்கு பார்த்தியா...'' பேசாமல் பேசிய வேலைக்காரர்கள் வெறுப்புடன் அவளைப் பார்த்தனர்.

சாம்பவியின் உடல் அச்சத்தால் நடுங்கியது.

''அத்தை! அத்தை!'' மெல்லிய குரலில் கூப்பிட்டபடி அவள் மெல்ல கையை நீட்டி விரல்களை மூக்கருகில் வைத்துப் பார்த்தாள். லேசாக சுவாசம் வந்து கொண்டு இருந்தது.

சரியாகச் சாப்பிடாது இங்குமங்கும் கல்யாண மண்டபத்தில் அலைந்து கொண்டிருந்ததின் களைப்பாக இருக்குமோ?

அருகிலிருந்த கணவனைத் திரும்பிப் பார்க்கவும் அஞ்சி திகிலுடன் அவள் செய்வதறியாது உட்கார்ந்தாள்.

மவுனமும் — தாழ்ந்த குரலில் பேச்சுமாக சில நிமிடங்கள் கழிந்தன.

''எல்லோரும் அப்படிக் கொஞ்சம் நகருகிறீர்களா!'' அதிகாரமான குரலில் அதட்டியபடி... வைத்தியலிங்கம் தமது பெட்டியுடன் உள்ளே வந்தார்.

அவர் ஆலோசனைப்படியே பார்த்தீபனும் இன்னொரு ஆளும் மெல்ல மரகதம்மாளைத் தூக்கி அவளது படுக்கை மீது போட்டனர். பார்த்தீபனையும், சாம்பவியையும் மட்டும் அறைக்குள் வைத்துக் கொண்டு வைத்தியர் அவளைப் பரிசோதனை செய்தார்.

தலையைச் சொறிந்து கொண்டு அவர் பார்த்தீபனைப் பரிதாபமாகப் பார்த்தபோதே சாம்பவி நடுங்கிப் போனாள்.

''பார்த்தீபன்! பதட்டப்படாதே — நிதானமாகக் கேள் ரத்த அழுத்த நோயாளிகள் சூடான தண்ணீரில் குளிக்கக் கூடாதுன்னு பல தடவை உன் தாயாருக்கு நான் எச்சரிக்கை கொடுத்திருக்கிறேன். உன் தாயார் இப்போ சூடான தண்ணியிலே குளிச்சிட்டு அவசரமா வெளி வந்ததின் விளைவு

இது. இப்போ அவங்களுக்கு மூளையில் ரத்தக் குழாயில் வெடிப்போ அடைப்போ ஏற்பட்டிருக்கு!''

எச்சிலை விழுங்கிக் கொண்டான் பார்த்தீபன்! ''அப்படின்னா டாக்டர்...''

''இப்போ அவங்களை நகர்த்தி தொந்தரவு செய்கிறதிலே ஒரு பலனும் இல்லை. யாராவது அவங்க பக்கத்திலே இருந்து தலை கவனிச்சுக்கணும்!'' என்று கூறிவிட்டு வைத்தியர் சாம்பவியைப் பார்த்தார்.

''நான் அத்தையைக் கவனிச்சுக்கிறேன் டாக்டர். என்ன செய்யறதுன்னு சொல்லுங்கோ?'' சாம்பவி துயரத்துடன் இணைத்தாள். அவள் கண்களில் நீர் புரண்டது. தான் அந்த வீட்டிற்குள் நுழைந்தவுடன் இப்படி ஒரு விபரீதம் ஏற்பட்டு விட்டிருக்கிறதே. அவள் கணவன் இதை எப்படி எடுத்துக் கொள்ளப் போகிறான். அவர்களது வாழ்க்கை கசப்பான சம்பவமாகி விடுமோ... பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு அவள் தன் கணவன் பக்கமே பாராது பேசினாள்.

''ஒரு சமயம் சில மணிநேரம் இப்படியே மயக்கமா இருப்பாங்க. பிறகு மெதுவா கண்ணை விழித்துப் பார்க்கலாம். இரண்டிலிருந்து பதினாலு நாள் வரை நிலமையை பத்தி ஒண்ணும் சொல்ல முடியாது. எதுக்கும் டவுனில் இருந்து நான் ஸ்பெஷலிஸ்டை வரவழைக்கிறேன்'' என்று கூறிவிட்டு தலையை ஆட்டிக் கொண்டு வெளியேறினார் வைத்தியலிங்கம்.

அன்று இரவு முழுவதும் சாம்பவி... மாமியார் அருகில் ஒரு நாற்காலியில் அமர்ந்தபடி மயக்கமாகக் கிடந்தவளைப் பார்த்துக் கொண்டு உறங்காது உட்கார்ந்திருந்தாள்.

விடியற்காலை வேளை — அவளையுமறியாது உட்கார்ந்த நிலையில் சிறிது நேரம் உறங்கிப் போனாள். அருகில் யாரோ முனகுவது போன்ற சப்தம் கேட்கவே, திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். மரகதம்மாள் முனகியபடி கண்களை விழித்துப் பார்ப்பது விடிவிளக்கின் வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது.

தாங்க முடியாத மகிழ்ச்சி அவளுக்கு...

''இந்தாங்க! அத்தை முழிச்சிட்டு பார்க்கிறாங்க... வாங்கோ...!'' என்று ஆனந்தத்துடன் முன்னறை சோபா ஒன்றில் அயர்ச்சியால் முடங்கிக் கொண்டு கிடந்த கணவனை எழுப்பினாள்.

தூக்கம் கவிழ்ந்த கண்களுடன் அருகில் நின்ற மகனை மரகதம்மாள் மேலும் கீழும் பார்த்தாள். அருகே நின்ற மருமகள் பக்கம் பார்வை திரும்பிய போது கண்களில் கோபம் தெரிந்தது.

''பார்த்தீபா — அவளைப் போகச் சொல்லு — உங்கிட்டப் பேசணும்...'' மரகதம்மாளின் பேச்சுக் குழறியது.

சட்டென்று புரிந்து கொண்ட சாம்பவி அறையை விட்டு வெளியே வந்து ஒதுக்குப் புறமாக நின்று கொண்டாள். மரகதத்தால் சரியாகவே பேச முடியவில்லை. குழறிக் கொண்டு ஏதோ சொல்ல முயன்ற தாயின் அருகே குனிந்து கொண்டு கவலையுடன் கேட்டான் மகன்.

அவன் அறையை விட்டு வெளியே வந்தபோது மனைவியின் முகத்தைப் பார்க்க விரும்பாதவன் போல முகத்தைக் கழுவிக்கொள்ள குளியலறைப் பக்கம் விரைந்து விட்டான்.

சாம்பவி திரும்ப வந்து தன் அருகில் உட்கார்ந்த போது அவளிடம் பேச விரும்பாத மரகதம்மாள் கண்களை மூடிக் கொண்டாள்.

விடிந்ததும் சீக்கிரம் குளியலை முடித்துக் கொண்டு மாற்று உடை அணிந்து கொண்டு கணவனுக்கு காப்பி, பலகாரம் பரிமாறினாள் சாம்பவி — அவளிடம் ஏதும் பேசாது மவுனமாக — சாப்பிட்டு விட்டு வெளியே வந்தான்.

காரின் முன் பக்கம் தொங்கிய மலர் மாலையைக் கோபத்துடன் கழற்றி தோட்டத்து செடி ஒன்றின் மீது வீசிவிட்டு... காரைக் கேரேஜில் வைத்துப் பூட்டுவதை கவனித்தாள் சாம்பவி...

அவள் மீது கணவன் கோபமாக இருக்கிறான். இதற்குள் சங்கதி ஊர் முழுவதும் பரவி விட்டிருக்குமே... சாம்பவி ஒரு

துக்கி... வீட்டுக்குள் வந்ததுமே மாமியாருக்கு சமாதி கட்டி விட்டாளே...? என்று ஊரார் வாய் அலுக்க வம்பு பேசி மகிழ்வார்களே...? துக்கம் நெஞ்சை அடைக்க அவள் மறுபடியும் மாமியார் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள். விடிந்ததின் கொஞ்ச நேரம் சென்றதும் ஊருக்குக் கிளம்பித் கொண்டிருந்த அவளுடைய பெற்றோர்கள் — அலமேலு அம்மாவுடன் அங்கே வந்தனர்.

என்ன பேசுவதென்றே விளங்காது சங்கடத்துடன் அவர்கள் மரகதம்மாள் படுத்திருந்த அறையை எட்டிப் பார்த்துவிட்டு... பார்த்தீபனுடன் முன்னறையில் வந்து உட்கார்ந்து கொண்டனர்.

''நரம்பு வைத்திய நிபுணர் வரப்போறதாக சொல்லிப்பட்டோம்... ஏதாவது நாங்க உதவி செய்யணும்னா இன்றைய பயணத்தை ஒத்திப் போட்டுட்டு... இங்கேயே இருக்கோம்...'' மெல்லிய குரலில் பேசிய மாமனாரை வெறித்துப் பார்த்தான் பார்த்தீபன்.

''அவசியமில்லை! இங்கே உதவிக்கு ஏராளமானவங்க இருக்காங்க...!'' பட்டென்று அளித்த பதில் சுருக்கென்று மனதை தைக்கவே... அவர்கள் வெகுநேரம் அங்கு உட்கார்ந்திருக்கக் கூசி விடை பெற்றுக் கொண்டு கிளம்பி விட்டனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் டாக்டர் வைத்தியலிங்கம் ஸ்பெஷலிஸ்ட்டுடன் கூட ஒரு நர்ஸ் பெண்ணுடன் வந்தார். நரம்பு வைத்திய நிபுணர் வெகுநேரம் மரகதம்மாளை பரிசோதித்தார்.

''மூளையில் ஏற்பட்ட ரத்தக் கசிவினால் மரகதம்மாளுக்கு பாரிசம் மெல்ல ஏற்படத் துவங்கி இருக்கிறது — பேச்சும் தடுமாறுகிறது. வலது பக்கம் கையும், காலும் விழுந்து விட்டிருக்கிறது — கூடத் துணைக்கு அந்தப் பணிப்பெண் சில நாட்கள் இருந்து — நோயாளியை எப்படிக் கவனிப்பது என்று சொல்லித் தருவாள் — மூளையில் உள்ள ஒரு ரத்தக் குழலுக்கு ஏற்பட்டிருக்கும் விபத்தின் விளைவின்படி அந்தப் பாரிசம் சில நாட்களிலோ — சில மாதங்களிலோ சரியாகலாம்... ஆனால்

முதல் இரண்டு வாரங்களுக்குண்டான ஆபத்தான கட்டத்தை தாண்டிய பின்தான் தான் எதுவும் உறுதியாகச் சொல்ல முடியும்!'' என்று கூறிவிட்டு சில மருந்துகளை எழுதிக் கொடுத்துவிட்டு தமது பீசை வாங்கி பையில் அசட்டையாகப் போட்டுக் கொண்டு கிளம்பினார்.

''அம்மா சாம்பவி! இந்த நர்ஸோட கூடவே இருந்து அவங்க செய்கிற பணிவிடை விபரத்தைக் கவனமாகக் கேட்டுப் பார்த்து தெரிஞ்சுக்கோ... இரண்டு வாரங்கழிச்சதும் நீயே பிறகு இவங்களை கவனிக்கணும்... இது உன்னுடைய வீடு... இவங்க உன் மாமியார். அதனாலே இவங்களை நல்லா கவனிச்சுக்கிறது உன் கடமை...!'' சோகமாக முறுவலித்து விட்டு... வைத்தியலிங்கம் வெளியே வந்தார்.

தாம் எதிர்பார்த்தபடி அந்தப் பெண்ணுக்கு அந்தக் கிராமத்திலேயே மாப்பிள்ளை கிடைத்துத் திருமணம் நடந்தேறியது பற்றி அவருக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. ஆனால் கல்யாணமான அன்றே இப்படி ஒரு துயரமான நிகழ்ச்சி ஏற்பட வேண்டுமா?

அந்தக் கிராமத்திலிருந்த சில பொல்லாத மனிதர்களை அவர் நன்றாக அறிவார்.

பார்த்தீபனுடன் அனுதாபத்துடன் பேசி... அவன் மனதில் இல்லாத குழப்பங்களை உண்டாக்கி... சாம்பவியின் வருங்காலத்தை வீணாக்கி விட்டால்...? இந்தப் பெண்ணின் ஜாதகத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது. இப்போ உங்கம்மாவுக்கு இப்படி நோய் வந்திருக்கு. தொடர்ந்து அவள் இங்கே தங்கினால் உன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று கூசாமல் பயமுறுத்துவார்களே!

தான் பெற்ற மகளுக்கு ஏதோ சங்கடம் ஏற்பட்டு விட்டது போன்று கனத்த மனதுடன்... தமது ஸ்கூட்டரில் அவர் ஏறிக் கொண்டு நகர்ந்தார்.

11

நகரத்தில் வெகுகாலம் ஒரு பிரபல மருத்துவமனையில் பணிபுரிந்து தேர்ந்தவள் நர்ஸ் கமலம். சமீபத்தில் வேலையினின்று ஓய்வடைந்து புலியூருக்கு அருகிலிருந்த ஊரில் குடியேறி விட்டவள். சுற்றுபுரத்திலிருந்த ஜமீன்தார்களின் வேண்டுகோளுக்கிணங்கி பணக்கார வீட்டவர்களுக்கு மட்டும் பணிபுரிவதை ஏற்றுக் கொண்டிருந்தாள்.

நகரத்து மருத்துவமனையில் தலைமை நர்ஸாகத் தன் கீழ் வேலை பார்த்த பல சிறு பெண்களை அதட்டி மிரட்டி வேலை வாங்கிய பழக்கம் அவளை விட்டுப் போகவில்லை. தன் வயது... அனுபவம்... திறமை மூன்றையும் முகாந்திரமாகக் கொண்டு வீட்டு யஜமானியிலிருந்து வேலைக்காரப் பெண் வரை அவள் அதட்டிப் பேசி வேலை வாங்குவது வழக்கம்.

அறைக்குள் நுழைந்து நோயாளியை கண்காணிக்கும் வேலையை மேற்கொண்டவுடன் அவள் தன் தர்பாரை ஆரம்பித்து விட்டாள். மரகதம்மாளின் இடுப்பிலே இன்னமும் பத்திரமாகத் தொங்கிய சாவிக் கொத்தையும் கழுத்தில் கிடந்த சங்கிலி... கைவளைகள்... காதுக் கம்மல்கள் அனைத்தையும் கழற்றி ஒரு பக்கமாக வைத்தாள்.

வந்த கொஞ்ச நேரத்தில் மரகதம்மாள் குழறி அழற்றியதிலேயே புரிந்து கொண்டு விட்டாள்.

வீட்டுக்கு வந்த மருமகளின் துர் அதிர்ஷ்டத்தின் விளைவால் தன் கையும், காலும் விழுந்து படுத்து விட்டதாக மாமி நினைக்கிறாள். புது மனைவியுடன் பேசப் பிடிக்காதவன் போல பிள்ளை ஒதுங்கி நிற்கிறான். யஜமானிக்கு வேண்டாத மருமகள் என்பதால் வேலைக்காரர்களுக்கும் ஏளனத்திற்கிடமாக இருந்தாள் அந்த இளம் பெண்!

''என்னம்மா அப்படி மலைச்சு நிக்கிறே? இவங்களுக்கு 'ஸ்பான்ஜ் பாத்' கொடுத்து மாற்று உடை அணிவிக்கணும். ஒரு சின்ன அண்டாவிலே லேசான சூட்டில் தண்ணீரும் துடைக்க இரு துவாலைகளும்... சோப்பும் மாற்றுப் புடவை எல்லாம் சீக்கிரம் கொண்டு வாங்க...!'' சாம்பவியை அதட்டினாள்.

மரகதம்மாள் தனக்கு மருமகளின் பணிவிடை தேவையில்லை என்பது பற்றி குழறிய போதும் கமலா அதட்டினாள்.

''சும்மாயிருங்க அம்மா! நான் இரண்டு வாரத்திற்குத்தான் இங்கே இருப்பேன். அதுவும் டாக்டர் வைத்தியலிங்கத்திற்காக இந்த உதவி செய்யறேன். ஏற்கனவே நங்கன்பேட்டை வேதாச்சலம் மகளுக்கு பிரசவ காலத்தில் உதவுவதாக வாக்குக் கொடுத்திருக்கேன்... எப்ப வலி எடுத்தாலும் நான் அங்கே ஓடிப் போயிடுவேன். நாள் முழுக்க உங்களை யாராச்சும் கவனிக்கணும்... உங்க மருமகளைத் தவிர வேறு யார்கிட்டே அந்தப் பொறுப்பைத் தரமுடியும். டாக்டர் கூட அப்படித்தான் சொல்லியிருக்கார்!'' கண்டிப்பாகப் பேசினாள்.

சாம்பவி அவள் கேட்ட பொருட்களுடன் விரைவில் வந்தாள்.

''இதோ பார் அம்மா...! இவங்களை உங்க ஒருத்தராலே புரட்டிப் போட்டு ஸ்பான்ஜ் பாத் குடுத்து உடைமாற்ற முடியாது. இப்ப நான் கூட உதவிக் காட்டித் தரேன். பிறகு நீங்க வேலைக்காரியோட இந்தக் காரியத்தைச் செய்யணும்!'' என்று கூறிவிட்டு நோயாளிக்கு எப்படி பணிவிடை செய்ய வேண்டும்... என்ன மருந்துகள் கொடுக்க வேண்டும்... உணவை எப்படிக் கொடுக்க வேண்டும் என்று... வகைப்படுத்திப் போதித்தாள்.

''இப்போ நோயாளிக்கு உணவு தரும் நேரம், நீராகாரம்தான் தரணும். என்னென்ன தரணும்னு எழுதிக் கொடுத்துவிட்டுப் போறேன். இப்ப சத்தியா ஹார்லிக்ஸை கலக்கிட்டு வந்து நான் சொல்றபடி குடுங்கோ!'' என்று உத்தரவிட்டாள்.

மாமியாரின் தலையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு [illegible]ளரை வாயில் வைத்தபடி சிறுகச்சிறுக அதைப் புகட்டுவது எப்படி என்பதை சாம்பவி கற்றுக் கொண்டாள்.

அன்று முழுவதும் அவளுக்கு ஓய்வு இருக்கவில்லை. சமையல் கட்டிற்கும், மரகதம்மாளின் அறைக்கும் இடையே நடந்து உடல் அலுத்துப் போய் விட்டாள்.

மாலைப் பொழுது மங்கி இருட்டியதும்... சாம்பவி குளியலறைக்குள் புகுந்து... குளித்து மாற்றுச் சேலை அணிந்து கொண்டு பூஜையறை விளக்கை ஏற்றினாள். சிறிதுநேரம் மாமியார் படுத்திருந்த அறையில் நர்ஸ் சாப்பிட்டுவிட்டு வருமளவு காவலாக உட்கார்ந்திருந்தாள்.

''நோயாளி தூங்க ஆரம்பிச்சுட்டாங்க, இன்னி ராத்திரி முழுவதும் நான் கவனிச்சுக்கிறேன். நீங்க போய் உங்க காரியங்களைப் பார்க்கலாம் —!'' என்றபடி... கண்களைச் சிமிட்டி கமலா மெல்லியதாக முறுவலித்தாள். வெகுநேரம் அதட்டி வேலை வாங்கி விட்டோமே என்று கமலாவுக்குக் கூட அவள்மேல் அனுதாபம் ஏற்பட்டிருந்தது.

சாம்பவி வெளியே போகுமுன் மறுபடி கமலா கூப்பிட்டாள்.

''உங்க அத்தையின் நகைகள்... சாவிக் கொத்து எல்லாத்தையும் நடுவே இங்கே வந்து அம்மாவைப் பார்க்க வந்த உங்க கணவர்கிட்ட ஒப்படைச்சுட்டேன்... அதுகளை வாங்கி நீங்க இனி பத்திரமா வச்சுக்கிறது உங்க பொறுப்பு!'' என்று எச்சரித்தாள்.

இரவு ஒன்பது மணிக்கு மேலாகியும், சமையல்காரரும்... உதவியாளரும் சாப்பிடவில்லை. அலுப்பும், சலிப்புமாக சமையல்காரர் சமையற்கட்டை அளந்து கொண்டிருந்தார்.

''நீங்கள்ளாம் தூங்கப் போகலாம் — மீதி காரியத்தை நான் பார்த்துக்கிறேன்!'' என்றபோது அவர் முகம் சுருங்கிப் போனது.

''எஜமான் சாப்பிடாம மாடியிலே படுத்துகிட்டிருக்கார். நாங்க எப்ப சாப்பிடறது — எப்ப தூங்கப் போறது?'' குரலில்

காரம் தொனிக்கக் கேட்டார்.

சாம்பவி பரபரப்புடன் மாடி ஏறி மெல்ல பார்த்தீபனது படுக்கையறைக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள்.

உச்சியிலிருந்து தொங்கிய அலங்கார விளக்கு பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தது. மரகதம்மாள் அவர்களிருவரும் உபயோகிக்க வாங்கிப் போட்டிருந்த அந்தப் பெரிய கட்டிலின் மெத்தை மீது வேலைக்காரி போட்டிருந்த நீல வண்ண விரிப்பின் மீது ஒருக்களித்தபடி ஒரு பக்கம் பார்த்தீபன் உறங்கிக் கொண்டிருந்தான்.

''சில நாள்கள் எனக்குக் கடையிலும் — வெளியிலும் பல வேலைகள் கவனிக்க இருக்கும். இரவு எட்டு மணியைத் தாண்டி விட்டால் நான் சாப்பிடாது பால் மட்டும் குடித்துவிட்டு உறங்குவது பழக்கம்...'' அவன் தன் பழக்க வழக்கங்களைப் பற்றி விரிவாக கடிதத்தில் எழுதியிருந்ததைப் படித்த நினைவு வரவே அவள் வேகமாகக் கீழே வந்தாள்.

''ஐயா இதுக்கு மேல் சாப்பிடறதில்லைன்னு உங்களுக்கு தெரியுமே — பரவாயில்லை. நான் அவரைக் கவனிச்சுக்கிறேன். நீங்க ரெண்டு பேரும் சாப்பிட்டு தூங்கப் போகலாம். மீதி காரியங்களை நான் பார்த்துக்கிறேன்!'' என்று... உத்தரவிட்டாள்.

அடுப்பைப் பற்றவைத்துப் பாலைக் காய்ச்சி — ஆற்றி... சர்க்கரை போட்டு கலக்கி ஒரு வெள்ளிச் செம்பில் ஊற்றி டம்ளருடன் எடுத்துக் கொண்டாள். கணவனைத் தனிமையில் சந்திக்கப் போகிறாள் என்ற காரணத்திற்காக அவள் விசேஷ அலங்காரமோ, ஒப்பனையோ செய்து கொள்ளவில்லை. வீட்டின் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு... தான் அன்றாடம் உடுத்தும் ஒரு சாதாரண நூல் சேலையுடன் வாரி முடித்த கொண்டையில் பூஜையறையில் படங்களுக்குப் போட்டு மீதமான துளியளவு மல்லிகைச் சரமும்... நெற்றியில் பளிச்சென்ற குங்குமப் பொட்டுமாகத்தான் மாடியிலிருந்த பார்த்தீபன் அறைக்குள் நுழைந்தாள்.

காலடி ஓசை கேட்டதும் புரண்டு படுத்தவன் திடுக்கிட்டு

எழுந்து உட்கார்ந்தான். கையில் வெள்ளிச் செம்புடன் எளிய அலங்காரத்திலும் அழகு பொம்மையாகத் தன் அறைக்குள் வந்து நின்றவளைக் கண்டு அவன் மனம் படபடத்தது.

மீதே தன் அறையில் பாரிச நோயுடன் படுத்துக் கிடக்கும் தாயின் நினைப்பு நெஞ்சை அடைக்க அவன் முகம் இறுகிப் போனான். கதவை சாத்தி தாளிட்டு விட்டு அவள் படுக்கையை நெருங்கிய போது விருக்கென்று எழுந்து நின்றான்.

''இதன் அர்த்தம் என்னவாம்...?'' கடுமை தொனித்த குரலில் கேட்டான்.

முகம் சிவந்து அவமானத்திலே... குறுகிப் போனாள் சாம்பவி. கனிவான பார்த்தீபனின் கண்களில் தெரிந்த கடுமை அவளைப் பயமுறுத்தியது. கையில் பிடித்திருந்த பால் செம்பைத் தவற விட்டுவிடுவாள் போன்று ஒரு நடுக்கத்தில் அவள் மிரண்டபடி நின்றாள்.

''மீதே என் தாய் பேசக்கூட முடியாத ஒரு நிலையில் படுத்தகிடக்கும் போது இங்கே நான் பால் குடித்து...!'' அவன் முடிக்குமுன் அவமானத்தில் ஒடுங்கிப் போனாள்.

அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடியாத பேதையல்லவே அவள்? நெஞ்சு தீவிரமாகத் துடித்தது. அவளைப் புக்ககம் அனுப்பும்போது அவளைப் பெற்ற தாய் கடைசியாகக் காதோடு சொன்ன சில புத்திமதிகள் உண்மையாகி விட்டதே?

''பெரிய பணக்காரனுக்கு வாழ்க்கைப் பட்டுவிட்டோம்னு மயங்கிப் போய் விடாதே. பார்த்தீபன் பார்க்க சாது போல இருக்கிறான். முதல் சில நாட்களுக்குப் பழக இனியவனாக இருக்கிறான்னு கணிப்புச் செய்திடாதே. பெண்கள் மனம் கடல் ஆழத்தை விட அதிகம்னு ஆண்கள் அடிக்கடி சொல்ற பழக்கம். ஆனால் அவங்க மனம் அதுக்கு மேலேயே ஒருபடி ஆழமானது!

''பார்த்தீபன் தன் பரம்பரை பணக்காரத்தனத்தை இரண்டு மூஞ்சியில் தூக்கிப் போட்டால் நீ கலங்கக்கூடாது. பணக்காரங்ககிட்ட பழகும்போது பாம்புகிட்ட பழகறதைப்

போலத்தான் பத்திரமாக நடந்துக்கணும்...''—அம்மா சொன்ன அத்தனையும் உண்மையாகி விட்டதே.

அவளது பெற்றோர்கள் பெரியம்மாவுடன் மரகதத்தை பார்த்துப் போக வந்தபோது அவன் நடந்து கொண்ட விதம் அடையாளம் காட்டி விட்டதே!

''அப்படி உட்கார் உன்கிட்டே பேசணும்...!'' அருகில் கிடந்த ஒரு இருக்கையைக் காட்டினான்.

பிள்ளையார் கோவில் அருகே தேனாகக் குழைந்த குரலா இப்படி மாறிவிட்டது? காதல் கல்யாணம் என்றாலும் ஒருவரையொருவர்... சில நாட்களிலா புரிந்து கொண்டுவிட முடியும்!

அவளது பெற்றோரின் திருமணம் பெரியவர்களால் பார்த்து நிச்சயிக்கப்பட்டது. அவள் தாய் தன் கணவருட்ன் இருபத்தைந்து வருஷங்கள் வாழ்ந்து விட்டிருக்கிறவள், அப்படியும் அடிக்கடி அலுத்துக் கொள்வாள்.

''இந்த மனுஷன் போக்கு புரிஞ்சாத்தானே. ஒரு நாளைக்கு ஒருவிதமா பேசுகிறாரே...?''

அத்தனை ஆண்டுகளுக்குப் பின் தன் கணவரை அம்மா பூரணமாகப் புரிந்து கொள்ளவில்லை என்றால் ஒரு சில தினமே உணர்வினால் ஈர்க்கப்பட்டு திருமணத்தால் ஒன்றிவிட்ட அவளுக்கு பார்த்தீபனை பூரணமாக அறிந்து கொள்ள எப்படிச் சாத்தியப்படும்? கையிலிருந்த பால் செம்பை... அருகில் கிடந்த முக்காலி மீது வைத்தாள்.

''நீங்க பேசுமுன் நான் கொஞ்சம் பேசலாமா...'' மெல்லிய குரலில் கேட்டாள்.

''தாராளமா பேசலாம்!'' தலையை அசைத்தான் பார்த்தீபன்.

''நீங்க பகல் சாப்பாட்டைக்கூட சரியா சாப்பிடலைன்னு சமையல்காரர் சொன்னார். கூட இருந்து கவனிச்சு பரிமாற நான் அருகில் இருக்க முடியலை. அத்தைக்கு பணி செய்யக் கற்றுக் கொடுக்க அந்த நர்ஸ் என்னை அடிக்கடி அறைக்கு கூப்பிட்டுக்

கொண்டே இருந்தாங்க — அதனால் உங்களுக்கு சாப்பாடு பரிமாறும் கடமையைக் கூட என்னால் செய்ய முடியலை மன்னிச்சுக்கோங்க. ரொம்ப நேரம் கழிச்சு வந்தா நீங்க இரவு உணவு சாப்பிடறதில்லை — வெறும் பால்தான் குடிப்பீங்கனு... கடிதத்தில் உங்க பழக்க வழக்கங்களில் சிலதை தெரிவிச்சிருந்ததாலே... கொஞ்சம் பாலை எடுத்துட்டு வந்தேன். உங்களுக்கு நேரத்துக்கு உணவு படைக்கிறதும் என் கடமைகளில் ஒண்ணுன்னுதான் வந்தேன் — அத்தை நோயாளியாகக் கீழே கிடக்கும்போது... என் மனசிலே வேறே எண்ணம் ஏதும் தோணுமா? நான் அப்படிப்பட்டதொரு பிறவியில்லை...!'' மேலே பேச முடியாது துக்கத்தில் நாத் தழுதழுத்த — கண்களில் நீர் புரள அவள் தரையைப் பார்த்தாள்.

''அம்மா என்னைத் தனியாகப் பார்த்து பேசிய போது உன்கிட்ட என்ன சொன்னாங்க தெரியுமா...?''

மவுனமாக தலையை நிமிர்த்தி அவனை ஊடுருவிப் பார்த்தாள் சாம்பவி.

''உன் விருப்பத்துக்கு நான் விட்டுக் கொடுத்ததாலே இந்தப் பெண்ணை நீ கல்யாணம் செய்துக்க முடிஞ்சது. ஆனால் இவ வந்ததுமே என்ன நடந்திருக்கு பார்த்தியா? பார்த்தீபா! நான் உயிரோட மறுபடி எழுந்து நடமாடினால் இவளை மனைவியா வச்சு வாழு. இப்படியே நான் போயிட்டா உனக்கு இவள் வேண்டாம். உன் வாழ்விலிருந்து இவளை ஒதுக்கிடு. இவள் ஜாதகத்தில் ஏதோ கோளாறு இருக்கு. இது என் வேண்டுகோள். நீ இப்ப என் விருப்பத்துக்கு விட்டுக் கொடுக்கணும்னாங்க!''

கண்களில் பெருக்கெடுத்த கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். நெஞ்சை இடித்த துயரத்தை விழுங்கிக் கொண்டு சாம்பவி துணிவாகப் பேசினாள்.

''இந்த ஜாதக சங்கதிகளை நீங்க நம்பறீங்களா...?''

''நான் நம்பலை. என் தாயின் இந்த வேண்டுகோளை நான் ஒதுக்க முடியாத குழப்பம்!''

''அத்தைக்கு இப்படி திடீர்னு உடம்புக்கு முடியாமப்

போன போதே நானும் என் மனதில் ஒரு தீர்மானம் செய்து கொண்டேன். அதை ஒரு விரதம்னு கூட சொல்லலாம். அத்தை எழுந்து முன்போல நடமாடறவரை நான் பெயரளவில் உங்க மனைவியா இந்த வீட்டில் என் கடமைகளைச் செய்து வருவேன்னு ஒரு உறுதியை எடுத்துகிட்டேன். நீங்களும் அப்படியே நினைக்கிறது பத்தி மகிழ்ச்சி. அவங்க சொன்னபடி உடம்பு குணமாகாது ஏதாவது நேர்ந்தால் நான் என் பிறந்த வீட்டுக்குப் போக சம்மதிக்கிறேன். அதுக்குப் பிறகு நீங்க சட்டப்படி செய்கிறதைச் செய்யலாம்... இப்போ பாலைக் குடிச்சுட்டு நீங்க படுத்துத் தூங்குங்க!'' என்று சொல்லிவிட்டு எழுந்தாள்.

''இன்னொரு வேண்டுகோள் — நர்ஸ் உங்ககிட்ட கொடுத்த நகைகளை நீங்க அவங்க பீரோவில் பத்திரமாக பூட்டி வச்சிருப்பீங்க — அவங்க பீரோ சாவியை எடுத்துக் கொண்டு எனக்கு வீட்டு சாவிக்கொத்தைக் கொடுத்தா உபகாரமாக இருக்கும். வீட்டை நிர்வகிக்க அது தேவைப்படுது. வேலைக்காரர்களுக்கு இளப்பமில்லாமல் இருக்கவும் அது எனக்கு அவசியம்!''

அவன் எடுத்து முக்காலி மீது வைத்த சாவிக் கொத்தை இடையில் செருகிக் கொண்டு கீழே இறங்கி வந்தவள் முன்னறையில் இருட்டில் ஒரு இருக்கையில் அமர்ந்து கொண்டதும் தாங்க முடியாது விம்மி அழுதாள்.

அவள் கண்ட கனவின் முடிவு இதுதானா என்று எண்ணி வெகு நேரம் அழுதாள்.

12

மறுநாள் காலை. எல்லோருக்கும் முன் சாம்பவி எழுந்து குளித்து மாற்றுடை அணிந்து கொண்டு தயாராகி விட்டிருந்தாள். பூஜையறை குத்து விளக்கை ஏற்றிவிட்டு,

தோட்டத்திலிருந்து சில பூக்களைத் தானே கிள்ளி வந்து தெய்வப் படங்களுக்குச் சூட்டிவிட்டு சமையலறைக்குள் புகுந்தாள். இட்டிலியை அவித்து இறக்கி அவள் சட்டினி அரைக்க முற்பட்ட போதுதான் சமையற்காரர் உள்ளே வந்தார். தாம்பாளத் தட்டையில் நெற்றியில் குங்குமம் பளிச்சிட அதன் கீழ் திருநீற்றுக் கீற்றுடன் இடுப்பில் சாவிக் கொத்துடனுமாக அவளைக் கண்டதுமே... அவரது போக்கு மாறிவிட்டது.

இனி அவள்தான் வீட்டின் எஜமானி என்ற எண்ணம் உதயமானதும், அவர் தோள் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு பற்கள் தெரிய வணக்கம் தெரிவித்தார்.

''அம்மா! நேத்தே சொல்லியிருந்தா நானும் சின்னப் பையனும் சீக்கிரம் எழுந்து சமையற்கட்டுக்கு வந்திருப்போம். பரவாயில்லேம்மா, நீங்க எதுக்கு சட்டினியை அரைக்கணும். சமையல் வேலையைக் கவனிக்க நான் இருக்கும்போது'' என்று இளித்துவிட்டுக் குழைந்தார்.

பதவி என்பதற்கு பணத்தைவிட அதிக பலமிருக்கிறதே, தனக்குள் புன்னகைத்தபடி அவள் தன் மாமியாருக்கு மட்டும் தன் கையால் ஜவ்வரிசி கஞ்சியைத் தயார் செய்து விட்டு வெளியே வந்தாள்.

''என்னம்மா! எஜமானியம்மா! காபி, பலகாரம் ஏதாச்சும் இடைக்குமா? விடிகாலையிலேயே வயித்துக்கு ஏதாச்சும் போடாட்டா எனக்கு வேலை ஓடாது. நோயாளி இன்னும் தூங்கிக் கிட்டிருப்பதாலே ஸ்பான்ஜ் பாத்... ஆகாரம் இதெல்லாம் கொஞ்சம் மெதுவா கொடுக்கலாம். அதுக்குள்ளே நீ உன் காரியங்களை முடிச்சுட்டு அந்த அறைக்கு வரலாம்'' என்றாள் கமலம்.

முதல் நாளைவிட அவளது அதிகாரக் குரலில் கடுமை குறைந்திருந்தது. பளிச்சென்று தன் முன் நின்ற அந்தப் பெண்ணும் மாமியாருக்கு ஏற்பட்ட நோயின் கடுமையை எண்ணி அதிர்ந்து போயிருக்கிறாள் பாவம் என்று கருணை சிறிதளவு அவள் மனதில் ஏற்பட்டிருந்தது.

''சாம்பவி — நீயும் காப்பி, பலகாரம் சாப்பிட்டுவிட்டு

பிறகு வந்து எனக்கு உதவலாம். முதல்லே என்னைக் கவனி —பிறகு உன் கணவரைக் கவனி... பிறகு மத்ததெல்லாம்!'' என்று முறுவலித்தாள்.

நர்ஸ் கமலாவுக்கு காப்பி, பலகாரம் தந்து உபசரித்து அவளை அறைக்குள் அனுப்பிவிட்டு பீங்கான் கெட்டிலில் காப்பியை நிரப்பி கோப்பையுடன் தட்டில் வைத்து — காலை நாளேட்டையும் கூட எடுத்துக் கொண்டு மாடிப்பக்கம் சென்றாள்.

குளித்து முடித்து வெளியே செல்ல உடுத்திக் கொண்டு தன் அறையின் முன்னால் கிடந்ததொரு சோபாவில் சிந்தனையில் மூழ்கியவனாக அமர்ந்திருந்தான் பார்த்தீபன்.

''ஸ்டீல் டம்ளரில் அம்மா காப்பியை அனுப்பி வைப்பாங்க. தொட்டால் கையைச்சுடும். எனக்குப் பிடிக்காது. அழகான போன் சைனா காப்பி கெட்டில், கோப்பைகளை வாங்கி அலமாரியில் அடுக்கி வைத்திருக்கிறேன். அவைகளை உபயோகிக்காது அம்மா ஊதுகாய் போடுகிறாங்க... நீ வந்த பிறகாவது அவைகள் உபயோகிக்கப்படும் என்று நம்புகிறேன்...'' கடிதம் ஒன்றில் அவன் எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது. அலமாரியிலிருந்த பீங்கான் கெட்டில் கோப்பையை எடுத்துக் கழுவி சுத்தப்படுத்தி அவள் விருப்பப்படி காப்பியை எடுத்து வந்திருந்தாள்.

சுமந்து வந்த தட்டை காப்பி மேஜைமீது வைத்த போது ஏற்பட்ட சிறு ஓசையில் பார்த்தீபன் விழித்துக் கொண்டான். அவளது முகத்தைக் கப்பி நின்ற சோகம் அவன் மனதை என்னவோ செய்தது — பிடிவாதம் செய்து மணந்து கொண்ட இவளிடம் ரொம்பக் கடுமையாக நடந்து கொண்டது தவறோ? ஆனாலும் முன்னுக்குப் பின் முரணாக நடக்க முடியாதே... பீங்கான் கோப்பையிலே தேவையான காப்பியை விட்டு அவனிடம் எடுத்து நீட்டியபோது... அந்தத் தங்கக் கரத்தையும் சேர்த்துப் பிடிக்க மனம் துடித்தது.

'சாம்பவி! உன் மேலே எனக்கு அதே காதல்தான் — அதே ஆசைதான். நோயாளி அம்மாவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு

மனத்தையும், கட்டிப் போட்டு வச்சிருக்கேன். சாம்பவி! என்னைக் கூட நிமிர்ந்து பார்க்க மாட்டாய் இப்போது. நேத்து நடந்து கொண்டது ரொம்பவும் தப்பு!' என்று சொல்ல வேகமாகத்தான் இருந்தது.

மவுனமாக கோப்பையை வாங்கிக் கொண்டான்.

''பத்திரிக்கையை படிச்சு முடிச்சதும் நீங்க கீழே வரலாம். அத்தை இன்னமும் தூங்கிகிட்டு இருக்காங்க. நீங்க வெளியே போறதுக்கு முன்னாடி வந்து பார்த்துட்டு போகலாம். அதுக்குள்ளே அவங்களுக்கு ஆகாரம், மருந்து எல்லாம் நானும் அந்த நர்சம்மாவும் கொடுத்து முடிச்சுடுவோம். அத்தை இன்னைன்ன நாளுக்கு இந்த விதமான பலகாரம் செய்வாங்கன்னு எனக்குத் தெரியுமாதலாலே... இன்னிக்கு இட்லி சுட்டு வச்சிருக்கேன்!''

'ராத்திரி நீ நல்லா தூங்கினியா?' கேட்க வேண்டும் போலெழுந்த கேள்வியை விழுங்கிக் கொண்டான்.

அதற்கு மேல் அவள் அங்கே நிற்கவில்லை. காலி செய்து அவன் தட்டில் கோப்பையை வைத்தவுடன் அவள் தட்டுடன் கீழே இறங்கிப் போனாள். கடிதத்தில் தான் குறிப்பிட்ட எல்லா விஷயங்களையும் அவள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறாளே?

'ஒரு தடவை எனக்குச் சொன்னால் போதும். அதை மனதிற்குள் பொதித்து வைத்துக் கொண்டு விடுவேன்' என்று எழுதியிருந்தாளே. அவன் தன் பழக்க வழக்கங்களில் குறிப்பிட்டிருந்த எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு நடந்து கொள்கிறாளே! அம்மாவுக்கு எது பிடிக்கும் பிடிக்காது, அவர்களின் பழக்க வழக்கங்கள் சிலவற்றை கடிதத்தில் குறிப்பிட்டதை அவள் மறக்கலையே!

காப்பி பலகாரம் சாப்பிட அவன் சிறிது நேரம் பொறுத்து கீழே இறங்கி வந்தான். அதற்குள் அவளும் நர்ஸ் கமலமும் மாலதத்திற்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து முடித்து விட்டிருந்தனர்.

பிள்ளை வந்து தன்னைப் பார்த்தபோது மரகதம்... கண்கள்

கலங்கி அவனைப் பார்த்தாள்.

''இந்தத் துக்கிரியைக் கட்டிக்காது வேறு யாரையாவது நீ கட்டிக் கொண்டிருந்தா எனக்கு இந்த நோய் வந்திருக்காது. ராத்திரி நான் ரெண்டுவாட்டி கண்ணை முழிச்சுப் பார்த்தேன். இவ... இந்தப் பெஞ்சியில்தான் படுத்துகிட்டிருந்தா...!'' என்று குமுறிவிட்டு மகனை மீண்டும் உறுத்துப் பார்த்தாள்.

சாம்பவி மீது அம்மாவுக்கு இருந்த வெறுப்பு இன்னமும் கூடி விட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான் பார்த்தீபன் — அவன் மனம் வேதனைப்பட்டது. நோயாளியாகிவிட்ட தன் தாயின் மீதும் அவனுக்கு அனுதாபம் பொங்கி வந்தது.

அதே சமயம் இயற்கையாக வந்த நோய்க்கு அவள் பொறுப்புப் போல தன் தாயால் வெறுக்கப்பட்ட சாம்பவி மீதும் அவனுக்கு அனுதாபம் ஏற்பட்டது. இக்கட்டான ஒரு நிலை.

''அம்மா! நீங்க சொன்னபடி நடந்து கொண்டிருக்கேன் —நடப்பேன் போதுமா — சாம்பவி பெயரளவில்தான் என் மனைவி...!'' என்று கூறிவிட்டு... மேலே பேச முடியாது கோபமும் அவமானமுமாக வெளியே வந்தான்.

சாப்பாட்டறையில் சாம்பவி அவனுக்காகக் காத்துக் கொண்டு நின்றாள். வெள்ளித் தட்டில் இட்டிலிகளைப் பரிமாறி... சாம்பாரை அவைகள் மீது ஊற்றி நெய் சிறிது வார்த்துவிட்டு மவுனமாக நின்றாள்.

தலையைக் குனிந்தபடி அவன் சாப்பிட்டு முடித்துவிட்டு... மறுபடியும் சிறிதளவு காப்பியைக் குடித்துவிட்டு... கைகழுவ..." பீங்கான் அருகில் வந்தபோது சாம்பவி... கை துடைக்கத் துவாலையுடன் தயாராகி நின்றாள்.

ஓடி ஓடி அவனது தாய் அவனுக்கு உதவிகள் செய்திருக்கிறாள் — அந்த வேலைகளை இப்போது சாம்பவி ஏற்றுக் கொண்டு விட்டிருக்கிறாள். முகம் கொடுத்து சரியாகப் பேசாத கணவனுக்கு இத்தனை பணிவிடைகள் செய்ய வேண்டும் என்று இந்தப் பெண்ணிற்கு தலைவிதியா?

[illegible]த்தவள். உங்க பணமும் ஆச்சு என்று உதறிவிட்டு பிறந்த [illegible] உடனடியாக அவள் திரும்பிவிட முடியும். 'தாயாரின் [illegible]க்குக் கட்டுப்பட்டு தாரத்தை அவமதிக்கும், அவனுக்கும் [illegible] ஆண் மகனா' என்று கேட்டு அவனை நிலைகுலையச் [illegible] முடியும். இந்த ஒரு பிடி சோற்றைத் தானே உழைத்துச் [illegible]நிறுத்துக் கொள்ள முடியும். 'கிராமத்தில் தான் [illegible]வெட்டி என்று பயப்பட வேணும் [illegible]க்கம்பக்கத்தாரைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள [illegible]ம்பாத பட்டணத்தில் திரும்பிப் போய் வாழ எனக்கு [illegible]ல்லை... ஒரு வேலையைத் தேடிக் கொள்வேன் என்று [illegible] விடமுடியும்...' ஆனாலும் எத்தனை பொறுமையாக [illegible]க்கிறாள்? இவளிடம் கடுமையாக நடந்து கொண்டது [illegible]ம்பவும் தவறு... துவாலையை வாங்கி கைகளையும்... [illegible]யையும் துடைத்துக் கொண்டு திரும்பினான்.

''தமிழ் நாளேடுகள்... வாராந்திர ஏடுகளை எல்லாம் [illegible]ன்னறையில் அடுக்கி வச்சிருக்கேன்!'' என்று கூறிவிட்டு சாம்பவி துவாலையை ஆணியில் மாட்டி விட்டு மாமியாரின் அறைக்குள் வந்தாள்.

''கொஞ்சம் இவங்களை பார்த்திட்டு இங்கேயே [illegible]ல்லுங்க... சமையற்காரர் கிட்ட இவங்க ஆகாரத் திட்டத்தை விவரமா சொல்லிவிட்டு வரேன்!'' என்று கமலம் வெளியேறி விட்டாள்.

கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்த மரகதத்தைப் பார்த்தபடி தனியே அந்த அறைக்குள் நிற்க சாம்பவிக்கு பயமாக இருந்தது; நோயாளி என்ற நிலையிலும் மாமியார் முகத்தில் வழிந்த வெறுப்பு அவள் உள்ளத்தில் பெரும் திகிலை உண்டாக்கியது.

தன் ஆசை மகனைக் காதலால் கவர்ந்து கல்யாணம் செய்து கொண்டு விட்டதை மரகதம் மன்னிக்கவே மாட்டாங்களா?

''இப்படி வா!'' என்று குழறியபடி உத்தரவிட்ட மாமியாரின் அருகே பதைக்கும் நெஞ்சோடு மெல்ல வந்து நின்றாள்.

''கையும் காலும் விழுந்து கிடக்கிறேன் நான். ஒரு நகைகூட இல்லாம என் உடம்பிலிருந்து எல்லாத்தையும் உருவி வச்சுட்டாங்க. உனக்கு அந்த வைரப்பதக்கம் தேவையா? நகை நட்டோட விதவித அலங்காரம் செய்துகிட்டு என் மகளை மயக்கவா? மாமியார் சாகக்கிடக்கிறாளேன்னு கவலையில்லாம சிங்காரமா அதை பூட்டிக்கிட்டு நிக்கிறியே வெட்கமில்லை?'' கோபத்தோடு கேட்டுவிட்டு தன் இடுப்பில் குலுங்கிய சாவி அவள் இடுப்பில் ஏறி விட்டிருப்பதை ஆத்திரத்தோடு பார்த்தாள் மரகதம்.

அப்பொழுதுதான் சாம்பவிக்கு நினைவு வந்தது. முதல்நாள் ஏற்பட்ட அந்த அமர்க்களத்தில் அவள் மனம் கசந்து போய் தான் உடுத்தியிருந்த பட்டுச்சேலை... அணிந்திருந்த நகைகள் — காதில் ஒளியிட்ட வைரக்கம்மல் அத்தனையையும் கழற்றி வைத்து விட்டிருந்தாள். தன் பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்த நூல் சேலையைத்தான் உடுத்தியிருந்தாள்.

''என்னுடைய கல்யாணப்பரிசு என்று உனக்காக நான் பொன் சரட்டில் கோர்த்த ஒரு வைரப்பதக்கத்தை வாங்கி இருக்கிறேன். என் உழைப்பால் சேகரித்த பணத்தில் வாங்கியது. அதை நீ எப்பொழுதும் அணிந்து கொண்டிருக்க வேண்டும் என்பது என் அவா...!'' என்று பார்த்தீபன் எழுதியிருந்த கடிதத்தின்படி அவள் அதை மட்டும் கழற்றவில்லை... மாமியார் கண்களில் இப்போது அது உறுத்துகிறது.

கணவனது வேண்டுகோளை ஏற்பதா — மாமியாரின் உத்தரவுப்படி நடப்பதா? உதட்டை அழுத்தமாகக் கடித்துக் கொண்டாள்.

''அத்தை! மறந்துட்டேன். இதையும் கழற்றி வச்சுடறேன். உங்க உடம்பு குணமாகிறவரை... நான் உங்களோட இந்த அறையில்தான் தூங்குவேன். ஏன்னா நர்ஸ் கமலம் இன்னும் சில நாளிலே போயிடுவாங்க. அதுக்குப் பின் நான்தானே உங்களைக் கவனிக்கணும்?''

''என் தலையெழுத்து. நீ வந்து எனக்கு சோறு போடணும்னு இருக்கு,'' — வெறுப்பாகக் கூறிவிட்டு பார்க்கப்

பிடிக்காதவள் போல கண்களை மூடிக் கொண்டாள்.

சாம்பவி தன் துயரத்தை விழுங்கிக் கொண்டு வெளியே வந்தாள். பார்த்தீபன் வெளியே கிளம்ப ஆயத்தமாக இருந்தவனிகளை திணித்துக் கொள்வதைக் கவனித்தாள்.

''நீங்க வெளியே போறதுக்கு முன்னாடி அத்தைகிட்ட சொல்லிக்கிட்டுப் போறது நல்லதில்லையா... அவங்க அறைக்குள்ளே செருப்புக் காலோட போறது சரியில்லையே!'' ஞாபகப் படுத்தினாள்.

தாயைப் பார்த்துவிட்டு விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான் பார்த்தீபன். சாம்பவியிடமும் சொல்லிக் கொண்டு போக ஆசையாகத்தான் இருந்தது. பேச வாய் இன்றி மௌனமாக அவளைப் பார்த்துவிட்டு, வாசிக்காது அவன் விட்டுப்போன நாளேடுகளை எடுத்துக் கொண்டு திரும்பினான்.

''போகும்போது வந்து குறுக்கே பேசறேன் என்பதுக்கு முன்னெச்சரிக்கைங்க. முடிஞ்சா நாளைக்கு வீட்டில் உள்ள நகைகளை எடுத்து வங்கிப் பாதுகாப்புப் பெட்டியிலே வச்சுடறது நல்லது'' என்றாள்.

நிமிர்ந்து பார்த்தான் — கழுத்தில் அந்த சரட்டைக் காணவில்லை.

''அத்தைக்கு விருப்பமில்லாததாலே அந்த சரட்டைக் கழற்றி விட்டேன். அதையும் சேர்த்து பாதுகாப்புப் பெட்டியில் வச்சுடுங்கோ. காரேஜ் கதவைத் திறந்து வச்சுட சொல்லியிருக்கேன். பத்து மணிக்கு நீங்க சாப்பிட விரும்பும் உணவு... பிளாஸ்கிலே இருக்கு... அதையும் வேலையாள் கொண்டு வந்து கொடுப்பான்...!''

அவன் விடை பெறுமுன் — அவள் விடை கொடுத்தாள். அவனது தேவைகளைப் பொறுமையோடு கவனித்து — முகம் தெரியாது அனுப்பி வைக்கும் இத்தனை ஒரு நல்ல பெண்ணை அவன் தன் வாழ்விலிருந்து ஒதுக்குவது முறையா — நியாயமா? குற்ற உணர்வுடன் வெளியேறினான்.

13

சில தினங்களில் சாம்பவி மிகவும் தேர்ந்து விட்டாள். வீட்டை நிர்வகிப்பதிலும் மாமியாருக்கு பணிவிடை செய்வதிலும் மிக்க திறமையுடையவளாகி விட்டாள்.

இரண்டு வார காலம் முடியுமுன்னதாகவே நர்ஸ் கமலாவுக்கு அந்தப் பெரிய மனிதர் வீட்டிலிருந்து அழைப்பு வந்துவிட்டது. 'பிரசவ வேதனை எடுத்து விட்டது. உடனே கையோடு கூட்டிவரச் சொன்னாங்க!' என்று காருடன் வந்த டிரைவர் கூறியதும் அவள் தன் சாமான்களை வேகமாகக் கட்டிக் கொண்டு தயாராகினாள்.

தனக்குச் சேர வேண்டிய பீஸ் தொகைகளைப் பெற்றுக் கொண்டதும் கமலா போகுமுன் அந்த வீட்டவர்களுக்குத் தன் ஆலோசனையை இனாமாக பதிலுக்கு வழங்கி விட்டுக் கிளம்பினாள்.

''அம்மா பெரியம்மா! உங்களுக்கு இந்தக் கடுமையான நோய் வந்திருப்பது பற்றி நான் வருந்துகிறேன். ஆனால் அதிலும் நீங்க கொஞ்சம் கொடுத்து வச்சவங்கதான நினைச்சுக்கோங்க. உங்க மருமக ஒரு பயிற்சி பெற்ற நர்ஸ் போல பணிவிடை செய்யக் கத்துக்கிண்டிருக்கா. இந்தக் காலத்துப் பெண்கள் பலரை நான் பார்த்திருக்கேன். இவளைப் போல பொறுமையானவளை நான் இப்பத்தான் முதல் முதலாக சந்திக்கிறேன்.

''அம்மா சாம்பவி! படுத்த படுக்கையாகி விட்டிருக்கும் நோயாளிக்குத் தொடர்ந்து பணிவிடை செய்கிறது சுலபமான வேலையில்லை. அதுவும் இவங்களை கவனிச்சுக்கிறது லேசான காரியம் இல்லை. கையும், காலும் விழுந்துட்டதாலே கொஞ்சம் எரிச்சல் படுவாங்க — அலுத்துக் கொண்டு வெறுப்பாப் பேசுவாங்க — அதையெல்லாம் நீ

பார்த்துட்டக்கூடாது!

''பார்த்தீபன் சார்! உங்களுக்குத் தாயாரும் முக்கியம் மனைவியும் முக்கியம். ரெண்டு பேரையும் சரி சமமா கவனிச்சுக்கிறது உங்க கடமை சார்... நான் வரட்டுமா?'' படபடவென்று பேசிவிட்டு காத்திருந்த காரில் புறப்பட்டுப் போய்விட்டாள் கமலா.

அதற்குப் பின் நோயாளியின் அறைக்குத் தனியே செல்வதற்குக்கூட சாம்பவிக்கு நடுக்கமாக இருந்தது!

பகலுணவிற்கு தயாரித்த கஞ்சியை எடுத்துக் கொண்டு தயக்கத்துடன் அறைக்குள் நுழைந்தாள். மரகதத்தின் தலையை மெல்ல தூக்கித் தன் மடிமீது வைத்துக் கொண்டு கஞ்சி டம்ளரை அவள் முகத்தருகே... நீட்டினாள். மரகதம் கண்களை அகல விழித்து மருமகளை மிகவும் கடுமையாகப் பார்த்தாள்.

இப்படி மிகவும் பணிவாகத் தன்னிடம் நடந்து கொள்ளும் இந்தக் கள்ளி அறையைவிட்டுப் போனதும் பார்த்தீபனிடம் எப்படிக் கொஞ்சிக் குலாவுவாள்?

இளவயதுக்காரன் பார்த்தீபன். ஆசைப்பட்டுக் கட்டிக் கொண்ட மனைவி மிகவும் அனுசரணையாகப் பேசினால்... அப்படியே சொக்கிப் போய் விடுவானே! உகும்! இவளை இங்கிருந்து ஒழித்துக்கட்ட வேண்டும். பார்த்தீபனுடன் வாழவிடக் கூடாது... மனதில் ஆத்திரம் கொந்தளிக்க...

''ஐயோ! சுடச்சுடக் கஞ்சியை வாயில் கொட்டறாளே...!'' குழறிய குரலில் கத்தினாள்.

தாயாரைப் பார்த்துப் போக கதவைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்த மகன் பதறிப் போனான்.

''என்னம்மா?'' என்று கேட்டபடி அருகில் ஓடி வந்தான்.

''தொண்டை வெந்து போச்சு — அத்தனை சூடு... சே! சே! ரொம்ப உப்பு!'' என்று முணகினாள் தாய்.

சாம்பவியின் கையிலிருந்த டம்ளரை வேகமாக வாங்கிக் கொண்டான் பார்த்தீபன். கஞ்சி இளம் சூடாகப் பருகும் நிலையில்தான் இருந்தது. ஒரு சிறிதளவு வாயில்விட்டுக்

கொண்டு பார்த்தான். தேவைப்பட்ட உப்புக்கு மேல் அதிகமில்லை.

''சரியாத்தானே இருக்கு... நான் கொடுக்கிறேன். குடியுங்கோ!'' என்றபடி சாம்பவியை அப்பால் போகச் சொல்லிவிட்டு தன் மடியில் தாயின் தலையை நிமிர்த்து வைத்துக் கொண்டான் — கஞ்சியைச் சாப்பிடச் சொல்லி மிகவும் உபசரித்தான்.

மகன் தன்னைப் பற்றி மிகவும் அக்கறை எடுத்துக் கொள்கிறான் — என்ற நினைவில் அமைதியடைந்த மரகதம், வேகமாகக் கஞ்சியையும் — தொடர்ந்து அவன் கொடுத்த மருந்துகளையும் சாப்பிட்டாள் — சிறிது பொழுதில் மருந்தின் மயக்கத்தில் உறங்கிப் போனாள்.

வெகுநேரம் சென்றபின் சாப்பிட வந்து உட்கார்ந்தான் பார்த்தீபன். மவுனமாக சாப்பாட்டை பரிமாறிய மனைவியை மெல்ல நிமிர்ந்து பார்த்தான். முகத்தில் படிந்திருந்த துயரத்தைக் கண்டு மனம் துடுக்குற்றது.

ஆட்கள் முன்னிலையில் அவன் எதுவும் பேச விரும்பவில்லை.

அன்று இரவு வழக்கம்போல சாப்பாட்டிற்குப் பின் தன் அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டு நாளேட்டைப் புரட்டிக் கொண்டிருந்தான். மாடிப்படிகளை ஒட்டியிருந்த வராந்தாவில் காலடி ஓசை கேட்டதுமே அவனது நெஞ்சம் பரபரப்பில் துடித்தது.

கையுடன் கொண்டு வந்த பால் செம்பையும், டம்ளரையும் முக்காலி மீது வைத்துவிட்டு அவள் திரும்பினாள்.

''கொஞ்சம் இப்படி வர முடியுமா?'' தணிவான குரலில் அவன் கேட்டதை மறுக்காது எதிரே வந்து நின்றாள்.

நாள் முழுவதும் உழைத்து சோர்ந்து விட்டிருந்ததை அவள் முகம் சொல்லியது. நெற்றி மீது புரண்ட கூந்தலை ஒதுக்கிவிட்டு — முகத்திலே பூத்து நின்ற வியர்வையைத் தன் கைக்குட்டையால் துடைத்துவிட்டு...

''சாம்பவி!... வீட்டு வேலைகள் ரொம்ப பளுவாக இருக்கா...?'' கனிவுடன் கேட்க ஆசையாகத் தானிருந்தது.

அதற்குப் பதில் அவன் பேச்சை மாற்றினான். ''அம்மா தூங்கிட்டுத்தானே இருக்காங்க? அவுங்க உனக்கு ரொம்ப தொந்தரவு தராங்க இல்லையா?''

''நோயால் உபாதைப்படும் போது யாரும் அப்படித்தான் தூங்கிக்குவாங்க. அத்தை நல்லா தூங்கிக்கிட்டு இருக்காங்க! அதுக்குள்ளே உங்களை கவனிச்சிட்டுப் போக வந்தேன்.''

''அவசரமாப் போகணுமா, கொஞ்சம் உட்கார முடியாதா?''

''சமையல் ஆட்கள் சாப்பிடக் காத்திருப்பாங்க. அதனாலே நீங்க சொல்ல வந்ததை சுருக்கமா சொன்னா நல்லது!'' என்றபடி எதிரில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

தாம்பத்திய வாழ்வு என்பது ஒரு சிக்கலான அமைப்பு அதை மிகவும் எச்சரிக்கையுடன்தான் அணுக வேண்டும்... ஆரம்ப எடுப்பிலேயே அவளது மனம் நோகும்படி பேசி விட்டான்... இப்போது பல்லை இளித்துக் கொண்டு குழைந்தால்?

மேஜையின் இழுப்பறையைத் திறந்து ஒரு பொட்டலத்தை எடுத்தான்.

''நகரத்திலே நம்ப மருந்துக் கடைக்குப் பக்கத்திலே ஆனந்தா ஓட்டல்னு ஒரு பலகாரக் கடை இருக்கு. அவங்க தயாரிக்கும் பலகாரங்கள் ரொம்ப பிரசித்தி பெற்றது. உனக்காக தான் கொஞ்சம் பாதாம் அல்வா வாங்கிட்டு வந்தேன். சாப்பிடு. அப்படியே பூக்கடையிலிருந்து நாலுசரம் மகிழம்பூவை வாங்கிட்டு வந்தேன். அதோட வாசனை எனக்குப் பிடிக்கும். தலையில் வச்சுக்கோ...!'' என்று பொட்டலத்தை நீட்டினான்.

''மிக்க நன்றி... இரண்டையும் வாக்கிக்கிறேன். ஆனால் அத்தை உடம்பு குணமாகிறவரை நான் இனிப்பு சாப்பிடறதில்லையின்னு விரதம். பரவாயில்லை. இதை நம்ப சமையல் ஆட்களுக்குத் தந்தால் ரொம்ப சந்தோஷமா

சாப்பிடுவாங்க. நம்ப தோட்டத்திலே நிறைய மல்லிகை பூக்கிறது. அத்தனையையும் பறிச்சு தொடுத்து பூஜையறை படங்களுக்கு மாலையா போடுகிறேன்!''

''தலையில் பூ வச்சுக்கிறதில்லையின்னுகூட ஒரு விரதமா?''

''ஆமாம்!'' என்று தலையை அசைத்துவிட்டு எழுந்தாள். ''எனக்குன்னு வாங்கிகிட்டு வந்ததை சுவாமி படங்களுக்கு போடறது தப்பு. என் அலமாரிக்குள்ளே துணிகள் அடுக்கு மேலே பத்திரமா வச்சுக்கிறேன். இதுகளையெல்லாம் இனிமேலே நீங்க சிரமப்பட்டு வாங்கிக் கொண்டு வரதிலே அர்த்தமில்லே...!'' மெல்லிய குரலில் கூறிவிட்டு எழுந்தாள்.

'உன் மனதைப் புண்ணாக்கிவிட்டது தப்புதான். மன்னிக்க மாட்டியா சாம்பவி!' என்று அவள் பின்னால் எழுந்து ஓடி வழியை மறித்து கெஞ்சி, கொஞ்சி சமாதானம் செய்ய மனம் துடியாகத் துடித்தது.

ஆனால் அவனும் தன் தாய்க்கு வாக்குக் கொடுத்திருக்கிறானே? அத்தனை வைராக்கியமாக சாம்பவி இருக்கும் போது அவன் மட்டும் தன் உணர்வுகளைப் பலவீனமாக்கிக் கொள்ள இயலுமா? வெட்கமும், கோபமும் உள்ளத்தை உதைத்தன. மவுனமாக நாளேட்டை கையில் எடுத்துக் கொண்டு புரட்டினான். வராந்தாவின் முழு நீளத்திலும் அவளது கால் எழுப்பிய ஓசையை உற்றுக் கேட்ட வண்ணம் பெருமூச்சுடன் அசைவற்று உட்கார்ந்திருந்தான். கீழே இறங்கிச் சென்ற சாம்பவி வேலையாட்களுக்குச் சாப்பாடு எடுத்துக் கொடுத்து விட்டு அத்துடன் அல்வா பொட்டலத்தையும் வைத்தாள்.

''இன்னிக்கு என்ன விசேஷம் அம்மா?'' பொட்டலத்தை ஆவலுடன் பிரித்த சமையற்காரர் கேட்டார். அவளுக்கு மிக்க வேதனையாக இருந்தது.

''என் தாயாரின் பிறந்த நாள். அத்தைக்கு உடம்புக்கு முடியலை. கடையிலிருந்து ஐயா கொஞ்சம் இனிப்பு வாங்கிட்டு வந்தார். எங்கம்மா நல்லா இருக்கணும்னு நினைக்க

இருந்தபோது...!'' வறட்சியாக முறுவலித்தாள்.

பூச்சரத்தை வாழை இலை சுருளுக்குள்ளிருந்து எடுத்தபோது அவள் கண்களில் நீர் புரண்டது.

பார்த்தீபன் அவளை மிகவும் நேசிக்கிறார் — அவளும் அவரை ஆழமாக நேசிக்கிறாள்... ஆனால் இருவரும் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு இயற்கையை ஒட்டி வாழ முடியாத ஒரு சூழ்நிலை... அவள் சொன்ன பதிலைக் கேட்டு அவரது முகம் எப்படி வாடிப் போனது? முதல்நாள் இரவு அவளிடம் கடுமையாகப் பேசி விட்டதற்கு மிகவும் வருந்தி மன்னிப்புக் கேட்கும் முறையில்தான்... இனிப்பையும், மலரையும் காணிக்கையாகத் தருகிறார்.

அதற்காக அவள் தான் மேற்கொண்ட சவாலை சட்டென முடிக்க முடியுமா?

துயரத்தை அடக்கிக் கொண்டு விரல்கள் நடுங்க அந்த பூச்சரத்தை தன் பீரோவில் அடுக்காக வைத்திருந்த சேலைகளின் மீது வைத்தாள்.

பழங்காலத்தில் மணமக்களை வாழ்த்தும்போது மகிழ் போல இனித்திருங்கள் என்று வாழ்த்துவார்களாம் மகிழ மலர் வாட மணம் அதிகமாகும்... என்பது போல மணமக்களும் நாளாக வயதாக வயோதிகத்தை எட்டும் போதும் அன்பில் பெருகி இணைந்திருக்க வேண்டும் என்பது பொருள். அந்த பூச்சரம் வாடி... பீரோவுக்குள் மணத்தைப் பரப்பிக் கொண்டிருப்பது போல அவளது அன்பும் துயர சம்பவத்தில் வாடினாலும்... முடிவில் மணம் பெறட்டும்...

கன்னத்தில் கோடிட்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மற்ற அலுவல்களைக் கவனிக்கலானாள்.

சில தினங்களுக்குப் பின் — பகல் உணவுக்கு வீட்டுக்கு வந்த பார்த்தீபன் அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். கையெழுத்து அவளுடைய தம்பி கார்த்திக்கினுடையது. ஆனால் பார்த்தீபனது முகவரிக்கு கடிதம் எழுதப்பட்டிருந்தது.

''உங்களுக்கு என் தம்பி எழுதியிருக்கான் — இதை நான்

படிப்பது முறையா...?'' தயங்கினாள்.

''உன் தம்பி எனக்கும் எழுதியதாக நினைச்சுட்டு நீ படிக்கலாம்!'' லேசாகச் சிரித்தான்.

மெல்ல உறையினின்று கடிதத்தை எடுத்துப் படித்தாள்.

அன்புள்ள அத்தானுக்கு வணக்கம் பல. அக்கா அனுப்பல பி.ஏ. முடித்துவிட்டு வீட்டிலேதான் இருக்கிறாங்க, சமீபத்தில் அவங்களை பெண் பார்க்க வந்த வரன் வீட்டவர்கள் வரதட்சணையாக ரூபாய் பத்தாயிரம் கேட்கிறாங்க. அத்தனைக்கு அப்பாவுக்கு வசதி இல்லை. அக்காவின் திருமணத்திற்கு நீங்கள் கடனாகக் கொஞ்சம் பணம் கொடுத்து உதவ முடியுமான்னு கேட்கத்தான் இதை அவசரமா எழுதுகிறேன். தங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்
அன்புள்ள கார்த்திக்.

அவமானத்தில் உடல் முழுவதும் ஒடுங்க — நெஞ்சு பதற உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

இந்தக் கடிதத்தைக் கார்த்திக் தானே எழுதினானா? அம்மாவின் தூண்டுதலில் எழுதினானா? அப்பாவுக்குத் தெரிந்தால் வெட்கத்தில் குன்றிப் போவாரே. அம்மாவும் அப்பாவை மீறி எதுவும் செய்யமாட்டங்களே? கார்த்திக் வீட்டின் கடைசிப் பிள்ளை — பிளஸ் டூ படிக்கிற பொடிப்பயல்... ஆனாலும் இத்தனை அதிகப்பிரசங்கித்தனம் ஆகாது.

''என்ன யோசிக்கிறே? நாம உதவி செய்கிறதுதானே நியாயம்!'' பார்த்தீபன் கேட்டபோது முகம் சிவந்து போனாள்.

''இந்தக் கடிதத்துக்கு நான் பதில்போட விரும்புகிறேன் தடையில்லையே?'' கேட்டபடி உள்ளே சென்று விட்டாள்.

'என் வாழ்க்கையின் முடிவே நிச்சயமில்லாத நிலையில் இருக்கும்போது என் சகோதரிக்கு வாழ்வளிக்க விரும்பறதைக் கேட்க வேடிக்கையாகத்தானிருக்கு. கார்த்திக் ஒரு மக்குப் பையன் — பெரியவங்களை கேட்காமல் எத்தனை ஒரு தவறு

செய்துவிட்டான். கொண்டான் கொடுத்தான் முன்னிலையில் [illegible] வீட்டின் வறுமை நிலை இப்படியா கடை விரிக்கப்பட வேண்டும்? கடவுளே? — அந்த வீட்டில் அவளது நிலை இன்னும் கீழே தாழ்ந்துவிடுமே? வேதனையும், அவமானமும் தாங்க முடியாது புழுங்கினாள்.

14

டாக்டர் வைத்தியலிங்கம் இருமலும், காய்ச்சலுமாகப் படுத்து விட்டார். அந்த சில நாட்களில் மரகதத்தை கவனிக்க அவரது நண்பர் டாக்டர் நரசிங்கம் வந்து போனார். [illegible]ருக்கேற்ப ஆள் ஒரு சிங்கமாகத் தொழிலின் கவுரவத்தைத் தான் மீது சுமந்தபடி — நோயாளியைப் பரிசோதித்து [illegible]சனைகளை வழங்கிவிட்டு மிகவும் அமுத்தலாக அடுத்த நோயாளியைக் கவனிக்கப் போய்க் கொண்டிருந்தார்.

ஆனால் வைத்தியலிங்கம் அந்தக் குடும்பத்தின் வைத்தியர் என்பதுடன் பார்த்தீபனின் தந்தைக்கு நெருங்கிய நண்பராகப் பழகியவர். ஓரளவு மரகதத்தின் குண விசேஷங்களைப் புரிந்து கொண்டார்.

அன்று காலை அவர் அந்த வீட்டுக்கு வந்தபோது நோயாளியின் அறைக்குள் புகுந்தவர் அயர்ந்து போய் நின்றார். தில் சுமலாவின் மேற்பார்வையிலிருந்த போது அந்த அறை அத்தனை சுத்தமாக இருக்கவில்லை. படிக்கக் கொண்டு வந்த புத்தகத்தை அவள் அசட்டையாக மேஜை மீது போட்டு வைத்திருப்பாள். கை துடைக்கும் துவாலையைக் கட்டிலின் தலை மாட்டில் தொங்க விட்டிருப்பாள்.

ஆனால் சாம்பவியின் கவனிப்பில் அந்த அறை முற்றிலும் மாறி விட்டிருந்தது. அந்தந்தப் பொருள்கள் இருக்க வேண்டிய இடத்தில் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. அழுக்காகி விட்ட பழுப்பு வண்ண ஜன்னல் திரைகள் மாற்றப்பட்டு பச்சை

வண்ணத்தில் பளிச்சென்று தொங்கிக் கொண்டிருந்தன. தரையை சுத்தமாக மருந்து நீரால் கழுவித் துடைத்து வைக்கப்பட்டிருந்ததை அறைக்குள்ளே லேசாக பரவி நின்ற மருந்தின் நெடி அறிவுறுத்தியது.

படுக்கை பக்கத்திலே இருந்து மேஜை மீது வேளைக்குத் தரவேண்டிய மருந்துகள் வகை பிரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. நோயாளி மரகதம்மாள் நன்றாகத் துடைக்கப்பட்டு சுத்தமான வெள்ளைப் புடவையில் வெளேரென்ற படுக்கை விரிப்பின் மீது கிடத்தப்பட்டிருந்தாள். கட்டிலின் காலடியில் தொங்கிய ஒரு அட்டையில் நோயாளியின் உடல் நிலை விவரம் - அன்றாடம் தரவேண்டிய மருந்துகள் பற்றிய குறிப்புகள் - ஆகாரம் முதலியன முத்துப் போன்ற கையெழுத்தில் காணப்பட்டதை மிகவும் ஆவலுடன் படித்துப் பார்த்தார்.

அந்த அறையில் இன்னும் ஒன்று மட்டும் பாக்கியாக இருந்தது. அறை நடுவே கிடந்த முக்காலி மீது ஒரு பூச்சாடியில் மலர்க்கொத்தை சொருகி வைத்து விட்டிருந்தால்... அது ஒரு பிரபல மருத்துவமனையின் தனி அறையின் தோற்றத்தைப் பெற்று விட்டிருக்குமே... என்று எண்ணி வியப்புடன் நின்று கொண்டிருந்தார். காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பியவரின் வியப்பு கூடியது. அன்று அலர்ந்த மலர்போல சாம்பவி கஞ்சியில் மொடத்த ரல வண்ண வாயில் சேலையில் அறைக்குள்ளே வந்து நின்றாள்.

''தோட்டத்திலிருந்து கொஞ்சம் பூப்புறிச்சு வந்து வெண்கலப் பூச்சாடியில் சொருகி இங்கே வைக்கப் பிரியப்பட்டேன். ஆனால் நோயாளியாகப் படுத்திருக்கும் அத்தைக்கு ஒரு சமயம் பிடிக்காதுன்னு நினைச்சு அதைச் செய்யலை.'' மிக மெல்லிய குரலில் அவருக்கு மட்டும் கேட்கும்படி சாம்பவி கூறியபோது அவர் திடுக்கிட்டுப் போனார். அவர் நினைத்ததை சட்டென்று உணர்ந்து கொண்டு அவள் பதில் சொல்லி விட்டாளே? சாம்பவி ஒரு சாதாரணப் பெண் அல்ல, ரொம்பவே புத்திசாலி.

மரகதம்மாளை நீண்ட நேரம் பரிசோதித்து விட்டு, திருப்தியுடன் வெளியே வந்தார். கை கழுவும் பீங்கான் அருகே ஒரு துவாலையுடன் தயாராக நின்று கொண்டிருந்தாள்.

''பிரபல மருத்துவமனையில் கூட மரகதம்மாளுக்கு இத்தனை பணிவிடை கிடைச்சிருக்காது. நீ ரொம்பவும் அன்பாலே உன் மாமியாரைக் கவனிச்சிக்கிறே — பார்க்க சந்தோஷமாயிருக்கு...!''

''நன்றி டாக்டர்! நீங்க இன்னிக்கு இந்த நேரம் வருவீங்கன்னு என் கணவருக்குத் தெரியாது. நீங்க வருவது தெரிஞ்சிருந்தால் உங்ககிட்ட நேரிடையா எல்லாத்தையும் சொல்லி தெரிஞ்சுக்கக் காத்திருப்பார். சித்த முன்னதான் மருந்துக் கடையைத் திறக்கப் புறப்பட்டுப் போனார். அவர் வந்தால் நான் சொல்றது''

''மரகதம்மாள் உடல் நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதைக் கண்டு டாக்டர் மிகவும் ஆச்சரியமடைந்தார். பூரண குணம் அடையும் அறிகுறிகள் தெரிகிறதுன்னு திருப்தியாயிருக்கார்னு சொல்றது?''

''அப்படியா! அத்தை விரைவில் குணமடைஞ்சுடுவாங்களா?''

''ரொம்ப விரைவில்னு சொல்ல மாட்டேன். நாம எதிர்பார்த்த அபாய கட்டம் தாண்டிவிட்டது. பேச்சில் கூட கொஞ்சம் தெளிவு தெரிகிறது. அதனாலே நல்லா குணமடைஞ்சுடுவாங்கன்னு எனக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கு!''

கைகளைக் கழுவித் துடைத்துக் கொண்டு சாப்பாட்டு அறை மேஜையருகே வந்தார். அங்கே தயாராகத் தமக்கு ஒரு வெள்ளி டம்ளரில் சூடான காப்பி காத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

''நோயாளிகளின் வீட்டில் நான் சாதாரணமாக எதுவும் சாப்பிடறதில்லை. அப்படி ஒரு கொள்கை. ஆனால் இந்த வீட்டின் நண்பன் என்ற நிலையில் நெருங்கிப் பழகுவதால்

மரகதம்மா ஏதாவது கொடுத்து உபசரித்தால் எப்பொழுதும் ஏற்பது வழக்கம். நீ கொடுப்பதை என்னால் மறுக்கவே முடியாது... ஏன்னா?'' என்று சொல்லிவிட்டு காப்பியை எடுத்துப் பருகினார்.

பதிலுக்கு அவர் முகத்தை ஆவலுடன் பார்த்தாள் சாம்பவி.

''சொந்த மகளைப் போல நான் உன்னைக் கருதுவதால் நீ வற்புறுத்திக் கொடுப்பதை மறுக்க முடியாதே! ஆமாம்! இங்கே சந்தோஷமாக இருக்கிறாயா அம்மா?''

கனிவான அவரது பார்வையும்... அன்பான விசாரிப்பும் அவளைக் கண்கலங்கச் செய்துவிட்டன.

''தேவைகள் எதுக்கும் குறைவில்லாமல் இருக்கிறேன் டாக்டர்.'' தரையைப் பார்த்து பதிலளித்த அவளது குரல் கம்மியது.

''வயிறு நிறைய சாப்பாடும் உடுத்த துணியும் கிடைத்துட்டா மட்டும் ஒருவரின் தேவை பூர்த்தியாகி விடாது அம்மா. உள்ளத்திலே நிறைவும் வேண்டும். உன் முகத்தைப் பார்த்தா அது இல்லேன்னு தோணுது. மரகதம்மாளைப் பத்தி எனக்குத் தெரியும். நோயாளியாகி விட்டதால் இன்னமும் சற்றுக் கடுமையாக இருக்கக்கூடும். உன் கணவன் உன்னிடம் அன்பாக நடந்து கொள்கிறாரா? அதுதான் மிகவும் முக்கியம்!''

அவர்கள் இடையே ஏற்பட்டிருக்கும் அந்த ஒப்பந்தத்தைப் பற்றி அவள் எப்படி அவரிடம் கூற முடியும்? பெற்ற தாயிடம் சொல்ல முடியாத அந்தரங்க சங்கதியாயிற்றே?

''மிகவும் அன்பாகத்தான் நடந்துக்கிறார்!''

''பின்னே ஏன் இப்படிக் கேட்டதும் உன் கண்கள் கலங்கிட்டது?''

''என் பிறந்த வீட்டை நினைச்சுக்கிறேன். மனம் தவிக்கிறது!''

''கல்யாணத்திற்குப் பிறகு பிறந்த வீட்டை நினைத்து வருந்துவது தவறு இல்லையா? உனக்கு இங்கே சவுகர்யத்தில் ஏதும் குறைச்சல் இல்லையே?''

''டாக்டர் என்னைவிட நீங்க வயதிலும் — அறிவிலும் அனுபவத்திலும் பெரியவங்க — ஆனால் ஒரு பெண் என்கிற நிலையில் நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்க வேண்டுகிறேன். நான் மிகவும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள். ஒண்டுக் குடித்தனத்தில் வாழ்ந்தவள். காலை வேளையில் எல்லோருக்கும் டிபன் காபி தரமுடியாத நாட்களில் தான் எங்களுக்கு மோர்விட்ட பழைய சோறும் உப்பிட்ட தயிர்த்தங்காய் ஊறுகாயும் போடுவாங்க. தங்கை தம்பிகளுடன் சேர்ந்து தரையில் உட்கார்ந்து தையல் இலையில் அம்மா போட்ட சோற்றை அள்ளிச் சாப்பிடும் போது... அமிர்தம் போல இருக்கும். ஏன் தெரியுமா? ஒரு குடும்பத்தின் அரவணைப்பில் இருக்கும் உணர்வில் கஞ்சி குடித்தாலும் அது இனிக்கும்... அவங்களையெல்லாம் நினைச்சு...!'' மேலே பேச முடியாது தவித்தாள்.

'புரிகிறது! பிறந்த வீட்டு நினைவு உன்னை மிகவும் பாதிக்கிறது. ஆனால் உன் மாமியாரை இந்த நிலையில் நீ விட்டுவிட்டுப் பிறந்தகம் போக நினைப்பது தவறு. அவங்க கணவனைந்து எழுந்து நடமாட சில மாதங்களாகும். அட! சொல்லிக் கொண்டு போனேனே... நேற்று அலமேலு அம்மாவைப் பார்த்தேன். அவங்க உடல் நிலை பரவாயில்லை. தன் தேவைகளை ஓரளவு தானே கவனித்துக் கொள்ள முடிகிறது. அவர்கள் என்னிடம் பேசிய போது உன்னைப் பார்க்கப் பரிதாபப்படுவதை அறிந்தேன்.'

''...ஒரு காரியம் செய்யேன். உன் கணவரிடம் உத்தரவு வாங்கிட்டு உன் மாமியாரை சிறிதுநேரம் வேலைக்காரி பார்த்துக் கொள்ள ஏற்பாடு செய்துவிட்டு ஒரு நடைபோய் உன் பிறியம்மாவைப் பார்த்துவிட்டு வா. உனக்குப் போன நிம்மதி கிடைக்கும். அவங்களுக்கும் உன்னைப் பார்த்து மன ஆறுதலடையும். அவங்க என்ன பட்டணத்திலா இருக்காங்க. அந்த தெருவிலே வசிக்கிறாங்க. தோட்டத்துப் பக்கமா ஆற்றங்கரை ஓரமாக நடந்தால் வெகு விரைவில் அவங்க வீட்டுக்குப் போய்விடலாம்!''

பொங்கி வந்த கண்ணீரை சாம்பவி கட்டுப்படுத்திக்

கொண்டாள். சில நாட்களாக அவள் மனதிலும் அப்படி ஒரு ஆசை ஏற்பட்டிருந்தது. புக்ககம் ஒரு சிறையைப் போல எங்குமே போக முடியாது அவளது சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டு விட்டதாக உள்ளூர ஏங்கினாள்.

''அவங்களை ஒருமுறை போய் பார்க்க முயலுகிறேன் டாக்டர்... உங்க யோசனைக்கு நன்றி...!'' என்றாள் சுருக்கமாக.

பின்னர் நோயாளிக்கு அவள் செய்ய வேண்டிய பணி விடைகளைப் பற்றி விரிவாகக் கூறிவிட்டு டாக்டர் வைத்தியலிங்கம் விடைபெற்றுக் கொண்டார்.

அவர் சென்ற பின் சாம்பவிக்கு வேலையே ஓடவில்லை. பெரியம்மா அலமேலுவைப் பார்த்துப் பேசினால் ஒழிய மனம் அமைதியடையாது என்ற நினைப்பில் பரபரத்துக் கொண்டிருந்தாள்.

பகல் உணவுக்கு வந்த பார்த்தீபன் அவளது வேண்டுகோளை மறுக்கவில்லை.

''காரில் கொண்டு விடட்டுமா? அல்லது நம் வீட்டு வில் வண்டியில் போய்விட்டு வருகிறாயா...?'' மிகவும் அன்புடன் கேட்டான்.

''வாய்க்கால் கரை ஓரமாக கால் நடையாகப் போய் வரலாம்னு நினைக்கிறேன். தடையில்லையே...?'' கேட்டாள்.

''துணைக்கு வீட்டு வேலைக்காரிகளில் யாரையாவது கூட்டிக் கொண்டு போவது நல்லது...!'' என்றான் பொதுவாக.

மரகதம்மாள் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பிடித்தமான வேலைக்காரி பொன்னியை காவலுக்கு வைத்துவிட்டு வீடு கூட்டும் கத்தாயியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

தோட்டத்துக் கதவு மெல்லத் தட்டப்படும் ஓசை கேட்டு முத்துநாகம் ஓடிவந்து திறந்தாள். அவளுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. ''அம்மா! உங்க மக வந்திருக்கு!'' என்று உற்சாகத்துடன் கூச்சலிட்டாள்.

வாழை இலையைப் பரப்பிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்த

அலமேலு ஆவலுடன் எழுந்து வந்தாள்.

''என்னம்மா இப்படி புழக்கடைப் பக்கமாக வந்திருக்கே... தாத்தா வந்தே இந்த வெய்யிலில்?''

''அவருக்குத் தெரிஞ்சுதானே வந்தே?'' படபடவென்று விசாரித்தாள்.

''அவர் உத்தரவு கொடுத்ததாலேதான் வந்திருக்கேன். பெரியம்மா உங்களைப் பார்த்துப் பேசி யுகம்போல இருக்கு. எப்படியிருக்கீங்க... என்னை நினைக்கிறீங்களா பெரியம்மா. தான் உங்களை நினைக்காத நேரமே கிடையாது பெரியம்மா!'' என்று குழைந்து கொண்டு உணர்ச்சிவசப்பட்டு... ஓடி வந்து அலமேலுவை மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

''அட பைத்தியமே! நான் அடுத்த தெருவில் இருக்கிறேன். என்னவோ உன்னை விட்டுட்டு அமெரிக்காவுக்குப் போயிட்டாப்பல... சே! எதுக்கு அழுகிறே... சாப்பிடலை போல இருக்கே... வா உள்ளே. உனக்குப் பிடிச்ச காரக்குழம்பு செய்திருக்கேன்...!'' என்று அவளை சமாதானப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்றாள்.

''பெரியம்மா! என்ன இருந்தாலும் உங்க கைப்பக்குவத்திற்கே தனி ருசி... ரொம்ப நல்லா இருக்கு பெரியம்மா...!'' சாதத்தை குழம்புடன் குழைத்து ருசித்துச் சாப்பிட்டாள். தன்னுடைய பிறந்த வீட்டிற்குத் திரும்பி விட்டது போன்றதொரு மனநிறைவில்... அந்த சிறிது நேரம், தன் வாழ்வில் ஏற்பட்ட ஏமாற்றத்தை மறந்து... நிம்மதியாக இருந்தாள்.

மரகதம்மாள்... உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டாள். அருகில் நின்ற பொன்னியைக் கண்டு அவள் முகம் சுருங்கியது.

''சாம்பவியைக் கூப்பிடு. தலையணையைக் கொஞ்சம் உயர்த்தி வைக்கச் சொல்லணும்!'' என்றாள்.

''அவங்க இங்கே இல்லை. என்னைப் பார்த்துக்க வச்சுட்டு... காத்தாயியோட அவங்க பெரியம்மா வீட்டுக்குட் போயிருக்காங்க...!''

மரகதம் கோபத்திலே முகம் சிவந்து போனாள்.

என்ன துணிச்சல் இவளுக்கு? கையும், காலும் வராமல் நான் கிடக்கும்போது பெரியம்மாவைப் பார்க்க ஓடியிருக்கிறாளோ? இதைப்பற்றி பார்த்தீபனிடம் பேசிக் கண்டிக்க வேண்டும்.

''யாரைக் கேட்டுக்கிட்டுப் போனாளாம்...?'' முனகினாள் சீற்றத்துடன்.

''ஐயாகிட்ட பேசிகிட்டிருந்தாங்க — அவங்கதான் காத்தாயியை துணையாக அழைச்சிட்டு போகச் சொல்லியிருப்பாங்க...''

''மரகதம்மாள் முகம் ரத்தமாகச் சிவந்து போனது.

''வரட்டும் அவள்!'' உள்ளூரக் கருவிக் கொண்டு காயமடைந்த பெண் புலிபோல காத்துக் கிடந்தாள்.

15

பார்த்தீபனுக்குத் தன் மனைவியிடம் தனியாகச் சிறிதுநேரம் நிம்மதியாகப் பேசப் பொழுது இருக்கவில்லை. மரகதம்மாள் நோயாளியாகப் படுத்துவிட்ட பின்பு வீட்டுப் பொறுப்பு அவனுக்கு அதிகமாகி விட்டிருந்தது. உணவு நேரத்தின் போதும் தினசரி சாம்பவி இரவில் பால் செம்பைக் கொணர்ந்து வைக்கும்போது மட்டும் அவனால் சில வார்த்தைகள் பேச முடிந்தது.

அன்று இரவு அவன் தன் அறைக்குள் மாலை நாளேட்டின் மீது கண்களும் வராந்தாவில் ஒலிக்கப் போகும் காலடிகள் மீது காதுகளுமாகக் காத்திருந்தாள்.

மாடிப்படிகளைக் கடந்து ஓசைப்படாது மெல்ல நடந்து அறைக்குள் வந்து நின்ற சாம்பவியைக் கண்டு திடுக்கிட்டுப் போனான். கூட வந்து பரிமாற சமையல் ஆள் உதவிக்

கொண்டிருந்ததால் அவன் சாப்பாட்டின் போது எதுவும் பேச முடியவில்லை. மனதிலிருந்த பல சங்கதிகளை அவள் முன் கொட்டிவிட அவசரப்படுகிறவன் போலப் பத்திரிக்கையைக் கீழே வைத்துவிட்டுப் பரபரப்புடன் அவன் எழுந்ததை அவள் கவனித்தாள்.

மவுனமாக செம்பை முக்காலி மீது வைத்துவிட்டுத் திரும்பியபோது ''சாம்பவி! கொஞ்சம் உட்கார். முக்கியமானதொரு சங்கதியை உன்னோடு பேச வேண்டும்!'' என்று மிகத் தாழ்வான குரலில் குழைந்து வேண்டிக் கொண்டான்.

அவன் என்ன பேசப் போகிறான் என்பது அவளுக்குத் தெரியும். தாயைப் பார்த்துவர அன்று இரவு அறைக்குள் வந்தவன் பேயறைந்தது போன்ற வெளுத்த முகத்துடன் வெளியே வந்ததை அவள் பார்த்து விட்டிருந்தாள். எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''நீ வெளியே போய் விட்டதைப் பற்றி அம்மாவுக்கு ரொம்பக் கோபம்!'' என்று கூறி விட்டுப் படுக்கையின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டான்.

''நீங்கள் உத்தரவு கொடுத்த பின்புதானே வெளியே போய் வந்தேன்! உங்கள் தாயாரை நான் தனியே தவிக்க விட்டுப் போகவில்லையே? துணைக்கு அவர்களுக்கு மிகவும் நம்பிக்கையான வேலைக்காரியை விட்டுவிட்டுத்தானே போய் வந்தேன். அப்படியும் வெகு நேரம் வெளியில் தங்கிவிட வில்லையே என்று சொல்லுவாய். உண்மைதான். நான்தான் உன்னைப் போக அனுமதித்தேன். அம்மாவுக்கு அது தெரிக்கவில்லை!''

''இனிமேல் நான் எங்கும் போக மாட்டேன். கவலைப் படாதீங்க. நடந்ததுக்கு வருத்தப் படாதீங்க... தவறும் என்னுடையது...!'' என்று மெல்லியகுரலில் பதிலளித்தாள்.

''உங்கள் நிலைமை எனக்குப் புரிகிறது. பாவம் சாம்பவி, நிர்பந்தித்துக் கல்யாணம் செய்துகொண்டு இத்தனை பெரிய

வீட்டில் ஒரு கைதியாக அடைத்து வைத்திருக்கிறோம். ஒரு உயர் மட்டத்து வேலைக்காரியாக உழல்கிறாள். அதைத் தவிர வேறு என்ன சுகத்தைக் கண்டாள் என்று மனைவி மேல் அனுதாபம். அதே சமயம் அம்மாவை நினைத்துக் கவலைப்படுகிறீங்க. எத்தனை கடுமையான குணமுடையவளானாலும் பெற்றவளாச்சே! பிடிவாதம் செய்தபோது திருமணத்துக்கு ஒத்துக் கொண்டவள் - இப்போது நோயாளியாகப் படுத்து விட்டிருக்கிறாள் - அவளது கடைசி காலத்தில் பிள்ளை கைவிட்டான் என்ற அவச்சொல் எதற்கு என்று அஞ்சுகிறீங்க!' சொல்லாமல் சொன்ன அந்தக் கண்களை உற்றுப் பார்க்கவும் அவனுக்கு வெட்கமாக இருந்தது.

''அம்மாவின் உடம்பு குணமாகும் வரை நீ வீட்டை விட்டு எங்கேயும் போகாதிருப்பது நல்லது. முன்போல் அவங்க எழுந்து நடமாட ஆரம்பித்த பின்பு மனநிலையிலும் கொஞ்சம் மாறி விடுவாங்க. இத்தனை கடுமையாக இருக்கமாட்டாங்க. அதனால் சாம்பவி...'' என்று குழைந்தான்.

'இன்று மாலை வீட்டுக்குத் திரும்பிய உடனேயே நான் அந்தத் தீர்மானத்துக்கு வந்து விட்டேன். நீங்க இத்தனை தூரம் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. என் கடமைகளை ஓரளவுக்கு நான் அறிவேன். அவ்வளவு தானே வேறு ஏதாவது பேசவேண்டியது இருக்கிறதா?'' கேட்டபடி அவள் எழுந்தபோது வேதனையில் முகம் சுருங்கிப் போனான்.

'ஆயுள் முழுவதும் உன்னுடன் பேசிக் கொண்டிருக்க எத்தனையோ சங்கதிகள் இருக்கு சாம்பவி! முன்னைவிட இந்தச் சில நாட்களில் ரொம்பவும் இளைச்சுப் போயிட்டே உட்கார்ந்து நிம்மதியாக சாப்பிடக்கூட உனக்கு நேரமில்லை கல்யாணமாகாதபோது நீ எத்தனையோ நிம்மதியாக இருந்தே அலமேலு அம்மாளின் அரவணைப்பிலே உன் மாம்பழக் கன்னங்களில் நான் கண்ட மினுமினுப்பு இப்போ எங்கேயோ மறைஞ்சு போச்சு... சாம்பவி, நான் உன்னைப் பற்றி ரொம்பப் பெருமிதம் அடைகிறேன். இத்தனை சிக்கல்களிலும் கணவனிடம் எந்தவிதமான வெளிப்படையான அன்பையும் பெறாத நிலையிலும் எத்தனை பொறுமையாக இருக்கிறே

சாம்பவி கொஞ்சம் பொறு. நமக்கு நல்ல காலம் வரும்...!' என்று பட படவென்று பேசி அவளைத் தன் அருகே இழுத்து உட்கார வைத்துக் கொண்டு... கண்களில் லேசாகத் திரையிட்டு மின்னிக்கொளியில் மின்னும் அந்தக் கண்ணீரைத் துடைத்து விட மனம் மிகவும் ஆசைப்பட்டது. ஆரம்பத்தில் அவளுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தை நினைத்து ஆசையை விழுங்கிக் கொண்டான்.

''சாம்பவி! இன்னொரு சங்கதியை உன்னிடம் கேட்க விரும்பறேன். நீ இந்த வீட்டை மிக்க திறமையோடு நிர்வகிக்கிறே. தினமும் என்ன செலவாச்சு - மீதிக் கையிருப்பு என்னன்னு ஒரு பட்டியலைத் தயாரித்து என் பார்வைக்கு வைக்கிறே - மகிழ்ச்சி. உன் செலவுக்குன்னு ஒரு பைசா கூட எடுத்துக்கிறதில்லையே ஏன்? உனக்கு செலவழிக்கப் பணம் தேவைப்பட்டா கூசாமல் எடுத்துக்கோ!''

வறட்சியான முறுவலுடன் அவள் அவனை ஊன்றிப் பார்த்தாள். ''சாப்பாடு, துணி முதலிய சவுகரியங்கள் கிடைக்கும்போது... வேறு எனக்கு செலவுன்னு ஏதும் இல்லையே - அதனால் பணம் தேவைப்படுகிறதில்லை.... மேலும் எனக்கு ஏதாவது வேணுமின்னா ஒரு கடிதத் துண்டில் எழுதி வைக்கிறேன். நீங்க உடனடியா வாங்கித் தந்துடறீங்க... அதுக்கு மேலே என்ன வேணும்...?''

''சாம்பவி! உண்மையைச் சொல் - உனக்கு இதுகளைத் தவிர வாழ்க்கையில் வேறு எதுவும் தேவையில்லையா...?''

பொங்கி வந்த துயரத்தையும்... இமைகள் ஓரத்தில் கசிந்த கண்ணீரையும் சிரமப்பட்டு சட்டென்று அடக்கிக் கொண்டாள். 'எனக்கு ஒரு பெரிய தேவை இருக்கிறது உண்மைதான். சாம்பவி! என் கண்ணேன்னு' உங்களால் அழைக்கப்பட்டு உங்கள் அன்பை அனுபவிக்க மாட்டோமா என்ற ஏக்கத்தில் துடிக்கும் என மனதில் நிறைவை உண்டாக்க மனைவி என்ற நிலை மிகவும் தேவைப்படுகிறது. உணர்ச்சிகளின் வசப்பட்டுப் போகும் சாதாரணப் பெண்தான் நான். ஒரு சந்நியாசினி அல்ல... உங்களது கொள்கைகளுக்குக் குறுக்கே வரக்கூடாது என்ற பிடிவாதத்தினால் இப்படி வைராக்கியமாக இருக்க

முயலுகிறேன். எத்தனையோ தடவை இந்தப் பாழும் வைராக்கியம் சுக்குத் தூளாகிப் போய்விடுகிறது உண்மை. இந்த அறைக்குள் வரும்போது என் மனதும் எத்தனையோ தவிக்கிறது. குளிச்சிட்டு பனியன் லுங்கி மட்டும் அணிஞ்சுக் கொண்டு நீங்க உட்கார்ந்திருக்கும்போது... சந்தனக் கட்டை போன்ற உங்க தோளைக் கண்டு என் மனம் எத்தனை பாடுபடுகிறது தெரியுமா? அந்தத் தோள் மீது சாய்ந்து கொண்டு 'இன்னிக்கு உங்களுக்கு ரொம்ப வேலை இருந்ததா... வரும்போது உங்க முகம் ரொம்ப சோர்ந்திருந்ததே?' என்று கொஞ்சி கேட்டு முகத்தோடு முகம் வைத்துக் கொண்டு பேச... எனக்கு மட்டும் ஆசை இல்லையா' - மனதிலே அமுங்கிக் கிடந்த அத்தனை உணர்வுகளையும் வார்த்தையாக உதிர்க்க அவளுக்கும் விருப்பமாகத் தானிருந்தது.

''ஏற்கனவே அத்தை ரொம்ப மனம் கசந்து போயிருக்காங்க. அவர்களை நான் தனியே கீழே விட்டு விட்டு வெகுநாழி உங்களோடு பேசிக் கொண்டிருக்க முடியாது... மன்னிச்சுக்கோங்க...!'' வேகமாகக் கதவை நோக்கி நடந்தாள்.

''சாம்பவி நில்! முக்கியமான சங்கதியைக் கேட்க மறந்துட்டேன். இன்று அவங்க உன்கிட்ட ரொம்ப கோபமாக நடந்து கொண்டாங்களா? பேச்சில் கொஞ்சம் தெளிவு ஏற்பட்டிருப்பதால் அவங்களால் உரத்துப் பேசமுடிகிறது... அதனால்!'' கேட்டுவிட்டு அவளைப் பரிதாபமாகப் பார்த்தான். தன்னிடமே ஆவேசமாக ஆத்திரத்துடன் பேசிய தாயார் மருமகளிடம் எப்படி நடந்து கொண்டிருப்பாள் என்பதை அவனால் ஓரளவு ஊகிக்க முடிந்தது.

''என் கையால் கொடுத்த கஞ்சியைக் குடிக்க மாட்டேன்னு அடம் செய்தாங்க. ஆனால் நான் வற்புறுத்தி சாப்பிட வைத்து... மருந்து கொடுத்துத் தூங்கச் செய்திருக்கேன். அவங்க எவ்வளவு கோவிச்சுக் கொண்டாலும் நான் பாராட்டப் போவதில்லை... ஏன்னா அவங்க ஒரு நோயாளி இல்லையா?'' கேட்டுவிட்டு வேகமாக வெளியே வந்தாள். மாடிப்படியருகே வந்ததும் அவளுக்குக் கட்டுக் கொள்ள முடியாத துக்கம் கண்ணீராகக் கன்னங்களில் வழிந்தோடியது.

வீட்டுக்கு வந்ததுமே வேலைக்காரி வந்து சொல்லி விட்டாள்.

''பெரியம்மா உங்களைக் கேட்டாங்க — வந்ததும் அறைக்கு வரச்சொன்னாங்க!''

ஈரக, கால்களைக் கழுவிக் கொண்டு கலைந்து நெற்றியில் புரளிக் கிடந்த முடியைச் சீராக்கிக் கொண்டு அவள் அவசரமாக மரகதம்மாள் படுத்துக் கிடந்த அறைக்குள் நுழைந்தாள். தனக்கு இடைக்கப் போகும் வரவேற்பை எண்ணி மார்பு வேகமாகத் துடித்தது. படுத்த நிலையிலும்... எழுந்திருக்கும் சக்தி இல்லாத சமயத்திலும் மரகதம்மாள் அந்த வீட்டில் உள்ள அத்தனை பேரையும் ஆட்டிப் படைத்தாள், அப்படி ஒரு அந்தஸ்து இவளுக்கும்.

''உனக்கு என்ன துணிச்சல்? வேலைக்காரியிடம் என்னை ஒப்படைச்சுட்டு உங்க பெரியம்மா வீட்டில் சீராடப் போயிட்டு வந்திருக்கே இல்லே? எல்லாம் அவன் கொடுக்கிற இடம். நான் மட்டும் எழுந்து ஓடியாடிக்கிட்டிருந்தா இப்பவே உன் கையில் பெட்டியைத் தூக்கிக் கொடுத்துப் பிறந்த வீட்டுக்குத் துரத்தியிருப்பேன்...!'' பற்களைக் கடித்தாள். கொடூரமாக விழித்தாள்.

சாம்பவி எதுவும் பேசவேயில்லை.

''ஊமைக் கோட்டான் போல ஏன் சமைஞ்சு போய் நிக்கிறே. இந்தத் தலையணை ரொம்ப உறுத்துது. உடனே மாத்திவை!'' ஏவலிட்டாள்.

அவளுக்குப் பிடித்த விதமாக ஓட்ஸ் கஞ்சியைச் செய்து எடுத்துக் கொண்டு போனபோது முகத்தை சுளுக்கினாள். ''இனி எனக்கு வேலைக்காரியே எல்லாம் செய்யட்டும். உன் கையால் சாப்பிடுவது கூடப் பாவம்!'' என்று எரிந்து விழுந்தாள். அதிகமாகப் பொங்கிய கோபத்தை அடக்க முடியாது அலாதினமாக இருந்த இடது கையால் தன் அருகே இருந்த ஸ்டூல் மீதிருந்த டம்ளரை எடுத்துத் தரைமீது வீசி எறிந்தாள்.

''போ! இங்கே நிக்காதே — சனியனே நீ வந்ததுமே எனக்குக் கேடு வந்துவிட்டது. என்னைக் கொண்டு

கரையேத்திட்டு சொத்துக்களைத் தட்டிக்கிட்டுப் போகத்தானே வந்திருக்கே, என் மகன் ஒரு ஏமாளி இல்லாட்டி உன்னைக் கட்டிக்க ஒத்தைக் காலில் நின்னுருப்பானா? நான் மட்டும் பிழைச்சு எழுந்தா...!'' என்று கருவிக் கொண்டே அவளை உக்கிரமாகப் பார்த்தாள்.

எதற்கும் பதிலளிக்காது சாம்பவி கிண்ணத்திலிருந்த கஞ்சியை — ஸ்பூனால் அள்ளி வற்புறுத்தி அவளுக்குப் புகட்டினாள்.

''யார் கண்டது... இந்தக் கஞ்சியில் நீ என்ன மருந்தைக் கலந்து தருகிறாயோ? ஒரு சமயம் மந்திரிச்ச விபூதியைப் போட்டுக் கொடுக்கிறியோ. உன் மனசில் இருக்கும் எண்ணம் எனக்குத் தெரியும். 'நான் சீக்கிரம் கண்ணை மூடனும்னு நானா எண்ணிக்கிட்டு இருக்கே. பிறகு உன் வீட்டுப் படைகளோ இங்கே ராஜாங்கம் நடத்தப் போறே. ஐயோ! என் மகன் அதி இப்படி ஆச்சே!'' உரத்த குரலில் புலம்பி - விக்கி அழுதாள்.

''அத்தை இப்படி நீங்க பேசி... அழுது — ஆத்திரப்பட்டா ரத்த அழுத்தம் அதிகமாகிவிடும். குணமடைய நாளாகும்னு டாக்டர் சொல்லியிருக்கார்.''

''கிடக்கார் டாக்டர். அவர்தானே என்கிட்டே வந்து அலமேலு அம்மா வீட்டிலே ஒரு அழகான பெண் வந்து இருக்கா... அவளை உங்க மகனுக்குக் கட்டி வையுங்கோன்னு பல்லைக் காட்டினார். இந்த அழகான கல்யாணத்திற்கு அந்த மனிதன்தான் பெரிய சிபாரிசு. இனிமே அந்த டாக்டர் வந்தா அவரோட நின்னுகிட்டு ஊர்க் கதை பேச வேண்டாம் எப்படிடா இவளுக்குத் தெரிகிறது. படுத்துக் கிடக்கிறாளேன்னு அதிசயமா இருக்கா... எனக்கு ஆயிரம் கண்கள் உண்டு. அவர் வந்த வேலையை கவனிச்சுட்டுப் போகட்டும். வயசானவர்னு நான் விட்டு வைக்கிறேன். இல்லாட்டா!'' என்று பேசியவளுக்கு மூச்சு வாங்கியது. முகம் சிவந்து வியர்வை கொப்பளித்தது.

''நீங்க சொல்றபடி நடக்கிறேன் அத்தை. இனிமேலே நீங்க எழுந்து நடமாடறவரை இந்த வீட்டு வாசற்படியைத் தாண்ட மாட்டேன் அத்தை!'' என்று கூறிவிட்டுத் துவாலையால் மரகதம்மாள் முகத்தைத் துடைத்து அவளை சமாதானப்படுத்தினாள்.

அந்த சங்கதியை இப்போது அவள் கணவனிடம் சொல்லத் தேவையில்லை.

செய்யக்கூடாத ஒரு குற்றத்தை அவள் செய்துவிட்டது போல மாமியார் அவளை நன்றாகச் சாடிவிட்டாளே அது போதும். அதற்குத் துணை இருந்தவன் போல மகனையும் அவள் கோபித்துக் கொண்டு விட்டாள். ஒன்றே ஒன்று மட்டும் சாம்பவிக்குப் பிடிக்கவில்லை. மரகதம்மாள் தன் வேலைக்காரி பொன்னியின் முன் மருமகளைத் திட்டி விட்டாள். வீட்டு வேலைக்காரர்களில் கொஞ்சம் தலைக்கனம் பிடித்தவள் பொன்னி. எஜமானி தன்னிடம் அதிகப் பிரியமாக நடந்து கொள்கிறார் என்ற காரணத்தால் அவள் சாம்பவியிடம் ஏற்கனவே கொஞ்சம் திமிராக எதிர்த்துப் பேசிக் கொண்டிருந்தவள். இனி அவளுக்குத் துணிவு ரொம்பவும் கூடி விடுமே? மரகதம்மாள் அனுபவத்தில் சாம்பவியைவிட முதிர்ந்தவள். அப்படியிருந்தும் வீட்டு சங்கதிகளை வேலைக்காரர்கள் முன்னிலையிலா அலசுவது? மிகவும் வேதனைப்பட்டாள்.

மறுநாள் பகல் வீட்டுக்கு வந்த பார்த்தீபன் அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். கடிதம் அவளது தந்தை எழுதியது. காரணம் ஏதும் இன்றி அவர் அடிக்கடி கடிதம் போடுகிறவர் அல்ல... கையும், காலும் பதற — நெஞ்சு தீயாக துடிக்க வாய் உலர்ந்து போக அவள் கடிதத்தைப் பிரித்து எடுத்தாள்.

16

கடிதம் அவள் தந்தை வாகீசனால் மிகவும் சுருக்கமாகத்தான் எழுதப்பட்டிருந்தது.

அன்புமிக்க மருமகன் பார்த்தீபனுக்கு அநேக ஆசிகள். தங்கள் தாயின் உடல் நிலையில் இப்போது சிறிது அபிவிருத்தி ஏற்பட்டிருக்கும் என்று நம்புகிறோம்.

துன்பங்கள் தனியாக வருவதில்லை என்பது உண்மை. சில தினங்களுக்கு முன்னர் என் சிறிய மகள் ரேவதி வைரல் காய்ச்சலுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள். நேற்றிலிருந்து காய்ச்சல் அதிகமாகி சற்றுக் கவலைக்கிடமான நிலையில் இருக்கிறாள். ஜன்னி வேகத்தில் குழந்தை தன் அக்கா சாம்பவியைப் பார்க்க வேணும் என்று பிதற்றிக் கொண்டிருக்கிறாள். அங்குள்ள நிலைமையை நாங்கள் அறிவோம். முடிந்தால் ஒரே ஒருநாள் மட்டும் பட்டணத்தில் வந்து தங்கி ஆஸ்பத்திரியில் உள்ள தன் தங்கையை சாம்பவி பார்க்க முற்பட்டால் ஒரு சமயம் ரேவதியின் உடல்நிலை சீக்கிரம் குணமாகலாம் என்று நம்புகிறோம். அங்குள்ள நிலமைக்குத் தக்கபடி தாங்கள் முடிவெடுக்கலாம். நன்றி.

இங்ஙனம்
வாகீசன்

கடிதத்தைப் படித்ததும் அதைக் கணவனிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு சாம்பவி வேகமாக பூஜையறையை நோக்கி ஓடினாள்... தரையில் விழுந்து கும்பிட்டவளால் கட்டுப்படுத்த இயலவில்லை... விசும்பி அழுது விட்டாள். தங்கைகளில் அவளது அன்பைப் பெரிதும் கவர்ந்தவள் ரேவதி. ஐந்து வயதுக் குழந்தையாக இருந்தபோது அவள் ஒவ்வொரு நாள் இரவும் உணவுக்குப்பின் அக்கா சாம்பவியின் மடியில் வந்து படுத்துக் கொண்டு கதை சொல்லச் சொல்லி அடம் செய்வாள். கேட்ட

கதையையே அலுக்காமல் திரும்பத் திரும்பக் கேட்பதில் குழந்தை ரேவதிக்குத்தான் எத்தனை உற்சாகம்?

கதை முடிவில் தன் அக்காவுடன் சேர்ந்து கொண்டு "ஆடு மிதக்க, மாடு மிதக்க, வீடு மிதக்க — பாயசம் காய்ச்சின பாட்டி மிதக்க குருவி பறந்தோடிப் போச்சு..." என்று பாடிக் கொண்டு கைதட்டிச் சிரிப்பாள்.

"குருவி பாயசம் காய்ச்சின இந்தக் கதை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. அத்தோட உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு அக்கா..." என்று கூறியபடி அந்தக் குழந்தை தன் இரு கைகளாலும் அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டுக் கொஞ்சுவாள். அந்தக் காட்சி சாம்பவியின் நினைவில் வரவே அவள் கண்கள் பொலபொலவென்று கண்ணீரை உதிர்த்தன. ரத்த பாசத்தினால் உடல் முழுவதும் துடியது.

"கடவுளே! ரேவதியின் உடம்பு சீக்கிரம் குணமாகிவிட வேண்டும்!" என்று வேண்டிக் கொண்டு எழுந்தாள். பார்த்தீபன் தன்முன் சட்டென்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

கண்கள் சிவந்து, நெற்றியில் வியர்வை பொடிக்க அடக்கி வைத்துக் கொண்ட துயரத்தை மீறி உதடுகள் துடிக்க தன் முன் நின்ற மனைவியைக் கண்டு மனமுருகிப் போனான் பார்த்தீபன்.

"உன் தங்கைக்கு ஜன்னிக் காய்ச்சல் ஏற்பட்டிருப்பதை பற்றி வருத்தப்படுகிறேன். அம்மா உத்திரவு கொடுத்தால்...!" என்று அவன் முடிக்கு முன் அவசரத்துடன் குறுக்கிட்டாள் சாம்பவி.

"இங்கே அத்தை நோயாளியாகப் படுத்துக் கிடக்கையில் நான் பட்டணம் போவது சாத்தியப்படாத செய்கை. போக நினைப்பது கூட முறையல்ல. அப்பா புரிஞ்சுக்குவார். எதுக்கும் நான் ஒரு கடிதம் பதிலுக்கு எழுதி விடுகிறேன். நீங்க இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். சாப்பிட வாங்க. உங்களுக்கு மறுபடி கடைக்குப் போக நேரமாகி விடுமே...!" என்று கூறிவிட்டு உள்ளே சென்று விட்டாள்.

இ. - 9

கடைக்குக் கிளம்புமுன் வாயில் வரை வந்து வழிவிட்ட மனைவியின் முகத்தை மிகவும் அனுதாபத்துடன் பார்த்தான்.

''சாம்பவி! என்னை நீ கல்யாணம் செய்து கொண்டதிலிருந்து பலவித சங்கடங்களைத்தான் சந்திச்சுக் கொண்டு இருக்கே...?''

''இதையே நான் திருப்பிச் சொல்லலாம் இல்லையா...?'' வறட்சியாக அவள் சிரித்தாள்.

''உன்னை நான் இது சமயம் பட்டணத்திற்கு அனுப்ப முடியாது என்பது உனக்குத் தெரியும். ஆனால் நான் வேறு வகையில் உதவ முடியும். ஆஸ்பத்திரிக்கு ஆகும் செலவை நான் அனுப்பி வைத்தால் உன் தந்தைக்கு உபகாரமாக இருக்குமல்லவா?'' மிகவும் கனிவுடன் கேட்டான்.

''அப்படி நீங்க எதுவும் அனுப்பினால் அப்பா மனம் வேதனைப்படும். பணத்தை எதிர்பார்த்து அவர் இந்தக் கடிதத்தைப் போடலை. என் தந்தையைப் பற்றி எனக்குத் தானே அதிகம் தெரியும்... அப்பா ஆஸ்பத்திரி செலவுகளை தாமே சமாளிச்சுக்குவார். அதனால் நீங்க கவலைப்பட தேவையில்லை'' என்று அவனுக்கு ஆறுதல் சொல்லி வெளியே போக விடை கொடுத்தாள்.

எதற்கும் மாமனார் வீட்டு நிலைமை தாயாருக்குத் தெரிந்திருப்பது நலமாகும் என்ற எண்ணத்தில் அந்தக் கடிதத்தை தன் தாயாருக்கு பார்த்தீபன் வாசித்துக் காட்டி விட்டிருந்தான்.

அறைக்குள் சாம்பவி வந்து நின்றதுமே கடுமையான குரலில் பேச ஆரம்பித்து விட்டாள் மரகதம். வேலைக்காரி அப்பால் போவதற்குள் தன் வெறுப்பு முழுவதையும் வார்த்தையில் கொட்டி விட்டாள்.

''அன்னிக்கு உன் பெரியம்மாவைப் பார்க்கன்னுட்டு என்னைத் தவிக்க விட்டுட்டுப் போய் வந்தே. அதாவது ஒரே ஊர் என்கிற நிம்மதியில் நான் பொறுத்துக் கொண்டேன். இப்ப உன் தங்கச்சியைப் பார்க்கப் பட்டணம் புறப்படப் போகிறாயா? உன் அப்பனுக்கு அறிவு இருக்கா. சம்மந்தியம்மா

க்கிறாளே இப்படி ஒரு கடிதாசி எழுதி கலாட்டா தப்புனு இத்தனை பெரிய மனுஷனுக்குத் தோணலையே?''

பொங்கி வந்த கோபத்தையும், துயரத்தையும் உதட்டைக் கடித்துக் கொண்டு அடக்கிக் கொண்டாள் சாம்பவி.

''ரேவதிக்கு உடம்புக்கு முடியாம ஆஸ்பத்திரியில் இருக்கப் பட்டிருப்பது நமக்குத் தெரிய வேண்டும்னுதான் எழுதினார்!''

''உன் அப்பனுக்கு சப்பைக்கட்டு கட்டாதே. ஒரு நாள் பட்டணம் வந்து போகும்படி கேட்டுக் இருக்கிறாரே, அதன் அர்த்தம் என்னவாம்?''

''அப்படித் தவறா அவர் எழுதினதுக்கு அவருக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன் அத்தை! அன்னிக்குப் பெரியம்மா வீட்டுக்குப் போன பிறகு என் மனசிலே ஒரு உறுதி எடுத்துக்கிட்டிருக்கேன்?''

''பெரிய அரிச்சந்திரன் மகள். சத்தியத்துக்கு ரொம்பவும் கட்டுப்பட்டவள்!''

''உங்க உடம்பு குணமாகி நீங்க நடமாடத் தொடங்கறவரை இந்த வெளியிலேயே போக மாட்டேன்!''

''உன் தங்கச்சி செத்து விட்டால் கூடவா?''

திடுக்கிட்டுப் போனாள் சாம்பவி. வயசில் பெரியவளான தன் தாயார் வாயில் இப்படியா ஒரு அவச்சொல் எழ வேண்டும்... பிழைத்து எழணும் என்று ஒரு ஆசி சொல்லிவிட்டாலும் சாம்பவி மேல் ஏற்பட்ட வெறுப்பில் தன் குடும்பத்தையே சபிக்கிறாங்களே அத்தை!

''அப்படி ஏதாச்சும் நடந்துட்டாக்கூட நான் பட்டணம் போக மாட்டேன் அத்தை!'' என்று கூறிவிட்டு பொங்கி வந்த அழுகையைத் துடைத்துக் கொண்டாள்.

''நீலிக்கு கண் நெத்தியிலே என்பாங்க. நானும் பார்த்துக்கிட்டுதான் வரேன். ஏதாவது நான் சொல்லி விட்டா என்னை அடிச்சுக் கொன்னுட்டது போல உடனே அழ

ஆரம்பிச்சுடறே. அழுதழுது எங்க வீட்டை அலங்கோலம் செய்துட்டது போதாதா... போ... உள்ளே போய் மூஞ்சியைக் கழுவிகிட்டு... பொட்டு வச்சுகிட்டு சுத்தமா வா...!'' அதட்டினாள்.

அன்று இரவே சாம்பவி... தன் அனுதாபத்தைத் தெரிவித்துத் தான் வர இயலாததை விவரித்துத் தன் தந்தைக்கு தனிப்பட்ட ஒரு கடிதம் எழுதித் தபாலில் சேர்க்கும்படி தன் கணவனிடம் தந்து விட்டாள்.

அதற்குப் பின் சில நாட்கள் ஓடிய பின் மரகதம்மாளி பெயருக்கு ஒரு தந்தி வந்தது.

தந்தி என்றதுமே சாம்பவி பதறிப்போனாள்.

''என் மூஞ்சியை ஏன் பார்க்கிறே — முதல்லே அதை பிரிச்சுப் பார்க்கக் கையில் வலுவு இல்லே. இரண்டாவது அது ஆங்கிலத்தில் இருக்கும். நான் உன்னைப் போல் படிச்சவளா பிரிச்சு என்ன எழுவுன்னு பார்...!'' அதட்டினாள் மரகதம்.

உள்ளூர அது ஏதாவது துக்க செய்தியாக இருக்கும் அவளது தந்தை தந்தி அடித்திருப்பார் என்று குரூரமானதொரு மகிழ்ச்சி மரகதம்மாளுக்கு.

அப்பாடா! அது வேறு யாரிடமோயிருந்து வந்த தந்தி என்பதைக் கண்டு அவளுக்குத்தான் எத்தனை நிம்மதி?

''என்ன அப்படி முழிக்கிறே? என்ன தந்தி அது — யார் குடுத்திருக்காங்கனு சட்டுனு படிச்சுச் சொல்ல வேணாமா? ஏதுடா ஒரு மனுசி கவலைப்படுவாளேன்னு புத்தியில்லாம கல்சிலையாட்டாம் நிக்கறியே!'' மரகதம் அதட்டியதும் விழிப்புற்றாள் சாம்பவி.

''யாரோ ரவிச்சந்திரன் என்பவர் தந்தி அனுப்பியிருக்கார் உங்களைப் பார்க்க இன்று இரவு வண்டிக்குப் புறப்பட்டு நாளைக் காலை பட்டணத்திலிருந்து வருகிறாராம்!''

''ரவிச்சந்திரனா வரான்...? என்னை மறக்காம வந்து பார்க்க வருகிறானே பிள்ளை... தங்கமான குணம்...!'' என்று மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தாள்.

அதற்குப்பின் ரவிச்சந்திரன் வரப்போவதைக் குறித்து நிலையிலேயே ஆட்களுக்குத் துரிதமாக வேலையிட்டாள் மரகதம்.

''வாசல் பக்கம் இருக்கிற அறையை சுத்தமாக கழுவித் துடைச்சபின் அறையிலிருக்கும் கட்டிலைத் தூக்கிப் போட்டு... படுக்கை தயார் செய்து வையுங்க. விருந்தாளிகள் வந்தா உபயோகிக்கிற கழிவறை, குளியலறை எல்லாம் சுத்தமா இருக்கணும். பல நாளா பூட்டி வச்ச பீரோ... பூச்சிகள் ஏதாச்சும் இருக்கப் போவுது. நல்லா தட்டி துடைச்சு தட்டுகளில் காகிதம் போட்டுத் தயாரா வைக்கணும். அவன் அமெரிக்காவிலே பெரிய வேலை பார்க்கிறவன். என்னை மறக்காம வந்து பார்த்துப் போக ஆசைப்படுகிறான்!'' என்று பெருமையோடு சொன்னாள்.

சமையலறையில் பகல் சாப்பாட்டை விமரிசையாகத் தயாரிக்க உதவிக் கொண்டிருந்த சாம்பவியிடம் சமையல் ஆள் தாழ்ந்த குரலில் சொன்னார்.

''எல்லாம் இருக்கிற இடத்தில் இருந்தால் எத்தனை மரியாதை கிடைக்குது தெரியுமா அம்மா? இந்த ரவிச்சந்திரன் இருக்கிறவர் வீட்டுப் பெரிய அம்மாவுக்குத் தூரத்து உறவு. ஒரு வகையில் தங்கச்சி மகன் போல. பெற்றோரைச் சின்ன வயசிலே இழந்துட்டு மாமாவின் தயவால் படிச்சவர். மேல் படிப்பெல்லாம் உபகார சம்பளத்திலேயே முடிச்சுக் கொண்டவர். ஏதோ ஒரு சமயம் பரீட்சைக்குப் பணம் அனுப்பப்படுகிறது என்று கேட்க வந்திருந்த போது அவருக்குக் கொடுத்த மரியாதையை நான் அறிவேன். அப்ப இந்த வீட்டு நிலையாகூட ஊரில் இல்லை. வாசல் வராந்தாவிலேயே வச்சு சாப்பாடு கொடுக்கச் சொல்லி கண்டிப்பா உதவ மாட்டாதுன்னு அனுப்பி வச்சவங்க. இப்போ அந்தப் பையன் அமெரிக்காவிலே ஏதோ ஒரு ஊரில் பெரிய இன்ஜினியரா வேலை பார்த்துக் கிட்டிருக்காராம். பணம் பதவி என்ற தகுதிகள் இருந்தும் வரவேற்பு இப்ப தடபுடல் படுது!'' கோபத்துடன் முடித்தாள் கடித்தார்.

''தலையில் தூக்கி வச்சுக்கிறதும், இறக்கிப் போடறதும் அவங்க இஷ்டம். நமக்கென்ன?'' என்று கடிந்து கொண்ட சாம்பவி தன் காரியத்தில் கண்ணாக இருந்தாள். அன்று காலை கடையைத் திறந்து விட்டு... வீட்டுக்கு வரப்போகும் விருந்தாளியை வரவேற்க பார்த்தீபன் வீடு திரும்பி விட்டிருந்தான்.

திருச்சியிலிருந்து ஒரு டாக்சி பேசிக் கொண்டு பயணப்பட்டிருந்த ரவிச்சந்திரன் காலை ஒன்பது மணிக்குள்ளேயே வந்து விட்டிருந்தான்.

சிறியதொரு கைப்பெட்டியும்... தோளில் மாட்டிக் கொண்டிருந்ததொரு தோல் பையும், புகைப்படக் கருவியுமாக வந்து சேர்ந்தான். வந்ததும்... பாதணிகளை கழற்றிவிட்டு மரகதம்மாளைப் பார்க்க அறைக்குள்ளே வந்தான்.

சுருண்ட கிராப்பும்... சிவந்த முகமுமாக... ஓங்கி உயரமாக அவன் செழுமையாகக் காணப்பட்டதை கவனித்தாள் மரகதம். ஒரு காலத்தில் அவனுக்கு உதவ மறுத்த பிசகு மனதை உறுத்தியது.

''எப்படியிருக்கிறீங்க? உடம்புக்கு முடியாம படுத்திருக்கிறீங்கனு கேள்விப்பட்டதும் உடனடியா வந்து பார்த்துட்டுப் போகணும்னு கிளம்பி வந்தேன்!'' என்று முறுவலித்தான்.

''அப்படி நான் என்ன பிரசித்தி பெற்ற மகாராணி. நான் உடம்புக்கு சவுக்கியமில்லாம படுத்திருந்த சேதி உலகமெல்லாம் பரவிக்கிடக்கு. யார் சொன்னது?'' வியப்புடன் கேட்டாள் மரகதம்.

''சென்னையில் என் உறவினர் வீட்டில் நான் தங்கியிருந்த போது திருமதி பார்த்தீபன் அவங்களுடைய தந்தையைச் சந்தித்தேன். அவர்தான் உங்களைப் பத்தி சொல்லி நொந்து விசனப்பட்டார். அட, சொல்ல மறந்துட்டேனே... மிஸ்டர் பார்த்தீபன், உங்க சகோதரிக்கு உடம்பு குணமாகிடுச்சு. இப்ப வீட்டில்தான் இருக்காங்க... உங்கப்பா என்னை தம் வீட்டுக்கு அழைச்ச போது பார்த்தேன். இப்போ காய்ச்சல் பூரா அடங்கி

தள்ளா எழுந்து நடமாடறாங்க?'' என்று சாம்பவியிடம் அவன் உரியதை மரகதத்தால் பொறுக்க முடியவில்லை.

''இதென்ன கூத்து... அவளது உறவினன் ரவிச்சந்திரன் அதிகாரிக்காவில் வசதியாக வாழ்கிறவன்... எப்படியோ சுத்தி வளைச்சு... இவ வீட்டு கும்பலில் புகுந்து விட்டிருக்கிறானே? பாதீசன் லேசுப்பட்ட மனிதன் இல்லையே... பையனைக் கையில் போட்டுக் கொண்டு... அடுத்த பெண்ணுக்கு அவனைக் கட்டி வைக்க முயலுவாரே... உகும்... அப்படி எதுவும் நடக்கும்படி அனுமதிக்கக்கூடாது.''

ஆத்திரத்துடன்... ''அப்படியா, சந்தோஷம்!'' என்றாள் பிரமாதமான குரலில்.

17

அடுத்த நாள் காலை. மரகதம்மாளைக் காண லேசாகக் கதவைத் தட்டிவிட்டு ரவிச்சந்திரன் உள்ளே வந்தான்.

சுத்தமான படுக்கை விரிப்பின்மீது தலையணை அடுக்குகள் மேல் சாய்ந்தபடி மாற்றுடையில் பளிச்சென்று மரகதம்மாள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். லேசான மருந்து நெடி அறைக்குள் கவிந்து கொண்டிருப்பதையும் உணர்ந்தான். ஆஸ்பத்திரிக்கு மேல் எல்லாம் அமர்க்களமாக இருக்கிறதே என்று பார்வையை அறை முழுவதும் சுழல விட்டவனுக்கு உள்ளே வியப்பு.

''வா தம்பி! காப்பி சாப்பிட்டியா?'' உபசாரமாக வரவேற்றபடி கேட்டாள் மரகதம்மாள்.

''நேத்தே உங்களுக்குத் தர வேண்டுமென்று எடுத்து வச்சேன். உள்ளே எட்டிப் பார்த்தபோது தூங்கிக் கொண்டிருந்தீங்க. அதனால் இன்னி காலையிலே முதல்லே உங்களுக்குத் தந்துவிட்டு பிறகு மத்தவங்களுக்குக் கொடுக்கலாம்னு கொண்டு வந்தேன்'' என்று முறுவலித்தபடி

கையில் கொண்டு வந்த வண்ணக் காகிதங்களில் சுற்றப்பட்டிருந்த மூன்று பொட்டலங்களை மேஜைமீது வைத்தான்.

அதுசமயம் பார்த்தீபனும் அவன்பின் சாம்பவியும் அறைக்குள் வந்ததைக் கண்டு அவன் முகம் பிரகாசம் அடைந்தது.

''நல்லதாப் போச்சு. எல்லோருக்கும் ஒரே சமயத்தில் கொடுத்துடலாமே!'' லேசாகச் சிரித்தபடி முதலில் ஒரு பொட்டலத்தை எடுத்தான்.

''உங்களுக்கு வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்க ரொம்பப் பிரியம்னு தெரியும். அதனாலே உங்களுக்கு இந்த டிரான்சிஸ்டரை வாங்கிட்டு வந்தேன்!'' என்று பொட்டலத்தை அவளது படுக்கை ஓரத்தில் வைத்தான்.

மரகதம்மாளின் கண்கள் பெருமையில் பளபளத்தன.

''கையும், காலும் வராமக் கிடக்கிறேனே. எனக்கு இதெல்லாம் எதுக்கு? என்னை நீ பார்க்க வந்ததே பெரிய காரியம்!'' என்று ஒப்புக்காகக் கூறிவிட்டுப் பொட்டலத்தைத் தன் இடது கையால் வருடினாள். சட்டென்று ரவிச்சந்திரன் அதை எடுத்து காகிதத்தைப் பிரித்து டிரான்சிஸ்டரை அவள் பார்வையில் படும்படி கையருகே வைத்தான்.

இடது கையால் அந்த டிரான்சிஸ்டரை எடுத்துப் பார்த்தாள். பல நாட்களாக அவள் விரும்பிய பொருள் அது. அடுத்த வீட்டு அபிராமி மகன் துபாயிலிருந்து தன் தாயாருக்கு வாங்கி வந்திருந்த அந்த சின்னஞ்சிறு டிரான்சிஸ்டரைக் கண்டபோது கையடக்கமாகத் தனக்கும் அப்படி ஒன்று வேண்டுமென்று ஆசைப்பட்டாள். இப்போது அந்த ஆசையை ரவிச்சந்திரன் பூர்த்தி செய்துவிட்டதை உணர்ந்து உள்ளூர மகிழ்ந்து போனாள். ''உனக்கு வீண் செலவு என்னத்துக்கப்பா?'' என்றாள் போலியான குரலில்

''உங்கள் வீட்டில் இல்லாத பொருள் இல்லை ஆனாலும் உங்களுக்கு இது உபயோகமாக இருக்கும்னு நினைச்சு வாங்கினேன். இந்த சமயம் கட்டாயம் இது உதவியாக

இருக்கும். தலையணைகிட்டேயே வச்சுகிட்டு நீங்க பாட்டு, தமிழ் நாடகம் எல்லாம் கேட்கலாம், அத்தனை தூரத்திலிருந்து வந்து உங்களை வெறுங் கையோட பார்க்கிறது முறையா?'' கேட்டுக் கொண்டே அவன் அடுத்த பொட்டலத்தைக் கையில் எடுத்தான்.

தன்மீது அவன் கொண்டிருந்த மதிப்பை எண்ணிப் பூரித்துப் போய் அவன் கையிலிருந்த பொட்டலத்தை ஆவலோடு கவனித்தாள்.

''பார்த்தீபன் உங்களுக்கு என் அன்பளிப்பு, கல்யாணப் பரிசு என்று வச்சுக்கோங்க!'' என்றபடி அதைப் பார்த்தீபன் கையில் வைத்தான்.

''எனக்கும் ஒரு பரிசா... தேங்ஸ்!'' என்றபடி பார்த்தீபன் பிரித்துக் கொண்டே அதைப் பிரித்தான். உள்ளே அழகானதொரு வெளிநாட்டு டிஜிட்டல் கடிகாரம் இருப்பதைக் கண்டு மரகதம்மாளுக்கு மகாதிருப்தி.

''ஆசையோடு கொண்டு வந்து கொடுக்கிறான் -இன்னிக்கு இதைக் கையில் கட்டிக்கிட்டு வேலைக்குப் போயேன்!'' அம்மா பரிசு செய்தாள். மூன்றாவது பொட்டலத்தை அவன் கையில் எடுத்தபோது மரகதம்மாளின் மார்பு படபடத்தது.

''இது உங்களுக்கு நான் தரும் கல்யாணப் பரிசு, உபயோகமாக இருக்குமென்று நம்புகிறேன்!'' என்றபடி அதை அவன் சாம்பவியிடம் கொடுத்தான். மரகதம்மாளின் முகத்திலே இதுவரை பரவி நின்ற புன்னகை சட்டென்று மறைந்து போனது.

''என்ன துணிச்சல் இவனுக்கு. சாம்பவியை முன் பின் தெரியாதவன். அவளது மாமியார், புருஷன் முன்னிலையில் பரிசு கொடுக்கிறானாமே? அதையும் வெட்கமில்லாது வாங்கிக் கொள்ள இவளுக்குத்தான் எத்தனை நெஞ்சழுத்தம்!'' உள்ளூர எரிந்து கொண்டாள்.

படுக்கையருகே கிடந்ததொரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு அவன் அமெரிக்காவைப் பற்றியும் அங்கே தான் வாழ்கின்ற நிலைமையைப் பற்றியும் சொல்லியதைக் கேட்க அவளுக்குப் பொறாமையாகத்தான் இருந்தது.

''தம்பி! எனக்குத் தூக்கம் வருது - மன்னிச்சுக்கோ -வயசாயிடுச்சு இல்லையா - மருந்துவேறே சாப்பிடறேனேன்னு' முனங்கினாள்.

''அதுக்கென்ன அம்மா. நீங்க நல்லா இப்போ தூங்குங்க. பிறகு பார்க்கலாம்!'' என்று விடை பெற்றுக் கொண்டு வெளியேறினான். மகனும் அவன் பின் கிளம்பிப் போனபின் மேஜை மீது கிடந்த பொருள்களை சரி செய்து கொண்டிருந்த மருமகளைப் பார்க்க பிடிக்காது கண்களை மூடிக் கொண்டாள்.

நெஞ்சு நெருப்பாக எரிந்தது. தன்னைத் தவிர மற்றவர்கள் நல்லபடியாக செல்வத்தின் செழுமையோடு வாழ்வதைக் கேட்கப் பிடிக்காத பொறாமைக்காரி அவள்.

''பத்து பைசாவுக்கு எண்ணெய் வாங்கித் தலையில் தடவிக் கொள்ள முடியாத பரட்டை தலையும் அழுக்குப் பிடித்த சொக்காயுமாக வந்து வாசலில் அவள் தயவுக்காகக் காத்திருந்த ரவிச்சந்திரனா இவன்! இரண்டு கார் வைத்திருக்கிறானாமே எட்டு ஏக்கர் பூமியின் நடுவே பங்களாவாம். நீச்சல் குளமாம். குதிரை சவாரி கூட செய்கிற பழக்கமாமே - ஏதோ சினிமாவில் பார்ப்பது போலத் தன் வாழ்க்கையைப் பற்றிக் கதையாகச் சொல்கிறானே. நிசமா இருக்குமோ! அப்படியிருந்தால்... அத்தனை செல்வ போகத்தையும் வாகீசனது இரண்டாவது மகள் அனுபவிக்க விடக்கூடாது... ஏதாவது சொல்லி அவர் மேல் இவனுக்கு அசட்டை ஏற்படச் செய்ய வேண்டும். அதேசமயம் சாம்பவியைப் பற்றி பார்த்தீபனுக்குக் கொஞ்சம் எச்சரிக்கை செய்து... மனதைக் குழப்பிவிட வேண்டும்.

தாடை வலிக்கப் பற்களைக் கடித்துக் கொண்டாள். அத்துடன் நிற்காது சாம்பவி அப்பால் சென்றதும் தன்னைப் பார்க்க வந்த தன் அந்தரங்க வேலைக்காரியிடம் சொல்லி வைத்தாள்.

''வீட்டுக்கு வந்திருக்கானே விருந்தாளிப் பையன் அவன் நடத்தையில் ஒரு மாதிரி. அதனால் அவனை ஒரு கண் பாத்துக்கோ! என் மருமகளும் வயசில் சின்னவ. நெருப்பும் பஞ்சும் அருகிலிருந்தால் என்னாகும்? என் தலை எழுத்து நான்

இப்படிப்படுத்துக் கிடக்கிறேன். இவன் காலையில் கடைக்குப் போனால் உச்சிப்பொழுதுக்குத்தான் சாப்பிட வருவான். அதுவரை இந்தப் பையன் அடுப்பங்கரையைச் சுத்திச் சுத்திண்டிருந்தால்... கர்மம்! இவனை இப்போ யார் இங்கே அழைச்சது!''

பொன்னிக்கு அதற்குமேல் தூபம்போடத் தேவையிருக்கவில்லை. இயற்கையாக அவளுக்கு அதிகமானதொரு கற்பனா சக்தி உண்டு. எஜமானி உசுப்பி விட்டதும் அது சிறகடித்துக் கொண்டு பறக்கத் தயாராகி விட்டது.

''நானே சொல்லனும்னு நினைச்சேன் அம்மா. நீங்க படுத்த படுக்கையா இருக்கும்போது இது மாதிரி இளவயசுக் காரன்களை வீட்டிலே தங்க விடறது தப்பு. அவர் பார்க்கிறதும் சிரிக்கிறதும் என் மனசுக்குப் பிடிக்கலை!'' மூட்டிக் கொடுத்தாள்.

''ஏன் பொன்னி! நீ ஏதாவது தப்பு தண்டாவைக் கண்ணால் பார்த்தியா?''

''இங்கிலிசுலே பேசினா எனக்கு என்னம்மா புரியும்? ஆனாலும் அது சரியில்லைன்னு மனசுக்குத் தெரிஞ்சது. சாதாரணமான சங்கதியா இருந்தா அந்த அய்யா அம்மாகிட்டே தமிழிலே கேட்டிருக்கலாமே? நேத்துக் காலையிலே நம்ம வீட்டு அய்யா அந்தப் பக்கம் போனதும் இந்தப் பக்கம் இவரு நம்ம அம்மாகிட்ட ஓடிவந்து என்னமோ தஸ்புஸ்ன்னு பேசினார். இவங்களும் அதே ரீதியிலே பதில் சொன்னாங்க. இரண்டுபேரும் பக்குனு சிரிச்சாங்க. புருஷன் இல்லாத அந்நியனோட எந்தப் பெண்ணும் சிரிச்சுப் பேசறது நல்லநில்லையம்மா, 'பொண்ணு சிரிச்சாப் பேச்சு புகையிலை விரிச்சாப் போச்சுன்னு' சும்மாவா சொல்லியிருக்காங்க.''

அவ்வளவுதான். அந்தச் சங்கதி மரகதத்திற்குப் போதுமானதாக இருந்தது. இவைகளைக் கொண்டே அவள் நினைத்ததைச் சாதிக்க முடியும் என்று மனதில் ஒரு குரூர நிட்டம் உதயமாகியது.

அன்று பகல் உணவிற்குப்பின் தன்னைப் பார்த்துப் போக

வந்த மகனிடம் தாய் கோபமாகக் கேட்டாள்.

''உனக்கும், எனக்கும் அந்த ரவிப் பயல் பரிசுகள் கொடுத்தான் அது சரி. உன் மனைவிக்குப் பரிசு கொடுக்க அவனுக்கு என்ன தகுதி இருக்கு!''

''மாப்பிள்ளை, பெண் இருவருக்கும் கல்யாணப் பரிசு என்ற நிலையில் ஏதோ தான் கொண்டு வந்த பொருள்களைக் கொடுத்தார். அதில் தப்பென்னம்மா? அவர் வரப்போகிறார் என்பதைக் கேட்டு நீங்கதானே மிகவும் மகிழ்ச்சியோட இங்கே தங்க சகல ஏற்பாடுகளையும் செய்ய உத்திரவிட்டீங்க?''

''என் தலையிலேயே தீவைச்சிகிட்டேன். ஒப்புக்கிறேன். பையன் வெளிதேசத்துக்குப் போன பிறகு இப்படிக் கெட்டுப் போய்விடுவான்னு நான் எதிர்பார்த்தேனா? அவன் நடத்தைப் புரிஞ்ச பிறகுதான் என் மனது அலைபாயுது!''

''வந்து ஒரு நாள்கூட ஆகலை. அதுக்குள்ளே ரவிச்சந்திரனின் நடத்தையைப் பத்தி நீங்க எப்படியம்மா கணிப்பு செய்தீங்க?''

''அவன் பேசுகிற டம்பப் பேச்சும் - அவன் உடையும் அவனது பார்வையும் எனக்குப் பிடிக்கலை!''

''ஒரு வாரமாவது இருக்கணும்னு நிர்ப்பந்தம் செய்துட்டு இப்போ கிளம்புங்கோன்னு - எப்படியம்மா விரட்ட முடியும்? மேலும் அவர் பார்வையும் பேச்சும் எனக்கு விகல்பமாப் படலையே?''

''பார்த்தீபா! உனக்கு வயசாச்சே ஒழிய உலகமே தெரியலையே? அவன் எதுக்காகத் தன்னைப்பத்தி என்கிட்டே ரொம்ப அளந்தான் தெரியுமா? அப்போ அறைக்குள்ளே சாம்பவியும் வேலை பார்த்துகிட்டு நின்னுகிட்டிருந்தாளில்லையா? அவளது காதுபட தான் வாழாது வாழ்றதைப் பத்தி கொஞ்சம் உரக்கவே பீத்திக் கிட்டிருந்தான். ஊரான் மனைவி எதிரே தன்னைப் பத்தின புகழ்ச்சி எதுக்கு? நடுநடுவே அவளைக் கடைக்கண்ணால் பார்த்து பச்சைச் சிரிப்பு சிரித்ததை என்னால் சகிச்சுக்க முடியலை!''

''அம்மா! நான் கூடத்தானே அப்போ அங்கே இருந்தேன். சாம்பவி அவர் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கலையே... நீங்க வீணாக ஏன் அம்மா இப்படிப் பழி சுமத்துகிறீங்க?'' சிறிது கோபத்துடன் கேட்டான், பார்த்தீபன்.

''நான் ஏன் உன் மனைவி மேலே பழி சுமத்தறேன். எனக்கென்ன பைத்தியமா? நீ கடைக்குப் போன பிறகு அவன் தனமயலறை வாசற்படிகிட்டே பழி கிடைக்கிறானாம். பொன்னி வந்து என்கிட்ட முறையிடற அளவு அவன் கேவலமா நடந்துக்கிறான்!''

''சாம்பவியும் அதுக்கு ஈடு கொடுத்துத் தவறான முறையில் நடந்துக்கிறான்னு சொல்றீங்களா?'' ஆத்திரத்துடன் மகன் கேட்டான்.

''நான் படுத்துக்கிடக்கேன். காதால் கேட்டதைத்தான் சொன்னேன். கண்ணால் பார்க்க முடிஞ்சதைப் பத்திப் பேசினேன். இந்த அறைக்கு அப்பால என்ன நடக்கிறதுன்னு நீதானே பார்த்துப் புரிஞ்சுக்கணும். ஒண்ணு தெரிஞ்சுக்கோ, சந்தர்ப்பம் சரியா இல்லாததாலே ரொம்பப் பேர் பத்தினிகளாக இருக்கிறாங்கன்னு ஒரு பழமொழி உண்டு. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் கிடைச்சும் ஒரு பெண் உறுதியா இருந்தா அவதான் பத்தினி!'' கோபமாகப் பேசிவிட்டுக் கண்களை மூடிக் கொண்டாள் மரகதம்.

வெளியே வந்த பார்த்தீபன் முகத்தில் பூத்த வியர்வையைத் துண்டால் துடைத்துக் கொண்டான். அவன் நெஞ்சிலே இனம் காணாத ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

அம்மா சொல்வது உண்மையாக இருக்குமா? அவனது மனதை நோகச் செய்வதில் தாயாருக்கு என்ன லாபம்? சாம்பவி மேல் ஏற்பட்டிருக்கும் வெறுப்பினால் இப்படி விபரீதமானதொரு கதையைக் கட்டுகிறாங்களா? சஞ்சலத்தில் தவித்த தன் மனதைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டு அவன் கடைக்குக் கிளம்பு முன் நடந்ததொரு நிகழ்ச்சி அவனை மிகவும் பதற்றமடையச் செய்தது.

சாம்பவி உள்ளேயிருந்து ஒரு தட்டில் கணவனுக்காகக்

குடிக்கத் தண்ணீர் நிரம்பிய ஒரு டம்ளரை எடுத்துக் கொண்டு வந்தவள் சுவற்றில் இடித்துக் கொண்டு அதைத் தவறவிட்டாள்.

''அட கீழே போட்டுட்டீங்களே?'' என்று அனுதாபத்துடன் கூறியபடி ஓரே பாய்ச்சலாக ஓடி வந்து ரவிச்சந்திரன் அந்த டம்ளரையும் தட்டையும் எடுக்க முற்பட்டபோது... அதே பணியில் ஈடுபடக் குனிந்த சாம்பவியின் தலையோடு மோதிக் கொண்டு... ''ஸாரி மிஸஸ் பார்த்தீபன்!'' என்று சிரித்துக் கொண்டு விலகினான். குங்குமமாகச் சிவந்து போன சாம்பவியின் முகத்தைப் பார்த்த பார்த்தீபன் ஆத்திரத்தில், பொறாமையில் - சந்தேகத்தில் கொதித்துப் போனான்.

18

சாம்பவி அன்று இரவு பார்த்தீபன் அறைக்குள் நுழைந்தபோது அவன் இருப்புக் கொள்ளாது அறைக்குள்ளே முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

''என் மனதில் பல குழப்பங்கள் ஏற்பட்டு விட்டிருந்தால் நான் கூண்டிலடைக்கப்பட்ட மிருகத்தைப் போல அமைதியில்லாது அறையை அளந்து கொண்டிருப்பேன் - அது ஒரு கெட்ட வழக்கம். என்ன செய்வது? பல நாட்களாக வாழ்க்கையோடு படிந்துவிட்ட சில சங்கதிகளை தீக்கிரம் உதறிவிட முடியாது அல்லவா?'' அவன் ஒரு கடிதத்தில் எழுதியிருந்தது நினைவில் வரவே கலவரத்துடன் அவனை உற்றுப் பார்த்தாள்.

கோடையின் கொடிய வெப்பம் துவங்கிவிட்டிருந்ததால் அவள் கணவன் இரவில் எழுந்தால் தாகத்தைத் தணித்துக் கொள்ளக் குளிர்ந்த நீரை ஒரு கூஜாவிலும், பிரிஜிலிருந்து சில ஐஸ் துண்டுகளை பிளாஸ்கிலும் போட்டு எடுத்து வந்திருந்தாள். மறுநாள் அவன் உடுக்கத் தேவைப்பட்ட உடைகளை அவளது

பீரோவிலிருந்து எடுத்து வசதியாக மேஜைமீது வைத்துவிட்டு தன் கண்ணால் மறுபடியும் அவனைப் பார்த்தவளது கவலை அதிகரித்தது.

முகம் சிவந்து நெற்றிமீது முத்துக்களாக வியர்வை பொடித்து காதோரம் வடிய - உதட்டைக் கடித்துக் கொண்டு பிரயாசையுடன் அவன் ஜன்னல் அருகே போய் நிற்பதற்குக் காரணம்?

''இந்தாங்க - முகத்தைத் துடைச்சிக்கோங்க?'' என்று தன் தோளின் கைமீது கிடந்த துவாலையை எடுத்துக் கொண்டுவந்து தந்தாள்.

'அம்மா சொல்வது ஒரு வழியில் உண்மையாக இருக்குமோ? போலியான நிலையில் மனைவி என்று நினைக்கிறாள் சாம்பவி. இளமைக் கனவுகள் நிறைவேறா ஒரு தவிப்பில் வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளி சிரித்து பசப்பிப் பேசுவதைக் கண்டு பேதலித்துப் போய் மிகவும் நெருக்கமாகப் பழகத் தொடங்கிவிட்டதால்தான் அந்த நிகழ்ச்சியோ? அவன் வேண்டுமென்றே வந்து முட்டிக் கொண்டானோ? - அல்லது எதிர்பாராது நிகழ்ந்த ஒரு சம்பவமா?'

'கண்டிப்பாக அவளிடம் அதைப்பற்றிக் கேட்டால் என்ன?' ஆமாம்! அவனுக்குக் கேட்க என்ன உரிமை இருக்கிறது? முதல்நாளே அவன் அவளிடம் தனது திட்டத்தை வெளிப்படையாகக் கடுமையாகவே சொல்லிவிட்டானே!

அவன் தாய் உடல்நிலை அபிவிருத்தியடையாது அவள் நீண்ட படுக்கையாகி மிகவும் நோய்வாய்ப்பட்டு... இறந்து விட்டால் அவன் அவளை விவாகரத்து செய்துவிடுவதாக சொல்லிவிட்டிருக்கிறானே! தாயாருக்கு அப்படி வாக்குக்கொடுத்து விட்டிருக்கிறானே... உண்மை அவ்வாறு இருக்கும்போது சாம்பவியும் தன் வருங்காலத்தைப் பற்றி ஒரு முடிவு எடுக்கக்கூடாது என்று தடுக்க அவனுக்கு என்ன தகுதி இருக்கிறது! கணவன் ஒப்புக்காக வாழ்கிறானே - அவளுக்கு இருக்க இடம் தந்து - தங்க நிழல் கொடுத்து காப்பாற்றியிருக்கிறானே - அவைகளுக்காகவா?

அவன் வீட்டில் வேலை செய்யும் அத்தனை வேலைக்காரிகளுக்கும் பல சலுகைகள் கிட்டியிருக்கின்றனவே. அதற்காக அவர்களது வாழ்க்கைப் பிரச்சனையில் அவன் தலையிட சாத்தியப்படுமா? சாம்பவி தனக்குத் தரப்பட்டிருக்கும் சில வசதிகளுக்காகத்தான் நாள் முழுவதும் ஓடாக உழைத்துத் தேய்கிறாளே...? என்ன கேட்பது? எப்படி கேட்பது? என்ற முடிவு தெரியாது ஆத்திரத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டான். துவாலையால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

நாற்காலியைப் பிடித்துக் கொண்டு நின்ற சாம்பவி உடனே அறையை விட்டுப் போகாது தயக்கமாக அவனைப் பார்த்தாள்.

''நமக்குள்ளே நிலவி நிற்கும் உறவின் தகுதியால் நான் கேட்கவில்லை. ஆனாலும் கேட்காது போனால் மனம் நிம்மதியடையாது. உங்க முகம் ஒரு மாதிரியா இருக்கு. உங்களுக்கு ஏதோ கவலை ஏற்பட்டிருக்குன்னு புரியுது. வியாபாரத்தில் ஏதாவது சங்கடமா?'' மெல்லிய குரலில் முடிவில் துணிவாகக் கேட்டுவிட்டாள்.

அவளது முகத்தில் தெரிந்த அனுதாபமும் - குரலில் தொனிந்த பரிவும் வினாடிப் பொழுதில் அவனது சஞ்சலத்திற்கு முடிவு கட்டின.

''நெருப்பிற்குள் புகுந்து வெளிவர வேண்டுமானாலும் நான் தயங்கமாட்டேன். உங்களுக்காக எந்த விதமான தியாகமும் செய்யத்தயார்!'' என்று தன் காதல் கடிதங்களில் உறுதி சொன்னவள் - அதன்படியே நெருப்புக்குள் புகுவதைக் காட்டிலும் - உணர்வுகளை அடக்கி சிந்தையை ஒரே நிலையில் வைத்திருக்கும் பெரும் சோதனையில் வெற்றியுடன் நடந்து கொள்கிறவள்... அவனுக்குத் துரோகம் செய்வாளா? கனிவுமிக்க அந்த கண்களும் - கபடமற்ற அந்த முகமும் சொல்கின்றனவே.... அம்மாவின் பேச்சைக் கேட்டு அவன் தன் சொந்த புத்தியை அடமானம் வைத்து விட்டு... பற்களைக் கடித்துக் கொண்டான்.

''வியாபாரம்னா முன்னே பின்னேதான் இருக்கும்னு

உங்களுக்குத் தெரியாதா? அதுக்காக இப்படி மனசு உடைஞ்சு போறதா?''

'இல்லை.. வியாபாரம் நல்லாத்தான் நடக்குது. புத்திகெட்ட நான்தான் உன்னை சந்தேகித்து... மனதை கட்டுப்படுத்திக் கொண்டு நிற்கிறேன்...' உண்மையை ஒப்புக் கொண்டு அவளிடம் மன்னிப்புக்கேட்டு விட்டால்... எப்படி முடியும்? அதைக் கேட்டு அவள் மன அதிர்ச்சியடைவாள். ஏற்கனவே ஒரு சுகமும் இல்லாத அவள் ஒரு உயர்மட்ட வேலைக்காரியாக உழைத்துக் கொண்டு ஊமே மாமியார் அல்லப்பொழுது குத்திப் பேசும் கொடும் சொற்களைப் பொறுத்துக் கொண்டு... கடமைக்காக வாழ்கிறவளை இன்னும் வார்த்தைகளால் அவமதித்துக் கொடுமைப்படுத்துவது முறையில்லையோ...''

''என்னங்க... நான் கேட்டது தவறா... எனக்கு அந்த உரிமை இல்லையா? ஆனாலும் நீங்க மனது கஷ்டப்பட்டால் என்னால் பார்த்துட்டு... சும்மா இருக்கமுடியலை...!'' அவளது குரல் தழுதழுத்தது. கண் ஓரங்களில் நீர் கட்டியது.

''அத்தையின் உடம்பைப் பத்தி கவலைப்படுகிறீங்களா? அவங்களை பரிசோதிக்க வந்த டாக்டர் நேத்து உங்ககிட்டேயும் சொல்லிவிட்டதாக என்னிடம் சொன்னாரே. படிப்படியா அத்தை உடம்பு குணமடைஞ்சுகிட்டு வரது. அதனாலே கூடிய சீக்கிரம் அவங்க எழுந்து நிற்கக்கூட முடியும். நடக்கத்தான் கொஞ்ச நாள் பிடிக்கும். காலும் கையும் வலுப்பெற நான் தினமும் அவைகளுக்கு ஒத்தடம் கொடுத்து பிடிச்சு விடணும்னு சொன்னாரே. தப்பாது நாளைக்கு மூணு வேளையும் செய்துகிட்டு வரேனே? முன்னைவிட அவங்க கை தசைகளில் ஒரு தெம்பு ஏற்பட்டிருப்பதாக எனக்குத் தோணுது... நான் டாக்டர் இல்லே... ஏதோ தெரிஞ்சவரை சொன்னேன்'' லேசாகச் சிரித்தாள்.

பச்சைக் குழந்தையுடையது போன்ற அந்தச் சிரிப்பு அவன் மனதை இதமாகத் தழுவியது.

சாம்பவி அவனுக்கு ஒருக்காலும் துரோகம்

செய்யமாட்டாள். கபடமே தெரியாது எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேசும் குணமுடையவள். தன் வாக்கைக் காப்பாற்றிக் கொள்ள சகலவிதமான தியாகத்திற்கும் தயாராக இருப்பவளாச்சே. 'சாம்பவி! என்னை மன்னிச்சுக்கோ. உன்னைப் பற்றித் தவறாக நினைச்சது பெரும் பாவம்...' என்று சொல்லி அவளைத் தன் அருகே இழுத்து மார்புடன் அணைத்துக் கொண்டு ஆனந்தத்திலே அவளது நெஞ்சு 'பட்பட்' என்று அடித்துக் கொள்வதை உணர்ந்து மகிழ வேண்டும் போன்றதொரு வெறி அவனை உலுக்கியது.

''கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் தர முடியுமா...?'' கேட்டான்.

சில்லென்ற நீரை வெள்ளி டம்ளரில் ஊற்றி அவனிடம் நீட்டியபோது சட்டென்று அவளது கரத்தைப் பற்ற வேண்டுமென்ற ஆசையை அவன் ஒதுக்கிக் கொள்ள எத்தனை பாடுபட்டான்...?

''தாங்க் யூ சாம்பவி! அம்மாவை நீ ரொம்ப நல்லா கவனிச்சுக்கிறே. அத்தோட இந்த வீட்டையும் நல்லா கவனிக்கிறே...!''

''அவையெல்லாம் என் கடமை. அத்தோடு உங்களுக்கு ஆறுதல் சொல்றதும் என் கடமை. மனதை வீண் சஞ்சலத்துக்கு அடிமைப் படுத்தாம... கவலைகளை உதறிவிட்டு.. தயவு செய்து நல்லாத் தூங்க முயலுங்க... நாளைக்கு வியாபார விஷயமா திருச்சிவரை போக வேண்டிய வேலை இருக்கு இல்லையா?'' என்று நினைவுபடுத்திவிட்டு வெளியேறினாள். படுக்கைமீது சாய்ந்து கொண்ட பார்த்தீபனுக்கு சீக்கிரம் உறக்கம் வரவில்லை.

அவன் உள்ளத்து மூலையில் ஒளிந்து கிடந்த கொஞ்ச நஞ்ச சந்தேகமும் ஓடி மனம் தெளிவு பெறும் ஒரு வாய்ப்பு மறுநாள் காலையிலேயே அவனுக்குக் கிட்டியது.

பூஜையறையிலிருந்து வெளிப்பட்ட சாம்பவியிடம் வணக்கம் தெரிவித்தபடி ரவிச்சந்திரன் விரைந்து வந்தான்.

அதுசமயம் மாடியிலிருந்து இறங்கி வந்த பார்த்தீபன்

பார்த்து அயர்ந்து போய் நின்று விட்டான்.

''உங்களிடம் ஒன்று பேசணும். கொஞ்சம் கேட்க முடியுமா...?'' ரவிச்சந்திரனின் கணீர்குரல் பார்த்தீபனுக்கு தன்னைக் கேட்டது.

''அத்தைக்கு பசி தாங்காது. அவங்களுக்குக் காலை உணவு கொடுக்கணும். என் கணவர் கடைக்குக் கிளம்பற நேரம். அவரைக் கவனித்து அனுப்பணும். சுருக்கமாகச் சொல்ல முடியுமா...?'' சாம்பவியின் மெல்லிய குரல் அவன் நெஞ்சை என்னவோ செய்தது.

''இந்த சங்கதியை உங்கள் அத்தை - கணவர் இவரிடம்தான் முதலில் சொல்ல வேண்டும். அதுதான் முறை பூஜையறையிலிருந்து வெளிப்படும் உங்களைப் பார்த்ததும் நல்ல சகுனம் என்று தோணிச்சு - அதனாலே!'' ரவிச்சந்திரன் இதமாக முறுவலித்தான்.

''சகுனம் - சாஸ்திரம் இதிலெல்லாம் உங்களுக்கு நம்பிக்கை உண்டா? அமெரிக்காவிலே வாழ்கிறீங்க, ரொம்ப நவீனமான கொள்கைகள் இருக்கும்னு நினைச்சேன்!''

''எங்கே போய் வாழ்ந்தால் என்ன? ஒரு தமிழன் எங்கிருந்தாலும் ஒரு தமிழன்தான் - சில பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள் நம்மை விட்டுப் போறதில்லை யில்லையா! அதுதான் உங்கள் கணவரிடமாவது சொல்லலாம்னு நினைச்சேன் அவர் முகத்தைப் பார்த்துட்டு மனதை மாத்திக்கிட்டேன். அவர் ஒரு மாதிரியா இருந்தார்.''

''அவருக்கு ஏகத் தொல்லைகள் — வியாபாரம், தொழிலாளர்களைப் பார்வையிடுதல், கொடுக்கல் வாங்கல் இதுகள் போதாது போல அத்தை உடம்பைப் பற்றிய கவலை வேற கொஞ்சக்கமாக இருப்பதால் கொஞ்சநாளா அவருக்கு மனசிலே நிம்மதியே இல்லை!''

''கணவரை விட்டுக் கொடுக்காமப் பேசுகிறீங்க...'' ரவிச்சந்திரன் சிரித்தான்.

''ஒரு குடும்பம்னா... அப்படித்தான் இருக்கணும்...

மனைவியைக் கணவன் பிறர் முன்னிலையில் விட்டுக் கொடுக்காமப் பேசணும்... மனைவியும் தன் கணவனுக்காக வக்காலத்து வாங்கிப் பேசணும்... அதுதானே ஒற்றுமைக்கு இலக்கணம்!''

''எனக்கு இந்த ஒரு காரணத்துக்காகவே மிஸ்டர் வாசன் குடும்பத்தை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. உங்க சகோதரி அனுபமாவும் இப்படித்தான் பிடி கொடுக்காம புத்திசாலித்தனமாப் பேசுறாங்க!''

''என்னமோ சொல்றேன்னு ஆரம்பிச்சுட்டு எங்கேயோ போறீங்களே?''

''உங்க கணவரிடம் சொல்ல வேண்டியது முறை — இது ஒரு ஒற்றுமையான குடும்பமாதலால் உங்ககிட்ட சொல்றதில தப்பில்லை அல்லவா...?''

''என் கணவர் மறுப்பு சொல்ல மாட்டார். அவர் ரொம்ப நல்லவர். என்கிட்டே சொன்னாலும் சரின்னு ஒப்புக்குவார் —சீக்கிரம் சொல்லுங்க!'' அவசரப்பட்டாள் சாம்பவி!

''உங்க தங்கை அனுபமாவை நான் கட்டிக்கப் பிரியப்படுகிறேன். உங்கப்பாதான், என் சம்பந்திக்கிட்டேயும் — மருமகன் கிட்டேயும் இந்த சங்கதியைச் சொல்லி அவர்களுடைய வாழ்த்துக்களை வாங்கிக் கொண்டு வாங்கன்னு அனுப்பிச்சு வச்சார்!''

மகிழ்ச்சியில் பூரிச்சுப் போய் சாம்பவி நின்று விட்டாள்.

பின்னால் வந்து நின்ற பார்த்தீபன் சந்தேகமெல்லாம் மறைந்ததொரு லேசான மனதுடன்... உரக்கச் சிரித்தான்.

''சாம்பவி சொன்னது முற்றிலும் உண்மை — என்கிட்டே சொன்னாலும் சரி. சாம்பவிகிட்டே சொன்னாலும் சரி... எங்கள் இருவரின் அபிப்பிராயமும் ஒன்றாகத் இருக்கும். எனக்கும் சாம்பவிக்கும் ரொம்ப சந்தோஷம். இந்தச் சுப செய்தியை நீங்களே என் தாயாரிடம் இன்று காலை அவங்க கொஞ்சம் அமைதியாப் படுத்திருக்கும் போது சொல்லி விடுங்க...!'' என்று கூறிவிட்டு மனைவியைப் பெருமிதமாகப் பார்த்தான்.

அவன் மனதில் குழப்பத்தை உண்டாக்கிய தாய்மீது அவனுக்குக் கோபம் எழுந்ததில் வியப்பில்லை.

ஆனால் சங்கதியை அறிந்த மரகதம்மாள் ஆத்திரத்தில் அழுதினாள். அவள் எதிர்பார்த்தது பொய்யாக வில்லையே! தன் மகள்களுக்கு இப்படியா யோகம் வரவேண்டும்! தாத்தவள் பார்த்தீபனைப் பிடித்துக் கொண்டு விட்டாள் இளையவள் அமெரிக்கக்காரனுக்கு வாழ்க்கைப்படப் போகிறாள் — மூணாவது பெண்ணுக்கு எவனாவது ஒரு கொலஸ்வரன் கிடைத்து விடுவான்.

விடக்கூடாது... மூத்தவளை எப்படியாவது வீட்டுக்குத் திரும்ப ஓட்டி... வாகீசனது மூக்கை உடைக்க வேண்டும்... த்திரமும் —ஆவேசமுமாக பற்களைக் கடித்துக் கொண்டாள்.

19

இரண்டு தினங்களுக்குப் பின் ரவிச்சந்திரன் எல்லாரிடமும் விடைபெற்றுக் கொண்டு பட்டணத்திற்குக் கிளம்பி விட்டான். பஸ் நிலையம் வரை தன் காரில் அவனை அழைத்துக் கொண்டு வழியனுப்பிவிட்டு வந்தான் மகன் என்பதை அறிந்த மரகதத்திற்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

''ஏன் திருச்சி டவுன் வரை காரை ஓட்டிக் கொண்டுபோய் விட்டுவிட்டு வரதுதானே?'' ஏளனமாகக் கேட்டாள்.

''அப்படிச் செய்வதுதான் முறை அம்மா. ஆனால் அவர்தான் வேண்டாம்னார். அவருக்கு இப்போ இருக்கிற மனநிலைக்கு திருச்சியிலிருந்து விமானத்தில் பட்டணத்துக்குப் போகலாம். ஆனால் ரயில்லே தான் போகப் போறார். மனுஷன் ரொம்ப அடக்கமா இருக்கார்!''

'அந்த காலத்திலே பத்து பைசா கையில் இல்லாம பல்லைக் கடிச்சிட்டு இங்கே வந்து நின்னதை மறக்காம இருந்தாப் போதும்!' எழுந்து நடக்க முடியாது கட்டிலுடன் கட்டுண்டு

இடக்கும் எந்த நோயாளிக்கும் இயற்கையாக ஏற்படும் எரிச்சல்தான் அம்மாவிடம் இப்போது மிகுந்து விட்டிருக்கிறது என்று பார்த்தீபன் அனுதாபத்துடன் எண்ணிக் கொண்டான்.

''அந்த பத்துப் பைசாவை நாம் கொடுத்து உதவாட்டியும் அவர் சொந்த முயற்சியாலே முன்னுக்கு வந்து விட்டார்ன்னு என்கிறதை நாமும் மறக்கக்கூடாது இல்லையா? ஏம்மா இப்படி மனதைப் போட்டு அலட்டிக்கிறீங்க. ஓய்வும் - மன அமைதியும் உங்களுக்கு மிகவும் முக்கியம்னு டாக்டர் சொல்லிருக்கார் இல்லையா?'' அன்புடன் கடிந்து கொண்டான். வேகமாகச் சுழன்ற மின் விசிறியைத் தணித்துவிட்டு அருகில் வந்தான். தாயின் நெற்றி மீது புரண்டு கொண்டிருந்த முடிகளை ஒதுக்கிவிட்டுப் போர்வையை சீராக்கினான்.

மகனின் இந்த சிறு கவனிப்பில் மனம் கரைந்து போனாள் மரகதம். அவனுக்குத் தன்மீது இன்னமும் பாசம் இருக்கிறது என்ற நினைவில் அவளது கண் இமைகள் ஈரமாயின.

தன் ஆசை மகனை, தன்னிடமிருந்து சாம்பவி பிரித்து விட்டாளே என எண்ணிக் குமுறினாள். நெஞ்சம் நெருப்பாக எரிந்தது.

''என்னம்மா.... உங்களுக்கு என்ன வேணும் சொல்லுங்க?'' கனிவாக மகன் கேட்டபோது அவள் பொங்கிவந்த கண்ணீரை மறைக்க சட்டென்று கண்ணை மூடிக் கொண்டாள்.

''தூக்கம் வரது. அவ்வளவுதான்!'' போலியாக முனகினாள்.

''டாக்டர் வைத்தியலிங்கம் வாரத்திற்கு இரு முறைகள் வந்து போய்க் கொண்டிருந்தார். முதல் நாள் மாலை வந்து சோதித்துவிட்டு அவர் திருப்தியும் - மகிழ்ச்சியுமாகச் சொன்னார்.

''இன்னும் கொஞ்சம் நாட்களில் காலை மெல்லத் தரையில் ஊனிக்கிட்டு.... நடக்கத் தொடங்கி விடுவீங்க. கவலைப்படாதீங்க!'' என்று தைரியம் கொடுத்து விட்டுப் போனார்.

அவள் பூரண குணமடைந்து முன்போல் வீட்டில் நடமாடியவருமுன் சாம்பவியை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டுமே? அதற்குத்தான் அவள் கவலைப்பட்டாள்.

தூங்கும் பாவனையில் வெகுநேரம் படுத்துக் கிடந்த அவள் மனதில் ஆயிரம் திட்டங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. பகல் உணவுக்குப் பின் மருமகள் அவளைப்படுக்க வைத்து உபசரித்து விட்டுப் போனபோது திடீரென்று மூளையில் அந்த நினைவு பளிச்சிட்டது.

தன்னையுமறியாத ஒரு வேகத்தில் அவள் யார் உதவியுமின்றி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு விட்டாள். தூரத்து உறவுக்காரி பகவதியின் நினைப்பு வந்ததுமே அவளது திட்டங்கள் கொடி கட்டின.

இத்தனை நாளும் அவளைப் பற்றி நினைக்காதிருந்தது எத்தனை மதியீனம். ஒரு கடிதம் போட்டால் போதுமே. தூட்டை கட்டிக் கொண்டு தன் மகளுடன் அடுத்த ரயிலில் புறப்பட்டு வந்துவிடுவாளே? மதுரையில்தான் இருக்காள் அதே வீட்டில்தான் வசிக்கிறாள்.

கல்யாணத்துக்கு அவள் வரவில்லைதான். அதுக்குக் காரணமில்லாது போகவில்லை. தன் மகள் மாயாவைப் பார்த்தீபன் கட்டிக் கொள்வான் என்று எதிர்பார்த்தாள். பல முறை வெளிப்படையாக மரகதத்திடம் கேட்டு விட்டிருந்தாள். மரகதந்தான் பிடி கொடுத்துப் பேசவில்லை. ஊரில் பெரிய தனக்காரர் என்று முழங்கிய தன் கணவரின் அந்தஸ்துக்கு... தங்கள் செல்வாக்கிற்கும், கணவனை இழந்துவிட்டு பள்ளிக்கூட ஆசிரியையாக வேலை பார்த்து தன் ஒரே மகளைப் படிக்க வைத்து ஆளாக்கப் பாடுபட்ட பகவதியின் அந்தஸ்து சரியாகாது என்றுதான் அவள் மவுனமாக இருந்தாள்.

இப்போது நினைத்துப் பார்த்தால் ஒண்டுக் குடித்தனக்கார மாதிரினை சம்மந்தி என்று சொல்லிக் கொள்வதைவிட ஓட்டு வீட்டில் தன் மகளுடன் தனியே வாழும் பகவதியையே சம்பந்தி என்று உறவு கொண்டாடியிருக்கலாம் என்று தோன்றுகிறது... என்ன செய்வது... காரியம் மிஞ்சி விட்டது...

பெருமூச்செறிந்தாள் மரகதம்.

பகவதியிடம் காணப்பட்ட ஒரு பேராசை குணம் மரகதத்திற்கு வெறுப்பூட்டியது உண்மை.

பெரிய தனக்காரர் சட்டநாதன் மறைவுக்குப்பின், சில தடவைகள் பகவதி தன் மகளுடன் வந்து அங்கே தங்கியிருக்கிறாள். அப்போது தன் பேராசையை வார்த்தைகளாலும் செயலாலும் காட்டி.... மரகதம்மாள் மனதில் நெருடலை உண்டாக்கி விட்டிருந்தாள்.

அவர்களது வீட்டுத் தோட்டத்தையும் நிலங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு, ''இவ்வளவும் உங்களுடையதா?'' என்று ஆச்சரியப்பட்டிருக்கிறாள். மரகதம்மாளின் கழுத்துச் சங்கிலியைக் கழற்றச் சொல்லி தன் கையில்பிடித்துத் தூக்கிக் கனம் பார்த்து, முப்பது பவுனுக்கு மேலிருக்கும் போலிருக்கே... முகப்பு முழுவதும் வைரத்தால் இழைச்சிருக்கே! இப்ப விற்கும் விலைக்கு...'' என்று எச்சிலை விழுங்கிக் கொண்டு ஆவலுடன் அவள் பார்த்ததைப் பொறுக்க முடியவில்லை.

பகவதியை அவளுக்குப் பிடிக்காது போனதற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

மரகதத்தின் உத்திரவைக் கூடக் கேட்காது பகவதி ஊருக்குப் புறப்படுமுன் அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் காய்த்துத் தொங்கும் காய்களைத் தானே பறித்து விரைவாக மூட்டை கட்டிக் கொண்டு விடுவாள்.

''பச்சு பச்சுனு... தோட்டம் எப்படி இருக்கு தெரியுமா மரகதம்! காய்களைப் பார்த்தாலே வாயூறிப் போறது போகட்டும் உன் தயவாலே நான் ஒரு வாரத்துக்கு சமையலுக்குக் காய்களைப் பத்தி கவலைப் படமாட்டேன். மாயாவுக்குப் பிடிக்குமின்னு புடலங்காய்களைப் பறிச்சுக் கிட்டேன். அவரைக்காய் பொரியல் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நல்லா பிஞ்சா பார்த்துக் கொஞ்சம் வெண்டைக்காய் பறிச்சுகிட்டேன்'' என்று அவள் வேலையாட்கள் முன்பெருமையாகப் பேசியபோது கவுரவத்தை உத்தேசித்து

மௌனமாக இருக்க நேரிட்டது.

ஊரான் சொத்துக்குப் பேயாக அலையும் அவளை அருகில் சேர்ப்பது தவறு என்றுதான் கல்யாணப் பேச்சை காதில் போட்டுக் கொள்ளாது இருந்து விட்டிருந்தாள்.

திருமணத்திற்கு முன் ஒருமுறை தன் மகளுடன் பகவதி வந்திருந்தாள். ''மரகதம்! எங்களை மறந்துட்டியே...'' என்று அவளை இறுகத் தழுவிக் கொண்டு ஒரு மூச்சு புலம்பி விட்டாள்.

அந்த பகவதியை இப்போது இங்கே வரவழைத்தால்...?

இன்னமும் நன்றாக உறுதி பெறாததினால் அவளால் எழுத முடியாது. எதிர்வீட்டு ஏகாம்பரத்தின் பேரன் மேகநாதனைக் கூப்பிட்டு ஒரு கடிதம் எழுதித்தரச் சொன்னாள்?...

''எஜமானிக்கு ஏற்ற வேலைக்காரி பொன்னி உடனடியாகத் தபால் நிலையத்திலிருந்து ஒரு இன்லேண்ட் கடிதத்தை வாங்கிக் கொண்டு வந்துவிட்டாள்.

சாம்பவி மிகவும் வேலையாக சமையலறையில் இரவுக்கான பொழுதில்... எதிர் வீட்டுக்கு ஓடி பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்த மேகநாதனை அவசரமாகக் கூட்டி வந்தாள்.

மருமகளுக்குத் தெரியக்கூடாது என்ற அவசரத்தில் மரகதம் கடிதத்தை மிகச் சுருக்கமாகத்தான் எழுதவேண்டியிருந்தது.

தான் சொல்ல சிறுவன் மேகநாதன் வேகமாக எழுதிக் கொடுத்து விட்டுப் போன கடிதத்தைப் பிறகு எடுத்துவாசித்தாள். குண்டுக் கையெழுத்தில் நன்றாக எழுதியிருந்தான் சிறுவன். அபாயகரமான உடல் நிலையில் தான் படுத்துக் கிடப்பதாகவும்... ஒருமுறை பகவதியையும் அவள் மகளையும் பார்க்க ஆசைப்படுவதாகவும், ரயிலுக்கு செலவழித்துக் கொண்டு வரும் பணத்திற்கு உடனடியாக ஏற்பாடு செய்து விடுவதாகவும் மிகவும் வேண்டிக் கொண்டு மரகதம்மாள் சொற்படி என்று கச்சிதமாகக் கடிதத்தை

முடித்திருந்தான் சிறுவன்.

இனி திட பதார்த்தங்கள் சாப்பிடலாம் என்று வைத்தியர் உத்திரவிட்டிருந்ததால்... மாமியாருக்கு இட்டலியும் காப்பியும் எடுத்துக் கொண்டு சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள் சாம்பவி. வாசலில் ஏதோ சத்தம் கேட்கவே ஆவலுடன் எட்டிப் பார்த்தாள்.

காலை வேளையில் அவர்கள் வீட்டுக்கு வருவது யார்?

வாயிலில் நின்ற டாக்ஸியிலிருந்து பெட்டி மூட்டைகளுடன் இரண்டு பெண்கள் இறங்குவதைக் கண்டு வியப்புடன் திரும்பினாள்.

''யாரோ நம்ம வீட்டுக்கு வராப்பல இருக்கு அத்தை... டாக்சி வந்து நிக்குது...!'' என்று கூறியபடி பலகாரத்தட்டை அருகிலிருந்த மேஜைமீது வைத்தாள்.

தன் கடிதம் உடனடியாக வேலை செய்துவிட்டது என்ற மகிழ்ச்சி மரகதத்திற்கு. வெளியில் காட்டிக் கொள்ளாது முகத்தை சுருக்கினாள்.

''வீட்டுக்கு வந்தவங்க யாரா இருந்தா என்ன. போய் வரவேத்து உபசரிக்காம என்கிட்ட வந்து சொன்னா என்ன அர்த்தம்?'' சீறினாள்.

மாடியிலிருந்து இறங்கி வந்த பார்த்தீபன் அவர்களைப் பார்த்து விட்டான். திருச்சியிலிருந்து டாக்சி செலவு செய்து கொண்டு அப்படி அவசரமாக பகவதி அம்மாளும் மகளும் எதற்காக வந்திருக்கிறார்கள்? அவனுக்குக் குழப்பமாகத்தானிருந்தது.

''சாம்பவி! இவங்க நமக்கு தூரத்து உறவு. முன்பெல்லாம் அடிக்கடி நம்ம வீட்டுக்கு வர பழக்கம். அம்மா உடம்புக்கு முடியாம இருக்கிறதைப் பார்த்துப் போக வந்திருக்காங்க போலிருக்கு. உள்ளே கூப்பிட்டு உபசரிப்போம் வா...!'' என்று வேகமாக அறிமுகம் செய்துவிட்டு மனைவியுடன் வாயிலுக்கு வந்தான்.

''வாங்கோ... உள்ளே வாங்கோ... பெட்டி மூட்டைகளை

அப்படியே வச்சுடுங்கோ. ஆளைவிட்டு எடுத்து வரச்சொல்றேன். டாக்சிக்கு நான் பணம் தந்துடறேன். சாம்பவி இவங்களைக் கூட்டிக் கிட்டு அம்மா அறைக்குப் போ!'' என்று உத்தரவிட்டான்.

''மரகதம்! இப்படியா உன்னை நான் பார்க்கணும். பம்பரமா சுழன்றுகிட்டு இருந்த நீ பாயோடு படுத்துட்டியே!'' என்று உரத்த குரலில் புலம்பி பொல பொல வென்று கண்ணீர் விடித்தாள் பகவதி. கூட நின்ற அவள் மகள் மாயா... தன் கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டு மூக்கை உறிஞ்சினாள்.

கூட ஒரு மூச்சு அழுது ஓய்ந்த மரகதம் தன் மருமகளைக் கடுமையாகப் பார்த்தாள். ''வெகு தூரம் பயணப்பட்டுக் களைச்சுப் போயிருக்காங்க... இவங்களைக் கூட்டிக்கிட்டு போய் குளியலறையைக் காட்டு... அவங்க தயாராகறத்துக்கு முந்தி அந்த வாசல் அறையைச் சுத்தப்படுத்தச் சொல். படுக்கைகள் மேலே புதுசா விரிப்பைப் போட்டு வை. முதல்லே தாகத்துக்கு இவங்களுக்கு சூடா காப்பிகொடு. பாவம் ராத்திரி ரயிலில் தூக்கம் இருந்திச்சோ என்னவோ...'' என்றாள்.

மறுபடியும் அந்த வீடு அமர்க்களப்பட்டது.

நோயாளியைக் கவனிப்பதிலும் - கணவனைக் கவனித்து வெளியே அனுப்புவதிலும் - வந்த விருந்தாளிகளுக்குச் சூடாகக் காப்பி பலகாரம் கொடுத்து அவர்களது தேவைகளைக் கவனிப்பதிலும்... சாம்பவி... நிற்க நேரமின்றி திணறிப் போனாள்.

குடிக்க வெந்நீர் வேணுமென்று மாமியார் கேட்டார்களே என்று ஒரு கூஜாவில் வெந்நீரும், டம்ளருமாக உள்ளே நுழைந்த சாம்பவியின் காதுகளில் துல்லியமாக அவர்கள் பேசியது கேட்டது.

''அப்போவே தான் உன்கிட்டே கேட்டேன் மாயாவுக்கு. அழகுக்குக் குறைச்சலா, படிப்புக்குத்தான் குறைச்சலா. பாட்டுகூடச் சொல்லிவச்சிருக்கேன்னு ஒரு தடவை கடிதாசி கூடப் போட்டேன். இந்த வாகீசனைவிட நான் அந்தஸ்தில் எந்த

விதத்தில் தாழ்ந்து விட்டேன் மரகதம்! என்னை மோசம் பண்ணினே. மகராசி வந்த நாளே படுத்துட்டே...!''

''பகவதி! இப்பவும் தலை முழுகிப் போயிடலை. நான் கொஞ்சம் உடம்பு தேறி எழுந்ததும் முதல் வேலையா இந்த துக்கிரியை அவள் அப்பன் வீட்டுக்கு ஓட்டிடப் போறேன்!''

''பார்த்தீபன் சம்மதிப்பானா?''

''உனக்குத் தாய் வேணுமா - தாரம் வேணுமான்னு கண்டிப்பாய் பேசினா அவன் கட்டுப்பட்டுப் போயிடுவான். உனக்கு மட்டும் மறுப்பு இல்லேன்னா மாயாவை... மறுதாரமா என் மகனுக்கு நான் கட்டி வச்சு - நான் செஞ்ச தப்புக்கு ஈடுசெய்துடறேன். என்ன சொல்றே?''

''மரகதம் உன் பேச்சுக்கு நான் எப்பவாவது மறுப்பு சொல்லியிருக்கேனா?''

''இனி நீதான் இந்த வீட்டு சம்பந்தின்னு நல்லா நினைச்சுக்கிட்டு நிம்மதியா இரு. வேலையிலிருந்து ஓய்வு அடைஞ்சுட்டே இல்லையா - மதுரையிலே அந்த வீட்டிலே இருந்தா என்ன - இங்கே இருந்தா என்ன....''

''என்னிக்குமே நான் இந்த வீட்டை என் வீடாகத் தானே நினைச்சுட்டுப் பழகினேன். இப்போ உன் வாயாலே சொல்லிட்ட பிறகு எனக்குக் கவலையேன்?''

வெந்நீர் கூஜாவுடன் திரும்பி சமையலறைக்குள் ஓடி வந்த சாம்பவி... விம்மியழுவதைக் கண்டு சமையற்காரர் அதிர்ந்து போனார்.

20

சமையற்காரத் தங்கவேலு தோள் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு அவள் அருகே விரைந்து வந்தார்.

''இந்த வீட்டிலே இனி நிம்மதி இருக்காதுன்னு காலையிலே இவங்க ரெண்டு பேரைப் பார்த்ததுமே தினைச்சேன். அது சரியாயிடுச்சி. வந்ததும் வராததுமா உங்க மாமியார் கிட்டே உங்களைப் பத்திக் கோள் மூட்டியிருப்பாங்க. இவங்களுக்கு இதே வேலைதான். முன்னே ஒரு தபா இங்கே வந்திருந்தப்போ வீட்டு வேலையாள் மருதுக்கும், தோட்டக்காரனுக்கும் சிண்டு முடிஞ்சுவிட்டுப் போனாங்க... அடுத்த தடவை வந்தப்போ பொன்னிக்கும், காத்தாயிக்கும் இடையே சண்டை மூட்டிவிட்டுக் கிளம்பினாங்க... இதுவரை வேலைக்காரங்ககிட்டேயே தான் இவங்க கைவரிசையைக் காட்டினாங்க. இப்போ எஜமானிகளுக்கிடையே குழப்பம் பண்ணத் தொடங்கிட்டாங்களா! கிடக்கிறாங்க அவங்க... கண்ணைத் துடைச்சுக்கோங்க. காலையிலே வந்தவங்களை கவனிக்கிற அவசரத்திலே நீங்க காப்பி சாப்பிட மறந்துட்டீங்க. அது ஆறிப்போச்சு... உடனே நான் எடுத்து சூடு பண்ணிக்குடிச்சுட்டேன். புதுசா உங்களுக்கு நான் இப்போ காப்பி கலந்து தரேன். சாப்பிடுங்கோ அம்மா. வெறும் வயத்தோட வேலை செய்ய முடியுமா?....'' மிகவும் குழைவாகக் கேட்டுக் கொண்டார்.

கண்ணீரிடையே புன்னகைத்தாள் சாம்பவி.

அன்பும் பணிவுமாக அவர் கொண்டு வந்து மேடைமீது வைத்த காப்பியை எடுத்து ஒரே மூச்சாகக் குடித்தாள்.

அவள் கேட்ட அந்த வார்த்தைகளால் ஏற்பட்ட திகில் உணர்வு இன்னமும் அடிவயிற்றைப் பிசைந்து கொண்டிருந்தது.

''உங்க மாமியார் சங்கதிதான் தெரிஞ்ச கதை. நல்ல

நாளிலேயே அனாவசியமா ஆள்படைகள் கிட்டே நாள் பூரா கத்திகிட்டு இருப்பாங்க. இப்ப நோயாளியாப் படுத்துக் கிடக்கிறதாலே ரொம்ப எரிச்சப்படறாங்க. நான் ஒரு நாளும் அவங்க கூச்சலுக்குப் பயந்தவன் இல்லே. அதுக்குக் கவலைப்பட்டவனா இருந்தா எப்போவோ கரண்டியைக் கீழே வைச்சுட்டுக் கிளம்பியிருப்பேன். நீங்க இந்த வீட்டுக்கு வருங்கால யஜமானி. ஏன் கவலைப்படுகிறீங்க?''

'போலியான அஸ்திவாரத்திலே அமைஞ்ச திருமண வாழ்வுக்கு இப்போ ஆபத்து வந்து விட்டிருக்கே. அதுக்காகக் கவலைப்படறேன்...' உரத்த குரலில் கத்தி ஒரு மூச்சு அழவேண்டும் போல சாம்பவியின் உள்ளத்தில் துயரம் பொங்கிப் புரண்டது.

என்னதான் சமையற்காரர் கனிவுடன் பேசினாலும், பெற்றவர்களிடமும் உள்ளூரிலேயே வசிக்கும் பெரியம்மா விடமும் பகிர்ந்து கொள்ள முடியாத ரகசியத்தைத் தன் போலியான வாழ்க்கையின் அவலத்தை அவரிடம் பேச முடியுமோ?

''நன்றி அய்யா...'' என்று கூறிவிட்டு வெந்நீர் பாத்திரத்துடன் அவள் வெளியே திரும்புமுன் பொன்னி ஓடி வந்தாள்.

''பெரியம்மா, உங்களை உடனடியா தன் அறைக்கு வரச் சொன்னாங்க...'' தகவலைத் தந்துவிட்டு... விஷமமாக முறுவலித்தாள்.

''ஆபத்துக்குத் தண்ணி கேட்டா-ஆள் முடிஞ்ச பிறகு கொண்டு வருவே போலிருக்கு! நல்லவேளை மாயா பக்கத்திலே இருந்தாளோ நான் பிழைச்சேனோ? இல்லாட்டி திடீர்னு வந்து மூச்சடைச்ச விக்கல்களிலே நான் இந்நேரம் செத்துப் போயிருப்பேன். சட்டுனு ஓடிப்போய் ஒரு டம்ளரில் குழாய்த் தண்ணியைப் பிடிச்சுட்டு வந்து கொடுத்தா மாயா புண்ணியவதி.... எப்போ மாமியார் கட்டையைப் போடுவாளோன்னு காத்திக்கிட்டிருக்கிற உனக்கு என் கஷ்டம் ஏன் விளங்கப் போறது?'' மரகதம் வந்திருந்த விருந்தாளிகள்

முன் அவளைக் கடுமையாகச் சாடினாள்.

அவமானத்தில்... உடல் குன்றிப்போக... நெஞ்சு பதற அருகிலிருந்த முக்காலிமீது வைத்துவிட்டு சாம்பவி ஒதுங்கி நின்றாள்.

''சரி, போய் மத்த வேலைகளை சட்டுனு கவனி. வந்ததும் எல்லோருக்கும் ஒரேயடியாக சாப்பாடு போடு. மாயாவுக்கும் - பகவதிக்கும் சாப்பிடப் பிடிக்காது. சமையற்காரரிடம் சொல்லி அவங்களுக்குத் தனியே பதார்த்தங்களைப் பக்குவம் செய்யச் சொல்லு. மாயாவுக்கு சில்லுனு தண்ணி குடிக்கக் கொடுக்காதே... போனவாட்டி பிரிஜ் தண்ணியைக் குடிச்சு தொண்டை கட்டிக்கிச்சு-பாடற பொண்ணு, உன்னாட்டம் ஆசாமியில்லை... அதனால கொஞ்சம் பார்த்துக்கோ...''

சாம்பவி தலையை ஆட்டினாள்.

''பெருமாள் மாடுபோல தலையை ஆட்டாதே. நாம இப்பொழுது டிபன் சாப்பிடற பழக்கம் இல்லை. ஆனால் இவங்க சாப்பிடற பழக்கம். உக்கிராண அறையிலே ஒரு பாட்டிலிலே கொஞ்சம் பாதாம் பருப்பு வச்சிருக்கேன். அதை ஊறவைத்து அல்வா கிளறி, அத்தோட கொஞ்சம் பக்கவடாவும் போட்டு காப்பியோட தரணும். ஆமாம், உனக்கு பாதாம் அல்வா கிளறத் தெரியுமா? எங்கே தெரியப் போவுது? முந்திரிப் பருப்பையே முழுசா நீ பார்த்திருக்க மாட்டே. உங்கிட்ட பாதாம் பருப்பைக் கொடுத்தா நீ வீணாக்கிவிடுவே. சமையற்காரர்கிட்டே கொடுத்து அல்வா செய்யச் சொல்லு. அவர் செய்வார்...''

தன் பிறந்த வீட்டின் ஏழ்மையை விருந்தாளிகள் முன் காட்டி மாமியார் குத்திக் குதறியதில் துன்ப மடைந்து போனாள் சாம்பவி.... இமைகளைச் சுட்ட கண்ணீரை அடக்கிக் கொண்டாள் ''அப்படியே செய்கிறேன் அத்தை'' என்றாள் தளர்ந்த குரலில்....

''இன்னும் ஒண்ணு சொல்லிவிடறேன். பகல்

சீப்பாட்டுக்கு பார்த்தீபன் வரப்போ என் இரும்பு பீரோவின் சாவிகளைக் கேட்டு வாங்கிவை... தெரிஞ்சுதா'' உத்தரவிட்டாள்.

பகல் உணவிற்குப் பின் வெளியே செல்ல ஆயத்தமான கணவன் பின்னால் விரைந்து வந்தாள் சாம்பவி...

''அத்தை தன் பீரோ சாவியைக் கேட்டு வாங்கி வைக்கச் சொன்னாங்க...'' மூச்சடைக்கத் தடுமாறினாள்.

மறு பதில்பேசாது தன் சாவிக் கொத்திலிருந்த அந்தச் சாவிகளைத் தனியே கழற்றி அவள் கையில் கொடுத்து விட்டுப் பார்த்தீபன் புறப்பட்டான்.

படுக்கையருகே கிடந்த மேஜைமீது பணிவுடன் மருமகள் சாவிகளைக் கொண்டு வந்து வைத்தபோது விருந்தாளிகளிருவரும் சாப்பிட்ட நிறைவுடன் அறைக்குள் புகுந்து நாற்காலிகளில் அமர்ந்து கொண்டனர்.

''சாம்பவி-வெற்றிலை பாக்குத் தட்டைக் கொண்டு வந்து பகவதிக்குக் கொடு. உக்கிராண அறையிலே பழுத்த போட்டிருக்கிற ரஸ்தாளிக் குலையிலிருந்து நல்லா பழுத்ததாப் பார்த்து நாலு எடுத்துட்டு வந்து மாயாவுக்குக் கொடு. நம்ப தோட்டத்து ரஸ்தாளியை அவ பிரியமா சாப்பிடுவா...''

''ஆகட்டும் அத்தை...''

''இரு. அதுக்குள்ளே ஓடிடாதே. அடுத்த அறையிலே இருக்கிற என் இரும்பு அலமாரியைத் திறந்து நடுத்தட்டிலே நான் வச்சிருக்கிற புதுப்புடவை அடுக்கிலிருந்து பச்சை வண்ணக் காஞ்சீபுரச் சேலையையும், ஆரஞ்சு நிற பைஞ்சு பட்டையும் அதுகளுக்கு வாங்கிப் பொருத்தமா வச்சிருக்கிற ரவிக்கைத் துண்டுகளோட எடுத்துக்கோ. லாக்கரை அதன் சாவியால் திறந்து அதுக்குள்ள கட்டா நான் வச்சிருக்கிற அஞ்சு ஆயிரத்திலே இருந்து இரண்டாயிரம் ரூபா எண்ணி எடுத்துட்டு பத்திரமா பீரோவைப் பூட்டிவிட்டு இங்கே வா...''

மாமியார் உத்தரவுப்படியே சாம்பவி செய்து முடித்து

சாவியைத் திரும்பக் கொண்டு வந்து மரகதம்மாளின் தலையணையடியில் வைத்தாள்.

''நான் உயிரோட மறுபடி எழுந்து நடமாடினால் இவளை மனைவியா வச்சு நீ வாழலாம்'' என்று மகனுக்குப் போட்டிருந்த உத்தரவை சாம்பவி ஒரு கணமும் மறக்க வில்லை. நாளடைவில் மாமியாரின் வலது கை உறுதி பெற்று, பேச்சு திருத்தமாகிப் படுக்கை மீது எழுந்து உட்காரும் அளவு உடல் நிலை வலுப் பெற்றுக் கொண்டு வருவதை எண்ணி அவள் உள்ளூர மகிழ்ந்து போயிருந்தாள்.

''இன்னும் கொஞ்ச நாட்களில் மரகதம்மா காலை ஊன்றிக் கொண்டு நிற்க சக்தி பெற்றுவிடுவாங்க. அப்போது அவங்களுக்கு நீ உதவி செய்து நடக்கப் பயிற்சி தரணும்... முதலில் உன் உதவியோட நடப்பாங்க. பிறகு சுவற்றைப் பிடிச்சுகிட்டு நடக்க ஆரம்பிப்பாங்க... கவனிப்பு தொடர்ந்து கிட்டே இருந்தால்.... வர பொங்கலுக்குள் மரகதம்மா ஊன்றுகோல் வச்சுகிட்டு வீட்டுக்குள் வளைய வருவாங்க... அதுக்குப் பிறகு...'' வைத்தியலிங்கம் சிரித்தார்.

''அதுக்குப் பிறகு என்ன நடக்கும்...'' ஆவலுடன் சாம்பவி கேட்டாள்.

''அதுக்குப் பிறகு வருகிற பொங்கலின்போது பேரன் கையைப் பிடிச்சுகிட்டு பாட்டி... மகிழ்ச்சியோட வீட்டுக்குள்ளே நடமாடுவாங்க... இல்லையா?''

சாம்பவியின் முகம் குங்குமமாகியது. அப்படி ஒரு வாழ்க்கை அவளுக்குக் காத்திருக்கிறதே என்கிற எதிர்ப்பார்ப்பின் இன்ப உணர்வில் பூரித்துக் கிடந்தவளுக்கு இப்போது எத்தனை பெரிய அதிர்ச்சி?

அவள் பொறுமையாக எத்தனை காலம் வேண்டுமானாலும் காத்திருக்கத் தயார்.

ஆனால் மாமியார் மரகதம்மாள் முதலில் மகனுக்குக் கொடுத்த வாக்குறுதியை இப்போ மாற்றிடப் பார்க்கிறாங்களே...?

இதற்கு அவள் கணவன் பார்த்தீபன் ஒப்புக் கொள்வாரா...? பலவும் நினைத்து சஞ்சலப்பட்டாள்.

அன்று மாலை அவள், துவைத்துக் காயவைத்துப் பெட்டி போட்டு வாங்கி வைத்திருந்த தன் கணவனது உடைகளை எடுத்துக் கொண்டு மாடியறைக்குள் வந்தாள்.

நாளேடு ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்த பார்த்தீபன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

மனைவியின் முகம் மிகவும் வாடியிருப்பதைக் கண்டு நெஞ்சம் துணுக்குற்றான்.

''சாம்பவி, ஏன் ஒருமாதிரி இருக்கே? உடம்புக்கு முடிய வில்லையா? தொடர்ந்து விருந்தாளிகள் வருவதை சமாளிக்கக் கஷ்டமா இருக்கா? அம்மாவைக் கவனிச்சுக் கொண்டு, வீட்டு வேலை செய்துகிட்டு, வந்தவங்களையும் உபசரித்து அனுப்பறது ரொம்ப சிரமமான காரியந்தான். மறுபடி அந்த நர்ஸ் கமலாவை உதவிக்குக் கூட்டிக் கொள்ளலாமா?'' மிகவும் அன்புடன், அனுதாபத்துடன் கேட்டான்.

அலமாரித் தட்டுகளில் அவனது உடைகளை அடுக்கிக் கொண்டிருந்த அவளுக்கு அழுகை குமுறிக் கொண்டு வந்தது. 'உங்க தாயார் வேறு ஒரு திட்டம் தீட்டியிருக்காங்க. என்னை ஒதுக்கிட்டு மாயாவைத் தன் மருமகளாக ஏத்துக்க விரும்பறாங்க. எனக்குக் கொடுத்த வாக்கை நிறைவேத்தப் போறீங்களா, இல்லாட்டி... உங்கம்மா பேச்சின்படி என்னை என்னை'' மேலே சிந்திக்க முடியாது புரண்டு கொண்டு வந்த துக்கத்தில் துடித்த உதட்டைக் கடித்துக் கொண்டு தளும்பிவிட்ட பயமுறுத்திய கண்ணீரை சமாளித்தபடி கீழே விழுந்து விடாதிருக்க ஆதரவாக அலமாரிக் கதவைப் பிடித்துக் கொண்டாள்.

நேரிடையாக அதற்குள் அவள் அவனைக் கேட்க சாத்யப்படாதே! இன்னமும் மரகதம்மாள் பூரண குணமடையவில்லையே! தாயின் பேச்சைக் கேட்டுத் தவறு செய்யப் போகிறானா? தாரத்துக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றப் போகிறானா? முடிவு எடுக்க வேண்டியவன்

பார்த்தீபன்.

''ஒன்றுமில்லை. அத்தையின் உடம்புக்கு சீக்கிரம் குணமாகலையேன்னு கவலைப்படறேன். நடக்க முடியாம படுத்துக் கிடக்கிறதைப் பார்த்தால் ரொம்பப் பாவமா இருக்கு... முன்னே பின்னே கொஞ்சம் வேலை இருந்தாலும் என்னால் சமாளிக்க முடியும்னு நம்பிக்கை இருக்கு. நீங்க கவலைப்பட வேண்டாம். அவங்க இரவு சாப்பாட்டுக்கு உங்களுக்காகக் காத்திருப்பாங்க... தயவு செய்து இறங்கி வரீங்களா....'' சொல்லிவைத்துவிட்டு... பதிலுக்குக் காத்திராமல் வெளியேறி விட்டாள்.

மறுநாள் காலை சாம்பவி மாமியாருக்கு காப்பி பலகாரம் எடுத்துக் கொண்டு வந்தபோது மீண்டும் அறைக்குள் பேச்சுக் குரல் கேட்டது. தயக்கமாகக் கதவின் முன் நின்றாள்.

பகவதி அம்மாளுக்கு இயற்கையாகவே பெரும் குரல். தனிவாகப் பேசியபோதிலும் வார்த்தைகள் கணீர் என்று ஒலித்தன. உள்ளே போவதா - அல்லது திரும்பிவிடுவதா என்று சாம்பவி யோசிக்குமுன்... பகவதியின் வாயில் தன் பெயர் அடிபடுவதைக் கேட்டு ஆத்திரத்துடன் நின்று விட்டாள்.

''மரகதம், இந்த யோசனை உனக்கு சாம்பவியை மனுக்குக் கட்டிவைக்கிறதுக்கு முந்தியே வந்திருக்கணும். நீ சொல்றபடி என் மகளை மறுதாரமாகக் கொடுக்க முடியாதே. சட்டத்திலே அதுக்கு இடமில்லையே...''

''சட்டத்தைக் கொண்டு உடைப்பில் போடு. உன் கையிலே திணித்து நான் இரண்டாயிரம் ரூபாய்களை எதுக்குக் கொடுத்தேன் தெரியுமா?''

''என் கைச் செலவுக்குக் கொடுத்தேன்னு சந்தோசப் பட்டேன்.''

''ஒரு பாதியை உன் செலவுக்கு வச்சிக்கோ - மீதியை கஷ்டத்தில் ஆலோசனைக்கும் தாராளமா செலவழி.''

''குழப்பறயே மரகதம்.... விவரமா சொல்லு.''

''நான் ரொம்ப படிச்சவ இல்லே. இருந்தாலும் உலகத்திலே நடக்கிறதைப் பார்த்துப் புரிஞ்சுகிட்டவ. தெற்குத் தெரு பத்மாவை உனக்குத் தெரியுமில்லையா. அவ மகளுக்கு மூணு வருஷத்துக்கு முன்னாடி கல்யாணமாச்சு. பக்கத்துக் கிராமத்திலேதான் பெண்ணைக் கொடுத்திருந்தா. எல்லாப் பூனையுமான வாழ்க்கை. நாலு மாசத்துக்கு முந்தி அந்தப் பொண்ணுக்கு விவாகரத்து கிடைச்சுட்டது. தாய் வீட்டில் வந்து மக சேர்ந்துட்டா, என்னவோ படிச்சு வேலைக்குப் போகப் போறாளாம் அந்த பையனுக்கு மறு கல்யாணம் ஆயிடுச்சு...''

''உன் மகன் பார்த்தீபன் சங்கதியே வேறேயாச்சே. அவன் ரொம்ப விரும்பித்தானே சாம்பவியைக் கட்டிக்கிட்டிருக்கான்.''

''அந்தப் பொறுப்பை என்கிட்டே விட்டுடு. நீ இன்னிக்குப் பகல் பஸ்சிலே புறப்பட்டு பக்கத்து டவுனுக்குப்போய் கலைத் தெருவிலே ஆபீஸ் வச்சு நடத்தற வக்கீல் அய்யாவு மூர்த்தியைப்பார். சட்டம்னு ஒண்ணு இருந்தா அதுக்குள்ளாற எத்தனை ஓட்டைகள் இருக்கு. எப்படி சுளுவா புகுந்து புறப்படலாம்னு வக்கீல்களுக்கு நல்லாவே தெரியும்.... அவர் தக்க ஆலோசனை சொல்வார்.''

''மரகதம் நீ நிச்சயமாக தீர்மானிச்சுட்டியா?''

''என் மனதிலே ஒரு உறுதி ஏற்பட்டுச்சு. இந்த சாம்பவினை இங்கிருந்து ஒழிச்சுக் கட்டினால்தான் எனக்கு இனி நிம்மதி.''

''அப்படின்னா நான் கட்டாயம் வக்கீலைப் போய் பார்க்கிறேன் மரகதம்.''

அதற்கு மேல் அவளால் அங்கே நிற்க இயலவில்லை. துயரம், ஆத்திரம், திகில் என்ற கலவை உணர்வில் நெஞ்சு கனத்தது - உடல் நடுங்கியது. சாப்பாட்டறை மேஜை மீது தட்டை வைத்துவிட்டு நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

மாடிப்படியில் இறங்கி வந்த கணவனைக் கண்டதும் அவள் மார்பு வேகமாகத் துடித்துக் கொண்டது.

அன்று சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவரிடம்

இதைப்பற்றிப் பேசிக் கேட்டுவிட்டால்... என்ன பதில் சொல்லுவார்... பார்த்தீபன் என்ன சொல்லுவார்... தன்னுள்ளே எண்ணிக் கொண்டு நெஞ்சு வேகமாகத் துடிக்க, மூச்சுமுட்ட பதைபதைப்பை கடித்துக் கொண்டு, தன் பொறுமை எல்லாவற்றையும் இழுத்துப் பிடித்துக் கொண்டு, மரகதம்மாள் அறைக்குள் மீண்டும் உணவுத் தட்டுடன் நுழைந்தாள்.

21

வழக்கம்போல அன்று இரவு சாம்பவி குளிர்நீர் கொண்ட செம்பும் டம்ளரும், ஐஸ் துண்டங்கள் நிறைந்த பிளாஸ்க்கும் கொண்ட தட்டைத் தூக்கிக் கொண்டு மாடிக்குக் கிளம்பினாள்.

ஒரு சில நிமிடங்களாவது கணவனுடன் தனியே இருக்க நேர்ந்த அந்த சந்தர்ப்பத்தை அவள் நாள் முழுவதும் எதிர்நோக்கிக் கொண்டிருப்பது வழக்கம் - இன்று அவனிடம், தான் கேட்க நேர்ந்த அந்த சங்கதியைச் சொல்லி அவன் பதிலைக் கேட்டுவிட வேண்டுமென்று ஆவல் கலந்ததொரு ஆவேசம்.

என்ன பதில் சொல்லுவார்? என்ற ஆவலின் எதிர்பார்ப்பில் ஏற்பட்ட பரபரப்பில் உடல் நடுங்க, நெஞ்சு படபடக்க நின்றவள் முன் பகவதி குறுக்கிட்டாள்.

''உன் அத்தை அங்கே உன்னை அவசரமாகக் கூப்பிட்டாங்களே, தட்டோட நீ இப்போ எங்கே போய்கிட்டு இருக்கே....'' மிகவும் கடுமையான குரலில் அதட்டினாள்.

சாம்பவி அதிர்ந்து போனாள். விருந்தாளியாக வீட்டுக்கு வந்தவளுக்கு எஜமானியை அதட்ட என்ன உரிமை? யார் அதிகாரம் கொடுத்தது?

கோபத்தில் முகம் சிவக்க... தட்டுடன் அவள் வேகமாக மரகதம்மாளின் அறைக்குள் புகுந்தாள்.

தலையணை அடுக்குகள் மீது சாய்ந்து கிடந்த மரகதம் நிமிர்ந்து உட்கார்ந்தாள். சாப்பாடு போட்டுட்டு மருந்து

கொடுத்ததும் கடமை முடிஞ்சுட்டுதுன்னு தினமும் உடனே கிளம்பிடறியே? அப்படி அங்கே என்ன அவசரம்?''

''உங்க மகன் சில சமயம் கதவைத் தாளிட்டுகிட்டு தூங்கி விடறார். கதவைத் தட்டி அவர் தூக்கத்தைக் கலைக்க விரும்பலை. அதனாலே...''

''போதும். உன்னை எனக்கு நல்லாத் தெரியும். பார்த்தீபன்கிட்டே சித்தநேரம் பல்லை இளிச்சுக்கிட்டு பேசிக்கிட்டிருக்கணும். இல்லாட்டா உனக்குத் தூக்கம் வராதே....''

''நானும் என் கணவரும் வைராக்கியமாக உங்க சொற்படி விலகி வாழறோம். அவர் கேட்கும் இரண்டொரு கேள்விகளுக்கு நான் பதிலளிப்பதுகூட குற்றமா அத்தை? அவருக்கு வேண்டியவைகளைக் கொண்டு வைத்து உபசரிப்பதுகூடத் தப்பா?'' படபடவென்று கேட்க வேண்டும் போன்ற ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. புயலாக உள்ளே வந்த பகவதியையும் அவள் பின் மித மிஞ்சிய ஒப்பனையில் குப்பென்று செண்ட் மணக்க பின் தொடர்ந்த மகளையும் கண்டு விட்டு உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''என் காலும் கையும் வலியிலே துவண்டுப் போகுது -டாக்டர் மேலே பூச ஒரு களிம்பு தந்துட்டுப் போயிருக்காரே அதைக் கொஞ்சம் எடுத்துப் பூசிக் கொஞ்ச நேரம் பிடிச்சுவிடேன்...''

மவுனமாக நின்ற மருமகளைக் கோபத்துடன் வெறித்தாள் மரகதம்.

''நான் பேசிக்கிட்டே இருக்கேன். நீ மரமாட்டம் நின்னா என்ன அர்த்தம். நீ கொண்டு ஐஸ் தண்ணி வைக்காட்டி பார்த்தீபன் தொண்டைக் காஞ்சி போயிடாதே கவலைப்படாதே,'' சீறினாள்.

''மாயா! அந்தத் தட்டை நீ வாங்கிக்கிட்டு போய் மாடியறையிலே வச்சுட்டு வாம்மா-'' என்று கனிவான குரலில் அருகில் நின்ற அந்தப் பெண்ணுக்கு உத்தரவிட்டாள்.

சாம்பவி திடுக்கிட்டுப் போனாள். மாமியாரின் தந்திரம் அவளுக்கு நன்றாகவே புரிந்து விட்டது. பார்த்தீபன் மனதில் சலனத்தை உண்டாக்க இப்படி ஒரு திட்டமா?

இது மரகதம்மாளின் முன் ஏற்பாடு. இல்லாவிட்டால் மாயா மெல்லியதொரு ஷிபான் சேலையுடன்... தடபுடலான ஒப்பனையுடன் அங்கே ஏன் வரவேண்டும். படுக்கப் போகும் நேரத்தில் ஏன் இந்த அலங்காரம்.

பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு பலவித சிந்தனையில் மனம் தவியாகத் தவிக்க மருந்து பாட்டலில் இருந்த களிம்பை விரலால் வழித்து மாமியார் கால், கைகள் மீது மெல்லப் பூசிப் பிடித்து விட்டுக் கொண்டு படுக்கை அருகே நின்றாள்.

மரகதம்மாளுக்குப் பிடிக்காத மருமகள் அவள். அந்த வெறுப்பை தினமும் அவள் பலவிதத்தில் காட்டிக் கொண்டிருக்கிறாளே, அது போதாதா? அவள் கண்முன்னே அவள் கணவனை வேறு ஒரு பெண்ணுக்குத் தானம் செய்யத் துணிந்து விட்டாளே. எத்தனை ஒரு மட்டமான எண்ணம். எவ்வளவு பெரிய கொடுமை? அவளது பெண்மைக்கு அந்த செய்கை எத்தனை ஒரு அவமானம்?

எச்சிலை விழுங்கிக் கொண்டாள். தன் பொறுமை எல்லாவற்றையும் திரட்டிக் கொண்டு மாமியாரின் காலைப் பிடித்துவிட்டபடி நின்று கொண்டிருந்தாள்.

தன் அறைக் கட்டிலின் மீது சாய்ந்தபடி நாளேட்டைப் புரட்டிக் கொண்டிருந்த பார்த்தீபன் கண்கள் சுவற்றில் தொங்கிய கடிகாரத்தை அடிக்கடி பார்த்தன.

செய்தித்தாளின் மீது கவனமின்றி வராந்தாவிலே எழுப்போகிற காலடி ஓசைக்காகக் காதை கூர்மையாக்கிக் கொண்டு காத்திருந்தான். மெல்ல ஓசைப்படாது கதவைத் திறந்து கொண்டு அவள் அறைக்குள்ளே புகுமுன்... அவளது தலையில் சூடிக் கொண்டிருக்கும் மல்லிகையின் மணம் காற்றில் கலந்து முகத்தில் மோதி அவனைப் பரவசப்படுத்தும்... மவுனமாக அவள் தன் வேலையைக் கவனித்துக்

கொண்டிருந்தாலும் அவன் சும்மா இருந்ததேயில்லை.

''கோடு போட்ட ஷர்ட்டையா எடுத்து வைக்கிறே?''

''அதுதான் இந்தப் பாண்ட்டுக்குப் பொருத்தமா இருக்கிறாப்பல தோணுது.''

''உனக்குப் பிடிச்சிருந்தா சரி...''

''நாளைக்கு வெளியே போக போட்டுக்கப் போகிறவர் நீங்க. உங்களுக்குத்தான் பிடிச்சிருக்கணும்...'' மெல்லிய குரலில் பதிலளித்து விட்டு சாம்பவி அவன் முகத்தைப் பார்க்கும்போது.... அவன் மேனி சிலிர்த்துப் போவான்.

அவளது அழகும் பருவமும் அவனது உணர்வுகளை ஆட்கொள்ளும். அவளது அன்பும் பண்பும் - மிருதுவாகப் பேசும் தன்மையும் அவனது சிந்தனையைத் தூண்டிக் கிளர்ந்து விடும்.

'சாம்பவி! நானும் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் கொஞ்ச நாட்களில் அம்மா எழுந்து நடந்து விடுவாங்க. பிறகு நீயும் நானும் இல்லற வாழ்வில் இயற்கையை ஒட்டி வாழப்போகிறோம்.'

'சாம்பவி!... அந்த நாட்கள் வெகு தொலைவில் இல்லை...'

தன்னுள்ளே பலவும் கூறிக்கொண்டு அவளைக் கனிவுடன் பார்ப்பான்.

நெற்றி மீது புரளும் அவளது கூந்தலை ஒதுக்கி, மேல் உதட்டிலே முத்தாகப் பொடித்துள்ள வியர்வையைத் துடைத்துவிட்டு... 'சாம்பவி! ரொம்பக் களைச்சுப் போயிருக்கிறியே — வேலை நடுவே கொஞ்சம் ஓய்வு எடுக்கிறதுக்கென்ன?' என்று அனுசரணையாகப் பேசி அவளைத் தன் மார்போடு அணைத்துக் கொஞ்ச வேண்டுமென்று ஆவேசமாக எழுகிற ஆசையில் அவன் துடியாகத் துடித்துப் போவான்.

அதற்குப் பதில்...

''அம்மா நல்லா சாப்பிட்டாங்களா? டாக்டர் இன்னிக்கு

வந்தபோது என்ன சொன்னார்?''

''ஆமாம் அதென்ன கைவிரலில் பிளாஸ்த்திரி. சமையல் செய்யறபோது காயம் ஏற்பட்டுடிச்சா!''

''நீ என்னத்துக்கு கடினமான வேலை எல்லாம் செய்யணும். அதுக்குத்தான் ஆள் வச்சிருக்கோமே?''

இப்படி ஏதாவது அவ்வப்போது சில வார்த்தைகளைக் கனிவாகப் பேசுவது வழக்கம்.

அவளது நலனில் தான் கொண்டிருந்த அக்கறையை இவ்வாறு வெளிப்படுத்த அவன் மிகவும் ஆசைப்பட்டான்.

அவைகளுக்குப் பதில் சொல்ல அவள் தன் அறையில் சில திருஷ்டிகள் தங்க நேரிட்டதை அவன் வரவேற்றான்.

சில நிமிடங்களேதான் என்றாலும், தனிமையில் அவளுடன் உணர்விலாது ஒன்றியிருப்பதை அவன் மிகவும் விரும்பினான்.

வராந்தா அதிரும்படி கேட்ட காலடி ஓசை அவனைத் திருக்கிடச் செய்தது. குப்பென்று அறைக்குள் வீசிய அந்நிய நாட்டு செண்டின் மணம் அவனைத் திகைக்கச் செய்தது. பத்திரிகையைப் போட்டுவிட்டுத் திரும்பினான். கையில் தட்டுடன் மாயா வாயிற்படியருகே நின்று கொண்டிருந்தாள்.

''நான் உள்ளே வரலாமில்லையா?'' கேட்டபடி மிகவும் நளினமையோடு அறைக்குள் புகுந்து தட்டை மேஜை மீது வைத்துவிட்டு எதிரே கிடந்த நாற்காலியில் உட்கார்ந்துக் கொண்டாள்.

''ராத்திரி நீங்க பால் சாப்பிடற வழக்கமில்லையா'' கொஞ்சலாக அவள் கேட்டபோது பார்த்தீபன் உள்ளூர நெகிழ்ந்து போனான்.

''என் பழக்க வழக்கமெல்லாம் என் மனைவிக்குத் தெரியும்'' எரிச்சலுடன் பதிலளித்தான்.

''பழகினா நானும் உங்க பழக்க வழக்கங்களைப் புரிஞ்சுக்க மாட்டேனா...?'' உதட்டுச் சாயத்தின் இடையே பளிச்சிட்ட வரிசைப் பற்கள் தெரிய சிரித்துக் கொண்டு எழுந்து அருகில்

வந்தாள்.

அவள் பூசிக்கொண்டிருந்த சென்டின் மணம் அவன் வயிற்றைக் குமட்டியது.

''என்ன படிச்சுக்கிட்டிருந்தீங்க-நான் பார்க்கலாமா?'' கேட்டபடி குனிந்து கட்டிலின்மீது கிடந்த பத்திரிகையை எட்டிப் பார்த்தாள். அவளது முந்தானையின் முகப்பு அவன் தோள்மீது விழுந்தது.

நெருப்புப் பட்டுவிட்டது போலத் துடித்துப் போய் சட்டென்று எழுந்து நகர்ந்து நின்று கொண்டான்.

''சாம்பவிக்கு அப்படிக் கீழே என்ன வேலை? உங்களை ஏன் அனுப்பியிருக்காள்?'' பற்களைக் கடித்தான்.

''சாம்பவி அத்தைக்கு மருந்துப் போட்டு தேய்ச்சு கையாள் பிடிக்க வேண்டி இருந்தது. அதனால் அத்தை என்னைத் தண்ணி கொண்டு வந்து வைக்க அனுப்பிச்சாங்க - ஏன் நான் வந்தது தப்பா...''

களுக்கென்று சிரித்த அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுக்க வேண்டும் போலக் கோபத்தில் அவன் கொதித்துப் போனான்.

அறையை விட்டு ஒரே எட்டில் வெளிவந்து வராந்தாவின் மரக்கைப்பிடிமீது சாய்ந்தபடி கீழே குனிந்து ''சாம்பவி! சாம்பவி!'' என்று ஓங்கிக் கத்தினான்.

கையைக் கழுவி துவாலையில் துடைத்துக் கொண்டு நின்ற சாம்பவி, பதைபதைத்துப் போனாள்.

''இதோ வந்துட்டேன்!'' என்று பதில் கொடுத்தபடி... ஒரே மூச்சில் மாடிப்படிகளைக் கடந்து மூச்சிறைக்கக் கணவன் அறைக்குள் வந்து நின்றாள்.

பார்த்தீபன் கோபத்துடன் மாயாவின் பக்கம் திரும்பினான். ''தயவு செய்து நீங்கள் கொஞ்சம் வெளியே போய் விடுகிறீர்களா? நான் என் மனைவியுடன் தனியாகப் பேச விரும்புகிறேன்'' கடுமையாகச் சொன்னான். கண்ணில் நீர் பொங்க சாம்பவியை வெட்டிவிடுகிறவள் போல் பார்த்த மாயா

ஆத்திரத்துடன் அறையை விட்டு... வராந்தா அதிர நடந்து கீழே இறங்கிச் சென்று விட்டாள்.

''அப்படி உட்கார் - உன் கிட்ட பேசணும்'' நாற்காலியைக் காட்டிவிட்டு கதவைத் தாளிட்டுக் கொண்டு படுக்கை மீது உட்கார்ந்தான் பார்த்தீபன். முதல் நாளுக்குப் பின் அதுவரை அவன் அவளிடம் அப்படி அதட்டிப் பேசியதும் இல்லை அவன் முகத்தில் அத்தனை கோபத்தையும் அவள் கண்டதில்லை... கையும் காலும் நடுங்க அவள் அச்சத்துடன் உட்கார்ந்தாள். ''சாம்பவி! நீ படிச்சவ. அப்படியிருந்தும் புத்தி கெட்டு, கல்யாணமாகாத ஒரு பெண்ணை இரவில் இந்த வேளையில் என் அறைக்கு அனுப்பறதின் நோக்கம்?''

''அத்தைதான் அனுப்பி வைச்சாங்க - அவங்க உத்தரவை நான் எப்படி மீற முடியும்?''

''அப்போ மாயா சொன்னது உண்மைதானா? இரண்டு வேலைகளை ஒரே சமயம் கவனிக்க முடியாத காரணத்தாலே நீதான் அனுப்பி வச்சேன்னு தவறா நினைச்சேன். மன்னிச்சுக்கோ'' என்று கனிவான குரலில் பேசிக் கொண்டு அருகில் வந்து நின்ற கணவனை நிமிர்ந்து பார்க்காது சாம்பவி எழுந்தாள். அன்று இரவே அவள் கேட்க நினைத்த அந்தக் கேள்விகளுக்குப் பதில் கிடைத்து விட்டதை உணர்ந்தாள். மகிழ்ச்சியும் பெருமையும் மனத்தை நிறைத்தன.

''என்ன அவசரம்? அம்மாவுக்கு செய்ய வேண்டிய பணிவிடைகளைத் தான் முடிச்சுட்டியே. கொஞ்சம் சில்லுனு தண்ணி ஊத்திக்கொடு,... தாகமா இருக்கு'' என்று சொல்லிவிட்டு படுக்கையின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டான்.

செம்பிலிருந்து நீரை மெல்ல டம்ளரில் ஊற்றி ஃபிளாஸ்க்கிலிருந்து இரண்டு ஐஸ் துண்டங்களைக் கிடுக்கியால் எடுத்துப் போட்டு பிஞ்சு விரல்களால் டம்ளரைத் தூக்கி வந்து அருகில் அன்போடு நீட்டிய பாங்கினைக் கண்டு பூரித்துப் போனான்.

அவளது ஒவ்வொரு அசைவிலும் எத்தனை பணிவு

—குரலில் எத்தனை குழைவு — வார்த்தைகளில் எத்தனை அருமை — மனதிற்கு அதனால் அவனுக்கு எத்தனை அமைதி?...

இவளைப் போல ஒரு மனைவியை அவன் உலகம் முழுவதும் தேடினாலும் கிடைப்பாளா...?

அம்மாவின் உடல் பூரண குணமடைந்ததும் சாம்பவியை அவன் அன்பாகக் கவனித்துக் கொள்ளவேண்டும்.

இழந்து போன நாட்களை ஈடுசெய்வதுபோல அவளை அவன் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை... அழைத்துச் சென்று... அவள் ஆசையுடன் கேட்பதை வாங்கிக் கொடுத்து... மகிழ்ச்சியில் பூரித்துப் போகும் அந்த சிவந்த முகத்தை வருடி...

''இந்தாங்க'' என்று நீட்டிய டம்ளருடன் அருகில் அவள் வந்தபோது கற்பனையினின்று திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.

கையில் வாங்கத் தவறிய டம்ளர் அவன் கால் பக்கம் தரையில் டங்கென்ற சப்தத்துடன்... உருண்டு ஓட தண்ணீர் நாலா புறமும் சிதறிப் போனதைப் பார்த்து அவள் பயந்து விட்டாள்.

''ஏங்க, காலில் ஏதாச்சும் காயம் பட்டுவிட்டதா...'' கவலையுடன் கேட்டபடி அவள் குனிந்தாள். தன்னையும் மீறிய ஒரு ஆசையில் சட்டென்று அவளைத் தூக்கி நிறுத்தினான் பார்த்தீபன். — இருவரும் ஒருவரையொருவர் அன்புடன் பார்த்தபடி — கிறங்கி நின்றபோது கூடவே நேரமும் நின்று போனது போன்ற பிரமிப்பு ஏற்பட்டது.

22

மறுநாள் காலை — காப்பி பலகாரம் சாப்பிட்ட பின் கைகழுவ பீங்கான் அருகில் கணவன் வருவதற்குள் துவாலையுடன் சாம்பவி நின்று கொண்டிருந்தாள்.

நிருமணமானதிலிருந்து சதா கவலையும் சிந்தனையுமாகக் காணப்பட்ட அவன் முகம் அன்று காலையில் பளிச்சென்று தெரிவதைப் பார்த்தாள். அவளும் அன்று இரவு முழுவதும் கட்டுக் கொள்ளா மகிழ்ச்சியில் உறங்கவே இல்லை. காலையில் குளித்துவிட்டு மாற்றுடை அணிந்து கொண்டு கண்ணாடியருகே முடியைச் சீவிச் சீராக்கிக் கொள்ள நின்றவள் பார்த்தாள்.

பார்த்தீபன் அவளை நேசிக்கிறான் — அவளை மட்டுமே நேசிக்கிறான். அவளது அன்பைப் பெறத் தவங்கிடக்கிறான் என்ற உணர்வு தந்த தெம்பில் மனம் ஆனந்தத்தில் நிறைந்து விட்டிருந்தது. முகத்தில் களை கூடிவிட்டிருந்தது. அவள் முன்னைவிட இன்னும் அதிக அழகாக இருப்பது போன்று கண்ணாடியில் தெரிந்த உருவத்தைக் கண்டு — மகிழ்ந்து போனாள்.

''துவாலை கொண்டு வந்திருக்கேனே? நீங்க...'' என்று செல்லமாகச் சிணுங்கினாள். துவாலையில் கையைத் துடைக்காது அவளது புடவைத் தலைப்பின் ஒரு ஓரத்தில் தனது கரத்தையை அவன் துடைத்துக் கொண்டு நின்றான்.

''தெரிஞ்சுத்தான் செய்கிறேன்...'' மோகனமாகச் சிரித்தான்.

''இதென்ன விளையாட்டு? பாக்கிறவங்க என்ன நினைச்சுப்பாங்க...'' பொய்யாக கோபித்துக் கொண்டாள்.

''கணவனும் மனைவியும் கொஞ்சம் வேடிக்கையாக விளையாடுகிறாங்கன்னுதான் நினைச்சுப்பாங்க...''

''நீ இன்னிக்கு ரொம்ப அழகா இருக்கே தெரியுமா?'' அவன் புகழ்ந்தபோது மெய்சிலிர்த்து முகம் சிவந்து போனாள்.

''இப்பத்தான் உங்க முகமும் பழையபடி மாறியிருக்கு... கொஞ்ச நாளா... கடு கடுன்னு பார்க்க பயமா இருந்திச்சி...'' லேசாகச் சிரித்தாள் அவள்.

''ஒரு சிறு எதிர்பாராத நிகழ்ச்சி நம் மனதுக்கு இத்தனை மகிழ்ச்சி தந்து விட்டிருக்கிறதுன்னா — அம்மா பூரண குணமடைஞ்சு நாமிருவரும் நெருங்கி வாழத் தொடங்கினால்...'' வெட்கத்துடன் அவள் தலையைக் குனிந்து

கொண்டாள்.

மீண்டும் மீண்டும் அந்த எதிர்பாராத நினைவு வந்து நெஞ்சில் இன்ப சிலிர்ப்பூட்டியது.

''தேள் கொட்டினது போல அப்படி வெடுக்குனு கையை உதறிவிட்டு ஓடினியே... நான் அத்தனை பயங்கரமானவனா?''

''நமது வைராக்கியம் வெற்றி பெறப் போகும் சமயம் மனம் தளர்ந்துவிடக் கூடாதுன்னுட்டுதான் கீழே இறங்கி வந்துட்டேன்...''

''ஆமாம், இந்த விருந்தாளிகள் எப்ப ஊருக்குத் திரும்பப் போறாங்களாம். ஏதாவது உனக்குத் தெரியுமா? அம்மா உடம்புக்கு முடியாமப் படுத்திருக்கிறாங்க — சதா பேச்சுக் கொடுத்து அவங்களை யாரும் தொந்திரவு செய்யக்கூடாதுங்கிறது என் எண்ணம். டாக்டர் கூட அவங்களுக்கு ஓய்வு அதிகம் தேவைன்னு சொல்லியிருக்காங்க... எனக்கு இந்த வீட்டில் கூட்டமும் கூச்சலும் பிடிக்கலை.''

'என்னை மட்டும் உங்களுக்குப் பிடிக்குதா?' பரிகாசமாகக் கேட்க விரும்பினாள். கொஞ்ச தூரத்தில் பகவதி அம்மாள் அவர்களையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டு நிற்பதைக் கவனித்து விட்டாள்.

''அவங்க கூட இங்கே தங்கியிருப்பது அத்தைக்குப் பிடிச்சிருக்கு. நான் மறுப்பு சொல்ல முடியாது.''

''அம்மாவுக்கு அடுத்தபடியா நீ இப்போ இந்த வீட்டுக்கு எஜமானி. உன்னை யாரும் அதட்டி உருட்டிப் பேசி வேலை வாங்கினால் எனக்குப் பிடிக்காது. முந்தாநேத்து அந்த பகவதியம்மா ஒரு டம்ளர் மோர் எடுத்து வரச்சொல்லி உன்னை ஒரு வேலைக்காரியைப் போல ஏவினப்போ எனக்குக் கெட்ட கோபம் வந்திடுச்சு. வாசப்படியை தாண்டி வீட்டுக்குள்ளே வந்தவங்கன்னு... எரிச்சலை அடக்கிட்டு நான் மவுனமா இருந்தேன். அடுத்த வாட்டி அவங்க உன்கிட்ட அசட்டையாகப் பேசறது என் காதில் விழுந்துச்சோ — அவ்வளவுதான் மூட்டையைக் கட்டிக்கச் சொல்லி திருச்சியிலே கொண்டு

விட்டுவிட்டு வந்திடுவேன்.''

''அப்பப்பா — உங்களுக்கு எப்படிக் கோபம் வருது?'' பயந்தவள் போலத் தோள்களை மெல்லக் குலுக்கினாள்.

''உனக்குத் தெரிஞ்சிருக்கணும்...''

''உங்களைப்பத்தின சரித்திரத்தையே கடிதாசிகளாக எழுதி அனுப்பியிருக்கிறீங்களே — உங்களை எனக்கு ஓரளவு தெரியுமே...?''

''உன்னைப்பத்தித் தெரிஞ்சுக்கத்தான் எனக்கு சந்தர்ப்பமே இன்னும் வாய்க்கலையே...!''

போக மனமின்றி போதை கொண்டவன் போல அவளையே பார்த்தபடி நின்றான்.

''கடை திறக்கணுங்கிறதை மறந்துட்டா என்ன ஆறது...?'' அவள் மெல்லிதாகச் சிரித்து... சதங்கை ஒலியாகக் காதுகளில் விழ அவன் விழிப்புற்றான்.

உள்ளே சமையற்காரர் தயாரித்து நிரப்பி வைத்திருந்த தேநீர் நிறைந்த பிளாஸ்க்குடன் அவள் வாயிலுக்கு விரைந்தாள். அன்றாடம் அவள் செய்யும் பணிதான் என்றாலும் அன்று அவனுடன் சில துளி நேரம் கொஞ்சிப் பேசிய மகிழ்ச்சியில் உள்ளம் துள்ள உவகையோடு அவள் அவனுக்குக் கையசைத்து வழியனுப்பி கார் சாலைக்குள் மறைந்த பின்னரும்... அயர்ந்து போய் நின்றாள்.

சற்றுத் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாலும் பகவதிக்கு ஆத்திரமும் பொறாமையும் தாங்க முடியவில்லை.

மரகதம் என்னவோ புலம்புகிறாள் — ஆனால் மகன் இந்த மாலக்காரி காலடியில் மயங்கிக் கிடக்கிறானே... அந்த மயக்கம் தெளியக் கூடியதா?

அடுத்தபடியாக அவளுக்கு ஆத்திரமூட்டும் இன்னொரு நிகழ்ச்சி நடந்தது.

மாமியாருக்கு செய்ய வேண்டிய பணிவிடைகளை முடித்துவிட்டு சாம்பவி அந்த அறையினின்று வெளிப்பட்டு தன் பக்கம் போகத் திரும்பியவள் மரகதத்தின் இரும்பு

பீரோக்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த, அடுத்த அறைக் கதவு திறந்து கிடப்பதைக் கண்டாள். கவலையுடன் சட்டென்று எட்டிப் பார்த்தபோது அறைக்குள் பளிச்சென்று குழல் விளக்கெரிந்து கொண்டிருந்தது.

பகவதி, மரகதத்தின் பீரோவை அந்தச் சாவியால் திறந்து எதையோ தேடப் புடவைகளிடுக்கிலே குடைந்து கொண்டிருந்தாள். கடுமையான சுபாவம் உடையவள்தான் மரகதம். ஆனால் தன் சாமான்களைக் கருத்துடன்—நேர்த்தியாக — சுத்தமாக வைத்துக் கொள்வதில் திறமைசாலி. அவளது புடவைகள் நன்றாகத் துவைக்கப்பட்டு பெட்டி போட்டு அடுக்காக வைக்கப்பட்டிருக்கும். பீரோக்குள் எதை எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்றதொரு பாங்கு அவளது வேலையில் காணப்படும். அறையைச் சுத்தமாகப் பெருக்கித் துடைத்து வைத்திருப்பாள்.

மாமியாரின் பீரோவைத் திறப்பதில்லையே ஒழிய சாம்பவி அந்த அறையை அன்றாடம் பெருக்கி — சுத்தத் துணியால் துடைத்து ஜன்னல்களைச் சாத்தி கதவை வெளியே தாளிட்டு வைத்திருந்தாள்.

வீட்டுக்குள் வந்திருக்கும் விருந்தாளிக்கு என்ன துணிச்சல்! வீட்டு எஜமானியின் பீரோவைத் திறந்து எதையோ தேடுகிறாளே... திகைப்புடன் அவள் பார்த்துக் கொண்டு நிற்கையில், பகவதி கையில் அகப்பட்ட ஒரு கட்டு ரூபாய் நோட்டுகளை சட்டென்று மடியில் போட்டுப் புடவைத் தலைப்பை முறுக்கி இடையில் செருகிக் கொண்டாள்.

இன்னும் ஏதாவது கிடைக்குமா என்ற பரபரப்பில் அடுக்காக இருந்த மரகதத்தின் புடவைகளைக் கீரைபோல அள்ளிக் குலைத்துக் கொண்டிருந்தாள். அவள் செய்த திருட்டுக் காரியத்தைக் கண்டு சாம்பவி பதைபதைத்துப் போனாள். அவள் நெஞ்சு தீவிரமாக அடித்துக் கொண்டது. அங்கே உங்களுக்கு என்ன வேணும்...? என்று அதட்டிக் கேட்டபடி உள்ளே வந்து நின்றாள்.

பகவதி ஒரு கணம் பயந்து போனாள். ஆனாலும் மரகதம்

தன் பக்கம் இருக்கிறாள் என்ற துணிவில் அவளை ஏறிட்டுப் பார்த்தாள்.

''உன் மாமியார்தான் என்னை ஒரு சாமான் எடுத்து வரச்சொல்லி அனுப்பினா, என்ன அப்படிப் பார்க்கிறே?'' என்று உறுமிவிட்டு பீரோக் கதவை படார் என்று சாத்திப் பூட்டிவிட்டு நகர்ந்தாள்.

''ஏதோ பணம் எடுத்ததைப் பார்த்தேன். அத்தை எடுத்துத் தரச் சொன்னாங்களா?'' சாம்பவி குறுக்குக் கேள்வி கேட்டதைத் தாங்க முடியவில்லை. ஆத்திரத்தில் கொதித்துப் போனாள். ''பின்னே — உங்க வீட்டு சொத்தைக் கொள்ளை அடிச்சிட்டுப் போறதாக நினைச்சியா? உன் மாமியார் கொடுக்காம இந்த சாவி என் கைக்கு எப்படி வரும். பார்த்தா பாம்பு போல இருக்கே — பாஞ்சா புலியாட்டம் மாறிடறியே... மரகதத்துக்கு உன்னைப் பிடிக்காமப் போறதுக்குக் காரணம் இல்லாமப் போகலை. என்னை அதட்டறாப் போல அவளை நீ அதட்டி உருட்டி மிரட்டி உன் ராஜாங்கத்தை நடத்தியிருக்கே. அவள் இந்த வீட்டில் செல்வச் சீமாட்டியா வாழ்ந்தவ. உன் கையிலே சோறு திங்க கதி வந்துட்டதேன்னு நொந்து புலம்பறதிலே நியாயம் இருக்கு. வேணும்னா போய் உன் மாமியாரைக் கேளு...'' உரக்க சத்தமிட்டாள்.

தான் செய்த திருட்டை மறைக்க இந்த ஆர்ப்பாட்டமான நாடகம் என்பது சாம்பவிக்கு விளங்கி விட்டது... ஆனாலும் அவள் இதைப் பெரிதுபடுத்தி, வீட்டில் பெரும் அலவரத்தையும், குழப்பத்தையும் உண்டாக்க முடியாதே.

இந்த மாதிரியான அதிர்ச்சிகள் மரகதம்மாள் உடல் நிலைக்கு ஏற்றதல்லவே...

பார்த்தீபனிடம் அன்று இரவு மெல்ல விஷயத்தைச் சொன்னால்...? மவுனமாக அவளை வெறித்துவிட்டு அவள் மேலே தன் காரியங்களைக் கவனிக்கலுற்றாள்.

டாக்டர் வைத்தியலிங்கம் வந்து மரகதத்தைச் சோதித்துவிட்டு மிக்க மகிழ்ச்சியுடன் வெளியே வந்தார். வழக்கம் போலத் தயாராகக் காப்பி டம்ளருடன் அவருக்காக

சாம்பவி நின்று கொண்டிருந்தாள்.

''முன்னைவிட உன் அத்தை உடம்பு நல்லாவே குணமாகி இருக்கு. கையைத் தோள்பட்டை வரை, தானே தூக்க முடிகிறது. ஒரு டம்ளரை சிரமமில்லாமல் எடுக்க வருது. பேச்சு நல்லா தெளிவாகி விட்டது. காலைக் கீழே ஊனி ஒரு அடி எடுத்து வைக்கிற அளவு தசைகளுக்குத் தெம்பு வந்து விட்டது — இப்பத்தான் அவங்களை ரொம்ப கவனமாகப் பார்த்துக்கணும்.''

''அப்படியா டாக்டர்...''

''ஆமாம் அம்மா. அவர்களுடைய மனம் கலவரப்பட்டு ரத்த அழுத்தம் மேலாகி மறுபடி இது மாதிரியான ஒரு விபரீதம் வந்தா... உடம்பு தாங்காது. அதனாலே பத்திரமாப் பார்த்துக்கோ... நீ நல்லாவே பாத்துக்குவே. உன்னைப்போல பொறுமையான மருமகளை அவுங்க இந்த பூலோகம் முழுதும் தேடினாலும் கிடைக்க மாட்டா...''

''என்னை ரொம்பப் புகழுறீங்க டாக்டர்...'' முகம் சிவக்க... மகிழ்ச்சியுடன் காப்பி டம்ளரை எடுத்து நீட்டினாள்.

''ஆமாம், நீ எப்படி இத்தனை காரியங்களையும் ஒரே சமயம் கத்துகிட்டே. நல்லா — சமைக்கிறே — ரொம்பப் பொறுமையாப் புருஷனையும் — மாமியாரையும் பார்த்துக்கிறே... வந்திருக்கும் விருந்தாளிகளை சமாளிக்கிறே... வீட்டைத் திறமையா நிர்வகிக்கிறே...''

''டாக்டர், இதுக்கு மேலே உங்க புகழ்ச்சியைத் தாங்க முடியாது — நிறுத்திடுங்கோ'' மகிழ்ச்சியுடன் சிரித்தாள்.

தோட்டத்தைச் சுற்றிப் பார்வையிட்டுவிட்டு மெல்ல உள்ளே திரும்பிய பகவதிக்கு அதைக் காண ஆத்திரமாக இருந்தது.

வீட்டு வேலையாளிலிருந்து — டாக்டர் வரை இந்தச் சின்னப் பொண்ணுக்கு சலாம் அடிக்கிறாங்க — புருஷனும் கொஞ்சிக் குலாவுகிறான் — மாயாவிடம் இல்லாத அழகோ சாதுர்யமோ — படிப்போ அப்படி இவளிடம் என்ன அதிகம்

இருக்கு!...

டாக்டர் வைத்தியலிங்கத்திற்குக் கும்பிடு போட்டுப் பல்லைக் காட்டினாள் பகவதி...

''இப்போ மரகதத்து உடம்பு எப்படி இருக்கு... கொஞ்சம் தேறிகிட்டு வரதா...''

''மரகதம்மா என் நோயாளி — நான் அவங்களுடைய வைத்தியர். அவங்க நோய் எதனால் வந்ததுன்னோ — அது இப்போ எந்த நிலையில் இருக்கு என்பதையோ நான் மத்தவங்ககிட்ட சொல்லக்கூடாது. எங்க கொள்கை அது.''

''சாம்பவிகிட்டே மட்டும் சொல்லலாமா?'' காரமாகக் கேட்டாள் பகவதி...

''அவங்க மரகதம்மாளின் மருமகள் — பார்த்தீபன் பெரியம்மாளின் மகன். இந்த வீட்டுக்கு இப்போ இவங்க ரெண்டு பேருந்தான் எஜமான் — எஜமானி. நோயாளியைப் பத்திப் பொறுப்பேத்துக் கொண்டிருக்கும் நெருங்கிய உறவினர்கள். அவங்ககிட்ட சொல்றது எங்க கடமை...'' டாக்டர் முகம் கடுத்துக் கொண்டு பேசியதைக் கேட்டு... பகவதி வெகுண்டு போனாள்.

சாம்பவி இந்த வீட்டு எஜமானியாமே... கேட்டு தாலாளியிலிருந்து வீட்டுக் கன்னுக்குட்டி வரை இதையே சொல்லிக்கிட்டிருக்காங்களே. இந்த வீட்டைவிட்டு இவளை துரட்டையைச் சுருட்டிக்கிட்டு ஓட வைக்காட்டி என் பெயர் பகவதி இல்லை... பற்களைக் கடித்துக் கொண்டு தன்னுள் ஆவேசமாக சொல்லிக் கொண்டாள்.

''அப்படியா, மன்னிச்சுக்கோங்க...'' என்று கூறிவிட்டு சாம்பவியை அவள் பார்த்த பார்வை...

பார்வையிலே எரிக்க முடிந்திருந்தால் சாம்பவி அந்தக் கணமே சாம்பலாகி விட்டிருப்பாள் — அத்தனை ஒரு ஆத்திரக் கனல் அவள் கண்களில் எரிந்தது.

23

குளியலறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு தன் மடியிலிருந்த நோட்டுகளை ஆவலுடன் எண்ணிப் பார்த்தாள் பகவதி.

ரூபாய் இரண்டாயிரத்திற்கு மேல் இருந்தது.

இன்னும் கொஞ்சம் நேரம் எடுத்துக் கொண்டிருந்தால் துவாலை மடிப்புகளிடையேயும் — வெள்ளி வெற்றிலைப் பாக்கு பெட்டிக்குள்ளும் கணிசமான தொகை கிடைத்திருக்கும் என்று மனம் ஆதங்கப்பட்டது.

மரகதம் பெரும் பணக்காரி — கணவர் மரணமடையுமுன் தமது சொத்துக்களை மனைவி — மகன் இருவருக்கும் சமபாகமாகப் பிரித்து உயில் எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தார்.

''பெண்ஜாதி வந்தபின் என்னைக் கவனிக்காட்டி கூட அக்கறையில்லை. நான் மாலையிட்ட மகராஜன் என்னைத் தெருவில் நிறுத்திட்டுப் போகலை. அள்ளித் திங்க சோற்றுக்கு குறையில்லாமல் வச்சுட்டுப் போயிருக்கார்...'' பகவதி அங்கே வந்த போதெல்லாம் மரகதம் பெருமை அடித்துக் கொண்டது உண்டு.

அந்த வயதிலும் விதவையான நிலையிலும் கோயில்களுக்கு டாம்பீகமாக உடுத்திக் கொண்டு, தன் நகைகளை அள்ளிப் போட்டுக் கொண்டுதான் போவாள்.

பகவதிக்கு மரகதத்தைக் கண்டு எப்பொழுதும் உள்ளூர பொறாமை.

கடைக்குப் புறப்பட்டால் நூறு ரூபாய் நோட்டுகளை அசட்டையாகத் தன் கைப்பையிலிருந்து உருவி எடுத்து அவள் கடைக்காரரிடம் நீட்டுவதைக் கண்டு பகவதிக்கு வயிற்றெரிச்சல்.

பணத்தில் புரண்டு கொண்டிருந்தவள் இப்போது தோய்ந்தாளியாகப் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறாள் என்றவரை ஒரு குரூரமான ஆனந்தம்.

மரகதமே அழைத்து உறவு கொண்டாடி சீராட்டிக் கொண்டிருக்கும்போது இந்த வாய்ப்பை நழுவ விடலாமா?

இந்தப் பாவிப் பெண் சாம்பவிக்குப் பாம்புக் கண். அவள் செய்த காரியத்தைப் பார்த்துவிட்டாள் — கேட்டும் விட்டாளே?

பார்த்தீபனிடம் சொல்லி தன்னை அவமானப்படுத்து முன் அவள் முந்திக் கொண்டுவிட வேண்டும்.

முகத்தைக் கழுவிக் கொண்டு பகவதி மெல்ல வெளியே வந்தாள்.

மரகதம் உறக்கத்தினின்று விழித்துக் கொண்டு படுக்கை மீது மெல்ல நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

''என்ன மரகதம்! உன்னைத் தனியாக விட்டுவிட்டு சாம்பவி என்ன செய்கிறாள்? தாகத்திற்கு சாப்பிட கொஞ்சம் பால் கூடா எடுத்து வரட்டுமா...?'' பரிவுடன் கேட்டாள்.

மரகதம் படுக்கைமீது சிறிது அசைந்ததும் ஓரமாக ஒதுக்கப்பட்டிருந்த அந்த சாவிகள் தொப்பென்று சப்தத்துடன் கீழே விழுந்தன.

''அட! உன் இரும்பு பீரோ சாவிகள் — இவைகளை இப்படி அலட்சியமா கீழே நழுவ விட்டுட்டியே — யார் கையிலாவது அகப்பட்டால்...'' மிகவும் கவலையுடன் கேட்டாள். அவைகளை எடுத்து தலையணை அடியில் வைத்து விட்டு மரகதத்தின் படுக்கையில் காலோரத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

''கொஞ்சம் கால்களைப் பிடிச்சு விடறேன்...'' என்று மரகதத்தின் கால்களைத் தொட்டவள் தேள் கொட்டியது போல அதிர்ந்து கொண்டாள்.

''அட பாவமே — கணுக்கால் கிட்டே தண்ணி கட்டிகிட்டிருக்கே — டாக்டர் வரப்போ நீ கேட்டிருக்கப்படாதோ? வருகிற மனுஷன் நின்னு நிதானிச்சு

பார்த்து மருந்து கொடுக்கனும் — ஒரு அஞ்சு நிமிஷத்துலே வேலையை முடிச்சுட்டு — உன் மருமகளோட சாப்பாட்டறையில் நின்னுகிட்டு கதை பேசறார் — வயதில் பெரியவர்தான் — இருந்தாலும் இந்தக் காலத்தில் யாரையும் நம்பக் கூடாது.''

''இந்த வீட்டுக்கு வர ஆம்பிள்ளைகள் எல்லோரும் அவகிட்ட நின்னு பல்லைக் காட்டறான்கள். அது அவங்க தவறில்லை. இவதான் பெரிய மேனாமினுக்கியா இருக்காளே...'' மரகதம் பற்களைக் கடித்தாள்.

மரகதத்தின் கால்களை மெல்லப் பிடித்து விட்டபடியே பகவதி பேசினாள்.

''உன்கிட்ட கேட்காம நான் யார்க்கிட்ட சுவாதீனமா கேட்கப் போறேன்? இன்னிக்குப் பகல் நான் அந்த வக்கீலைப் போய்ப் பார்க்க பஸ்சில் டவுனுக்குப் போகப் போறேன். அப்படியே அங்கேயிருக்கிற நகைக் கடையில் மாயாவுக்கு ஒரு காதணி வாங்கப் பிரியப்படறேன். தங்கம் விக்கிற விலையில் ஒரு ஆயிரம் ரூபாய்க்கு மேலாகும். அதனாலே இன்னும் கொஞ்சம் பணம் கைமாத்தாக் கொடுத்தால்...''

சாதாரண நாட்களாக இருந்தால் மரகதம் தன் பணத்தை அப்படி அள்ளிக் கொடுத்து விடமாட்டாள்.

இப்பொழுது அவளுக்கு பகவதியின் தயவு தேவை. சாம்பவியை ஒழித்துக் கட்ட மாயாவை அவள் மருமகளாக்கிக் கொள்ள வேண்டும்.

உள்ளே வந்து நின்ற சாம்பவியை அவள் கடுமையாகப் பார்த்தாள்.

''படுக்கையைத் தட்டிப் போடும்போது நீ ரொம்ப அஜாக்கிரதையாக இருக்கே - பகவதி சொல்லாட்டி என் இருமல் பீரோ சாவிகள் குப்பைத் தொட்டிக்குப் போயிருக்கும்'' சீறினாள்.

சாம்பவி திடுக்கிட்டுப் போனாள். இதென்ன புதுக்கதை? வீட்டுக்கு விருந்தாளியா வந்திருப்பவள் பகவதி.

ஜாக்கிரதைக்காரி. எச்சரிக்கையாக இனி இருக்க வேண்டும்... கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''ஏது கேட்டாலும் ஊமைக் கோட்டான் போல மவுனமா இருக்கிறே - போ. சாவிகளை எடுத்துட்டுப் போய் பீரோவைத் திறந்து என் புடவைகள் அடுக்கு நடுவே கொஞ்சம் பணம் வச்சிருக்கேன் - அதிலிருந்து ஒரு ஆயிரம் எடுத்துட்டு வா...'' உத்தரவிட்டாள்.

சாம்பவி பீரோவைத் திறந்த போது - பகவதி செய்த அவசரக் கோலத்தில் புடவைகள் பல சரிந்து கீழே விழுந்தன. புடவைகளை எடுத்து தட்டி மடித்து ஒழுங்காக வைத்துவிட்டு... தேடினாள்.

மரகதம் சொன்னபடி பணம் ஏதும் அவைகள் இடையே இருக்கவில்லை. உண்மை அவளுக்குத் தெரியும். மாமியாரிடம் அதை எப்படிச் சொல்லுவது? திரும்ப வெறுங்கையுடன் உள்ளே வந்தாள்.

''இத்தனை நாழி ஏன்? போனாப் போன இடம் வந்தா வந்த இடம்'' அலுத்துக் கொண்டாள் மரகதம்.

''அத்தை, புடவைகள் எல்லாத்தையும் எடுத்து உதறி மடிச்சு வச்சேன், நீங்க சொன்னபடி அதுகள் இடையே பணம் ஏதும் இருக்கலை.''

மரகதம் முகம் சிவந்து போனாள் - ஆத்திரத்தில் அவள் நெஞ்சு கொதித்தது.

''நம்ப வீட்டு அழகான கல்யாணம் முடிஞ்சதும் வீட்டுக்கு வந்தப்போ கையில் மிச்ச மீதி வச்சிருந்த பணத்தை உள்ளே வைக்கும்போது நான்தானே எண்ணி வச்சேன். படுக்கைலே இடந்தானும் இந்த வீட்டிலே எந்த இடத்திலே எதை வச்சிருக்கேன்னு எனக்குத் தெரியுமே? எனக்கு நீ காது குத்துறே இல்லையா...?'' கோபத்துடன் உரத்துக் கூவினாள்.

''மரகதம் - இரைஞ்சு பேசாதே. உடம்பு கெட்டுடும் - உன் ஆரோக்கியத்துக்கு மேலேயா இந்தப் பணம்...'' ஆறுதலாகக் கூறுகிறாள் பகவதி.

''போ... இங்கே நிக்காதே...'' என்று மருமகள் மீது எரிந்து விழுந்தாள் மாமியார்.

சாம்பவி வெளியே சென்றதும் பகவதி எழுந்து தன் கைகளைப் பீங்கானில் கழுவிக் கொண்டாள்.

''உன் மருமகளுக்குக் கொஞ்சம் கை நீளம். நானும் வந்ததிலிருந்து கவனிச்சுக்கிட்டுதான் வரேன். என்ன செய்கிறது முன்னே பின்னே இத்தனை பணத்தை ஒரேயடியா பார்த்திருந்தால் தானே - கொஞ்சம் பல்லைக் கடிச்சுகிட்டு பொறுமையா இருங்க. இதுக்கு ஒரு முடிவு கட்டிடலாம். இப்ப நீ கொடுத்ததை வச்சு மெல்ல கொடுத்தாப் போச்சு...'' என்று தணிவாகப் பேசிவிட்டுத் தலைமறைவாகினாள்.

அன்று பொழுது கவிழும் நேரந்தான் அவள் வீட்டுக்குத் திரும்பினாள்.

கைகளில் தூக்கமாட்டாத பொட்டலங்களுடன் அவள் உள்ளே வருவதைக் கண்ட சாம்பவிக்கு ஒரே வியப்பு.

ஊரான் வீட்டுப் பணத்திலே இந்தம்மா உற்சவம் கொண்டாடுகிறாங்களே? இதை அவள் கணவன் கண்டு கொள்ளாவிடில் நிலைமை மோசமாகி விடுமே... கவலைப் பட்டாள்.

இரவு வழக்கம்போல அவள் கணவனது துவைத்துப் பெட்டி போட்ட உடைகளுடன் மாடியறைக்கு விரைந்தாள்.

பார்த்தீபன், அறைக்குள் முன்னும் பின்னுமாக உலவிக் கொண்டிருப்பதைக் காண அதிர்ச்சியடைந்தாள்.

மேஜைமீது அவன் மறுநாள் உடுத்த வேண்டிய ஆடைகளை எடுத்து வைத்து விட்டு அவள் திரும்பு முன் பார்த்தீபன் கதவை அடைத்துக் கொண்டு அருகில் வந்தான்.

''அப்படிக் கொஞ்சம் உட்கார். பேச வேண்டும்'' என்றான்.

படுக்கையின் ஓரத்தில் உட்காராது அவன் அறையை இன்னமும் அளந்து கொண்டே பேசினான்.

''சாப்பிட்ட பிறகு அம்மாவைப் பார்க்க அவங்க அறைக்குப் போயிருந்தேன். அவங்க பீரோவிலிருந்த பணத்தை

நீ எடுத்துக் கொண்டு விட்டதாக உன் மேல் புகார் சொன்னாங்க.''

''நீங்க என்ன நினைக்கிறீங்க?''

''நீ அப்படிப்பட்ட காரியம் செய்வாய்ன்னு நான் ஒரு தரமும் நம்ப மாட்டேன். உங்க பணத்தை சாம்பவி ஏன் எடுக்கணும்? அவள் என் மனைவி — அள்ளிக் கொடுக்க நான் இருக்கிறேன். இதுவரை அவள் தன் செலவுக்குன்னு பத்து பைசாகூட என்கிட்ட கேட்டதில்லை... அப்படி இருக்கும் பொழுது அவ மேலே ஏம்மா இப்படி பழி சுமத்திறீங்கன்னு தர்மமையா கேட்டுட்டு அந்த சாவிகளை எடுத்து என் சாவிக்கொத்தில் மாட்டிக் கொண்டு விட்டேன்.''

''அத்தை என்ன சொன்னாங்க?''

''பெத்தவ பேச்சை மதிக்க மாட்டேங்கிறியேன்னு கொஞ்சம் கோவிச்சுக் கொண்டாங்க.''

''பெத்த தாய் நோயாளியா இருக்காங்கன்னு அவங்க கோபதாபமெல்லாம் பொறுத்துக்கணும் - அவங்க பேச்சுக்கு மதிப்புத் தரணும்னு நானும் சில மாசமா பாடுபடறேன். அம்மா... அதைப் போல என் உணர்வுகளுக்கும் நீங்க மதிப்புத் தரணுமில்லையா... என் மனைவியை திருடினிட்டும் - நடத்தை கெட்டவள்னும் மறை முகமா நீங்க பேசறதைக் கேட்க எனக்கு நல்லாவா இருக்கும்னு பதில் சொல்லிட்டு வந்துட்டேன்.''

''ஐயோ, அவங்க மனம் ரொம்ப சங்கடப்படுமே?''

''நான் மட்டும் மனச்சங்கடப்பட மாட்டேனா சாம்பவி என்னைக் கட்டிக் கொண்டது முதல் உனக்கு இந்த வீட்டில் என்ன சுகம் கிடைச்சிருக்கு சொல்லு? ஊரார் முன்னே என்னை அவமானப்படுத்தக் கூடாதுன்னு நீ உன் கடமையைக் கைவிடாம கொத்தடிமையா உழைக்கிறே... அதைப் புரிஞ்சுக்காம அம்மா கண்டபடி பேசினதைக் கேட்க என்னால் சகிக்க முடியலை. அம்மா! இந்த வீட்டிலே இப்போ நடக்கிற சங்கதி அத்தனையும் எனக்குத் தெரியும் - தொடர்ந்து நீங்க முட்டாள்தனமா இருந்தா பின்னால் வருத்தப்படப் போறீங்க''ன்னுட்டு வந்துட்டேன்.

''அத்தை இதைக் கேட்டு அழுதிருப்பாங்களே?''

''அம்மா அழுதிருக்கலாம். ஆனால் இப்போ உன் கண்களில் வழிகிற கண்ணீர் எனக்கு எத்தனை மன வேதனையைத் தருகிறது தெரியுமா சாம்பவி... நான் உன்னை அறிவேன் - இது எப்படி நடந்திருக்கிறதுன்னு என்னால் ஊகிக்க முடியும். எதுக்கு நீ கண்ணீர் விடறே...?'' கனிவாகச் சொல்லியபடி மிக அருகில் நெருங்கி தன் கைகுட்டையால் அவளது கண்களைத் துடைத்தான் - முன் நெற்றியில் - புரண்டு கிடந்த கூந்தலை ஒதுக்கிவிட்டு அவளது முகத்தை நிமிர்த்தினான்.

திடுக்கிட்ட சாம்பவி எழுந்து நின்றாள்.

''என்ன, அதுக்குள்ளே கீழே போகணுமா? நீ கண் கலங்கிப்போனதைப் பார்த்தேன். மனம் துன்பப்பட்டுடிச்சு. நீ கொஞ்சம் சிரிச்சுட்டுப் போனால்தானே எனக்கு இன்று இரவு தூக்கம் வரும்.''

''நீங்க என்னைப் புரிஞ்சுகிட்டதைப் பற்றி நன்றி. இன்பம் துன்பம் என்ற இரு உணர்வுகளில் எது நம்மை ஆட்கொண்டாலும் இந்தத் தனிமையில் அது நமது வைராக்கியத்தின் எதிரியாகிவிடும்... அதனாலே நான் கிளம்பறேன்'' புன்னகைத்தாள்.

''இப்போ நீங்க நல்லா தூங்கலாம்... என்னை என் கணவர் நாளடைவில் நன்றாகவே புரிஞ்சுக்கிட்டார் என்கிற மகிழ்ச்சியில் சிரிக்கிறேன்...'' என்று கூறிவிட்டு லேசாகச் சிரித்தபடி தன் கைகளை அவனது பிடியினின்று உதறிவிட்டு வேகமாகப் படிகளில் இறங்கினாள்.

இன்ப உணர்வில் உள்ளம் பூரித்துப் பொங்கியது.

24

மரகதம்மாவுக்குத் தன் அழகு, படிப்பு, சங்கீத ஞானம் இவைகளைப் பற்றி எப்பொழுதுமே அதிக கர்வம் உண்டு.

மரகதம்மாள் வருந்தி அழைத்த விருந்தாளி என்ற தகுதியில் அந்தக் கர்வம் உச்சந்தலையை எட்டிவிட்டிருந்தது. அதனால் அவள் மரகதம்மாள் - பார்த்தீபன் இருவரைத் தவிர அந்த வீட்டிலுள்ள மற்றவர்களைத் துச்சமாகக் கருதினாள். வீட்டின் பெரிய எஜமானியிடம் மட்டும் குழைந்து கொஞ்சிப் பேசினாள். வேலையாட்களிடம் பேசாமடந்தையாக இருந்தாள்.

சாம்பவியைத் தன் பரம விரோதியாகப் பாவித்து வெறுத்தாள். அவளிடம் தவறிப் போய்க்கூட பேசவே விரும்பவில்லை என்பதை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டாள். தன் தாயுடன் அந்த வீட்டிற்கு முன்னர் வந்த போதெல்லாம் அவள் வீட்டையும் தோட்டத்தையும் வியப்புடன் சுற்றிப் பார்ப்பது வழக்கம்.

''மலைச்சுப் போய் நிக்காதே - இந்த வீட்டுக்கு நீதான் வருங்கால எஜமானியாகப் போகிறாய்.''

''மரகதம்மாளுக்கு உன்னைவிட அழகான படிச்ச மருமகள் எங்கே கிடைக்கப் போகிறாள். கொஞ்சம் பொறுத்துக்கோ... தானே நம்ம வீட்டுக்குப் பெண் கேட்க இவளை ஓடி வரச் செய்யறேன்!''

அடிக்கடி தன் மகளிடம் அரைக் குரலில் பேசி அவள் மனதில் பல கற்பனைகளை எழுப்பி விட்டிருந்தாள் தாய் பகவதி.

நிஜமென்று பார்த்தீபனுக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டதென்று கடிதத்துடன் மரகதம் திருமணப் பத்திரிகையை அவர்களுக்கு அனுப்பி விட்டிருந்தாள்.

அதைப் பார்த்துவிட்டுக் கூடத்துத் தரையில் குப்புறப் படுத்துக் கொண்டு அவள் அழுத அழுகை... மூன்று நாட்கள் சோறும், தண்ணீரும் இன்றிப் பட்டினியாக அவள் புலம்பி உகுத்த கண்ணீர்...!

மரகதம்மாள் வருந்திக் கூப்பிட்டதை ஒட்டி தாயுடன் அவள் வேண்டுமென்றே புறப்பட்டு வந்திருந்தாள்.

பார்த்தீபன் அப்படியென்ன ஒரு மாபெரும் அழகினை மணந்து கொண்டு விட்டிருக்கிறான் என்பதை நேரில் பார்க்க வேண்டுமென்ற அவா.

வந்த இடத்தில் மரகதம் கொடுத்த நம்பிக்கை அவளுள் நீறு பூத்துக் கிடந்த ஆசை நெருப்பை நன்றாகவே கிளறி விட்டிருந்தது. மரகதம் கொடுத்த உற்சாகத்திலே அவள் மிக்க துணிவைப் பெற்று விட்டிருந்தாள். இழிவான காரியங்களில் பயமின்றி இறங்கினாள்.

அன்று இரவு அவள் பார்த்தீபனது படுக்கையறைக்குள் அந்தத் துணிவில்தான் வெட்கமின்றி - புகுந்தாள். அந்த செய்கை அவளது பெண்மைக்கு எத்தனை ஒரு இழிவு என்பதை மறந்தே போனாள்.

நாள் முழுவதும் உழைத்து சலித்துப் போய் வாடி நிற்கும் சாம்பவிக்கு முன் தன் செழிப்பான இளமையும் நேர்த்தியான ஒப்பனையில் மின்னும் அழகும் பார்த்தீபனை அப்படியே சொக்க வைத்துப் புத்தி தடுமாற வைத்துவிடும் என்று எண்ணிப் போனவளுக்கு எத்தனை பெரிய ஏமாற்றம்.

கடுமையான அவனது வார்த்தைகளால் அவமானம் மடைந்து போன மாயாவுக்கு சாம்பவி மேல் ஆத்திரம் குமுறிக் கொண்டு வந்ததில் வியப்பில்லை.

தனக்குப் பார்த்தீபன் கணவனாக வாய்க்காது போனாலும் பரவாயில்லை. சாம்பவியின் வாழ்க்கை அழிந்து அவள் வாழாவெட்டியாக பிறந்தகத்திலே கண்ணீர் உகுத்து மடிய வேண்டும் என்ற குரூரமான எண்ணம் அவள் மனதில் உறுதியடைந்து விட்டது. மருமகளைப் பிறந்த வீட்டுக்குத் துரத்த திட்டமிட்டிருந்த மரகதம்மாளுக்கு அவள்

பலவிதத்திலும் உதவத் தயாராகக் காத்திருந்தாள்.

பகவதியின் எண்ணங்கள் வேறு வடிவம் கொண்டிருந்தன. தன் மகளை அவள் பார்த்தீபனுக்கு மூன்றாவது தாரமாக வேண்டுமானாலும் கட்டிக் கொடுக்கத் தயார்.

ஆனால் பார்த்தீபன் ஏற்க மறுக்கலாம். அவளது திட்டம் வெற்றியடையாவிட்டால் பரவாயில்லை. ஏனெனில் அவள் அந்த எண்ணத்துடனேயே அங்கு புறப்பட்டு வரவில்லை.

கை கால் விழுந்த நோயாளியாகப் படுத்து விட்டிருக்கும் அகங்காரி மரகதத்தை வேடிக்கை பார்த்துவிட்டுப் போக வந்திருந்தாள். வீட்டில் இருக்கும் நிலைமை வந்தவளின் கற்பனையை வெகுவாகத் தூண்டிவிட்டிருந்தது.

மலை போலிருந்த மாமியார் நோயாளியாக எழுந்திருக்க சக்தியின்றிப் படுத்துக் கிடந்தாள். வாயில்லாப் பூச்சியாக மருமகள் வளைய வந்து கொண்டிருக்கிறாள்.

வீட்டின் நிலைமையை உற்றுக் கவனித்தால் மகனும் மருமகளும் சேர்ந்து இணைந்து இல்லற வாழ்க்கையைத் துவங்க ஆரம்பிக்கவில்லை என்றதொரு அவல நிலை புரிகிறது.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கையில் கிடைத்ததைச் சுருட்டிக் கொள்ள வேண்டும். அந்தப் பொருள்களைக் காசாக்கினால் மாயாவுக்கு இதைவிட ஒரு உயர்ந்த இடத்திலிருந்து இன்னொரு வரன் கிடைக்காமலா போய்விடும்?...

அதுவரைத் தன்னால் முடிந்தளவு மாயா, பார்த்தீபன் மீது சொக்குப் பொடி தூவிக் கொண்டிருக்கட்டும். மரத்தில் கல் எறிந்தால் பழம் விழுந்தால் விழட்டும் - கல் திரும்ப விழுந்தாலும் கவலை இல்லை என்ற மனப்போக்கு.

தாயும் மகளும் மரகதத்தின் திட்டத்திற்குத் தக்கபடி வளைந்து கொடுத்துக் கொண்டிருந்தனர்.

பிள்ளையின் திருமண விஷயத்தில்தான் மரகதம் தோற்று விட்டிருந்தாள். சாதாரணமாக அவள் எடுத்த எந்த முடிவிலும் தோல்வியைச் சந்தித்ததே இல்லை. அதனால் அவளது

பிடிவாதமும், முரட்டு சுபாவமும் கூடுதலாகி விட்டிருந்தன. தனக்குப் பிடிக்காத சாம்பவியைத் தொடர்ந்து வீட்டிலே வாழ அனுமதிப்பதில்லை என்று உள்ளூரக் கருவிக் கொண்டிருந்தாள் - அதற்காக மிகவும் மட்டமான காரியங்களில் பங்கெடுக்க அவள் மனம் கூசவேயில்லை.

அன்று மாலை, சிறிது தெம்பு கூடிவிட்டிருந்த தன் காலுக்கு மருந்து போட்டுத் தேய்த்து இதமாகப் பிடித்து விட்டுக் கொண்டிருந்த மருமகளை மிகவும் வஞ்சகமாகப் பார்த்தாள்.

ஒரே கணத்தில் அந்தத் திட்டம் மனதில் உருவாகி விட்டது. வேண்டுமென்றே இனிய குரலில் மாயாவைக் கூப்பிட்டுத் தன் இடது கரத்தை நீட்டி அவளைத் தன் அருகே செல்லமாக இழுத்துக் கொண்டாள்.

''வந்தன்னிக்கு உனக்கு நான் கொடுத்த அந்த ஆரஞ்சு வண்ண மைசூர் பட்டுப் புடவையை உடுத்திக்கிட்டு, பொன்னி உனக்காக வாங்கிக் கொண்டு வந்திருக்கிற கனகாம்பரத்தை தலையில் வச்சுகிட்டு இங்கே வா. பார்த்தீபன் கடையிலிருந்து வந்ததும் கூடப்போய் நம்ப வேதபுரிநாதருக்கு ஒரு அர்ச்சனை செய்துட்டு வா... செய்வியா?'' ...மிகவும் தணிவான குரலில் கொஞ்சலாகக் கேட்டாள்.

மாயா தலையை மெல்ல அசைத்து விட்டு... தனது பாம்புக் கண்ணால் சாம்பவியைப் பெருமையோடு பார்த்தாள்.

சாம்பவியின் மனம் ஆத்திரத்தில் அலை மோதியது.

திருமண நாள் அன்று அந்தக் கோயிலின் கல்யாண மண்டபத்தில் மணமேடையில் அவள் பார்த்தீபன் அருகே அமர்ந்திருந்த போது யாரும் காணாத சமயம் அவள் காதருகே மெல்லக் குனிந்த பார்த்தீபன் கிசுகிசுத்தான். ''கடிதத்தில் நான் எழுதியிருந்தபடி அம்மாவிடம் சொல்லி ஆரஞ்சு வண்ணப் பட்டுப் புடவையொன்றை வாங்க ஏற்பாடு செய்துவிட்டேன். கனகாம்பர மலர் சரமும் ஒரு பந்து வாங்கி வச்சிருக்காங்க. இன்று எங்கள் வீட்டுக்கு வரும்போது, உன்னை அந்த சேலையில் தலை கொள்ளப் பூவுடன் சந்திக்கப் போறேன். அந்திப் பொழுது வானத்தை மயக்கிறாப்பல ஆரஞ்சு வண்ண

சேலையில் நீ என் மனதை ரொம்ப மயக்கப் போறே...''

''உஸ்! யாராவது பார்க்கப் போறாங்க. மத்ததைப் பிறகு பேசிக்கலாம்...'' அவள் அன்புடன் அவனைக் கடிந்து கொண்டாள்.

மரகதம்மாள் பின்னர் மயங்கிவிழ அப்படிப்பட்டதொரு இனிய நிகழ்ச்சி அவர்கள் வாழ்வில் அமையாது... துயரம் மனதைக் கப்பிக் கொண்டு விட்டது தெரிந்த கதை.

அவளுக்கென்று வாங்கிய சேலையை மரகதம்மாள் பகவதியின் மகளுக்குப் பரிசாகக் கொடுத்ததை அவள் பொருட்படுத்தவேயில்லை. மாமியார் தன் பணத்தைப் போட்டு வாங்கிய பொருள். அதை யாருக்கு வேண்டுமானாலும் பரிசளிக்கும் உரிமை அவர்களுடையது என்று மவுனமாக இருந்து விட்டாள்.

ஆனால் மாமியார் அவளது உரிமையைப் பறித்து, வந்த பெண்ணுக்கு வழங்க நினைப்பதை அவளால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. தன் கணவனுடன் அவள் அன்று வரை ஜோடியாக வாசல்படியைக் கூடத் தாண்டவில்லை. காலம் வரும் என்று காத்திருந்தவளின் காதுகளில் நெருப்பைக் கொட்டுவது போலிருந்தது மரகதத்தின் கட்டளை.

பார்த்தீபன் விரும்பும் ஆரஞ்சு வண்ண சேலையை அலங்காரமாக உடுத்திக் கொண்டு மாயா அவனுடன் ஜோடியாகக் கோவிலுக்குப் போவதாமே? இது என்ன அநியாயம்... இதை அவள் கணவன் ஏற்பாரா?

கடையிலிருந்து திரும்பி வந்த பார்த்தீபன் தன் தாயைப் பார்க்க உள்ளே வந்ததுமே மரகதம் உத்தரவிட்டாள். ''வேதபுரிநாதருக்கு வேண்டிக்கிட்டிருக்கேன். ஒரு அர்ச்சனை செய்துட்டு வரணும்...'' என்றாள் தாயார்.

கோயில் என்றதுமே பார்த்தீபன் வேகமாகத் தன் அறைக்குச் சென்று குளித்துவிட்டு வேட்டி சட்டை உருமால் அலங்காரத்திலே புறப்பட்டு விட்டான்.

கையில் தேங்காய் பழக்கூடையுடன் தன்னுடன் வர மாயா

நிற்பதைக் கண்டு அதிர்ந்து போனான்.

''சாம்பவி தன்னைக் கவனிக்க வேண்டியிருப்பதால் உங்களோட என்னைக் கோயிலுக்குப் போய் வர அத்தைதான் அனுப்பினாங்க'' மோகனமாக முறுவலித்தாள் மாயா.

''உங்க அம்மாவும் கூட வரட்டும்...'' என்று அதட்டியபடி காரை நோக்கி நடந்தான்.

பின் ஆசனக் கதவைத் திறந்து மாயாவையும் அவள் தாயாரையும் உட்கார வைத்துவிட்டு... முன் பக்கம் தான் ஏறிக் கொண்டான். மிக அவசரமாகத் தோட்டத்தை விட்டு கார் விரைவதை ஜன்னல் வழியே சாம்பவி கவனித்தாள்.

வீட்டிற்கு வந்தவன் தாகத்திற்கு ஒரு வாய் காப்பி கூட குடிக்கவில்லை. அவளிடம் ஒரு வார்த்தை பேசவில்லை. அவள் முகத்தைக் கூட நிமிர்ந்து பார்க்க நேரமில்லாது அம்மாவின் பேச்சுக்கு அடிபணிந்து கோயிலுக்குக் கிளம்ப நேரிட்டதே!

நெருங்கிக் கொண்டு வரும் அவர்களது உறவை மண் வீட்டைக் கலைத்துவிடும் குழந்தையைப் போல... மாமியார் சண்டித்தனமாக ஏன் இடை புகுந்து கலைக்கிறாள்?

தாயின் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து... செயல்ப வேண்டிய சந்தர்ப்பங்கள் பார்த்தீபனுக்குத் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருந்தால்? மாயாவின் அலங்காரத்தை பார்த்தீபன் கவனித்தாரா! பார்த்தபோது அவர் மனதில் பாதிப்பு ஏதேனும் ஏற்பட்டதா? கணவனது அன்பு தன் ஒருத்திக்குத்தான் என்று அவள் புரிந்து கொண்டு அந்த மகிழ்ச்சியில் அமைதியாக வாழ நினைக்கும் போது... சஞ்சலங்கள் தரும் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏன் குறுக்கிட வேண்டும்!

விஸ்வாமித்திரன் கூட மிகவும் வைராக்கியமாகத் தானிருந்தான். என்ன ஆயிற்று. மேனகையின் முன் அவனது துறவு பொடிப் பொடியாகி விடவில்லையா?...

பார்த்தீபன் துறவி இல்லையே? சாதாரண மனிதன்தானே?

அவளது இதயத்தை யாரோ கசக்கி விட்டது போன்ற வேதனையில் நெஞ்சு முழுவதும் துயரம் நிரம்ப - அழுகை

தொண்டை வரை முட்ட - கண்களில் நீர் புரள... எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டு அவள் உள்ளே சென்றாள்.

25

பொழுது மங்கி இருள் பரவுவதை உணர்ந்து சாம்பவி பூஜையறை விளக்கை ஏற்றி வணங்கிவிட்டு வெளியே வந்தாள்.

அதற்குள் வேலையாள் வீட்டு விளக்குகள் அனைத்தையும் பளிச்சென்று எரிய விட்டிருந்தான்.

எல்லோருக்கு முன் மரகதத்திற்கு மருமகள் சூடாக சாப்பாட்டை எடுத்து வந்து உபசரிக்க வேண்டும். சற்று தாமதமானாலும் அவள் பச்சிளங்குழந்தையைப் போல சாப்பிட சண்டித்தனம் செய்து எரிச்சலுடன் மனம் நோகப் பேசி விடுவாள்.

மாமியாருக்கு உணவு கொடுத்து கை, முகம் கழுவித் துடைத்துவிட்டு படுக்கையை சரி செய்து படுக்க வைத்து இரவுக்கான மருந்துகளைத் தந்துவிட்டு அவள் வெளியே வருவதற்குள் கோயிலிலிருந்து பகவதியும் அவள் மகளும் திரும்பிவிட்டிருந்தனர்.

பகவதி நேரே வந்து மிகவும் உரிமையுடன் பிரசாதக் கூடையிலிருந்து விபூதி பொட்டலத்தைப் பிரித்து விரலால் தொட்டு மரகதத்தின் நெற்றியில் கீற்றிட்டாள்.

''சீக்கிரம் நீ எழுந்து நடமாடணும். முன்போல நீ, இந்த வீட்டின் ராணியா உலாவணும்னு மனம் உருகிப் பிரார்த்திச்சுகிட்டு வந்திருக்கோம். அப்படியே சீக்கிரம் நடக்கப் போகுது கவலைப் படாதே...'' என்று கூறிவிட்டு மாயாவுடன் பிரசாதக் கூடையுடன் சமையலறைக்குச் சென்றாள்.

வேண்டுமென்றே சாம்பவி காதுபட அவள் தங்கவேலுவுக்கு உத்தரவிட்டாள்.

''கோயிலிலிருந்து பிரசாதம் கொண்டு வந்திருக்கேன். விபூதி, குங்குமம் எடுத்துக்கோங்க. சாம்பவி அம்மாளையும் எடுத்துக்கச் சொல்லுங்க. கொண்டு வந்த தேங்காய் மூடி பாழாகாம உடனே துருவி, கொஞ்சம் உளுத்தம்பருப்பு காஞ்ச மிளகாய் இரண்டையும் வறுத்து வச்சு, புளியோட உப்பும் சேர்த்து ஒரு துவையல் அரைச்சுடுங்க. ராத்திரி சாப்பாட்டுக்குத் தொட்டுக் கொள்ள நல்லா இருக்கும்'' என்றாள்.

தங்கவேலு கோபத்தில் தாடை இறுகிப் போனார்.

''ராத்திரி என்ன சமைக்கிறதுன்னு சின்னம்மா சொல்லியதை சமைச்சு முடிச்சுட்டேன். நினைச்சப் போதெல்லாம் நான் அடுப்புகிட்டே போய் எதுவும் தயாரிக்கிற பழக்கமில்லை'' பட்டென்று பதிலளித்துவிட்டு அங்கு வந்து நின்ற வேலையாளிடம் பிரசாதக் கூடையை தூக்கிக் கொடுத்தார்.

''சிவன் கோயில் பிரசாதம். எடுத்துக்கிட்டு கூடையை கழுவிக் கொண்டு வந்து உள்ளே வை'' என்றார்.

முகத்தில் அடித்ததுபோல அவர் செய்கையால் பகவதி வெகுண்டு போனாள்.

''பழத்தை வேணா எடுத்துக்கட்டும் - தேங்காய் மூடியை ஏன் நீங்க அவனுக்குத் தானம் செய்கிறீங்க... இப்போ தேங்காய் விலை உங்களுக்குத் தெரியுமா?'' அதட்டினாள்.

தோள் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு தங்கவேலு முறைத்தார்.

''அதைப்பத்தி எங்களுக்கு அக்கறையில்லை. பின்பக்க தோட்டத்திலே இருந்து ஏராளமா தேங்காய் கிடைக்குது - நான் தாராளமா உபயோகிக்கிறேன். நான் சமையல் செய்கிறேன். எனக்கு விலைவாசிகளைப் பத்தி ஏன் அம்மா கவலை? மகராசன், வீட்டுக்குத் தேவையானதை சொன்னதும் வாங்கிப் போட்டு விடுகிறார் - நான் வேலை செய்கிறேன்...!''

உதட்டைக் கடித்துக் கொண்டு அவரை உறுத்துப் பார்த்தாள் பகவதி.

வாட்டசாட்டமாகத் தெரிந்த தங்கவேலுக்கு உடம்பைப் போலவே நெஞ்சழுத்தமும் திமிரும் வளர்ந்திருக்கின்றன. வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளின்னு மரியாதையில்லாமல் எப்படி வாயாடுகிறார்?

''நெற்றியிலே திருநீறுபட்டை நடுவே பெரிசா குங்குமப் பொட்டு வச்சுக்கிட்டிருக்கீங்களே - கோயில் திருநீற்றையும், குங்குமத்தையும் கொஞ்சம் தொட்டு வச்சுப்பிங்கன்னு கொடுத்தேன்...'' அவர் வாயை மேலும் கிண்டினாள்.

வீட்டின் தலைவி, சுமங்கலிப்பெண் அருகில் நிற்கும் போது வேலை செய்யும் தன்னிடம் கொண்டு வந்து கொடுத்து வேண்டுமென்றே சின்ன எஜமானியை அவள் அவமானப்படுத்துகிறாள் என்று புரிந்து கொண்ட தங்கவேலுவின் கோபம் கட்டுக்கடங்கவில்லை.

''போனவாட்டி நான் திருத்தணிக்குப் போனப்போ முருகனுக்கும் - வள்ளி தெய்வயானைக்கும் அபிசேக ஆராதனை செய்து திருநீரும் குங்குமமும் வேண்டியளவு கொண்டு வந்து வச்சிருக்கேன். அதைத்தான் நான் தினம் வச்சுக்கிற பழக்கம்...''

அடுப்படியிலே கரண்டி பிடிக்கிற கர்வமா? முதலில் இந்த மனிதனை இந்த வீட்டிலிருந்து ஒழித்துக் கட்ட வேண்டும். முகத்துக்கிட்டே சொல்லி முதலில் அதுக்கு வழி செய்தாகணும்... கருவியபடி பகவதி ஆத்திரத்துடன் தன் அறைப் பக்கம் சென்றாள்.

சாப்பாட்டறை மேஜை மீது தட்டுகளையும் தண்ணீர் டம்ளர்களையும் வைத்து விட்டு சாம்பவி காத்திருந்தாள். காரை போர்டிகோவில் கொண்டு நிறுத்திக் கதவைப் பூட்டியபின், தன் அறையைப் பார்க்கச் சென்ற பார்த்தீபன் அப்படியே மாடிப்பக்கம் போய்விட்டான். பின்னர் கீழேயே வரவில்லை. அதற்குள் பகவதியும் அவள் மகளும் சாப்பிட வந்து உட்கார்ந்து விட்டனர். சமையல் பாத்திரங்களைத் தூக்கிக் கொண்டு பரிமாறப் போய்விட்ட சாம்பவியைத் தடுத்து தங்கவேலு தாம் வாங்கிக் கொண்டார்.

''அய்யா, இன்னிக்கு ராத்திரி சாப்பிடக் கீழே இறங்கி வரப்போறதாக எனக்குத் தோணலை. இதுமாதிரி சமயங்களில் நான் அவருக்குப் பாலைக் காய்ச்சி எடுத்துட்டு போய்க் குடுக்கிற பழக்கம். அதனாலே நீங்க கொஞ்சம் பாலைக் காய்ச்சி இதமான சூட்டிலே கல்கண்டு போட்டு எடுத்துட்டுப் போய்க் கொடுங்க, இவங்களை நான் கவனிச்சுக்கிறேன்'' என்றார்.

'நான் இந்த வீட்டுக்கு வருமுன்னே அய்யாவின் பழக்க வழக்கங்கள் பலதை அறிவேன்...' சொல்ல வேண்டும்போல நாக்கு துடித்தது... லேசாக முறுவலித்துவிட்டு சமையலறைக்குள் விரைந்தாள்.

அறைக் கதவைத் தட்டிவிட்டு அவள் உள்ளே சென்றபோது பார்த்தீபன் படுக்கை மீது ஒருக்களித்து சுவற்றை பார்த்தபடி படுத்துக் கிடந்தான்.

பால் டம்ளரை முக்காலி மீது வைத்துவிட்டு கட்டிலை அணுகி மெல்ல அவன் தோளைத் தொட்டாள்.

''யார் மேலே கோபம் - இப்படி சாப்பிடாமே படுத்தா உடம்பு என்னத்துக்காகும்...'' மெல்லிய குரலில் கேட்டாள்.

விருக்கென்று எழுந்து உட்கார்ந்த பார்த்தீபன் வறட்சியாக சிரித்தான்.

''ஒரு பாவமும் அறியாத உன் மேல் கோபப்பட நான் மடையன் அல்ல. அம்மா ஏன் இப்படித் தாறுமாறாக காரியங்களை செய்ய ஏவறாங்கன்னு மனம் வேதனைபடுது. உணவு பிடிக்கலை. மாடிக்குப் படுக்க வந்துட்டேன்.''

''வேலையிலிருந்து வந்ததும் வழக்கமா கொஞ்சம் காப்பி சாப்பிடுவீங்க. அதுக்குக்கூட இன்னிக்கு உங்களுக்கு நேரம் இருக்கலை.''

''கோயிலுக்குப் புறப்படணும்னு அம்மா ஆளை யிட்டப்போ உன்னோடத்தான் கிளம்பப் போகிறோம்னு நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன். நாமிருவரும் இந்த வீட்டைவிட்டு ஜோடியா வெளியே எங்குமே இதுவரை போனதில்லையல்லவா!''

''விரைவில் அதுக்குக் காலம் வரும். அத்தை நல்லா குணமாகிட்டு வராங்க. அவங்க நடக்க ஆரம்பிச்சதும் தம்பிருவரும் வேதபுரிநாதன் கோயிலுக்குப் போய் அபிசேக ஆராதனை செய்துட்டு வரதாக வேண்டிகிட்டிருக்கேன்.''

''இன்னிக்குக் கோயிலில் என்னையும் மாயாவையும் சேர்ந்தாற்போல பார்த்தவங்க ஒரு மாதிரி நினைச்சிருப்பாங்க... அதைத் தடுக்கவேதான் நான் பகவதி அம்மாளையும் கூட்டிக் கொண்டு போனேன். ஆனால் அவங்க வேணுமின்னு என்னையும் மாயாவையும் தனியே விட்டுவிட்டு கோயில் வெளிப் பிரகாரத்தைச் சுத்த ஆரம்பிச்சுட்டாங்க. உங்க மனைவியை அழைச்சிகிட்டு வரலையான்னு அர்ச்சகர் கேட்டப்போ எனக்கு ரொம்ப அவமானமாக இருந்தது. இவங்க தான் உங்க சொந்தக் காரங்களான்னு வேறே கேட்டுவச்சார். ஆமாம், ஒண்ணுவிட்ட தங்கைன்னு சொல்லி சமாளிச்சேன். மாயா நடந்துக்கற முறையும் - அவள் அம்மா செய்கிற அட்டகாசமும் எனக்கு ரொம்ப வெறுப்பா இருக்கு. என் தாயார் இவங்க இரண்டு பேருக்கும் ஒரு தவறான சூழ்நிலையை அமைச்சுக் கொடுத்து - விவேகம் இல்லாம நடந்துக்கிறது எனக்குப் பொறுக்கவே முடியலை.''

''கொஞ்சம் பொறுமையா இருங்கோ.... இதுசமயம் அத்தைக்கிட்டே கோபப்பட்டு வார்த்தைகளை வாரி வீசினால் தமக்குத் தான் கஷ்டம். மறுபடி அவங்களுக்கு மூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டா உடம்பு தாங்காதுன்னு டாக்டர் எச்சரிச்சிருக்கார். அதனாலே எனக்கு பயமா இருக்கு.''

''சாம்பவி நீ என்னை நம்புறியா...'' அவன் குரல் தழதழத்தது.

''ஏன் அப்படி கேட்கிறீங்க - உங்களை நம்பாம நான் இந்த வீட்டிலே உங்க மனைவின்னு எப்படி வாழ முடியும் சொல்லுங்கோ...''

''நம்ப வாழ்க்கைப் பந்தயத்திலே இரு பக்கமும் பலர் நின்று கொண்டு கயிற்றை இழுக்கும் விளையாட்டைப் போலத்தானிருக்கு - அம்மா இந்தப் பக்கம் இழுக்க

-நாமிருவரும் அந்தப் பக்கம் இழுக்க - இது வே நம்பிக்கைங்கிற அந்தக் கயிறு தேய்ஞ்சு கொண்டே போ முடிவில் அறுந்துவிடும் போல எனக்கு ஒரே குழப்பமா இருக்கு...''

''அப்படியெல்லாம் கற்பனை செய்யாதீங்க - எனக்கு உங்கமேலே பூரண நம்பிக்கை இருக்கு. கவலையை விடுங்க இந்தப் பாலையாவது கொஞ்சம் சாப்பிடுங்கோ - நீங்க பட்டினியாகப் படுத்தா நான் எப்படி சாப்பிட முடியும்?...'' என்று மிகவும் ஆறுதலாகப் பேசிய வண்ணம் பால் டம்ளரை எடுத்துக் கொடுத்து உபசரித்தாள்.

பாலை வேகமாகப் பருகிவிட்டு டம்ளரை மேஜைமீது வைத்து மேல் துண்டால் வாயைத் துடைத்துக் கொண்டான் அவன்.

''நீங்க வந்தப்பவே இன்னிக்கு கவனிச்சேன் - உங்க முகம் ரொம்ப சோர்வா இருந்தது. காரணத்தை நான் தெரிஞ்சுக்கலாமா?''

''உன்கிட்ட சொல்லத்தான் இருந்தேன். அதுக்குள்ளே அம்மா செய்த குழப்பத்திலே, மறந்துட்டேன். மின்வினைப் பொருள்கள் விற்பனை செய்கிற கடை ஒண்ணை புதுசா நான் ஆரம்பிக்க திட்டம் செய்திருக்கேன். டவுனிலே நமக்கு சொந்தமாயிருக்கிற ஒரு கட்டடத்திலேதான் ஆரம்பிக்கப் போறேன். அதுக்குத் தேவையான சில சாமான்கள் வாங்கவும் வியாபாரத் தொடர்பு செய்து கொள்ளவும் நான் பம்பாய்க்குப் போக வேண்டியிருக்கு. நாளை புறப்படுவதாக ஏற்பாடு. ஒரு இரண்டு வாரமாகும்...''

''நீங்க நேரில் அந்த வியாபார சங்கதிகளைக் கவனிக்கணும்னா கட்டாயம் போய்த்தானே ஆகணும்?''

''நோயாளி அம்மாவையும் - உன்னையும் தனியே விட்டுட்டு... இந்த வேண்டாத விருந்தாளிகளையும் வீட்டிலே தொடர்ந்து தங்க விட்டுட்டுப் போக மனம் ரொம்ப சஞ்சலப்படுகிறது.''

நீங்க எங்கே போனாலும் நாள் முழுவதும் உங்களின்

பத்தின நினைப்பு எனக்குத் துணையாக இருப்பதால் நான் தனியா இருக்கப் போறேன்.

நீங்க வீட்டிலில்லாதபோது நான் அத்தையை இரட்டிப்பு பொறுப்போடு கவனிச்சுப்பேன் - அதனால் அந்தக் கவலையும் உங்களுக்குத் தேவையில்லை.

''இந்த விருந்தாளிகள் என்ன பேயா பிசாசா? என்னை முழுங்கியா விடுவாங்க... இதனால் அவங்களைப் பத்தியும் நீங்க விசாரப்படத் தேவையில்லை. நாளைக்குப் பயணம் சுப்பிபான்னு காலையிலே சொன்னா நான் உங்களுக்குத் தேவையான உடைகளை எடுத்துப் பெட்டியிலே அடுக்கித் தயாரா வச்சு உதவ முடியும். எல்லாத்தையும் உதறிட்டு இப்போ கொஞ்சம் தூங்க முயற்சிப்பீங்களா...'' வேடிக்கையாகக் கேட்டபடி அவனது கிராப்புத் தலையை விரல்களால் கோதினாள்.

நடுரென்று தான் ஐந்து வயதுக் குழந்தையாகி விட்டது போலவும் அருகில் நின்ற சாம்பவி அம்மா மரகதமாகி விட்டது போலவும் பிரமிப்பில் அயர்ந்து போனான். மனதிற்கு அவளது வார்த்தைகளும், அந்தச் சிறு கவனிப்பும் மிகவும் இதமாக இருந்தன.

''சாம்பவி நான் தூங்கற வரையிலும் சித்த இந்த அறையிலே படுக்கை பக்கத்திலே உட்கார்ந்திருக்க முடியா...'' மிகவும் குழைவாகக் கேட்டான்.

பளிச்சென்று எரிந்த விளக்கை அணைத்து -விடிவிளக்கைப் பொருத்திவிட்டு - மின் விசிறியை நிதானமாக சுழலவிட்டு போர்வையை அவன் கழுத்துவரை இழுத்துப் போர்த்தி விட்டு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள் அவள்....

சிறிது நேரத்தில் அவன் ஒரு பச்சிளங் குழந்தையைப் போல அமைதியாக உறங்கிப் போனான்.

மாடியிலிருந்து திரும்பி அவள் கீழே இறங்கி வந்தபோது படியருகே முகத்தில் கடுமை வழிய பகவதி நிற்பதைக் கண்டாள்.

பேயா - பூதமா என்று கணவனுக்கு ஆறுதலாகத்தான் சொன்னாளே ஒழிய பகவதியைப் பார்த்தபோது... ரத்தத்தை உறிஞ்சும் ஒரு காட்டேரியைச் சந்தித்து விட்டது போல மனதிலே ஒரு அச்சம் ஏற்பட்டது உண்மை!

26

பிரிவு என்பது இத்தனை ஒரு ஆழமான துயரமாக நெஞ்சைக் கப்பிக் கொள்ளும் என்று அவள் நினைக்கவேயில்லை.

திருச்சி வரை டாக்சியிலும், பின்னர் சென்னைக்கு ரயிலிலும் பயணப்பட்டு அங்கிருந்து விமானம் மூலம் பம்பாய்ப் பயணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டதாகக் கணவன் கூறியதும் அதற்குத் தக்கபடி பெட்டியில் தேவைக்கு வேண்டிய உடைகளை மட்டுமே வைத்து அவன் தானே தூக்கிக் கொள்ள எளிதாக இருக்கும்படி தயாரித்துக் கொடுத்திருந்தாள்.

தன் தாயிடம் சொல்லிக் கொண்டு வராந்தாவிலே வழியனுப்ப நின்று கொண்டிருந்த சாம்பவியிடம் அவன் ஒரு கடித உறையைக் கொடுத்தான். ''வரும்வரை வீட்டு செலவுக்குத் தேவைப்பட்ட பணம் இதிலிருக்கு. கவனமா படாதே - போனதும் வேலை சுளுவாக முடிஞ்சுட்டா அடுத்த வாரமே ஊருக்குத் திரும்பிடுவேன். எனக்கு மட்டும் உங்களையெல்லாம் விட்டுப் போக விருப்பமாவா இருக்கு...?''

கண் கலங்கிப் போய் நின்ற அவளது கன்னத்தைத் அன்போடு வருடினான். அருகில் காலடி ஓசை கேட்டு சட்டென்று நகர்ந்து கொண்டு திரும்பிப் பார்த்தான்.

அந்த வழியனுப்பும் காட்சியை நேரிடையாக நின்று ரசித்த பகவதி நடையைத் தாண்டி வெளியே வந்து கொண்டிருந்தாள்.

கணவன் - மனைவி பேசிக் கொள்வதைக் கூடத் தடுக்கத்

தடுவள் பூனைபோல இதென்ன குறுக்கீடு? சாம்பவிக்குக் கோபம் பொங்கியது.

தோட்டத்தைத் தாண்டி கேட்டைத் திறந்து கொண்டு பொழுது அமிழ்ந்து கொண்டிருந்த அந்த வேளையில் தெருக் கோடியில் வேகமாக மறைந்துவிட்ட டாக்சியைப் பார்த்தபடி பிரமையுடன் சிறிது நேரம் நின்றாள்.

கேட்டை சாத்திவிட்டு உள்ளே வந்தவள் மனம் கனத்தது. பளிச்சென்று வீடு முழுதிலும் விளக்குகள் எரிந்த போதிலும் அவளைச் சுற்றி இருள் பரவிக் கொண்டுவிட்டது போன்றதொரு இனைப்பு நெஞ்சை வருத்தியது. மாமியாருக்கு செய்ய வேண்டிய பணிவிடைகளை முடித்துக் கொண்டு இரவு உணவை வேண்டாவெறுப்புடன் முடித்துக் கொண்டு மாடியறைக்கு விரைந்தாள். கதவைத் திறந்து விளக்கைப் போட்டுவிட்டு அயர்ந்து போய் நின்றாள்.

கணவன் - மனைவி என்று வாழாது ஒதுங்கியிருந்த அவர்களிடையே சமீப காலத்திலே நேசமானதொரு நெருக்கம் ஆரம்பித்து விட்டிருந்தது. ''இப்படி உட்கார். உன்னோடு பேசணும்'' என்று அவளது கரத்தைப் பற்றி அவளை நாற்காலியில் பார்த்தீபன் அமரச் செய்வதை அவள் தடுக்கவில்லை.

அதைப்போல அவளும் அவனது நெற்றிமீது புரண்ட முடியை ஒதுக்கிவிட்டு முகத்தில் அரும்பிய வியர்வையைத் துண்டால் துடைத்துவிட்டு, போர்வையைப் போர்த்திவிட்டு உபசரணை செய்வதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருந்தான்.

அவனில்லாத அந்த அறையின் வெறுமை நெஞ்சைத் துயரில் இறக்குவதை உணர்ந்தாள்.

அலமாரித் தட்டுகளில் அடுக்காக வைக்கப்பட்டிருந்த அவனது உடைகளை மெல்லக் கரத்தால் தொட்டுப் பார்த்தாள்.

''இந்த வெளிர் நீல சட்டையை இந்த வாரம் இரண்டு வாட்டி நான் உடுத்த எடுத்து வச்சுட்ட, என்ன சங்கதி, பொட்டிபோட ஆள் வரலையா?'' என்று அவன் ஒரு நாள்

விசாரித்தபோது,

''இந்த ஷர்ட் உங்களுக்கு ரொம்ப எடுப்பா இருக்கு'' என்று வெட்கத்துடன் அவள் சொன்னதைக் கேட்டு... ''அப்படியானால் தினமும் நான் இதையே போட்டுகிடட்டுமா?'' என்று சிரித்ததை நினைத்தபோது... கண்கள் ஈரமாயின. நெஞ்சிலே சில்லென்ற ஒரு உணர்வு அவளது உடல் முழுவதும் பரவி... தேகம் நடுங்கியது.

இரண்டு நாட்களுக்கு முன் நடந்த அந்த நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டாள். இமைகள் மீது கனத்த கண்ணீர்த் திவலைகளை விரலால் தட்டி விட்டுக் கொண்டாள்.

அன்று அவளது பிறந்த தினம்.

பிறந்த வீட்டில் வாழ்ந்த நாட்களில் அவள் தாய் தன் குழந்தைகளின் பிறந்த தினத்தை அப்படி ஒன்றும் சிறப்பாக கொண்டாடியதில்லை. அவளது பிறந்தநாள் அன்று அம்மா அவளை அருகிலிருக்கும் விநாயகர் கோயிலுக்குப் போய்வர அனுமதிப்பாள். உண்டியில் ஒரு ரூபாயைப் போட்டுவிட்டு கற்பூர ஜோதியை வணங்கி அர்ச்சகர் நீட்டும் தட்டில் இருப்பத்தைந்து பைசா நாணயத்தைப் போட்டு விட்டு விபூதி குங்கும பிரசாதத்துடன் அவள் வீட்டுக்கு வருவாள்.

அன்று பகல் சாப்பாட்டின் போது அம்மா கொஞ்சம் பாயசம் காய்ச்சி வைத்திருப்பாள் - அவ்வளவுதான். புது ஆடை வாங்கித் தருதல் - அக்கம் பக்கத்தாரைக் கூட்டி விமரிசையாகக் கொண்டாடி மிட்டாய் வழங்க அவர்களது பொருளாதாரம் இடம் கொடுத்ததில்லை.

புக்ககத்தின் சங்கடமான நிலையில் அவள் தன் பிறந்த நாளைப் பற்றியே மறந்து விட்டிருந்தாள்.

தண்ணீர் செம்பை மேஜைமீது வைத்துவிட்டு வெளியே போகத் தயங்கியவள் அருகில் பார்த்தீபன் வந்தான்.

''காலையிலேயே சொல்லியிருக்கணும். வெளியே போகும் அவசரத்தில் பேசக்கூட பொழுது இருக்கலை. ஆனால் நான் மறக்கலை. உனக்கு என் பிறந்தநாள் வாழ்த்துகள்!'' என்று

மோகனமாகப் புன்னகைத்தான்.

''இன்னிக்கு என் பிறந்தநாளா - அட நான் மறந்து விட்டேனே!'' என்றாள் வியப்புடன் அவள்.

''நீ மறந்திருக்கலாம் - நான் மறக்கலை - உன் கடிதத்தில் நீ பிறந்த மாதம், தேதி, வருஷத்தைக் குறிப்பிட்டிருப்பதை அப்படியே நினைவில் பதித்து வைச்சுக் கொண்டிருந்தேன். உனக்கு சிறு பரிசு கொடுக்கப் போறேன்...'' என்ற படி தன் சட்டைப் பைக்குள்ளிருந்த ஒரு சிறு அட்டை பெட்டியை எடுத்துத் திறந்தான்.

அதிலிருந்ததொரு மோதிரத்தை எடுத்து அவளது இடது கை மோதிர விரலில் தானே அணிவித்தான். அவளுக்குப் பிடித்த நெளி மோதிரம் - அதில் பதித்திருந்த சிவப்புக் கற்கள் நெருப்பைப் போல பளிச்சென்று வீசுவதையும் - மோதிரம் தன் விரலுக்கு மிகவும் பொருத்தமாக இருப்பதையும் வியப்புடன் பார்த்து அவள் மகிழ்ந்து போனாள்.

''மிக்க நன்றி. ரொம்ப அழகா இருக்கு - இப்போது எதுக்கு இதை வாங்கினீங்க. பவுன் விக்கற விலையில் ரொம்ப விலையாயிருக்குமே...''

''திருச்சி வரை போய் உனக்கு ஒரு வைர மோதிரம் வாங்கிட்டு வர ஆசைப்பட்டேன். நேரம் இருக்கலை - டவுன் கடை ஒன்றில் இதைப் பார்த்தேன். எனக்குப் பிடிச்சது வாங்கிட்டு வந்துட்டேன்.''

''எனக்கும் ரொம்பப் பிடிச்சிருக்கு. ஆனால் இதை இப்போ நான் கழட்டி வச்சுடப் போறேன். வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளிகள் பார்த்தா அத்தைக்கிட்ட ஏதாச்சும் சொல்லி அவங்க மனதைக் குழப்பிடுவாங்க... அதனாலே...''

''உன் இஷ்டம்...'' கூறிவிட்டு அவளது தாழம்பூ வண்ணக் கரத்தைப் பற்றி அந்தப் பிஞ்சு விரலில் நெருப்பாக ஒளியிட்ட மோதிரத்தை சிறிது நேரம் அழகு பார்த்தான்.

பின்னர் கீழே வருமுன் அந்த மோதிரத்தைக் கழற்றி அவனது இரும்பு பீரோவில் வைத்துப் பூட்டி சாவியை

அவனிடம் கொடுத்தாள்.

''இதை பகிரங்கமா போட்டுக்கிற நாள் ரொம்ப வரப்போகுது. அப்போ அத்தைகிட்டே நானே இதைக்காட்டி என் பிறந்த நாளுக்கு நீங்க வாங்கித் தந்த பரிசுன்னு பெருமையா சொல்லிப்பேன் - அதுவரை இங்கேயே பத்திரமா இருக்கட்டும்'' என்று கூறிவிட்டு கீழே வந்தாள். இனம் காணா உணர்வில் கண்கள் பனித்தன.

பார்த்தீபன் படுக்கையின் மீது கிடந்த விரிப்பைத் தட்டிக் கொட்டி சீராக்கி தலையணையை ஒழுங்காக வைத்துவிட்டு... கீழே இறங்கி வர மனமின்றி நின்று கொண்டிருந்தாள்.

ஓசைப்படாது மாடிப்படிகளில் ஏறி அறைக்குள் புகுந்து இடுப்பில் கைகளை வைத்தபடி எதிரே வந்து நின்ற பகவதி அம்மாளைக் கண்டு அவள் திடுக்கிட்டுப் போனாள்.

''உன் மாமியார் அங்கே உன்னைத் தொண்டை காயக் கூப்பிட்டுகிட்டு இருக்கிறாங்க... இங்கே என்ன வேடிக்கை பார்க்கிற... போ கீழே'' காரமான குரலில் அதட்டலாகச் சொன்னாள்.

சாம்பவிக்குக் கோபம் கட்டுக் கொள்ளவில்லை.

'யாரது இவள்? அத்தையை விட ஒரு படி மேலாகத் தன்னைத்தானே மதித்துக் கொண்டு அவளை வந்து ஆணையிடுகிறாளே?'

''அறையைப் பூட்டிட்டு உடனே உன்னைக் கீழே வரச் சொன்னாங்க. உன் மாமியார்...'' அழுத்தலாகக் கூறிவிட்டு பகவதி விரைந்தாள்.

மரகதம்மாளின் அறைக்குள் நுழைந்ததுமே சாம்பவிக்கு ஒரு மூச்சு வசவு காத்துக் கொண்டிருந்தது.

அவன் ஊரில் இருக்கும் போதுதான் மாடிக்குப் போனா இறங்கி வர ஜாமப் பொழுதாகும்!

அவங்கிட்ட பேசி சிரிச்சு அவனை மயக்கி உன்கையிலே போட்டுக்கிட்டிருப்பது எனக்குத் தெரியாதா என்ன?

''ஊருக்கு அவன் கிளம்பிப் போன பிறகு அந்த வெத்து

அறையிலே உனக்கு என்ன வேலை? அவன் பீரோவைத் திறந்து பணம் ஏதாச்சும் இருக்கான்னு உருட்டிக்கிட்டிருந்தியா?'' அனல் தெறித்த விழிகளால் அவளை ஊடுருவிப் பார்த்து ஏசினாள் மரகதம்.

''அவர் பீரோ சாவியை தன் கையோட எடுத்துக் கொண்டு போயிருக்கார் அத்தை - அறையை சுத்தப்படுத்தி வச்சுட்டு வரப் போயிருந்தேன்'' முணகினாள் சாம்பவி.

''அத்தை, ஒரு காலத்தில் நீங்க என்னைப் போல இளம் பெண்ணாகப் புக்ககத்திற்கு வந்த புதிதில் உங்கள் கணவரைப் பிரிய நேர்ந்த சமயமெல்லாம் அவர் உபயோகித்த பொருள்களைத் தொட்டுப் பார்த்தாவது அவரது அருகாமையை, கற்பனை செய்து கொண்டு பிரிவின் தாபத்தை தவிர்க்க முயன்றதில்லையா! அத்தை அந்த வயதில் நீங்க கட்டாயம் உணர்ச்சி வசப்பட்டுப் போகும் என்னைப் போன்ற ஒரு பெண்ணாகத்தான் இருந்திருப்பீங்க இப்போத்தான் என்ன காரணமோ மனம் கல்லாகி...''

''போ... ஏன் நிக்கிறே. வீட்டுக் காரியங்களை மளமளன்னு கவனிச்சுட்டு வந்து என் காலைப் பிடிச்சுவிடு - வலி பிராணன் போகுது...'' எரிந்து விழுந்தாள்.

நேரம் நத்தையாக - பொழுது கனமாக, பார்த்தீபன் பிரிவு நோயாக மனதை வாட்ட அவள் எப்படியோ இரண்டு நாட்களைக் கடத்தி விட்டாள்.

மூன்றாவது நாள் மாலை கட்டுக் குடுமியும் - காதில் வெள்ளைக்கல் கடுக்கன்களும் - வேட்டி சட்டை அலங்காரத்திலே கைகளில் ஒரு துணிப்பையுடன் வந்து கதவைத் தட்டின ஆசாமியை வியப்புடன் பார்த்தாள்.

''நீங்கள் யார்? என்ன வேணும்?'' அவள் கேட்குமுன் பகவதி முந்திக் கொண்டாள்.

''செந்தூர்பட்டி ஜோசியர் ஞானதேசிகர்தானே? உங்களைத்தான் அம்மா காலையிலிருந்து எதிர்பார்த்துக் கிட்டிருக்காங்க - வாங்கோ...'' என்று வரவேற்று அவரை மரகதத்தின் அறைக்கு நேரே அழைத்துச் சென்றாள்.

இதென்ன விபரீதம் - இதெல்லாம் யாருடைய ஏற்பாடு? வைத்தியரிடம் ஆலோசனை பெற்று உடம்பு குணமடைய வேண்டிய வேளையில்... ஜோசியரிடம் என்ன கேட்கப் போகிறாங்க?... இந்த மந்திர மாயம், முதலியவைகள் பார்த்தீபனுக்குக் கொஞ்சமும் பிடிக்காதே?

பரபரப்புடன் அவர் பின்னால் மாமியார் அறைக்குள் அவள் நடந்தாள். மரகதம்மாள் கண்களால் ஜாடை செய்து மருமகளைத் தன் அருகில் அழைத்தாள்.

''பார்த்தீபன் வீட்டுச் செலவுக்கு உன்னிடம் பணம் தந்துவிட்டுப் போவதாகச் சொன்னான் - அதிலிருந்து ஒரு நூறு ரூபாயை எடுத்து ஒரு தட்டில் பழம், பாக்கு, வெற்றிலையோட தயாரா ஒரு பக்கம் வச்சிரு. நான் கூப்பிட்டனுப்பும் போது உள்ளே வந்தால் போதும்... அத்தோட என் அறையிலிருக்கும் மர அலமாரித் தட்டில் தேவாரப் புத்தகத்து நடுவிலே வச்சிருக்கும் என் ஜாதகத்தைக் கொண்டு வந்து ஜோசியர்கிட்ட கொடுத்துட்டு... நீ போய் உன் வேலையைக் கவனி...'' என்றாள்.

அறையின் கதவை மூடிக் கொண்டு அவர்கள் மூவரும் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

பொன்னி வந்து கூப்பிட்டதும் தட்டுடன் கிளம்பிய சாம்பவி அறைக்குள் நுழையுமுன் ஜோசியரின் கரகரத்த குரல் அவள் காதுகளில் தெளிவாகக் கேட்டது.

''மருமகள் வந்த வேளை சரியில்லை. அதனால்...''

அதற்குப்பின் அவர் சொன்னது அவளுக்கு நன்றாகக் கேட்கவில்லை.

அடி வயிற்றில் பகீர் என்ற உணர்வு கப்பிக் கொள்ள நெஞ்சு படீர் படீர் என்று அடித்துக் கொள்ள அவள் மெல்ல அறைக்குள் புகுந்தாள்.

''இவங்கதான் உங்க மருமகளா...'' ஜோசியரின் கேள்வி அவளைப் பதறச் செய்தது.

27

சாம்பவியின் தந்தை தன் சம்பந்தியம்மாளின் உடல் நலனைப்பற்றி விசாரித்து அவ்வப்பொழுது மருமகனுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். சில சமயங்களில் அதே காகித உறையில் மகளுக்கும் ஒரு தனிப்பட்ட கடிதத்தை எழுதி மருமகன் மேற்பார்வையில் அதை சேர்த்து அனுப்புவது வழக்கம்.

பார்த்தீபனது மருந்துக்கடை முகவரிக்குத்தான் கடிதங்களை அனுப்பினார். வியாபார சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனைத்தும் பார்த்தீபனுக்கு கடை முகவரிக்குத்தான் வருவது வழக்கம். எப்பொழுதாவது அபூர்வமாக உறவினர் யாராவது மரகதத்திற்குக் கடிதம் எழுதுவதுண்டு. அதற்கு மட்டுமே வீட்டின் பக்கம் தபால்காரர் வருவது அதிசயம். ஆனால் வெளியூருக்கு சென்றிருக்கும் கணவன் கடிதம் போடுவதாகச் சொல்லியிருந்தான்.

அந்த எதிர்பார்ப்பில் சாம்பவி தினமும் தன் வேலைகளுக்கிடையே காலை மாலை இரு வேளைகளும் வாயில் பக்கம் வந்து எட்டிப் பார்த்து ஏமாந்து கொண்டிருந்தாள்.

அன்று காலை அவள் மாமியாருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த சமயம், கேட்டை மெல்லத் திறந்து கொண்டு தபால்காரர் உள்ளே வருவதை பகவதி பார்த்து விட்டாள். யாரும் அருகில் இல்லாத சமயம் பார்த்து அது. சட்டென்று தானே வராந்தாவைத் தாண்டி படிகளிறங்கி தோட்டத்திற்குள் சென்று முந்திக் கொண்டாள்.

''திருமதி. சாம்பவி பார்த்தீபனுக்குக் கடிதம் வந்திருக்கு!'' புன்முறுவலுடன் தபால்காரர் கடிதத்தை நீட்ட, ''நான் கொடுக்கிறேன். அவங்க உள்ளே வேலையா இருக்காங்க!'' என்று பதிலுக்கு முகத்திலே ஒரு மெல்லிய சிரிப்பைப் பரவ

விட்டுக்கொண்டு சட்டென்று வாங்கி இடுப்பில் செருகிக் கொண்டாள்.

பம்பாய்க்குச் சென்று ஒரு வாரம்கூட ஆகலை. அதற்குள் மனைவிக்குப் பார்த்தீபன் கடிதம் எழுதி விட்டானே!...

உறைக்குள் கனமாகத் தெரிந்த கடிதத்தில் பத்திபத்தியாகத் தன் பரிவை வார்த்தைகளால் வாரிக் கொட்டியிருப்பான்!

என் மகளுக்குக் கிடைத்திருக்க வேண்டிய பாக்கியத்தை எவளோ ஒருத்தி - ஒண்டுக் குடித்தனத்தில் பட்டணத்திலே பரிதவித்த ஒரு பாவி வந்து தட்டிக் கொண்டு போய் விட்டாளே!

தனக்குள் பொறாமையில் புகைந்துகொண்டு உள்ளே விரைந்தாள்.

குளியலறைக்குள் நுழைந்து குழாயைத் திருப்பி தண்ணீர் விழும் ஓசையை எழுப்பிவிட்டு உறையைப் பிரித்து கடிதத்தை எடுத்தாள். ஐந்து பக்கங்களுக்குமேல் பார்த்தீபன் மனைவிக்கு எழுதியிருந்தான்.

''இந்தா செல்வி! பக்கத்து பெண் நோட்டை எட்டிப் பார்த்து எழுதறியே - காப்பியடிக்கிறது தப்பு இல்லையா!'' என்று அதட்டி மாணவிகளைக் கண்காணித்த பள்ளி ஆசிரியைதான் அவள்.

ஆனால் அந்தக் கட்டுப்பாட்டைத் தன் அளவில் உதறிவிட்டாள். சாம்பவிக்கு அவள் கணவன் எழுதிய கடிதத்தை படித்துப் பார்ப்பது சரியல்ல என்ற எண்ணத்தை மறந்து குமுறிக் கொந்தளித்த ஆத்திர உணர்வில் கொஞ்சமும் லக்சையின்றி பார்த்தீபன் தன் மனைவிக்குக் கொஞ்சும் மொழிகளைத் தூவி எழுதியிருந்த கடிதத்தை மூச்சுவிடாது படித்து முடித்தாள்.

அடபாவி! மனைவிமேல் இவன் இத்தனை ஆசையா வைத்திருக்கிறான்? ஒரு சில நாள் பிரிவிலே இப்படி உருகிப் போகும் இவன் தாயின் பேச்சைக் கேட்டு தாரத்தை ஒதுக்கி வைத்து விடுவான் என்பது வீண் கனவு. போன இடத்தில் வியாபார சங்கதிகள் சுளுவாக முடியாததினால் இன்னும் ஒரு

வாரத்துக்குமேல் அங்கே தங்கியிருக்க நேரும் என்று எழுதியிருக்கிறான். அப்படி என்றால் பார்த்தீபன் வீடு வந்து சேர இன்னும் பதினைந்து நாட்களுக்குமேல் பிடிக்கும். அதற்குள்?

புயலாகப் பல எண்ணங்களும், திட்டங்களும் மனதில் உருவாக அவள் அந்தக் கடிதத்தை சுக்கல் நூறாகக் கிழித்தாள். குளியலறை அலமாரித் தட்டிலிருந்த நெருப்புப் பெட்டியை எடுத்தாள். கடிதத் தூள்களை குளிக்கும் அறை முற்றத்தின் தரையில் வைத்து, நெருப்புக் குச்சியைக் கிழித்துப் பற்றவைத்தாள். பார்த்தீபனது கடிதம் எரிந்து கருகி சாம்பலாகியது. அண்டாவிலிருந்து ஒரு செம்பு தண்ணீரை முகந்து எடுத்து அதன் மீது ஊற்றி சாலகம் வழியே அதை அப்புறப்படுத்தினாள்.

மனைவி மீது கொண்டிருந்த அவனது அன்பு அந்த சாம்பலைப் போல சாம்பலாகிப் போகக்கூடாதா?.... ஆத்திரத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டு குழாயை திறுத்திவிட்டு மெல்ல அறையினின்று வெளியே வந்தாள்.

அந்த வார இறுதியில் வைத்தியர் மரகதத்தைக் கவனிக்க வந்தார். முன்னைவிட அவள் விரைவாகக் குணமடைந்து வருவதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியுடன் அறையைவிட்டு வெளியே வந்தார். சமையற்கட்டு பக்கம் வந்து ''தங்கவேலு தம்பி!... இன்னிக்கு எனக்கு காப்பி வேண்டாம். வீட்டிலேயே சாப்பிட்டு இப்பத்தான் கிளம்பினேன்!'' என்றபடி கதவோரத்தில் நின்ற சாம்பவியைப் பார்த்து முறுவலித்தார்.

''நேத்து தபாலில் பார்த்தீபன் எனக்கு கடிதம் போட்டிருந்தார்!'' என்று அவர் ஆரம்பித்ததைக் கேட்டு சாம்பவி நிகைத்துப் போனாள்.

அவளுக்கு ஏன் அவள் கணவர் இன்னமும் கடிதம் போடவில்லை?

'நான் வரும்வரை தன் தாயை நன்றாகக் கவனிச்சுக்கோங்க. சாம்பவிக்கு தைரியம் சொல்லுங்கன்னு எழுதியிருந்தார் கவலைப்படாதீங்க. நீங்க ஊருக்கு திரும்பற வரை வாரம் நாலு தடவையாவது உங்க அம்மாவைப் போய் பார்ப்பேன். உங்க

மனைவி தன் மாமியாரைக் கண் இமைக்குள் வச்சு காப்பாத்திகிட்டு வரும்போது உங்கள் மனசு ஏன் சஞ்சலப்படணும்னு பதில் எழுதிப் போட்டு விட்டேன். ஆமாம்! எனக்கே ஒரு கடிதம் போட்டுவிட்டிருக்கிற பார்த்தீபன் மனைவிக்குக் குறைந்தது இரண்டு கடிதமாவது எழுதியிருப்பாரே... பம்பாயில் சாப்பாடு வசதி எப்படியாம்? ஈம்மா சொல்லக்கூடாது. உன் மாமியார் நல்லாவே சமையல் செய்வாங்க... படிக்கிற காலத்திலே கூட உன் கணவர் லீவு விட்டதும் வீட்டுக்கு அடுத்தநாளே வந்து நிற்பார். அம்மா கை சாப்பாட்டு மேலே அத்தனை ஆசை. இப்போ?'' சொல்லிவிட்டு பரிகாசமாக கண்களைச் சிமிட்டிக் கொண்டு சிரித்தார்.

வைத்தியருக்குக் கடிதம் எழுதிய அவள் கணவன் அவளுக்கு ஏன் இன்னமும் எழுதவில்லை... அடிவயிற்றில் அழுகை புரள கவலையில் அவளது உணர்வுகள் துவண்டன.

''இன்னும் அவர் எனக்கு ஏதும் எழுதலை...'' என்று அவள் முடிக்குமுன் பகவதி அந்த இடத்தில் வந்து கலந்து கொண்டாள்.

''ஆச்சரியமா இருக்கே? அவர் கட்டாயம் உனக்கு எழுதியிருக்கணுமே'' டாக்டர் வைத்தியலிங்கம் முணுமுணுத்ததைக் கேட்டு பகவதி அதிர்ந்து போனாள். ஊர் மக்கள் அத்தனை பேருக்கும் தெரிந்தவர் அவர். நாளையோ, மறுநாளோ எதேச்சையாக அவர் தபால்காரரை சந்திக்க நேர்ந்து, அறியும் ஆவலில் சாம்பவி அம்மாவுக்கு கடிதம் ஏதாவது வந்ததா என்று கேட்டு விட்டால்?... வந்ததே. இரண்டு தினத்துக்கு முந்தி வீட்டுத் தோட்டத்திலே நான் நுழையுமுன் பருமனான ஒரு அம்மா எதிரே வந்து அவசரமா வாங்கிட்டுப் போனாங்களே என்று அவன் உளறிவிட்டால்?

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் பகவதி.

''தம்பி பார்த்தீபன் வியாபார காரியமா வெளியூருக்கு போயிருக்கு. பாவம் எத்தனை வேலையோ என்ன கஷ்டங்களோ. தன் தாயாரின் உடம்பைப் பத்தி உங்களுக்கு கடிதம் போட்டது நியாயம். இன்னும் சில நாளில் திரும்பி

வரப்போறோமே எதுக்குன்னு சாம்பவிக்கு எழுதலைபோல இருக்கு.'' என்று கூறிவிட்டு சாம்பவியை வெறித்தாள்.

''இருக்கலாம்... அடுத்த கடிதம் எனக்கு வந்தா நானும் தவறாமல் பதில் போட்டு வைக்கிறேன். சாம்பவிக்குக் கடிதம் போடாம எனக்கு நீங்க எழுதறது சரியில்லை. உண்மை நிலவரம் தெரியணும்னா உங்க மனைவி கிட்டே இருந்துதான் தகவல் கிடைக்க முடியும். நீங்க இப்படி மவுனமா இருக்கிறதாலே உங்க மனைவி ரொம்ப மனம் துவண்டு போயிருக்காங்க... அப்படின்னு எழுதறேன்... அதுக்குப் பிறகு தானாளக்கு ஒரு கடிதம் இந்த வீட்டு கதவிடுக்கு வழியா தரையில் விழாட்டா என் பெயர் வைத்தியலிங்கம் இல்லை...!''

— உரத்த குரலில் சிரித்தார். பின்னர் தன் பையைத் தூக்கிக் கொண்டு கிளம்பிவிட்டார்.

''பாவி மனிதன் - ரொம்ப சலுகை எடுத்துக் கொண்டு அப்படி எழுதிப் போட்டாலும் வியப்பதற்கில்லை. பார்த்தீபனுக்கு உண்மை தெரிந்து விட்டா'' பகவதியின் நெஞ்சு படக் படக்கென்று அடித்துக் கொண்டது.

அனைத்தையும் கேட்டுக்கொண்டே - காய்களை நறுக்கிக் கொண்டு மேடையருகே நின்ற தங்கவேறு சந்தேகத்துடன் பகவதியை ஊடுருவிப் பார்த்தார்.

''சின்னம்மா... நம்ப ஐயா கட்டாயம் உங்களுக்குக் கடிதம் போட்டிருப்பார். ஒரு சமயம் தபால்காரர் அதைத் தப்பு விலாசத்திலே போட்டுவிட்டு வந்திருக்கலாம். சமீபத்திலே வீட்டு நம்பர்களையெல்லாம் மாத்தினாங்க. அதிலே குழப்பம் ஏற்பட்டிருக்கலாம். எதுக்கும் நான் சாயங்காலம் வெளியே போறச்சே... தபாலாபீசு பக்கம் போய் ஒரு வார்த்தை கேட்டுப் பார்க்கவா?''

பகவதிக்குக் கோபம் கட்டுக் கொள்ளவில்லை.

''ஏன்யா, உனக்கு இந்த வீட்டிலே சமையல் வேலை செய்யவே பொழுது பத்தலை, இப்போ துப்பு துலக்க ஊர் சுத்தப் பாக்கிறீங்களா, பெரியம்மா காதில் இந்த சங்கதி

விழுந்திச்சோ, உங்களை இன்னிக்கே இங்கிருந்து கிளப்பிடு வாங்க... சமையற்காரருக்கு வீட்டு விஷயங்களில் என்ன பங்கு? இத்தனை இடம் யார் கொடுத்து வச்சிருக்காங்க. இதுக்கு முன்னாடி நான் வந்தப்போ வாயைத் திறக்காத மனுஷன், ரொம்பத்தான் பேச வந்துட்டார்...!'' அதட்டலாக உறுமினாள்.

''அம்மா, நீங்க வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளி. என்னை அதட்டவோ மிரட்டவோ உங்களுக்கு உரிமை கிடையாது!'' என்றபடி கையில் பிடித்திருந்த காய்கறி அரியும் கத்தியுடன் தங்கவேலு முரட்டுத்தனமாக அவளை உற்றுப் பார்த்தார்.

''அந்தக் கத்தியாலே என்னைக் குத்திக் கொன்றுவிடுவீங்க போலிருக்கே!'' பகவதி ஆத்திரமாக சிரித்தாள்.

''குத்தறது குடையறது எல்லாம் உங்க பழக்கம்!'' பதிலுக்கு தங்கவேலு சீறினார்.

வாய்ப் பேச்சு முற்றிப் பெரும் சண்டையாக முடிந்து விடும் என அஞ்சி சாம்பவி இடை புகுந்தாள்.

''சமையற்கார அய்யா - எனக்காக கொஞ்சம் நீங்க சும்மா இருங்கோ. ஒரு சமயம் நாளை மறுநாள் காகிதம் வரலாம். ஒரு சின்னசங்கதிக்காக ஏன் இந்தத் தர்க்கம்?'' என்று மிருதுவான குரலில் குழைவாக வேண்டிக் கொண்டாள்.

சமையற்கார தங்கவேலு பிகுவாக மேடைப் பக்கம் திரும்பிக் கொண்டார்.

''நாம பாட்டிலே இங்கே பேசிக் கொண்டு நிற்கிறோம். மரகதத்துக்கு அங்கே என்ன தேவைப்படுகிறதோ, அறைக்கதவு சாத்தியிருப்பதாலே அவ கூப்பிட்டாக் கூட நமக்குக் கேட்காது. போய் முதல்லே மாமியாரைக் கவனி, ஊருக்குப் போன புருஷன் எங்கே ஓடிப்போயிடுவான். அப்படி மூஞ்சியைத் தொங்க விட்டுக்க வேணாம். உன்னைப் போல் வயசிலே என் கணவன் என்னைவிட்டு மாசக்கணக்கா டூர் போயிடுவார். அதுக்காக நான் வீட்டு வேலையைப் போட்டுட்டு வாசலிலே போய் நின்னுகிட்டிருந்தேன். நல்ல பொண்ணு நீ... இந்த சமயக்காரப் பயலுக்கு ரொம்ப இடம் கொடுத்து வச்சிருக்கே.

வேலைக்காரங்களை வைக்கிற இடத்திலே வைக்காட்டி தலைக்குத்தான் சங்கடம்!'' படபடவென்று பகவதி பேசிக் கொண்டே அப்பால் நகர்ந்தாள்.

''பார்த்தீபன் கடிதத்தின்படி அவன் திரும்ப சிலநாட்கள் பிடிக்கும். வைத்தியலிங்கம் இடைபுகுந்து குளறிவிடுமுன் அவள் மரகதத்தைக் கைக்குள் போட்டுக் கொண்டு அந்தக் காரியத்தைச் சாதித்துவிட வேண்டும். அவள் மகளுக்கு அந்த வீட்டில் வாழ்வு கிடைக்கிறதோ இல்லையோ அக்கறை இல்லை. மாயாவுக்குப் போட்டியா வந்த சாம்பவியின் வாழ்க்கை சாம்பலாகிப் போகவேண்டும்...

அவளது அடுத்த வேலை - அதை மிக விரைவாகச் செய்து முடிக்க வேண்டியது அவசியம். தாடை இறுக பற்களைக் கடித்துக் கொண்டு பொறாமை நெஞ்சை நெருப்பாக எரிக்க அவள் மரகதத்தின் அறைக்குள் சென்றாள்.

28

காலை குளியலுக்குப் பின் மாற்றுடையணிந்து தலைவியில் பளிச்சென்று திருநீற்றை கீற்றாக அணிந்து கொண்டு பகவதி அந்த வீட்டு பூஜையறைக்குள் நுழைவதை வழக்க மாக்கிக் கொண்டிருந்தாள்.

தெய்வ வழிபாட்டில் தனக்கு அதிக நம்பிக்கை என்பதை வீட்டிலுள்ள ஆள் படைகளுக்கு முன் காண்பித்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கம். வாய்தான் ஒரு தோத்திரப் பாடலை முணுமுணுக்குமே ஒழியக் கண்கள் அறைக்குள் உள்ள ஒவ்வொன்றையும் கூர்மையாக ஆராய்ந்து கொண்டிருக்கும்.

பளிங்கு மேடை மீது அமர்ந்திருக்கும் வெள்ளி விநாயகரை பயபக்தியுடன் பார்ப்பாள். இடுப்பளவு உயரத்தில் அவரது இரு பக்கமும் ஐந்து முகங்களில் ஒளிவிட்டுக் கொண்டு நிற்கும் வெள்ளிக் குத்துவிளக்குகளின் விலையை மனதிற்குள்

மதிப்பிட்டுக் கொள்வாள். பளிங்கு பீடத்தின் கீழே பூஜைக்கு மலர் எடுத்து வர உபயோகிக்கும் வெள்ளி மரக்கால், அதனருகே இருந்த கனமான வெள்ளித் தட்டு முதலியவைகளைப் பார்த்துப் பெருமூச்சு விடுவாள்.

பூஜையறையில் உள்ள வெள்ளி சாமான்களே பல ஆயிரங்கள் பெறும் என்றால் இந்த வீட்டில் உள்ள மற்ற வெள்ளிச் சாமான்களைக் கணக்கிட்டால்?... கையில் தூக்கினால் கிழங்கு போல எத்தனை கனம்? எல்லாம் சட்டநாதனின் முப்பாட்டன் காலப் பொருள். இப்பொழுது இவைகளை வாங்க வேண்டுமென்றால் எத்தனை பணம் பிடிக்கும்! பலவிதமான சிந்தனைகளில் தெய்வத்தை மறந்து அவள் சில நிமிஷங்கள் பொறாமை உணர்வில் தவித்துவிட்டு வெளியே வருவாள்.

அன்று காலை அவள் பூஜையறைக்குள் புகுந்தபோது ஒரே கல்லில் இரண்டு மாங்காயை அடிப்பது போன்றதொரு பயங்கரத் திட்டம் சட்டென்று மனதில் தலைத் தூக்கியது.

தங்கவேலு மிகவும் மும்முரமாக சமையலில் ஈடுபட்டிருந்த சமயம் அது. மாமியாரைக் கவனிக்க சாம்பவி நோயாளியின் அறைக்குள் சென்று விட்டிருந்தாள். வேலைக்காரி பொன்னி சாமான்களை விளக்க கிணற்றடிக்குப் போய் விட்டிருந்தாள்.

வீடு கூட்டும் காத்தாயி முன் பக்கத்துத் தோட்டத்தில் குவிந்து கிடந்த உலர்ந்த இலைகளைப் பெருக்கிப் பின் பக்கத்துக் குழி ஒன்றில் நிரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தாள். மாயா குளியலறையில் குழாயைத் திருப்பி விட்டுக் கொண்டு புதிதாகத் தான் வாங்கியிருந்த வெளிநாட்டு சோப்பைத் குழைத்து நுரைக்கச் செய்து சோப்பு விளம்பரப் பெண்போல் முகத்தில் தடவிக் கண்ணாடியில் வேடிக்கை பார்த்து விளையாடிக் கொண்டிருந்தாள்.

இதுபோன்ற அருமையான வாய்ப்பு அந்த வீட்டில் சட்டென்று கிடைப்பது அரிது. எனவே பகவதி சடுதியில் செயல்பட்டாள்.

பூஜையறையில் ஒரு பக்கமாக வைக்கப்பட்டிருந்த அந்த வெள்ளித் தட்டை எடுத்தாள். நாளேட்டுப் பக்கமொன்றில் அதைவைத்து சுற்றி எடுத்துக் கொண்டு போய்த் தன் துணிப்பைக்குள் பதுக்கி வைத்தாள். சிறிது பொழுதில் காப்பி பலகாரத்தை முடித்துக் கொண்டு செந்தூர்பட்டி ஜோசியர் ஞானதேசிகரைப் பார்த்து சில விவரங்கள் தெரிந்து கொண்டு வருவதாகக் கூறி மரகதத்திடம் விடைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டாள்.

பஸ் பிடித்து நேரே திருச்சி டவுனுக்குச் சென்றாள். அங்கு கடைத் தெருவில் ஒரு வெள்ளிப் பாத்திரக் கடையில் தட்டை விலைக்குப் போட்டுவிட்டு பணத்தை வாங்கித் தன் மணிப்பர்சில் திணித்துக் கொண்டாள். திரும்பி வரும் வழியில் செந்தூர்ப்பட்டியில் இறங்கி ஜோசியர் ஞானதேசிகரைச் சந்தித்தாள். அவர் கையில் ஒரு நூறு ரூபாயை வைத்துவிட்டு, இரண்டு தினங்களுக்குப் பின் அவர் மரகதத்தைக் காண வரவேண்டும். அப்போது என்ன விதமான தகவல்களைச் சொல்ல வேண்டும் என்று உபதேசித்துவிட்டு... வழியில் ஒரு ஓட்டலில் பகல் சாப்பாட்டைக் கவனித்துக் கொண்டு நிம்மதியாகப் பொழுது அமுங்கும் வேளை வீடு திரும்பினாள்.

சாதாரண நாட்களாக இருந்தால் - மரகதம் ஆரோக்கியமாக வீட்டில் நடமாடிக் கொண்டிருந்த காலமாக இருந்தால் நிலைமை வேறாக இருந்திருக்கும். ஞானதேசிகர் என்பவருக்கும் ஜோசிய சாஸ்திரத்திற்கும் காததூரம்.

''என் மாடு காணாமற்போயிற்று. அதை எங்கே கண்டுபிடிக்க முடியும்?'' என்று கேட்ட உழவரிடமிருந்து தப்பித்துக் கொள்ள தெருக்கோடியிலிருக்கும் குட்டிச் சுவர் அருகே பார்க்கச் சொன்னாராம் ஒரு போலி ஜோஸியர். மாடும் கிடைத்து விட்டது. மனிதனின் பெயரும் பிரபலமாகியதாம். அந்தக் கதையைப் போலத்தான் ஞானதேசிகரின் சங்கதியும். ஏதோ தாமே படித்து அறிந்து ஜோசியத்தை இரண்டொருவருக்குச் சொல்லப் போகக் குருட்டுத்தனமாக அவை பலித்துவிடவே அந்த வட்டாரத்திலே அவர் பலருக்குத் தெரிந்தவராகிவிட்டார். இந்த உண்மையை மரகதம்மாள்

நொடிப் பொழுதில் கண்டு பிடித்து விட்டிருப்பாள். அவளைத் தன் வீட்டு வாசற்படியேற விட்டிருக்க மாட்டாள்.

நோயாளி என்ற நிலையும் - சாம்பவிமேல் ஏற்பட்டிருந்த பகையுணர்வும் அவளது அறிவைக் குழப்பி விட்டிருந்தன. எடுப்பார் கைப்பிள்ளையாக பகவதியின் பேச்சுக்களை ரொம்பவே நம்பி விட்டாள்.

அன்று மாலை பூஜையறை மின்விளக்கைப் பொருத்திய சாம்பவி அவசரத்தில் கவனிக்கவில்லை. மறுநாள் காலை பூஜைத் தட்டைத் துலக்கத் தேடியபோது திடுக்கிட்டுப் போனாள். பூக்கூடை அருகே முதல்நாள் அவள் வைத்து விட்டுப்போன தீபாராதனைத் தட்டைக் காணவில்லையே? விரைவாக ஓடிவந்து மரகதத்திடம் சங்கதியைச் சொன்னாள்.

அமுத்தலாகக் கொஞ்சமும் பயமின்றி நோயாளியின் படுக்கையறை அருகே ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்த பகவதி அவளை அதிசயமாகப் பார்த்தாள்.

''வழக்கம்போல சீக்கிரம் குளிச்சிருந்தா நான் கவனிச்சிருப்பேன். உடம்பு கொஞ்சம் அசதியா இருந்ததாலே நான் அந்த அறைப்பக்கம் இன்னமும் போகலை. கொஞ்ச நாளா இந்தத் தங்கவேலு அடிக்கடி பூஜையறைக்குள்ளே நுழையறதும் சுத்தும் முத்தும் பார்த்து நிற்பதையும் நான் கவனிச்சுக் கிட்டிருக்கேன். ஒரு சமயம் இது அவன் வேலையா இருக்குமோ?''

''என்ன சொல்றீங்க அம்மா?'' சாம்பவி பதட்டமாகக் கேட்டாள்.

''இன்னும் எப்படி விளக்கிச் சொல்வது? மனுஷனுக்கு செலவு என்னவோ — எடுத்து வித்திருக்கலாம் இல்லையா?''

''ஐயோ, இப்படி அபாண்டமா அவர் மேலே பழி போடாதீங்க. என் கணவர் சின்னப் பிள்ளையா இருந்த காலத்திலிருந்து இங்கே உழைப்பவர்... ரொம்ப நாணயமானவர்...''

''உனக்கு உதவியா என்னைத் தூக்கி எறிஞ்சு பேசுகிறாளே

இந்த நடியன். அதுக்காக நீ அவனுக்கு வக்காலத்து வாங்க வந்துட்டியா...? எத்தனை வருஷம் உழைச்சா என்ன? சில பேருடைய திருட்டுப் புத்தி சமயத்தில் தலையை நீட்டும்!''

மரகதம் தன் மருமகளைக் கோபத்துடன் வெறித்தாள்.

''உன்னைவிட வயசிலே பெரியவ பகவதி — நம்ப வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளி. அவங்களை எதிர்த்து நீ ஏன் வாயாடறே. அந்தத் திருட்டிலே உனக்கு ஏதாச்சும் பங்கு உண்டா? அந்தத் தங்கவேலுவைக் கூப்பிட்டு அதட்டினா விஷயம் அம்பலத்துக்கு வரது'' உறுமினாள்.

''நேத்து சாயங்காலம் எங்கே போயிருந்தேன்னு தங்க வேலுவை ஒரு வார்த்தை கேட்டுவை மரகதம். அப்படியே அசந்து போயிடுவான். போன வெள்ளிக்கிழமை சுவாமி படத்துக்குத் தீபாராதனை செய்யத் தட்டைத் தூக்கினேன். என்ன கனம்? இப்பத்தி விலைக்கு எத்தனை பிடிக்கும்? இது மாதிரி பொருள்தான் இப்போ கிடைக்குமா?'' பகவதி தூபம் போட்டாள்.

''பொன்னியைக் கூப்பிடு!'' சீறினாள் மரகதம். அவள் முகம் செவேலென்று மாறியது.

''அத்தை! ரொம்பக் கோபப்படாதீங்க — உங்க உடம்புக்கு ஆகாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காங்க?'' என்று சாம்பவி குறுக்கிட்ட போது கனல் தெறித்த விழிகளால் அவளைக் கடுமையாகப் பார்த்தாள்.

''எனக்குத் தெரியும் — நீ பேசத் தேவையில்லை!'' உரத்து அதட்டினாள்.

சமையலறையிலிருந்து தங்கவேலு ஓடிவந்து கைகட்டிக் கொண்டு எதிரே நின்றார்.

''உனக்குப் பணக்கஷ்டம் ஏற்பட்ட போது முன்னொரு தடவை என்கிட்ட வந்து கேட்டியே ஞாபகம் இருக்கா? நான் உடனடியாகக் கடன் கொடுத்து உதவலை?'' எடுத்த எடுப்பிலே மரகதம் அவரைக் கோபத்துடன் கேட்டாள்.

தன்னைச் சுற்றிலும் பார்த்தார் தங்கவேலு. வேலைக்காரி

காத்தாயி, தோட்டக்காரர் இருவரைத் தவிர அத்தனை பேரும் அந்த அறைக்குள் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார்.

''ஏன் அப்படி முழிக்கிறே? படுத்துக் கிடந்தாலும் எனக்கு வீடு பூராக் கண், தெரிஞ்சுக்கோ தங்கவேலு. பணம் வேணும்னா வந்து கேட்க என்ன கொள்ளை? என் மாமனார் காலத்து வெள்ளித் தட்டை எடுத்து வித்துத் தொலைச்சுட்டியே?''

''வெள்ளித் தட்டா?'' தங்கவேலு திகைப்புடன் கேட்டார்.

''இந்த நாடகம் என்கிட்டே செல்லுபடியாகாது. பூஜையறையிலிருந்த வெள்ளித் தட்டை எடுத்துக்கிட்டு நேத்து சாயங்காலம் எங்கே போனே?'' மரகதம் அதட்டலாகக் கேட்டாள்.

''தினமும் சாயங்காலம் நான் சிவன் கோவில் பக்கம் காத்தாடப் போறது வழக்கம். உங்களுக்குத் தெரிஞ்ச சங்கதிதானே?'' பதிலுக்கு உறுமினார் தங்கவேலு.

''அந்தச் சாக்கிலே என் வீட்டு சாமானைத் தள்ளிக்கிட்டுப் போயிட்டியா... மரியாதையா அதை எங்கே வித்தேன்னு சொல்லிடு... இல்லாட்டி...''

கண்கள் சிவக்க, மீசை துடிக்க தங்கவேலு மரகதத்தை வெறித்தார்.

''இந்த விருந்தாளியம்மா நேத்துக் காலையிலே அவசரமாகப் புறப்பட்டுப் போனாங்களே — அவங்க ஒரு சமயம் தட்டைத் தூக்கிக்கிட்டு போயிருக்கலாம் இல்லையா... நான்தான் திருடினேன் என்பதற்கு என்ன ஆதாரம்? இவங்க பெட்டி, பைகளை முதலில் சோதிச்சுப் பார்த்துட்டுப் பிறகு என்மேலே குற்றம் சொல்லுங்க'' ஆத்திரமாகக் கத்தினார்.

'சே! இத்தனை ஆண்டு உழைப்புக்குப் பிறகு நல்லவனாக இருந்ததற்கு இதுதான் கிடைத்த பட்டம்?' என்று அவரது நெஞ்சம் கொதித்தது.

பகவதி ஒருகணம் நடுங்கிப் போனாள். தேன்கூட்டைக் காலால் உதைக்கப் போக அதிலிருந்து தேனீக்கள் புறப்பட்டது போலப் பெரிய வம்பில் மாட்டிக் கிட்டோமே?

''மரகதம்! உன்கிட்ட சொல்லிட்டுத்தானே நான் நேத்து வெளியே புறப்பட்டேன். எதுக்குன்னு உனக்கும் தெரியும்... ஆசையோடு உன்னைப் பார்க்க ஊரிலிருந்து வந்த எனக்கு இதுவும் வேணும் — இன்னமும் வேணும்!'' படபடவென்று பேசிவிட்டு விசும்பி அழத் தொடங்கினாள்.

''அம்மா! இன்னிக்கே நாம ஊருக்குப் புறப்பட்டு விடுவோம். நம்மை இப்படி அவமானப்படுத்தினப் பிறகு இங்கே ஒரு நிமிஷம் நிக்கிறது கூடக் கேவலம்!'' என்று புலியாகச் சீறிய மகள் தாயின் அருகில் வந்து தன் புடவைத் தலைப்பால் அவளது கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

''ஏம்மா மாயா! நீங்க ரெண்டு பேரும் எதுக்கு ஊருக்குப் போகணும். இந்த வீட்டைவிட்டு இந்த கணமே தங்கவேலுதான் வெளியேறணும். இல்லாட்டா நான் போலீசில் புகார் செய்து...!'' மரகதம் முடிப்பதற்குள் தங்கவேலு கோபத்துடன் தன் கைகளைத் தூக்கி ஒரு பெரிய கும்பிடு போட்டார்.

''நான் இப்பவே கிளம்பிப் போயிடறேன். என் சம்பளத்தைப் பின்னாடி ஐயா வந்ததும் கணக்குப் பார்த்து வாங்கிக்கிறேன். நான் போறதுக்கு முந்தி என் பெட்டி —படுக்கை, பை எல்லாத்தையும் இங்கே உங்க முன்னாடி உதறிக் காட்டிட்டுக் கிளம்பறேன். பிறகு இன்னமும் ஏதாச்சும் காணாமல் போயிருந்தால் அந்தக் குற்றத்தையும் என்மேல் சுமத்த மாட்டீங்க... இல்லையா?'' கோபமாகக் கேட்டுவிட்டு அறையை விட்டு விர் என்று வெளியேறினார்.

29

வீட்டை விட்டுக் கிளம்பும்போது தங்கவேலு தமது உதவியாளரையும் கூட அழைத்துக் கொண்டு போய்விட்டார்.

அதனால் அத்தனை வேலைகளையும் சாம்பவியே ஏற்கவேண்டி வந்துவிட்டது. ஒரே நாளில் அவளது உடல்

சோர்ந்து மனம் நொந்து துவண்டு போய் விட்டாள்.

படுக்கையை விட்டு சட்டென்று எழ முடியாது முட்டிகள் அனைத்தும் வலித்தன. காய்ச்சல் கண்டு விட்டது போன்றதொரு அதிர்ச்சி உடலைப் பற்றிக் கொண்டு கால்களைத் தள்ளாடச் செய்தது.

இன்னும் கொஞ்ச நேரம் படுத்திருக்க மாட்டோமா என்று மனம் தவித்த போதிலும் வீட்டில் அவளுக்காகக் குவிந்து கிடக்கும் வேலைகளை எண்ணி திடுக்கிட்டு அவள் இருள் பிரியுமுன்பே எழுந்து விட்டிருந்தாள். பரபரப்பாகப் பச்சைத் தண்ணீரில் முழுகி — பூஜையறைக் காரியங்களை முடித்துக் கொண்டு சமையலறைக்குள் புகுந்தபோது துக்கம் நெஞ்சை அடைத்தது. பார்வையை நீர் மறைத்தது...

பார்த்தீபன் ஊரில் இருந்திருந்தால்...? வீட்டின் நிலைமை இப்படியா மாறி விட்டிருக்கும்? விருந்தாளியாக வந்து ஒண்டிக் கொண்டிருக்கும் பகவதியை அல்லவா மூட்டை கட்டி அனுப்பியிருப்பார்?

ஆமாம், பம்பாய் போனதிலிருந்து ஒரு வரி கடிதம் கூடப் போட முடியாது அப்படி அங்கே என்ன வேலையாம்?

போனதும் தங்குமிடத்தின் முகவரியை அடுத்த நாளே கடிதம் மூலம் தெரிவிப்பதாகச் சொன்னாரே - முகவரியாவது தெரிந்திருந்தால் வீட்டு நிலையைப் பற்றி எழுதி அவரை சீக்கிரம் ஊருக்குப் புறப்பட்டு வந்து உதவும்படி கேட்டுக் கொண்டிருக்கலாமே... ஏன் இந்த மவுனம்?

கண் இமை ஓரங்களை மீறி துளியாக உருண்டு கன்னங்களில் உதிர்ந்த கண்ணீரைச் சட்டென்று துடைத்துக் கொண்டாள்.

அடுப்பிலே இட்டிலிகளைப் பானையில் வேக வைத்துவிட்டு தேங்காயைத் துருவி அம்மியில் வைத்துவிட்டு... கணவனைப் பற்றிய சிந்தனையில் ஒரு கணம் கட்டுண்டு செயலற்று நின்று கொண்டு இருந்தாள்.

தங்கவேலு புறப்பட்டு அப்பால் சென்ற சிறிது நேரத்தில்

தபால்காரர் அவர்களது வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார். அதை எதிர்ப்பார்த்தவள் போல பகவதி வாயில் பக்கமே கண்ணாக இருந்தாள்.

''என்ன வேடிக்கை? போய் அவங்க அவங்க காரியங்களை கவனியுங்கோ — பெரியம்மா கோவிச்சுக்குவாங்க...'' வேலையாட்களை விரட்டி விட்டு பகவதி கண்களால் சாம்பவியை அதிகாரம் செய்து அடுப்பங்கரைக்கு ஓட்டிவிட்டு வேகமாக வராந்தாவைத் தாண்டி - தோட்டத்திற்குள் புகுந்து கேட்டருகே போய் நின்று கொண்டாள்.

''சாம்பவி அம்மாவுக்கா — குடுங்கோ — அவுங்க உள்ளே வேலையா இருக்காங்க.'' பற்கள் அனைத்தையும் காட்டிக் கடிதத்தை தபால்காரரிடமிருந்து பெற்றுக் கொண்டு புடவைத் தலைப்பின் மடிக்குள் மறைத்துக் கொண்டு விட்டாள். முன் போலவே குளியலறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு கடிதத்தை துணிவுடன் பிரித்துப் பார்த்தாள். பார்த்தீபன் மிகவும் சுருக்கமாக ஒரே பக்கத்தில் எழுதியிருந்தான்.

''உன்னிடமிருந்து பதில் இல்லை. கோபமா? பதில் எழுத நேரமில்லாது நிறைய வேலையா? எதுவானால் என்ன இன்னும் ஏழு நாட்கள் பொறுத்துக் கொள். நான் நேரிடையே வந்து விசாரிப்பு செய்கிறேன். ஆமாம் பம்பாயிலிருந்து உனக்கு நான் என்ன வாங்கிவர வேண்டும் என்பதைப் பற்றிக் கூடவா தெரிவிக்க மனமில்லை. உனக்கு என்னவெல்லாம் பிடிக்கும் என்பது எனக்குத் தெரியுமாதலால், தேவைப்பட்டதை நானே வாங்கிவர வேண்டுமென்று மவுனமாய் இருக்கிறாய் போலிருக்கு. வெகு தொலைவில் இருப்பதாலோ என்னவோ... நாள் முழுவதும் உன் நினைப்புத்தான் நெஞ்சை சதா வருடிக் கொண்டிருக்கிறது. அங்கே நிலைமை எப்படி...?'' கெஞ்சி, கொஞ்சிக் குழைந்து அன்பொழுக எழுதியிருந்த கடிதத்தைப் படித்து ஆத்திரத்தில் கொதித்துப் போனாள்.

— பார்த்தீபன் தன் மனைவியை மிகவும் நேசிக்கிறான் என்கிற உண்மையை ஏற்க முடியாததில் ஏற்பட்ட ஆத்திரம்.

அவன் வருவதற்குள் செயல்படாவிடில் தோல்வியும், அவமானமும் வந்து சேரும் என்கிற திகில். பெருமூச்சுடன் பகவதி குமைந்தாள். பின்னால் காலடி சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் சாம்பவி. இடுப்பிலே கைகளை ஊன்றிக் கொண்டு பகவதி வாயிற்படியருகே நின்று கொண்டிருந்தாள்.

''வெறும் தேங்காய் சட்டினி மட்டும் அரைச்சு வச்சா பத்தாது. இட்லிக்கு வாய்க்கு ருசியா கொஞ்சம் புளி வெங்காயம் செய்து வச்சுடு. மாயா அப்பத்தான் பிரியமா சாப்பிடுவா. இன்னிக்கு சீக்கிரமா எங்களுக்கு காப்பிப் பலகாரம் கொடுத்துடு — எனக்குக் காலை வேளையிலே பசிதாங்க முடியறதில்லை!'' கடுமையான குரலில் உத்திர விட்டாள்.

'இந்தாங்க அம்மா! இப்படி வந்து என்னை அதிகாரம் செய்ய நான் உங்க வேலைக்காரியில்லை. இங்கே கிடைச்சதை சாப்பிட்டு இருக்கத் தெரியாட்டி உடனே ஊருக்கு புறப்படலாமே? உங்களை யாரும் கட்டாயப்படுத்தி இங்க இருக்கச் சொல்லலை?' என்று படபடவென்று வார்த்தைகளைக் கொட்டிவிட சாம்பவிக்கு அதிகநேரம் பிடிக்காது. அப்படிச் செய்தால் அந்த வீட்டில் ஒரு பூகம்பமே எழும்பிவிடுமே?

மாமியார் மரகதத்தை உசுப்பிவிட்டு அவளுக்கு மறுபடியும் ரத்தக் கொதிப்பு அதிகமாகி மூளையில் ரத்தக் கசிவு ஏற்பட்டு விட்டால்...?

அப்படி அடுத்தபடி தொடர்ந்து ஏற்பட்டால் உடம்பு தாங்காதுன்னு டாக்டர் பல தடவை எச்சரித்திருக்காரே?

பார்த்தீபன் ஊரில் இல்லாத சமயம் ஏதாவது ஏறுமாறாக ஏற்பட்டால் தாயைப் பத்திரமாக கவனித்துக் கொள்வாள் என்ற நம்பிக்கையுடன் சென்ற அவருக்கு அவள் துரோகம் இழைத்துவிட்டது போலாகிவிடுமே?

வார்த்தைகளை வாரி வீசுவது சுலபம் — வாயை மூடிக் கொண்டு பொறுமையாக இருப்பது கடினந்தான் — அவளது கணவனுக்காக அவள் இப்போது... கொஞ்சம் பொறுமையாகத்தானிருக்க வேண்டும்...

''அப்படியே செய்கிறேன் அம்மா...!'' சாம்பவி முணுமுணுத்தாள்.

இந்த பதிலை பகவதி எதிர்பார்க்கவில்லை. ஒரு பிரம்மாண்டமான சண்டைக்கு அடிக்கல் நாட்டத்தான் அங்கே வந்தாள்.

சுலபமாக அந்த சிறு பெண் வெற்றியடைந்து விட்டதைக் கண்டு திகைத்துப் போனாள்.

ஊகும்! அவள் சீக்கிரம் செயல்படாவிடில் காரியம் கெட்டுவிடும் போலிருக்கிறதே...? அவசரமாக அங்கிருந்து அகன்றாள்.

அன்று மாலை வாயிற் கதவு லேசாகத் தட்டப்படும் ஓசையைக் கேட்டு சாம்பவி ஓடிச்சென்று திறந்தாள்.

மீண்டும் அந்த ஜோசியர், வெற்றிலையைக் குதப்பி சிவந்த வாயுடன் முகத்திலே வெற்றிப் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தார்.

கடந்த முறையைவிட அவரது தோற்றத்தில் அபிவிருத்தி காணப்பட்டது. தும்பைப் பூப்போன்று வெளேரென்று சலவையிலிருந்து எடுத்து அணிந்த வேட்டியும், சட்டையுமாகத் தெரிந்தார். கையில் தொங்கிய துணிப்பைக்குப் பதில் ரெக்ஸின் மூடிய மடக்குப்பை ஒன்றை கையிடுக்கில் கம்பீரமாக அடக்கிக் கொண்டிருந்தார். நெற்றியில் பட்டையாக அணிந்து கொண்டிருந்த விபூதி, நடுவிலே குங்குமப் பொட்டு — பித்தான் பொருத்தப்படாத சட்டையின் கழுத்துப் பகுதி இடையே தெரிந்த தங்கமணி சேர்த்துக் கட்டப்பட்ட ருத்திராக்ஷ மாலையும் அவரது தகுதிகளை மிகைப்படுத்தின.

''பெரிய அம்மாவைப் பார்க்க வந்திருக்கேன்!'' அவளது உத்திரவுக்குக் காத்திராமல் அவளைத் தாண்டிக் கொண்டு உள்ளே நுழைந்தார்.

சாம்பவி எதுவும் கேட்குமுன் தன் சொந்த வீட்டிற்குள் செல்லும் உரிமையுடன் மரகதத்தின் அறைக்குள் புகுந்து விட்டார்.

தயாராக அறைக்குள் முன்னதாகவே காத்துக் கொண்டிருந்த பகவதி சாம்பவி அறையை நெருங்குமுன் சட்டென்று தாளிட்டு விட்டாள்.

வேலைக்காரி பொன்னி உள்பட அவர்கள் எல்லோரும் ஒரு பக்கம். ஆதரவாக வார்த்தை சொல்லி உற்சாக மூட்டும் தந்தைக்கு ஒப்பான தங்கவேலுவோ, கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் அவரது உதவியாளோ இல்லாத நிலை. தோட்டக்காரரை உதவிக்கு அழைத்தால்தான் உண்டு. ஆனால் பாவம் அவர் ரொம்ப பயந்த சுபாவம் உடையவர். காத்தாயி தன் வீட்டுக்குப் போய் விட்டிருந்தாள்.

இந்த சமயம் இவர்கள் அந்த அறைக்குள் கூடி என்ன சதி செய்கிறார்கள். அடுத்த வீட்டுக்காரரை சட்டென்று உதவிக்குக் கூப்பிட முடியாதபடி பெரிய தோட்டத்தின் நடுவே பொறித்து கொண்டிருக்கும் வீடு அது. மேலும் அவள் மருமகளாக அந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்த நாளிலிருந்து அக்கம் பக்கத்தாரின் நட்பைத் தேடி வீட்டை விட்டுப் போனதில்லையே.

பின்பக்கத்துத் தோட்டத்துக் கதவைத் திறந்து கொண்டு வாய்க்கால் கரை ஓரமாக ஓடி பெரியம்மா அலமேலு வீட்டிற்குச் சென்று விஷயம் முழுவதையும் சொல்லி ஆலோசனையும், உதவியும் கேட்டால்?

பார்த்தீபன் ஊர் திரும்பியதும் அதைப் பெரிய தவறாகச் சுட்டிக் காட்டி மாமியார் முரண்டு பிடித்தால்...

என்ன செய்வது? இப்போது என்ன செய்வது?

தோட்டத்து மூலையில் தன் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் தோட்டக்காரரிடம் அவசரமாக ஒரு கடிதம் எழுதி டாக்டர் வைத்தியலிங்கத்தை வரவழைத்தால்...

மந்திரம் — மாயம் என்று எல்லோரும் கூடி மரகதம்மாளுக்கு ஏதாவது தீங்கு ஏற்படுத்தி விட்டால்...

அறைக்குள்ளே ஏககாலத்திலே எழுந்த உரத்த பேச்சுக் குரலும்... சிரிப்பும் அவளை கதி கலங்கச் செய்தது.

நெஞ்சு படபடக்க... நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு திகைத்தபடி நின்றாள்.

கதவு திறக்கப்படும் ஓசை கேட்டதும் வேகமாக ஓடி வந்தவளிடம் பகவதிதான் பேசினாள்.

''உன் மாமியார் கூப்பிடறாங்க — உள்ளே வா...'' அமுத்தலாகச் சொன்னாள்.

''சாம்பவி —! தலையணை அடியிலே இருக்கிற என் சாவியை எடுத்துக்கிட்டு போய் பீரோவைத் திறந்து ஒரு இருநூறு ரூபாய்களை தட்டில் பழம், பாக்கு, வெற்றிலையோட வச்சு முன் தடவை போல வேகமா எடுத்துவா!'' மரகதம் கடுமையாக உத்திரவிட்டாள்.

''வாங்கிக்கோங்க ஐயா... நீங்க சொன்னது அத்தனையும் அம்மா மனசிலே வாங்கிக் கிட்டாங்க — கவலைப்படாதீங்க!'' பகவதி இடையே உபசரிப்பு செய்தாள்.

வெற்றிலைப் பாக்கு — பழத்தை ஒரு சிறு பிளாஸ்டிக் பையில் போட்டுக் கொண்டு பணத்தை பத்திரமாக சட்டைப்பைக்குள் செருகிக் கொண்ட ஜோசியர் மெலிதாகச் சிரித்தார்.

''நான் சொன்னபடி செய்யுங்கோ. ஒரு வார காலத்திலே என்ன நடக்கிறதுன்னு ஆச்சர்யப்படுவீங்க...'' கூறிவிட்டு அமுத்தலாக வெளியேறினார்.

மரகதம் தன் மருமகளைச் சைகையால் அருகில் அழைத்தாள்.

''என் மகன் மேலே உனக்கு உண்மையான அன்பிருந்தா — நான் பிழைச்சு எழுந்திருக்கணும்னு நினைப்பு இருந்தா நான் சொல்றபடி உடனே செய்தாகணும். செய்வியா...?'' கோபமாகக் கேட்டாள்.

''சொல்லுங்க அத்தை கட்டாயம் செய்வேன்!''

அருகில் நின்ற பகவதி உரக்க இருமினாள். நகத்தைக் கடித்துக் கொண்டு மாயா அவளைக் குரோதமாகப் பார்த்தாள். சாம்பவியின் நெஞ்சு படபடத்தது. இனம் காணாத ஒரு அச்சத்தில் உடம்பு லேசாக நடுங்கியது...

''சத்தியமா செய்வியா...?'' மரகதம் உரத்த குரலில் அதட்டிவிட்டு உருட்டி விழித்தாள்.

''சத்தியமா — தெய்வத்தின் மேல் ஆணை. நீங்க கேட்டுக் கொள்கிறபடி செய்வேன். சொல்லுங்க அத்தை...!'' சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு அழுகை தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் பெருகியது... தாகம் நெஞ்சை அடைத்தது.

30

தன்னைச் சுற்றிலும் ஒரு சுவர் எழும்பிக் கொண்டு விட்டது போன்ற பிரமையில் அவள் அழுகையை அடக்கித் கொண்டு மெல்ல நிமிர்ந்தாள். அவர்கள் மூவரும் பிணத்தைத் கிழித்துத் தின்னும் ஓநாய்கள் போல மரகதத்தின் படுக்கையருகே நின்று கொண்டிருப்பதைக் கண்டு பகீர் என்ற உணர்வில் தவித்துப் போனாள்.

''என்ன அத்தை செய்யணும் சொல்லுங்கோ...'' மெல்லிய குரலில் தினறினாள்.

''முதல்லே வீட்டு விளககை ஏத்திட்டு வா. இருட்டிகிட்டு வரதுகூட உன் கண்களில் படலையா?'' மரகதம் அதட்டினாள்.

பூஜையறை விளக்கை ஏற்றிவிட்டு தெய்வப் படங்கள் முன் விழுந்து கும்பிட்ட போது அவளது கண்ணீர் தரையை நனைத்தது.

''நான் படித்த பெண்தான். வீட்டை சாமர்த்தியமாக நிர்வகிக்கத் தெரிஞ்சவதான் — மாமியாரின் குணம் கெட்ட தன்மையைப் பாராட்டாது பொறுமையுடன் அவர்களை உண்மையான பரிவோடு கவனிச்சுக் கொள்ளும் கடமை உணர்வு நிறைய உடையவள்தான். ஆனால் பகவதி அம்மாளுக்கு முன் பஞ்சாகப் பரிதவிக்கிறேனே?''

— விசும்பி அழுதபடி கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் வெளிவருமுன் பகவதி அம்மாளின் பெரும் குரல் அதட்டியது.

''மத்த விளக்கை எல்லாம் ஏத்திவிட்டு விடுவிடுன்னு காரியங்களை கவனிக்கச் சொன்னாங்க. மரகதம் பூஜையறையில் என்ன தவம் செய்கிறே? மாமியார் சட்டுனு போயிடணும்னு கடவுளை வேண்டிக்கிறீயா?''

— அசுரத்தனமான சிரிப்பு தொடர அவள் அரண்டு போனாள்.

அவர்கள் வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு வீட்டு எஜமானியையே ஆட்டிப் படைக்கும் பகவதி உண்மையில் ஒரு பயங்கர ராட்சசி. இவளிடம் பக்குவமாக நடந்து கொள்ளாவிட்டால் உணவில் ஏதாவது மருந்து போட்டு மரகதம்மாளைக் கொன்று... அந்தக் கொலைக் குற்றத்தை அவள் மேல் சுமத்தக் கொஞ்சமும் தயங்க மாட்டாள்.

உடம்பு முழுவதும் வியர்த்துக் கொட்ட, பயத்தில் கால்கள் தள்ளாட மற்ற விளக்குகளை எரியவிட்டாள்.

பளிச்சென்று எங்கும் வெளிச்சம் பரவிக் கொண்டிருந்த போதிலும் அவளுக்கு இருளில் மூழ்கி வழி தெரியாது தடுமாறும் ஒரு தவிப்பு.

மாமியாருக்கு இரவு உணவு கொடுத்து — மருந்துகளைத் தந்து — படுக்கையைச் சரிப்படுத்தி உபசரிப்புகள் செய்துவிட்டு — விருந்தாளிகளுக்கு சாப்பாடு போட்டு பின்னர் தானே சமையலறைத் தரையில் சோற்றுத் தட்டுடன் உட்கார்ந்து ஒரு பிடி சாதத்தை வாயில் வைத்த போது உணவு அவளுக்குக் கசந்தது. துக்கம் தொண்டையை அடைத்தது. சமையலறை வேலையை வேகமாக முடித்துக் கொண்டு கதவை சாத்திவிட்டு அவள் திரும்புமுன் பகவதி மீண்டும் அங்கே வந்துவிட்டாள்.

''மரகதம் உன்னைக் கூப்பிடுறாங்க — உடனே வா!'' உத்திரவிட்டாள்.

மரகதத்தின் அறையில் அதுவரை நின்று கொண்டிருந்த

பொன்னியை பகவதி வீட்டுக்கு அனுப்பி விட்டிருந்தாள். சாதாரண நாட்களில் பொன்னி சின்ன எஜமானியிடம் விடை பெற்றுக் கொண்டு போவது வழக்கம். இந்த இரண்டு தினங்களாக அவளும் மிகவும் திமிராக... சாம்பவியை மதிக்காது நடந்து கொள்ளத் துவங்கி விட்டிருந்தாள்.

அறைக்குள்ளே பகவதி தன் மகளுடன் படுக்கையருகே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''அலமாரியிலிருந்து ஒரு காகிதமும், பேனாவும் எடுத்து நான் சொல்றபடி எழுது...!'' மரகதம் கடுப்பாகச் சொன்னாள்.

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் சாம்பவி.

''யாருக்கு அத்தை?'' — மெல்லிய குரலில் கேட்டாள்.

''யாருக்கு எழுதச் சொல்லுவேன் — உன் புருஷனுக்குத்தான். எழுதறதிலே நீ ரொம்ப கெட்டிக்காரியாச்சே. கடிதாசி எழுதியே என் பிள்ளையை மயக்கிக் கல்யாணம் செய்து கொண்டவளாச்சே!'' —திடுக்கிட்டு முகம் வெளுத்துப் போய் நின்ற மருமகளைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தாள் மரகதம்.

தன் தலையணை அடியில் கட்டாக வைத்துக் கொண்டிருந்த பார்த்தீபனது காதல் கடிதங்களை எடுத்து கோபத்துடன் அறையின் மூலையில் விட்டெறிந்தாள். தரையில் நாலாபுறமும் அவை சிதறி விழுந்தன. அவளது பெட்டிக்குள் பத்திரமாக வைத்திருந்த அந்தக் கடிதங்கள் எப்படி மாமியார் கைக்கு வந்தன? யார் எடுத்தது?

திகைப்பும், கோபமும் தாங்காமல் பகவதி பக்கம் திரும்பினாள்.

''நான் நினைச்சேன். என்னைத்தான் நீ சந்தேகிப்பேன்னு தெரியும். எனக்கு இந்த வீட்டில் வேற என்ன பட்டம் கிடைக்கும்?'' பகவதி உறுமினாள்.

''அவளை ஏன் முறைக்கிறே. நேத்து காலை மின்விசைத் துண்டிப்பு ஏற்பட்டப்போ ரொம்பப் புழுக்கமா இருந்திச்சு. நான் இருக்கேனா செத்தேனான்னு பார்க்க நேரம் இல்லாம நீ

அடுப்பங்கரைக்குள்ளே புகுந்துகிட்டிருந்தே?''

''தங்கவேலு இல்லாததினாலே நான்தானே அத்தை சமைக்கணும்.''

''அதை வேறே இடிச்சுக் காட்றியா? உன் பிறந்த வீட்டிலே எத்தனை சமையல் ஆள் வச்சுகிட்டு வாழ்ந்தவ நீ...? ஏதோ சாக்கு, இரண்டு வாட்டி கூப்பிட்டுப் பார்த்தேன்... நீ இந்தப் பக்கம் தலையைக் காட்டினால்தானே?''

''குக்கர் சத்தத்திலே காது கேட்கலை போலிருக்கு...!''

''பகவதி... நீ இவளுக்குப் பரிய வேண்டாம். இவளுக்கு என் குரல் கேட்காது. ஆனால் பார்த்தீபன் மாடியறையிலே தொண்டையைச் செருமிட்டா கூட போதும்... டக்குனு போயிடுவா...'' சீறினாள் மரகதம்.

முகம் சிவந்து நெஞ்சு பதற உதட்டைக் கடித்துக் கொண்டு மவுனமாக மாமியாரைப் பார்த்தாள் சாம்பவி.

''நான் கத்தினது கேட்டு பாவம் பகவதி தோட்டத்திலே உலாத்திக் கிட்டிருந்தவ ஓடி வந்தா. என்ன ஆச்சுனு கேட்டுப் பதறிப் போயிட்டா. இருக்காதா பின்ன? அவ எனக்கு உறவுக்காரியாச்சே. ரத்த சம்பந்தம் இருக்கு பார்... அதனாலே துடிச்சுப் போயிட்டா!''

பகவதி கர்வமாக முகத்தை நிமிர்த்திக் கொண்டாள்.

''என்ன செய்துட்டேன், பெரிசா புகழறே மரகதம்?''

''ஒரு சின்ன உபகாரந்தான் என்னை நல்லா முழிச்சுக்க வச்சது என்கிற உண்மையை என் மருமகளுக்கு சொல்லியாகணுமே. அடுத்த அறை அலமாரியிலே நான் உபயோகிக்கிற சந்தன விசிறி ஒரு தட்டில் இருக்கும். எடுத்துட்டுவான்னு பகவதியை அனுப்பினேன். உன் பெட்டியருகே தரையில் ஒரு கட்டு காகிதம் தென்பட்டதாம். உங்க மருமக ஞாபகத்தைப் பாருங்க — பெட்டியிலிருந்து எடுத்ததை உள்ளே வைக்காமப் பூட்டியிருக்கான்னு என்கிட்டே கொண்டு வந்து கொடுத்தா...!''

'பொய் — சுத்தப்பொய்!' என்று கத்த வேண்டும் போல

ஆவேசம் ஆத்திரத்தில் சாம்பவி ஆடிப்போனாள்.

அவள் வேலையாக இருந்த சமயம் பகவதி அவளது பெட்டியில் பணம் ஏதாவது கிடைக்குமா என்று குடைந்திருக்கிறாள். கடிதங்களைப் பார்த்ததும் அந்தக் குரூரமான யோசனை வந்திருக்கு. மரகதத்திடம் காட்டி அதைப்பற்றிக் கேலி செய்து பேச, அவைகளை வாரிக்கொண்டு வந்து தந்திருக்கிறாள் — எத்தனை அயோக்கியத்தனம்? கனம் தாங்காது அவளது நெஞ்சு வெடித்துவிடும் போல விம்மியது.

''அந்த கடிதாசுகளில் சிலதை எனக்கு வாசிச்சுக் காட்டச் சொன்னேன் — அப்போதான் எனக்குத் தெரிஞ்சது நீ பலே ஆளுதான் என் மகன் காதல் பித்து தலைக்கேறி உன்னைக் கட்டிக்கிறதாகக் கடிதம் மூலம் வாக்கு கொடுத்ததை நீ பத்திரமா வச்சுக் கொண்டு, அவன் நழுவி விடாம மிரட்டி கையில் போட்டுக் கொண்டே. கடிதாசி எழுதி மாட்டிக் கொண்டோமேன்னு அவன் வேறே வழியில்லாம கல்யாணத்துக்கு ஒப்புக் கொண்டிருந்தான். அப்படியே கடிதம் மூலம் என் வீட்டு விவகாரங்கள் — என் பழக்க வழக்கம் எல்லாத்தையும் நீ கேட்க அவன் எழுதித் தொலைச்சிருக்கான். அதையெல்லாம் தெரிஞ்சு கொண்டு இத்தனை பெரிய வீட்டை சாமர்த்தியமாக நிர்வகிக்கத் தெரிஞ்சாப்போல உள்ளே புகுந்து கொண்டே கள்ளி — பெரிய வேஷக்காரி...!''

தனது ஆடைகளை யாரோ உருவி... அவமானப்படுத்தி விட்டது போன்று உடல் முழுவதும் கூசிக் குறுகிப் போனாள் சாம்பவி. தன் கணவன் காதலனாக இருந்த பொழுது மிகவும் அந்தரங்கமாக அவளுக்கு எழுதின கடிதங்களை இப்படியா அம்பலப்படுத்துவது? பிறர் கடிதங்களைப் படிப்பது தவறு என்று ஆசிரியை வேலை பார்த்த பகவதிக்கா தெரியாது. கண்ணில் பனித்த நீரை அடக்கிக் கொண்டு கோபத்துடன் உரக்கவே கேட்டு விட்டாள்.

''என் கணவர் எனக்கு எழுதின கடிதங்களைப் படிக்க இவங்களுக்கு என்ன உரிமை... அப்படி செய்கிறது பெரிய தப்புன்னு படிச்சவங்க இவங்களுக்கு தோணாதது என்ன

விந்தை?''

''விந்தையுமல்ல வேடிக்கையுமில்லே... அவ வாசிக்க மாட்டேன்னுதான் சொன்னா! நான்தான் வற்புறுத்தினேன். என் மகன் என்னதான் எழுதி உன்கிட்ட மாட்டிக் கொண்டிருக்கான்னு தெரிஞ்சுக்க விரும்பினேன்.''

'உங்களது மகனின் காதல் கடிதங்களைப் பிறர் படிச்சு நீங்கள் கேட்க, உங்களுக்கு வெட்கமாக இல்லை. அவரது அந்தரங்க ஆசைகளை வேறு ஒரு பெண்ணோட பரிமாறிக் கொள்ள அசிங்கமா இல்லை?' படபடவென்று கேட்கக் கொதித்தாள்.

கட்டாயம் அவள் இந்த விபரீத நிகழ்ச்சியை பார்த்தீபனிடம் உடனடியாகச் சொல்லியாக வேண்டும். வந்தவுடனேயே முதல் காரியமாக வீட்டிலே கலகம் செய்து கொண்டு உட்கார்ந்திருக்கும் பகவதியையும் அவள் பெண்ணையும் மூட்டை கட்டி அனுப்பி வைக்க வேண்டும்... இல்லாவிடில் வெகு சீக்கிரம் அங்கு ஒரு கொலை விழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சட்டென்று குனிந்து சிதறிக் கிடந்த கடிதங்களைப் பொறுக்கி சேர்த்து எடுத்துக் கொண்டாள்.

''இவைகளை நான் பெட்டியில் வச்சுட்டு வரேன் அத்தை...'' என்று கூறிவிட்டு வெளியே வந்தாள்.

ஆத்திரமும், அழுகையும் கட்டுக் கொள்ளாது போகவே, அந்தக் கடிதங்களைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அறைவாசல் கதவருகே நின்றபடி விசும்பி அழுதாள்.

பிள்ளையார் கோவில் அருகே கள்ளத்தனமாக சந்தித்துக் காதல் கடிதங்களைப் பரிமாறிக் கொண்ட போது... எதிரே தெரிந்த பச்சை வயல் நெற்பயிரைத் தொட்டு விளையாடிவிட்டுத் தென்றல் வாய்க்காலின் குளுமையை வாரிக் கொண்டு வந்து அவள் முகத்தில் வீசியபோது... மனதுக்குப் பிடித்தவனை மணந்து கொண்டதும் அவளது வருங்காலம் ஒரு இனிய பூங்காற்றாக இருக்கப் போவதாகக் கனவு கண்டவளுக்கு எத்தனை பெரிய அதிர்ச்சி!

இப்போது பயங்கரமானதொரு புயல் அல்லவா வீசிக் கொண்டிருக்கிறது. அவள் தாயின் வாயில் சர்க்கரையை அள்ளிப்போட வேண்டும். 'பணக்காரனுக்கு மனைவியாகப் போகிறோம் என்று மயங்கிவிடாதே! பணமும், வீடும் வசதிகளும் இருந்துவிட்டால் மட்டும் வாழ்க்கை நிறைந்து விடாது...!'

'அம்மா, உலக அனுபவத்தின் பேரில் நீங்க சொன்னது முற்றிலும் உண்மை... அம்மா... என்னை ரொம்பவே அவமானப்படுத்திட்டாங்க. என் உடம்பு மேலே துணியில்லாதது போல எனக்கு யாரையும் பார்க்க வெட்கமா இருக்கும்மா. அவர் எனக்கு ஆசையோடு எழுதின கடிதங்களைப் படிச்சு கேலி செய்து சிரிச்சிருக்காம்மா பாவி பகவதி — என்ன நெஞ்சழுத்தம்... கேட்பாரில்லை என்கிற துணிச்சல்... அம்மா என் கணவர் முகத்தைப் பார்க்கக்கூட எனக்கு ரொம்ப அவமானமா இருக்கும் போலிருக்கே...!' என்று கூறித் தன்னைப் பெற்றவளைக் கட்டிக் கொண்டு கதறி அழ வேண்டும் போன்ற துயரத்தில் அவள் பொங்கிப் போனாள்.

ஆமாம்... உள்ளூரிலேயே பக்கத்துத் தெருவில் வசிக்கும் பெரியம்மா அலமேலுவுக்கு இங்கே நடக்கிற விஷயங்கள் ஏதாவது தெரியுமா?

வேலையை விட்டுப் போனதும் தங்கவேலு சும்மா இருக்க மாட்டார். உடனடியாக அலமேலு அம்மாவிடம் போய் பார்த்தீபன் வீட்டில் நடக்கும் அநியாயங்களைச் சொல்லியிருப்பார்.

பெரியம்மா அவைகளைக் கேட்டுக் கொண்டு சும்மா இருந்துவிட மாட்டாங்க. யாரையாவது கூட்டிக்கொண்டு நியாயம் கேட்க அங்கே வரமாட்டாங்களா?

அவள்... பெரியம்மாவை இப்போது தொடர்பு கொள்ள வேண்டும்... எப்படி? கலங்கினாள்.

31

சிறிது பொழுதில் மரகதத்திடமிருந்து அழைப்பு வந்துவிட்டது. கதவைப் பலமாகத் தட்டினாள் பகவதி. மெல்லத் திறந்த சாம்பவியைக் குரோதமாகப் பார்த்தாள்.

''உன் மாமியார் உன்னைக் கூப்பிடறாங்க.. சீக்கிரம் வா...'' அதட்டி விட்டு வேகமாக முன்னால் நடந்தாள்.

வழக்கம் போல் அறைக்குள் மரகதத்தின் படுக்கையருகே பகவதியும் அவளது மகளும் ஆளுக்கொரு நாற்காலியில் அமுத்தலாக உட்கார்ந்து கொண்டனர்.

சாம்பவி எழுதுவதற்கு காகிதக் கட்டொன்றும், பேனாவும் மேஜை மேல் வைக்கப்பட்டிருந்தன.

''முதல்லே நான் சொல்றபடி கடிதாசியை எழுதி முடி...!'' உத்தரவிட்ட மாமியார் அவளை உக்கிரமாகப் பார்த்தாள்.

மேஜையருகே போய் நின்ற சாம்பவி தனது மரண ஓலையைத் தானே எழுதப் போவது போல பயத்தில் மெய்விதிர்த்துப் போனாள். நனைந்து போன உள்ளங்கைகளைப் புடவைத் தலைப்பில் துடைத்துக் கொண்டு தயங்கினாள்.

''இப்பவே எழுதணுமா... இவங்கள்ளாம் இங்கே இருக்காங்களே அத்தை...!'' மெல்லிய குரலில் அவள் சொல்லி முடித்ததும் மரகதம் ஏளனமாக இரைந்து சிரித்தாள்.

''பரம ரகசியம் — அவங்க முன்னாடி எழுதினா மானம் போயிடும்னு கவலையோ...? ஒரு வழியிலே அவங்க இங்கே இருக்கிறது நல்லது. உன்னை நான் கொடுமைப்படுத்தி எழுத வச்சேன்னு நீ பின்னாடி என் மேலே கதை கட்டமாட்டே பார்... அவங்க சாட்சியா இருக்கட்டும். உம்... ஆரம்பி...'' உறுமினாள்.

மிடறு விழுங்கிக் கொண்டு மேஜையருகே குனிந்தபடி

நின்று கொண்டு எழுத பேனாவுடன் ஆயத்தமானாள் சாம்பவி.

கூரை முகட்டைப் பார்த்தபடி உரத்த குரலில் அவள் எழுத வேண்டியதை சொல்லத் தொடங்கினாள் மரகதம்.

''அன்புள்ள அத்தானுக்கு, வணக்கம்.

இந்தக் கடிதத்தை நான் சுயநினைவுடன்—மனப்பூர்வமான சிந்தனையுடன்தான் எழுதுகிறேன். திருமணம் செய்து கொண்ட நாளிலிருந்து எந்தவிதமான சுகமுமின்றி நோயாளியாகப் படுத்துக் கிடக்கும் உங்களது தாய்க்கு பணிவிடை செய்து கொண்டு, வீட்டின் உயர்மட்ட வேலைக்காரியாக... இல்லை ஒரு கொத்தடிமையாக வாழ்ந்து நான் அலுத்து விட்டேன்...''—எழுதி முடிப்பதற்குள் சாம்பவியின் கை நடுங்கியது.

''அத்தை! சத்தியமா சொல்றேன். உங்களுக்குப் பணிவிடை செய்ய நான் ஒரு போதும் சலிச்சுக்கலை... இப்படி எழுதச் சொல்றீங்களே... நியாயமா...?'' தழுதழுத்தாள்.

''பெரிய அரிச்சந்திரன் மகள். பொய் பேசினால் புழுத்துப் போய் விடுவாள். சே! வாயை மூடு குறுக்கே பேசாம நான் சொன்னதை மேலே எழுது!'' மரகதம் சீறினாள்.

''உங்கள் தாய் எழுந்து நடமாட இன்னும் எத்தனை காலம் ஆகுமோ தெரியாது. அதுவரை போலியாக உங்கள் மனைவி இந்தவீட்டின் எஜமானி என்கிற தகுதிகளில் வளைய வந்துகொண்டு உப்பு சப்பற்ற ஒரு வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்க எனக்குப் பிடிக்கவில்லை...!''

''அத்தை! காலமுச்சூடும் இப்படியே இருக்கச் சொன்னாலும் தயார். நான் ஒரு நாளும் உங்களைப் பாரமாக நினைக்க மாட்டேன்!'' கண்களில் நீர் பெருக பரிதாபமாகத் தன்னைப் பார்த்த மருமகளை கனல் விழிகளால் வெறித்தாள் மரகதம்.

''இடையே இன்னொரு வாட்டி பேசினியோ நான் பொல்லாதவளா இருப்பேன். நீ காலமுச்சூடும் இருக்கத் தயார். ஆனால் உன்னை இனி ஒருநாள் கூட இங்கே வச்சுக்க நான் தயார் இல்லை. அந்த ஜோசியர் என்ன சொன்னார் தெரியுமா?''

பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு வஞ்சகப் புன்னகையுடன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த பகவதியின் பார்வையைக் கண்டு கூசி... தரையைப் பார்த்தாள் சாம்பவி.

''இந்தப் பொண்ணுடையது சுத்த தரித்திர ஜாதகம். அதுவும் இப்போ சனி தசை ரொம்பக் கடுமையா இருக்கு. இவளுடைய மாமியாருக்கு ஆகவே ஆகாது... இவளை ஒரு நாழிகூட வீட்டிலே தங்க வச்சுக்கிறது சரியில்லை. உங்க உயிருக்கு ஆபத்துன்னு சொன்னார்.''

''என் ஜாதகமா...?'' முடிக்காது மென்று விழுங்கினாள் சாம்பவி.

''எப்படி எனக்கு கிடைச்சுதுன்னுதானே கேட்கிறே? கல்யாணத்துக்கு முந்தி உன் பெரியம்மாகிட்டே கேட்டேன். நீ பிறந்த தேதி—நாழி நட்சத்திரம் எல்லாம் சொன்னாங்க. அதைக் குறிச்சு வச்சுக்கிட்டிருந்தேன். இந்த ஜோசியர்கிட்டே அதைக் கொடுத்து ஒரு ஜாதகம் எழுதச் சொன்னேன். தான் எழுதி முடித்த ஜாதகத்தை நல்லா பார்த்த பிறகுதான் ஜோசியர் எனக்கு எச்சரிக்கை கொடுத்தார்.

''இதையெல்லாம் நீங்க நம்புகிறீங்களா அத்தை?'' சாம்பவிக்கு அழுகை தொண்டையை அடைத்தது.

''இந்தப் பெண் காலடி எடுத்து வச்ச வீடு உருப்படாதுன்னு ஜோசியர் திட்டவட்டமா சொல்லிட்டார். நீ காலடி எடுத்துவச்ச நாளே நான் கை கால் செத்து படுக்கையிலே விழுந்துட்டேனே. இதைவிட இந்த வீட்டுக்கு இன்னும் என்ன தீங்கு வரணும்?''

''என் பிள்ளை ஆசைப்பட்டு கல்யாணம் செய்து கொண்ட பெண்ணாச்சே, நான் என்ன பண்ணுவேன்னு கேட்டேன். அதுக்கு ஜோசியர் என்ன சொன்னார் தெரியுமா? பொன் கத்தின்னா கழுத்தை அறுத்துக்க முடியுமா? முதல்லே உங்க மருமகளை இங்கேயிருந்து பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைங்க—அடுத்தபடியா உங்களுக்கு நான் தினசரி நம்ப சிவன் கோயிலிலே நாளையிலிருந்து விசேஷ அர்ச்சனை ஒண்ணு செய்ய ஆரம்பிக்கணும்... இந்த வீட்டிலே இப்போ மிருத்யு

பயம் இருக்குன்னார் — அதாவது வாசல்படியிலே எமன் வந்து உன் உருவிலே உட்கார்ந்திருக்கானாம். அதனாலே நாளையன்றே முதல் வேலையா நீ ஊருக்குக் கிளம்பியாகணும்... மாட்டேன்னு மறுத்தியோ நான் வேறு வழியிலே உன்னை அனுப்பி வைக்க முடியும். உன் பேரில் அபவாதம் சொல்லி உன்னைப் பார்த்தீபன் வெறுத்துக் காரி உமிழும்படி செய்ய என்னால் முடியும். அதனால் மரியாதையாகக் கிளம்பிப் போயிடு!''

''அத்தை! நீங்க சொல்றபடி செய்ய நான் தயார். இந்தக் கடிதாசி தேவையில்லை. இன்னும் சில நாளில் அவர் ஊரிலிருந்து வந்துடுவார். உங்களைத் தனியா இந்த நிலையில் விட்டுட்டு நான் எப்படிப் போக முடியும்? அவர் வந்ததும் நேரிடையே அவர்கிட்ட சொல்லிட்டு நான் என் பிறந்த வீட்டுக்குப் போயிடறேன்!'' சொல்லி முடிப்பதற்குள் கண்ணீர் கன்னத்தில் ஓட விசும்பினாள்.

''வந்ததும் அவனைக் கைக்குள் போட்டுக் கொண்டு ஏமாத்தலாம்னு நினைக்குறியா... அதுதான் முடியாது. என்னை கவனிச்சுக்க இவங்க ரெண்டு பேரும் இருக்காங்க. நீ கவலைப்பட வேண்டாம். இந்தக் கடிதாசியை முடிச்சு என்கிட்ட கொடுத்துட்டு... ஊருக்குக் கிளம்பற வழியைப் பாரு. அழுதது போதும்... மேலே நான் சொல்றபடி எழுதி முடி...!'' அதட்டினாள் மரகதம்.

''நீங்க வந்தால் ஒருசமயம் மறுப்பு தெரிவிப்பீர்கள் என்ற காரணத்தால் நான் இன்றே என் பிறந்த வீட்டுக்கு புறப்பட்டுப் போகிறேன். அங்கே வந்து நீங்கள் என் தந்தையிடம் பேசி சமாதானம் செய்து ஊருக்குத் திரும்ப அழைத்து வரலாம் என்று தவறாகத் திட்டம் போட வேண்டாம். விவாகரத்துப் பற்றி சட்டத்தின் பல கோணங்களை நான் அறிவேன். மனமொத்துப் போகாத தம்பதிகள், ஒருவரையொருவர் பாராது ஒரு வருஷ காலம் பிரிந்திருந்துவிட்டு... பின்னர் இருவரும் மனமொப்பி எந்தவிதமான சிக்கலுமின்றி விவாகரத்துப் பெறலாம். சட்டத்தின் இந்தச் சலுகை மூலம் நான் உங்களிடமிருந்து விடுதலை பெற விரும்புகிறேன் — இங்ஙனம் சாம்பவி!''

— கடிதத்தை எழுதி முடித்ததும் துக்கம் தாளாது இருதயம் வெடித்துவிட்டது போன்ற வேதனையில் அவள் விக்கி அழுதாள்.

''போதும் உன் ஒப்பாரி — நிறுத்து — கடிதத்தை இப்படிக் கொடு. இன்னிக்கு ராத்திரி மட்டும் நீ இங்கே தங்க அனுமதிக்கிறேன். நாளைக்கு எழுந்ததும் நேரே உன் பெரியம்மா வீட்டுக்குப் போய் புலம்பி, புகார் செய்து அவங்களையெல்லாம் சிபாரிசுக்கு கொண்டு வரலாம்னு மனப்பால் குடிக்காதே. நாளை காலை வீட்டு வேலை எல்லாத்தையும் ஒழுங்கா செய்து முடிச்சுட்டு — பொழுது சாயறதுக்கு முந்தி பொன்னி, அவ புருஷன் இருவர் துணையோட பஸ் ஏறி திருச்சிக்குப் போய் — ராத்திரி ரெயில் பிடிச்சு உன் ஊருக்குப் போய்ச் சேர். உன்னை அவங்க ரெண்டு பேரும் பத்திரமா இருந்து வண்டியிலே ஏத்திவிட்டுதான் திரும்புவாங்க. தனியா நான் எப்படிப் போவேன்னு தளுக்குப் பண்ணாதே. இந்த ஊருக்கு நீ வரும்போது கூடத் துணைக்கு யார் வந்தாங்க? அப்போ இருந்த துணிச்சல் இப்போ இன்னும் அதிகமாயிருக்கிறதாலே உன்னாலே ரெயிலில் தனியா பயணப்பட முடியும். உன் பெட்டி, துணி மணிகளை இப்பவே எடுத்து வச்சுக்கோ. உன் இடுப்பிலே குலுங்கற சாவிக் கொத்தைக் கழட்டி மாயா கையிலே கொடு. அவ உன்னைவிட அதிகம் படிச்சவ. சாமர்த்தியக்காரி. அவளால் இந்த வீட்டை எனக்காக ரொம்ப நல்லா நிர்வகிக்கத் தெரியும். என் பத்திய சாப்பாட்டை பத்தி நீ கவலையில் உருக வேண்டாம். பகவதி என்னைப் பத்திரமா கவனிச்சுப்பா...!'' — மூச்சு விடாது மரகதம் பேசினாள்.

''நீ சொல்லணுமா மரகதம். உன் பிள்ளை அருகிலே இல்லாத சமயம் — படுத்த படுக்கையாகக் கிடக்கிற உன்னை நான் அனாதையா விட்டுடுவேனா...? விடு கவலையை...'' இடை புகுந்து பேசிய பகவதி... ஏளனமாக சாம்பவியை பார்த்தாள்.

இடுப்பிலே தொங்கிய சாவிக் கொத்தை மெல்ல உருவி எடுத்து மேஜைமேல் வைத்தாள் சாம்பவி.

கழுகு தன் இரைமீது பாய்வது போல மாயா எழுந்து வந்து வேகமாக அதை எடுத்துத் தன் இடையில் செருகிக் கொண்டாள். இடுப்பைத் தடவிக் கொண்டு நிமிர்ந்து பெருமையுடன் சாம்பவியைப் பார்த்தாள்.

மனம் நோகப் பேசுவது போதாது போல அவர்கள் முன்னிலையில் அந்தக் கடிதத்தை எழுதச் சொல்லி அவமானப்படுத்தி — வீட்டுப் பொறுப்பை அவர்கள் வசம் ஒப்புவித்து அவளை ஒரு தூசி போல மாமியார் ஒதுக்கி விட்டதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நெஞ்சைப் பிளந்து விடும்போல வந்த அழுகையை அடக்கிக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள்.

பட்டென்ற ஓசையுடன் பகவதி கதவை உள்ளே தாளிட்டுக் கொண்டதைக் கண்டு அவள் திடுக்கிட்டுப் போனாள். இத்தனை நாட்களும் அவள் தன் மாமியாரின் அறையில் தரையில் அவளுக்குத் துணையாக படுத்துறங்குவது வழக்கம். அந்தத் தகுதிகூட அவளுக்குக் கிடையாது என்பதைச் சுட்டிக்காட்டுவது போலிருந்தது பகவதியின் செய்கை.

வேறு வழியின்றி முன்னறைத் தரைமீது பாயை விரித்துக் கொண்டு விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தாள்.

அதுதான் அவள் கடைசியாக அங்கு கழிக்கப் போகும் இரவு என்று எண்ணிய போது அவளுக்குக் கட்டுக்கொள்ள முடியாமல் அழுகை வந்தது.

ஆரம்பத்திலிருந்து மரகதம்மாளுக்குத் தன் மருமகளைப் பிடிக்கவில்லை. மகனுக்காகப் பொறுத்துக் கொண்டிருந்தாள். அவன் அருகில் இல்லாத சமயம் அவள் பழி தீர்த்துக் கொள்கிறாள்.

ஆமாம்... வீட்டுக்கு வந்துள்ள அந்த இருவரையும் நம்பி சாவிக் கொத்தை கொடுத்தது சரியா?

சாவிக் கொத்தை உபயோகித்து — அவர்கள் வீட்டின் சில அறைகளைத் திறந்து விஷமம் செய்யமுடியும். விலை உயர்ந்த பொருள்களும், நகைகளும்... வங்கி லாக்கரில் உள்ளன. அதன் சாவி பார்த்தீபனிடம் இருக்கிறது. ஆனால் வீட்டையும்

அதிலுள்ள பொருள்களையும் விட மரகதம்மாளின் உயிர் மிகவும் உயர்ந்ததாயிற்றே. படுத்துக் கிடக்கும் நோயாளியை பராசையின் உருவான அவர்களிருவரின் பாதுகாப்பில் விட்டு அவள் வெளியேறுவது சரியா?

சாம்பவி சென்னைக்குப் போய்ச் சேருமுன் — இருவரும் சூழ்ச்சி செய்து மரகதம்மாளது உணவில் ஏதாவது மருந்தைக் கொடுத்து... அவர்களுக்கு ஆபத்து உண்டாக்கி விட்டால்...

இதை எப்படித் தவிர்ப்பது? ஊருக்குப் போவதாகப் போக்குக் காட்டித் திரும்ப வீட்டுக்கு வந்துவிட்டால்...

கூடவே போலீஸ்காரர்களைப் போல பொன்னியையும், அவளது கணவனையும் அனுப்பி வண்டியேற்றிவிட சொல்லப் போகிறார்களே? பொன்னி... மரகதம்மாளின் வலது கையாச்சே... வேறு எந்த மார்க்கத்தில் அவள் மாமியாருக்கு வரப்போகும் ஆபத்தைத் தவிர்ப்பாள் — அந்தக் கடிதத்தைத் தான் தன் பூரண இஷ்டத்துடன் எழுதவில்லை வற்புறுத்தப்பட்டாள் என்பதைப் பார்த்தீபனுக்கு எப்படித் தெரிவிப்பாள்...? எப்படி? ஐயோ எப்படி...? நினைத்து நினைத்து... கண்ணீருடன் கலங்கி அழுதாள் அவள்.

32

திடீரென்று அந்த எண்ணம் மூளையில் பளிச்சிட அவள் எழுந்து உட்கார்ந்தாள். நேரம் நடு இரவைத் தாண்டி விட்டிருந்தது.

மரகத்தின் அறைக்குள்ளே அடைந்து கொண்ட தாயும், மகளும் சுவர் ஓரமாக சாம்பவி மடித்து வைத்திருந்த ஜமக்காளத்தை விரித்துப் போட்டுக் கொண்டு உறங்கி விட்டனர்.

விடிவிளக்கின் மெல்லிய ஒளியில் ஓசைப்படாது நடந்து வந்து மாமியாரின் அறைமுன்னே நின்றாள் சாம்பவி.

உள்ளே மயானத்தின் அமைதி நிலவியிருந்தது. மூவரும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற துணிவில் அவள் சப்தமிடாது நடந்து தன் அறைக்கதவை மெல்லத் திறந்தாள்.

கதவை உள்ளே தாழிட்டுக் கொண்டு அலமாரித் தட்டிலிருந்து பேனாவையும், காகிதத்தையும் எடுத்து அவசரமாகத் தன் கணவனுக்கு எழுதினாள்.

''அன்புள்ள அத்தான்.

உங்களிடம் அத்தை கொடுக்கும் கடிதம் நான் சுயமாக எழுதியதல்ல. வற்புறுத்தலில் எழுதியது. நான் அத்தை அவர்களைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்வேன் என்ற நம்பிக்கையுடன்தான் தாங்கள் வெளியூருக்குப் போனீர்கள். அதுசமயம் என் கடமையைப் புறக்கணித்துவிட்டு நான் வீட்டைவிட்டு வெளியேறுவேன் என்று உங்களால் நம்ப முடியாது.

வீட்டுக்கு விருந்தாளியாக வந்துள்ள பகவதி அம்மாள் அத்தையைத் தம் கை பொம்மையாக ஆட்டி வைக்கிறார்கள். ஜோசியம் - மந்திரம் முதலியவைகள் மீது அத்தையின் கவனத்தைத் திருப்பி... நீங்கள் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பலவித குழப்பங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களது சூழ்ச்சியால் அத்தையின் உடல்நிலை கெட்டுவிடுமோ என்ற அச்சத்துடன் நான் கிளம்பிப் போகிறேன். இதற்குமேல் எழுத நேரமில்லை. வீட்டுக்கு வந்ததும் நீங்கள் முதல் வேலையாக இந்த விருந்தாளிகளை வெளியே அனுப்ப வேண்டும்.

— அன்புள்ள சாம்பவி''

வேகமாக எழுதிய கடிதத்தை நன்றாக மடித்து அதன்மீது அவசரம் — இந்தக் கடிதத்தை உடனடியாக நிரு. பார்த்தீபனிடம் சேர்க்கவும் — சாம்பவி என்று சிவப்பு பேனாவினால் எழுதி முடித்துவிட்டு - கடிதத்தை இடுப்பில் செருகிக் கொண்டாள்.

அடுத்த அறையில் யாரோ இருமும் சத்தம் கேட்டது. விளக்கை சட்டென்று அணைத்துவிட்டு கதவை மெல்ல மூடிவிட்டு... விரைவாக நடந்துவந்து முன்னறையில் கிடந்த பாயின் மீது படுத்துக் கொண்டு விட்டாள்.

அவள் நினைத்தது சரியாகவே இருந்தது. சாம்பவி என்ன செய்கிறாள் என்று வேவு பார்க்கக் கிளம்பியவள் போல எழுந்து வெளியே வந்த பகவதி முன்னறைப் பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள்.

போர்வைக்குள் முடங்கிக் கொண்டிருந்த சாம்பவியைப் பார்த்து உள்ளூர திருப்தி. ஆனாலும் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள ''சாம்பவி சாம்பவி?'' என்று இருமுறை கூப்பிட்டுப் பார்த்தாள்.

மூச்சைப் பிடித்துக் கொண்டு அசையாது சாம்பவி கிடந்தாள்.

''சனியன் படுத்தால் எருமை மாடுபோல என்ன தூக்கம்...'' முணுமுணுத்தபடி குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து பாட்டிலில் நிறைத்து வைத்திருந்த குளிர்ந்த நீரை ஒரே மூச்சாகக் குடித்துவிட்டு மறுபடி அறைக்குச் சென்று தாளிட்டுக் கொண்டாள்.

மறுநாள் காலை எழுந்து குளித்து முடித்து — மாற்றுடை அணிந்து கொண்டு, தன் சாமான்களை சேகரித்துப் பெட்டிக்குள் அடுக்கித் தயாராக்கிக் கொண்டாள் சாம்பவி.

அந்தக் கடிதத்தை பத்திரமாக இடையில் செருகிக் கொள்ள மறக்கவில்லை. காப்பி பலகாரத்தை முடித்துக் கொண்டு தாயும் மகளும் முன்னறையில் வந்து உட்கார்ந்த போது டாக்டர் வைத்தியலிங்கம் கேட்டைத் திறந்து கொண்டு வந்தார்.

அவரைக் கண்டதும் வெதறிப் போனாள் பகவதி.

தன் சொந்த மகளைப் போல சாம்பவி மீது வைத்தியருக்கு ஒரு அலாதி பரிவு — கண்கள் இடுங்கி, முகம் உப்பி, சோர்ந்து காணப்படும் சாம்பவியை அவர் கட்டாயம் விசாரிப்பார். 'என்ன ஆச்சு? அழுதியா அம்மா? எதுக்கு... என்ன நடந்தது?'

என்று மனிதன் விசாரிக்கத் தொடங்கி விட்டால்...

டாக்டர் தன் பக்கம் சாக்ஷியாக இருப்பார் என்ற துணிச்சலில் சாம்பவி நடந்ததைச் சொல்லி விட்டாள்...

அவள் மிகவும் பாடுபட்டுத் தீட்டிய அந்தத் திட்டங்கள் அத்தனையும் தவிடு பொடியாகிவிடுமே.

''வாங்கோ டாக்டர்... நேத்தே வருவீங்கன்னு எதிர்பார்த்தேன்.'' போலியான புன்னகையுடன் முந்திக் கொண்டு பகவதி வரவேற்றாள்.

''இன்னிக்குத்தான் நான் வரவேண்டிய நாள் -சாம்பவிக்குத் தெரியுமே... அம்மா சாம்பவி!'' உரத்துக் குரல் கொடுத்தபடி அவர் உள்ளே நுழைந்தார். ''சாம்பவிக்கு நேத்து பூரா ஒரே தலைவலி - அதனாலே நான்தான் மரகதத்தை ராப்பூராக் கவனிச்சுக் கொண்டேன்...''

''அப்படியா! வேலைக்காரியிடம் சொல்லியனுப்பிச்சா வந்து பார்த்து மருந்து கொடுத்திருப்பேனே?''

''அவ புருஷனே மருந்துக் கடை வச்சிருக்கானே. தலைவலி — காய்ச்சல் எல்லாத்துக்கும் ஏகப்பட்ட மாத்திரைகள் அலமாரி நிறைய இருக்கே — அதுகளை சாப்பிட்டும் வலி குறையாம ரொம்ப கஷ்டப்பட்டா...''

''பேசாம இன்னிக்கு ஓய்வு எடுத்துக்கிட்டு படுத்துக்கிடட்டும்... அடுப்புகிட்டே நின்னா தலைவலி அதிகமாகுமே. அம்மா சாம்பவி!'' என்று கூறிக்கொண்டு அவர் சமையலறை பக்கம் சென்றதும் சாம்பவி வெளியே வந்தாள்.

கண்கள் இடுங்கி, வெளேரென்று ஊதி விட்டிருந்த அவள் முகத்தை வியப்புடன் பார்த்தார் வைத்தியலிங்கம்.

''எங்கே இந்த தங்கவேலுவையும் - அந்தப் பொடிப் பயலையும் காணோம்? வீடு ஏன் இப்படி வெறிச்சோன்னு கிடக்கு...''

சாம்பவி வாயைத் திறக்குமுன் பகவதி முந்திக் கொண்டாள்.

''அந்தத் தங்கவேலு செய்த அநியாயத்தை என்ன

சொல்வேன் போங்க. திருச்சியிலே யாரோ பெரிய மனுஷங்க வீட்டிலே அதிக சம்பளம் தராங்களாம். அந்தப் பொடியனையும் கூட்டிகிட்டு புறப்பட்டுப் போயிட்டான். அவன் போனா இங்கே வேலை நடக்காதா என்ன? சாம்பவிக்கு சமையலிலே நான் கை கொடுக்கிறேன். மரகதத்துக்கு பணிவிடை செய்ய என் மக்கூட உதவறா?'' படபடவென்று பொய்யைப் பொரிந்து கொட்டினாள்.

மரகதத்தை கவனிக்க உள்ளே சென்ற வைத்தியரின் பின்னால் வழக்கம் போல சாம்பவி செல்வதைக் கண்டு பரபரப்புடன் பகவதி பின்பற்றினாள்.

பரிசோதனையை முடித்துக் கொண்டதும் — தொடர்ந்து கொடுக்க வேண்டிய மருந்துகளின் விவரத்தை சாம்பவியிடம் கூறிவிட்டு... அவர் திரும்பியதும்... டக்கென்று அவரது மருந்துப் பெட்டியை பகவதி தூக்கிக் கொண்டாள்.

''இருங்கோ டாக்டர். காப்பி சாப்பிட்டுவிட்டு போகலாம்'' என்று புன்முறுவலுடன் உபசரித்தபடி பெட்டியை சாப்பாட்டறை மேஜைமீது வைத்தாள்.

''சாம்பவி, டாக்டருக்கு சூடா கொஞ்சமா சர்க்கரை போட்டு காப்பியை கொண்டு வந்து வை... நான் துவாலை சோப்பு எல்லாம் எடுத்து கொடுத்து உதவறேன்...'' முந்திக் கொண்டாள்.

வைத்தியலிங்கமும், சாம்பவியும் ஒருகணம் மேலும் தனியே நின்று பேச அனுமதிக்கக் கூடாது என்பது அவளது தந்திரம்.

சாம்பவியும் ஒரு திட்டத்துடன்தான் அந்தக் கடிதத்தை எழுதி இடுப்பில் தயாராக செருகி வைத்துக் கொண்டிருந்தாள்.

அன்று கட்டாயம் டாக்டர் தன் மாமியாரைப் பார்க்க வருவார் என்று அவளுக்குத் தெரியும்.

எப்படியாவது அந்தக் கடிதத்தை அவரிடம் சேர்ப்பித்துவிட வேண்டுமென்ற பரபரப்பு அவளுக்கு.

தன்னைக் குறிப்பாக கண்காணித்துக் கொண்டிருந்த

பகவதியின் முன் எப்படி டாக்டரிடம் பேசுவது? அதைக் கொடுப்பது...? மிகவும் குழம்பிக் கொண்டிருந்தாள்.

சாப்பட்டறை மேஜை மீது வைக்கப்பட்டிருந்த மருந்துப் பெட்டியைப் பார்த்ததும்... சட்டென்று ஒரு எண்ணம் மின்னலடித்தது. சுற்று முற்றும் பார்த்தாள். வேலைக்காரி பொன்னி மரகதத்தின் அறையை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். வழக்கம் போல காத்தாயி பின்பக்கம் சாமான்களைக் கழுவிக் கொண்டிருந்தாள். மாயா முன்னறையில் காலைப் பத்திரிகை ஒன்றில் மூழ்கி உட்கார்ந்திருந்தாள். நடையிலிருந்த பீங்கானில் டாக்டர் கை கழுவும் ஓசை கேட்டது. ''துவாலை இதோ இருக்கு டாக்டர்!'' என்று பகவதி கூறியதும் காதில் விழுந்தது.

சட்டென்று சாப்பாட்டறை மேஜையை அணுகி டாக்டரின் மருந்து பெட்டியை மெல்லத் திறந்தாள் சாம்பவி. தன் இடையில் செருகிக் கொண்டிருந்த கடிதத்தை உள்ளே போட்டு முன் போல் பெட்டியை மூடி — பட்டன்களை நன்றாக அமுக்கிப் பூட்டினாள். அதற்குள் அவள் நெஞ்சு வெடித்து விடும்போல் பயத்தில் அடித்துக் கொண்டது.

உள்ளே சென்று வேகமாக அவருக்காக காப்பி கலந்து டம்ளரில் நிறைத்துக் கொண்டு வந்து மேஜைமேல் வைத்தாள்.

''மரகதம்மா இப்போ நல்லா குணமடைஞ்சுகிட்டு வராங்க. இன்னும் சில நாட்களில் எழுந்து வீடு பூராவும் நடமாட ஆரம்பிச்சுடுவாங்க... எல்லாம் உன்னுடைய அயராத பணிவிடைதான் காரணம்... நானும் எத்தனையோ இடங்களுக்குப் போய் வரேனே... பயிற்சி பெற்ற நர்ஸ்கூட உன்னாட்டம் ரொம்ப அனுசரிச்சு பணிவிடை செய்யறதை பார்த்ததில்லை. நர்ஸ்கள் கடமைக்கு செய்யறாங்க. நம்ப சாம்பவி மாமியார்னு பக்தியோட பணிவிடை செய்யறா.''

''இரண்டுக்கும் அதிக வித்தியாசமிருக்கே டாக்டர்...'' தன் வெறுப்பை அடக்கிக் கொண்டு சிரித்தாள் பகவதி...

''உன் மாமியார் ரொம்பக் கொடுத்து வச்சவங்கன்னுதான் சொல்வேன்... உனக்கு ஆனாலும் ரொம்பப் பொறுமை

அம்மா...'' என்று புகழ்ந்தபடி காப்பியை எடுத்துப் பருகினார் டாக்டர்.

''காப்பி... ஏ.ஒன்... எனக்கு பிடிச்சாப்பல நல்ல சூடா... வாய்க்கு ருசியா... போட்டுக் கொண்டு வந்திருக்கே... சமையலிலும் — வீட்டை கவனிச்சுக்கிறதிலும் நீ ரொம்ப கெட்டிக்காரி...''

பகவதி தாடை இறுக பற்களைக் கடித்துக் கொண்டாள்.

வந்தோம் - காரியத்தை கவனிச்சோம்னு கிழவன் சட்டுபுட்டுனு வெளியே போகமாட்டானே... சாம்பவிக்கு புகழ் மாலை போட்டுக் கொண்டிருக்கானே... எத்தனை நாழி உண்காணிச்சிட்டு நிற்கிறது... உள்ளூர கோபத்தில் அலுத்துக் கொண்டாள்.

''மறுபடி நான் அடுத்த வெள்ளிக்கிழமை உன் மாமியாரை பார்க்க வந்தால் போதும். இடையே ஏதாவது அவசரம்னா ஆள்கிட்ட சொல்லி அனுப்பு. ஓடி வந்து உதவி செய்யறேன். கவலை வேண்டாம்...'' என்று கூறிவிட்டு பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே போகத் திரும்பியவர்... மறுபடி உள்ளே வந்தார்.

''ஆமாம்! பார்த்தீபன் எப்போ ஊரிலிருந்து வருகிறார்னு தெரியுமா அம்மா? கடுதாசி ஏதாவது போட்டாரா?''

கண் இமைகள் கனக்க சாம்பவி தரையைப் பார்த்தாள்.

''புரியுது. வேலை அழுத்தத்திலே அவருக்குக் கடிதம் போட நேரமில்லை. உனக்கு அதைப்பத்தி வருத்தமா இருக்கு. வேலை சம்பந்தமா போன உன் கணவர் வெளியூரிலேயா உட்கார்ந்துடுவார். உன்னையும், அம்மாவையும் பத்தி... நாள் முழுதும் நினைச்சிட்டு இருப்பார். நான் சொல்றது பலிக்குதா இல்லையா பார் — இன்னும் ரெண்டு நாளில் ஊரிலிருந்து வந்துடுவார்... மேலும் அவர் கவலைப்படறாப்பல நிலமை ஏதும் தவறாக இல்லையே?'' சிரித்தபடி டாக்டர் திரும்பி வெளியே நடந்தார்.

அப்பாடா என்ற நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் பகவதி.

சாம்பவிக்கும் மனம் நிம்மதியாக இருந்தது.

வீட்டுக்குப் போனதும் டாக்டர் பெட்டியைத் திறந்து ஏதாவது மருந்து எடுக்கும்போது அவளது கடிதத்தைப் பார்ப்பார் - திடுக்கிட்டுப் போவார்... உடனடியா வீட்டில் என்ன நடக்கிறது என்பதை கவனிக்க அங்கே வந்தாலும் வரலாம்.

அப்படி அன்று கவனிக்க நேரம் இல்லாது பெட்டியைப் பார்க்காது விட்டுவிட்டாலும் அடுத்த நாளோ — மறுநாளோ பார்ப்பார். பார்த்தீபன் வீட்டுக்கு வந்ததும் மாமியார் கொடுக்கப் போகும் கடிதத்தைப் படித்து கோபம் கொள்ளுமுன்... ஒருசமயம் டாக்டர் முந்திக் கொண்டு அவளது கடிதத்தைக் கொடுத்து விடலாம்... அப்படியே கொடுத்து விட்டால்... கலங்கிய கண்களிலிருந்து கன்னத்தில் உருண்ட கண்ணீர்த் துளிகளை விரலால் சட்டென்று தட்டிவிட்டு... துணிவுடன் உள்ளே சென்றாள்.

33

அதற்குப் பின்னர் அங்கே நடந்தவை சாம்பவியின் மனதில் தீவிரமான கலவரத்தை உண்டு பண்ணிவிட்டது.

தோட்டக்கார சுந்தரத்தையும் வேலைக்காரி காத்தாயியையும் வீட்டின் எஜமானி அழைப்பதாகக் கூப்பிட்டனுப்பினாள் பகவதி.

தலையில் கட்டியிருந்த முண்டாசை உதறி இடுப்பிலே கட்டிக் கொண்டு ஓடோடியும் வந்தான் சுந்தரம்.

சிறு பையனாக அந்த வீட்டுக்கு வேலைக்கு வந்தவன். பெரிய தனக்காரர் காலத்திலிருந்தே தோட்ட வேலையைப் பார்த்து வந்தான். இப்போது நடுவயதைத் தாண்டி தலை நரைத்து — உழைத்துத் தழும்பேறிய கையும் உள்ளத்திலே விசுவாசமும் நிறைந்தவனாக அந்தப் பெரிய தோட்டத்தில் அவனுக்காகக் கட்டப்பட்டிருந்த சிறு ஓட்டு வீட்டுக்குள் தன்

மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந்தவன்.

தன் ஒரே மகளைப் பக்கத்து கிராமத்திலே கட்டிக் கொடுத்துவிட்டு மீதி நாட்களை அந்த வீட்டிற்கே உழைத்து உயிரைவிடத் தீர்மானித்திருந்தான். சமீப காலத்தில் அவனுக்கு செவிடாகி விட்டிருந்தது உண்மை.

''வாப்பா சுந்தரம், நீ ஊருக்குப் போகணும்னு அம்மாகிட்டக் கேட்டியாமே'' உரத்த குரலில் பகவதி அதட்டிக் கேட்டாள்.

வெற்றிலைக் காவியேறிய பற்கள் தெரிய பவ்யமாகப் புன்னகைத்தான். ''என் சம்பந்திக்கு உடம்பு சுகமில்லை. ஒரு நடை போய் பார்த்துட்டு வரணும்னு அம்மாகிட்டே கேட்டிருந்தேன். அது சின்ன எஜமான் கல்யாணத்துக்கு முந்தி. இப்போ அம்மா உடம்புக்கு முடியாம படுத்திருக்கிறதாலே... நான் எப்படிப் போக முடியும்?''

''பரவாயில்லை. அவங்க சுகமாகிகிட்டு வராங்க —உள்ளே வா'' என்று அழைத்துக் கொண்டு மரகதத்தின் அறை வாயிலில் அவனை நிற்கச் செய்தாள்.

கதவை அகலத் திறந்துவிட்டு... ''மரகதம், தோட்டக்கார சுந்தரம் வந்திருக்கான் — பத்துநாள் லீவில் அவன் ஊருக்குப் போகலாம்னு சொன்னியே — அதை நேரில் உன் வாயால் சொல்லிடு!'' என்றாள் பகவதி.

மரகதம் மெல்லப் படுக்கையினின்று நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''சுந்தரம். பாவம் நீ எனக்காக உன் சம்பந்தியைக் கூடப் போய் பார்க்கலை. அது நியாயமில்லே. ஒரு நடை நீயும் உன் பெண்ஜாதியும் ஊருக்குப் போய் பார்த்துட்டு சீக்கிரம் திரும்பி விடுங்க'' என்று உத்திரவிட்ட வண்ணம் தலையணை அடியிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவன் முன் நீட்டினாள்.

நன்றி மிக்கவனாக அவன் குழைந்து கும்பிட்டுவிட்டு அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தான்

சாம்பவிக்கும் மனம் நிம்மதியாக இருந்தது.

வீட்டுக்குப் போனதும் டாக்டர் பெட்டியைத் திறந்து ஏதாவது மருந்து எடுக்கும்போது அவளது கடிதத்தைப் பார்ப்பார் - திடுக்கிட்டுப் போவார்... உடனடியா வீட்டில் என்ன நடக்கிறது என்பதை கவனிக்க அங்கே வந்தாலும் வரலாம்.

அப்படி அன்று கவனிக்க நேரம் இல்லாது பெட்டியைப் பார்க்காது விட்டுவிட்டாலும் அடுத்த நாளோ — மறுநாளோ பார்ப்பார். பார்த்தீபன் வீட்டுக்கு வந்ததும் மாமியார் கொடுக்கப் போகும் கடிதத்தைப் படித்து கோபம் கொள்ளுமுன்... ஒருசமயம் டாக்டர் முந்திக் கொண்டு அவளது கடிதத்தைக் கொடுத்து விடலாம்... அப்படியே கொடுத்து விட்டால்... கலங்கிய கண்களிலிருந்து கன்னத்தில் உருண்ட கண்ணீர்த் துளிகளை விரலால் சட்டென்று தட்டிவிட்டு... துணிவுடன் உள்ளே சென்றாள்.

33

அதற்குப் பின்னர் அங்கே நடந்தவை சாம்பவியின் மனதில் தீவிரமான கலவரத்தை உண்டு பண்ணிவிட்டது.

தோட்டக்கார சுந்தரத்தையும் வேலைக்காரி காத்தாயியையும் வீட்டின் எஜமானி அழைப்பதாகக் கூப்பிட்டனுப்பினாள் பகவதி.

தலையில் கட்டியிருந்த முண்டாசை உதறி இடுப்பிலே கட்டிக் கொண்டு ஓடோடியும் வந்தான் சுந்தரம்.

சிறு பையனாக அந்த வீட்டுக்கு வேலைக்கு வந்தவன். பெரிய தனக்காரர் காலத்திலிருந்தே தோட்ட வேலையைப் பார்த்து வந்தான். இப்போது நடுவயதைத் தாண்டி தலை நரைத்து — உழைத்துத் தழும்பேறிய கையும் உள்ளத்திலே விசுவாசமும் நிறைந்தவனாக அந்தப் பெரிய தோட்டத்தில் அவனுக்காகக் கட்டப்பட்டிருந்த சிறு ஓட்டு வீட்டுக்குள் தன்

மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந்தவன்.

தன் ஒரே மகளைப் பக்கத்து கிராமத்திலே கட்டிக் கொடுத்துவிட்டு மீதி நாட்களை அந்த வீட்டிற்கே உழைத்து உயிரைவிடத் தீர்மானித்திருந்தான். சமீப காலத்தில் அவனுக்கு வேலசாக காது செவிடாகி விட்டிருந்தது உண்மை.

''வாப்பா சுந்தரம், நீ ஊருக்குப் போகணும்னு அம்மாகிட்டக் கேட்டியாமே'' உரத்த குரலில் பகவதி அதட்டிக் கேட்டாள்.

வெற்றிலைக் காவியேறிய பற்கள் தெரிய பவ்யமாகப் புன்னகைத்தான். ''என் சம்பந்திக்கு உடம்பு சுகமில்லை. ஒரு நடை போய் பார்த்துட்டு வரணும்னு அம்மாகிட்டே கேட்டிருந்தேன். அது சின்ன எஜமான் கல்யாணத்துக்கு முந்தி. இப்போ அம்மா உடம்புக்கு முடியாம படுத்திருக்கிறதாலே... நான் எப்படிப் போக முடியும்?''

''பரவாயில்லை. அவங்க சுகமாகிகிட்டு வராங்க —உள்ளே வா'' என்று அழைத்துக் கொண்டு மரகதத்தின் அறை வாயிலில் அவனை நிற்கச் செய்தாள்.

கதவை அகலத் திறந்துவிட்டு... ''மரகதம், தோட்டக்கார சுந்தரம் வந்திருக்கான் — பத்துநாள் லீவில் அவன் ஊருக்குப் போகலாம்னு சொன்னியே — அதை நேரில் உன் வாயால் சொல்லிடு!'' என்றாள் பகவதி.

மரகதம் மெல்லப் படுக்கையினின்று நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''சுந்தரம். பாவம் நீ எனக்காக உன் சம்பந்தியைக் கூடப் போய் பார்க்கலை. அது நியாயமில்லே. ஒரு நடை நீயும் உன் பெண்ஜாதியும் ஊருக்குப் போய் பார்த்துட்டு சீக்கிரம் திரும்பி விடுங்க'' என்று உத்திரவிட்ட வண்ணம் தலையணை அடியிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவன் முன் நீட்டினாள்.

நன்றி மிக்கவனாக அவன் குழைந்து கும்பிட்டுவிட்டு அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தான்

—நடையில் சாம்பவியைப் பார்த்ததும் தலையைச் சொரிந்து கொண்டு தயக்கத்துடன் நின்றான்.

''ஊருக்குப் போயிட்டு வரேனுங்க. நாலு நாளில் திரும்பிடுவோம். இன்னிக்கு செடி கொடிகளுக்கு நிறையத் தண்ணி பாய்ச்சிட்டுப் போனால் ஒரு நாலுநாளுக்கு அதுகள் தாக்குப் பிடிக்கும். என் சம்பந்தி உடம்பு ரொம்ப கேவலமாயிட்டதுன்னு சேதி வந்துச்சு — அதனால் ரொம்பக் கவலையா இருக்கு.''

''போ... போய் முதல்லே தோட்ட வேலைகளை சீக்கிரம் கவனி'' பகவதி உரத்த குரலில் அதட்ட அவன் ஒரு கும்பிடு போட்டபடி பின் பக்கம் மறைந்து விட்டான்.

அடுத்ததாக காத்தாயி அங்கே வந்து நின்றாள்.

''சமயபுரத்தாளுக்கு வேண்டுதலை - ஒரு நாலு நாள் ஒய்வு வேணும்னு கேட்டுக்கிட்டிருந்தியாமே!'' பகவதி அதட்டினாள்.

''அடுத்த கிராமத்திலே நான் பெண்ணைக் கட்டிக் கொடுத்திருக்கேன். மகன் திருச்சியிலே வேலை பார்க்கிறான். குடும்பத்தோட சேர்ந்து சமயபுரம் போவதாக வேண்டுதலை. அதை நேர்த்திகிட்டு நாலு வருஷத்துக்கு மேலாச்சு. என் பேத்திக்கு போன வருஷம் தட்டம்மை கண்டு ரொம்ப தடபுடலாயிடுச்சு சாமி குத்தம்னு மனசு சங்கடப்பட்டது... அம்மாகிட்ட ஒரு வாட்டி சொன்னேன்- போகலாம் இரு சின்ன ஐயா கல்யாணம் கூடியிருக்கு. அவசரப் படாதேன்னாங்க... இப்போ அவங்க உடம்பு இப்படி இருக்கச்சே...''

''கவலைப் படாதே... கைகொடுக்க பொன்னி இருக்கா நாங்க இத்தனை பேர் வீட்டிலே இருக்கோம். சின்ன யஜமான் ஊர் திரும்பறதுக்குள்ளே நீ போய் உன் வேண்டுதலையை முடிச்சுகிட்டு வந்துடு...'' என்று உத்தரவிட்டு அவளையும் மரகதத்தின் அறைக்கு நெட்டித் தள்ளிக் கொண்டு போனாள் பகவதி.

''சொல்லு மரகதம் - தெய்வ குத்தம்னு இவ வேதனை பட்டுகிட்டு வேலை செய்கிறதாலோ என்னவோ நீ இன்னமும் குணமடையாம படுத்துக்கிடக்கிறே. அதனாலே சீக்கிரம் இவ

குடும்பத்தோட போய் சுவாமி காரியத்தை முடிச்சுக்கிட்டு வரட்டும்... என்ன சொல்றே?...''

''பகவதி நீ சொல்றதுதான் சரி! இன்னிக்குப் பகலே இவ புறப்பட்டுப் போகட்டும்'' என்று புன்னகைத்துவிட்டு... மறுபடி தன் தலையணையடியில் மெல்லத் துழாவி ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்தாள் மரகதம். நன்றி உணர்வில் நாத் தடுமாறிப் போனாள் காத்தாயி.

''நான் அப்படியே செய்கிறேன் அம்மா. மாரியாத்தாளைக் கும்பிட்டதும் உடனே பஸ் ஏறி இங்கே பறந்து வந்துடறேன்.''

தன் புடவைத் தலைப்பில் முடிந்து கொண்டிருந்த பணத்தை அவிழ்த்து அதிலிருந்து ஒரு ரூபாய் நாணயத்தை அவளிடம் கொடுத்தாள். ''காத்தாயி, மறக்காம இதை மாரியாத்தாளின் உண்டியில் போட்டுடு'' என்றாள்.

அதை வாங்கிக் கண்களில் ஒத்திக் கொண்டு காத்தாயி அறையைவிட்டு வெளியே வந்தாள்.

''மரகதம். இவங்க இரண்டு பேரையும் இன்னிக்கே வீட்டைவிட்டு போகச் செய்தது நல்லதாபோச்சு. இவங்க இருந்தா நாம் சாம்பவியை வற்புறுத்தி வெளியேற்றினோம்னு பார்த்தீபனிடம் சொல்லி பெரிய வம்பைக்கிளப்பி விடுவாங்க... என்ன சொல்றே... என் ஏற்பாடு சரிதானே...''

''ஆமாம்!'' என்று தலையசைத்துப் புன்னகைத்தாள் மரகதம்.

நடையில் நின்று கொண்டிருந்த சாம்பவியைப் பார்த்து காத்தாயி மகிழ்ச்சியுடன் புன்முறுவலித்தாள்.

''பெரிய அம்மாவை நல்லா கவனிச்சுக்கோங்க - இன்னி பகல் வேளையே நான் ஊருக்குப் புறப்படறேன். ஆனால் சீக்கிரம் திரும்பிடுவேன்'' என்றாள்.

''அதான் சொல்லிட்டியே, போய் மடமடன்னு காரியத்தைக் கவனிக்காமல் பேசிகிட்டு நின்னா என்ன அர்த்தம்?'' பின்னால் வந்த பகவதி அதட்ட காத்தாயி அங்கிருந்து மாயமாகினாள்.

வீட்டவர்களுக்குப் பகல் உணவைத் தயாரித்தபடி அடுப்பு மேடையருகே நின்று கொண்டிருந்த சாம்பவிக்கு ஒரே குழப்பம்.

ரசத்தில் உப்பு போட்டோமா! குழம்புக்குக் காரம் போதுமா என்று நினைவு இன்றி அவள் சஞ்சலத்துடன் வேலை செய்து கொண்டிருந்தாள்.

தோட்டக்காரனையும் - அவன் மனைவியையும் காத்தாயியையும் வீட்டின் மருமகளையும் அப்புறப்படுத்தி விட்டால் - நோயாளியான மரகதம் உதவியற்ற நிலையில் தங்களது தயவுக்குக் காத்திருக்க வேண்டும். மாயாவை மருமகளாக ஏற்காது நாசூக்காக ஒதுங்கிக் கொண்ட மரகதத்தைப் பழிவாங்க இதுதான் தருணம் என்று பகவதி போட்ட திட்டமா இது?

யாருமில்லாத சமயம் - மரகதத்திற்கு அவள் ஏதாவது தீங்கு செய்து விட்டால்? இதைப் பெரியம்மா அலமேலுவுக்குத் தெரியப்படுத்த ஒரு சில நிமிஷங்கள் கிடைத்தால்?

புலியும்-சிங்கமும் போல பகவதியும் - அவள் மகளும் அவளுக்கு அச்சத்தைத் தந்தனர்.

வீடு ஒரு சிறை போலாகி விட்டிருந்தது.

தோட்டத்தைப் பார்க்கப் போவதுபோல பின்பக்கம் சென்று புழக்கடைக் கதவைத் திறந்துகொண்டு வாய்க்கால் கரை ஓரம் ஓடிச்சென்று பெரியம்மா வீட்டில் சரணடைந்து விட்டால்...?

தோட்டத்திலிருந்து கறிவேப்பிலை கொஞ்சம் பறித்தெடுத்து வரச் சென்றதுபோல நழுவின சாம்பவி திடுக்கிட்டுப் போனாள்.

பகவதி மிகவும் கெட்டிக்காரி. தோட்டத்துக் கதவை சாத்தி முன் கூட்டியே பூட்டிவிட்டிருந்தாள்.

ஐயோ! இப்போது அவள் என்ன செய்ய முடியும்...

டாக்டர் வைத்தியலிங்கம் அந்தக் கடிதத்தைப் பார்த்திருப்பாரா...

ஒரு முட்டாள் காரியம் செய்துவிட்டேனே... பார்த்தீபனுக்குக் கடிதம் எழுதிய அதே சமயம் டாக்டருக்கும் ஒரு தனித்தாளில் இரண்டு வரி வீட்டின் நிலைமையை விவரித்து உதவிகோரி எழுதி அந்த மருந்துப் பெட்டிக்குள் போட்டிருந்தால்?

இந்நேரம் அவர் அவளுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைத் தெரிந்து கொண்டு... பெரியம்மாவின் துணையுடன் ஊர் நாட்டாண்மைக்காரரின் தயவுடன் வந்திருப்பாரோ?

புத்தி கலங்கி குழப்பத்திலே திகைத்துப் போயிருந்த அவளுக்கு அந்த எண்ணம் தோன்றாமல் போனதே -கடவுளே!... பலப்பலவாக எண்ணித் தொண்டையை இறுக்கிய துயரத்தை அடக்க மாட்டாமல் அடுப்பு மேடையை ஆதரவாகப் பிடித்துக் கொண்டு அவள் விசும்பினாள்.

வீடு முழுவதும் வேட்டை நாயைப் போல சுற்றி வந்த பகவதி சமையலறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

''ஆமாம். சமைச்சு முடிச்சுட்டு உன் சாமான்களை எடுத்துப் பெட்டியில் தயாரா வச்சுக்கிறதுக்கு பதில் ஏன் ஒப்பாரி வைக்கிறே! ஏற்கனவே உன் யோகத்தால் இந்தக் குடும்பம் அழ ஆரம்பிச்சுடுச்சு - இப்போ நீ வேறே அழ ஆரம்பிச்சா... இங்கே யாரும் உருப்பட மாட்டாங்க... மரகதத்தின் காதிலே பட்டா அவ கத்துவா... கண்ணை துடைச்சுகிட்டு வேலையைப் பார்...'' உறுமினாள்.

கோபத்துடன் சாம்பவி அவளைத் திரும்பிப் பார்த்தாள். இந்த மாமியார் கொடுத்த இடத்தில் வீட்டுக்கு விருந்தாளியாக வந்த இந்தம்மா... எல்லோரையும் எப்படி ஆட்டிப் படைக்கிறா...? இதுபோன்ற ஒரு விவகாரம் வேறு எந்த வீட்டிலாவது நடக்க முடியுமா...

''என்னடி நான் பேசிக் கொண்டிருக்கேன் - அப்படியே சமஞ்சுபோய் நிக்கிறியே... போ... சொன்னதை சீக்கரம் செய்து முடி....'' கோபத்துடன் கத்தினாள் பகவதி.

தன் அறைக்குள்ளே சென்ற சாம்பவி... ஏற்கனவே

தயாரித்து வைத்திருந்த தன் சிறு தகரப் பெட்டியை மறுபடி சீர் செய்தாள்.

வீட்டுக்குப் போனதும் முதல் வேலையாக பெரியம்மாவுக்கு ஒரு தந்தி அடிக்க வேண்டும்... தந்தியில் விவரமாக ஒன்றும் சொல்ல முடியாதே. கடிதம் எழுதி மறு தபாலில் போட வேண்டும். டாக்டர் வைத்தியலிங்கத்திற்கும் கடிதம் போட வேண்டும்... பெரியம்மாவும் - அவரும் உடனே வந்து மாமியாரை கவனிக்காவிடில்... நிலைமை மோசமாகிவிடும்... இந்தப் பாவிகள் மரகதத்தைக் கொன்று விட்டால்...!

பலவும் தனக்குள் எண்ணி வேதனையில் உழன்றாள். மாலைப்பொழுது மங்கிக் கொண்டு வந்த வேளை; மரகதம் தன் மருமகளுக்கு சொல்லியனுப்பினாள்.

''இரவு சாப்பாடு தயாரிப்பது பற்றி நீ கவலைப்பட வேண்டாம். இவங்க இருவரும் கவனிச்சுப்பாங்க. நீ ஊருக்குப் புறப்பட வேண்டிய நேரம் இது. உனக்குத் தேவையான பணத்தைப் பொன்னியிடம் கொடுத்திருக்கேன். முதலில் உன் பெட்டியை இங்கே கொண்டு வந்து திறந்து எனக்கு காட்டணும்...'' என்றாள்.

அவமானத்தில் உடல் குன்றிப் போனாள். அவள் அந்த வீட்டின் எஜமானி. அவளுக்கு வீட்டு வேலைக்காரி பொன்னி பயண வசதி செய்யப் போகிறாள். வழிச் செலவுக்கு காசுக்கு அவளிடம் சாம்பவி கை ஏந்த வேண்டும்! வீட்டிலிருந்து புறப்பட்டுப் போகப் போகிற அவள் திருடி எதையாவது பெட்டிக்குள் மறைத்து எடுத்துக் கொண்டு போய்விடக்கூடும் என்பது மாமியாரின் மட்டமான அபிப்பிராயம். என்ன கொடுமை இது?

பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்து மரகதத்தின் அறையில் கிடந்த மேஜைமீது வைத்தாள் சாம்பவி.

மரகதம் நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்து கொண்டு மருமகளை மிகவும் வெறுப்போடு பார்த்தாள்.

''மீன மேஷம் பார்த்துக்கிட்டு நிப்பானேன் - பெட்டியைத்

திறந்து அதில் உள்ளதை எல்லாம் எடுத்து வை பார்க்கலாம்...'' சீறினாள்.

''ஆமாம், வீட்டை விட்டுத்தான் போறோமே.. யார் கவனிக்கப் போறாங்கன்னு வெள்ளிச் சாமான்கள் சிலதைப் பெட்டிக்குள் போட்டுகிட்டு போயிட்டா பிறகு எங்க மேலே தானே பழி வரும்...'' பகவதி ஏளனமாகச் சிரித்தாள்.

தன் பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்த சேலைகள் ரவிக்கைகள் முதலியவற்றை எடுத்து மேஜைமீது வைத்தாள். கழுத்தில் மஞ்சள் கயிற்றில் தொங்கிய தாலியையும் பிறந்த வீட்டில் அவளுக்குப் போட்டிருந்த ஒரு ஜோடித் தங்க வளையலையும் - பெரியம்மாவின் பரிசாகக் கொடுக்கப்பட்ட தங்கச் சங்கிலியையும் காட்டிவிட்டு... ''இவைகளுடன் தான் நான் ஊருக்குப் போறேன். இந்தத் தாலியைத் தவிர இங்கேயிருந்து நான் ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போகலை...'' என்று விக்கினாள்.

''போகும்போது எதுக்கு அழணும் - போய்த் தொலை -என்னைப் பிடிச்ச பீடை விட்டதுன்னு நிம்மதியா நான் இன்னிக்குத் தூங்குவேன்'' என்று கசப்பாகப் பேசிய மரகதம் ''பொன்னி... வாடகை மாட்டுவண்டி ஒன்று தயாரா கொண்டு வந்திருக்கே இல்லையா. இவ பெட்டியை அதிலே கொண்டு வை. பஸ் பயணத்துக்கு நீயே சீட்டு எடுத்துடு. ரயிலில் ஏத்திவிட்ட பிறகு கைச்செலவுக்கு ஒரு பத்து ரூபா கொடு போதும். மெட்ராசில் போய் இறங்கினதும் ஒரு ஆட்டோ வச்சுகிட்டு வீட்டுக்குப் போகட்டும். அங்கே போனதும் இவ நமக்கு எட்டு ஊர் சங்கதிகளை சொல்லித் தருவா... அத்தனை ஜாலக்காரி கெட்டிக்காரி...'' என்றாள்.

''அத்தை...'' என்று தழுதழுத்த சாம்பவியைப் பார்க்க மனமில்லாது முகத்தைத் திருப்பிக் கொண்டாள் மரகதம்.

''நேரமாச்சு அம்மா, கிளம்புங்க...'' என்று வீட்டு வேலைக்காரி பொன்னி அவளை அதட்டியபோது... சாம்பவி மிகவும் அதிர்ந்து போனாள்.

34

கூ ங்கேயத்துக் காளை பூட்டிய வில்வண்டி வீட்டில் இருக்கிறது. அதை ஓட்டும் ஆள் கடைத்தெருவில்தான் குடியிருக்கிறார். கூப்பிட்டனுப்பினால் ஓடி வந்துவிடுவார். புக்ககத்திற்கு வந்த பின்னர் ஒரு நாள்கூட அவள் மாமியாரின் வில்வண்டியில் பயணம் செய்ததில்லை. வீட்டை விட்டுப் போகும் இந்நேரத்திலாவது அந்த வண்டியிலேற்றி வழி அனுப்பி வைக்காது — வாடகைக்கு மாட்டு வண்டியைப் பேசிக் கொண்டு வந்திருப்பதின் மர்மம்?

இதுவும் பகவதியின் திட்டங்களில் ஒன்று. சாம்பவியை வற்புறுத்தி ஊருக்கு அனுப்புவது வண்டி ஓட்டுகிறவனுக்குத் தெரிந்துவிட்டால் - அது வினாடியில் ஊரில் பரவிவிடுமே. படுக்கையில் கிடக்கும் மாமியாரைப் பற்றிக் கவலைப் படாது பிறந்த வீட்டு நினைப்பு வந்ததும் புறப்பட்டு விட்டாள் என்று யாருக்கும் சொல்ல முடியாதே....

பொன்னியின் கணவன் வண்டியின் முன்னால் ஏறிக் கொண்டான். சாம்பவியை உள்ளே ஏறிக் கொள்ளக் கைகொடுத்து உதவிவிட்டு... பொன்னி பின்பக்கம் காலைத் தொங்கவிட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள்.

பொன்னியின் கணவனுக்கு இந்த சதியில் தன்னையும் இணைத்துக் கொண்டதைப் பற்றி உள்ளூர பயம். அதைப் போக்க அன்று அளவுக்கு மீறிக் கொஞ்சம் அதிகமாகவே சாராயத்தைப் போட்டுக் கொண்டிருந்தான். வண்டி வாசலைவிட்டு நகர்ந்தபோது குப்பென்று மதுவின் வாசனை... காற்றோடு முகத்தில் மோத சாம்பவியின் வயிற்றைக் குமட்டியது.

வண்டி தெருவைக் கடந்தபோது இருட்டத் தொடங்கி விட்டதால் பலரது வீட்டு வாயிற்கதவு அடைபட்டிருந்தது.

யாரும் அந்த மாட்டு வண்டியையும் அதற்குள் அமர்ந்திருந்த மூவரையும் கண்டு கொள்ளவில்லை.

வண்டி மெல்ல அசைந்து கொண்டு எல்லையை சமீபித்த போது சாம்பவிக்கு திடீரென்று அந்த நினைப்பு ஏற்பட்டது. அந்த ஊருக்கு அவள் முதல் முதலாக வந்தபோது அந்தக் கோவில் அருகே வண்டியை நிறுத்தி வண்டிக்காரர் எல்லைப்புற தெய்வமான அந்த அம்மனை வேண்டிக் கொள்ளச் சொன்னார். அம்மன் சக்தி வாய்ந்தவள் கேட்ட வரம் தருவாள் என்றார்....

அவள் கேட்காத வரங்களையும் அம்மன் வாரி வழங்கி விட்டிருந்தாள். அந்த ஊரிலேயே பெரிய தனக்காரர் என்று மதிக்கப்பட்ட சட்டநாதன் அவர்களின் மருமகளாகும் பாக்கியத்தைப் பெற்றாள். பார்த்தீபனது காதலைப் பெற்றாள் - அவனுக்கு மனைவியானாள் - ஆனால் தொடர்ந்து வாழத்தான் கொடுத்து வைக்கவில்லை.

''கொஞ்சம் வண்டியை நிறுத்துங்கோ...'' வண்டிக்காரருக்கு உத்தரவிட்டாள்— ''பொன்னி இறங்கிக்கோ.... அம்மனைக் கும்பிட்டுட்டு போகணும்....''

''நினைச்ச இடத்திலே நின்னுகிட்டிருந்தா.... பஸ் போயிடும்'' முணுமுணுத்த பொன்னி வேறு வழியின்றி இறங்கினாள்.

அந்த சிறு கோயிலின் கம்பிக் கதவு அடைத்து பூட்டப்பட்டிருந்தது. உள்ளே மினுக்கிட்ட அகல்விளக்கின் மெல்லிய ஒளியில் சிவப்புப் புடவையும் - செவ்வரளி மாலையுமாக... அம்பிகை பீடத்திலே அமர்ந்து பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருந்தாள். கண்களை நீர் மறைக்க கரங்களைக் கூப்பியபடி கோவில் முன் நின்று வணங்கினாள் சாம்பவி.

''என் மாமியாருக்கு எந்தவிதத் தீமையும் அணுகாது காத்திடுவாய் அம்மா.... என் கணவர் சுகமாக விரைவாக ஊர் திரும்ப வேண்டும்...'' சுருக்கமாகப் பிரார்த்தித்துக் கொண்டு விட்டு மீண்டும் வண்டியில் ஏறிக் கொண்டாள்.

பஸ் நிறுத்தத்திலே அவர்கள் வெகு நேரம் காத்திருக்க

அவசியம் இருக்கவில்லை. மாட்டு வண்டியிலிருந்து அவர்கள் இறங்கியதுமே பெரிய குலுக்கலுடன் சேலத்திலிருந்து வந்ததொரு பஸ் அங்கே நின்றது. அந்த நிறுத்தத்தில் யாரும் இறங்கவில்லை. பஸ் ஏற்கனவே கூட்டத்தில் திணறியது. ஆனாலும் அவர்கள் மூவருக்கும் இடம் கிடைத்து விட்டது.

பின் ஆசனத்தில் ஒரு பக்கம் ஒண்டிக்கொண்டு சாம்பவி உட்கார - அவளை நெருக்கிக் கொண்டு பொன்னி அருகில் அமர வாரைப் பிடித்து தொங்கியபடி அவள் கணவன் அருகில் நிற்க அந்தப் பயணம் துவங்கியது.

திருச்சி பஸ் நிறுத்தத்திலே இறங்கியதும் பெட்டியுடன் நடந்த பொன்னி ஒரு சிறு கடையருகே - தெருவிளக்கு பளிச்சென்று எரிந்த இடத்திலே பெட்டியுடன் சாம்பவியை நிற்க சொல்லிவிட்டுக் கணவனுடன் அருகிலிருந்த ஓட்டலுக்குள் புகுந்து விட்டாள்.

இரவு பத்து மணிக்குத்தான் சென்னைக்குச் செல்லும் வண்டி என்று அவளுக்குத் தெரியும். அதுவரை அவளும் அவள் கணவனும் பட்டினியாகக் காத்திருக்க முடியுமா? சாம்பவியைப் பற்றிக் கவலைப்படாது அவர்களிருவரும் அங்கிருந்து மறைந்து விட்டனர்.

குளிர் பானமும் - சிகரெட்டும் வாங்கக் கடைக்கு முன் குவிந்து விட்டிருந்த இளைஞர்கள் சிலரின் கண்களில் சாம்பவி பட்டுவிட்டாள்.

தன்னந்தனியாக இந்த வேளையில் பெட்டியோடு நிற்கும் அந்தப் பெண் கட்டாயம் வாடிக்கையை எதிர்நோக்கி காத்திருப்பவளாகத்தான் இருக்கும். ஒப்பனைகள் இல்லாது -சாதாரணமாக இருந்தாலும் அழகா இருக்கிறாளே? கழுத்திலே மஞ்சள் கயிறு - அது பார்ப்பவர்கள் கண்களில் மண்ணைத் தூவ....

அந்தக் கூட்டத்திலே மிகவும் துணிச்சலானதொரு தொங்கு மீசை இளைஞன் தன் கையில் பிடித்திருந்த சிகரெட் துண்டின் கடைசிப் புகையையும் இழுத்து ஊதி விட்டு கால் செருப்படியில் அதைப் போட்டு மிதித்து விட்டு... ஒரே எட்டில் சாம்பவி அருகில் வந்தான் - தொண்டையை செருமிக் கொண்டான்.

''பொண்ணு - இந்த பக்கத்துக்குப் புதுசு போல இருக்கு. கூட அம்மாவோ, பாட்டியோ வரலையா?.... லாட்ஜ் ஒண்ணு கிட்டக்கத்தான் இருக்கு. ரேட்டு தெரிஞ்சா....''

சாம்பவி அவனை எரித்து விடுவதுபோல முறைத்தாள் -நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

தன்னந்தனியாக ஒரு பெண் நின்றால் உடனே தப்புக் கணக்கு போட்டு விடுகிறதா? பார்த்தால் படித்தவன் போலத் தெரிகிறான் - பேச்சு எத்தனை மட்டம்? ''உன் வேலையைப் பார்த்துட்டு போய்யா - கன்னா பின்னான்னு பேசினியோ என் கூட வந்திருக்கிறவர்களைக் கூப்பிட்டு உன் எலும்புகளை எண்ணச் சொல்லிடுவேன்...'' என்று சீறினாள்.

''டேய் சாமிவேலு - தங்கப்பா.... பொண்ணு ரொம்ப முறைக்குது - இங்கே வாங்கடா...'' அவளருகே நின்றபடி கூவினான் அந்தத் தடியன்.

தனியா அவளை நிறுத்திவிட்டுப் பொன்னியும் அவள் கணவனும் வயிற்றுப் பாட்டைப் பார்க்கப் போய்விட்டது எத்தனை பெரிய தவறு. கோபத்துடன் அந்த இளைஞனை முறைத்துப் பார்த்தாள்.

அவளது அம்மா தன் இளவயதிலே இரவு நேர சினிமாவை பக்கத்து வீட்டுக்காரியுடன் போய் பார்த்து விட்டு தனியே நடந்து வீட்டுக்கு வரமுடியுமாம் - பெருமையாகப் பேசுவது வழக்கம்.... அது அந்தக் காலம் - இப்போ பொன்னுக்கும் ஆபத்து - தனியே வெளியே போகும் பெண்ணுக்கும் ஆபத்து... ஊர் கெட்டுக்கிடக்கு என்று அப்பா அடித்துப் பேசுவாரே அது எத்தனை உண்மை?

ஒரு சில நிமிஷங்களில் கட்டு மீசையும், ஜிவ்வென்று சிவந்த கண்களுமாக ஓங்கி உயரமாகப் பொன்னியின் கணவனும், இடுப்பிலே புடவையை வரிந்து கட்டிக் கொண்டு ஓங்கிக் கையை ஆட்டி சண்டை போடுமளவு துணிச்சல் பெற்றுள்ள பொன்னியும் ஓட்டலிலிருந்து வெளிப்படப்

போகிறார்கள். அப்போது இந்தத் தடியன்கள் என்ன செய்வார்கள்? தன்னுள் எண்ணி வெகுண்டாள்.

''பெட்டியிலே என்ன வச்சிருக்கே... நகைநட்டு இருந்தா சொல்லு. நான் துணைக்குவர்றேன்'' என்று கேலியாகக் கேட்டபடி மேலே இடித்து விடுமளவு தொங்குமீசை நெருங்கினான்.

உதவி.... உதவி... என்று கத்த வேண்டும் போன்ற ஆவேசத்தில் அவள் திரும்பினாள். என்ன ஆச்சர்யம்? எல்லை காத்த தேவியை கும்பிட்டு விட்டுப் புறப்பட்டதன் பலன்போலும். ''என்னம்மா இங்கே வந்து நின்னுகிட்டிருக்கே...'' என்று உரத்த குரலில் வினவியபடி கண்ணாடியணிந்த கட்டுமஸ்தான தலை நரைத்த மனிதனைக் கண்டதும் அந்த மூவரும் மாயமாகினர். எல்லை அம்மனே அவர் உருவில் அவளைக் காக்க வந்து விட்டது போன்ற நன்றி உணர்வில் மெய்சிலிர்த்து நாத்தடுமாறிப் போனாள்.

''சித்தப்பா! நீங்க... இப்ப வந்தது நல்லதாப் போச்சு.... இல்லாவிட்டா...'' கண்களில் நீர் முட்ட கரகரத்தாள்.

''இங்கே வந்து... இந்த வேளையிலே கையிலே -கழுத்திலே ஏதுமில்லாம பிச்சைக்காரி போல ஏன் நிக்கறே? சாம்பவி என்ன நடந்தது...'' என்று பதற்றத்துடன் கேட்டபடி அண்ணாசாமி அருகில் வந்தார்.

''அது பெரிய கதை... இப்போ நீங்க எங்கே போறீங்க சித்தப்பா...''

''சீரங்கத்திலே என் பெண்ணை கட்டிக் கொடுத்திருக்கேன் இல்லையா - சும்மா ஒரு நடை எல்லாரையும் பார்த்துட்டு போகலாம்னு வந்தேன் — ஆமாம் நீ உன் புருஷன் துணையில்லாம இந்தக் கோலத்திலே எங்கே புறப்பட்டிருக்கே...'' மேலும் கீழும் அவளை சந்தேகத்துடன் பார்த்தார்.

யாரிடமாவது தனக்கேற்பட்ட அவமானத்தைச் சொல்லி ஆறுதல் பெறவேண்டும் போன்றதொரு தவிப்பு அவளுக்கு. அண்ணாசாமி அப்பாவின் நெருக்கமான நண்பர்களில் ஒருவர்.

பட்டணத்திலே அவர்கள் வசித்த தெருவுக்கு அடுத்த தெருவிலேதான் குடியிருக்கிறவர்... ஒரு பிரபல வழக்கறிஞருக்குக் கணக்கராக வேலை பார்த்துக் கொண்டிருந்தார் - அவரது மகளும் - அவளும் பள்ளித் தோழிகள் என்ற உறவு வேறு. மாதத்திற்கு இரு முறையாகிலும் அவர்கள் வீட்டுக்கு வந்து அப்பாவுடன் ஊர்க் கதைகளைப் பேசி மகிழ்ந்து அம்மா தயாரித்து அளிக்கும் காப்பி டிபனை சாப்பிட்டுப் போகத் தவறியதில்லை... உறவினர் போன்றதொரு நண்பர்.... அவரைக் கண்டதும் அவளுக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்து விட்டது.

''என் மாமியாருக்கு என்னை ஆரம்பத்திலிருந்து பிடிக்கலை.... என் கணவர் ஊரிலில்லாத சமயம் என்னை வற்புறுத்தி பிறந்த வீட்டுக்கு அனுப்பி விட்டிருக்காங்க. கூடத் துணைக்கு வேலைக்காரியையும், அவள் புருஷனையும் அனுப்பியிருக்காங்க - அவங்க சாப்பிடப் போயிருக்காங்க சித்தப்பா..'' மேலே பேச முடியாது அழுகையில் தடுமாறினாள்.

''வேலைக்காரியோட உன்னைக் கூட்டியனுப்ப நீ செய்த மாபெரும் பிசகு என்னவாம்? இது சுத்த அநியாயம். இதை நாம சும்மா விடக்கூடாது. உன் புக்ககம் பெரிய இடமாக இருக்கட்டும் - அதற்காக என் நண்பன் வாகீசனை அவமானப்படுத்தறதை நான் பொறுத்துக்க முடியாது. எங்க வக்கீல்கிட்ட சொல்லி...'' அவர் முடிக்குமுன் வயிறு புடைக்க உண்டு விட்டுப் பீடாவைக் குதப்பியபடி ஓட்டலில் இருந்து பொன்னி ஓடி வந்தாள்.

''யாரு இவரு? கண்டவங்களோட பேசிக்கிட்டு நிக்கிறது பெரிய அம்மா காதில் பட்டால்....''

''வாயை மூடு. நான் இவளுடைய அப்பாவின் சிநேகிதன். கண்டவன் இல்லே. இவ என் மகளுக்கு சமானம். எங்க வீட்டுப் பெண்ணை இப்படி அவமானப்படுத்தினதுக்கு உன் எஜமானியை சந்தி சிரிக்க வைக்காட்டி என் பெயர் அண்ணாசாமியில்லே!'' உரத்த குரலில் உறுமினார்.

பொன்னி பயந்து போனாள். பெரிய வம்பில் அவள் சிக்கிக் கொண்டு விட்டிருக்கிறாளே?

சின்ன எஜமான் ஊரிலிருந்து திரும்பியதும் அவளுக்கு என்ன விதமான தண்டனை கிடைக்குமோ - படுத்துக் கிடக்கிற நோயாளி பிதற்றியதுக்கு ஒத்துக் கொண்டு... கொஞ்சம் லஞ்சக் காசுக்காக அவளும், அவள் கணவனும் செய்த தப்புக்கு... என்ன கிடைக்கப் போறதோ? ...என்று ஏற்கனவே கலங்கிக் கொண்டிருந்தவள், அரக்கன் போல நின்ற அண்ணாசாமியைக் கண்டு அரண்டு போய் விட்டாள்.

''ரயிலடிவரை துணைக்குப் பெரியம்மா என்னையும் என் புருசனையும் துணைக்கு அனுப்பிச்சாங்க... டிக்கட்டுக்கு பணம் தந்து...'' உளறினாள்.

''உங்க துணை இனித் தேவையில்லை, எங்க வீட்டுப்பெண்ணை நான் அழைச்சுக்கிட்டு போக முடியும். அந்தப் பணத்தைக் கொண்டுபோய் நான் சொன்னதாகச் சொல்லி உன் யஜமானி மூஞ்சியிலே விட்டெறி... போ...'' என்று அதட்டிவிட்டு கையைத் தட்டி அருகிலிருந்த ஒரு ஆளை அழைத்தார்.

''இந்தப் பெட்டிகளைத் தூக்கிட்டு ரயிலடிக்கு வாப்பா கூலி கொடுக்கிறேன்'' என்று கூறிவிட்டு சாம்பவியுடன் நடந்தார்.

பத்துமணி அளவிலே கிளம்பிய ராக்போர்ட் எக்ஸ்பிரசில்... அவள் அருகே உட்கார்ந்து கொண்டு... வற்புறுத்திதான் கையோடு கொண்டு வந்த தயிர் சாதத்தை அவளைச் சாப்பிடச் செய்தார். கூஜாவிலிருந்து தண்ணீரை டம்ளரில் ஊற்றிக் கொடுத்து உபசரித்தார்.

அதற்குப் பின்னர்தான்... அவளிடம் மெல்ல நடந்ததை அனுதாபத்துடன் விசாரித்தார்.

வீட்டுக்கு வந்த விருந்தாளிகளுடன் சேர்ந்து கொண்டு மரகதம்மாள் தன் மருமகளைக் கொடுமைப்படுத்தியதைக் கேட்டு கொதித்துப் போனார் அண்ணாசாமி.

''மரகதம்மாளை சும்மா விடக்கூடாது... ஊரே இதைக் கேட்டு அவளை இழிவாகப் பேசிக் கைதட்டி சிரிக்க வைக்க வேண்டும். இந்த நோய் மட்டும் அவளுக்குப் போதாது. இன்னும் பல கஷ்டங்களை அனுபவிக்கணும்'' என்று ஆத்திரத்துடன் பற்களைக் கடித்தார்.

வாயிலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த அவளது தாய் ஆட்டோ வந்து நிற்பதைக் கண்டு நிமிர்ந்து பார்த்தாள்.

அதிலிருந்து அண்ணாசாமியுடன் அவள் மகள் சாம்பவி இறங்கியதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

தண்ணீரைக் கண்டதும் தாகமும் தாயைக் கண்டதும் தான் அனுபவித்த துயரத்தின் கண்ணீரும் வரும் என்பார்கள்.

''அம்மா...'' என்று அலறியபடி தாயைக் கட்டிக் கொண்டு சாம்பவி அழுகையில் குலுங்கினாள்.

35

10 ருமகளை வற்புறுத்தி ஊருக்கு அனுப்பிவிட்டு நிம்மதியாகப் பெருமூச்சு விட்ட மரகதத்திற்கு ஒரு பெருத்த அதிர்ச்சி காத்திருந்தது.

மகிழ்ச்சியுடன் அருகில் மகளுடன் வந்து உட்கார்ந்திருந்த பகவதியிடம் அவள் சுவாதீனமாகக் கேட்டாள்.

''இன்னிக்கு ராத்திரி என் காலுக்கு மருந்து எண்ணெய் போட்டு தேச்சு பிடிச்சுவிடப் போவது நீயா உன் மகளா?''

பகவதி வியப்புடன் பார்த்தாள். ''அந்த வேலையெல்லாம் எங்களால் செய்ய சாத்யப்படுமா? ஏதோ கொஞ்சம் சமையலை கவனிச்சுக்கொள்ள முடியும். உன் மகன் வந்ததும் ஒரு நர்சை ஏற்பாடு செய்து கொள்வதுதான் நல்லது!''

மரகதம் முகம்சுருங்கிப் போனாள்.

''பொன்னிகூட இல்லையே - பெட்பான் வச்சு

உதவணுமே'' கலவரத்துடன் கேட்டாள்.

''என் மகளுக்கு இந்த அசிங்கமான வேலையெல்லாம் செய்யப்பிடிக்காது - நீ தான் இப்ப எழுந்து நிக்கப் பயிற்சி செய்துட்டு வரியே - அப்படியே சுவற்றைப் பிடிச்சிட்டு கழிவறைக்குப் போய்விட்டு வர முயற்சிக்கணும்!''

''ஐயோ! எனக்கு இன்னும் நல்லா நடக்க வலுஇல்லையே'' - உரத்துக் கத்த வேண்டும்போல் மரகதம் துடித்தாள்.

பளிச்சென்று அறையில் எரிந்த விளக்கொளியில் அவர்களிருவரும் அவள் கண்களுக்கு அப்போது இரு அரக்கிகள் போலத் தென்பட்டனர். படுக்கையில் கையும் -காலும் முழு சுவாதீனமில்லாமல் விழுந்து கிடக்கும் நிலையில் அவர்களிடம் அதிகம்பேசி அவர்களது கோபத்தைத் தூண்டிவிடக் கூடாது.

அவளுக்கு உதவ வீட்டில் ஒரு வேலையாள் கூட இல்லையே... என்ன செய்ய? திடீரென்று ஏற்பட்ட இந்த நினைப்பு அவள் நெஞ்சை பய்த்தில் படபடக்கச் செய்தது. நா வரண்டு போனது - உடல் முழுவதும் வியர்வையில் நனைந்துவிட்டது.

''மருந்துகளை வேளைக்கு எடுத்துக் கொடுத்து உன் மகளை உதவச் சொல்... பொன்னி வரும்வரை உதவினால் போதும்..'' மரகதம் குழைவான குரலில் வேண்டிக் கொண்டாள்.

அவளது கட்டளைக்கு அடிபணிந்து கொண்டிருந்த அந்தரங்க வேலைக்காரி பொன்னியைக்கூட அருகில் இருக்க வொட்டாது அப்புறப்படுத்திய பகவதி லேசுப்பட்டவள் இல்லை.

ஏதோ பெருத்ததொரு திட்டமிட்டு அவள் மனதை மயக்கித் தன் இஷ்டப்படி செயல்படச் செய்து விட்டிருக்கிறாள். பார்த்தீபன் வர இன்னும் சில நாட்கள் பிடிக்கும். டாக்டர் வைத்தியலிங்கம் வெள்ளிக்கிழமையன்றுதான் வருவேன் என்று கூறிவிட்டுப் போய் விட்டிருக்கிறார்.

அதற்கிடையில் தாயும் மகளும் - மரகதத்தின் தனிமையை உபயோகித்து ஏதேனும் சூழ்ச்சி செய்தால்?...

''வேலியின் மேல் ஓடிக் கொண்டிருந்த ஓணானைப் பிடித்து மேலே விட்டுக் கொண்டு அது கடிக்குதே என்றானாம்....'' என்பதுபோல சாம்பவிமேல் ஏற்பட்ட வெறுப்பால் அவளது வாழ்க்கையை குலைக்க எண்ணி இந்த பகவதியை வற்புறுத்தி வீட்டுக்கழைத்து பெரிய துன்பத்தில் அகப்பட்டுக் கொண்டு விட்டாளே? கடவுளே! மோசம் போய் விட்டேனே... அவளது உள்மனம் ஊமையாகப் புலம்பியது.

''உன் மருந்து மாத்திரைகளைக் கைக்கெட்டும் வகையில் முக்காலி மேலே வச்சுடறோம். தண்ணி கூஜாவையும் பக்கத்திலே வச்சுடறோம். நீயே எடுத்து வேளைக்குத் தேவையானதைச் சாப்பிடு. உன்னை யார் தடுக்கிறா, மரகதம்? நானே தலைவலி காய்ச்சல்னு படுத்துகிட்டா என் மகளை உபத்திரவப் படுத்தமாட்டேன். அவ வங்கியில் ஒரு அலுவலரா வேலை கிட்ட தேர்வு எழுதியிருக்கிறவ. நோயாளிகளுக்குப் பணிவிடை செய்யும் நர்ஸ் இல்லையே?''

'என் மருமகள்கூட பி.ஏ., படிச்சவதான். தட்டெழுத்து சுருக்கெழுத்தெல்லாம் படிச்சுத் தேர்ந்தவதான். கம்பெனி எதிலாவது வேலை கிடைச்சிருந்தா அவளும் ஒரு அலுவலரா பணிசெய்து கொண்டிருக்கத் தகுதி பெற்றவதான்... ஆனாலும் நர்ஸ் பயிற்சி பெற்றவபோல பணிவிடை செய்தாளே... சொல்ல நாத்துடித்தது, ஆனால் முகமிருக்கவில்லை.

தன் மருமகளைப் பற்றிக் கேவலமாகப் பேசி, அவர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தி ஊருக்கு விரட்டிக் கொடுமை செய்தபின் எப்படிப் பெருமையாகப் பேச முடியும்?

நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

இவர்களிடம் தந்திரமாக நடந்துகொள்ள வேண்டும் என்ற உள்ளுணர்வின் எச்சரிக்கையில் போலியாக முறுவலித்தாள்.

''பாவம் மாயா! செல்லமாக வளர்ந்த குழந்தை. அவளை ஏன் சிரமப்படுத்தணும். உன்னால் முடிஞ்சால் கூப்பிட்ட குரலுக்கு உள்ளே வந்து நான் கேட்டதை எடுத்துக் கொடு,

பொன்னி வரும்வரை. மத்தவிஷயங்களை நான் கவனிச்சுக்கிறேன்...'' என்று முனகினாள்.

இரவு உணவு என்று தனியாக பகவதி எதுவும் தயாரிக்கத் தேவை இருக்கவில்லை.

சாம்பவி பகலில் சமைத்து வைத்துவிட்டுப் போயிருந்த உணவில் எல்லோரும் சாப்பிட்டது போக மீதம் நிறையவே இருந்தது. தாயும் மகளும் உட்கார்ந்து வயிறு புடைக்க முதலில் சாப்பிட்டனர். பின்னர் கொஞ்சம் சாதத்தை மோருடன் கலந்து ஸ்டீல்தட்டில் போட்டு... எலுமிச்சங்காய் ஊறுகாயுடன் எடுத்துவந்து அருகிலிருந்த மேஜைமீது வைத்தாள்.

மரகதம் அதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள். இரவில் சாம்பவி அவளுக்கு வாய்க்கு ருசியாக ஊப்புடன் வாட்டிய ரொட்டியில் வெண்ணெய் பூசிக் கொண்டு வந்து உபசரிப்பாள். சில நாட்கள் அவளுக்குப் பிடித்தமான சீரகரசத்தை சூடாக சோற்றில் போட்டுக் கலந்து... ஸ்பூனால் அள்ளி பச்சைக் குழந்தைக்கு ஊட்டுவது போலத் தானே அவள் வாயில் ஊட்டி சாப்பிடச் செய்வாள். இரவு அவள் தூங்குமுன் இதமான சூட்டில் வெள்ளி தம்பளர் நிறைய பசும்பாலை எடுத்து வந்து சாப்பிடக் கொடுப்பாள்.

''நான் வெறும் மோர் சோத்தை ராத்திரி வேளையில் சாப்பிடறதில்லை. எனக்கு உடம்புக்கு ஒத்துக்காது...'' மரகதம் கூறி முடிக்குமுன் பகவதி ஏளனமாகக் குறுக்கிட்டாள்.

''நீ பணக்காரி - பால் சோறு தின்னு பழக்கம்னு சொல்லவரே... மாயாவுக்குத் தொண்டை கட்டிக்கிட்டு இருந்ததாலே பிரிட்ஜிலே வச்சிருந்த பசும்பாலைக் காய்ச்சி அவளுக்கு கல்கண்டு போட்டுக் கொடுத்திட்டேன். உன் பழக்க வழக்கமெல்லாம் எனக்கு என்ன தெரியும்?'' கொஞ்சம் அழுத்தமாகவே அதட்டினாள்.

'என்ன திமிர்? என் வீட்டிலேயே எனக்கு சாப்பிடப்பால் இல்லை என்கிறாளே...?' அதிர்ந்து போனாள் மரகதம்.

வெள்ளிக் கிண்ணத்தில் வெள்ளி ஸ்பூன் போட்டுக் கொண்டு வந்து சாம்பவி சாப்பாடு கொடுப்பாள்.

இப்போ? நாய்க்கு சோறு போடுவது போல பகவதி அவர்கள் தின்ற மீதியைக் கொண்டுவந்து வைக்கிறாளே...?

சாம்பவி வீட்டை விட்டுப்போய் இன்னும் சில மணி நேரம் கூட ஆகவில்லை. அதற்குள் இவள் தன் சுய உருவத்தைக் காட்டத் தொடங்கி விட்டாளே. பார்த்தீபன் வரும்வரை மரகதத்தால் அவளது அட்டகாசத்தைத் தாங்கிக் கொள்ள இயலுமா...?

உடல் முழுவதும் பயத்தில் நடுங்கியது... பசி வயிற்றை முறுக்கவே - வேறு வழியில்லாது மெல்லப் படுக்கை மீது நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு வலுவாக இருந்த கரத்தால் தட்டை மெல்லத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு சோற்றை அள்ளி வாயில் போட்டுக் கொண்டாள்.

மோர் இப்படியாப் புளிக்கும் - அவளுக்கு வயிற்றைக் குமட்டியது. அப்படியே தட்டில் கையைக் கழுவிக் கொண்டு மெல்லத் தட்டைக் கட்டிலடியில் வைத்து... வலுவான காலால் உள்ளே தள்ளி விட்டாள்.

சாம்பவிக்குத்தான் என்ன மருந்துகளை - எந்த வேளை எந்த அளவில் தரவேண்டும் என்பது தெரியும்.

மருமகள் செய்கிறாள் - செய்யட்டும் கழுதை என்று அகங்காரத்துடன் டாக்டர் சொன்ன மருந்து தகவல் எதையும் அவள் காதில் போட்டுக் கொண்டதே இல்லை.

இரவு படுக்கப்போகும் முன் என்ன மருந்து சாப்பிடணும்? அருகில் முக்காலி மீது வைக்கப்பட்ட மருந்து பாட்டில்கள் மீது எழுதப்பட்டிருந்த ஆங்கிலப் பெயர்களை அவளால் வாசித்தறிந்து கொள்ள இயலவில்லை. படிக்காத பெண்கள் சிலர் சாமர்த்தியமாகக் காலைல இந்த வெள்ளை மாத்திரை பகல் இந்த நீலக்குழல் மருந்து - இரவு... ஒரு தேக்கரண்டி பழுப்பு சீசாவிலிருக்கும் திரவம்... என்று தாங்கள் உட்கொள்ள வேண்டிய மருந்துகளை டாக்டர் சொன்னதும் உடனே தெரிந்து கொண்டு விடுகிறார்கள். மரகதம் மமதையால்.... மருமகள் மேல் கொண்ட வன்மையால் அசட்டையாக இருந்து விட்டாள்.

இப்போது எதை எடுத்துச் சாப்பிடுவாள்? அளவு என்ன?

சாப்பிடாது இருந்து விட்டால் சங்கடம் ஏதாவது வந்து விடுமோ? கண்களின் கருமணிகளைப் போல உன்னை நான் காப்பாற்றுவேன் என்று சொன்னாளே... மருந்து எதுன்னாவது சொல்ல மாட்டாளா...?

இரடு படுக்கப் போகுமுன் அறைக்குள் வந்து எட்டிப் பார்த்த பகவதி, வாய் நிறைய வெற்றிலையை மென்று கொண்டு மிகவும் திருப்தியுடன் காணப்பட்டாள்.

''பகவதி... ராத்திரி வேளைக்கு நான் சாப்பிட வேண்டியமருந்து என்னன்னு எடுத்துக் கொடுப்பியா? உனக்கு இங்கிலீஷ் படிக்கத் தெரியுமே. அந்த இழுப்பு அறையிலே சாம்பவி ஒரு அட்டவணை எழுதி வச்சிருக்கா...!''

''மருந்தா, எனக்கென்ன தெரியும்? சாம்பவி ஏதோ தவறா எழுதி வச்சிருந்தா. அதை நான் கொடுக்கப் போக வம்பில் மாட்டிக்கவா... ஒரு நாள் இரண்டு நாள் மருந்து சாப்பிடாட்டா குடி முழுகியா போயிடும்? டாக்டர் வெள்ளிக்கிழமை வருவார். அவர் கிட்ட நீயே கேட்டுத் தெரிஞ்சுக்கோ!'' கடுமையான குரலில் அதட்டினாள்.

வீட்டுக்கு விருந்தாளியாக வந்த முதல் நாள் மரகதம் கொடுத்த புடவைப் பரிசை வாங்கிக் கொண்டு நன்றியில் கண்கள் பனிக்க... நாத்தடுமாறின பகவதியா இவள்? பத்திரகாளியா உருமாறிப் போய்விட்டாளே! வீட்டு எஜமானி உயிருடன் இருக்கிறாளா இல்லையா என்று தெரிந்து கொள்ளக்கூட விருப்பம் இன்றி சாப்பிடுவதும் -தூங்குவதுமாக நிம்மதியாகப் பொழுதைக் கழிக்கிறாளே -சுயநலப்பிசாசு.

மாயா.... இவளை மருமகளாக ஏற்கணும் என்று மனதில் திட்டம் போட்டாளே... எத்தனை பெரிய பிசகு?

விருந்தாளி என்கிற நிலையிலேயே இத்தனை அசட்டை செய்யும் மாயா, வீட்டுக்கு எஜமானியாகி விட்டிருந்தால்?... இத்தனைநேரம் மாமியார் மரகதத்தைக் குப்பைத் தொட்டிக்குள் வீசிவிட்டிருப்பாள். வஞ்சகி!

''பொன்னி நாளைக்கு வந்ததும் - மருந்துகளை டாக்டர் வீட்டுக்குக் கொடுத்தனுப்பி... தமிழிலே.... எது எதை எப்ப

சாப்பிடறதுன்னு எழுதி வாங்கிக்கிறேன்... அதுதான் சரி...' தானே முணுமுணுத்தாள்.

''பொன்னி நாளைக்கு ஊருக்குத் திரும்ப மாட்டாளே. வர ஒரு வாரம் பிடிக்குமே. அவளுக்குத் திருச்சியிலே நிறையச் சொந்தக்காரங்க இருக்காங்களாம். இந்த சமயம் அவங்களை யெல்லாம் பார்த்துட்டு வராட்டி அவளுக்குப் பிறகு ஒழிவே கிடைக்காதாம்...'' மரகதத்திற்கு இன்னொரு அதிர்ச்சி.

''என்கிட்டே இதை சொல்லியிருந்தா...'' மரகதம் முடிக்குமுன் ஆத்திரத்துடன் பகவதி இடையில் பேசினாள்.

''உன் மருமகளைத் தனியா அனுப்பியிருப்பியா? இதுதான் சமயம்னு அவ எவனோடயாவது கம்பி நீட்டியிருப்பா. இப்பகூட என்ன? ரயிலில் அவ யாரை சிநேகிதம் பிடிச்சுகிட்டு - பிறகு வீட்டுக்குப் போகாம... அப்படியே அவனோட போயிடறாளோ, யார் கண்டது?''

ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது மரகதத்திற்கு. அதிர அடியெடுத்து வைத்து நடக்கக்கூடத் தெரியாத பதவிசான பெண் சாம்பவி - பொறுமையின் உருவானவள். கல்யாணமாகியும் மாமியார் பொருட்டு கட்டுப்பாடாக வாழ்ந்தவள்... வந்தவேளை சரியில்லை என்று சொல்லட்டும்.... ஆனால் அவளது நடத்தையைப் பற்றி அவதூறு பேச... எத்தனை நெஞ்சழுத்தம்...?

''நிறுத்து, வாயை மூடு... இல்லாட்டா பல் அத்தனையும் தட்டிக் கையில் கொடுத்துடுவேன்... இப்பவே உன் மகளைக் கூட்டிக்கிட்டு வெளியே நட...!'' சாதாரண நாட்களாக இருந்தால்... கத்தியிருப்பாள். கழுத்தைப் பிடித்துத் தள்ளி விட்டிருப்பாள்.

இப்போது? எழுந்து நடக்க முடியாத நிலையில் அவர்கள் தயவில் இருக்கிறாளே?

''ஜோசியர் ஞானதேசிகர் என்னவோ பூஜை செய்கிறார். பிரசாதம் கொடுத்தனுப்பப் போகிறார் என்று சொன்னியே?''

''சொன்னேன். பிறகு விசாரித்ததிலே அந்த மனிதன் படு

அயோக்கியன்னு தெரிஞ்சது. அவன் சொன்னது எல்லாம் அத்தனையும் பொய்யாம்?''

''நீதானே அவர் பிரபல ஜோசியர்... அவர் சொல்வது பலிக்கும். அதன்படி நடக்கணும்னு அவரைக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தினே?''

''அறிமுகப்படுத்தினேன் சரி. உன் அறிவு எங்கே போச்சு?... நான் எனக்கோ என் மகளுக்கோ அவர்கிட்ட ஜோசியம் பார்த்தேனா? நீ இதையெல்லாம் நம்புகிறவ. மந்திரம் மாயம் இதுகளை நம்பிக் கொண்டு.... புலம்பினே! உன் வேலைக்காரி பொன்னிதான் இதுக்குக் காரணம். அவ வந்ததும் விசாரிச்சுக்கோ!'' சீறினாள் பகவதி.

''வரட்டும் பொன்னி... அவளை நான் கவனிச்சுக்கிறேன்...!'' கோபத்துடன் முணுமுணுத்தாள் மரகதம்.

''ஏதோ நல்லதை செய்வோம்னு செய்தேன். மரகதம் உனக்குக் கொஞ்சமும் நன்றியில்லை...?'' கடுமையாக வெறித்தாள் பகவதி...

அந்த வார்த்தையை அவள் சொல்லியிருக்கக்கூடாது. மருமகள் சாம்பவி சொல்லியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். அன்பாக விஸ்வாசத்துடன் - பொறுப்பு உணர்ச்சியுடன் மாமியாரைக் கவனித்துக் கொண்டாள். வீண் பொறாமையினால் - அகம்பாவத்தினால் அந்த நல்லவளைப் புரிந்து கொள்ள மறுத்து... மனம் நோகச் செய்து அவமானப்படுத்தி அனாதையாக விரட்டியடித்த பாவத்திற்கு அவள் இப்போது அனுபவிக்கத் தொடங்கி விட்டாள்.

பகவதி என்னும் ரத்தக்காட்டேரியின் வஞ்சகப் பிடியில் சிக்குண்டு விட்டிருக்கும் அவள், மகன் வரும்வரைத் தன்னை எப்படிக் காத்துக் கொள்ள முடியும்?...

''எனக்குத் தூக்கம் வருது!'' கூறிவிட்டு விளக்கை அணைத்துக் கதவை வெளியே சாத்திக் கொண்டு பகவதி போய்விட்டாள்.

விடிவிளக்கின்றி இருள் கப்பிக் கொண்டிருந்த அறையில் அவள் கூரை முகட்டைப் பார்த்தபடி கலவரத்துடன் நெஞ்சு வேகமாகத் துடிக்க, பயத்தில் உறங்க முடியாது படுத்துக் கிடந்தாள்.

36

ஊரிலே அவர்கள்தான் பெரும் பணக்காரர். ஜமீன் பரம்பரையிலே வந்தவர். அவளது கணவர் கோயில் ஸ்தானிகராகவும் பஞ்சாயத்துத் தலைவராகவும் பல தகுதிகளை வகித்த செல்வாக்குமிக்கவர். புத்திசாலியான மகன் என்று மரகதத்திற்கு ரொம்பவே கர்வம் இருந்தது.

யாரையும் அவள் மதித்ததே கிடையாது. நாலு பேர் இருக்கும் இடத்தில் தான் வந்திருப்பதை காட்டிக் கொள்ள உரத்த குரலில் பேசும் வழக்கமுடையவள். வேலையாட்களை விரட்டியடித்து சக்கை பிழிந்து வேலை வாங்குவதில் நிகரற்றவள். தங்கள் அந்தஸ்துக்கு சமதையாக இல்லாதவர்களைக் கண்டால் துரும்பாக மதித்தாள். மற்றவர்கள் வீட்டு வைபவங்களில் கலந்து கொள்ள நேர்ந்தால் தன் வேலையாட்கள் கூடவர வில்வண்டியில் பூட்டிய காங்கேயத்துக் காளை கழுத்து சலங்கை ஒலிக்க... தெருப்புழுதி தூள் பறக்க ஒரு புயல்போல் வந்து இறங்குவாள்.

பெரிய தனக்காரர் மனைவி வந்திருக்காங்க.... நகருங்க என்று வீட்டவர்கள் மற்றவர்களை இங்குமங்கும் ஒதுக்கி விட்டு முன் இருக்கையில் அவளை சகல மரியாதையுடன் கொண்டு அமர்த்த வேண்டும். அத்தனை ஒரு ஆணவம்.

கணவன் இறந்த பின் - மகன் இருக்கிறான் என்ற தெம்பிலே அதே திமிருடன் தான் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

ஆனால் இத்தனை அட்டகாசப் பின்னணியில் அவள் ஒரு பெரிய கோழை. சின்ன சங்கதிகளுக்கும் நடுநடுங்கிப்

போய்விடும் பயங்காளி. இதைத் தெரிந்து கொண்டிருந்த சட்டநாதன், வானம் கருத்துக் கொண்டு மழைக்கு அடி கோலிக்கொண்டிருப்பதை பார்த்துவிட்டால் வில்வண்டியில் துரிதமாக வீட்டுக்கு வந்துவிடுவார்.

பெருத்த மழையுடன், பலத்த இடியும் - மின்னலுமாக மழை துவங்கிவிட்டால் மரகதம் மிகவும் பதறிப் போய் விடுவாள்.

''அர்ச்சுனா! அர்ச்சுனா'' என்று அவனைத் துணைக்குக் கூவிக் கொண்டு கட்டிலின்மீது கம்பளத்தடியில் காதைப்பொத்திக் கொண்டு மழை அடங்கும் வரை... கட்டையாகக் கிடப்பாள். அம்மாவின் பயந்தாங்கொள்ளித் தனத்தை மகனும் நன்கு அறிவான்.

இருட்டிய பின் தனியே அந்தப் பெரிய வீட்டில் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே இருக்க அம்மாவுக்கு நடுக்கம் என்று, வீட்டோடு தங்கியிருக்க தங்கவேலுவையும் அவரது உதவியாளையும் உத்தரவிட்டிருந்தான்.

மகன் வரும்வரை — பொன்னி மரகதத்திற்குக் காவல் இருப்பது வழக்கம். இடியைக் கண்ட மரகதம் இருளையும், தனிமையையும் கண்டு ரொம்பவே பயந்தாள். அவளால் கொஞ்சநேரம் கூட தனியாக இருக்க முடிந்ததில்லை.

அந்த இரு அரக்கிகளுக்கும் இந்த உண்மை தெரிந்து விட்டதோ? வேணுமென்று அவளைத் தனியே படுக்கவிட்டு... வேடிக்கைப் பார்க்கிறார்களோ?... மின்விளக்கைப் பொருத்தும் பித்தான்கள் சுவற்றில் அவளது கைக்கு எட்டாத உயரத்தில் இருந்தன - எழுந்து, தானே இருட்டில்துழாவி விளக்கைப் போட்டுக் கொள்ளவும் இயலாது உடல் பலவீனம்.

பலவும் எண்ணி... அஞ்சியபடி படுத்துக் கிடந்த அவளது கண்களை முடிவில் தூக்கம் அழுத்தியது.

கொஞ்ச நேரந்தான் உறங்கியிருப்பாள். விருக்கென்று விழித்துக் கொண்டு விட்டாள் - அது என்ன சத்தம்? ஜன்னல் அருகே ஓங்கி வளர்ந்து நின்ற வேப்பமரத்து கிளையிலிருந்து கிரீச்சென்று அலறி சிறகை அடித்துக் கொண்டு வேறு

கிளைக்குத் தாவிய பறவையொன்று எழுப்பிய ஒலியா?

பின்பக்கத் தோட்டத்திலிருக்கும் மாட்டுக் கொட்டில் கூரைமீது இரண்டு பூனைகள் வழக்கம்போல சண்டையிட்டுக் கொண்டதால் ஏற்பட்ட சத்தமா?

நடுங்கிப் போனாள். சட்டென்று விளக்கைப் போட்டு பார்த்தால் ஒழிய அமைதி ஏற்படாது போல உடல் வெடவெடத்தது. ஆனால் அவளால்தான் எழுந்திருக்க முடியாதே.

ஆமாம் சந்தேமில்லாது - அந்தப் பூனைகள்தான் சண்டையிட்டு பயங்கரமாக கத்துகின்றன... ஆமாம் அதையும் மீறி கேட்கும் அந்த சத்தம் என்னவாக இருக்கும்?

மூச்சை அடக்கிக் கொண்டு ஊன்றிக் கேட்டாள். பக்கத்து அறையிலிருந்து சத்தம் வந்து கொண்டிருந்தது. அப்படியானால் பக்கத்தறையில் யார் மெல்ல நடமாடுகிறது?

அவளுக்குத் தெரிந்தவரை அந்தக் கிராமத்தில் - திருட்டு, கொள்ளை என்றச் சங்கதிகள் நடந்ததில்லை. சண்டை சச்சரவுகள் அடிக்கடி பஞ்சாயத்தார் முன்னிலையில் விசாரிப்புக்கு வருவது வழக்கம்.

மடையைத் திறந்து தன்வயலுக்கு அதிகம் நீர்பாய்ச்சிக் கொண்டு விட்டான். முறைப்பெண்ணை வேறு இடத்தில் கட்டிக் கொடுக்க முயலுகிறான் என்பது போன்ற விவகாரங்கள்தான் அதிகம். என் பசுமாடுகளிரண்டை காணவில்லை. ஆடுகள் பத்து காணாமற் போயின... கோவில் பூசை என் முறை. அதில் பங்காளி குறுக்கிட்டு விட்டான் என்பன போன்றவைதான் விசாரணைக்கு வரும்.

கடைத்தெருவை ஒட்டியிருந்த அந்த நான்கு தரமான தெருக்களில் ஓரளவு வசதியானவர்கள்தான் வசித்துக் கொண்டிருந்தனர். சில வீடுகளில் நாள் முழுவதும் ஆட்கள் நடமாடிக் கொண்டிருந்தனர்.

இந்த வீட்டில் கள்ளன் புகுந்தான் - அந்த வீட்டின் சாமான்கள் கொள்ளைபோயிற்று என்று பெரிய திருட்டுகள்

ஏதும் அவள் வாழ்வில் இதுவரை நடந்ததில்லை. கேள்விப்பட்டதுமில்லை. காவேரியின் அக்கரையில் நாடோடிக் கூட்டம் ஒன்று முகாமிட்டிருப்பதாகத் தெரிந்ததும் பஞ்சாயத்தார் ஊர் மக்களை எச்சரிக்கை செய்து விடுவார்கள். போலீசிடம் முன்னதாக புகார் எழுப்பி விடுவார்கள். அந்தக் காலத்தில் கட்டப்பட்ட வீடு, சுண்ணாம்பை அரைத்துக் கலவை செய்து கனமாக எழுப்பிய சுவர். கன்னம் வைக்கத் தொடங்கினால்... சுவரைத் துளைத்துக் கொண்டு திருடன் உள்ளே வருவதற்குள் விடிந்துவிடும். பிறகு ஊரார் கையில் அகப்பட்டுக் கொள்ளும் அவன் உடல் பஞ்சாகிவிடுமே...

ஆனால் காலம் இப்போது வெகுவாகக் கெட்டிருக்கிறது. டிராமா, சினிமாக்களில் வரும் வில்லன்கள் பெரிய பங்களாவுக்குள் எப்படி நுழைகிறது என்பதை... வேடிக்கையாகக் காட்டிக் கொடுத்து விடுகிறார்கள். விலைவாசிகள் உயர்ந்துபோய் விட்டிருப்பதில் பற்றாக்குறையில் பலர் அவதிப்படுகின்றனர். வேலையில்லாது திண்டாடும் இளைஞர்கள் இப்படி புதுவிதமான திருட்டுகளில் ஈடுபடுவது - இயல்புதானே?

பகவதியிடம் படித்துச் சொன்னேன். அவள் கேட்டாளா?... பழக்கடைக் கதவைத் தாளிட்டு, குறுக்கே இரும்பு சட்டத்தைப் போட்டுவிட வேண்டும். அப்படி செய்தாளா?

சோம்பேறித் தனத்தில் அதைச் செய்யாது படுத்து விட்டிருக்கிறாள். வீட்டில் துணை இல்லையென்று உளவறிந்து யாரோ திருடன் உள்ளே புகுந்து விட்டிருக்கிறான்.

என்ன அடுத்த அறையில்... யாரோ... இரும்பு பீரோவை திறப்பது போன்ற சத்தம்?

''பகவதி! பகவதி!'' கூவியழைக்க நினைத்தாள். அச்சத்தில் வார்த்தைகள் தொண்டையை அடைத்துக் கொண்டன. மேனி முழுவதும் வியர்வை கொப்பளித்துக் கொண்டது.

சத்தம் இப்போது மிக அருகில் துல்லியமாகக் கேட்டது... அவள் நெஞ்சின் படபடப்பு அதிகமாகியது. மூச்சுவிட

முடியாது போன்ற இறுக்கத்தில் திணறினாள்.

அவளது அறையிலிருந்ததொரு அலமாரியின் கதவுகள் அப்படித்தான் கிரீச்சிடும்... கீல்களுக்கு எண்ணெய் போட வேண்டும் என்று சாம்பவியிடமோ — மகனிடமோ சொல்ல மறந்து போனாள்.

அவள் உடம்புக்கு முடியாமல் படுத்த போது... வீட்டிலிருந்த வெள்ளி சாமான்களை எடுத்து பார்த்தீபன் தன் இரும்பு பீரோவில் பத்திரப்படுத்திப் பூட்டி விட்டிருந்தான்.

ஆனாலும் அவள் சாப்பிடும் வெள்ளித்தட்டு, கிண்ணங்கள், கரண்டிகள், தண்ணீர் வைக்கும் கூஜா-டம்ளர்கள் அனைத்தும் அந்த அலமாரியில் தானிருந்தன.

அவைகளை எடுத்துப் பத்திரமாக மகன் பூட்டி வைப்பதை அவள் தடுத்தாள்.

''நான் இருக்குமட்டும் என் சாமான்கள் என் அறையிலே இருக்கட்டும். உசிரோட இருக்கிற வரையில்தானே வெள்ளிக் கிண்ணத்திலே பால் சோறு திங்கப்போறேன்... நான் போயிட்டா...''

— கோபமும் அழுகையுமாக அவள் பேசியதைக் கேட்டு அவன் மவுனமாகினான்.

பூஜையறையில் வெள்ளித்தட்டு காணாமற் போனதும் அங்கிருந்த குங்குமச் சிமிழ் — சந்தனப் பேலா — பன்னீர் செம்பு போன்ற வெள்ளி சாமான்களைத் தன் அலமாரியில் வைத்துவிட மருமகளிடம் உத்தரவிட்டிருந்தாள்.

வீட்டிலே கொஞ்சம் வெள்ளிச் சாமான்கள் இருப்பது தங்கவேலுவுக்குத் தெரியும்.

யாருக்காவது அவன் உளவு சொல்லி திருடும்படி ஏவி விட்டிருப்பானோ? மருமகள் கூடவே அறையில் துணைக்குப் படுத்துக் கொண்டிருந்தால் இரவில் எந்த நேரத்திலும் கூப்பிட இயலும்.

''சாம்பவி! என்ன தூக்கம் — எருமமாட்டு ஜென்மம்! பின்பக்கம் சத்தம் கேட்கிறதே என்னன்னு போய் பார்த்துவிட்டு

வா...!'' மரத்துக் கிளை காற்றில் அசைந்தாலும் மருமகளை விரட்டிக் கொண்டிருந்தாள்.

சாம்பவியும்... சட்டென்று எழுந்து போய்ப் பார்த்துவிட்டு வருவாள்.

''ஒண்ணுமில்லை அத்தை. பூனை ஒண்ணு ஓடி மேலை மேலிருந்த டம்ளரைத் தள்ளிடுச்சு... அவ்வளவுதான்!''

சன்னல் கதவுகளையெல்லாம் பத்திரமாக அடைத்து விட்டுதான் சாம்பவி படுப்பது வழக்கம்.

அப்படியும் முற்றத்துக் கம்பி இடுக்கு வழியே ஒரு பொல்லாத பூனை உள்ளே நுழைந்து சில நாட்களாக... வீட்டுக்குள் இங்குமங்கும் ஓடி... இரவில் தூங்கும் சமயத்தில் சத்தம் எழுப்பி — அவளைப் பயப்பட செய்து கொண்டிருந்தது. பார்த்தீபனிடம் சொல்லி முற்றத்து தடுப்புக்குக் குறுக்குக் கம்பிகள் போட்டு அதை தவிர்க்க வேண்டுமென்றுதான் நினைத்துக் கொண்டிருந்தாள். பகவதி வந்த பின்னர் அதைப்பற்றிய ஞாபகமே இருக்கவில்லை...

தொப்பென்று... ஒரு தட்டு விழுந்தது... அதில் ஏற்பட்ட சத்தம் அவளைத் திடுக்கிட செய்துவிட்டது. உடம்பு நடுங்கி... மார்பு வேகமாகத் துடித்துக் கொண்டது.

அந்தப் பொல்லாத பூனை செய்யும் சத்தமல்லவே... இது அலமாரியிலிருந்து ஏதோ கீழே தவறி விழுந்ததால் ஏற்படும் சத்தம் போலத் தெரிகிறதே?

அடுத்த அறையில் விளக்கு எரிவது போலத் தோணுதே...? அந்த அறையின் வெண்டிலேட்டர் வழியே தெரிந்த வெளிச்சம் நடையில் படிந்து கதவின் இடுக்கு வழியே அவளுக்கும் தெரிந்தது... விளக்கை நன்றாக எரிய விட்டுக் கொண்டு —அவளது அலமாரியைத் திறந்து சாமான்களை உருட்டும் திருடன்... அவள் நினைத்து முடிப்பதற்குள் களுக்கென்ற சிரிப்பு சத்தம் அவளைத் திகைக்க வைத்தது. எதற்கெடுத்தாலும்... அப்படி சிரிப்பவள் மாயா.

ஆமாம்! இருவர் தணிந்த குரலில் பேசுவது துல்லியமாகக்

கேட்கிறதே... சட்டென்று வலுவாக இருந்த தன் கையை மெல்லத் தூக்கி... தலையணையின் கீழ் துழாவினாள்.

அவளது கொத்து சாவியைக் காணவில்லை. அவள் விழித்துக் கொண்டிருந்த போதே எப்படியோ மாயமாக பகவதி எடுத்துக் கொண்டு விட்டிருக்கிறாள். அப்படியென்றால் நிருடர்கள் யாரும் வெளியிலிருந்து வீட்டுக்குள் புகுந்து விடவில்லை.

வீட்டிலிருந்த விருந்தாளிகளே இப்போது பக்காத் நிருடர்களாகி விட்டார்கள்.

அவள் இப்போது என்ன செய்ய...? கத்தி கூச்சலிட்டால் உதவிக்கு ஓடிவர தங்கவேலு கூட இல்லையே!

வாட்டசாட்டமான அவன் தன் பார்வையாலேயே அவர்களைப் பொடியாக்கி விடுவானே... நம்பிக்கை மிக்க அவனை சந்தேகப்பட்டு வேலையை விட்டு நீக்கியது எத்தனை பெரிய தவறு...

படுக்கையில் லேசாகப் புரண்டு தொண்டையைச் செருமினாலும் விழித்துக் கொண்டு எழுந்து அருகில் வந்து —அத்தை கூப்பிட்டீங்களா என்று பரிவுடன் கேட்ட மருமகள் சாம்பவியை வெளியே அனுப்பியது எத்தனை பெரிய பிசகு... பகவதியின் பேச்சுக்குத் தலையாட்டி வீட்டிலிருந்த அத்தனை வேலையாட்களையும் அனுப்பிவிட்டு... ஐயோ... மாபெரும் பிசகை செய்து விட்டிருக்கிறாளே! எழுந்து நடக்க முடியாத நோயாளி... அவளால் எதுவும் செய்ய முடியாது. உரத்துக் கத்தக்கூட வலுவில்லை என்பதை உணர்ந்து கொண்டு பகவதியும், அவள் மகளும் எத்தனை ஒரு பெரிய சதியைத் தீட்டி விட்டிருக்கிறார்கள்.

வீட்டிலுள்ள வெள்ளிப் பாத்திரங்களை சேகரித்து மூட்டை கட்டிக் கொள்கிறார்கள் போலும்.

இரும்பு பீரோவில்... அடித்தட்டில்... துவாலைகளின் மடிப்புக்கிடையே பதினைந்து பவுன்களை அவள் சேகரித்து மகனுக்குக் கூடத் தெரியாமல் வைத்திருந்தாள்.

இந்த வயதில் - விதவையாகிய பின்னரும்... அவளுக்கு அந்தத் தங்கத்திலே ஒரு கனமான பொன் சரடு செய்து அணிந்து கொள்ள ஆசையாக இருந்தது.

பகவதியின் கைகளில் அவை அகப்பட்டால் கட்டாயம் சுருட்டிக் கொண்டுவிடப் போகிறாள்.

படித்தவள் — பண்புடன் நடந்து கொள்வாள் என்று எண்ணி வீட்டில் சேர்த்தது மிகப்பெரிய தவறு... பிறர் பொருளுக்குப் பேயாக அலையும் கிராதகி பகவதி... யாருமில்லாத போது... திருட ஆரம்பித்திருக்கிறாள்... திருடிக் கொண்டு போகட்டும்... எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு ஒழியட்டும்... போகிற போக்கில் தங்களது திருட்டு வெளிப்படக் கூடாது என்று அவளது கழுத்தை கயிற்றால் இறுக்கிக் கொன்று விட்டுப் போனால்...

சில்லென்று குளிர்காற்று சன்னல் வழியே வீசியபோது —பயத்திலே மரகதத்தின் உடல் கிடுகிடுவென்று நடுங்கத் தொடங்கியது.

நா வரண்டு கட்டை போலாகியது... தண்ணீர் குடிக்க வேண்டும் போல... தாகமாக இருந்தது. இப்போது அவள் பகவதியைக் கூப்பிட முடியுமா?... வந்து கோபத்துடன் கழுத்தை ஒரே அமுக்காக அமுக்கி... மரகதம் பச்சைப் பிள்ளைபோல... விசும்பி அழுதாள்.

பிறரை அழ வைத்து இதுவரை வேடிக்கை பார்த்த மரகதம்... இப்போது... அழுதாள். யாரும் தேற்ற அருகில் இல்லாது அழுது கொண்டே படுத்திருந்தாள்.

37

பக்கத்து அறையில் தொடர்ந்து பலவித சப்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன.

அழுகையின் நடுவில் மரகதம் ஊன்றிக் கேட்டாள். அவளது கற்பனை பல வடிவெடுத்தது.

இரும்பு பீரோவில் புடவைகள் அத்தனையையும் பகவதி வாரி மூட்டை கட்டிக் கொள்கிறாள் போலிருக்கு!

வந்ததும் வராததுமாக நானே வலிய அவளுக்குப் பட்டுச்சேலை பரிசாகத் தந்தேனே — அப்படியிருந்தும் எத்தனை பேராசை!

பார்த்தீபன் கல்யாணம் கூடட்டும் என்று வரப்போகிற மருமகளுக்கு அழகு பார்த்து வாங்கி சேர்த்து வைத்த பட்டுச் சேலைகள் — விலை உயர்ந்தவை. அத்தனையும் மேல் தட்டின் மீது அடுக்காக இருந்தன.

சாம்பவி மருமகளாக வந்த விட்டாள் என்று ஆத்திரத்தில் அவளுக்குத் தர மனமின்றி பூட்டி வைத்திருந்தாளே?

இப்போது திருட்டு பகவதி அத்தனையையும் தன் மகளுக்காக அள்ளிப் பெட்டிக்குள் திணித்துக் கொள்கிறாள் போலிருக்கு — அநியாம்... அது என்ன சத்தம்...? சின்னச் சிமிழின் மூடி ஒன்று கீழே விழுந்து தரை மீது ஓடி நிற்கும் ஓசை. வீட்டின் வெள்ளிக் குங்குமச் சிமிழையும் எடுத்துப் பெட்டிக்குள் திணித்துக் கொள்கிறாள் போலிருக்கு பாவி! மரகதத்திற்கு அவளது மாமியார் தந்தது — தன் மருமகளுக்கு கொடுக்க வைத்திருந்தாள். சாம்பவியைக் கண்டு மனம் வெகுண்டு... அதை வெளியிலெடுக்காது பூட்டி வைத்திருந்தாள் — அந்தப் பொருளை எவளோ ஒருத்தி எடுத்துப் போய் அனுபவிக்கப் போகிறாள்.

ஆனாலும் பகவதிக்கு ரொம்பவே துணிச்சல். யாரும்

வீட்டில் இல்லாதபோது பீரோவை திறந்து வீட்டு யஜமானியின் பொருள்களைக் களவாடிக் கொண்டு போனால் எத்தனை தூரம் ஓடிவிட முடியும்? இன்று என்ன கிழமை?... புதன் நாளை மறுநாள் டாக்டர் அவளைப் பார்க்கக் கட்டாயம் வருவார்... ஒரு சமயம் நாளைக்கே பார்த்தீபன் ஊர் திரும்பி விட்டாலும் வியப்பதற்கில்லை. இந்தத் திருடிகளை அவன் லேசில் விட்டு விடுவானா?

போலீசில் புகார் கொடுத்து... களவாடிக் கொண்டு போன பொருள்களை அவர்கள் இருவரும் விற்று பணமாக்கு முன் கையும் களவுமாகப் பிடித்து தக்க தண்டனை வாங்கிக் கொடுத்து விடுவானே...?

இருவரும் படித்தவர்கள் — இப்படியா புத்தி போக வேண்டும்... படிப்புக்கும், பண்புக்கும் சம்பந்தமே இல்லை போலிருக்கு... பலவாறு எண்ணிக் குமைந்து கொண்டிருந்தாள். அழுது ஓய்ந்து ஒருவாறு தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டு விடியும் தருவாயில் அவள் ஆழ்ந்து உறங்கிப் போனாள்.

திடுக்கிட்டு விழித்துக் கொண்டபோது... பளிச்சென்று சூரிய ஒளி ஜன்னல் வழியே உள்ளே வீசியது. அம்மாவுக்கும் மகளுக்கும் அவளது அறையை ஒழுங்கு செய்ய நேரம் ஏது?... மாலை வேளையே சாம்பவி அந்த அறையின் தரையை மருந்து நீரால் துடைத்து சுத்தம் செய்து ஜன்னல் திரைகளைத் தட்டி இழுத்து மூடி மேஜை மீது கிடக்கும் உணவுப் பாத்திரங்களை அப்புறப்படுத்திவிட்டு... சுவர் மூலையில் ஒரு முக்காலி மீது பிராசோவில் பளபளக்கும் பித்தளை பூச்சட்டியில் நீர்வார்த்து தோட்டத்தில் பூத்துக் குலுங்கும் ரோஜா மலர்களை காம்புடன் வெட்டிக் கொண்டு வந்து அழகாக சொருகி அலங்கரித்து வைப்பாள்.

ஒரு நாள் டாக்டர் வைத்தியலிங்கம் கூட சொன்னார்.

''உங்கள் மருமகள் கெட்டிக்காரி — புத்திசாலி —நோயாளியை எப்படி உற்சாகப் படுத்தணுங்கிறதை தெரிஞ்சு கொண்டிருக்கா பார்த்தீங்களா? உங்களால் தோட்டத்தைச்

சுற்றிப் பார்க்க முடியாது படுத்துக் கிடக்கிறீங்க — உங்களுக்கு பூச்செடிகளைப் பார்த்து மகிழ்வது ஒரு பொழுது போக்குன்னு கணவன் மூலம் தெரிஞ்சு கொண்டு தினம் புது மலர்களைக் கொண்டு வந்து பூச்சட்டியில் அலங்காரமா வைத்து உங்கள் கண்களுக்கு விருந்தளிக்கிறாள்.''

''அண்டை வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையேன்னுதான் இருக்கு — பட்டணத்தில் இவ வாழ்ந்த ஒண்டிக் குடித்தனத்திலே பூச்சட்டியை இப்படி புத்தம் புது ரோஜாவால அலங்காரம் செய்வாளா?... என் மகனுக்கு தோட்டக்கலை மேலே ஆசை. தோட்டக்காரனோட ஞாயிற்றுக் கிழமைகளில்... பொழுது முழுக்க நின்றுகிட்டு இதுக்கு இந்த எருவை, இந்த செடிக்கு கொஞ்சம் கூட தண்ணி விடுன்னு சொல்லி... பச்சைப் பிள்ளைகளை வளக்கறாப்பல பாடுபட்டு தோட்டத்தை கிளி கொஞ்சராப்பல செஞ்சு வைச்சிருக்கான் —அதிலேயிருந்து ரோஜாவைக் கிள்ளி வைக்க அம்மாவுக்கு ரொம்பதான் கசக்குது...'' டாக்டரைக் கடிந்து கொண்டாள்.

வைத்தியலிங்கம் பதிலுக்கு முறுவலித்தார்.

''சாம்பவி ஏழைப் பெண்தான். ஆனால் வசதி வந்தா அப்போ எப்படி பாங்குடன் வாழணும்னு தெரிஞ்சவ —அவமேலே இருக்கிற கோவத்திலே இப்போ நீங்க இப்படி பேசறீங்க — ஒரு பத்து நாள் அவள் பிறந்த வீட்டுக்குப் போனா அப்போ புலம்பி தவிப்பீங்க... பந்தயம் வேணா கட்டட்டுமா...?''

''ஆமாம், பந்தயம் ஒண்ணுதான் இப்ப குறைச்சல்... நீங்க எப்பவும் சாம்பவிக்கு வக்காலத்து வாங்கிட்டு பேச வந்துடறீங்க. ஒரு சமயம் அவ உங்களோட தூரத்து பந்துவா?''

''மனுஷங்க ஒருத்தருக்கு ஒருத்தர் எப்பவும் உறவுக்காரங்க என்கிற கொள்கை உடையவன். அவ்வளவுதான்'' முறுவலித்தார் வைத்தியலிங்கம்.

பத்துநாள் இல்லை — ஒரு பகல் ஒரு இரவு பொழுதுதான் சாம்பவி இல்லாதபோது அந்த இரு பக்காத் திருடிகளும் வீட்டில் அட்டகாசம் செய்யும்போதுதானே அவளுக்குத் தன்

மருமகளின் அருமை புரிகிறது!

சாம்பவியைப் பகல் சாப்பாட்டுடன் வெளியே கடத்தி விட்டதால் அவளுக்கு வாடியிருந்த பூக்களை மாற்றிப் புதிதாக ஒரு கொத்து மலரைப் பூஞ்சட்டியில் வைக்கக் கூட நேரம் இருக்கவில்லை.

சாம்பவியும் படித்தவள்தான். ஆனால் எத்தனை அடக்கமானவள், அன்பானவள், பொறுமையானவள்! அவள் வெளியேறி சில மணி நேரத்திலேயே மரகதம் அவளது அருமையை உணரத் தொடங்கி விட்டாளே...

பகவதி பிசாசின் பேச்சைக் கேட்டு அவள் தன் மருமகளை ரொம்பவும் கொடுமைப்படுத்தி விட்டாள். அவமானப்படுத்தி விட்டாள். எத்தனை பெரிய தவறு... பார்த்தீபன் தெரிந்தால் மன்னிப்பானா?... மீண்டும் கண் கலங்கிப் போய் தலையை மெல்லத் திருப்பிப் பார்த்தாள்.

சாம்பவி இருந்தால் இத்தனை நேரத்திற்குள் அவளுக்கு பெட்பான் வைத்து உபசரித்து — உடலைத் துடைத்துவிட்டு மாற்றுடை அணிவித்து சூடான ஆப்பமும், காப்பியும் தந்து மருந்துகளைக் கொடுத்து... அருகில் வந்து அமர்ந்து காலை வேளை வரும் அவளுக்குப் பிடித்தமான தமிழ் நாளேட்டைப் படித்துக் காட்டியிருப்பாள்.

முன்னறை கடிகாரம் மணி எட்டடிக்கிறதே — இந்த இரண்டு கிராதகிகளும் என்ன செய்கிறார்கள்? இரவு முழுவதும் செய்த திருட்டு வேலையின் அயர்ச்சியினால் இன்னமும் பாவிகள் தூங்குகிறார்களோ?...

ஐயோ! அவளுக்கு தாகத்தில் வாயும் தொண்டையும் காய்ந்து போய்விட்டனவே... வயிற்றை லேசாக வலிக்கிறதே — மெல்ல கையைப் பிடித்து உதவினால் கூட போதும், தானே கழிவறைக்குப் போய்விட்டு வரஇயலும்...

தோட்டத்து மாட்டுக் கொட்டிலிலிருந்து மாடுகள் அம்மா என்று அழைப்பது காதில் கேட்டது...

விடியற் காலையிலேயே மன்னார்சாமி வந்து பால் கறந்து

விட்டுப் போய் விடுவது வழக்கம். தங்கவேலு பக்கத்திலிருந்து அந்த வேலையை மேற்பார்வையிடுவது வழக்கம். தாமதமாகி விட்டதால் பால் சுரந்து மடிகனத்துப் போய் மாடுகள் வேதனையுடன் கூவி அழைக்கின்றனவே. பாவம் கன்றுக்குட்டிகள் — பசியோடு தாயின் அருகாமையில் செல்வதற்கு குரல் கொடுக்கின்றனவே...

பகவதி ராட்சசி... பால் கறப்பவனை அன்று வரவேண்டாம் என்று முன் கூட்டியே ஏற்பாடு செய்து விட்டாளோ...

ஒருவரும் இல்லாத வீட்டில் படுக்கையில் கிடக்கும் அவளை பசியில் துடித்து — தாகத்தில் தவித்து சாகட்டும் என்று பகவதி தனியே விட்டு விட்டாளோ?... தன் மகளை மருமகளாக ஏற்கவில்லை என்ற காரணத்திற்கு இப்போது பழி வாங்கிக் கொள்கிறாளா பாதகி...

தனிமையில் தவித்துக் கொண்டிருக்கும் இந்நிலையில் அவளை இப்போது விரோதித்துக் கொள்ளக் கூடாது... எதையும் பாராட்டாது... வஞ்சகமாகப் புன்னகை செய்தபடி கொஞ்சம் உதவியைப் பெற்றுக் கொண்டு விட்டு... மேலே அவள் சிந்திக்கும் முன்...

முன்னறை கடிகாரம் காலை ஒன்பது மணி ஒன்பதை ஓசை மூலம் அறிவித்தபோது அவள் திடுக்கிட்டுப் போனாள். அத்தனை நேரம்வரை பகவதி உறங்கக் கூடியவள் இல்லையே? விடிந்ததுமே காப்பி சாப்பிடா விட்டால் தலைவலி என்று தளுக்குப் பண்ணுவாளே. தாயும் மகளும் குளித்து மாற்றுடை அணிந்து கொண்டு வயிறு புடைக்க காலை பலகாரம் சாப்பிட்டுவிட்டு தோட்டத்தைச் சுற்றிக் கொண்டிருப்பவர்களாச்சே. அவர்களுக்கு என்ன வந்து விட்டது?

சிரமப்பட்டு தன் பலமெல்லாம் வரவழைத்துக் கொண்டு ''பகவதி! பகவதி'' என்று ஓங்கி கூச்சலிட்டாள்.

முன்னறை ஜன்னல் ஒன்றில் கொக்கி மாட்டப்பட வில்லை. வேகமாக வீசிய காற்றில் அது படீர் என்று அடித்துக்

கொள்ளவே... மரகதம் நடுங்கிப் போனாள். எழுந்து மெல்ல சரிந்தபடி தலையணை மீது சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள் —அந்த நிலையில் மேஜை மீது வைக்கப்பட்டிருந்த தண்ணீர் கூஜாவை மெல்ல வலுவான இடது கரத்தால் தூக்க இயலவில்லை... வயிறு உப்பிக் கொண்டு எந்த நிலையிலும் படுக்கையை அசிங்கப்படுத்திவிடும் போன்ற இயற்கையின் வேதனையை தாள முடியவில்லை... தாகம் பயத்திலே நெஞ்சை வரட்டியது. மார்பு வேகமாகத் துடித்தது.

''பகவதி! அம்மா பகவதி...'' கெஞ்சிய குரலில் ஓங்கி மறுபடியும் கூப்பிட்டாள். பகவதியும் அவள் மகளும் அங்கே இருந்தால் தானே?...

கொட்டில் பசுக்களும், கன்றுகளும்... குழைந்து கூப்பிட்டதை அவளால் தாங்க முடியவில்லை... இப்படிப்பட்ட அவமானமானதொரு சூழ்நிலை எப்பொழுதுமே ஏற்பட்டதில்லை.

கொட்டிலில் நின்ற பசுக்களில் அந்தக் கூழைப் பசுவை அவளுக்கு மிகவும் பிடிக்கும்.

தோழூர்பேட்டை சந்தையிலிருந்து அவளுக்காக அவள் கணவர் வாங்கிக் கொண்டு வந்து கொட்டிலில் கட்டிய பசு. அது எல்லாப் பசுக்களையும்விட மிக அதிகமாக பால்கரக்கும். கூழைப்பசுவை அவள் வெள்ளிக்கிழமைகளில் வீட்டு தெய்வமாக பூசித்து வந்தாள். வேலையாள் பசுவைக் குளிப்பாட்டி கொட்டிலை சுத்தப்படுத்திய பின்னர் தன் கையால் அதன் முகத்தில் மஞ்சளை தடவிக் கும்குமப் பொட்டிட்டு... ஆரத்தி எடுப்பாள். தலையை ஆட்டிக் கொண்டு அவள் தந்த வாழைப்பழத்தை புசித்த வண்ணம் நாக்கால் அவள் கையை நக்கிக் கொடுத்து கூழைப் பசு தன் அன்பைத் தெரிவித்துக் கொள்ளும்.

அவளது குழந்தை போன்ற அந்தப் பசு இப்போது மடிப்பாலின் கனம் தாளாது கதறிக் கொண்டிருக்கிறதே?

சாம்பவி இருந்தபோது... மாமியார் சொல்படி கூழைப் பசுவுக்கு வெள்ளிக்கிழமைகளில் மஞ்சள் பூசி பொட்டு வைத்து

கும்பிட்டதுடன் கொட்டிலிலிருந்த அத்தனை மாடுகளையும் பரிவோடு கவனித்துக் கொண்டாள்.

காலை எழுந்ததிலிருந்து அந்தப் பெண்ணுக்குத் தான் எத்தனை வேலைகள். எதற்காவது அவள் முகம் சுளித்திருக்கிறாளா - மறுத்து பதிலளித்திருக்கிறாளா?

அந்த வீட்டுக்கு மருமகளாக எந்தப் பெண் வந்திருந்தாலும் அவள் சாம்பவியைப் போல சொன்னதைக் கேட்டு பணிவுடன் நடந்து கொண்டிருக்கவே மாட்டாள். ஏழை வீட்டுப் பெண் என்ற ஒரு காரணத்திற்காக மரகதம் தன் மருமகளை வெறுத்தாள் - தன் மகனைக் காதலித்து தன் வலையில் சிக்கவைத்துக் கொண்டு விட்டாள் என்று ஆத்திரப்பட்டாள்.

அவள் மட்டும் என்ன? ஒரு சாதாரண விவசாயியின் மகள்தானே? களத்துமேட்டுக்கு தன் தகப்பனுக்கு சோறு கொண்டு போனபோது வழியில் பெரிய தனக்காரர் மகனை பார்க்க நேரிட்டது - சட்டநாதனுக்கு பார்த்த அளவிலேயே பெண்ணைப் பிடித்து விட்டது.

பிடிவாதம் செய்து கல்யாணம் செய்து கொண்டார். அது ஊரறிந்த சங்கதி.... அதுவும் காதல் கல்யாணம்தான். அவளுக்கு ஒரு நியாயம்... மருமகள் சாம்பவிக்கு ஒரு நியாயமா?

மகனது அன்பு, மருமகள் பக்கம் திரும்பி விட்டதே என்று பொறாமைபட்டது பெரும்தவறு. மகன் தாய்மேல் காட்டும் பாசத்திற்கும் மனைவிமேல் கொண்டிருக்கும் அன்புக்கும் வித்தியாசம் உள்ளதே! பார்த்தீபன் தாய்மேல் கொண்டிருந்த அன்பில் இம்மிகூட குறையவே இல்லையே!

பொறாமை கொண்ட அவள்தான் இளவயதினரான மகனையும் மருமகளையும் நெருங்கி இயற்கையை ஒட்டி வாழ விடாது குறுக்கே பூதமாக நின்றாள் - அந்தப் பாவம் இப்போது அவளைப் பழிவாங்குகிறது.

''சாம்பவி - என் கண்ணே! என் மகளே... உன்னைக் கொடுமைப்படுத்தினதுக்கு மன்னிச்சுக்கோ.... என் அருமை மகளே... எட்டுப் பிறவி எடுத்து எத்தனை தவமிருந்தாலும் உன்னைப்போல ஒருத்தியை நான் மருமகளா அடையவே

முடியாது... அந்த உண்மையை உணர்ந்துகிட்டேன்.... சாம்பவி உண்மையைப் புரிஞ்சுகிட்டேன்.... வாம்மா.... திரும்பி வீட்டுக்கு வந்துடும்மா வந்துடு... இது உன் வீடு. உன்னை வெளியே அனுப்ப எனக்கு ஒரு உரிமையும் கிடையாது. தப்பு செஞ்சுட்டேன். மன்னிச்சுக்கோ... வந்துடும்மா...'' என்று புலம்பி அழுதபடி... தானே காலை ஊன்றி நின்றுகொண்டு படுக்கையைப் பிடித்த வண்ணம் கழிவறையை நோக்கி நடக்க முயன்றாள்.

என்ன இது...? அறை இப்படி வேகமாக சுழல்கிறது!... ஏன் இந்த இருட்டு...?

''ஐயோ! என்னைப் பிடிச்சுக்கோ சாம்பவி... சாம்பவி...!'' அலறியபடி... தடால் என்று கீழே விழுந்து நினைவிழந்து போனாள் மரகதம்.

38

வேலையினின்று விலகிக் கொண்ட தங்கவேலு தன் உதவியாள் குமரேசனுடன் அன்றே சேலம் புறப்பட்டுப் போய்விட்டார். அங்கு தனக்கு மிகவும் நெருங்கிய நண்பர் நடத்திய டீக்கடையில் குமரேசனைத் தற்காலிகமாக வேலைக்கமர்த்திவிட்டு தாம் பிறந்து வளர்ந்த திருச்செங்கோட்டுக்குப் புறப்பட்டார்.

சின்ன வயதிலேயே சட்டநாதன் வீட்டில் வேலைக்கமர்ந்து விட்டவர். பிறந்த ஊரைவிட்டு வெளியேறி ஆண்டுகள் பல ஆகிவிட்டன. மனைவிபோன பின்பு தனிக் கட்டையாகி விட்ட அவருக்கு அங்கே தூரத்து உறவினர்கள் வீட்டில் அதிக நாட்கள் தங்கியிருக்க மனம் ஒப்பவில்லை.

'அர்த்த நாரீஸ்வரரைத் தரிசிச்சுட்டுப் போகவந்தேன்'' என்று கேட்டவர்களுக்குப் பதில் கொடுத்துவிட்டு, கோயிலுக்குச் சென்று கும்பிட்டதும் கிளம்பிவிட்டார்.

சேலத்தில் தமது நண்பரின் டீக்கடையில் அவருக்கு உதவி செய்து கொண்டு சில நாட்களைப் போக்கினார். ஆனாலும் இருப்புக் கொள்ளவில்லை. இதற்குள் சின்ன யஜமான் பார்த்தீபன் ஊரிலிருந்து திரும்பியிருப்பார். அந்த வெள்ளித்தட்டு விவகாரம் போலீசில் புகாராகப் பதிவாகி விட்டால்...? ஒரு துரும்பைக் கூடத் தங்கவேலு தொட மாட்டார் என்பது மரகதம்மாளுக்குத் தெரியும்.

அவர்கள் வீட்டில் தவசிப் பிள்ளையாக வேலைக்கமர்ந்து சில நாட்கள்தான் ஆகியிருந்தது அப்போது.

தங்கள் வீட்டுப் புழக்கடைக்குப் பின்னால் ஓடிய காவிரியின் கிளையான பெரிய வாய்க்காலில் மூழ்கிக் குளித்து மகிழ்வது மரகதத்தின் வழக்கம்.

ஒரு நாள் விடியற்காலை குளிக்கப் போனவள் கணவர் வேலை நிமித்தம் பக்கத்து டவுனுக்குக் கிளம்புகிறார் என உணர்ந்து அவசரமாகக் குளியலை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டாள்.

சமையலை முடித்துவிட்டுக் காலார வாய்க்கால் கரை ஓரம் தினமும் தங்கவேலு சிறிதுநேரம் நடப்பது வழக்கம்.

பிள்ளையார் கோவில் வரை நடந்துவிட்டுத் திரும்பியவர்... தங்கள் வீட்டு இறங்கு துறையை அணுகி... முகத்தைக் கழுவிக் கொள்ள படிகளில் இறங்கினார். 'அதென்ன பளபளவென்று? கண்ணைப் பறிக்குதே...' என்று அதிசயித்தபடி ஓரமாக வளர்ந்து நின்ற மல்லிகைப் புதர் அருகே கிடந்ததைக் கையில் எடுத்த போது தேள் கொட்டிவிட்டது போன்ற அதிர்ச்சி.

அது மரகதம்மாள் கழுத்திலே தினமும் அணியும் வைர முகப்பு வைத்த மூன்று கொத்துத் தங்க சங்கிலி.

முகத்தைத் துண்டால் துடைத்துக் கொண்டு சங்கிலி மீது இருந்த மண்ணைப் போக்க அதை வாய்க்காலில் முக்கி எடுத்துக் கொண்டு படபடக்கும் நெஞ்சோடு வீட்டுக்குள் ஓடி வந்தார்.

''அம்மா...!'' என்று அவளது அறைக்கு முன் நின்று குரல்

கொடுத்தார்.

''உங்க கழுத்து செயினை எங்கே கழட்டி வச்சீங்க...'' தங்கவேலு கேட்டதும் மரகதம் தன் கழுத்தைத் தடவிப் பார்த்துவிட்டுத் திகிலுடன் அலமாரியைத் திறந்து துழாவத் தொடங்கினாள்.

''வாய்க்காலில் குளிக்கற போது... கழற்றி மஞ்சள் உரைக்கும் கல் அடியே மல்லிகைப் புதர்கிட்ட வச்சுட்டு வந்துட்டீங்க... இந்தாங்க!'' என்று நகையைக் கொடுத்தார்.

''தங்கவேலு, நீ ரொம்ப நல்லவன் அப்பா... ஐயாவுக்குத் தெரிஞ்சா உன் நாணயத்தைப் பத்தி ரொம்பப் பூரிச்சுப் போவார்...!'' என்று புகழ்ந்த மரகதம், பத்து ரூபாய் நோட்டைப் பரிசாக அவர் முன் நீட்ட தங்கவேலு அதை ஏற்க மறுத்துவிட்டார்.

அது நடந்து பல ஆண்டுகள் சென்றுவிட்டன. அன்றே அந்த நகையை எடுத்து ஒளித்து வைத்திருந்தால் யாரும் அவர் மீது குற்றம் சொல்ல முடியாது. வாய்க்காலின் இறங்கு துறையில் எத்தனையோ பேர் வந்து குளித்துவிட்டுப் போகிறார்களே. பின்னர் அந்த நகையை ரகசியமாக விற்று அந்தப் பணத்தைக் கொண்டு சொந்தமாக அவர் டீக்கடை வைத்து வாழ்ந்திருக்க முடியும். பிறர் பொருளுக்கு என்றுமே ஆசைப்படாத கண்ணியமான மனிதர் அவர். வெள்ளித்தட்டைத் திருடி விட்டதாக பகவதி குற்றம் சாட்டியதை அவர் பொருட்படுத்தவில்லை.

அவரது நாணயமான நடத்தையைத் தெரிந்த மரகதம்மாள் அவரைத் திருடனாக்கி விட்டாளே.

அந்த வேதனை ரம்பமாக அறுக்க, அவரால் சேலத்தில் நீடித்துத் தங்கியிருக்க முடியவில்லை.

மேலும் அவர் வேலை செய்ததற்கு உண்டான பூராப்பணத்தையும் மரகதம்மாளிடம் வாங்கிக் கொள்ளவில்லை.

அவர் சேலத்திலேயே தங்கிவிட்டால் பார்த்தீபன் ஒரு

சமயம் சந்தேகப்படலாமே? அன்று மாலையே குமரேசனுடன் அவர் சேலத்தினின்று புறப்பட்டு விட்டார்.

விளக்கு வைக்கும் நேரத்தில் வீட்டுக் கதவைப் பலமாக யாரோ தட்டுவதைக் கேட்டு அலமேலு பயந்து போனாள்.

கூடத்து அறை ஜன்னல் வழியே வெளியே எட்டிப் பார்த்தாள். வாசலில் தங்கவேலுவும், அவரது உதவியாள் குமரேசனும் நின்று கொண்டிருந்ததைக் காண அவளுக்கு மிக்க வியப்பாக இருந்தது.

மரகதம்மாள் படுக்கையாகி விட்ட நாளிலிருந்து அலமேலு அவர்கள் வீட்டுக்குப் போனதேயில்லை.

வேலைக்காரி முத்துநாகம் ஏதாவது வம்பு விசாரித்துக் கொண்டு வந்து சொல்ல முயன்றபோது அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டிருந்தாள். சாம்பவிகூடத் தன்னை ஒரு முறை வந்து காணவில்லை என்று அலமேலுவுக்கு உள்ளூர வருத்தம். ஆனால் அதையும் அவள் வெளியே சொன்னதில்லை.

மாதத்திற்கு ஒருமுறை டாக்டர் வைத்தியலிங்கம் வந்து அவளைப் பரிசோதித்துவிட்டுத் தேவைப்பட்டால் மருந்து எழுதிக் கொடுப்பது வழக்கம். ''சாம்பவிக்கு அந்த வீட்டில் நிற்க நேரமில்லை!'' என்று அவராக ஏதாவது கூறினால்கூட அவள் மேலே பேச்சை வளர்த்தியதில்லை.

சம்பந்தியான தன்னை மரகதம் கல்யாணத்தின் போது அசட்டை செய்தவள் — உடல் நலமில்லாத சமயம் அடிக்கடி தன் வீட்டுக்கு விசாரிப்பு செய்ய அலமேலு வருவதை விரும்பமாட்டாள் என்பதை அவள் நன்கு உணர்ந்து கொண்டு விட்டிருந்தாள். மதியார் வீட்டு வாசலை மிதிக்கக்கூடாது என்ற வைராக்கியம்.

''வாங்கோ உள்ளே. இதென்ன பெட்டி, மூட்டை... எங்கிருந்து வராப்பல?'' வியப்புடன் கேட்டபடி கதவை அகலத் திறந்தாள்.

நடையில் செருப்புகளைக் கழற்றி வைத்துவிட்டு, பெட்டி, மூட்டைகளை தாழ்வாரத்தில் ஒரு பக்கம் வைத்தார்.

முற்றத்தில் இறங்கி இருவரும் கால்களைக் கழுவிக் கொண்டு பயணக் களைப்புப் போக முகத்தை அலம்பிக் கொண்டனர்.

''குடிக்கக் கொஞ்சம் தண்ணி கொடுங்க... பிறகு கதையைச் சொல்றேன்!'' என்றார் தங்கவேலு.

கூஜாவில் தண்ணீரும் — அத்துடன் இரண்டு டம்ளரையும் கொண்டு வந்து கூடத்துத் தரைமீது வைத்தாள் அலமேலு. முதலில் இருவரும் தாக சாந்தி செய்து கொண்டனர்.

''பார்த்தீபன் ஐயா வீட்டு வேலையிலிருந்து நான் விலக்கப்பட்டு பத்து நாளைக்கு மேல் ஆகுது!'' என்று ஆரம்பித்த தங்கவேலு — தாழ்வாரத்து தூண் மீது சாய்ந்தபடி நின்று கொண்டு படபடவென்று தமக்கேற்பட்ட அவமானத்தை விவரித்தார்.

அலமேலு அயர்ந்து போனாள். ''நீங்கள் இல்லாததினால் சாம்பவிக்கு சமையல் வேலையும் கூடி விட்டதுன்னு சொல்லுங்க... பார்த்தீபன் ஊரில் இல்லாததால் வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளிகள் அதிக சலுகைகள் எடுத்துக்கிட்டிருக்காங்க போலிருக்கு... என்னிடம் வந்து சாம்பவி ஒரு வார்த்தை சொல்லியிருந்தால்...!''

''வீட்டு வாசலைத் தாண்டக் கூடாதுன்னு மாமியார் உத்திரவு. விருந்தாளிகளின் கெடுபிடி வேறு... சாம்பவி அம்மா அந்த வீட்டில் மருமகளாகவே பார்க்கப்படவில்லை — ஒரு கொத்தடிமையாக இருக்காங்க!''

அலமேலுவின் கண்கள் கலங்கிப் போயின — துக்கம் நெஞ்சை இறுக்கியது.

''காசு பணம் உள்ளவங்க. குழந்தை கஷ்டப்படாம சுகமா இருப்பான்னு நான்தான் என் கொழுந்தனுக்கு சிபாரிசு செய்தேன். இப்படிக் கொடுமைப்படுத்துவாங்கன்னு தெரிஞ்சா — இந்தக் கல்யாணத்துக்கு ஒப்புதல் கொடுத்திருக்கவே மாட்டேன். எனக்கு சாம்பவியைப் போய்ப் பார்க்கணும் போல மனசு துடிக்கிறது. தங்கவேலு அய்யா... நீங்க துணையாக வரீங்களா... போவோம்!'' பரபரப்புடன் கேட்டாள்.

''இருங்க, அவசரப்படாதீங்க. இந்தப் பொடியனை நாளை காலை முதல் வேலையா அந்த வீட்டுக்கு அனுப்பி - பார்த்தீபன் ஐயா வந்துட்டாரான்னு பார்த்துகிட்டு வரச்சொல்றேன் —பிறகு நாம போவோம்... ஆமாம் வீடு என்ன இப்படிக் கவனிக்கப்படாம போட்டது போட்டபடி இருக்கே?''

''தங்கவேலு நீர் சமயத்துக்கு வந்தீர்... முத்துநாகத்துக்கு மூணு நாளாகக் காய்ச்சல். நான் நோயாளியாச்சே — என்னால் வீட்டைப் பெருக்கித் துடைச்சு வச்சுக்க முடியலை. சமைக்கிறதே பெரும்பாடாக இருந்தது...'' சுத்தமா வீட்டை வைத்துக் கொள்வதில் பெருமை கொண்டிருந்த அலமேலு வெட்கத்துடன் உண்மையைச் சொன்னாள்.

''பரவாயில்லை. குமரேசன் வீட்டைப் பெருக்கித் துடைச்சு சாமான்களை விளக்கித் தருவான். நான் சமைச்சுடறேன். சின்ன ஐயா வரவரை நாங்க ரெண்டு பேரும் பின் வராந்தாவிலே தங்கிக்கிறதைப் பத்தி உங்களுக்கு மறுப்பு இல்லையே?''

''முத்துநாகம் வரும்வரை என்ன பண்ணப் போகிறோம்னு கலங்கிக்கிட்டிருந்த எனக்கு நீங்க சொல்றதைக் கேட்க ரொம்பத் தெம்பா இருக்கு. எத்தனை நாள் வேணுமானாலும் எனக்குத் துணையா நீங்க ரெண்டுபேரும் இங்கே தங்கிக்கலாம்...!''

மறுநாள் காலை பத்துமணி அளவில் டாக்டர் வைத்தியலிங்கம் அங்கே வந்தார்.

பரிசோதனைக்குப் பின் அவர் கைகளைக் கழுவித் துடைத்துக் கொண்டு ஊஞ்சல் மீது உட்கார்ந்தபோது.... அலமேலு கொண்டு வந்து வைத்த காப்பி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டார்.

''என்ன இது? தங்கவேலு போடர காப்பி போல... இன்னிக்கு நீங்க எனக்குப் பிடிச்ச மாதிரி ஸ்ட்ராங்கா போட்டுக் கொண்டு வந்திருக்கீங்க?'' வியப்புடன் கேட்டபடி காப்பியை உறிஞ்சினார்.

''நீங்க நோயாளிகளைப் பரிசோதித்து வியாதிகளைக் கண்டு பிடிப்பதில் எத்தனை கெட்டிக்காரரோ அதுபோல

உணவை ருசித்து... யார் பக்குவம் என்று கண்டுபிடிப்பதிலும் கெட்டிக்காரர்தான் - இது தங்கவேலு போட்ட காப்பிதான்!'' லேசாகச் சிரித்தாள் அலமேலு..

''தங்கவேலு இங்கே எங்கே வந்தார்?''

''அது ஒரு கதை!'' என்று அலமேலு ஆரம்பிப்பதற்குள்... சிங்காரம் வியர்க்க விருவிருக்க ஓடிவந்தான்.

''கூப்பிட்ட குரலுக்கு வந்து உதவி செய்யற உன்னையும் பத்து நாளாக் காணலை - எங்கே போயிருந்தே?'' அன்புடன் அதட்டினாள் அலமேலு.

சமையலறையிலிருந்து தங்கவேலுவும் - பின் பக்கத்திலிருந்து குமரேசனும் வெளிப்பட்டனர்.

''பள்ளிக்கூடம் லீவு - திருச்சியிலிருக்கிற எங்க அத்தை வீட்டுக்குப் போயிருந்தேன். நேத்து என்னை ஊருக்குத் திருப்பி அனுப்ப என் மாமா என்கூட பஸ் நிறுத்தத்துக்கு வந்திருந்தார். அதுதான் கடைசி பஸ். இத்தனை நேரத்துக்கு மேலே வீட்டிலே உனக்கு சாப்பாடு வச்சிருக்காங்களோ இல்லையோ... ஓட்டலில் சாப்பிட்டுட்டுப் போன்னு மாமா என்னைப் பக்கத்திலிருந்த ஓட்டலுக்குக் கூட்டிக்கிட்டு போனார். அங்கே நான் பொன்னியையும் அவங்க புருஷனையும் பார்த்தேன் -எனக்கு ஒரே அதிசயமாயிருந்துச்சு. சாப்பாட்டை முடிச்சுகிட்டு வெளியே வந்தப்போ... என்னால் நம்பவே முடியலை. வெற்றிலை பாக்குக் கடைக்கு எதிரே விளக்குக் கம்பத்துகிட்ட கையிலே பெட்டியோட நம்ப சாம்பவி அம்மா நின்னுகிட்டிருந்தாங்க! யாரோ ரெண்டு பசங்க அவங்ககிட்டே அசிங்கமா பேச ஆரம்பிச்சப்போ... ஒரு வயதானவர் வந்து அதைத் தடுத்து... பொன்னியையும் அவ புருஷனையும் திட்டி அனுப்பிச்சுட்டு தன்னோட கூட சாம்பவி அம்மாவை ரயிலடிக்குக் கூட்டிகிட்டு போனார்.

''அக்கா! எங்கே போரீங்க''ன்னு கேட்க எனக்கு ஆசையா இருந்தது. பொன்னியையும் அவ புருசனையும் கண்டால் எனக்கு எப்பவும் கொஞ்சம் பயம். அக்காவை கூட்டிக்கிட்டுப்போன அந்த மனிதர் ஓங்கிக்கத்தி வம்புசெய்து

கிட்டிருந்த பசங்களை விரட்டிய வேகத்தைப் பார்த்து நான் ரொம்பவே பயந்துட்டேன். இதைப் பத்தி என் மாமாகிட்ட கூடச் சொல்லலை. ராத்திரி முழுக்க எனக்குத் தூக்கமே இல்லை. விடிகாலையிலே ஓடிவந்து இதை சொல்லியிருப்பேன். வீட்டிலே அம்மா எனக்குப் பல வேலை தந்துட்டாங்க. அதையெல்லாம் முடிச்சுட்டு இப்போ ஓடிவரேன். சின்ன யஜமான் கூட ஊரில் இல்லைன்னு கேள்வி. அக்கா இப்படிப் பரதேசி போலத்தனியா... பட்டணத்துக்கு ஏன் போறாங்க?''

அனைவரும் திடுக்கிட்டுப் போயினர்.

''சிங்காரம் நீ உண்மையில் சாம்பவியைப் பார்த்தியா?'' அலமேலுவின் குரல் நடுங்கியது.

''சத்யமா சொல்றேன்... அது அக்காவேதான்!''

''அப்படின்னா இதுக்குக் காரணம் என்னன்னு நாம கண்டு பிடிக்கவேணுமே. நான் மரகதம்மாளை பார்க்கிறாப்பல இப்பவே போறேன்...!'' என்று கூறியபடி கழுத்தில் தொங்கிய சோதனைக் குழாயை எடுத்துத் தமது மருந்துப் பெட்டிக்குள் திணிக்க முயன்றவர் அடியில் வைக்கப்பட்டிருந்த சில மருந்துப் பொருள்களை... நகர்த்தியபோது... திகைத்துப் போனார்.

''இதென்ன பார்த்தீபனுக்கு ஒரு கடிதம். அவசரம்னு எழுதியிருக்கே...!'' என்று சாம்பவி போட்டிருந்த அந்தக் கடிதத்தை அப்பொழுதுதான் கண்டுபிடித்து எடுத்து அலமேலுவிடம் கொடுத்தார்.

''இது சாம்பவியின் கையெழுத்துதான் - சந்தேகமில்லை. டாக்டர் நாம் இப்போ வரைமுறைகளை யோசிச்சுகிட்டு சும்மா இருக்கக்கூடாது. பார்த்தீபனுக்கு என்று இருந்தாலும் பரவாயில்லை - நான் கடிதத்தைப் பிரிச்சுப் படிக்கிறேன்... சாம்பவியின் புக்ககத்தில் ஏதோ சூழ்ச்சி நடக்கிறது என்பதற்கு சந்தேகமில்லை... எங்க வீட்டுப் பெண்ணைப் பிடிக்காவிட்டால்... என் வீட்டுக்கு மரியாதையோட அனுப்பியிருக்கணும். அதை விட்டு...!'' கோபத்துடன் கடிதத்தைப் பிரித்து வாசித்தாள். அலமேலுவின் கண்களில் நீர்

வழிந்தது.

''டாக்டர் அய்யா, நீங்கதான் இப்போ இடைபுகுந்து என்ன நடந்ததுன்னு கண்டுபிடித்து உதவணும். சாம்பவி மாமியார் வற்புறுத்திப் பட்டணத்துக்கு தனியே விரட்டியிருக்காங்கன்னு புரிகிறது... சாம்பவி இப்போ சென்னையில் இருந்தால் அதைப் பற்றித் தெரிஞ்சுக்க நாம் அவள் தந்தைக்கு ஒரு தந்தி அடிக்கவேண்டும் - யாரோ ஒரு மனிதன் அவளைக் கூட்டிக் கொண்டு போவதாக சிங்காரம் தெரிவிக்கும் தகவல் என் மனதில் பலகலவரங்களை உண்டு பண்றது!'' தழுதழுத்தாள்.

''நானும் - குமரேசனும் ஓடிப்போய்... பார்த்தீபன் ஐயா வந்துட்டாரான்னு பார்த்துட்டு வரோம் - பிறகு நீங்கள் வரலாம் - வாசல் கதவுக்கு ஐயா காத்ரெஜ் பூட்டு போட்டிருக்கார் - ஒரு சாவி அம்மாகிட்டேயும், ஒண்ணு அவர் கிட்டேயும் ஒண்ணு என்கிட்டேயும் இருக்கு - புறப்படர அவசரத்திலே நான் அதை என் சாவிக் கொத்திலிருந்து கழட்டித்தர மறந்துட்டது இப்போ நல்லதாப் போச்சு - கதவை நானே திறந்து கொண்டு பொசுக்குன்னு உள்ளே போய் நிக்கப் போறேன்...!''

''தங்கவேலு சீக்கிரம் கிளம்பு!'' அலமேலு பதறினாள்.

திறந்து கிடந்த கேட்டின் வழியே தோட்டத்திற்குள் நுழைந்த அவர்கள் காதில் கொட்டில் மாடுகள் கோரமாகக் கத்துவது கேட்டது. அழைப்பு மணியை பலமுறை அமுக்கியும் பதில் இல்லை - கதவைப் பலமாகத் தட்டியும் பயன் இருக்கவில்லை. முடிவில் தங்கவேலு, தமது சாவிக்கொத்தை எடுத்து... வாயிற்கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றவர் அங்கு நிலவிய நிசப்தத்தைக் கண்டு வியப்புடன்.. மரகதத்தின் அறைக்கதவைத் திறந்தபோது...

— அவரையும் மீறி ஓவென்று கூச்சலிட்டுக் கத்தி விட்டார்.

39

தீபாவளிக்கு மரகதம்மாள் எடுத்துக் கொடுத்திருந்த ஊதா வண்ண தேவேந்திரன் சேலையும் - அதற்கேற்றாற் போல் தானே பார்த்து வாங்கித் தைத்துக் கொண்டிருந்த ஜாக்கெட்டையும் அணிந்து கொண்டிருந்தாள் காத்தாயி.

அவளது கணவன் தங்கப்பன் விடியற்காலையிலேயே வீட்டுப் புழக்கடைக் கிணற்றடியில் குளித்துவிட்டு சலவையிலிருந்து எடுத்துவந்த வெள்ளை வேட்டி, சட்டையில் வெளிக்கிளம்பத் தயாராகிவிட்டிருந்தான். அவசரமாக அவள் தயாரித்த ஆப்பங்களில் கணிசமாக சிலவற்றைத் தின்று லோட்டா காப்பியை விழுங்கிவிட்டு வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு வாயில் திண்ணையில் இவன் காத்திருந்தான்.

ஊரைவிட்டு நாலு நாள் வெளியே தங்கியிருப்பதென்றால் எத்தனை பெரிய சங்கதி என்பது அவளுக்குத்தானே தெரியும்? இரவு வெகுநேரம் அவள் எங்கேயோ காசிக்குப் போவது போல வீட்டில் உள்ள சட்டி பானைகளைத் திறந்து மூடி, அவைகளில் உள்ள சாமான்களை மனதில் பதிய வைத்துக் கொண்டு, நான்கு நாளுக்குத் தனக்கும் கணவனுக்கும் தேவைப்பட்ட சாமான்களைத் தங்களது தகரப் பெட்டியில் அடுக்குவதும் வெளியே எடுத்து வைத்துக் கணக்குப் பார்ப்பதுமாகத் திண்டாடிப் போனாள்.

கடைத் தெருவிலிருந்ததொரு பலசரக்குக் கடையில் எடுபிடி ஆளாக வேலை பார்த்துக் கொண்டிருந்தான் தங்கப்பன். மாதத் துவக்கத்திலே வியாபார நெருக்கடியின் போது வெளியூர் போவது எப்படி சாத்யமாகும்? என்று அவனுக்கு விடுப்புக் கொடுக்க மருந்துக் கடை முதலாளி இடக்குப் பண்ணினார்.

''சமயபுரத்தாளுக்கு வேண்டுதலை. அவசியம் போக

வேண்டும்.'' என்று அவன் சண்டித்தனம் செய்து நான்கு நாள் லீவும் கைச்செலவுக்குக் கடனாக இருபது ரூபாய்களும் பெற்றுக் கொண்டு கிளம்பிவிட்டிருந்தான். பொருட் காட்சியைப் பார்க்கப் புறப்பட்ட சிறுவனைப் போல அவனுக்கு ஒரே மகிழ்ச்சி.

''என்ன புள்ளே! உள்ளார இன்னும் என்ன பண்ணிக்கிட்டிருக்கே? பொழுது உச்சியை எட்டரத்துக்குள்ளே நம்ம மக வீட்டுக்குப் பொடி நடையாப் போயிட வேண்டாமா...?'' குரல் கொடுத்தபடி உள்ளே எட்டிப் பார்த்தான். அவன் முகத்தில் ஒரே சிரிப்பு... ''அடேயப்பா! உன்னை இந்த சேலையில் பார்த்தா எப்படி இருக்கே தெரியுமா?''

சுவரில் தொங்கிய சிறு கண்ணாடிமுன் தலையை மழமழவென்று சீவிமுடித்துக் கொண்டிருந்த காத்தாயி நெற்றி நிறைந்ததொரு குங்குமப் பொட்டை வைத்து சரிசெய்து கொண்டு அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவளுக்கு ஏனோ அந்தப் பயணம் கொஞ்சமும் மகிழ்ச்சியை தரவில்லை. இனங்காணாத ஒரு கலவரம் தன் மனதைக் கவ்விக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

''நான் பேசறேன் - நீ என்னவோ யோசனையா நிக்கிறியே... இந்த சேலையை நீ கட்டிகிட்டதும் உன் வயசு பாதியாகக் குறைஞ்சு போச்சு புள்ள! ஆமாம், உங்க பெரிய அம்மா ரொம்பக் கருமியாச்சே - இத்தனை விலைபோட்டு வேலைக்காரிகளுக்கு சேலை எடுத்துத் தர அவங்களுக்கு எப்படி மனசு வந்தது?''

''அதுவா? பொன்னிகூட ரொம்பவே அதிசயப்பட்டு விட்டா. மகனுக்கு நல்ல இடத்திலே பொண்ணு பார்த்துகிட்டிருந்த சமயம். அம்மா மனசிலே ரொம்ப சந்தோசம் பொங்கி கிட்டிருந்தது. அதனாலே இந்த வாட்டி தீபாவளிக்கு எங்க எல்லோருக்கும் உசந்த துணி எடுத்துக் கொடுத்து ஜமாச்சுட்டாங்க. இப்ப வந்திருக்குற மருமவ... அப்பவே வந்திருந்தா எங்களுக்கு ஒரு கந்தல் துணிகூடக்

கிடைச்சிருக்காது... அடுத்த தீபாவளிக்கு...!'' ...மேலே பேச முடியாது தயங்கி நின்றாள்.

குற்ற உணர்வு அவள் நெஞ்சை இறுக்கிப் பிடித்துக் கொண்டது. வரப்போகிற தீபாவளிக்குப் பெரிய அம்மா உயிருடன் இருப்பாங்களோ, மாட்டாங்களோ தெரியாது... படுக்கையோடு படுக்கையா கிடக்கிற நோயாளியை விட்டுட்டு சின்ன அய்யா ஊரில் இல்லாத சமயம் அவள் சமயபுரத்துக்குப் பயணப்பட்டது முறையா?

வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளிகள் இருவரும் தொட்ட செம்பை விரலால் கூட அப்பால் நகர்த்தி வைக்காத நாசூக்குக்காரிகள். முதல்நாள் காலை அவசரமாகத் துவைத்த துணிகளைக் கொடியில் காயப்போட்டு விட்டு அப்படியே அவள் கிளம்பி விட்டிருந்தாள். பகல் சாப்பாட்டிற்குப் பின்னர் அந்த வீட்டில் பத்துப்பாத்திரங்கள் ஒரு கூடைக்கு மேல் விளக்க பின் வராந்தாக் குழாயடியில் வந்து கிடக்கும். கொட்டிலில் நின்ற மாடுகளுக்குத் தீவனம் வைப்பதிலிருந்து மாலைப் பொழுது கொடிக்காலிலிருந்து சின்னப் பையன் கொண்டு வந்து போடும் அகத்திக்கீரைக் கட்டைப் பிரித்துப் பசுமாடுகளுக்குப் பங்கிடும் வேலையைத் தோட்டக்கார சுந்தரத்தின் மனைவியோடு அவள் கூட பகிர்ந்து கொள்வது வழக்கம்.

தோட்டக்கார சுந்தரம் தம் மனைவியோடு அவளுக்கு முன்னதாகக் கிளம்பிப் போய் விட்டாரே?

சாம்பவி அம்மாளும், பொன்னியும் எத்தனை வேலைகளைக் கவனிக்க முடியும்?

''என்ன புள்ளே? ஒரே யோசனையா நிற்கிறே?'' தங்கப்பன் அதட்டினான்.

''மக வீட்டுக்குப் போய் ஆறு மாசமாச்சு வெறுங்கையோடு போக முடியுமா? நான் கடைத் தெருவுக்குப் போய் ஏதாச்சும் வாங்கிட்டு வரேன் - மூட்டை முடிச்சுகளைப் பத்திரமாப் பார்த்துக்கிட்டு நீங்க இங்கேயே இருங்க...!'' சொல்லிவிட்டு அரிசிப் பானையில் ஒளித்து வைத்திருந்த சுருக்குப் பையை இடுப்பில் செருகிக் கொண்டு கிளம்பினாள்.

கோடை காலத்தின் துவக்கம் - சுள்ளென்று வெய்யில் காலையிலேயே பொசுக்கத் தொடங்கி விட்டிருந்தது. கடைத் தெருவில் வியாபாரம் மும்முரமாகி விட்ட நேரம். பஸ் நிறுத்தத்தருகேயிருந்த கடையொன்றில் தம் சம்பந்திக்கு ஒரு சீப்பு ரஸ்தாளிப் பழமும் - தன் பேரப்பிள்ளைகளுக்குப் பொரி உருண்டைப் பொட்டலமும் - மகளுக்கு மருக்கொழுந்து ஒரு கத்தையும் வாங்கிக் கொண்டாள்.

அவளுக்குத் திடீரென்று பொன்னியின் மாமியார் முத்தாச்சியின் நினைப்பு மின்னலடித்தது.

சட்டென்று கிழவிக்குத் துளிர் வெற்றிலையும் - கொஞ்சம் பாக்கும் ஒரு இருபது பைசாவுக்கு வாங்கிக் காகிதத்தில் சுருட்டி எடுத்துக் கொண்டு கிளம்பினாள். அவளும் அவளது கணவனும் மிகவும் பாடுபட்டு குருவிபோல் சேர்த்த பணத்தைக் கொண்டு சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் அவர்கள் வசித்த ஓலைக் குடிசையை இடித்து தள்ளி கல் சுவர் எழுப்பி - ஓட்டுக்கூரை போட்டதொரு வீட்டைக் கட்டிக் கொண்டு விட்டிருந்தனர். புழக்கடையில் ஓர் கிணற்றை வெட்டிக் கொண்டு - மீதமிருந்த கொஞ்ச நிலத்தில் வீட்டுக்கு வேண்டிய காய்கறிகளைப் பயிரிட்டுக் கொண்டிருந்தாள். தன் வீட்டைப் பற்றி காத்தாயிக்கு எப்பொழுதும் மிகவும் பெருமை. எலி வளையானாலும் தனி வளை என்று மிகவும் திருப்தியாக இருந்தாள்.

அவளுக்கு ராசியான கைகள். கொத்தி பாத்தி கட்டிவிதை போட்டு தண்ணீர் பாய்ச்சி விட்டிருந்த கீரைப் பாத்தியில்... பசேலென்று கீரை துளிர்விட்டுக் கொண்டு கிளம்பி விட்டிருந்தது. நாலு நாள் தண்ணீர் ஊற்றா விட்டால் இந்த வெய்யில் காலத்தில் அவை கதி என்ன.... பக்கத்து வீட்டுக்காரி... வீட்டையும் தோட்டத்தையும் பார்த்துக் கொள்வதாக ஒப்புதல் கொடுத்திருந்தாள். நாலுநாள் தன் அருமை வீட்டைப் பிரிந்து வெளியூர் போக வேண்டுமே என்ற கவலை அவளது அடிவயிற்றைப் பிசைந்தது.

பொன்னியும் அதே தெருவில் மூன்று வீடுகளுக்கப்பால் தான் சொந்த வீட்டில் வசித்துக் கொண்டிருந்தாள். அவளும்

பொன்னியும் ஒரே இடத்தில் வேலை பார்க்கிறார்கள் என்ற நெருக்கத்தைவிட பொன்னியின் மாமியாரும் அவளும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உறவு இறுக்கமாக இருந்தது.

பொன்னியின் மாமியார் முத்தாச்சிக்கு அவளை மிகவும் பிடிக்கும். அவளும் காலையோ மாலையோ வேலையிலிருந்து திரும்பும்போது ஒரு முறையேனும் அந்தக் கிழவியைப் பார்த்து நலம் விசாரிக்க மறக்கவேமாட்டாள். கடைத் தெருவுக்குப் போனால் கட்டாயம் கிழவிக்குக் கொஞ்சம் துளிர் வெற்றிலை தன் பரிசாக வாங்கிக் கொண்டு வரத் தவறியதில்லை. முத்தாச்சி வாக்கு கொடுத்தால் தவறமாட்டாள். நான் வரும்வரை வீட்டையும் தோட்டத்தையும் ஒரு கண் பார்த்துக் கொள்ளும்படி அவளைக் கேட்டால்?

வாயிற் திண்ணையில் முத்தாச்சி வெற்றிலை பாக்கை உரலில் இடித்துக் கொண்டு காலை நீட்டியபடி உட்கார்ந்திருந்தாள். வெற்றிலைப் பொட்டலத்தை அருகில் வைத்து விட்டு உட்கார்ந்த காத்தாயியை கிழவி அதிசயமாகப் பார்த்தாள்.

''புதுப்பெண் போல புதுச்சேலை கட்டிகிட்டு எங்கே போராப்பல?'' வியப்புடன் விசாரித்தாள்.

''சமயபுரத்தாளுக்கு வேண்டுதலை செய்துகிட்டு எம்மா நாளாகுது ஆச்சி, உங்களுக்குத் தெரியாதா? அந்த வேண்டுதலை முடிக்க மகளைக் கூட்டிகிட்டுப் போக நானும் இவரும் கிளம்பிகிட்டிருக்கோம்...!

''இதென்ன கூத்து?... பெரிய தனக்காரர் பெண்ஜாதிக்கு இப்படி ஒரு தாராள மனமா? ஒருநாள் தலைவலி காய்ச்சல்னா பொன்னிக்கு லீவு தர மாட்டாங்க. நேத்து அவளையும் அவ புருஷனையும் திருச்சிக்குப் போய் நாலைஞ்சு நாள் ஊர் சுத்திப் பார்த்துட்டு வர லீவு தந்து அனுப்பியிருக்காங்க... இப்ப நீ கிளம்பறே...!'' கிழவி சிரித்தாள்.

திக்கென்ற உணர்வில் ஆடிப்போனாள் காத்தாயி. வீட்டு வேலைகளைத் தனக்காக சேர்த்துப் பார்த்துக் கொள்வதாகச் சொன்ன பொன்னி ஊருக்குக் கிளம்பி விட்டாளா?....

''ஆச்சி! உண்மையாகவா பொன்னி அக்கா நேத்து சாயங்காலம் ஊருக்குப் புறப்பட்டு போயிடுச்சு!''

''வீட்டுக்குள்ளார ஒளிச்சு வச்சுகிட்டா சொல்றேன். உன்னாட்டம் பொங்கலுக்கு எடுத்த புது சேலையைக் கட்டிமினுக்கிட்டு கிளம்பிட்டா...! வேட்டை நாயைப்போல வீட்டைப் பார்த்துக்க நான் இருக்கேன்னு துணிச்சல்!'' கிழவி வெறுப்பாகப் பேசினாள்.

தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை காத்தாயி வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''பிறகு வந்து பேசிக்கிறேன் ஆச்சி... அவரு காத்துகிட்டு இருக்கார்!'' என்று கூறிவிட்டு வீட்டை நோக்கி வேகமாக நடந்தாள். முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு... சுமந்து வந்த பொருள்களை ஒரு அலுமினிய பாத்திரத்தில் வைத்து மூடிவிட்டு.. வேகமாக புதுப்புடவையைக் களைந்து வழக்கமாக வேலைக்குத் தான் உடுத்திப்போகும் சேலையைக் கட்டிக் கொண்டாள்.

வாயிற்பக்கம் வந்து கணவனைக் கூப்பிட்டாள்.

''இந்தாரும் - மூட்டை முடிச்சுகளை எடுத்து உள்ளே வையும். நான் இன்னிக்கு ஊருக்கு கிளம்பலை - நான் வேலைக்குப் போகப் போறேன்!''

தங்கப்பன் வியப்பும் கோபமுமாக மனைவியைப் பார்த்தான்.

''என்ன புள்ளே! உனக்குப் பயித்தியம் பிடிச்சிருக்கா..? நேத்திக்குக் கடைத் தெருவுக்கு ஓடியாந்து என்னைக் கடையிலிருந்து கூப்பிட்டு இந்த பயணத்துக்காக உசுப்பி விட்டே - இப்போ வேறே கதையா பேசறியே!''

''சமையல் ஆள் கோவிச்சுகிட்டு வேலையிலிருந்து போயிட்டார். தோட்டக்கார சுந்தரம் பெண்ஜாதியோட நேத்து காலையிலே புறப்பட்டுப் போயிட்டார் - பொன்னியும் அவள் புருஷனும் திருச்சிக்கு நேத்து சாயங்காலம் போயிட்டாங்க. இந்த சமயம் சின்னம்மாளுக்கு நான் கை கொடுக்காட்டா....

அய்யா வந்தா என்னைப் பத்தி நன்றிகெட்ட நாய்னுதான் நினைப்பார். நீங்களே யோசிச்சுப் பாருங்க!'' என்றாள் பரபரத்த குரலில்.

தங்கப்பன் யோசிக்கத் தேவையில்லை... தாடை மீது கையை வைத்ததும் முகவாயில் வரம்பு போல எழும்பியிருந்த அந்தத் தழும்பு பளிச்சென்று நடந்ததை நினைவுறுத்தியது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் மாலை சிவன் கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்பும் போது விளையாட்டு மைதானத்திலே கட்டுத்தரியைப் பிய்த்துக் கொண்டு நாலுகால் பாய்ச்சலில் ஓடிய காளை... அவனைத் துரத்த... தங்கப்பன் தலைதெறிக்க ஓட... முடிவில் அது வெறிகொண்டு அவனை முட்டித் தள்ள அலறிக் கொண்டு அருகில் இருந்த கருங்கல் துண்டின்மீது குப்புற விழ... ஒரே கூட்டமும் கூச்சலும் குழப்பமுமாக... அவனை எல்லோரும் சூழ்ந்து கொள்ள நினைவிழந்து போனான்.

முகமெல்லாம் ரத்தம் வழிய... கணவனை நான்கு பேர் தூக்கிக்கொண்டு வருவதைக் கண்டு காத்தாயி அலறியது தெருக்கோடி வரை கேட்க ஊரே அவள் வீட்டுமுன் திரண்டு விட்டது. அருகிலிருந்த டவுன் தனியார் மருத்துவமனையில் உடனடியாக சேர்த்து வைத்தியம் செய்யாவிடில் கணவர் உயிருக்கு ஆபத்து என்று அவள் அழுதபோது இடித்து வைத்த புளிபோல மரகதம் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஆனால் காரிலிருந்து இறங்கி வந்த மகன் பார்த்தீபனுக்கு ரொம்பவே இரக்கமான மனம். தன் காரிலேயே தங்கப்பனை ஏற்றிச்சென்று பக்கத்து டவுன் மருத்துவமனையில் அனுமதித்து வைத்ய செலவு பூராவையும் தான் கொடுத்து உதவியதை சட்டென்று மறந்துவிட முடியுமா?

அப்படிப்பட்ட நல்ல மனிதன் ஊரில் இல்லாதபோது அவரது மனைவியைத் தனியே தவிக்கவிட்டு அவள் வெளியூருக்குப் பயணப்படுவது நியாயமா?

''தெய்வக் கடன் நூறாண்டுன்னு பெரியவங்க சொல்வாங்க. ஆத்தா இப்போ நம்மைக் கூப்பிடலை

போலிருக்கு... வேளை வந்த பிறகு போகலாம். என்ன சொல்றீங்க...?''

''காத்தாயி, நீ உடனடியா வேலைக்குக் கிளம்பு. அங்கே சின்ன அம்மா சிரமப்படாம கைகொடுத்து உதவு. நான் பிறகு கடைக்குப் போறேன். லீவு வாங்கிகிட்டு வீட்டிலே தண்டமா உட்கார்ந்திருப்பது தப்பு பார்...!'' தங்கப்பன் சொன்னான்.

வீட்டின் கேட்டருகே வந்தவள் ஒரு கணம் திடுக்கிட்டுப் போய் நின்றாள்.

''அது என்ன? ஒரு ஆம்பிள்ளை உரக்கக் கத்துகிறாப் போல கேட்குதே? யாராக இருக்கும் - எதுக்கு அப்படிக் கத்தினார்?''

''என்ன இது? கொட்டகை மாடுகள் அத்தனையும் இப்படிக் கத்துதுகளே? வீட்டிலே ஏதாச்சும் அசம்பாவிதம் நடந்துட்டா மாடுகள் கத்தும்னு சொல்வாங்க...''

''அட பாவமே! மகன்கூட ஊரில் இல்லை. இந்த சமயமா பெரியம்மா செத்துப் போகணும்?'' காத்தாயி எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

நெஞ்சு படபடக்க... மெல்லக் கதவைத் தட்டினாள். அது திறக்கப்படுவதற்குள் அவளது மூச்சு நின்றுவிடும் போன்று அவள் ஒரு பயங்கர உணர்வில் திணறிப் போனாள்.

40

கதவைத் திறந்த தங்கவேலுவைப் பார்த்து காத்தாயி திடுக்கிட்டுப் போனாள்.

''நீங்க இங்கே எப்ப வந்தாப்பல?'' அவள் கேட்டு முடிக்குமுன் தங்கவேலு அவளது கையைப் பற்றிப் பரபரவென்று இழுத்து உள்ளே அழைத்துக் கொள்ளாத குறையாக அவளை வார்த்தைகளால் உள்ளே நெட்டித் தள்ளிக் கொண்டு சென்றார்.

''காத்தாயி! பெரிய தனக்காரர் நம்ப சிவன் கோவிலுக்கு செய்த திருப்பணியின் தர்மம் அவங்க குடும்பத்தைத் தலைகாத்து நிக்கிறதுன்னுதான் சொல்வேன். என்ன செய்வேன்னு கலங்கிட்டு நான் நிக்கிறச்சே நீயா இங்கே வந்திருக்கே... வா முதல்லே. மயக்கமாக் கிடக்கிற அம்மாவை ஒழுங்கு செய்து படுக்கையிலே தூக்கிப் போட்டு டாக்டர் ஐயாவை கூட்டிவர ஏற்பாடு பண்ணணும்!'' பதைபதைப்பாகப் பேசினார்.

''கொட்டிலில் மாடுகள் கத்துதே - அம்மா மயக்கமாயிருக்கும்போது சின்னம்மா எங்கேயாம்?...'' அவள் கேட்டதற்கு பதலளிக்க தங்கவேலுவுக்குப் பொழுது இருக்கவில்லை.

''அதெல்லாம் பெரிய கதை - முதலில் நீ உள்ளே வா'' என்று அவளை அழைத்துக் கொண்டு சென்று தனது அசிங்கத்தின் மீது குப்புற விழுந்த நிலையில் மயக்கமாகக் கிடந்த மரகதத்தைக் காட்டினார்.

காத்தாயி ஓவென்று கூச்சலிட்டபடி யஜமானியின் அறைக்குள் நுழைந்தாள்.

''இதோ பார் - இனி நாம சட்டுபுட்டுனு காரியத்தில் இறங்கணும். இப்படி கத்திகிட்டிருப்பதில் பயன் இல்லை. முதல்லே நீ அம்மாவை கவனி - உடம்பைத் துடைச்சு சுத்தப்படுத்தி வேறு புடவை கட்டி அறையை சீராக்கு. குமரேசனை அனுப்பி டாக்டரை கூட்டிவரச் சொல்றேன். வரும் வழியிலே மாடு கறக்கிற மன்னார்சாமியையும் கூட்டி வர ஏற்பாடு செய்யறேன் - அதுகள் தவிக்கிற தவிப்பை பார்க்க சகிக்கலை...!'' என்றார்.

அழுகையை அடக்கிக் கொண்டு காத்தாயி துரிதப்பட்டாள். 'நல்லவேளை ஊருக்குப் போகல - எல்லாம் அந்த ஆத்தாள் கிருபை' என்று பலமுறை தன்னுள் சொல்லிக் கொண்டாள்.

கொட்டிலில் கத்திய மாடுகளுக்கு தொட்டியில் தண்ணீர் விழ சேமிப்பு டாங்கியின் குழாயைத் திருப்பிவிட்டு...

எல்லாவற்றிற்கும் சிறிது வைக்கோலை அள்ளிப் போட்டுவிட்டு உள்ளே வந்து சுற்றிலும் நிதானமாகப் பார்த்தார் தங்கவேலு.

அவருக்கு கோபம் குமுறிக் கொண்டு வந்தது. அவசரமாக இடத்தை காலி செய்து வெளியேறி விட்டிருந்த விருந்தாளிகளுக்கு வீட்டின் கொத்து சாவியால் எந்தவித பயனும் இருக்கவில்லை. எனவே அதை முன்னறை தரைமீது விட்டெறிந்து விட்டுப் போயிருந்தனர். நல்லவேளை, கோபத்திலே தோட்டத்துக் கிணற்றில் போட்டுவிட்டுப் போயிருந்தால், அறைகளுக்கு மறு சாவி தயாரிக்கும் வேலை வேறு கூடி விட்டிருக்கும்.

வீட்டின் கீழ்பகுதியிலிருந்த எல்லா அறைகளும் திறந்து கிடந்தன. சாமான் அறையில் அவர்கள் புகுந்து பல பொருள்களைத் தேடியதினால் அரிசி டின்கள் கவிழ்ந்து கிடந்தன. பருப்பு பாத்திரம் பருப்பை சிதறவிட்டு மூலையில் உருண்டு கிடந்தது. வத்தல் - வடகம் டின்கள், புளி ஜாடி, உப்பு வைத்திருந்த கற்சட்டி ஒன்றையும் அவர்கள் விட்டு வைக்காது துழாவியிருக்கிற அறிகுறிகள் தென்பட்டன. சாமான்களைத் துழாவியிருக்கிற அறிகுறிகள் தென்பட்டன. சாமான்களைத் தவிர, அந்த அறையில் வெள்ளிப் பாத்திரங்கள் ஏதும் கிடைக்காத ஆத்திரத்தில் எல்லாவற்றையும் உருட்டிவிட்டிருந்தனர்.

தங்கவேலுக்குத் தெரிந்திருந்த ஒரு ரகசியம் அவர்களுக்குத் தெரிய சாத்தியமில்லை. சாமான் அறைக்கு மேலே இந்த பரணில் பித்தளை அண்டாக்களுக்குப் பின்னால்... பார்த்தீபன் இரும்பு பீரோவில் வைக்க முடியாத பெரிய வெள்ளி செம்புகள், பெரிய தட்டுகள், கரண்டிகள் எல்லாம் பரணில் ஒரு கள்ளிப் பெட்டியை நிறைத்துக் கொண்டிருந்தன. அத்தனை உயரத்திலிருந்த பரணுக்கு ஏணி கொண்டு ஏறித்தான் போகமுடியும் - மேலும் அங்கே கவிழ்ந்து கொண்டிருக்கும் இருளில்... அவர்களால் அவைகளைக் கண்டு கொள்ள இயலாது... அப்படிக் கண்டு கொண்டாலும் அத்தனை கனமான பொருள்களை சுலபத்தில் மூட்டை கட்டிக் கொண்டு விரைவில் வெளியேறவும் முடியாது... பல நாட்களாக கவனிக்கப்படாத

பரணில் ஒட்டடையும், குப்பையுமாக இருக்கும்.... அவர்கள் துணிந்து கால் வைத்திருந்தால்... ஒரு சமயம் தேள் கொட்டினாலும் அதிசயப்படுவதற்கில்லை...

தேள் கொட்டியிருந்தால் அவர்கள் என்ன செய்திருப்பார்கள்? திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல என்பார்களே... அத்தனை கவலைகள் நடுவில் அவர் குபீரென்று சிரித்து விட்டார்.

நோயாளியிருந்த அறைக்குப் பக்கத்தறையை எட்டிப் பார்த்தார் தங்கவேலு. மரகதம்மாளின் இரும்பு பீரோ வாயைத் திறந்து கொண்டிருந்தது. அதிலிருந்த புடவைகள், மற்ற பொருட்கள் எல்லாம் அறை முழுவதும் வாரி எறியப்பட்டிருந்தன.

ஒரு பக்காத் திருடன் கூட இப்படி வீட்டை அலங்கோலப் படுத்திவிட்டுப் போயிருக்க மாட்டான். அந்த இரண்டு அரக்கிகளும் வீட்டை துவம்சம் செய்து விட்டிருந்தது மகா அக்கிரமமான செயல். அதை விட பயங்கர காரியம், அவர்கள் வேண்டுமென்றே மரகதத்தை தாகத்திலும் - தனிமையிலும் தவித்து சாகவிட்டுப் போயிருந்தது. அவர் மட்டும் அந்த நேரம் வராதிருந்தால் - சிங்காரம் வந்து செய்தியைச் சொல்லியிராதிருந்தால் - அவர் உடல் முழுவதும் பயத்தால் நடுங்க - உள்ளம் கோபத்தால் கனலாக எரிய குமரேசனை அனுப்பிவிட்டு அடுக்களையை சீராக்க விரைந்தார்.

காத்தாயி அறைக்குள் நுழையுமுன்பே... துர்நாற்றம் அவளது வயிற்றைக் குமட்டியது.

தோட்டத்தைச் சுற்றிப் பார்வையிடும்போது தான் கட்டியிருக்கும் வெள்ளைப் புடவையின் நுனி மண்மீது பட்டு சிறிது அழுக்காகி விட்டாலும் மரகதம்மாள் பொறுக்க மாட்டாள். உள்ளே வந்து உடனடியாக ஆடையை மாற்றிக் கொண்டு விடுவாள். மாடு கறக்க வரும் மன்னார்சாமி கைகளை சோப்புப் போட்டுக் கழுவி சுத்தப்படுத்திக் கொண்டுதான் பால் கரக்க ஆரம்பிக்க வேண்டுமென்று கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தாள். தங்கவேலு சுத்தமான வேட்டி,

சட்டையுடன்தான் வந்து உணவு பரிமாற வேண்டும் என்ற கட்டளை - வீடும்-தானும்-சூழ்நிலையும் படுசுத்தமாக இருக்க வேண்டுமென்று விரும்பி வாழ்ந்தவள்... இன்று தனது அசுத்தங்கள் மீது விழுந்து கிடக்கிறாளே?... காத்தாயியின் மனம் வேதனைப்பட்டது. ஆள்படைகள் - மகன் - மருமகள் -வசதிகள் எனப் பல இருந்தும் அனாதையாக சாகவிருந்தாளே என்று நினைத்து அதிர்ந்து போனாள்.

பருத்த அந்த உடலை மெல்ல சிரமப்பட்டு திருப்பிப் போட்டபோது அவளுக்கு இன்னொரு அதிர்ச்சி. மரகதம்மாள் மயக்கமாகி குப்புற விழுந்தபோது அங்கு கீழே விழுந்து கிடந்த கூஜா மூடியின் ஓரம் முகத்தில் பட்டு நெற்றியருகே ஒரு சிறு காயத்தை உண்டுபண்ணி விட்டிருந்தது. அதிலிருந்து பெருகிய ரத்தம் மூக்கு கண்கள் மீது பரவி... உறைந்து போயிருந்தது.

''அடிப்பாவி மகளே! உனக்கு ஏன் இந்த கதி?'' தனக்குள்ளே புலம்பிய காத்தாயியின் தொண்டையை அழுகை அடைத்தது. கண்களில் நீர் பூண்டது. மிகவும் வேகமாக செயல்படத் தொடங்கினாள்.

நோயாளி மாமியாரின் உடம்பைத் துடைத்துவிட சாம்பவி குளியலறை அலமாரியிலிருந்து ஒரு மருத்தை தண்ணீரில் சிறிது கலந்து கொள்வதை அவள் கவனித்திருக்கிறாள் - மேசை மீதிருந்த பேசனை எடுத்துக் கொண்டு அடுப்பங்கரைக்கு விரைந்தாள். காப்பி தயாரிக்க தண்ணீரைப் பொங்க விட்டுக் கொண்டிருந்த தங்கவேலுவிடமிருந்து கொஞ்சம் சுடுதண்ணீர் வாங்கிக் கொண்டு அத்துடன் பச்சைத் தண்ணீர் வாங்கிக் கொண்டு அத்துடன் பச்சைத் தண்ணீரைக் கலந்து மருந்துத் துளியை விட்டு... வெள்ளைத் துண்டினால் நனைத்துப் பிழிந்து முதலில் மரகதத்தின் முகத்தைத் துடைத்தாள் - அவளைச் சுற்றியிருந்த அசிங்கத்தை அப்புறப்படுத்திவிட்டு - மெல்ல உடல் முழுவதையும் துடைத்து அலமாரியிலிருந்த அவளது மாற்றுப் புடவையை சிரமப்பட்டு உடலில் சுற்றினாள். கட்டிலின் மீது புது விரிப்பைப் பரத்திவிட்டு அவள் மறுபடியும் தங்கவேலுவிடம் ஓடி வந்தாள்.

''ஆபத்துக்குப் பாவம் இல்லை ஐயா. என்னாலே தனியா அவங்களைத் தூக்கிக் கட்டில் மேலே போட முடியாது. வந்து ஒருகை கொடுங்கோ...!'' குழைவாகக் கேட்டுக் கொண்டாள். அடுக்களையை சீராக்கிவிட்டு, நோயாளிக்குக் கஞ்சி தயாரிப்பதில் முனைந்திருந்தார் தங்கவேலு. தோளில் கிடந்த துவாலையை இடுப்பில் கட்டிக் கொண்டு விரைந்து மரகதம்மாளின் அறைக்குள் வந்தார்.

சாதாரண நாட்களில் பத்தடி தூரம் நின்று எஜமானியின் முகத்தைக்கூட நிமிர்ந்து பார்க்காது பதிலளிக்கும் அவர்... அந்தம்மாளைத் தொட்டுத் தூக்குவதென்றால்? அவருக்கு மிகவும் கூச்சமாகவும் வேதனையாகவுமிருந்தது. ஆனால் ஆபத்து சமயத்தில் அதையெல்லாம் பார்க்க முடியுமா...?

ஒரு வழியாக மரகதம்மாளைக் கட்டிலில் கிடத்திவிட்டு அடுத்ததாக தான் என்ன செய்ய வேண்டுமென்று சிந்திக்கு முன் வாயிற்கதவு பலமாக தட்டப்பட்டது. விரைந்து சென்று காத்தாயி கதவைத் திறந்தாள்.

டாக்டர் வைத்தியலிங்கம் மருந்து பையுடன் வெளியே நின்று கொண்டிருந்தார். அவருக்கு பின் சாம்பவியின் பெரியம்மா அலமேலு நின்று கொண்டிருந்தாள். அதற்குப் பின் அலங்கோலமாகி விட்டிருந்த அந்த வீடு படிப்படியாக சீராகத் தொடங்கியது.

புழக்கடைக் கதவைத்தட்டி உள்ளே வந்த மன்னார்சாமி வழக்கம் போல தமது கைகளைக் கழுவிக் கொண்டு தங்கவேலுவும், குமரேசனும் எடுத்துக் கொடுத்த பால் செம்புகளுடன் கொட்டிலுக்குப் போனான். அவனைக் கண்டதுமே அதுவரை அலறிக் கொண்டிருந்த அத்தனை மாடுகளும் அடங்கிப் போயின. அவிழ்ந்துவிட்ட கன்றுக் குட்டிகள் உற்சாகத்தில் நாற்கால் பாய்ச்சலில் தாய்ப் பசுவை நோக்கி ஓடின. குமரேசன் உதவியுடன் அவன் பால் கறக்கத் தொடங்கினான்.

மரகதம்மாள் அந்த அறையில் கிடந்த நிலையை காத்தாயி விவரிக்க... டாக்டர் வைத்தியலிங்கம் நோயாளியை

விரைவாகப் பரிசோதித்து ஓரளவு ஆறுதலடைந்தார். மரகதம்மாள் மயங்கிக் கீழே விழுந்ததும்... நெற்றிமீது பட்ட சிறு கயத்தைத் தவிர - உடல் எலும்புகள் ஏதும் முறியவில்லை என்பதைக் காண அவருக்கு நிம்மதியாக இருந்தது. காயத்திற்கு மருந்து போட்டுக் கட்டிவிட்டு... தன் கையோடு கொண்டு வந்த குளுகோஸ் திரவத்தை... பிளாஸ்டிக் குழாய் மூலம் துளி துளியாக ஏறும்படி கைமடக்கில் ஊசியைப் பொருத்தி கட்டிலின் கொசுவலை ஸ்டாண்டில்... பாட்டிலைத் தொங்கவிட்டார். மரகதம்மாளைக் கண்டு மிகவும் அதிர்ந்து போய் நின்ற அலமேலுவை அவர் நிமிர்ந்து பார்த்தார்.

"வீட்டுக்கு விருந்தாளியாக வந்த பகவதி அம்மாளுக்கு மரகதத்தின் மேல் இத்தனை வஞ்சமா! தன் மகளை இந்த வீட்டு மருமகளாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்கு இப்படியா பழிவாங்குவாங்க?..." என்றார் வியப்பு மேலோங்கிய குரலில்.

"சமயத்துக்கு நீங்க வந்து உதவி செய்கிறீங்க - இல்லாட்டா நிலைமை மோசமாயிருக்கும் டாக்டர். உண்மையைச் சொல்லுங்க... இவங்க, இந்த பூட்டுக்கு பிழைச்சுக் கொள்வாங்களா...?" மிகவும் தயக்கமாக அச்சத்துடன் அலமேலு கேட்டாள்.

"இவங்களுக்கு வச்சிர சரீரம். ரொம்ப திடமானது கவலைப்படாதீங்க. இன்னும் கொஞ்ச நேரத்திலே என்ன நடக்கிறதுன்னு பாருங்க!" வேடிக்கையாகக் கூறிவிட்டு டாக்டர் தமது மருந்துப் பையை மூடிக் கொண்டு... அறையை விட்டு வெளியேறத் தயாரானபோது கட்டிலிலிருந்த நோயாளியிடமிருந்து முனகல் சத்தம் கேட்டது.

இருவரும் அருகில் சென்று மரகதம்மாளின் முகத்தை ஆவலுடன் பார்த்தனர்... சவக்களையுடன்... வெளிறடைந்து கிடந்த அந்த முகத்திலே தெளிவு பிறக்க ஆரம்பித்திருந்தது. சொட்டு சொட்டாக குளுகோஸ் திரவம் இரத்தத்தில் கலந்து தெம்பூட்டவே... மரகதம்மாளின் மயக்கம் சிறிது பொழுதில் கலைந்து... அவள் மெல்லக் கண்களைத் திறந்து பரக்க விழித்தாள்.

ஆமாம் அவள் இப்போது எங்கே இருக்கிறாள்? அருகில் நின்று கொண்டிருக்கிற அவர்கள் யார்? தன்னையே கேட்டுக் கொண்டு நிதானமாக அவள் கண்களை அறை முழுவதும் சுழலவிட்டாள்.

தனது அறையில் தன் கட்டிலின்மீது தான் படுத்திருப்பதை முதலில் உணர்ந்து கொண்டாள். அருகில் நின்ற அலமேலு அம்மாளைப் பிரமிப்புடன் பார்த்தாள். நீர்வீழ்ச்சி போன்று நடந்த அத்தனையும் அவளது நினைவுக்கு வந்துவிடவே... அவள் கண்களில் நீர் பெருகியது... வலுவான தனது கரத்தை மெல்ல நீட்டி அலமேலுவின் கையைப் பற்றிக் கொண்டாள் -தொண்டையை என்னவோ அடைத்தது. கொஞ்ச நேரம்தான் வார்த்தைகள் குழறின. தீவிர முயற்சியால் அவளால் தெளிவாகப் பேச முடிந்தது.

"அலமேலு அம்மா! என்னை மன்னிச்சுடுங்கோ. நான் சாம்பவிக்குப் பெரிய துரோகம் செய்துட்டேன் - அதன் பலனை இப்போ அனுபவிச்சு கிட்டிருக்கேன்!" பேச முடியாது விம்மினாள்.

அவளது கன்னத்தில் வழிந்த கண்ணீரை மெல்லத் துடைத்து விட்டாள் அலமேலு.

"இப்போ நீங்க உணர்ச்சி வசப்படக் கூடாது. உடம்பு கொஞ்சம் குணமாகட்டும் - பிறகு பேசிக்கலாம்..." அவள் சமாதானப்படுத்தியும் மரகதம் சட்டென்று அடங்கவில்லை.

"அந்தப் பாவிகள் என் மருமகளை எப்படியெல்லாம் வதை செய்தாங்க தெரியுமா? அவங்களோடு சேர்ந்துகிட்டு நானும் அந்த குழந்தையை ரொம்பக் கொடுமைப் படுத்திட்டேன். என் மருமகளை விரட்டி என்னைத் தனியே சாகவிட்டுட்டு போயிட்டாங்களே பாவிகள்..." விசும்பி அழுதாள்.

"அப்படி செய்யமுடியாதபடி சமயத்துக்கு நாங்கவந்து தடுத்துட்டமே - இப்போ ஏன் அழுகிறீங்க... நீங்க பேசாம கண்களை மூடிட்டு தூங்க முயல வேணும்." அன்போடு அதட்டினார் வைத்தியலிங்கம்.

''தூக்கமா... இனி நான் தூங்கமாட்டேன். என் உயிர் இந்த உடலிலிருந்து பிரியறதுக்கு முந்தி என் கண்மணி சாம்பவியைப் பார்த்து... மன்னிச்சுடு அம்மான்னு அவ கையை பிடிச்சுகிட்டு ஒரு பாட்டம் அழுதாதான் என் மனது வேகும்... இல்லாட்டா...'' விம்மினாள்.

''டாக்டர்! என் மகன் பம்பாயிலிருந்து ஒரு கடிதம் கூடப் போடலை. அவனை உடனே வரச் செய்யணும் - எனக்கு அவன் முகவரி தெரியாதே - அவனுக்குத் தந்தி கொடுத்து வரவழைங்க. உடனே போய் என் மருமகளை கூட்டிவரச் செய்யணும்... அவள் இல்லாத இந்த வீடு எத்தனை அலங்கோலமா இருக்கு பார்த்தீங்களா... என் குடும்பத்துக்கு லட்சுமியை கூட்டிவர உதவுவீங்களா... டாக்டர்... அம்மா அலமேலு!'' என்று அவள் தொடர்ந்து இரைந்து பேசி அழுவதைக் கண்ட வைத்தியர்... தமது பெட்டியைத் திறந்து ஊசிக் குழாயில் ஒரு மருந்தை இழுத்தார்.

''இவங்களை இப்படியே விட்டால் சமாளிக்க முடியாது... அதனால் இவங்களை...!'' என்றபடி - அந்த மருந்தை அவளது தோள்பட்டையில் ஊசி மூலம் செலுத்தினார்.

கொஞ்ச நேரம் அரற்றிக் கொண்டிருந்த மரகதம், சிறிது பொழுதில் சிறு குழந்தை போல மெல்ல அடங்கிப் போய் நிதானமாக மூச்சுவிட்டுக் கொண்டு உறங்கிப் போனாள்.

''காத்தாயி, இவங்களை கொஞ்ச நேரம் கவனிச்சுக்கட்டும். நாம போய்.. தங்கவேலு தயாரித்திருக்கும் காப்பியை சாப்பிட்டுக் கொண்டு மேலே என்ன செய்வது என்று சிந்திப்போம்'' என்று கூறியபடி அலமேலுவுடன் சாப்பாட்டறையை நோக்கி நடந்தார் வைத்தியலிங்கம்.

41

பார்த்தீபனுக்கு பம்பாயில் கவனிக்க வேண்டிய பல காரியங்கள் இருந்தன. ஆனால் வீட்டு நினைவு அவன் மனதை அலைக்கழிக்கத் தொடங்கிவிட்டது.

பகல் முழுவதும் வியாபார நிமித்தம் பல இடங்களில் பலரை சந்தித்துப் பேசி, வந்த காரியத்தை முடிக்கும் தீவிரத்தில் அவன் வீட்டைப் பற்றி மறந்திருக்க முடிந்தது. ஆனால் இரவுக்குப் பின் ஓட்டலில் தன் அறையில் வந்து படுத்துக் கொள்ளும் போதெல்லாம் நோயாளியான தன் தாயையும் - தன் அன்பு மனைவியையும் எண்ணி உறக்கமின்றித் தவித்துக் கொண்டிருந்தான்.

ஒவ்வொரு நாள் மாலையும் வேலைகளை முடித்துக் கொண்டு ஓட்டலுக்குள் நுழைந்து ரிஸப்ஷனில் தன் அறையின் சாவியை வாங்கிக் கொள்ள மேஜைக்கு முன் நின்ற அந்த சில வினாடிகள் அவனது நெஞ்சு எதிர்பார்ப்பில் வேகமாகத் துடித்தது. ஆனால் தினமும் ஏமாற்றந்தான் அவனுக்குக் கிட்டியது.

இன்று வரும் - நாளைக்கு வரக்கூடும் என்று அவன் எதிர்பார்த்த கடிதம் ஏதும் வரவேயில்லை.

இரண்டு கடிதங்கள் அவன் தன் மனைவிக்கு எழுதி விட்டிருந்தான். ஒன்றுக்கும் அவளிடமிருந்து பதில் இல்லை. சாம்பவி ஏன் மவுனமாக இருக்கிறாள்?

டாக்டர் வைத்தியலிங்கத்திற்கும் அவன் ஒரு கடிதம் போட்டிருந்தான். வேலை மும்முரத்தில் அவருக்கு பதில் போட நேரம் இருக்கவில்லை... போகட்டும். சாம்பவி ஏன் பதில் எழுதவில்லை... நெஞ்சை அந்தக் கவலை நெரிஞ்சி முள்ளாகத் தைத்தது.

மாமியாருக்கு பயந்து எழுதத் தயங்கிக் கொண்டிருக்கிறாளா? அல்லது அவன் தாயாரின் உடல்நிலை

மோசமாகி விட்டதைப் பற்றித் தெரிவிக்க அச்சமா?

இருக்காது, அப்படி ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்திருந்தால் குடும்ப வைத்தியரும், நண்பருமான வைத்தியலிங்கம் அவனுக்கு ஒரு தந்தி அடித்திருப்பாரே?

தொலைபேசி வசதி இல்லாத கிராமம். அந்த வசதி மட்டும் அவன் வீட்டிலிருந்து விட்டிருந்தால் அவன் தினசரி இரு முறை சாம்பவியைக் கூப்பிட்டுப் பேசியிருப்பானே?

வியாபாரம் என்று அதையே கவனித்துக் கொண்டு அவன் வீட்டைப் புறக்கணிக்க முடியாது... அம்மாவின் உடல் நிலை பூரணமாக குணமடைந்த பின்பு இன்னொரு நடை அவன் பம்பாய்க்கு வரமுடியும். இனியும் தாமதிக்கக் கூடாது... பரபரப்பான சிந்தனையில் அவன் ஊருக்குத் திரும்ப உடனடியாக ஏற்பாடுகள் செய்யத் துவங்கினான்.

புறப்பட்டுப் போனது போலவே சென்னைவரை விமானப் பயணத்தை மேற்கொண்டு - ரயிலில் திருச்சிக்கு வந்து அங்கு முக்கியமாக சந்திக்க வேண்டிய ஒரு வியாபாரியை மட்டும் கண்டு கலந்து ஆலோசித்து விட்டு... பகல் பொழுது உச்சியை அடையுமுன் டாக்ஸியில் ஊர் திரும்பி விடுவது என்ற பயணத் திட்டம்.

சாம்பவி பதில் போடாது மவுனமாக இருந்ததற்குப் பல காரணங்கள் இருக்கலாம். நேரிடையாக விசாரிப்பு செய்து கொள்ள முடியும். ஆனால் இத்தனை நாள் பிரிவுக்குப்பின் அவன் வெறுங்கையுடன் ஊருக்குத் திரும்ப முடியாதே? அவளுக்கு என்ன வாங்குவது?... மிகக் குழப்பத்துடன் நண்பன் ஒருவனுடன் அன்று காலை காந்தி மார்க்கெட்டிற்குள் நுழைந்தான். அங்கு ஒரு கடையில் சாம்பவி அணிந்துகொள்ள இரண்டு வங்காளப் பட்டுச்சேலைகளைப் பார்த்து வாங்கிக் கொண்டான். கூடவந்த நண்பன் தன் மனைவிக்குப் புடவையுடன் உடுத்த பாவாடைகள் வாங்குவதை கவனித்து அவனும் சாம்பவிக்கு உத்தேசமான அளவில் பல வண்ணங்களில் பாவாடைகள் வாங்கிக் கொண்டான். பின்னர் ஓட்டலுக்குத் திரும்புமுன் ஒரு நகைக் கடைக்குள் நுழைந்தான்.

சாம்பவிக்கு முத்து ஆபரணங்கள் ரொம்பப் பிடிக்கும் என்று கடிதமொன்றில் எழுதியிருந்ததைப் படித்த நினைவு வரவே... அழகானதொரு முத்துச்சரம் ஒன்றை வாங்கிக் கொண்டான். தாயாருக்குப் பரிசாக ஒரு பிஸ்கட் டின்னையும் வாங்கிக் கொண்டு... எல்லாவற்றையும் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினான்.

பால் செம்பை எடுத்துக்கொண்டு வழக்கம்போல அவள் அவனது அறைக்குள் வரும்போது... அவன் கட்டாயம் கேட்கப் போகிறான்.

''கல்யாணத்திற்கு முன்பு நாள் தவறாது - பல பக்கங்கள் கொண்ட கனமான கடிதங்கள் எழுதமுடிந்த உனக்கு... ஒரு நாலு வரி பதில் போட முடியாமற் போனதின் உண்மைக் காரணம் - எனக்குத் தெரிந்தாக வேண்டும்...'' அவன் அதட்டிக் கேட்கத் தேவையில்லை.

சாதாரணமாகக் கேட்டால்கூட சாம்பவி முகம் வெளுத்துப் போய்விடுவாள்.

சுபாவத்தில் அவள் மிகவும் பயந்தவள். அவள் மட்டும் அப்படிப்பட்டதொரு அடக்கமான, அருமையான குணம் உடையவளாக இல்லாதிருந்தால்...

அவள் இடத்தில் அதே படிப்பும் பட்டண வாசத்தின் துணிவும்... எதிர்த்து பதிலளிக்கும் குணமுமுடைய வேறு ஒரு பெண் இருந்திருந்தால் ஆரம்பத்தில் அவன் கடுமையாக நடந்து கொண்டதற்கும் - நோயாளியான மாமியார் வாரி வீசும் சுடு சொற்களுக்கும் - காலையிலிருந்து இரவு வரை ஓயாது உழைத்துக் கொண்டு ஒரு உயர்மட்டத்து வேலைக்காரியாக உழலும் நிலைக்கும் மனம் வெதும்பி இந்நேரம் விவாகரத்து கோரியிருப்பாள்.

சாம்பவியை அவன் மனைவியாக அடைந்ததற்குக் கட்டாயம் அவன் கொடுத்து வைத்திருக்கிறான்.

ஊருக்குத் திரும்பியதும் அவன் வியாபாரத்தை கவனிக்கும் அதே தீவிரத்துடன் வீட்டையும் கவனிக்க வேண்டும்.

நோயின்றி குணமாகி வரும் தாயின் மனமும் இப்போது ஓரளவு மாறுதலடைந்து விட்டிருக்கும். அவர்களது உடல் நலம் கெட்டுவிட்டதற்கு சாம்பவியின் யோகம் காரணமல்ல என்று புரியும்படி எடுத்துச் சொல்ல வேண்டும்.

குடும்ப வைத்தியர் டாக்டர் வைத்தியலிங்கம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே அம்மாவை எச்சரித்துவிட்டிருந்தார். உடல் எடையைக் குறைத்துக் கொண்டு பத்தியமாக சாப்பிட வேண்டும் என்று வற்புறுத்தியிருந்தார்.

தங்கவேலுவை விதவிதமாக சமைக்கச் சொல்லி, அளவுக்கு மீறி அம்மா அவைகளை ரசித்து சாப்பிடும் வழக்கம் கொண்டவர்கள். மகன் தடுத்தால் மகா கோபம் வந்து விடும்.

''அள்ளித் தின்ன என் கணவர் ஏராளம் வச்சுட்டு போயிருக்கார். அதைக்கூட நீ ஏன் தடுக்கணும். நீ சம்பாதித்துப் போட்டு நான் சாப்பிடலையே?'' என்று கடிந்து கொள்வார்கள்.

''அள்ளித் தின்பதற்கும் ஒரு அளவு உண்டு - ஒரு வயதைத் தாண்டியவர்கள் இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் கொஞ்சம் அளவோடு சாப்பிடுவது நலம்'' என்று ஒரு முறை சொல்லப்போக... அம்மாவுக்கும் அவனுக்கும் இடையே பெருத்த மனஸ்தாபம் ஏற்பட்டுவிட்டது.

நோயின் கொடுமையை அனுபவித்த அம்மா இப்போது குணத்தில் திருந்தியிருப்பார்கள் என்ற நம்பிக்கையில் அவன் கண்டிப்பாகப் பேச வேண்டும்.

அந்த விருந்தாளிகள் இந்நேரம் ஊருக்குத் திரும்பியிருப்பார்கள். அவர்களால் அதிக வேலை செய்து உழன்ற சாம்பவிக்குக் கொஞ்சம் ஓய்வு கிடைத்திருக்கும்....

''சாம்பவி - கவலைப்படாதே - எனக்குக் காரணம் புரிகிறது. உன்னையே கவனித்துக் கொள்ள முடியாதபடி என் தாயாருக்குப் பணிவிடை செய்துகொண்டு தவிக்கும் உனக்கு கடிதம் எழுதப் பொழுதில்லை... பரவாயில்லை... நான் உனக்கு பம்பாயிலிருந்து என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன் தெரியுமா?'' என்று கேட்டபடி அவள் முன் பெட்டியைத் திறந்து வாங்கி வந்தவைகளைப் படுக்கைமீது

எடுத்துப் பரப்பினால்...

கண்கள் பளபளக்க - வியப்புடன் அவனை அவள் பார்ப்பாள். அட்டைப் பெட்டிக்குள் அடங்கியிருக்கும் முத்துமாலையை எடுத்து அவள் கழுத்தில் பூட்டினால்...

''என்னத்துக்கு இதெல்லாம்.. நீங்க சவுக்கியமா சீக்கிரமாக ஊர் திரும்பினதே போதுமே!'' கொஞ்சிக் குழைவாள். உணர்ச்சி வசத்தில் அவளது கண் இமைகளிலிருந்து கண்ணீர் துளிகள் இன்னொரு முத்துமாலையைப் போல அவளது நெஞ்சின்மீது விழுந்து கோலமிடும்.

''இதற்குத்தான் ஒரு சீனக் கவிஞன் சொன்னான் -பெண்களின் கண்ணீர் மவுனப் பிரசங்கி என்று... நீ சொல்ல வந்ததையெல்லாம் இந்தக் கண்ணீர் துளிகள் சொல்லிவிட்டன' என்று சிரித்தபடி அவளை அருகே இழுத்து...

அழைப்பு மணி ஒலித்ததைக் கேட்டு சிந்தனை கலைந்து விழித்துக் கொண்டான்.

''இரவுக்குள் அறையைக் காலி செய்துடப் போறீங்க இல்லையா?''

ஓட்டல் பையன் கேட்டதும் பரபரத்துப் போனான். ஆமாம் அவன் விரைவாக எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து கொண்டு கிளம்ப வேண்டுமே?

சென்னையில் விமானித்தினின்று இறங்கியதும் - இரவு ரெயில் வண்டியில் பயணப்படுவதற்கு முன்னர் அவனுக்குக் கொஞ்சம் அவகாசம் இருந்தது. டாக்சி ஒன்றில் விரைந்து... மாமனார் வீட்டை அடைந்து அவர்களின் நலனை விசாரித்து வர விரும்பினான்.

தனியாகவா முதல் முதலாக மாமனார் வீட்டுக்குப் போவது? ஊருக்குத் திரும்பியதும் அம்மாவின் உடல் நலன் ஓரளவுக்குத் திருப்தியாக இருந்தால் அவர்களை கவனித்துக் கொள்ள அந்த நர்ஸ் கமலாவை அமர்த்திவிட்டு சாம்பவியுடன் திருச்சியிலிருந்து விமானம் மூலம் சென்னைக்கு சென்று பரிசுப் பொருட்களுடன் போய்க் காணவேண்டும்... அதுதான் முறை

அவளுக்கும் தன் பெற்றோர்களைப் பார்க்க ஆசையாக இருக்குமே.

வீட்டோடு கட்டுண்டு கிடக்கும் அவளை இனி வெளியே அங்குமிங்கும் தான் போகும்போது கூட்டிக்கொண்டு செல்ல வேண்டும். முதலில் கோவிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை செய்துவிட்டுப் பின்னர் அவளை அடுத்த டவுனிலிருக்கும் தன் கடைக்கு அழைத்துச் சென்று... எல்லாவற்றையும் காட்டவேண்டும். அவர்களது வியாபாரத்தைப் பற்றி அவள் தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியமாயிற்றே? குடும்ப வக்கீலைக் கலந்து ஆலோசித்து அவளையும் வியாபாரத்தில் ஒரு பங்குதாரராக ஏற்க முயலவேண்டும். கடைத் தெருவிலிருந்து திரும்பும்போது... அவளுக்குப் பிடித்த வாசமல்லிகை சரத்தை வாங்கி - வருங்காலத்தைப் பற்றி இனிக்க இனிக்கப் பேச வேண்டும்.

அவளை அவன் உயிருக்கு மேலாகக் காதலிக்கிறான். கல்யாணத்திற்குமுன் கடிதங்களில் எழுதிய அத்தனையும் உண்மை - அவளை மயக்கி தன் மனைவியாக்கிக் கொள்ள எடுத்துக் கொண்ட சூழ்ச்சியல்ல என்பதை அவள் புரிந்து கொள்ளும் வகையில் அவன் இனி ஒரு அன்பான - இனிய கடமை மிக்க கணவனாக இருக்கப் போகிறான்.

இரவு முழுவதும் ரெயிலில் உறங்காது... சாம்பவியைப் பற்றிய சிந்தனையில் கழித்தான். காலை திருச்சியை அடைந்ததும் - வண்டியைவிட்டு இறங்கி அருகிலிருந்த ஓட்டலில் பல் துலக்கி - முகம் கழுவி காப்பி பலகாரத்தை முடித்துக் கொண்டு... தான் முக்கியமாக சந்தித்துப் பேச வேண்டிய வியாபாரிக்காக மணி பத்து வரை காத்திருந்தான். விரைவாக வியாபார காரியத்தை கவனித்துக் கொண்டு ஒரு டாக்சியில் ஊருக்கு விரைந்தான்.

வண்டி வேகமாகத்தான் ஓடியது. ஆனாலும் அவனுக்கு அது ஊர்வது போன்றதொரு பிரமிப்பு.

டாக்சி நின்ற சத்தம் கேட்டு ஏன் யாரும் வெளியே வந்து எட்டிப் பார்க்கவில்லை?

மிகவும் வியப்புடன் டாக்சியை அனுப்பிவிட்டு கேட்டைத் திறந்துகொண்டு தனது பெட்டிகளைத் தானே சுமந்து கொண்டு வராந்தாவில் வைத்தான்.

சாம்பவி சமையலறையில் வேலையாக இருப்பாள். இல்லாவிட்டால் கேட்டைத் திறக்கும் சத்தம் கேட்டதுமே ஓடிவந்து விடுவாளே? எண்ணியபடி அழைப்பு மணியை அழுத்தினான்.

கதவைத் திறந்த டாக்டர் வைத்தியலிங்கத்தைக் கண்டு அதிர்ந்து போனான். கவலை படிந்திருந்த அவரது முகம்... அவனது மனதில் பயத்தையும் பலவிதக் கலவரத்தையும் எழுப்பியது.

அம்மாவின் உடல்நிலை அதிகமாகிவிட்டதா? எண்ணுவதற்குள் பின்னால் வந்து நின்ற அல்மேலு அம்மாளைக் கண்டு பதறிப் போய் விட்டான்.

அவர்கள் - அங்கே வந்திருப்பதின் காரணம்? அம்மா இறந்துவிட்டார்களா? ...ஐயோ! அவன் ஊரிலில்லாதபோது இப்படியா ஒரு பயங்கரம் நிகழவேணும்?... உடல் முழுவதும் உணர்ச்சிவசத்தில் ஆட... ''டாக்டர் என்ன சங்கதி?...'' என்றான் பதட்டமாக...

''உள்ளே வாங்கோ... நிறைய பேசணும்'' என்றார் வைத்தியலிங்கம்.

படபடவென்று மார்பு துடிக்க... நெற்றி முழுவதும் வியர்வைத் துளிகள் பொடிக்க, அடிவயிற்றினின்று புரண்டெழுந்த கலவரம் நெஞ்சை அழுத்த... தன் வீட்டிற்குள் தயக்கமாக நுழைந்தான்.

கடவுளே! என் தாயாருக்கோ... சாம்பவிக்கோ எந்தவிதமான தீங்கும் நேர்ந்திருக்கக் கூடாது... இருவரையும் நான் ரொம்ப நேசிக்கிறேன்... உள்ளம் பிரார்த்தனையில் உருகியது. கண்கள் கலங்கிப் போயின.

42

ஆழந்த உறக்கத்திலிருந்த தன் தாயைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு அயர்ந்து போய் நின்றுவிட்டான் பார்த்தீபன். மெல்ல அவனது தோளைத் தட்டி அவனை முன்னறைக்குள் அழைத்துச் சென்று அமர்த்தினார் வைத்தியலிங்கம்.

தங்கவேலு கொண்டு வந்து வைத்த சூடான காப்பியைச் சாப்பிடச் சொல்லி உபசரித்தார். பின்னர் அவரும் அலமேலு அம்மாளும் நடந்தவைகளைப் பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார்கள்.

ஆத்திரத்தில் ஆடிப் போனான் பார்த்தீபன்.

என்ன அக்கிரமம்? வீட்டுக்கு விருந்தாளிகளாக வந்த அந்த இருவரும் இப்படி ஒரு திருட்டு காரியத்தைச் செய்ததுடன் அவனது மனைவியை வீட்டை விட்டு விரட்டி, தாயை சாகும்படி தவிக்கவிட்டு ஓடியிருக்கிறார்களே? அவர்களை அவன் சும்மா விடப் போவதில்லை. தூரத்து உறவு என்ற தாட்சண்யம் பாராது அவர்களைப் பற்றி உடனடியாகப் போலீசில் புகார் கொடுத்து - திருடிய பொருட்களை அவர்கள் விற்குமுன் கையும் களவுமாகப் பிடித்துத் தக்க தண்டனை வாங்கித் தரப் போகிறான்.

மரகதத்தின் பிரத்யேக அறையை வைத்தியரின் ஆலோசனைப்படி சீராக்காது அப்படியே அலுமேலு பூட்டி வைத்திருந்தாள். தங்கவேலு அதைத் திறந்து காட்டியபோது பார்த்தீபனது கோபம் உச்சகட்டத்தை எட்டி விட்டது.

''என்ன அநியாயம்? என்ன துணிச்சல்?'' என்று உரத்த குரலில் சீறினான்.

மரகதம்மாள் நோயாகப் படுத்தவுடன் வீட்டிலிருந்த நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் அனைத்தையும் வங்கி

லாக்கரில் வைக்குமுன் அவைகளைப் பற்றி விவரமாகத் தன் டைரியில் குறித்து வைத்துக் கொண்டிருந்தான். அம்மாவின் உபயோகத்திற்காக அலமாரிக்குள்ளிருந்த அந்த பாத்திரங்கள் பற்றிய விவரமும் அந்த டைரியில் இருந்தது.

காவல்துறை அதிகாரியை அழைத்து வந்து அறையின் அலங்கோலத்தைக் காட்டி, களவுபோன பொருள்களின் விவரத்தைச் சொல்லி, வீட்டை விட்டு ஓடிவிட்ட விருந்தாளிகளின் முகவரியையும் அவன் காவல்துறை அதிகாரிகளுக்குத் தரமுடியும்.

பகவதியும், அவளது மகளும் வெகு தூரம் ஓடிவிட முடியாது. மேலும் திருடிக் கொண்டு சென்ற சாமான்களை சுலபத்தில் விற்றுப் பணமாக்கிவிட முடியாது... இருவரும் படித்தவர்கள். தவறான காரியத்தை செய்துவிட்டு இப்போது அவமானப்படப் போகிறார்கள். பற்களைக் கடித்துக் கொண்டு அவன் எழுந்து வாயிற் பக்கம் வந்தபோது கேட்டைத் திறந்து கொண்டு தபால்காரர் வருவதைக் கண்டான்.

பம்பாயிலிருந்து புறப்படுமுன் சாம்பவிக்கு அவன் எழுதிய மூன்றாவது கடிதம் அப்போதுதான் வந்து சேர்ந்து விட்டிருந்தது.

கடிதத்தை கையில் வாங்கிக் கொண்டு, அவன் தபால்காரரிடம் தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளக் கேட்டான்.

''இதற்கு முன்னர் சாம்பவி அம்மாளுக்கு இரண்டு கடிதங்கள் வந்திருக்கணுமே. தபால் போக்குவரத்தில் ஏதாவது தாமதம் ஏற்பட்டுவிட்டதா? அவைகள் இன்னமும் வந்து சேரவில்லையாமே?...''

''யார் சொன்னது - போன வாரம் ஒண்ணும் - அதுக்கு முந்தி ஒண்ணும் - நானே கொண்டு வந்து கொடுத்திருக்கேனே - ஒரு வயதான பருமனான அம்மா கேட்டருகே ஓடிவந்து ஆவலோட சிரிச்சுகிட்டு வாங்கிட்டு போனாங்களே?''

பார்த்தீபனுக்கு இப்போது புரிந்து விட்டது. அதுவும் பகவதியின் சூழ்ச்சியா? அவன் தன் மனைவிக்கு எழுதிய

கடிதங்களை இடைமறித்து தான் வாங்கிப் படித்துவிட்டு மறைத்து விட்டிருக்கிறாளே? இப்படிப்பட்டதொருத் துஷ்டத்தனமான பெண்ணை சும்மாவிடக் கூடாது.

''தவறாகக் கேட்டு விட்டேன். வீட்டிலே விசாரிச்சுக்கிறேன் மன்னிக்கவும்'' கூறிவிட்டு உள்ளே வந்தான்.

போலீசில் புகார் செய்ய அவன் கிளம்பியதைக் கண்டு அலமேலு அதிர்ந்து போனாள். யாருக்குமே அந்த வீட்டில் நடந்த சங்கதிகள் இதுவரை தெரிந்திருக்க நியாயமில்லை. இப்போது ஊரே கொல்லென்று போய்விடும். இரு பக்கத்தாரையும் பற்றி வீண் வம்பர்கள் வாயில் போட்டு கடித்துத்துப்புவார்கள். ஒரு சமயம் விஷயம் பத்திரிகையில் கூட ஒரு சூடான செய்தியாக வந்துவிடும்... என்று கவலைப் பட்டாள்.

''போலீஸ் புகார் பற்றி அவசரப்படாதீங்க. இது முள்ளில் போட்ட சேலையைப்போல. பகவதியம்மா ஒரு வழியில் நமக்கு உறவுக்காரங்க. நேரிலே போய் அவங்களை விசாரித்து மிரட்டி, எடுத்துக் கொண்டுபோன சாமான்களைத் திருப்பி வாங்கிக் கொள்ளலாம் - அவசரப்படாதீங்க...'' என்றாள்.

அலமேலு அம்மாள் எடுத்துச் சொன்னதை அவனால் மறுக்க முடியவில்லை. உலக அனுபவம் அதிகம் உள்ள அவர்களது பேச்சிற்கு மதிப்புக் கொடுக்க விரும்பி, அவன் தன் கோபத்தை அடக்கிக் கொண்டு கூட்டில் அடைக்கப்பட்ட சிங்கம்போல வீட்டில் வளைய வந்து கொண்டிருந்தான்.

வைத்தியலிங்கம் சிறிது நேரம் இருந்து விட்டுக் கிளம்பி விட்டார். பார்த்தீபன் கேட்டுக் கொண்டபடி கொஞ்ச நேரத்தில் நர்ஸ் கமலா மரகதத்தை கவனித்துக் கொள்ள வந்து சேர்ந்து விட்டாள்.

காத்தாயி வீட்டு வேலைகளை கவனிக்கவும் - தங்கவேலு சமைக்கவும், நர்ஸ் கமலா மரகதத்தை கவனிக்கவும் என்று அவரவர்களின் கடமைகளில் ஈடுபட்டதும் வீடு ஒரு வழியாகச் சீராகியது. பகல் உணவிற்குப் பின் அலமேலு தன் வீட்டுக்குத் திரும்ப விரும்பியதை உணர்ந்து கொண்டு பார்த்தீபன்

அவளைத் தன் காரில் ஏற்றிக் கொண்டு வீட்டில் கொண்டு சேர்த்துவிட்டு வந்தான். மாமியார் என்ற உறவு இருந்தும் இதுநாள்வரை அவளிடம் அதிகம் பேசாது - பழகாது தூர விலகி இருந்தது எத்தனை பெரிய தவறு. ஆபத்துக் காலத்தில் நெருங்கிய உறவினர்களும், நண்பர்களுந்தான் ஒன்று சேர்ந்து கை கொடுத்து உதவுவார்கள்.

பணம் - அந்தஸ்து என்று திமிராக யாரையும் மதிக்காது தனி வாழ்க்கை நடத்த முயன்ற அவனது தாயின் கதி என்ன ஆயிற்று என்ற உண்மை அவனது நெஞ்சை நெருடியது.

உடலில் செலுத்தப்பட்ட குளுகோஸ் திரவத்தின் உதவியால் தெம்புகூடி விடவே மரகதம் மருந்து மயக்கத்திலிருந்து விடுபட்டு கண் விழித்துக் கொண்டாள்.

நடந்ததெல்லாம் ஒரு திரைப்படக் காட்சிபோல நினைவில் தெரியவே அவளுக்குத் துக்கம் தாங்க முடியவில்லை.

கள்ளம் கபடமே தெரியாத சாம்பவி, மாமியார் எத்தனை எரிந்து விழுந்தாலும் சகித்துக் கொள்ளத் தெரிந்த உத்தமி -அவளுக்கென்ன குறை? அழகில்லையா? படிப்பில்லையா? தங்களுக்கு சமமான அந்தஸ்து இல்லை என்ற ஆத்திரத்தில் அவளை எப்படிக் கொடுமைப்படுத்தி விட்டாள்? ''சாம்பவி! சாம்பவி!'' கண்களில் நீர் புரள மரகதம் உரத்த குரலில் கத்தினாள்.

பதறிக் கொண்டு பார்த்தீபன் அறைக்குள் ஓடிவந்தான்.

''இதோ பாருங்கள் - யார் வந்திருக்காங்க தெரியுமா -மனதை அலட்டிக்காம நிதானமா இருக்கணும்!'' அன்போடு கடிந்து கொண்டாள் நர்ஸ் கமலா. மகனை ஏற இறங்கப் பார்த்தாள் தாய். மனதில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் -அவமானத்தில் உடல் குறுகிப் போய்விட்ட உணர்வு.

''பார்த்தீபா... என்னை மன்னிச்சுக்கோப்பா... உனக்கும், உன் மனைவிக்கும் நான் ரொம்ப துரோகம் செய்துட்டேன்...'' இடது கையை நீட்டி அவனது கரத்தைப் பற்றித் தன் கன்னத்தோடு சேர்த்துக் கொண்டு விம்மினாள்.

''இது மாதிரியெல்லாம் செய்யறது தப்பு - உடம்புக்கு ஆகாது'' நர்ஸ் அதட்டினாள்.

''நர்ஸ் அம்மா... கொஞ்சம் வெளியே இருங்கோ. என் மகனோட நான் சில சங்கதிகளைத் தனிப்பட பேச விரும்பறேன்...'' மரகதம் வேண்டிக் கொண்டதை நர்ஸ் கமலம் மறுக்க இயலவில்லை.

கதவை மெல்ல சாத்திவிட்டு, அருகே வந்து நின்ற மகனின் முகத்தைக் குற்ற உணர்வுடன் பார்த்தாள்.

''பார்த்தீபா! நடந்ததையெல்லாம் மறந்து என்னை மன்னிச்சுடு. பணக்காரி என்கிற அகந்தையில் பச்சைக் குழந்தை போன்ற மனசுடைய என் மருமகளை மிகவும் பாடாய்ப்படுத்தி விட்டேன். நீங்க இரண்டு பேரும் நெருங்கி கணவன் மனைவியா வாழவிடாது, ஒரே வீட்டில் பிரிச்சு வச்ச பாவத்தை நான் நல்லா அனுபவிச்சுட்டேன்.''

''இப்போ அதையெல்லாம் பத்தி பேசி மனதை அலட்டிக்காதீங்கம்மா. நான் நடந்ததையெல்லாம் மறந்துட்டேன். இனி நடக்க வேண்டியது என்னன்னு சிந்திச்சுகிட்டிருக்கேன்'' தணிவாகப் பேசியபடி தாயின் நெற்றி மீது புரண்டு கொண்டிருந்த கூந்தலை அன்புடன் ஒதுக்கி விட்டான்.

''பார்த்தீபா! நம்ப சாம்பவியை உடனடியா கூட்டிக் கொண்டு வந்துடுப்பா... அவ கையால ஒரு வாய் தண்ணி வாங்கிக் குடிச்சாதான் என் உயிர் சமாதானத்தோட பிரியும்-!'' தாங்க முடியாத துயரில் விசும்பினாள்.

''அழக்கூடாது அம்மா, தைரியமா இருக்கணும். இன்னிக்கு ராத்திரி வண்டிக்கே நான் புறப்பட்டுப் போய் சாம்பவியை கையோடு அழைச்சுட்டு வரேன். கவலையை விடுங்க...!''

''ஒரு சமயம் நம்ப சம்பந்தி கோவிச்சுக்கிட்டு அனுப்ப முடியாதுன்னு இடக்கு செய்தா?''

''காலில் விழுந்து கெஞ்சியாவது கூட்டி வரேன் - ஏன் விசாரப்படுகிறீங்க?''

மேஜை மேலிருந்த துவாலையால் அவளது கண்ணீரை மகன் மெல்லத் துடைத்து விட்டான்.

அவனது நெஞ்சையும் தாங்க முடியாத ஒரு துயரம் இறுக்குவதை உணர்ந்தான்.

''உங்களை மட்டுமல்ல அம்மா... சாம்பவி என்னையும் ரொம்ப நல்லா கவனிச்சுக்கொண்டா. நானும் ஆரம்பத்திலே அவகிட்ட கொஞ்சம் கடுமையாகவே பேசிவிட்டிருக்கேன். அதுக்கும் அவள் துளியும் முகம் கோணியதில்லை. எதிர்த்து வாயாடியதில்லை; எரிச்சலைத் தெரிவித்துக் கொண்டதில்லை. பட்டணத்திலே வளர்ந்து படித்து ஆளானவள். அப்படியிருந்தும் ரொம்பப் பதிவிசானவள்...'' அவன் குரல் கரகரத்தது.

அவனது கரத்தை மீண்டும் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள் தாய்.

''பார்த்தீபா! நாமிருவரும் தவறு செய்து விட்டிருக்கோம். நீ ஆரம்பத்திலே செய்த தவறை உணர்ந்து உடனே மாற்றிக் கொள்ள முயன்றே - எனக்குத் தெரியும். ஆனால் ஆரம்பத்திலிருந்து ஒரே ஆத்திரவசத்தில் இருந்தேன் நான். நீ கொஞ்சம் சாம்பவிக்கு அனுதாபப்பட்டாகூட, எனக்கு பொறாமையும் ஆத்திரமும் பொங்கிக் கொண்டு வந்தது. யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக்கிறாப்பலே என் பாவங்களாலே நானே எனக்கு தீங்கைத் தேடிட்டேன். இப்போ எனக்கு புத்தி வந்துவிட்டது. என் அருமை மருமகள் சாம்பவியைக் கூட்டி வந்து... நான் செய்த பிசகுக்கெல்லாம் பரிகாரமாக, வேளைக்கு அவ ஒரு புது பட்டு சேலை கட்டி -உடம்பு கொள்ளா நகைபோட்டுகிட்டு உன்னோட சந்தோஷமா வாழறதை பார்த்து மகிழப் போறேன். பணம் காசு இதெல்லாம் இன்னைக்கு வரும். நாளைக்குப் போயிடும். சாம்பவியைப் போல ஒரு நல்ல பெண் ஒரு வீட்டுக்கு மருமகளா அமையரது சாதாரண சங்கதியா? ...மாபெரும் பாக்யம்... எத்தனையோ கோடி செம்பொன்னுக்கு சமம்.. என்

கண்மணி சாம்பவியைக் கூட்டிக் கொண்டு வந்து இந்த வீட்டு மகாலஷ்மியாக வாழ விடு! அப்பா பார்த்தீபா... ஒருசில நாள்தான் நான் வாழப்போறேன் என்றாலும்... நீயும் அவளும் சுகமாக கணவனும் மனைவியுமா... ஆனந்தமா வாழ்கிறதைப் பார்த்துக்கிட்டே கண்ணை மூட விரும்புகிறேன்! பார்த்தீபா... என் மருமகள் சாம்பவியை உடனே கூட்டிவாப்பா...!''

தாங்க முடியாது தாய் குலுங்கி அழுவதைக் கண்டு கண் கலங்கிப் போனான்.

''அம்மா... உடனே கூட்டி வரேன் - மனதை அலட்டிக்காதீங்க'' பலவிதத்திலும் ஆறுதல் சொன்னான்.

அன்று மாலை பொழுது அமிழும் முன்பே அவன் தன் காரில் திருச்சிக்குக் கிளம்பினான். நர்ஸ் கமலாவும் வேலைக்காரி காத்தாயி, தங்கவேலு முதலானவர்கள் தாயை கவனித்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருந்த போதிலும் -டாக்டர் வைத்தியலிங்கத்திடமும் அலமேலுவிடமும் சொல்லிக் கொண்டு கிளம்பியிருந்தான்.

அவர்களது குடும்பத்துக்கு வேண்டிய நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் அனைத்தையும் தயார் செய்து கொடுக்கும் அவரது குடும்பத்து நண்பரான சிவசந்திரன் பிரதர்ஸ் கடையில் போய் விசாரிக்க வேண்டுமென்று ஒரு அவா அவனை உந்திக் கொண்டு சென்றது.

சிவசந்திரன் அன்போடு வரவேற்று எதிரே கிடந்த நாற்காலியில் உட்கார வைத்து உபசரித்தார்.

சிவசந்திரனுக்கு நகரத்தில் உள்ள அத்தனை நகை வியாபாரிகளையும் நன்றாகவே தெரியும் - அவருக்கு எட்டாத சங்கதி எதுவுமே கிடையாது - கேட்டால் கட்டாயம் ஏதாவது துப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தில் கேட்டு விட்டான்.

''நடுத்தர வயதில் ஒரு தாயும் - இளம் பெண்ணான ஒரு மகளும் இங்கே நகைகள் விற்க வந்தாங்களா?''

சிவசந்திரன் முகம் சட்டென்று பிரகாசமாகியது.

''மிஸ்டர் பார்த்தீபன் நானே உங்களை இது சம்பந்தமாக

தொடர்பு கொள்ள இருந்தேன். நாளைக்கு விஷயம் முழுவதையும் நன்றாகத் தெரிந்துகொண்டு தொலைபேசியில் உங்களை மருந்துக் கடையில் அழைப்பதுன்னு தீர்மானிச்சேன். நீங்களே வந்தது நல்லதாபோச்சு. என் சினேகிதன் ராமமூர்த்தி பழைய பொருள்களை வாங்கி விற்கிறவன். அதிலே அடிக்கடி சிக்கல் ஏற்படும். வாங்கும் பொருள் விற்க வந்தவர்களுடைய சொந்தப் பொருளாக இருக்காது - திருட்டுச் சாமானாக இருந்துவிட்டால் பெரிய வம்பாயிற்றே - அதனால் மிக எச்சரிக்கையாக இருப்பான்.

''நேற்று மாலை அவன் கடைக்கு சில வெள்ளி சாமான்களை விற்க ஒரு அம்மாவும் பெண்ணும் வந்தார்களாம். சாமான்களின் பின்னால் குத்தப்பட்ட முத்திரையை கண்டு பயந்துவிட்டானாம் - இது புலியூர் சட்டநாதன் பிள்ளைவீட்டு சாமான்போல இருக்கே - இவங்க கைக்கு எப்படி வந்தது என்ற குழப்பத்தில் கையில் அந்தத் தொகை இல்லை. மறுநாள் காலை வங்கியிலிருந்து எடுத்துத் தருவதாக அவர்களை வரச்சொல்லியிருக்கிறான் அவர்கள் வெகு தூரத்தில் இல்லை. சங்கமேசன் தெரு மீனாட்சி லாட்ஜில் ஒன்பதாம் எண் அறையில் தங்கியிருக்கிறார்களாம்-'' என்று கூறி முறுவலித்தார்.

''அப்படியா...? நானே கொஞ்சம் விசாரிப்பு செய்கிறேன்...'' சொல்லிவிட்டுக் காரை வேகமாக மீனாட்சி லாட்ஜிற்கு ஓட்டினான்.

பகவதிதான் அவசரமாகக் கதவைத் திறந்துவிட்டாள். பார்த்தீபனைக் கண்டதும் அவள் வெதறிப் போனாள்.

''நீங்க... நீங்க...'' என்று அவள் உளறியதை அமர்த்தினான் பார்த்தீபன்.

''சிறைவாசம் - பத்திரிகையில் பெயர் வந்து அவமானப் படுவது இதெல்லாம் தவிர்க்க ஆசையிருந்தால்... எங்க வீட்டிலிருந்து திருடிய அத்தனை பொருளையும் என் முன் வையுங்கோ... இல்லாட்டா?'' என்று உறுமியபோது தாயும் மகளும் முகம் வெளுத்துப் போய் செயலற்று நின்றனர்.

43

பகவதி இந்தத் திடீர் தாக்குதலை எதிர்பார்க்கவே இல்லை. பார்த்தீபன் ஊருக்குத் திரும்புவதற்குள் மரகதம் பரலோகம் போய் சேர்ந்துவிடுவாள். அவர்கள் களவாடிய பொருட்களை விற்றுப் பணமாக்கிக் கொண்டு அவளும், அவள் மகளும் ஊருக்குத் திரும்பி விட முடியும். பார்த்தீபன் வந்து கேட்டால் சமாளிக்கவும் முடியும்.

''உன் தாயாருக்கு மூளைக்கோளாறு வந்துவிட்டது போலிருக்கு. வேலைக்காரங்களை துரத்திவிட்டு - உன் மனைவியை ஊருக்கு அனுப்பி, எங்களைக் கண்டபடி ஏசி வெளியே விரட்டிட்டாங்க. கண்ணும் கண்ணீருமாப் புறப்பட்டு வந்தோம். அங்கே வீடு என்ன கதியாச்சோ - மரகதம் எப்படி இருக்காளோன்னு தவிக்கிறேன்...'' என்று கூறி முதலைக் கண்ணீர் விட்டு ஒரு துயர நாடகம் போட திட்டமிட்டிருந்தவளுக்கு மாபெரும் அதிர்ச்சி.

தாயும், மகளும் ஒருவரையொருவர் திகிலுடன் பார்த்துக் கொண்டனர். வெற்றி நடை போட்டுக் கொண்டு சென்ற அவர்களது சூழ்ச்சிக்கு இப்படி ஒரு வீழ்ச்சியா?

''நேரம் ஆகிறது - சீக்கிரம் எல்லாத்தையும் எடுங்கோ...!'' உறுமினான் பார்த்தீபன். மறு பேச்சின்றி அவர்கள் இருவரும் தங்களது பெட்டியைத் திறந்து அவனது வீட்டிலிருந்து திருடிவந்த வெள்ளிப் பாத்திரங்கள் - பட்டுப் புடவைகள் அனைத்தையும் எடுத்து வெளியே வைத்தனர்.

அதற்குமேல் தாமதிக்க அவனுக்கு நேரம் இருக்கவில்லை. ஒரு புடவையை எடுத்து மடித்துப் போட்டு அதன் மேல் எல்லாவற்றையும் வைத்து மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டான்.

''நம் எல்லோருடைய குடும்ப கவுரத்தை உத்தேசித்து

உங்களை நான் காவல்துறையினர் வசம் காட்டிக் கொடுக்காது மன்னித்து ஊருக்கு அனுப்புகிறேன். புரிஞ்சுக்கோங்க. இனி புலியூர் பக்கம் தலைவச்சுப்படுக்கிறதைகூட மறந்திடுங்க. படிச்சவங்க நீங்க செய்திருக்கிற இந்தக் குற்றம் கல்வியையே அவமதிப்பதாகும். கைநாட்டுப் பேர்வழி காத்தாயி உங்களைவிட எத்தனை உயர்ந்தவ. படிப்புக்கும் குற்றம் புரியத் துடிக்கும் கெட்ட உணர்வுக்கும் சம்பந்தமே யில்லைன்னு தெரிஞ்சு கொண்டேன்...'' என்று கூறிவிட்டு கைகளால் அடித்து நொறுக்காத குறையாக வார்த்தைகளால் தன் ஆத்திரம் தீருமட்டும் சாடினான். அவர்கள் திருடிக் கொண்டு வந்த பணத்தை எடுத்துக் கொண்டு ஓழியட்டும் என்ற வெறுப்புடன் வெளியேறினான்.

மூட்டையை டிக்கியில் வைத்துப் பூட்டி, காரைத் தனது நண்பர் சிவசந்திரன் வீட்டு காரேஜில் பத்திரமாக வைத்து மூடிவிட்டு அவசரமாக சென்னைக்கு கிளம்ப வேண்டுமென்று உத்தரவு பெற்றுக்கொண்டு, தனது சிறு கைப்பெட்டியுடன் புறப்பட்டான்.

தூங்கி வழிந்த கிழவர் அருகே இடித்துக் கொண்டு உட்காரும் அளவுக்கு ரெயில் வண்டியில் அவனுக்கு இடம் கிடைத்துவிட்டது. இரவு பயண முழுவதும் அவனது மனம் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தது.

சாம்பவியின் பெற்றோர்கள் அவனுக்கு என்ன விதமான வரவேற்பு தருவார்கள்? வாகீசன் கட்டாயம் கோபத்தில் கூத்தாடுவார். சாம்பவி? அவள் மனநிலை எப்படி இருக்கும்? ஒருசமயம் அவனைப் பார்க்க மறுத்து விடுவாளோ?... அங்கே நிலைமை மோசமாக இருந்தால் அவன் எப்படி சமாளிப்பது மாமனார் கோபத்தை எவ்வாறு தீர்ப்பது?... கண்கள் உறங்காது மனம் வேதனையில் தவித்தது.

வாயிற்படியருகே காத்துக் கொண்டு நின்ற மனைவியிடம் பால் பொட்டலங்களைக் கொடுத்துவிட்டு எதேச்சையாகத் திரும்பினார் வாகீசன். அனுபமாவைப் பெண் கேட்க வரப்போவதாக ரவிச்சந்திரன் கடிதம் போட்டிருந்தான்.

அமெரிக்காவிலிருந்து அவனா வந்துவிட்டான்? அதிசயத்துடன் கூர்ந்து பார்த்த வாகீசன் முகம் சுருங்கிப் போனார்.

டாக்சிக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு தன் பெட்டியுடன் உள்ளே வரத் திரும்பிய பார்த்தீபனைக் கண்ட ஜெகதா முந்தானையை இழுத்து வலது கையை நன்றாக மூடிக் கொண்டாள்.

''உங்க மருமகன் வரார், வீடு தேடி வரவங்களை வான்னு கூப்பிடுங்கோ, பிறகு உங்கே பேச்சை வச்சுக்கலாம். நடு வீதியிலே நின்னுகிட்டு சண்டை ஏதும் வேண்டாம்.'' கணவனை எச்சரித்தாள்.

ஜெகதா மட்டும் அப்படி சொல்லாவிட்டால், வாகீசன் மருமகனைக் கண்டதும்... உரத்துக் கூச்சலிட்டிருப்பார்.

''இங்கே எங்கே வந்தே-உன் உறவு போதுமப்பா!'' என்று நாலு வீடு கேட்கக் கத்தி விட்டிருப்பார். சுபாவத்தில் அவர் அடக்கமானவர் - ஆனால் சாது மிரண்டால் காடு கொள்ளாதே.

தன் மகனை ஏவி நாற்காலி எடுத்து தூசி துடைத்து கூடத்தில் போடச் சொன்னாள் அம்மா ஜெகதா.

அடுப்பில் இட்டிலியை அவித்துக் கொண்டிருந்த சாம்பவியை ஒதுங்கச் சொல்லிவிட்டுப் பரபரப்புடன் பாலை சூடு பண்ணத் தொடங்கினாள். அவளுக்குக் கையும் காலும் பதறின. தன் மகனை மறுபடியும் அழைத்து அவனிடம் ரகசியமாகச் சொன்னாள். ''ஓடு! பிறகு வந்து குளிக்கலாம். நம்ம அண்ணாசாமி அய்யாவையும் - எதிர்வீட்டு தங்கதுரையையும் அப்பா உடனடியாக வரச்சொன்னார் மாப்பிள்ளை ஊரிலிருந்து வந்திருக்கார்னு சொல்லிட்டு வா...'' உத்தரவிட்டாள்.

''உட்காருங்க!'' என்று உபசரித்துவிட்டு தொண்டையை கனைத்துக் கொண்டார் வாகீசன்.

''நீங்களும் உட்காருங்க!'' என்று கூடத்திலிருந்து எழுந்த குரலைக்கேட்டு திடுக்கிட்டுப் போனாள் சாம்பவி. ஆனந்தமும் துயரமும் நெஞ்சை அடைக்க இட்லிப் பானையை மேடையில் ஒரு பக்கம் வைத்துவிட்டு மெல்ல வெளியே வந்து எட்டிப்

பார்த்தாள்.

ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் பார்த்தீபனைப் பார்ப்பது போன்றதொரு தாபம்... துயரத்தின் சுமை தாளாது கண்களில் நீர் பெருகி கன்னங்களில் வழிய அவள் விசும்புவதைக் கண்ட தாயாருக்கு எரிச்சல்.

''நீ போய் இப்போ அங்கே நிக்கவேணாம் - ஆற அமர பெரியவங்க பேசட்டும்!'' மகளுக்குத் தடை உத்திரவு போட்டாள்.

பின்கட்டில் பல் விளக்கிவிட்டு வந்த அனுபமாவுக்கு கட்டுத் கொள்ளாத ஆவல். கூடத்திற்கு வந்து எட்டிப் பார்த்தபோது அப்பா தன்னைக் கடுமையாக வெறிப்பதை உணர்ந்து கொண்டு உள்ளே ஓடிவிட்டாள்.

''ரேவதி! பல் விளக்கி - முகங்கழுவியாச்சா - சீக்கிரம் தலையை வாரி பின்னலிட்டு பொட்டு வச்சுக்கோ - நல்ல சுத்தமான பாவாடை சட்டையை போட்டுகிட்டு... அப்பாவுக்கும் சாம்பவியோட அத்தானுக்கும் இந்தக் காப்பியைக் கொண்டு கொடு!'' அம்மா தன் சின்ன மகளை அழைத்தாள்.

''இந்தாங்க!'' என்று கணவனை ஜாடையால் அழைத்தாள் ஜெகதா.

''முதல்லே ரெண்டு பேரும் காப்பி சாப்பிடுங்கோ. அண்ணாசாமியும், தங்கதுரையும் வரப்போராங்க... பிறகு பேசலாம்'' உத்தரவிட்டாள்.

இப்போது வீட்டின் அதிகாரம் அவள் கையில் ஓங்கி விட்டிருந்தது. ''அம்மா - நான் கொண்டு போய் அவருக்கு காப்பி தரட்டுமா...'' சாம்பவி கேட்டபோது தாயார் மகளை கோபத்தோடு முறைத்தாள்.

''அவங்க எல்லோருக்கும் செஞ்ச பணிவிடைக்கு கை மேலே பலன் கிடைச்சுட்டதே நான் கூப்பிடரவரை நீ வெளியே வரவேண்டாம்.''

தாயார் மகளைக் கடுமையான குரலில் மிரட்டினாள்.

''காப்பி சாப்பிடலாமே...!'' என்று வாகீசன் சொல்ல, மறுக்க முடியாது டம்ளரை கையில் எடுத்துக் கொண்டு உறிஞ்சினான் பார்த்தீபன். கண்கள் சாம்பவிக்காக நாலா புறமும் தேடின.

சில நிமிஷங்களில் எதிர்வீட்டு தங்கதுரையும் - நண்பர் அண்ணாசாமியும் வந்து கூடத்தில் சேர்ந்து கொண்டனர். சுவற்றில் சாத்தியிருந்த கயிற்றுக் கட்டிலை நிமிர்த்திப் போட்டு இருவரும் அமர்ந்து கொண்டனர். சில வினாடிகள் அங்கே மவுனம் நிலவியது. ஆத்திரத்துடன் தாழ்வாரத்தை அளந்து கொண்டிருந்த வாகீசன்தான் பேச்சைத் துவக்கினார்.

''ஆரம்பத்திலேயே நமக்கு பணக்கார சம்பந்தம் வேண்டாம்னு நான் மறுத்தேன். 'ரெண்டுபேரும் விரும்பறாங்க - தடை சொல்லாம கல்யாணத்தை நடத்தி அவர்களை ஆசீர்வதிப்பது நமது கடமைன்னு' அண்ணி அலமேலு ரொம்ப வற்புறுத்தினாங்க... சாம்பவிக்கு நேர்ந்த கதி எனக்கு விழிப்பு உணர்வைக் கொடுத்திருக்கு. இளைய மகள் அனுபமாவை கட்டிக்க ஒப்புதல் வாங்கிக் கொண்டு போயிருக்கான் ரவிச்சந்திரன். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோன்னு இப்போ நான் நடுங்கறேன். பக்கத்திலிருக்கும் புலியூரில் பெண்ணைக் கட்டிக் கொடுத்ததுக்கே இந்த கதின்னா, கண் காணாத அமெரிக்காவுக்கு, ரவிச்சந்திரனுக்குக் கட்டிக் கொடுத்து அனுப்பினா என் இளைய மக கதி என்னாகுமோ? இந்த காலத்துப் பசங்களையே நம்பக் கூடாதுன்னு ஆயிட்டது. சாம்பவியை பிச்சைக்காரிபோல விரட்டியடிச்சுட்டு பின்னாலேயே மாப்பிள்ளை இங்கே வந்து நிக்கற நோக்கம் என்னன்னு... நீங்க கேளுங்கோ'' அண்ணாசாமியைப் பார்த்தார் வாகீசன்.

''நான் இல்லாத சமயம் என் தாயின் மனசைக் குழப்பி வீட்டுக்கு வந்த விருந்தாளிகள் தவறு செய்துட்டாங்க, எல்லாட பழியையும் நான் ஒத்துகிட்டு மன்னிப்புக் கேட்கிறேன். எங்க வீட்டிலே நடந்த அசம்பாவிதத்துக்காக நீங்க ரவிச்சந்திரனை தப்பாகக் கணிப்பு செய்யக்கூடாது. அனுபமாவைக் கட்டிகிட்டு அவர் அமோகமா வாழணும்னு நான் ஆசைப்படறேன். மாமா,

நடந்ததை ஒரு கெட்ட கனவா நினைச்சுக்கிட்டு... எங்களை மன்னிச்சு சாம்பவியை அனுப்பி வையுங்கோ...'' பேச முடியாது தடுமாறினான் பார்த்தீபன்.

''நான் ஏற்கனவே முடிவு செய்துட்டேன். என் மகளுக்கு உரிய காலத்தில் விவாகரத்து கொடுத்துடுங்க — உங்க பணம் — நகை நட்டு எதுவும் வேணாம்!'' சீறினார் வாகீசன்.

சமையலறையிலிருந்து கவலையுடன் வெளிப்பட்ட ஜெகதா கூடத்தில் ஒரு பக்கம் சுவர் ஓரமாக நின்று கொண்டாள். அவளது கண்கள் அண்ணாசாமியைப் பார்த்துக் கெஞ்சின.

தொண்டையை செருமிக் கொண்டார் அவர்.

''ஒரு பிரபல வழக்கறிஞரிடம் வேலை செய்கிற அனுபவத்தில் சொல்கிறேன். இது மாதிரி கேஸ்கள் எத்தனையோ எங்க வக்கீல்கிட்ட வந்திருக்கு. வாகீசன் ஒண்ணு மட்டும் சொல்வேன். பீஸ் கிடைக்கப் போறதுன்னு வக்கீல்கள் கணவன் மனைவியைப் பிரிக்க வழக்காட முயலுவதே இல்லை. முதலில் தமது கட்சிக்காரர்களை அழைச்சு விவகாரத்தைப் பற்றி மறந்துட்டு ஒற்றுமையாக இணைந்து போகும்படி புத்தி சொல்றாங்க — அதுக்கும் மீறி நீதி மன்றத்துக்கு கேஸ் வந்துட்டா நீதிபதி அந்தத் தம்பதியரைத் தமது பிரத்யேக அறைக்கு அழைச்சு... ஒன்றுபட்டுப் போகும்படி புத்தி சொல்றார். இதுகளில் நான் ரொம்ப அனுபவப்பட்டவன். வாகீசா, விவாகரத்து என்பதைப் பத்தி மறந்திடு. கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் —அதைப் பெரியவங்க நாம அழிக்கக்கூடாது — வளர உதவணும்...'' கண்டிப்பாகப் பேசினார்.

''நாங்க ஏழைகள்தான் — ஆனால் என் மகளை நான் எப்படி வளர்த்தேன் தெரியுமா! கட்டின புடவையோட அவள் தனியே வாசலில் வந்து நின்னப்போ... என் கண்களில் கண்ணீர் வரலை... ரத்தம் கொட்டிச்சு. அது தெரியுமா உங்களுக்கு?'' தழுதழுத்தார் வாகீசன்.

பார்த்தீபன் அதற்கு மேல் விவாதிக்க விரும்பவில்லை. தோளில் கிடந்த உத்தரியத்தை இடுப்பில் கட்டிக் கொண்டு அந்த

மூவருக்கும் பொதுவாகத் தரைமீது விழுந்து சடாரென்று வணங்கினான்.

''நீங்க பெரியவங்க — நடந்த தவறுகளை மறந்து மன்னிச்சு எங்களை வாழவிடணும். மாமா! ரொம்ப கேட்டுக்கிறேன். நீங்க இரண்டு பேரும் வீட்டு நண்பர்களாக இங்கே சமாதானம் பேச வந்திருக்கீங்க. உங்களை சாட்சியாக வச்சுட்டு சொல்றேன். சாம்பவி கண்ணிலிருந்து இனி ஒரு பொட்டு கண்ணீர் வராம நான் அவளை மலர் போல வச்சுக் காப்பாத்துவேன் — சத்தியம். என் தாய்மேல் ஆணை'' தழுதழுத்தான்.

கோபம் வந்தால் உத்திரத்தை எட்டிவிடும் வாகீசன் இரக்கவசப்பட்டால் பாகாய்க் கரைந்து போய் விடுவார்.

தரைமீது நெடுஞ்சாண் கிடையாகக் கிடந்த மருமகனை அன்போடு தூக்கினார். அவர் கண்கள் குளமாகி விட்டிருந்தன.

''மாப்பிள்ளை! வருத்தப்படாதீங்க. சாம்பவியை நான் அனுப்பி வைக்கிறேன். எதுக்கும் நீங்க ஒரு வார்த்தை அவளை நேரிடையே கேட்டுக்கோங்க...!'' என்றார்.

'சாம்பவி!' என்று தந்தை கூப்பிடுமுன் கூடத்தில் வந்து நின்ற அவளது முகம் பார்த்தீபனுக்குப் பதில் சொல்லிவிட்டது.

விருந்து மரியாதையுடன் மருமகனையும், மருமகளையும் வாகீசன் அன்று மாலை அனுப்பி வைத்தார்.

''அனுபமாவுக்கு கல்யாணம் கூடிவரப் போகுது —வீட்டுக்கு மூத்த மருமகன் நீங்க... இருந்து கல்யாணத்தை சுபமா நடத்திக் கொடுக்கணும்...'' உபச்சாரமாகச் சொல்லி... டாக்சி அருகில் வந்து நின்று மகளையும், மருமகனையும் மனநிறைவுடன் வழி அனுப்பி வைத்தாள் ஜெகதா...

வாயிற் கதவைத் திறந்த காத்தாயி ஆனந்த மிகுதியில் கத்திக் கொண்டு உள்ளே ஓடினாள்.

''சின்னம்மா வந்துட்டாங்க!'' என்ற அவளது குரல் வீடு முழுவதும் எதிரொலித்தது. தங்கவேலு குமரேசனைக் கூப்பிட்டு இந்த சுபசெய்தியை அலமேலுவுக்கும்,

வைத்தியலிங்கத்திற்கும் சொல்லச் சொல்லி ஏவிவிட்டு... காலை அனைவருக்கும் காப்பி பலகாரம் செய்யப் பரபரப்புடன் சமையலறைக்குள் புகுந்தார். சில நிமிடங்களில் அந்த வீடு மகிழ்ச்சியில் கலகலத்தது.

குளித்து மாற்றுடை அணிந்து கொண்டு உள்ளே வந்த மகனை மரகதம் பார்த்தாள்.

''பார்த்தீபா எங்கே சாம்பவி... அனுப்பினாங்களா?'' ஆதங்கத்துடன் கேட்டாள்.

பின்னால் தயங்கியபடி வந்து கட்டிலருகே நின்ற மருமகளை இடது கரத்தால் இழுத்து அணைத்துக் கொண்டாள்.

''சாம்பவி — வந்துட்டியா அம்மா! இந்தப் பாவியை மன்னிச்சுட்டு இந்த வீட்டு மகாலஷ்மியா என் மகனோட பல்லாண்டு வாழ்ந்து எனக்கு ஒரு பேரனையும் பேத்தியையும் பெத்துக் கொடம்மா —'' படபடவென்று பேசியபடி... விம்மினாள்.

''அத்தை அழக்கூடாது — உடம்புக்கு நல்லதில்லை'' என்று தன் முந்தானையால் கண்களைத் துடைத்துவிட்ட சாம்பவியின் கரங்களைத் தன் கன்னத்தோடு சேர்த்துக் கொண்டாள்.

அகங்காரம் கப்பி நின்ற அந்த முகத்தில் இப்போது அன்பு மலர்ந்து விட்டிருந்தது.

மனம் மாறித் தன் மருமகளை அணைத்துக் கொண்டு பேசும் அந்த இனிய காட்சியைக் கண்டு அலமேலு மனம் கரைந்து போனாள். டாக்டர் வைத்தியலிங்கம் மகிழ்ச்சியுடன் புன்னகைத்தார்.

கோபமே உருவான மரகதம்... மருமகள் வந்துவிட்ட மகிழ்ச்சியில் சின்ன விஷயத்திற்கெல்லாம் சிரித்தாள். அலமேலுவிடம் பகையை மறந்து மனம் விட்டுப் பேசினாள். அந்த வீட்டில் நிலவிய இறுக்க உணர்வு நீங்க... அதில் அமைதியும் — ஆனந்தமும் நிறைந்தன.

''பார்த்தீபா... என்னை நர்ஸ் கமலா கவனிச்சுக் கொள்வாள்

— அலமேலு அடிக்கடி வந்து பார்த்துப்பாங்க —டாக்டர் கவனிக்க இருக்கிறார் — அதனாலே நீயும், சாம்பவியும் ஒரு பத்துநாள்... அதான் சொல்றாங்களே ஹனிமூன் அதுக்கு பெங்களூர் போயிட்டு வாங்க'' என்றாள்.

கொல்லென்று எல்லோரும் சிரிக்க - சாம்பவி முகம் சிவந்து போனாள். அன்று இரவு கணவன் அளித்த ஆரஞ்சு வண்ணப் பட்டுச் சேலையைக் கட்டிக் கொண்டு மாமியாரின் நகைகளை அணிந்து அழகு பிம்பமாக பால் செம்புடன்... கணவரது அறைக்குள் அவள் வந்தபோது... பார்த்தீபன் சினிமாக் கொட்டகையில் முன் ஆசனத்திலிருப்பவன் போல... விஷ் என்று சீட்டியடித்தான். சிரித்தான். அப்பப்பா எத்தனை அழகு என்று வியந்தான். ஹனிமூனுக்கு பெங்களூர் போகச் சொல்றாங்களே... நாளை புறப்படலாமா?'' என்று அவன் கேட்டதை மறுத்தாள் சாம்பவி.

''இத்தனை கலவரத்துக்குப் பிறகு அத்தையை தனியே விட்டுட்டு நாம போகிறது தப்பு!'' பால் செம்பை முக்காலி மீது வைத்துவிட்டு நிமிர்ந்த அவளது கரத்தைப் பிடித்துக் கொண்டு ஜன்னல் அருகே அழைத்துச் சென்றான். திரையைக் கொஞ்சம் விலக்கினான்.

''இன்னிக்குப் பவுர்ணமி... நிலவு எத்தனை அழகா இருக்கு?'' வியந்தாள் சாம்பவி...

''நம்மை இங்கேயே தேன் நிலவு கொண்டாடச் சொல்லி நிலவு சிரிக்குது பார்த்தியா?'' பரிவுடன் அவளை அணைத்துக் கொண்டான் பார்த்தீபன்.

இத்தனை நாழிகளாக இன்ப உணர்வின் கொடுமையில் சிக்கித் தவித்த சாம்பவி, அவனது அணைப்பில் மெய் மறந்து ஒன்றிப் போக... அவர்களுக்காக இரவு முழுவதும்... நிலவு தேனைச் சிந்திக் கொண்டிருந்தது.

(முற்றும்)